
சுதந்திரத்

தமிழ் இலக்கணம்

ஐந்தாம் வகுப்பு



தமிழ் வளர்ந்த மதுரை

பண்டிதை, வித்துவான்

திருமதி லூர்து நடராசன்

மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை . . . . சென்னை

பத்மாவதி சரித்திரம்

ஒரு தமிழ் நாட்டுக் கதை

அ. மாதவையர்
இயற்றியது

ஆறம் பதிப்பு

விலை ரூ. 1-12-0

முகவுரை *

'நாவல்' என்ற ஆங்கிலச் சொல்லும், 'நவீனம்' என்ற வடமொழிப்பதமும், ஒரே தாதுவினின்றும் பிறந்து, ஒரே பொருளைத்தரும் வார்த்தைகளாம். முதற் கண் புதுமை யையே குறித்த ஆங்கிலச்சொல், வழக்க விசேஷத்தால் அசாதாரணத்தையும் வியப்பையும் இப்பொழுது குறித்து நிற்றலுமன்றி, வியப்பைத்தரும் நூதனக் கட்டுக்கதை யாகும் ஒருவித கிரந்தத்துக்குக் காரணப் பெயராகவும் வழங்குகின்றது. இவ்வித கிரந்தங்களில், அசாதாரண அற்புத சம்பவங்களே மிகுந்துள்ளவற்றை 'உரோமான்ஸ்' என்றும், உலக வாழ்க்கையைக் கண்ணுடிபோற் பிரதிபலித் துப் பெரும்பாலும் அநுபவத்தோடொத்து நிகழும் கதை களை 'நாவல்' என்றும் மேல் நாட்டார் கூறுவர். பிற் கூறிய நாவல் வகுப்பில், சரித்திர நாவல், ஜநசமூக நாவல், மதசம்பந்தமான நாவல், மேல் வாழ்க்கை நாவல், கீழ் வாழ்க்கை நாவல், மனோதத்துவ ஆராய்ச்சி நாவல், முதலிய பல பிரிவுகளுள. ஆங்கில பாஷையில் நாவல்கள் வசன நடையிலேயே எழுதப்படுகின்றன; சற்றேறக்குறைய இரு நூறு வருஷங்களாக ஏற்பட்டுக் கையாளப்படுகின்றன வேனும், கடைசி ஐம்பது வருஷங்களாகவே மிகப் பரவிச் செழித்தோங்கியுள்ளன. இவ்வித கிரந்தங்கள் தற்காலத் திலே ஆண்டாண்டுதோறும் ஆயிரக்கணக்காகப் பிரசுரிக்கப் படுவதுமன்றி, பெயர்போன நாவலர்களால் இயற்றப்படும்

---

* இது மூன்ரும் பதிப்பின் முகவுரை.

நாவல்கள், வெளியாகிச் சில மாதங்களுக்குள், பதிப்புக்குப் பல்லாயிரம் பிரதிகொண்ட பல பதிப்புக்கள் விலையாகி விடுகின்றன. பொழுது போக்குதற்குரிய ஒரு சில்லறைப் பிரபந்தமாக இதை மதித்திகழாது, அதிமேதாவிகளும் கவீந்திரருமான வித்வசிரோமணிகளும்கூட இவ்வித கிரந்தங்களியற்றிப் புகழ் பெறுகின்றனர். கற்புக்கு அருந்ததி, வாய்மைக்கு அரிச்சந்திரன், பொறுமைக்கு தருமபுத்திரன், சினத்துக்கு துருவாசமுனி என்று பல புராணக்கதைகள் நம்மவர் மனத்திற் படிந்து கிடந்து பழமொழிகளாகப் பண்டிதராலும் பாமரராலும் வழங்கப்படுவதுபோல், பெயர்பெற்ற நாவல்களில் வரும் கதாபாத்திரங்கள், மேனாட்டாருள் பேச்சு வழக்கிலும் உயர்தர கிரந்த வழக்கிலுங்கூடச் சாதாரணமாய்க் கையாளப்படுகின்றமையும், இந்நாட்டிலும் பிற நாடுகளிலும் பிரயாணிகளுக்காக 'ரயில்வே ஸ்டேஷன்'களிலே வைக்கப்படும் புத்தகசாலைகளில், நாவல்களே பெரும்பாலும் வைக்கப்பட்டு விலையாகின்றமையும், இவ்வித கிரந்தங்கள் மேனாட்டாரால் எவ்வளவு படித்தநுபவிக்கப்படுகின்றன என்பதை நன்குணர்த்தும். இதுவுமன்றி, ஆங்கில நாவல்களிற் சிறந்தவை பிற ஐரோப்பிய பாஷைகளில் மொழிபெயர்க்கப் படுவதுபோல, பிறபாஷைகளில் இயற்றப்படும் சிறந்த நாவல்களையும் ஆங்கிலேயர் தம் பாஷையில் மொழிபெயர்த்துக் கொள்கின்றனர்.

வசன நூல்களே மிகஅருமையான நமது தமிழ்ப் பாஷையில், ஆங்கில நாவலுக்குச் சமமான வசனகிரந்தங்கள் முன்பு ஒன்றேனுமில்லை. புராணக் கதைகளைச் சுருக்கியும் விரித்தும், வசன நடையில் எழுதப்பட்டுள்ள சில கிரந்தங்களும், தசகுமார சரித்திரம் போன்ற மொழி பெயர்ப்புக்

களும் தமிழ் நாவல்களாகா. யான் அறிந்த
பெயர்க்குச் சிறிதேனும் தக்க கிரந்தங்கள், மு ர ம்
வெளிப்போந்தன, பிரேமகலாவதீயமும், பிரதாப
சரித்திரமுமே. இவற்றுள் முன்னது பல கா
அப்பெயர்க்கு நன்கேற்றதன்று; பின்னது,
படாமை கருதி மேனாட்டாரால் சிறு பான்மை
யிம் உரோமன்ஸ் வகுப்பைச் சேர்ந்த
சிறந்த மேனாட்டிற் பெரும்பாலாரும், தம்
உணவாகக்கொண்டு அநுபவிக்கும் 'நாவல்'
பகுதியைத் தமிழிலும் நடைபெறச் செய்ய
சிந்தாமணி' என்ற தமிழ்ப்பத்திரிகை வெளி ஜில்லாவிலே, சிறு
அதன் முதற்றொகுதியில் 'சாவித்திரி சரி நூறு வீடுகளில்,
நாவல் எழுதலானேன். சில காரணங்க டியிருக்கப் பெற்ற
பெறவில்லை. அதன் பின்னர், காலஞ் பிராமணர் கிரகங்
ரவர்க ளியற்றிய 'கமலாம்பாள் சரித் பிரர் வசிக்கும் வீதிக
தாகத் தெரிய வருகின்றது. பின்பு திகளினின்றும் விலகி
முதற்பாகம்' வெளிவந்தது. பின் புழக்கடைகளைத் தவிர
ருகப் பல நாவல்கள் புறப்பட்டு, இ ல. வெற்றிலை, பாக்கு,
பவர் பலருளர்; ஒவ்வோரான் லி முதலிய சாமான்கள்
படுகின்றன. மல் தூரத்துக்கப்பாலுள்ள

மற்றெல்லா உயர்தர கி றமுக நகருக்குத்தான் போக
என்னும் கிரந்தமும், படிப்
லூட்டலை முதற்கருத்தாக சீதாபதி ஐயர் என்றொருவரிருந்
உட்கருத்தாகவும் கொ ற்ப நிலமிருந்தது. அவர் அந்
லத்தை முக குறைத்த மாகக் கொண்டு, மேற் செலவுக்கு
ஏதாவது கைய கூலி மட்டும் சம்பாத்தியஞ் செய்து,
உபாய காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு வந்தார். அவர்

நாவல்கள், செ

பல்லாயிரம் முற்றும் 'நாவலாதலால்,' (புதிதாதலால்) ஒரு

விடுகின்றன. றத்தக்கது: கிரந்தத்தின் இடையிடையே கீழ்த்

பந்தமாக இ ரங்கள் பேச நேரும்பொழுது, இலக்கணவழுச்

திரருமான வி வர் வாய்மொழிகளை அவ்வண்ணமே எழுதுவித்

களியற்றிப் புகழ் வம், கிரந்தகர்த்தா நேரிற் கூறும் வரலாறுகள்

மைக்கு அரிச்சா நத்தல் வேண்டும்; கல்வித் தேர்ச்சியில்லாரும்

சினத்துக்கு துருவ டி எழுதப்படும் கிரந்தமாதலின், எவ்வளவு

நம்மவர் மனத்திற் யிலெழுதப்படினும் நலமே; ஆயின், எளி

தராலும் பாமரரா தெளிதல் கருதி இலக்கண வழுக்களோடு

நாவல்களில் வரு டிப்பவருள் இலக்கணம் பயின்றார் வெறுப்

பேச்சு வழக்கிலும் ர்சியில்லார்—அவர்களுள் முக்கியமாய் இவ்

ரணமாய்க் கையாளட பெரும்பாலும் வாசிப்போராகிய இலக்

நாடுகளிலும் பிரயாண ர்பாலார்—வழுக்களை யறியமாட்டாராய்,

வைக்கப்படும் புத்தகச டைவாராதலின், நன்னடையி லெழுத

வைக்கப்பட்டு விலையா

மேனாட்டாரால் எவ்வள

பதை நன்குணர்த்தும். இ

சிறந்தவை பிற ஐரோப்பிய

படுவதுபோல, பிறபாஷைகள

களையும் ஆங்கிலேயர் தம் ப

கொள்கின்றனர்.

அ. மா.

பதிப்புரை

செலவாகிச் சிலகாலமாயிற்று

வசன நூல்களே மிகஅருமையன்றமையாலும் இப்புத்தகப்

யில், ஆங்கில நாவலுக்குச் சட்டிருப்பதாலும், இவ்வாறுப்

முன்பு ஒன்றேனுமில்லை. புராணமர் செய்த சிற்சில திருத்தங்

விரித்தும், வசன நடையில் எழுதட சில கிரந்த

களும், தசகுமார சரித்திரம் போன்ற ழி பெயர்ப்புக்

பத்மாவதி சரித்திரம்

ஒரு தமிழ் நாட்டுக் கதை

முதற்பாகம்

முதலாவது அதிகாரம்.

பாண்டிய நாட்டிலே, திருநெல்வேலி ஜில்லாவிலே, சிறுகுளம் என்ற ஊரிலுள்ள சுமார் இரு நூறு வீடுகளில், வேளாளராலும் 'கீழ்ச்சாதி' களாலும் குடியிருக்கப் பெற்ற அறுபது வீடுகளைத் தவிர, மிகுதி யாவும் பிராமணர் கிரகங்களே. குக்கிராம வழக்கம் போல், விப்பிரர் வசிக்கும் வீதிகளிரண்டும், மற்றைக் குடிகளின் வீதிகளினின்றும் விலகியிருக்கின்றன. அவ்வூரில், வீட்டுப் புழக்கடைகளைத் தவிர வேறு கடைகளொன்றும் இல்லை. வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுக்கு, மிளகு, திப்பிலி முதலிய சாமான்கள் வாங்குவதற்குங் கூட, ஒரு மைல் தூரத்துக்கப்பாலுள்ள இறங்கல் என்னும் கடல் துறைமுக நகருக்குத்தான் போக வேண்டும்.

இச்சிறுகுளத்திலே சீதாபதி ஐயர் என்றொருவரிருந்தார். அவருக்குச் சொற்ப நிலமிருந்தது. அவர் அந்நிலத்தை முக்கிய ஆதாரமாகக் கொண்டு, மேற் செலவுக்கு ஏதாவது கையாலானமட்டும் சம்பாத்தியஞ் செய்து, உபாய காலக்ஷேபம் பண்ணிக்கொண்டு வந்தார். அவர்

பொருள் தேடிய வழியோ கொண்டாடத் தக்கதன்று. கள்ளச் சாக்ஷிகள் சொல்வதிலும்; 'தயார்' செய்வதிலும், உருட்டுப் புரட்டுக்கள் பண்ணுவதிலும், கையொப்ப மில்லாத 'மொட்டை மனு' க்கள் எழுதிக் குற்றமில்லாரைக் குற்றப் படுத்துவதிலும், ஏழைகளைப் பயமுறுத்திப் பணம் பறிப்பதிலும், அவரை வெல்வதரிது. சட்ட திட்டங்களில் தேர்ந்தில்லாத சாதாரண கிராம வாசிகளைப் போலவே 'சர்க்கார்' உத்தியோகஸ்தருங் கூட அவர் பெயரைக் கேட்டால் நடுங்குவார்கள். இடமாற்று, தாழ்ச்சி, பரிசோதனை, இகழ்ச்சி முதலிய இடையூறுகளுக்கு அவர் மூலமாக உட்பட்ட உத்தியோகஸ்தர் பலர். தமக்கு விரோதமா யிருந்த ஒரு 'துப்பட்டிக் கல்கட்டரைக்' கூடத் தாம் குற்றப்படுத்தி மாற்றி விட்டதாகவும், ஊர் விளைந்தாலும் காய்ந்தாலும் தம் 'பேனு' உள்ளவரை தமக்கு ஒரு குறைவும் நேரிடாதென்றும், அவர் பெருமை கூறுவதுண்டு. ஒரு நாள் இரவு ஊண் செய்தானபின், சீதாபதி ஐயர், தம் வீட்டு வாசலில் ஒரு நார்க் கட்டிலின்மேல் உட்கார்ந்து தாம்பூலம் மென்றுகொண்டிருந்தார். கிருஷ்ணையர், இராமபிள்ளை என்ற இருவர் அவருடன் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது கிருஷ்ணையர், "ஆமாம், ஓய் சீதாபதி! நீர் சொல்வது யதார்த்தந்தான்; ஆனால் இந்தக் கும்பமாஸத்துச் சந்திரிகை அதி தாவள்ளியமாய் வீசின போதிலும், சரீர சுகத்துக்கு அவ்வளவு சிலாக்கியமான தில்லையே? போன கும்பமாஸந்தான், ஒரு நாள் இராத்திரி, நல்ல சந்திரிகையில்—இன்றிலும் பிரகாசமா யிருந்தது,—இறங்கல் சிவராமையருடைய தாயார் விரத சமாப்திக்குப் பேரா... பலகாரஞ் செய்து விட்டு, நானும் மேலத் தெரு நாணு

யோக்கியர்கள் தானே? நமக்குள்ளேயே எத்தனை குடிகேடர்கள், எத்தனை ஆயிரப்புளுகர்கள், எத்தனை தலைப்பா மாற்றிகள், எல்லாம் இருக்கிறார்கள்? உயர்குலத்திற் பிறந்து பூணூலைப் போட்டுக்கொண்டு திரிகிற பிராமணரே, பழி, கொலை, அசத்தியம் முதலியவைகளுக்குப் பயப்படுகிறது இல்லையே; இவர்களுக்கெல்லாம் தங்கள் கொடுந்தொழில் களைத் தவிர வேறென்ன வியாபாரம்?" என்று சொன்னார்.

பிந்திய வாசகங்களைக் கூறும்பொழுது, இராமபிள்ளை, சில வருஷங்களுக்கு முன் சீதாபதி ஐயரால் தமக்கு நேர்ந்த பெரிய அபாயத்தையும் பொருள் நாசத்தையும் மனதில் நினைந்தவராய், அவர் நாவுக்குப் பயந்தவராயினும் அகங்காரம் பொறுக்க முடியாமல், சீதாபதி ஐயரை நோக்கி, நயவஞ்சகமாய் உரத்துப் பேசினார். குற்றமுள்ள நெஞ்சையுடைய சீதாபதிஐயர் உடனே கொதித்தெழுந்து, "ஆமாம் பிலே! வெள்ளான் பயலே! என்ன, கொழுத்துப்போய் விட்டதோ? தில்லும் பில்லும் பேசலாச்சா, பிலே! எங்கே, இன்னும் ஒருதரம் சொல்லு: உன் நாக்கை அறுத்துவிடுகிறேன்," என்று கூப்பாடு போட்டார்.

இவ்வளவு பேசுவதன்முன், சீதாபதிஐயர் வாயிலிருந்த வெற்றிலைத் தம்பலமெல்லாம் பக்கத்திலிருந்த கிருஷ்ணையர் தலைமேல் அபிஷேகமாய்விட்டது. இராமபிள்ளை, கொஞ்சம் பயங்கொண்ட போதிலும் அவமானமும், அகங்காரமும் மிகுந்து, "என்னசாமி, பயல் பரட்டையென்று பேசுகிறீ (ர்) கள்? உங்களை நான் என்ன சொன்னேன்? இதோ கிருட்டினையனும் கேட்டுக்கொண்டு தானே

யிருக்கிறு(ர்)கள்; என்ன, 'பூசனிக்காய் களவாண்டவ
தோளைத் தொட்டுப் பார்த்துக்கொண்ட கதை'யாயி
கிறதே," என்றார்.

சினமுறும்பொழுது புத்தி குன்றுவது இயல்
சீதாபதி ஐயருக்குக் கோபம் வந்து விட்டாலோ, அவருக்
அமைந்த சொற்ப அறிவும் பயந்தோடிவிடும்.

இராமபிள்ளை வாய் மூடுமுன், அவர் வெறிகொண்
துள்ளி யெழுந்து, "நானடா, பிலே! பூசனிக்காய்
வாண்டேன்?" என்று சொல்லி, இராமபிள்ளையைக்
னத்திற் படீரென்றடித்தார். அவர் கூக்குரலிட்டு இவ
யடிக்க, இவர் அவரை யடிக்கப் பெரிய கலகம் விளைந்து
இடம் பூசுரர் தெருவாயிருந்ததனாலும், சீதாபதி ஐயருக்கு
பயந்தும், சில பிராமணர் சேர்ந்து, இராமபிள்ளை
கோடூரமான காயங்கள் உண்டாகும்படி அடித்துவிட்ட
கள். அவர் இரத்தம் மேலெல்லாம் பெருகப் பலவாறாய்
திட்டிக்கொண்டு, தம் வீட்டுக்குப்போய், வேளாளர்களிற் சி
ரைக் கூட்டிக்கொண்டு, மெள்ள மெள்ளத் தள்ளாடி, இ
கல் சப்மேஜிஸ்திரேட்டாருடைய வீட்டுக்கு நேராக
போய்விட்டார். சீதாபதிஐயர், அரிகில் தம்மினத்தார
சாந்தஞ் செய்யப்பட்டு, வீட்டுள்போய்ப் படுத்துக்கொ
டார். இராமபிள்ளை இறங்கலுக்குப்போன சங்கதி அ
ருக்குத் தெரியாது; அவர் பின்னி அன்றிரவு தூங்க
யில்லை.

இரண்டாவது அதிகாரம்.

இறங்கல் சப் மாஜிஸ்திரேட் நரசிம்ம முதலியார் சிறிதும் இரக்கமில்லாத நியாயாதிபதி. அவ்வூரிலுள்ள பரவர், துருக்கர், மறவர், குறவர் முதலிய துஷ்டர்கள், அவர் கொடூரத்தினால் தான் அடங்கி யொழுகுவதாகச் சொல்வதுண்டு. அநேக ஆண்டுகளாய் அவ்வூரிலேயே உத்தியோகமாயிருந்ததால், அங்கும், தன்னதிகாரத்திற்குட்பட்ட மற்ற ஊர்களி... வசிக்கும் வம்பர் வீணர்களைப்பற்றி அவருக்கு நன்றாய்த் ...ரியும். அவர் பொதுவாய்ப் பொருளாசை கொண்டு ...தி பிறழ்வதில்லை. முன்பு செந்தூரில் வேலையாயிருக்கையில், ...ழ்வாரையர் கொலைக் 'கேசில்' ஐயாயிர ரூபா வாங்கினரென்றும், அதில் ஏற்பட்ட சந்தேகத்தின் பொருட்டே அவ்விடம் விட்டு மாற்றப்பட்டாரென்றும் சொல்வார் சிலர்; ஆனால் கலக்டரைத் தாம் வருந்தி வேண்டிக்கொண்டதின் பேரில் மாற்றப் பட்டதாக அவர் சொல்வதினாலும், அவ்வளவு உயர்ந்த உத்தியோகஸ்தர் பொய் சொல்வாரென்று நம்புவதற்கு இடமில்லை யாதலானும், அவ்வுரையை நாம் மெய்யெனக் கொள்ளோம். இறங்கலில் வந்த பிறகுங்கூட, ருசி கண்ட நாவு சும்மா இராதாகையால், ரூபாவாக வாங்காவிட்டாலும், இரண்டொரு 'கேசு'களில், இஷ்டர்களுடைய கட்டாயத்தின் பேரில், ஒரு பெட்டி வண்டியும் மாடுகளும், நாலைந்து கறவைப் பசுக்களும், சில பட்டுப் பீதாம்பரங்களும் பெற்றுக்கொண்டதாகக் கூறுவாருமுளர். ஊர்வாயை மூட உலை மூடி யுண்டா? பொறாமைக்காரரான உலகத்தார் பலவிதமாய்த்தான் பேசுவார்கள்; நாம் காதில் விழுந்ததையெல்லாம் வேதவாக்காகக் கொள்ளவேண்டியதில்லை. பொது

வாய், நரசிம்ம முதலியார், மற்றுஞ் சில சப்மாஜிஸ்திரேட்டு களைப்போல், அரிசி, வாழைக்காய், இலை, விறகு முதலிய சாமான்களையும் கூட, 'வந்ததை வாப்பற்று' என்ற கொள்கையின் பேரில், இச்சிக்கப்பட்டவரல்லர். கூடிய மட்டிலும் யோக்கியரென்றே கூறவேண்டும். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும், ஒளிவுமறைவு இன்றி அளவிறந்த ஆசையையுடையவர். எல்லாம் வல்ல திரிமூர்த்திகளே காமன் கணைக்குட்படுவதாகப் புராணங்களிற் கூறப்படுகிறார்களே; "மெய்ஞ்ஞான விளக்க"த்தில், தன் வீரலாபத்தைப் பிரஸ்தாபிக்கும் பொழுது,

"வேதாவும் முகம் வெளுத்து, விண்டுவும் மார்பகஞ்சி வந்து, விடைவல்லோனும், பாதாதி கேசாந்தம் பாதியுடல் கறுத்து, வச்ரபாணி வேந்தும், போதாமல் முகத்திருகண் புறத்துமோ ராயிரங்கண் புகுதப்பெற்ற, எரா லென் கணைதாக்கி வீடுபடா தெவரெவரே யிலங்கா காரே?"

என்று மன்மதன் பெருமை கூறவில்லையா? கேவலம், அழியத்தக்க ஸ்தூல சரீரத்தையுடைய மனிதன், தன்னைப் படைத்தளிக்குந் தேவர்களினும் மேன்மை படைதல் சாத்தியமன்று. 'மலரில் மணம் போலும், எள்ளில் எண்ணெய் போலும், மணியில் ஓசைபோலும், பெண்டிராசை ஆண்மகனது ஸ்தூல சரீரத்துடன் பிறந்து, அச்சரீரத்துடன் தானழியும்' என்று அவர் சொல்வதுண்டு. ஆனால் நரசிம்ம முதலியாருக்கு எல்லாரிலும் உயர்ந்த அதிகாரத்துடன், யாவரினும் மிக்க காமமும் அமைந்திருந்தது. அவர் பேச்சு ஒவ்வொன்றிலும் இக்குணந் தொனிக்கும்.

நரசிம்ம முதலியார் வெகு நாள்களாகச் சீதாபதி ஐயர் மேற் கண்ணுடையவரா யிருந்தார். முன்பொருகாலத்தில் அவர் தம்முன் குற்றவாளியாய் வந்தபோது, சாக்ஷி பலக் குறைவால் அவரை விட்டாரே யொழிய, அவரைச் சிறிதும் மறந்திலர். 'ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்கு மாங்கொக்கு,' என்பது போல, அற்றம் நோக்கிக் காத்திருந் தார். அன்றியும், இராமபிள்ளை வைப்பாட்டி அதிரூபவதி; அவர் சொல் சிறிதும் தட்டவேமாட்டாள்.

பங்குனி மாதம் ஒன்பதாவது தேதியன்று சீதாபதி ஐயர் "கேசு" விசாரணை தொடங்கப்பட்டது. இராமபிள்ளை கோர்ட் டார் முன் பகிரங்கமாகச் சங்கதிகளை எடுத்துப் பேசும் பொருட்டுத், திருவடியாபிள்ளை யென்ற ஒரு 'வக்கீலை'த் திட்டஞ் செய்திருந்தார். பிரதிவாதிகள் பக்கம் சாமிநாதை யர், மாடன் துரை, என்ற இரண்டு 'வக்கில்'கள்.

வாதி பக்கம் இரண்டாவது சாக்ஷி, சீதாபதி ஐயர் மகன் நாராயணனே. அவன் படியேறிப் பிரமாணஞ் செய்தான வுடன், "என் பெயர் நாராயணன், நான் அதோ நிற்கிறாரே, எங்கள் அப்பா, பிள்ளை; (கோர்ட்டில் யாவருஞ் சிரித்தல்) ஊர் சிறு குளம்; எனக்குப் பதினாலு வயதாச்சுது; நான் பள்ளிப் பையன்" என்று சொன்னான்.

கோர்டார்:—ஓய் ஐயரே! சமைந்த பெண்ணைப்போலத் தலையைக் குனியாதேயும்; நிமிர்ந்து நில்லும், பார்ப்போம்; நாளை ஆய்ச்சிவந்தால் இப்படியா நிற்பீர்; நல்லது; யார் உம்மை இவ்விதம் சொல்லச் சொன்னது?

நாராயணன்:—வக்கீல் சாமிநாதையர் இப்படித்தான் சொல்லச் சொன்னார்.

கோர்டார்:—சரி, சரி: ஐயர் பாடஞ் சொல்லி வைத்துப் போட்டாரா? நல்லது: உமக்கு இந்தக் கேசைப்பற்றி என்ன தெரியும்?

நாராயணன்:—சண்டை நடந்த தினம் என் தகப்பனார் ஊரிலேயேயில்லை; குறும்பொறையூருக்கு மாடு வாங்கப் போயிருந்தார்.

கோர்டார்:—நல்லது, சண்டை நடந்த அன்று, உம்முடைய ஐயா ஊரிலில்லை என்றீரே? யாருக்கும் யாருக்கும் சண்டை? பயப்படாதேயும்; சும்மா சொல்லும்; புதுப் பெண்போல, தலையைக் குனியாதேயும்; என்னைப் பார்த்துச் சொல்லும்.

நாராயணன்:—சண்டையா? இராமபிள்ளைக்கும், இராமபிள்ளைக்கும்—இராமபிள்ளைக்கும்—எனக்குத் தெரியாது; வக்கில் சாமிநாதையரைக் கேட்டால் சொல்லுவார்.

'கோர்டி' லுள்ள யாவரும் கல்லென்று சிரித்தார்கள். பொய் புகலக்கூடாதென்றும், ஒரு குற்றத்தை மறைக்கும் பொருட்டு ஒருவன் ஒரு பொய் கூறினால், அக்குற்றம் அவ்வண்ணம் மறைபடாததுந் தவிர, இரட்டித்துப் பெருகு மென்றும், நாராயணன், புஸ்தகங்களில் வாசித்திருந்தான். அவன் தாயாகிய சீதையம்மாள், தன் கணவனுடைய தீய வொழுக்கத்தை முற்றிலும் வெறுத்தவளாய்க், குழந்தைப் பருவமுதல் தன் மகனுக்குச் சன்மார்க்க போதனைகள் புகட்டி, வெகு கவனத்துடன் சத்தியத்திலேயே அவனைப் பழக்கி வந்தாள். தான் ஒரு பண்டத்தைப் பிறர் அறியாமல் எடுத்துத் தின்றுவிட்டபின், தான் எடுக்கவில்லை

யென்று பொய்புகன்றால், தாயின் கோபத்தைத் தவிர மற்றொன்றுங் கிடையாதென்றும், உண்மைகூறி மன்னிப்பு வேண்டினால், தனக்கு இன்னும் அப்பண்டம் கிடைப்பதுடன், ஓர் அருமை முத்தமும் சித்திக்குமென்றும், அவனுக்கு நன்றாகத் தெரியும். அன்றியும் அவன் உபாத்தியாயராகிய இராஜகோபாலையரும், தம் பள்ளிப் பிள்ளைகளிடத்தில் நற்குணத்தை விருத்தி செய்வதில் வெகு சிரத்தையுள்ளவர். தன் தகப்பனார் குறும்பொற்றையூருக்குப் போயிருந்ததாகத் தன்னைப் பொய்ச்சாக்ஷி கூறச் சொன்னதற்கு, நாராயணன், எளிதில் இணங்கவில்லை. சீதாபதி ஐயருடைய நன்மையைக் கருதி, அவர் இல்லாளும், இராஜகோபாலையரும் கூட, அவனிடத்தில் மிகவும் வேண்டிக் கொண்டார்கள். ஒரு கன்று மரத்தை முதலில் வேண்டிய வழி வளைத்து வளர்க்கலாம்; ஆனால் ஒரு திசை நோக்கி வளர்ந்து பலத்தபின், மாற்றி வளைத்தல் அரிது. கடைசியில், நாராயணன் தன் தகப்பனுக்கு நேரிடக்கூடிய கேட்டை நினைத்துப் பயந்து, ஒருவாறு இணங்கினபோதிலும், தன்னைத் துயருழப்பிக்கும் மனச் சாக்ஷியைத் திருப்தி செய்யும் பொருட்டுத், தனக்குச் சாக்ஷி சொல்லி வைத்தது 'வக்கீல்' சாமிநாதையரென்று 'கோர்டில்' வெளியிட்டு, அவ்வண்ணம் தான் கூறப்புகும் பொய்யின் பாரத்தை ஒருவாறு நீக்கிக்கொள்ள நினைத்திருந்தான். அதனால் விளையுந் தீங்கு அவனுக்குத் தோற்றவில்லை.

கோர்டார்:—ஓய் ஐயரே! நல்லது, உம்முடைய பெயரென்ன, நாராயண ஐயரா? நல்லது; இந்த ஒரு சங்கதி மட்டும் ஒளியாமல் சொல்லிவிடும் பார்ப்போம்; நீர் மற்றப் பார்ப்பாரப் பசல்களைப்போல இல்லை; யோக்கியராயிருக்கிறீர்; இதுமட்டுஞ் சொல்லும்போதும்; சண்டையில் இராம

பிள்ளைதான் முதலில் உம்முடைய அய்யாவை யடித்தாரா? அல்லது உம்முடைய அய்யா தான் கைநீட்டினாரா?

நாராயணன்:—(கண்ணீர் ததும்ப) இராமபிள்ளைதானே முதலில் தாறுமாறுமாய்ப் பேசினார்.

கோர்டார்:—ஆமாம்; அது மெய்தான்; இராமபிள்ளை தான் முதலில் பேசினார்; அவர் சுத்த அயோக்கியரென்பது எனக்குத் தெரியும். அடித்ததோ?

நாராயணன்:—இராமபிள்ளை தான் முதலில் சத்தம் போட்டார்; அதற்காக அப்பா ஓர் அடி அடித்தார்; அவரும் பதிலடித்தார்; சண்டை யுண்டாச்சுது.

மற்றக் குற்றவாளிகளைப்பற்றிச் சில கேள்விகள் கேட்டானபின், நாராயணன் விசாரணை முடிந்தது. 'வக்கீல்'கள் ஒருவருக்கும் அதிக சிரமமேயில்லை. நரசிம்ம முதலியாரே அவர்கள் வேலையையும் சேர்த்துப் பார்த்துக் கொண்டார். இதைப்பற்றி மாடன் துரை ஆக்ஷேபித்த போதிலும் ஒன்றும் பயன்படவில்லை. இன்னும் ஒரு சாக்ஷியின் விசாரணையை மட்டும் கொஞ்சம் விவரிப்போம்.

பஞ்சாங்கம் பப்பு சாஸ்திரிகள் என்பவர், வாதி பக்கம் சாக்ஷிகளில் ஒருவர். அவர் பன்னிரண்டு முழ நீளமும், இருபத்துநாலு தையல்களும், முப்பது ஒட்டைகளுமுள்ள ஓர் அழுக்கு வஸ்திரத்தைப் பஞ்சகச்சம் வைத்துத் தரித்துக்கொண்டும், அதன்மேல் அதுபோன்ற மற்றொரு வஸ்திரத்தைத் தயிர்மத்தைச் சுற்றுங் கடை கயிறு போலச் சுற்றிக்கொண்டும், நியாய சபைக்கு மரியாதையாக அரை வஸ்திரத்தை அடித்தொடை மட்டும் தூக்கிச் சொருகிக்கொண்டும், தம் பெயர் கூறப்பட்டவுடன்,

'கோற்டி'ற்குள் வந்து சேர்ந்தார். ஊருக்குப் பொதுவான மனிதனுகையால், யாவரையும் திருப்தி செய்து சந்தோஷிப்பிக்கும் பொருட்டுத், தம் மேடு பள்ளமான பல் வரிசைகளை வெளியே காட்டிக்கொண்டு, அங்கும் இங்கும் திரும்பித் திரும்பி ஆசீர்வாதங்களும் நமஸ்காரங்களுஞ் செய்து கொண்டு வந்தார். அவர் மாடன் துரையைப் பார்த்தவுடன், விதிவசத்தை நொந்து தலையிலடித்துக் கொள்பவர் போல், நடுநெற்றியில் அகங்கையை வைத்துச்'சலாம்' செய்ததைக்கண்டு, குற்றவாளிகளும் உள்படக், 'கோற்டி'லுள்ள யாவரும் சிரித்தார்கள். அவர் படியேறிப் பிரமாணஞ் செய்தானபின், 'கோற்டார்' அவரைப் பார்த்து,

"என்ன ஓய், சாஸ்திரியாரே! உமக்கென்ன தெரியும்?" என்று கேட்டார்.

சாஸ்திரிகள்:—"நான் கனுந்தம் அத்தியயனம் பண்ணியிருக்கிறேன்; கொஞ்சம் காவியமும் வியாகரணமும் பார்த்திருக்கிறேன்; தர்க்கத்தில்கூடக் கொஞ்சம் விற்பத்தியுண்டு; தவிரவும், சகல வர்ணத்தார்களுக்கும் ஏற்பட்ட கிரியா மந்திரங்களெல்லாம் க்ரமேணு கரதலாமலகமாய்த் தெரியும்."

இதைக் கேட்டுக் 'கோற்டில்' யாவரும் சிரித்தார்கள்.

கோற்டார்:—ஓய் சாத்திரியாரே! கொஞ்சம் கடையைக் கட்டும். அதெல்லாம் உம்மை இப்பொழுது கேட்கவில்லை. உம்முடைய யோக்கியதைகளெல்லாம் நமக்குந் தெரியும்; இந்த ஊராருக்குந் தெரியும்; தேரடித் தெருவில் வந்திருந்த கூத்தாடிச்சிக்குந் தெரியும். (எல்லாருஞ் சிரித்தல்) அதெல்லாம் இப்பொழுது கேட்கவில்லை. உமக்கு இந்தக் கேசைப் பற்றி என்ன தெரியும்?

சாஸ்திரிகள்:—யஜமானவர்கள் ஏழைமேல் கோபி
துக் கொள்ளலாகாது; நான் பிராமணன். ஸ்ரீ கிருஷ்ண ப
வான்கூட, "பிராமணு மமதேவதா" என்று சொல்லி யிரு
கிறார். யஜமானவர்கள் என்னை நிந்தனை செய்தால் பாவ
சம்பவிக்கும்.

கோற்டார்:—(கோபமாய்) ஓய், பார்ப்பான்; கதை
கட்டுமென்றால் தெரியாதா? கேட்ட கேள்விக்குப் பதி
சொல்லும்; ஞாபகமாய்ப் பேசும், என்ன திதி வீடு என்
நினைத்துக் கொண்டீரோ?

சாஸ்திரிகள்:—இல்லை; உத்திரவுப்படி நடக்கிறேன்
எனக்கு இந்தக் கேசைப் பற்றி ஒன்றும் தெரியாது.

திருவடியா பிள்ளை:—என்ன ஐயரவாள்! சண்டை நட
கும் பொழுது நீங்கள் இல்லையா?

சாஸ்திரிகள்:—வக்கீல் பிள்ளையவாள்! நான் சொல்
கிறதைக் கொஞ்சம் கேட்கவேணும்: நான் பொத
ஷன்; சீதாபதி ஐயரும் எனக்கு வேண்டியவர் தான்; இரா
பிள்ளையும் எனக்கு வேண்டியவர் தான்; என்னைச் சாக்ஷி
கப் போடாதேயுங்களென்று, நான் முன்னே சொல்
வில்லையா? வலது கண்ணைக் குத்துகிறதா? இடது கண்
குத்துகிறதா?

கோற்டார்:—ஓய் பார்ப்பான்! நினைத்துப்பேசு; தி
டென்று எண்ணாதே. பிரமாணமாய் வாக்குமூலங் கொ
கும்பொழுது பொய் கூறினால், சிறைச்சாலைக்கு அ
விடுவேன்; பத்திரம்.

சாஸ்திரிகள்:—விதிபோல் நடக்கிறது; நம்மா
இருக்கிறது?

திருவடியாபிள்ளை:—சண்டை என்னமா யுண்டாச்சுது?

சாஸ்திரிகள்:—சீதாபதி ஐயர் ஆத்துவாசலில் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கூக்குரல் உண்டாச்சுது. நான் அடுத்த வீட்டுத் திண்ணையிலிருந்தேன்.

திருவடியாபிள்ளை:—யார் முதலில் சத்தம் போட்டது?

சாஸ்திரிகள்:—இரண்டு பேருந்தான் போட்டார்கள்; இன்னாரென்று குறிப்பாய்ச் சொல்லமுடியாது.

திருவடியாபிள்ளை:—அது கிடக்கட்டும். நீர் அடுத்த வீட்டுத் திண்ணையிலிருந்தீரே, பார்த்திருப்பீரே, முதலில் அடித்தது யார்?

சாஸ்திரிகள்:—"நான் பொது மனுஷன்; இந்த மாதிரி வந்துவிடுமென்பது தெரியும்; அதற்காகவே, கொஞ்சம் சத்தம் உண்டான உடனேயே, இரண்டு காதுகளையும் நன்றாய்ப் பொத்திக்கொண்டு, கண்களையும் இறுக மூடிக்கொண்டு விட்டேன். பிற்பாடு நடந்த தொன்றும் எனக்குத் தெரியாது," என்று சொன்னார். இதைக்கேட்டவுடன் 'கோர்ட்டில்' யாவரும் கல்லென்று சிரித்தார்கள்.

இவ்விதமாக ஒரு வாரம் வரை விசாரணை நடந்தது. கடைசியில், சீதாபதி ஐயருக்கு ஆறுமாதக் கடுஞ்சிறையும் நூறுரூபா அபராதமும், கிருஷ்ணையருக்கும், வேறு மூன்று பிராமணர்களுக்கும் ஆளுக்கு ஐம்பது ரூபா அபராதமட்டும் விதிக்கப்பட்டன.

இதற்குள், 'வக்கீல்பீசும்' 'போலீஸ்காசு' மாகச், சீதாபதி ஐயருக்கு நானூறு ரூபாவரை செலவாய்விட்டது. மேல் கோர்ட்டில்' 'அப்பீல்' செய்தார். அங்கும் நூறுரூபா வரை செலவானபின், தண்டனை உறுதி செய்யப்பட்டது.

இவ்விதமாகச் சிறைப்பட்டவுடன், சீதாபதி ஐயருடைய விரோதிகள் பலரும் தைரியமடைந்து, அவர் சிறை மீளு முன்னமே, அநேகம் 'பிராதுகள்' செய்தார்கள். அம்மூல மாயும் பொருள் நாசமுண்டாயிற்று. கள்ளக்கை யொப்ப மிட்டுப் பணம் பெற்றுக்கொண்டதாகவும், சில கள்ளப் 'பத்திரங்கள்' உண்டுபண்ணினதாகவும், ஒரு வியாபாரி, அவர் பேரில் 'பிராது' செய்தான். அவர் சிறைச்சாலையிருந்தத னாலும், எதிரிகள் பலத்தினாலும், உண்மை வெளியாகிக் குற்றம் ருசுவாகி, அவர், 'ஜில்லாக் கோர்ட்டாரால்,' முன் தண்டனை கழிவதற்குள், இன்னும் நாலு வருஷம் கடுஞ்சிறை விதிக்கப்பட்டார்.

அவருக்கிருந்த சொற்ப நிலம், வீடு, தோட்டம் முதலிய யாவும் விரயமாகிக், குடும்பத்துக்குக் குடிக்கக் கஞ்சியின்றிப் போய்விட்டதுந் தவிர, அவர் மனைவி கழுத்திலிருந்த திருமங்கலியம் நீங்கலாக, மிகுதி நகைகளுங்கூடப் போய்விட்டன. சீதாபதி ஐயருக்கு வாழ்க்கைப் பட்டதற்கு அடையாளமாக, அப்புண்ணியவதிக்கு, மஞ்சள் நூலில் கோத்த ஒரு சிறு தாலிமட்டுமிருந்தது; நாராயணனும் இருந்தான்.

மூன்றாவது அதிகாரம்.

சிறு குளத்தில், சிறுவர் கற்க, ஒரு சிறு தமிழ்ப் பள்ளிக்கூடந்தா னிருந்தது. 'ஆங்கிலம்' பயில்வோர் இறங்கலிலுள்ள 'கிறிஸ்தவ கலாசாலை'க்குப் போவார்கள். அக் கல்விச்சாலையில் இராஜகோபாலையர் முதலாவது ஆசிரியர். அவர், பரீக்ஷைப் பட்டங்கள் விசேஷமாகப் பெற்றிலராயினும்,

'ஆங்கிலத்'தில் தக்கபயிற்சி உடையவர்; தமிழிலோ சிறந்த பண்டிதர். அன்றியும், அவருக்கு வடமொழியும் நன்கு தெரியும். ஆயினும் அவருடைய கல்விக் களஞ்சியமெல்லாம் அவர் குணாதிசயங்களுக்கு உறையிடவுங் காணமாட்டாது. மற்ற ஆசிரியரைப்போல் தம் வேலையை 'சர்க்கார்' உத்தியோகங்களிலும் தாழ்வானதாக நினையாது, மிகவும் பெருமையாகவே பாராட்டி வந்தார்.

வாலிபரைத் தாயினும் அருமையா யாதரித்து, அவர்களுக்கு அற்புதமான அறிவைப் புகட்டி அவர்கள் யுக்தி புத்திகளைச் சன்மார்க்கத்தில் செலுத்துவதினும் மேன்மையான தொழில், மனிதனுக்குக் கிடைத்தலரிது. ஏனைய உத்தியோகங்கள் யாவற்றினும், எவ்வழியாவது, சிறிது பொய், புரட்டு, களவு, அநியாயம், ஏழைகளைத் துன்புறுத்துதல், கொடுமைகளைச் செய்யா வண்ணமாகச் செய்வித்தல் முதலிய பலவிதத் தீச்செயல்கள், நேரிடக்கூடும். இதிலோ அப்படியன்று; இது, தருமத்தைப்போல், ஈவோனுக்கும் ஏற்போனுக்கும் நன்மையையே பயக்கும் பண்புடைத்தாயிருக்கின்றது. பிறந்த இயற்கையில் மிருக சுபாவமே மிகுந்துள்ள மனிதன், தாயிடத்தும், தந்தையிடத்தும், உடன்பிறந்தோரிடத்தும், சுற்றமுள்ளோரிடத்தும், முக்கியமாக ஆசிரியரிடத்தும், வியக்தமாகவும், யூகமாகவும், கிரகிக்கும் அறிவன்றோ, அவனை மேம்படுத்திப் பெருமை செய்கின்றது? அன்றேல், கேவலம் ஆடுமாடுகளைப்போல், பசி, தாகம், காமம், உறக்கமுதலியவற்றிற்கு அடிமைகளாகி, நம் வாணாள்களை வீணாள்களாகப் பிறந்தும் பிறந்திலராய்க் கழிப்போமென்பதிற் சந்தேகமில்லை. இவ்விதச் சிறப்புள்ள அறிவின் முக்கிய வருவாயாகிய ஆசிரியருக்கு நாம் எவ்

வளவு நன்றி பாராட்டல் வேண்டும்? முப்பது வயதிற்குள், வித்வசிரோமணியாகி, ஆசியா, ஐரோப்பா என்னும் இரண்டு விசாலமான கண்டங்களையும் தம் பராக்கிரமத்தால் கைவசமாக்கிக், கங்கா நதிவரையும் தம் கீர்த்தியைப் பரவச்செய்து அவ்விரண்டு கண்டங்களிலுமுள்ள நாகரீகத்தையும் கல்விப் பயிற்சியையும் நிலைநிறுத்தி, அளவிறந்த நன்மைக்குக் காரணமாக விளங்கிய 'மஹா அலெக்ஸாந்தர்' என்னும் புகழ்ப் பட்டம் பெற்ற சக்கரவர்த்தியானவர், தாம், தமது தந்தையாகிய 'பிலிப்' என்பவரிடம் தம்முயிர் வாழ்க்கையைப் பெற்றதாயும் தம் குருவாகிய 'அரிஸ்டாட்டில்' என்பவரிடம் அவ்வாழ்க்கை நலத்தைப் பெற்றதாயும் சொல்வதுண்டாம். அன்றியும் ஒரு காலத்தில், இராச்சியங்களைப் பெயருக்கு ஆள்வது அரசராயினும் உண்மையாக ஆள்வது யாவர்? என்ற வினாப் பிறந்தபோது, பலர் பலவித விடையளிக்க மூத்தோரொருவர் மட்டும் "இராச்சியங்களை உண்மையிற் பரிபாலிப்பது கல்வி புகட்டும் ஆசிரியரே," என்றனராம். எங்ஙனமெனில் இராச்சியத்தை, அரசரும் மந்திராலோசனைச் சபையார் முதலிய உத்தியோகஸ்தர்களும் ஆள்கிறார்கள்; இவர்களையோ, இவர் மனையாள்பவராகிய ஸ்திரீகள் ஆள்கின்றனர்; இல்லக்கிழத்திகளை அவர்கள் குழந்தைகள் ஆள, அக்குழவிகளை அவர் கல்வி பயிலும் பள்ளி ஆசிரியர் ஆள்கிறார்கள்; ஆதலின், யோசித்துப் பார்க்கின் இராச்சியங்களை உண்மையிலாள்வது பள்ளியாசிரியரே.

இவ்வளவு சிறந்ததும், பொறுப்புள்ளதும், கௌரவம் பொருந்தியதுமான பள்ளியாசிரிய வேலையை வகிப்பவர்கள், எவ்வளவு புத்திமான்களாயும், பொறுமை யுடையவர்களாயும், இயற்கையாக அன்புப் பெருக்குடையவர்களாயும் மாசு

மறுவற்ற மனமுடையோராயு மிருத்தல் வேண்டும்? நண்பர்களே! கிராமப்பள்ளி உபாத்தியாயர்களில், ஆயிரத்தில் ஒருவரேனும் மேற்கூறிய குணங்கள் அமைந்திருக்கின்றனரோ? நாம் அநேக ஆசிரியரைப் பார்த்திருக்கிறோம். சிலர், பிள்ளைகள் மேல் செந்நாய்களைப் போல்விழுகிறார்கள்; சிலர், மூடர் ஆடு மாடுகளை அடிப்பது போல், குழந்தைகளை அடிக்கிறார்கள்; சிலர், எப்பொழுதும் கோபாவேசமாகவே இருக்கிறார்கள்; பெரும் பான்மையோர், தாங்கள் கற்பிக்கப் புகும் கல்வி விஷயத்தில் சர்வ மூடர்களா யிருக்கிறார்கள். நூற்றில் தொண்ணூறு பேர்களுக்குத், தாங்கள் தெரிந்த அற்ப சொற்பத்தையும், 'பிரப்பம்பழம், நிமிட்டாம்பழம்,' முதலிய உபகரணங்களில்லாமல், குழந்தைகளுக்குப் போதிக்கத் தெரியாது. இதற்குக் காரணம் கற்றுத் தேர்ந்த குணவான்கள் அரிதாயிருப்பதும், மூடர்கள் கல்வி பயிற்றப் புகுதலுமே. உடுக்கத் துணியும் உண்ணச் சோறுமில்லாத மூடனொருவன், ஒரு தொழிலுமறியானாயின், ஒரு பள்ளிக்கூடத்தை வைத்துப் பிழைக்கத் தலைப்படுகிறான். ஏழு வருஷமாகச் சிறைச்சாலையிலிருந்து வெளிப்பட்டானொருவன், பிழைக்க வேறு வழியின்றி, ஒரு பள்ளிக்கூடம் வைத்ததை நாம் கண்டிருக்கிறோம்; அந்தோ! இரவில் வீடுகளில் களவு செய்வதைத் தவிர அவன் யாதும் அறியானே! கன்னக் கோலைத் தவிரப், 'பேனா' எழுத்தாணி யெடுத்தறியானே! அவன் அதிபாலியரான குழந்தைகளுக்கு என்ன கற்பிக்கப் போகிறான்! 'இலஞ்சம்' வாங்கல் முதலிய புரட்டுக்களுக்காக நீக்கப்பட்டவர்களில், எத்தனை பேர்கள் பள்ளியாசிரியரா யிருக்கிறார்கள்! அநேகர் 'வக்கீல்' ஆகிறார்கள்; அது போதாதா? குழந்தைகளையுங் கெடுக்க வேண்டுமா? ஒன்றுக்கும் ஆகாதவன்

உபாத்தியாயன் ஆகட்டுமென்பது வேதவாக்காகி இவ்விஷயத்தில், தக்க சீர்திருத்தம் உண்டாகும் வரை, நம் தேசம் முன்னுக்கு வந்து விளங்குதலரிது. இது நிற்க.

அக் கல்விச் சாலை, கிறிஸ்தவப் பாதிரிகளுக்குச் சேர்ந்ததாதலால், தினமும் காலையில் வாசிப்புத் தொடங்குமுன், கிறிஸ்து வேதமாகிய 'பைபில்' புஸ்தகத்திலிருந்து இரண்டு மூன்று வாக்கியங்களை வாசித்துக் கடவுளைத் தொழுவது வழக்கம். இதனால், தங்கள் பிள்ளைகள் கெட்டுப் போவார்களென்று நினைத்துச் சில மூடத் தாதைகள், வீட்டுக்குக் கேடும் சோற்றுக்கு நாசமுமாகக் குழந்தைகளை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் பெரும்பாலார், இராஜகோபாலையருடைய யோக்கியதையையுஞ் சற்குணங்களையும் அறிந்து, பயமின்றிப் பிள்ளைகளை அவரிடம் அனுப்பி வந்தார்கள். அவரிடம் இதைப்பற்றிக் கேட்டவர்க்கு அவர் சொன்னதாவது: "ஆகாயத்திலிருந்து பலவிடங்களிலும் பொழியும் நீரெல்லாம் எவ்விதமாகக் கடைசியில் சமுத்திரத்தை அடைகின்றதோ, அதுபோலவே கடவுளை நாம் எந்த நாமத்தாலும் எந்த ரூபத்திலும் வணங்கியபோதிலும், எல்லாவற்றையும் சர்வேசுரனாகிய ஸ்ரீகேசவரே ஏற்றுக்கொள்ளுகிறார்," என்று சந்தியாவந்தன ஜபத்தில் சொல்லியிருக்கிறது. பாலர்களுக்கு எவ்வழியாவது தெய்வபக்தி புகட்டவேண்டும்; நம் நற்செய்கைகளைக் கண்டுகளித்துக் கொடுஞ்செயல்களைத் தண்டிக்கும் கடவுள் ஒருவர் உண்டென்பதை, அவர்கள் உணரவேண்டும். அஃது எவ்விதம் முடிந்தாலென்ன? பக்குவம் வந்தால் உண்மையையறிந்து கொள்ளுகிறார்கள்" என்பதே.

அப்பள்ளிக்கூடம், பல சிறிய அறைகளால் அமைந்திருந்தது. ஒவ்வோர் அறையிலும் ஒவ்வொரு வகுப்புப்

பிள்ளைகளிருந்தார்கள். ஓர் அறைக்குட் செல்வோம்; இராஜகோபாலையர், ஒரு 'மேஜை'க்குப் பின் நாற்காலியில் வீற்றிருக்கிறார். 'சுமார்' முப்பது பிள்ளைகள் வரை, அவருக்கு எதிரிலும் பக்கத்திலும் விசிபலகைகள் மேல் உட்கார்ந்திருக்கிறார்கள். புஸ்தகங்களெல்லாம் சிறு பைகளில் கட்டிவைத்திருப்பதையும், இராஜகோபாலையர், தம் 'மேஜை' மேலுள்ள புஸ்தகத்தை மூடிவிட்டுச் சும்மா பேசிக்கொண்டிருப்பதையும் பார்த்தால் அன்றைப் பாடங்கள் முடிந்து, வீட்டுக்குப் போக ஆயத்த மாயிருப்பது போலத் தோன்றுகிறது. நம் சிநேகிதன் இரண்டாவது சாக்ஷி நாராயணனும் அதோ இருக்கிறான்.

"அடே, நாணு! நான் நேற்றுச் சொன்ன குறளைச் சொல், கேட்போம்," என்று உபாத்தியாயர் வினவ, ஏதோ வேறு ஞாபகமாயிருந்த நாராயணன், திடீரென்று கேட்கப்பட்டவுடன், தன் நினைவிலேயே ஆழ்ந்தவனாய் எழுந்து, ஒன்றும் யோசியாமல், "பத்மி, தானே சொன்னாள்," என்றான்.

உடனே பிள்ளைகளெல்லாரும் கல்லென்று சிரித்தார்கள். அவன் மிகுந்த வெட்கமுற்றுக் கண்ணீர் பெருகத் தலையைக் குனிந்து கொண்டு நின்றான். உபாத்தியாயர் சினக்குறி தோன்ற, "முட்டாள்! நில்; அடுத்தவன்!" என்று கேட்டார். அவன் பக்கத்திலிருந்த பையன் எழுந்து, "யாதானும் நாடாமால் ஊராமால்: என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு" இக்குறளின் பொருள் யாதெனில், கற்றோர்க்கு எங்நாடும் எவ்வூரும் தம்நாடு தம்மூர் போன்று சிறந்து பெருமையைத்தரும்; அங்ஙனமாக, ஒருவன் இறக்குமளவும் கல்லாததற்குக் காரணமென்ன? என்பது. அதற்குக்

காரணம் மூடத்தனமே என்பது கருத்து" என்று சொன்ணன்.

உபாத்தியாயர்:—"இதேவிதமாகக் கற்றவர் எங்கும் புகழுறுதலைப்பற்றி வேறொரு செய்யுள் யாவர்க்காவது ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டார். சிலர் முழங்கைகளையுஞ் சிலர் தலைகளையுஞ் சொறிந்துகொண்டு, பிள்ளைகள் ஒருவரை யொருவர்நோக்கி விழித்தார்கள். நாராயணன், கொஞ்சம் வெட்கம் நீங்கித் தைரியங் கொண்டு,—"மன்னனுக்குத், தன் தேசமல்லாற் சிறப்பில்லைக்; கற்றோற்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" என்று மறுமொழி யளித்தான்.

உபாத்தியாயர்:—"சரி; கெட்டிக்காரன்; நான் நினைத்த செய்யுளையே சொல்லிவிட்டாய். பார்த்தாயா, நீ வேறு ஞாபகமாயிருந்ததால், சற்று நேரத்துக்கு முன் அவமானமுற்றாய். எந்நேரத்தில் எவ்வேலையைக் கைகொள்ளுகிறோமோ, அந்நேரத்தில் அவ்வேலையிலேயே முழுமனத்தையுஞ் செலுத்தவேண்டும். ஒருவன், ஒரே காலத்தில் புத்தகமும் படித்துக்கொண்டு பாட்டும் பாடிக்கொள்ள முயல்வானாயின், படிப்பும் பயன்படாது, பாட்டும் சுகப்படாது. இவ்வுண்மை அறியாது, அநேகர், தாங்கள் கால துரிதஞ் செய்வதாக வீணில் கருதி, இரண்டு மூன்று வேலைகளை ஏககாலத்திற் கைக்கொண்டு, அதனாலுண்டாகுந் தவறுகளால், இயல்பாகச் செல்லக்கூடும் பொழுதிலும் அதிக நேரத்தைப் பாழாக்குகிறார்கள்; 'ஒரே காலத்தில் ஒரே வேலை: அதை நன்றாய்ச் செய்யவேண்டும்;' என்பது ஆங்கிலப் பழமொழி. 'செய்வினை திருந்தச்செய்.' என்றார் ஔவைக் கிழவியும். நாணு! நீ உட்காரலாம்; இனிமேல் இப்படி அஜாக்கிரதையாயிருக்

கக் கூடாது. நல்லது, பிள்ளைகளே! மணியடித்துவிட்டது. நீங்கள் போகலாம், என்று சொல்லி யெழுந்தார்.

உடனே நாராயணன், "ஐயா! நாளைக்கு விடுகுறள் பாடஞ் சொல்ல வில்லையே? என்று கேட்டான். அதற்கு உபாத்தியாயர், "பார்த்தீர்களா, நானே மறந்துவிட்டேன். நாளைக்குக் குறள்வேண்டாம். 'கருமமே கண்ணாயினார்,' என்ற முடிவுள்ள வெண்பாவைப் பதவுரையுடன் நன்றாகப் படித்துக்கொண்டு வரவேண்டும்" என்று சொல்லிவிட்டு போய்விட்டார். உடனே பிள்ளைகளுமெழுந்து தேன் கூப் கலைந்தாற்போல் இரைச்சலிட்டுக்கொண்டு, வீடுகளுக்குப் புறப் பட்டார்கள்.

நான்காவது அதிகாரம்.

நாராயணன், மிகவும் வெட்கமுடைய பையனாதலால், தான் அன்று பள்ளிக்கூடத்தில் அடைந்த அவமானம் மனத்தை வருத்தத், தன்தோழர்களின் பரிகாசத்துக்கு அஞ்சி, ஒருவனுடனுஞ் சேராது, நேராக ஊருக்கு வந்துவிட்டான். அவன்சிறுகுளத்தின் மேலைவீதிக்குட்பிரவேசிக்கும்பொழுது, தெரு நடுவில் ஒரு மேடை வீட்டு வாசலில் நின்று திசை நோக்கி அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு சிறு பெண், உள்ளே குதித்தோடிச் சென்று, " அத்தே! அத்தே! எங்கே இருக்காய்! மாமா வரப்போதாகுமே, யார் வாசிப் பார்கள் என்றாயே; அதோ நாணு வந்துவிட்டான்; எனக்குத் தெரியாததை யெல்லாம் அவன் வாசித்துச் சொல்லுவான்," என்று சொல்லிவிட்டுத், திரும்பி வாசலுக்கு ஓடிவந்தாள். இதற்குள் வீட்டு வாசலில் வந்துவிட்ட நாராயணன் கால்களை

அந்தப் பெண் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "நாணு! உள்ளே வா; ஒரு சங்கதி," என்று சொல்லிக் கையைப் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டு போனாள்.

சீதையம்மாள், தன் மகனைப் பார்த்தவுடன், "அப்பா, நாணு! ஏது குழந்தாய், முகம் வாடியிருக்கிறது? பக்ஷணம் நன்றாயில்லையா? சாயங்காலம் ஒன்றுஞ் சாப்பிடவில்லையா?" என்று கேட்டாள். நாராயணன், "அதொன்றுமில்லை, அம்மா, இந்தக் குட்டியால் பள்ளிக்கூடத்தில் எல்லாருமென்னைப் பார்த்துச் சிரிக்கும்படி அவமானப்பட்டேன்: அதுதான் கொஞ்சம் வருத்தமாயிருக்கிறது," என்றான்.

"அவளாலே நீயேன் சிறுமைப்படுகிறாய்? அவள் என்ன செய்தாள்? நானொருத்தி பெண் பிறந்து, உங்கள் மாமாவைத் தேடி மாலையிட்டுவிட்டுப் படுகிற சிறுமை போதாதா?" என்று ஒரு ஸ்திரீ விசனத்துடன் சமையலறைக்குள்ளிருந்து சொன்னாள்.

அதற்கு நாராயணன், "விசேஷமொன்றுமில்லை; என் பேரில்தான் குற்றம்: நான் இன்று உதயத்தில் பத்மிக்குப் பாடஞ் சொல்லிக்கொடுக்கும்போது, அவள் ஒரு அம்மா னைப் பாட்டுச் சொன்னாள்; நான் அதைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்; அந்தச் சமயத்தில் திடீரென்று வாத்தி யார் ஒரு கேள்வி கேட்க, வாய் தவறி, 'பத்மிதானே சொன் னாள்,' என்று சொல்லிவிட்டேன்; அதற்கு எல்லாரும் சிரித் தார்கள்," என்று சொன்னான். அவன் வாய் மூடுமுன் அச் சிறு பெண்ணாகிய பத்மாவதி,

வாசலிலே வந்து பசியென்றவரை வைது மிகப்
பூசலிட்டுப் போக்காத புத்திதராய் அம்மானை."

என்று பாடத் தொடங்கினாள்.

ஜயில் எட்ரயிட்டர் கருணாசாகரமாகிய துரைசாமி ஐயரவர்கள் கிருபையினால் தான் முடிந்தது. ம-ா-ா-ஸ்ரீ, ஐயரவர்களுக்கு நல்ல பாய் ஒன்று வேண்டுமென்று சொல்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் பத்தமடையிலிருந்து உயர்ந்த பாய் ஒன்று தருவித்து, ஐயரவர்கள் விலாசத்துக்கு அனுப்பவும். இது விஷயத்தில் மறதியாயிருக்க மாட்டாயென்று நம்புகிறேன். நான் ஜயிலிலிருந்து வெளியே வருவேனென்று சொப்பனத்திலும் எண்ணவில்லை. இன்னும் ஒரு வருஷம் உயிர் தரித்தால் அதிகம். என் ஆம்படையாளும், குழந்தையும் உன் அடைக்கலம். அவர்களைக் கடைசிவரையும் காப்பாற்றுவாயென்று பூரணமாய் நம்பியிருக்கிறேன். சின்னப்பயல் நாணு நல்ல புத்திசாலி. நான் அவனைப்பற்றி எவ்வளவோ நினைத்திருந்தேன். ஈசுவர சம்மதமில்லாமல் போய்விட்டது. உனக்கில்லாத சொந்தம் எனக்கில்லை. நான் செய்யக்கூடிய பிரதிபலனும் இந்த ஜன்மத்தில் ஒன்றுமில்லை. ஸ்ரீ சுப்பிரமணியர் உனக்கு ஸகல ஸௌபாக்கியத்தையும் கொடுத்து, உங்கள் எல்லாரையும் ரக்ஷிப்பார்.

வேணும் அநேக ஆசிர்வாதம்,

ஸ்ரீ சுப்ரமணியர் சகாயம்.

இப்படிக்கு, **சீதாபதி ஐயர்.**

(விலாசம்) 368-நெ. கைதி பெரிய ஜயில்,

திருச்சிராப்பள்ளி.”

கடிதத்தை வாசிக்கும்பொழுது, சீதையம்மாள், ‘சிவசிவா, சிவசிவா,’ என்று சொல்லிக்கொண்டு, கண்ணீர் ஆறுகப் பெருக, கன்னத்தில் வைத்த கையுடன் உட்கார்ந்திருந்தாள். விரைவில் வாசித்து முடிந்தவுடன் நாராயணன், துக்கம்

பொறுக்க முடியாமல் கவிழ்ந்து படுத்துக்கொண்டு விசித்து விசித்து அழத்தொடங்கினான். பத்மாவதியும் அவன் பக்கத்திலிருந்து அழுதுகொண்டிருந்தாள். சீதையம்மாளோ, அடங்காத் துயரமுடையவளாய், ஒருவாறு வாய்விட்டு தன் துக்கத்தைத் தணிக்க வெண்ணி, கொல்லைப் புறம் போயிருந்து, பின்வருமாறு பன்னிப் பன்னி யழுதாள்.

ஒத்தாரில் மச்சினனும் உம்மகனும் இங்கிருக்கச்
செத்தாரில் கேடாய்ச் செயிலிலடை பட்டீரோ!
பர்த்தாவே, பர்த்தாவே, பாவியுயிர் வாழ்வேனோ?
இத்தேகம் மாய்த்திவ் விழிகுறையும் நீங்கேனோ?
சீரகச்சம் பாவரிசித் தேனுணவு நான் தின்ன,
ஓரகப்பை கூழுக் குடல்மாய்த் தொழிவீரோ!
பாரகத்தே என்போற் படுபாவி மாருண்டோ?
யாரகத்தே சொல்வேன்நான், எவ்வா றுயிர்தரிப்பேன்!

ஐந்தாவது அதிகாரம்.

"பத்மி, பத்மி, அந்தக்குட்டி சேஷிகூடச் சேர்ந்து விளையாடாதே; அவள் கண்ணோவு உனக்கும் வந்துவிடும். மேடைக்குப்போய், நாணுவைப் பாடஞ் சொல்லித் தரச் சொல்லி, வாசிபோ," என்று பத்மாவதி தகப்பனார் ஐயாவையர் ஒரு நாள் சாயங்காலஞ் சொன்னார். தலைவாரிக்கொண்டிருந்த அவர் மனைவி சுப்பம்மாள், அதைக் கேட்டவுடன், "ஆமாமடி, அம்மா! போ, படிபோ; சீக்கிரம் படித்து, பி. ஏ. பரீக்ஷை கொடுக்கவேணும். இந்த ஜில்லா 'கலெக்டர்' வேலை காலியாகப் போகிறதாம்: உனக்குத்தான் கிடைக்கும்; போ, படிபோ; கரிபயென்றும் தெரியவேண்டாம்; படி

தால் போரும்; போ, படிபோ" என்றாள். அதற்கு அவள் புருஷன், "ஏன் சும்மா குலைக்கிறாய், நாயே! உன்னைக் கேட்டுத்தான் எல்லாம். காரியங்கள்! நீ யொருத்தி அழகாய்க் காரியஞ் செய்கிறது போதாதா! 'கல்கட்டர்' வேலை உனக்குத் தான் கிடைக்கும்; நீ யிருக்கும்போது வேறு யாருக்குக் கொடுப்பார்கள்? சும்மா குலையாதே; திருவாயை மூடிக் கொண்டு சும்மா இரு," என்று சொன்னார்.

சுப்பம்மாள், "நாய் குலைக்கும்: நான் ஏன் குலைக்கிறேன்? நான் நாய்போலத் தெருத் தெருவாய்த் திரியவுமில்லை: ஒருவர் வீட்டு எச்சிற்கலத்துக்கு இரக்கவுமில்லை," என்று முகத்தை ஒரு புறமாய்ச் சுழித்து வலித்துக்கொண்டு சொன்னாள். இதுவரையும் பேசாதிருந்த சீதையம்மாள், இதைச் செவியுற்றவுடன், "ஆமாமடியம்மா! நான் நாய்தான்; எச்சிற் கலத்துக்கு இரந்துதான், குடியிருக்க வீடில்லாமல், அந்தத் தெருவைவிட்டு இந்தத் தெருவுக்கு, உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறேன். ஆனால், நான் பிறந்த வீட்டுக்கு (என் தம்பி வீட்டுக்கு)த் தானே வந்திருக்கிறேன்? அந்நியர் வீட்டுக்குப் போகவில்லையே? நீ இப்பொழுது அநுபவிக்கிறதெல்லாம் எங்கள் அப்பா வைத்த பாக்கியந்தானே?" என்று விசனமாய்ச் சொன்னாள்.

சுப்பம்மாள், உடனே, வெறிகொண்டவள் போல் கொதித்தெழுந்து, "இது என் புருஷன் வீடு; எனக்குச் சொந்தம். உங்கப்பன் சொத்தானால் உங்கப்பனோடு போச்சு; இன்னும் என்ன வைத்திருக்கிறது? உன் ஆமக்கன் வீடா! உன் ஆமக்கனுக்கு வீடு திருச்சினாபள்ளியிலே பெரியதாய்க் கட்டிப்போட் டிருக்காம்: அங்கே போகவேணும்," என்று அகங்காரத்துடன் சொன்னாள்.

இப்படிச் சொன்னவுடன், ஐயாவையர் எழுந்துபோய்த், தம் மனைவி தலைமயிரைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளி, "என்ன சொன்னாய், நாயே? என்ன சொன்னாய், கழுதையே" என்று சொல்லிக்கொண்டே, ஐந்தாறு மிதியும் மிதித்து, அடியும் அடித்தார். அவள், "அப்பாடோ நான் செத்தேன்! என்னைக் கொல்லுகிறார்கள்," என்று கூக்குரலிட்டு அழுதாள். சீதையம்மாள் தன் கைவேலையைப் போட்டுவிட்டு ஓடிவந்து, தன் தம்பி கையைப் பிடித்தமர்த்தி, சுப்பம்மாள் கூந்தலையும் விடுவித்து, "அப்பா, அடியாதே, அய்யா அடியாதே; பெண் பாவம் பொல்லாது; அவள் சும்மா சொல்லட்டும்; அதனால் என்ன குறைவு? நம்முடைய விரல் கண்ணைக் குத்திவிட்டால் அதைத் தறித்து விடுகிறதா? அடியாதே; உனக்கு இந்தக் கோபம் ஆகாது," என்று சொல்லிச் சாந்தப்படுத்தி உட்காரச் செய்தாள். கொஞ்ச நேரம் வரை சுப்பம்மாள், "அடேயப்பா! அடீயம்மா! நான் சாகலாச்சு; நான் போகலாச்சு," என்று முனங்கி முனங்கி அழுது கொண்டிருந்தாள். ஐயாவையர் கோபமா யெழுந்து வெளியே போய் விட்டார்.

அவர் போனவுடன், சுப்பம்மாள் தன் நாத்தியைப் பார்த்து; "நீ வந்தது முதல் இந்த வீட்டில் நித்தியம் இழவும் பயிறுந்தான். இது எங்கிருந்து வந்த சனியன்? போன ஜன்மத்தில் உன்னை மூண்டிருந்தேன். பாவிகள் என்னைக் கசத்தில் கல்லைக்கட்டி யிறக்காமல், இந்த வீட்டில் வாழ்க்கைப் படுத்தினார்களே! சொத்திருக்காம் சொத்து! என்ன சொத்து! நான் சொத்தினால் என்ன சுகத்தைக் கண்டேன்? நாய்க்கும் பேய்க்கும் உழைத்திடுவதே வேலையாச்சு. ஈசுவரா! தெய்வங்களே! உங்களுக்காவது இரக்கமில்லையா! உங்களுக்

கும் கண் அடைத்தாபோய்விட்டது? என்று விடியுமோதெரிய வில்லையே; மங்கிலிப் பெண்டுகளே! நான் உத்தமி பத்தினியா னால் என்னைச் சீக்கிரம் எடுத்துக்கொண்டு போங்கள்,'' என்று கொடூரமாய்ச்சொன்னாள்.

அதற்குச் சீதையம்மாள், "அம்மா, சுப்பு! நீ மனம் நொந்துகொள்ளவேண்டாம்; இதுவரையும் என்னால் பட்ட க்ஷ்டத்தை யெல்லாம் பொறுத்துக்கொள்; நான் மனதார வாக்கார ஒரு தீங்குஞ் செய்யவில்லை. ஏதோ விதிவசத்தினால் இல்லாமைப் பட்டுப்போய் விட்டோம்; என் தம்பியிடத் தில் கொஞ்சம் சுவாமி கொடுத்தது இன்றைக்கு இருக்கிறது. அவனும் விரும்பியழைத்தான்; நானும் அவனைவிட நமக் காரிருக்கிறார்கள், கொஞ்சம் துக்கமாறுகிற வரையுமாவது காடிக் கஞ்சியை மூடிக் குடித்துக்கொண்டிருப்போமென்று வந்து விட்டேன்; என் கையாலான வேலையைச் செய் கிறேன், நானும் என் குழந்தையும் சாப்பிடுகிறோம். அதற்கு நீ படுத்துகிற பாடு, சந்திரமதியும் லோகிதாசனும் கூடக் காலகௌசிகன் வீட்டில் படவில்லை. இந்த நாற்றச் சோறு எங்கும் கிடைக்கும். மலையாளத்து மகாராஜா ஊட்டுப்புரை யடைத்துப் போகவில்லையே? இல்லாவிட்டாலும், என் குழந்தை 'பவதீபிக்ஷாந்தேகி' என்று நாலுவாசல் நுழைந் தால், நாறவயிறு நிறைந்துபோகிறது; இதற்கேன் நீ இவ் வளவு வருத்தப்படுகிறாய்? நான் கூடிய சீச்கிரத்தில் போய் விடுகிறேன்,'' என்று சொன்னாள்.

அது கேட்டுச் சுப்பம்மாள், "ஆமடி! இம்மட்டுப் போதாய் போட்டுக் கொன்றது காணாது; இன்னும் 'உன் ஆம்படையாள் என்னை வீட்டை விட்டுப் போகச் சொல்லு

கிருள்,' என்று சொல்லிக் கொடுக்கப் பார்க்கிருயோ? நான் செத்தால் தான் உன் கண்ணடைக்கும்," என்ருள்.

சீதையம்மாள், "நீ அப்படி ஒன்றும் பயப்படவேண்டாம்; எதற்கம்மா சாகவேணும்? இன்னும் பிள்ளைகள் பெண்களெல்லாம் பெற்று மகராசியாயிரு; நீ செத்தால் எனக்கென்ன கிடைக்கிறது? எப்படியாவது நன்ருயிருந்தால் கண்குளிரப் பார்த்துக் கொண்டாவது இருக்கலாம். நான் வேறு காரணங்கள் தகுந்தபடி சொல்லிப் போய் விடுகிறேன். இராஜகோபாலையர் எங்கேயோ பெரிய வேலைக்குப் போகப்போகிருர்; வேறு பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டுமென்று நாணுவும் சொல்லுகிருன். நீ பயப்படாதே, நான் திருநெல்வேலிக்குப்போய் விடுகிறேன்," என்று சொன்னுள்.

அதற்குச் சுப்பம்மாள், "ஆமாம், நீயும் உன் பிள்ளையும் திருநெல்வேலியில் போய் உட்கார்ந்து கொள்ளுங்கள்; இங்கேயிருந்து மாத மாதம் உங்களுக்கு 'ரூபா மணியார்டர்' பண்ணட்டும். சம்சாரி குடித்தனம் எப்படியாலுல் உனக்கென்ன கவலை?" என்ருள்.

சீதையம்மாள், "அதுவும் நீ பயப்பட வேண்டாம்; என் கை காலுள்ள மட்டும் நான் உன்னிடத்தில் படி வாங்கிச் சாப்பிட மாட்டேன். ஒரு செம்பாலடித்த காசு எனக்கு அனுப்ப வேண்டாம்," என்று சொன்னுள். இது நிற்க:

தன் தகப்பனுர் வார்த்தையைக் கேட்டவுடன் மேடைக்குப் போய் விட்ட பத்மாவதி, என்ன செய்கிருளென்று பார்ப்போம். பத்மாவதி போகும் பொழுது நாராயணன் ஏதோ ஒரு ஆங்கிலப் புஸ்தகத்தை மார்பில் சார்த்திக் கொண்டு, மேல் நோக்கி யோசித்துக் கொண்டிருந்தமை

யால், அவன், அவள் வரவைக் கவனிக்கவில்லை. அதை யறிந்த பத்மாவதி, மெதுவாகப் பூனை போல் தலைமாட்டின் கிட்டப் போய், 'டஸ்' என்று கூவிக் குதித்தாள். அவன் கொஞ்சம் திடுக்கிட்டுப், பின்பு, "பத்மி! எங்கே போயிருந் தாய்? இவ்வளவு நேரமென்ன? அப்போதே ஏன் வாசிக்க வரவில்லை?" என்று கேட்டான். அதற்குப் 'பத்மி' (சிறு குட்டியானதினாலும், நம்முடைய கதாநாயகியானதினாலும், நாமும் அந்தச் செல்வப் பெயரையே உபயோகிப்போம்) "நான் விளையாடப் போயிருந்தேன். அதெல்லா மிருக்கட் டும்; நீ என்ன உயரப் பார்த்துக் கொண்டிருந்தாய்? பாக் கட்டையில் சித்திரம் எழுதியிருக்கா? அல்லது எப்பொழுது கலியாணமாகுமென்று யோசித்துக் கொண்டிருந்தாயோ?", என்று கேட்டாள்.

நாராயணன், புன் சிரிப்புச் சிரித்துக் கொண்டு, "அப் படி யொன்று மில்லை; எங்கப்பாவைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். அவர் எங்கேயோ ஜயிலில் அடைப் பட்டு வேலை செய்கிறதைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் என் மனமுருகி, என்னமோ பயித்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது," என்று கண்ணீர் ததும்பச் சொன்னான்.

"அத்தம்பியாரை என்னத்துக்காக விலங்கு போட் டார்கள்? அப்பொழுது என்னவோ சொன்னார்கள்; மறந்து போச்சு," என்று பத்மி கேட்டாள்.

நாராயணன், "நானென்ன செய்வேன்? எல்லாரும் என் சாக்ஷியினால் தான் தண்டனை யடைந்தா ரென்று சொல்லு கிறார்கள். பிரமாணமாய் எல்லார் முன்பும் 'கோர்ட்டில்' கேட்ட பொழுது, மனதில் உள்ளது வெளியே வந்து விட்டது. அப்படியே யிருந்தாலும் நாலுமாதந் தானே; அப்போதே

கழிந்து விட்டதே; கள்ளக் கையெழுத்துப்போட்டதற்காகத் தானே இப்பொழுது ஜயிலில் இருக்கிறார். நான் என்ன செய்வேன்?" என்று சொன்னான்.

பத்மி அவன் கழுத்தைக் கட்டி அவன் முதுகின்மேல் சாய்ந்து ஆடிக் கொண்டு, "நீ அப்படி யொன்றும் கள்ளக் கையெழுத்துப் போடாதே?" என்று முகத்தோடு முகம் வைத்துக் கெஞ்சிக் கேட்டாள். நாராயணன் மறுமொழி கூறுமுன், கீழே நடந்த சண்டையின் கூக்குரலும், சுப்பம்மாளின் அழுகைச் சத்தமும் கேட்டன. "மாமாவும் அம்மாமியும் என்னவோசண்டைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்," என்று சொல்லி விட்டுப், பத்மி, மறு படியும் நாராயணனுடன் பேசத் தொடங்கினதைப் பார்க்கையில், ஐயாவையருக்கும் அவர் மனைவிக்கும் இவ்விதக் கலகங்கள், அடிக்கடி சர்வ சாதாரணமா யுண்டாகுமென்று தோன்றுகிறது.

பத்மாவதி:—நாணு! எனக்கு ஒன்று தோன்றுகிறது: உன் கலியாணத்தின் போது எனக்கு ஒரு நல்ல பட்டுச் சிற்றாடை வாங்கித்தர மாட்டார்களா?

நாராயணன்:—ஆமாம், தருவார்கள்; அதைஅப்பொழுது உடுத்திக் கொள்ளலாம்; இப்பொழுது பாடம்சொல்லுவா.

பத்மாவதி:—இந்த ஒன்றையும் சொல்லி விடு; பிற்பாடு நான் படிக்கிறேன். நீ யாரைக் கலியாணஞ் செய்து கொள்ளப் போகிறாய்?

நாராயணன்:—"யாரையா? சுவரை. எங்களுக்குச் சாப்பிடக் கூடச் சாதகமில்லை. அப்பா இந்த ஸ்திதியில் வைத்து விட்டுப்போய் விட்டார். மாமா இல்லாவிட்டால் பட்டினியாய்க் கிடந்து செத்துத்தான் போகவேண்டும். எனக்குக்

கலியாணம் தான் ஒன்று பாக்கி," என்று கண்ணீர் ததும்பச் சொன்னான்.

பத்மாவதி:—நீ ஏன் விசாரப் படுகிறாய்? எங்காத்தில் நிறையச் சாத மிருக்கு; வண்டி வண்டியாய் நெல்வரது. கலியாணத்துக் கென்ன? என்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளேன்.

நாராயணன்:—(சிரித்துக்கொண்டு அவளை முதுகில் தட்டிக் கொடுத்து) உன்னையா, நீ துஷ்டத்தன மொன்றுஞ் செய்யாமல் சரியாய்ப் படித்தால், உன்னைக் கலியாணஞ் செய்து கொள்ளுகிறேன்.

பத்மாவதி:—(வெகு ஆவலுடன்) ஆகட்டும். இனிமேல் ஒரு துஷ்டத் தனமும் செய்யவில்லை. நாய்க்குட்டியைக் கூடக் கொடுத்து விடுகிறேன்; நன்றாய் வாசிக்கிறேன். நானுனக்குத் தான் வாழ்க்கைப் படுவேன். நீ பள்ளிக்கூடத்திலிருந்து வருகிற வரையும், எனக்கு ஒரு மாதிரியாயிருக்கு; உன்னைக் காணாமல் நான் எப்படி யிருப்பேன்? அதுவும் தவிர, வேறு யாருக்காவது வாழ்க்கைப் பட்டால், என் ஆம்படையானும், மாமாவைப் போல் என்னை யடிப்பன்: அதெல்லாம் சரியில்லை. நீயானால் அடிக்கமாட்டாய்; உனக்குத் தான் வாழ்க்கைப் படுவேன்.

நாராயணன்:—நீயும் அம்மாமியைப் போல் எப்பொழுதும் சிடுசிடு என்று விழுந்துகொண்டு அகங்காரங் காட்டினால், நானும் உன்னையடிப்பேன்.

பத்மி:—நானா? நானப்படி இருக்கவேமாட்டேன். அப்படியே தெரியாமலிருந்தாலும், நீ புத்தி சொல்லித்தருவாய்.

நாராயணன்:—அடி போடி, பயித்தியக்காரி! பிரமசாரி எள்ளுக்கணக்குப் பார்த்த கதையாயிருக்கிறதே! அம்மாமி,

உன்னைப், பி. ஏ. பரீக்ஷை கொடுத்தவனாயும், அழகாயும், பணக்காரராத்துப் பிள்ளையாயு மிருக்கிறவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறாள்; அப்படி மாப்பிள்ளை கிடையாவிட்டால், அவளுடைய அத்தான் பிள்ளை கிட்டுவுக்குக் கொடுக்கப்போகிறாளாம். ஒரு வேளை மாமா சம்மதித்தாலும், அவள் சம்மதிக்கவே மாட்டாள். எனக் கெப்படி வாழ்க்கைப்படுவாய்?

பத்மி:—"அதெல்லாமில்லை; நான் உனக்கே தான் வாழ்க்கைப்படுவேன். நான் கரிக்கிட்டுவுக்கு வாழ்க்கைப் படமாட்டேன். நீ என்னையே கலியாணஞ் செய்துகொள்ளுகிறேனென்று ஆணையிடு; இல்லாவிட்டால், நான் உன்னைக் கிள்ளுவேன், பாடமும் சொல்லமாட்டேன்," என்று கிள்ளத் தொடங்கினாள்.

நாராயணன்:—அப்பா! அப்பா! விட்டு விடு; உன்னையே கலியாணஞ் செய்துகொள்ளுகிறேன்.

பத்மி:—ஆணையிடு.

நாராயணன்:—ஆணைப்படிக்கு, ஆணைப் படிக்கு; வலிக்கிறது, விட்டுவிடு.

பத்மி:—சரி; நான் நாய்க்குட்டியை மட்டும் வைத்துக்கொண்டிருக்கக் கூடாதா? வேறொரு துஷ்டத்தனமும் செய்யவில்லை," என்று கொஞ்சிக் கெஞ்சிக் கேட்டாள்.

நாராயணன்:—"சும்மா வைத்துக் கொண்டிரு; ஆனால் அதைக் காதைப் பற்றி கிள்ளிக் கூப்பிடச் செய்யாதே," என்று சொல்ல, அவள் சந்தோஷமாய் வாசிக்கத் தொடங்கினாள்.

ஆறாவது அதிகாரம்.

தம் தமக்கையார் திருநெல்வேலிக்குப் போவதில், ஐயாவையர், சிறிதும் மனமிசையாதவரா யிருப்பினும், நாராயணனுடைய வித்யாப்பியாசத்தை உத்தேசித்து ஒருவாறு சம்மதித்தார். பின்பு, சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்குப் போதும்படியான சாமான்களையும், வேண்டிய சமையல் பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு, தம் வண்டியைப் போட்டுக்கொண்டு, அவர்களுடன் திருநெல்வேலிக்குப் போனார். இவ்விதமாய்ச் சாமான்களையும் பாத்திரங்களையுஞ் சீதையம்மாளுக்குக் கொடுப்பதிற் சிறிதுஞ் சம்மதமில்லாத சுப்பம்மாள், எவ்விதமாவது தன் நாத்தி, வீட்டைவிட்டு வெளியேறினால் போதுமென்ற விருப்பமுடையவளா யிருந்தபடியால், 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகட்டும்,' என்று, தன் மனத்தைச் சமாதானஞ் செய்து கொண்டு, சும்மாவிருந்தாள். சிந்து பூந்துறைக் கடுத்த ஹிந்து கலாசாலையில், நாராயணனைச் சேர்ப்பித்து, அவ்வூரிலேயே மாதம் ஒரு ரூபாவுக்கு ஒரு வீட்டை வாடகைக்குத் திட்டஞ் செய்து, தம் தமக்கையாரையும் மருமகனையுங் குடியேற்றி வைத்து, அவர்களுக்கு வேண்டிய புடவை வேஷ்டி, உடுப்பு, புஸ்தகம் முதலியவற்றை வாங்கிக்கொடுத்து விட்டுப், பிற்பாடு தம் விவசாய காரியங்களை மேற்பார்க்கும் பொருட்டு ஐயாவையர் தம்மூருக்குப் புறப்பட்டார். தம் தமக்கையார் செலவுக்குப் போதுமானபடி மாதாமாதம் பணமனுப்புவதாக அவருடைய உத்தேசம். ஆனால், சீதை அம்மாளோ, ஒரே பிடிவாதமாய் மறுத்துவிட்டாள். அவள் சொன்னதாவது: "அம்பி! உனக்குக் குழந்தை இருக்காள், இன்னும் குழந்தைகள் பிறக்கும், நீ சம்சாரி. அப்படி யிருக்க, முழுதும் வேறொரு சம்சாரத்

துக்குப் போடுகிறதென்றால் சரியில்லை. எனக்கும் வேலை வேணுமே. முதலில் பொழுது போகாதே: நாணுவோடு வாசிக்கிற நாலைந்து பிள்ளைகளுக்குச் சமையல் செய்து போடப் போகிறேன். முதலாவது புண்ணிய முண்டு: ஐயோ! குழந்தைகள், தாயாரையும் தகப்பனரையும் ஊரையும் விட்டுவிட்டு இங்கே வந்து வாசிக்கிறதுகள்; அதுகளுக்கு வாய்க்கு ருசியாய்ச் சாதம் போட்டால் புண்ணியமுண்டு. அதில் உனக்கு அவமானமில்லை; வந்தவர்களுக்கெல்லாஞ் சாதம் போட்டுக் 'களப்பு' வைத்தால்தானே இளப்பம்? இன்று சாப்பிடுவது உன் அன்னந்தான், எல்லாம் உன் பாக்கியந்தான்; உன்னால் தான் நாணு இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்தான்; இன்னும் குறையும் ஒப்பேறவேணும்; எங்களுக்கு உன்னைத்தவிர வேறு யாரிருக்கிறார்கள்? நீ வீணில் மனஸ்தாபப்பட்டுக் கொள்ளாதே,'' என்று உருக்கமாகச் சொன்னாள். ஐயாவையர் எவ்வளவு சொல்லியும் கேளாமையால், கடைசியில், தனக்குச் செலவுக்கு முட்டுப்பட்ட பொழுது கஷ்டப்படாமல் கடிதமெழுதி ரூபா வாங்கிக்கொள்வதாகச் சீதையம்மாள் வாக்குக் கொடுத்தபின், வாரந்தப்பாமல் கடிதமனுப்பும்படிச் சொல்லிவிட்டு, ஊருக்குப் போய் விட்டார்.

அவர் ஊருக்குச் சென்றபின், ஒருநாள் நாராயணனுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தின் கூட்டைத் திறந்தவுடன், அதற்குள் ஐயாவையர் கடித மொன்றும், ஒரு கவளஞ் சோற்றுப் பசைபோட்டு ஒட்டப்பட்ட பத்மாவதி கடிதம் ஒன்றுமிருந்தன. இரண்டு லிகிதங்களையும் கீழே வரைகிறோம்:—

க்ஷேமம். உ சிறுகுளம்,

கார்த்திகைமீ 13உ

சிரஞ்சீவி மருமான் நாணுவுக்கு சர்வாபீஷ்டமும் உண்டாவதாக, அநேக ஆசீர்வாதம். இவ்விடம் நாளது வரையும் தெய்வாநுக்கிரகத்தால் யாவரும் க்ஷேமம்; அவ்விடத்தில் உன்னுடையவும் அக்காளுடையவும் க்ஷேம லாபங்களுக்கு அடிக்கடி எழுதவேண்டியது. நீ அனுப்பிய கார்டுவந்து சேர்ந்தது. எனக்கு இன்னும் கொஞ்சம் விவசாயஜோலியிருக்கிறது; அது முடிந்தவுடன் புறப்பட்டு வருகிறேன். திருச்சினாப்பள்ளி ஜெயிலில் இருந்து, சுப்புபிள்ளை யென்பவன், விலங்கு நீங்கி ஊருக்கு வந்திருக்கிறான். அவனிடம் கேட்டதில், அத் தம்பியார் அதிதுர்ப்பலமா யிருப்பதாயும், ஏதோ கொஞ்சம் முறை ஜுரம்போல் வியாதியா யிருப்பதாயும், சொல்லுகிறான். அவன் வாஸ்தவமாய்ச் சொல்லுகிறானென்று உறுதி தெரியவில்லை. அவன் வார்த்தையை முழுதும் நம்பக்கூடாது. நான் அத் தம்பியாருக்கு ஒரு கடிதமும், மேற்படி ஜெயில் உத்தியோகஸ்தர் மகா-ா-ா-ஸ்ரீ துரைசாமி ஐயருக்கு ஒரு கடிதமும் எழுதி யிருக்கிறேன். பதில் தெரிந்தவுடன் எழுதுவேன்; அல்லது சௌகரியப்பட்டால் நானே வருவேன். கொஞ்சமும் விசாரப்பட வேண்டாம்.

இவ்விடத்தில் வேறு விசேஷ மொன்றுமில்லை. இறங்கல் சப் மாஜிஸ்திரேட் நரசிம்ம முதலியார் இறந்து இன்று நாலு நாளாகிறது. ஒரு துலுக்கன் பெண்ஜாதியை இச்சித்துப் பிரயத்தனஞ் செய்ததாகவும், அதன்பேரில் நாலு துலக்கர்களாய் அவரைப் பிடித்து அடித்துக் கொன்று, அவர் வீட்டு வாசலில் போட்டு விட்டுப் போய் விட்டதாகவும், பிரஸ்தாபமாகி, டாக்டர் வந்து பிணத்தை அறுத்துப்

பார்த்து, 'துர்மரணத்தாலிறந்தார்' என்று எழுதி யிருக்கிறான். ஆனால் கேசு ஒன்றும் ருசுவாகாது. இது சங்கதியை வெளியிட வேண்டாம். உன் உபாத்தியாயர் இராஜகோபாலையர், மாதம் 70 ரூபாய் சம்பளமாக மதுரைக்குப் போய்விட்டார். இதனுடன் பத்மி உனக்கொரு கடிதமெழுதி யிருக்கிறாள்; இன்னதென்று எனக்குத் தெரியாது. நான் பார்க்கக்கூடாதென்று ஒட்டி என் கையில் கொடுத்தாள். வேறு விசேஷமில்லை.

வேணும் அநேக ஆசீர்வாதம்.

ஸ்ரீ சுப்பிரமணியர் சகாயம்.

இப்படிக்கு அய்யாவையன்,

சிறுகுளம்.

கடிதத்தை வாசித்து முடிந்தவுடன், சீதையம்மாள், "அப்பா, நாணு! உடனே மாமாவுக் கெழுது. எனக்கு விசாரமா யிருக்கிறது; சுப்பு பிள்ளை பொய்யாக இப்படிச் சொல்ல மாட்டான். என்ன பகையிருந்தால் தானென்ன? தெய்வமே! இவ்வளவு பட்டதும் போதாதா? இன்னும் என்ன வந்து விடுமோ தெரிய வில்லையே? உடனே மாமாவைக் கொண்டு இன்னும் ஒரு கடிதமெழுதச் சொல்லு. சுப்பு பிள்ளையை நன்றாய் விசாரிக்கச் சொல்லி யெழுது," என்று சொன்னாள். நாராயணன், "ஆகட்டும், அம்மா! இன்று சாயங்காலம் தபாலிலேயே எழுதி விடுகிறேன்," என்று சொல்லச், சீதையம்மாள், பத்மாவதி கடிதத்தை மறந்து, ஏதோ வேலையாக உள்ளே போய் விட்டாள்.

பிற்பாடு, நாராயணன் பத்மாவதி கடிதத்தைத் தானாகவே பின் வருமாறு வாசிக்கத் தொடங்கினான்:—

* யெங்நோட, அத்தான் நாணு உக்கு ஞநனம்ஷ்காறம் பன்நறேன் இங்கே, நான் சவிக்கமாயிருக் கென்னீயும் அத்தயும் சவிக்கமயிறுக்கெளா! நாங் யிப்போ அம்பிட்டு வாசிக்கலை எநக்கு; ஒத்தரும்: சொல்லிதறலை? யென் நோடனுக்குட்டி னங்நாவிளேயா! டரது ஒரு வெண்டயம் கட்டி யிருக்கெங், குலு, குலினயொடறது. மாமாதான் ஒரு வேலே செலித்தரு. அம்மாமி ரெம்ப, சங்டை பிடிக்குருல்! யெங்ணை ரெம்ப குட்டருல்? ஞன் அங்கே ஓடிவந்து, டட்டுமா! மாமாக்குங் அவலுக்கும் ரெம் ஷங்ட், யாறது: அவல்—யெப்பொழுதும் அந்த ஐவயிருல். ஓங்னையும்; வயிருல், எங்

---

* இந்தக் கடிதம் சிலர் புத்திக் கெட்டாதென்று பின்வருமாறு திருத்தி யெழுதப் பட்டிருக்கிறது:—"என்னுடைய அத்தான் நாணுவக்கு நான் நமஸ்காரம் பண்ணுகிறேன். இங்கே நான் சௌக்கியமா யிருக்கிறேன்; நீயும் அத்தையுஞ் சௌக்கியமா யிருக்கிறீர்களா? நான் இப்பொழுது அம்மட்டு வாசிக்க வில்லை; எனக்கு ஒருத்தருஞ் சொல்லித் தரவில்லை. என்னுடைய நாய்க் குட்டி நன்ருக விளேயாடுகிறது; ஒரு வெண்டயங் கட்டி யிருக்கிறேன். குலுகுலென்று ஞேடுகிறது. மாமா தான் ஒரு வேளே சொல்லித் தருகிருர். அம்மாமி யதிகமாய் (நிரம்ப)ச் சண்டை பிடிக்கிருள். என்னே யதிகமாய்க் குட்டுகிருள் நான் அங்கே ஓடி வந்து விடட்டுமோ? மாமாவுக்கும் அவளுக்கும் அதிக (நிரம்ப)ச் சண்டையாகிறது. அவள் எப்பொழுதும் அத்தையை வைகிருள்; என்னேயும் வைகிருள்; உன்னேயும் வைகிருள்; எல்லாரையும் வைகிருள். நான் அஙகே வருகிறேனே? அத்தம்பியார் சாகக் கிடக்கிருரென்று சூத்திரன் சுப்பு பிள்ளே வந்து மாமாவிடத்தில் சொன்னுன். நாய்க் குட்டி மையைக் கொட்டி விட்டது. இனி மேல் மையில்லே.

இப்படிக்கு உன் அம்மங்கார்
பத்மாவதி.

ணையும்; வயிறுல் எல்லறையும்; வயிறுல். ஞான் அங்கே வறேனே! அத்திம்பெற், சாகக்கடக்ரா; யின்று சூத்றங் சுப்பு பில்லேவன்து, மாமாட்ட சொந்நாண்ணு; க்குட்டி மய்ஜகொட், டிடுத்து! யிநநமெமய் இல்லே: யிப்படிக்கு ஒன் அமந்

காபத் மாவதி

இக்கடிதத்தில் தன் தகப்பனார் சாகக்கிடக்கிறாரென்ற சமாசாரம் மட்டுந்தான் நாராயணன் மனத்திற்பதிந்தது. அவனுக்கு அடக்கமுடியாத துக்கமும், உடனே தன் தாயாரிடத்திற் சொல்லவேண்டுமென்ற எண்ணமு முண்டாயிற்று; ஆனால், தன் தாய் அதிகமாக மனசஞ்சலப் படுவாளென்று, நினைத்துத், தான் ஐயாவையருக்கு எழுதிப் பதில் தெரியும் வரை, யதார்த்த நிலையை வெளியிடக் கூடாதென்று நிர்மானித்தான். உடனே, தன் மாமனுக்குத், தன் தகப்பனாரின் உண்மை நிலையை ஒளியாமல் தெரிவிக்கும்படி யொரு கடிதமும் பத்மிக்கு நன்றாய்ப் படித்துக்கொண்டு, தன் தாய் மனத்திற் கிசைய நடந்துகொண்டு, அங்கேயே யிருக்கும்படி ஒரு கடிதமும், எழுதியனுப்பினான். நாராயணன் பதினாறு வயதிற் குட்பட்ட சிறு பையனாயிருப்பினும், தன் வயது வாலிபரைப் போல் விளையாட்டுத் தனமாயின்றித், தான் அச்சிறுபருவத்திற்குள் அநுபவித்த துன்பங்களின் பயனாகப், புடம்போட்ட தங்கம்போல் விசேஷ குணசாலியாயும், ஊக்கமுள்ளவனாயும் புத்திக் கூர்மையுள்ளவனாயுமிருந்தான்.

ஏழாவது அதிகாரம்.

மாதம் ஒன்றுக்கு ஆறுறு ரூபா கொடுத்து, ஆறு பிராமணப் பிள்ளைகள் சீதையம்மாள் வீட்டிற் சாப்பிட்டு வந்தார்கள். அவர்களுக்கு சமைத்துப் போடுவதும் தவிர, சீதை

யம்மாள், கொஞ்சம் பக்ஷணங்கள் செய்து தன் வீட்டிலேயே வைத்து விற்று, இவ்விதமாகத் தன் செலவுக்கு போதுமான படி சம்பாதித்துக்கொண்டாள். இப்படிக் காலம் தள்ளுவதில் அவளுக்கு மனக்குறைவு தான்: தன் தகப்பனார் வீட்டில் தான் செல்வமாய் வளர்ந்துவந்த பூர்வஸ்திதியையும், தன் கணவனோடு தான் மரியாதையாக வாழ்ந்து வந்த சாதுரியத்தையும், தன் புருஷனாலுண்டான குலவீனமான அவமானத்தையும், சரீரப்பாடுபட்டுப் பிழைக்கும் தன் தற்கால நிலைமையையுங் குறித்து நினைக்கும் பொழுதெல்லாம், அவளுக்கு அடங்காத் துயரமுண்டாயிற்று; ஆனால், தன் மகன் படித்து வேலையிலமர்ந்து தக்கபடி சம்பாதிக்கும் பொழுது, சிறைச்சாலை நீங்கி, அதற்குள் சற்குண சீலனாய் வெளிப்படலாகும் தன் மணவாளனோடு சுகமாய்க் கவலையற்று வாழாலமென்ற எண்ணம், அவள் மனதிற் குடிகொண்டு, களிப்பையும் ஊக்கத்தையுமளித்தது; அன்றியும், தற்காலத்தில் தீவினைப்பயனாகத் தன் கொழுநன் சிறையிலிருப்பினும், தானும் தன் மகனுமாவது, ஒருவர் உதவியின்றிச் சுப்பம்மாள் கண் காணச் சுகமாய் வாழ்ந்து வருவதற்காகவும் அவள் களிப்புற்றாள். தன்னாயகன் சிறைப்பட்ட காலந்தொட்டு இவ்வண்ணம் உழைத்துச் சீவனஞ்செய்யாததை நினைந்து மனம் நொந்துகொண்டாள்.

ஒருவர் உதவியாற் கிடைக்குஞ் சோற்றைச் சோம்பேறித்தனமாய்த் தின்று காலங்கழிப்பதினும் தான் பாடுபட்டுப் பிழைத்தல் எவ்வளவு மேம்பட்டது! ஒருவர் பொருளை எப்பொழுது பிரதிபலமின்றி யடைகிறோமோ, அப்பொழுதே சரீரமும் ஆத்மாவும், நாம் அவருக்கு அடிமையாய் விடுகிறோமன்றோ? சோறிடுவார் சொற்படி ஒழுக

வேண்டும்; ஆயின், நம்மதென்று உரித்தாயிருக்கும் புத்தியினாற் பயனென்ன? எப்பொழுதும் மற்றொருவர் சொற்படியொழுகுவோர்க்குப் புத்தி வீண் சுமையே. தன் நெற்றியின் வேர்வை நிலத்தில் விழச் சம்பாதிக்கும் அன்னம் எவ்வளவு ருசிகரமுள்ளது! அங்ஙனமின்றி, ஒருவர் முகநோக்கிப் பற்காட்டி வாழ்தலினும் இறத்தலே நன்று. 'காயத்திடனும் புத்தியுமுள்ள ஒருவன், இவ்வுலகின்கண் பிழைக்குமாறு அறியானேல், அவன், அதில் ஜீவிக்கப் பாத்திரனல்லன். அவன் கல்லைக் கட்டிக்கொண்டு கசத்திலிறங்கிவிடலாம்; அல்லது கன்னக் களவுசெய்து தன்னாட்டை நீக்கித் தீவாந்தரம் போய்ச் சேரட்டும். கையாலாகாத அச்சோம்பேறி எவ்விதமாவது நாட்டைவிட்டு வெளியேறட்டும்,' என்று ஒரு பெரிய வித்துவான் எழுதி யிருக்கிறார். இவ்வெண்ணத்தைக்கொண்டே, * "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்துகெடுக உலகியற்றியான்" என்றார் திருவள்ளுவ நாயனாரும்.

இவ்விதக் கருத்துக்கள் சீதையம்மாளுக்குத் தெளிவாயுண்டாகாமற் போனாலும், ஒருவர் உதவியுமின்றித் தன் முயற்சியால் வாழ்வதனால், அவள் அதிக ஊக்கத்தையுங் களிப்பையும் அடைந்தாள்.

சீதையம்மாள் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டிருந்த பிராமண வாலிபர்களில், கோபாலன், சங்கரன் என்றிரண்டு சகோதரர் இருந்தனர். அவர்கள் திருநெல்வேலிக்கு ஐந்தாறு 'மைலு' க்கப்பாலுள்ள அரியூரில், லக்ஷஸ்ரீமானாகிய பல்லீன

* இதன்பொருள்:—இவ்வுலகைப்படைத்த கடவுள், இவ்வுலகின்கண் வாழ்வோர் தங்கள் முயற்சியால் உயிர் வாழ்தலன்றிப், பிச்சை யெடுத்தும் வாழுதலை விதித்தானாயின், அக்கொடியோன், தானும் அவரைப்போல் திரிந்து வருந்திக் கெடுவானாக.

சேஷையர் குமாரர். அவர்களில் மூத்தவனாகிய கோபாலன் என்பவன் நாராயணனோடு ஒத்த வயதுள்ளவனாயும், படிப்பில் அவன் வகுப்பைச் சேர்ந்தவனாயுமிருந்தான். அவனுக்குக் கலியாணமாயிருந்தது. அவனும் நாராயணனும் இணை பிரியாத அந்தரங்க சிநேகிதர்கள். கோபாலன் தம்பி சங்கரன் கீழ் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு விவாகமாகவில்லை. அவன் வெகு தந்திரமுள்ள ஒரு தடிக் குள்ளன்; சூதாகப்பேசுவதிலும் பிள்ளைகளுக்குட் கலகை மூட்டுவதிலும், அவன் வெகு சாமர்த்தியசாலி. ஒரு காலத்தில் அவன் மூலமாய் நாராயணனுங் கோபாலனுங் கூட நாலுநாள் ஒருவரோடொருவர் பேசாமலிருந்தார்கள். பிள்ளைகள் எல்லாரும் அவனுக்குக் 'குண்டுணி நாரதர்' என்ற பட்டப்பெயரிட்டிருந்தார்.

ஒரு நாள் மாலை இவர்கள் மூவரும் போஜனம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். சீதையம்மாள், ஒரு புடவையை அவர்கள் பக்கத்திலிருந்து தைத்துக்கொண்டிருந்தாள். சீதையம்மாள் கோபாலனைப் பார்த்து, "அப்பா, கோபு! நாளை சனிக்கிழமை ஆச்சுதே; உனக்கு வண்டி வருமா? நீ ஊருக்குப் போகப்போகிறாயா?" என்று கேட்டாள். அதற்குக் கோபாலன், "ஆமாம், அம்மா! ஞாயிற்றுக் கிழமையன்று என் ஜந்ம நக்ஷத்திரம்; ஊருக்குப்போகவேணும். நாணு எங்களூர் பார்த்ததேயில்லை; பார்க்கவேண்டுமென்று ஆசைப் படுகிறான்; எனக்கும் அவனைக்கூட அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று மிகவும் ஆவலாயிருக்கிறது. நீங்கள் சொன்னால் கூட்டிக்கொண்டு போகிறேன்; எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும்," என்று சொன்னான்.

சீதையம்மாள், "அதற்கென்ன, கூட்டிக்கொண்டு போ; இந்த ஆசை தீரக்கூடாதா? திங்கட்கிழமையன்று வந்து விடுவீர்களோ இல்லையோ?" என்று கேட்டாள். நாராயணன் "ஆமாம்; பள்ளிக்கூடமுண்டே; தப்பாமல் வந்து விடுவோம்" என்றான்.

சற்று நேரத்திற்குப்பின், சங்கரன், "ஏ நாணு! ஒரு சங்கதி கேட்டாயாடே? உனக்கு ஒரு புதுப்பட்டம் வந்திருக்கிறது," என்றான்.

நாராயணன்:—அதென்ன பட்டம்?

சங்கரன்:—எனக்குத் தெரியாது. உங்கள் வகுப்புப் பத்மநாபன்தான் சொன்னான். நீ சிறுகுளம் சீநாபதி ஐயர் பிள்ளையாம்; அதனால் உன் பெயர், 'சி(ச்)சீ நாணு,' அதாவது நாய் நாணுவாம்.

கோபாலன்:—சங்கு! உனக்கெப்பொழுதும் கோள் சொல்வதுதான் வழக்கம். உனக்கெவ்வளவு சொல்லியும் புத்தி வரவில்லை. உன்னை எல்லோரும் 'குண்டுணி நாரதர்' என்று கூப்பிடுகிறார்களே: அதனால் உனக்கென்ன குறை வந்துவிட்டது? அது போல 'சிச்சீ நாணு,' என்று ஒரு போக்கிலி சொன்னால், நீ முன்னால் புகுந்து ஒளித்துக் கொண்ட வங்கில் நாணுவும் ஒளித்துக்கொள்வான். அவன் பட்டமாவது அவனுடைய ஊரையும் பேரையும் பற்றி வந்தது; அவன் குற்றமல்ல. உனக்கு உன் குறும்பினால் தானே கிடைத்திருக்கிறது.

சங்கரன்:—அவன் சொன்னதைத் தானே நான் சொன்னேன்? அதற்கு அவன் காலில் முட்டவேண்டும்; நீ என் என்னிடத்திற் சண்டைக்கு வருகிறாய்?

கோபாலன்:—ஒருவர் காலிலும் முட்டவேண்டாம்; நான் சண்டைக்கும் வரவில்லை. பப்பு ஒரு போக்கிலி; நீ அவனிடத்திலேன் பேசுகிறாய்? அவன் சொன்னதை நீ நாணு விடத்தில் வந்து சொல்லிக் கலக மூட்டுவானேன்? அவனென்ன, சொல்லச் சொன்னானா? நீ அவனுடைய கூலியாளா?

சீதையம்மாள்:—போ, என்னவோ குழந்தை சொந்தம் பாராட்டிச் சொல்லிவிட்டான். நாணுவென்ன இப்பொழுது சண்டைக்குப் போகிறானா? இல்லையே. கிடக்கட்டும், வார்த்தையை விடு.

கோபாலன்:—இல்லை, அம்மா! இவனுக்கு எப்பொழுதும் இதுதான் வேலை. பாடம் படிக்கிறது கூடக் கிடையாது. இவனுக்கிருக்கிற குறும்புக்கும் வம்புக்கும் இவன் எப்பொழுதாவது ஜெயிலில் போய்ச் சேருவானென்பதிற் சந்தேகமில்லை.

கடைசி வாசகத்தைக் கேட்டவுடன், நாராயணனுக்கும் அவன் தாயாருக்கும் திடீரென்று மனதில் வெட்கமும் விசனமு முண்டாகிக் கண்ணீர் ததும்பிற்று. அவர்கள் பூர்வ சரித்திரத்தை முற்றிலும் அறிந்திருந்த கோபாலனும், வாய் மூடு முன்னமே, தான் நாவடக்கி ஞாபகமாகப் பேசாததினால் அவர்கள் மனதைப் புண்படுத்தினதை யுணர்ந்து, வெட்கித் தலையை குனிந்து கொண்டு கைகழுவ எழுந்து போய் விட்டான். அந்தோ!

"யாகாவாராயினும் நாகாக்க; காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு*" என்னுங் குறளைக் கைப் பற்றி ஒழு

* இக்குறளின் பொருள்:—தம்மால் காக்க உரியன எல்லாவற்றையுங் காக்கமாட்டாராயினும், நாவொன்றனையுமாவதுகாக்க; அதனைக் காவாராயில், சொற் குற்றத்தின் கட்பட்டுத் தாமே துன்புறுவர்.

காமையால், உலகில் எவ்வளவு துன்பம் வீணில் விளைகின்றது! தீயினாற் சுட்ட புண் ஆறும்; நாவினாற் சுட்ட வடு ஒரு பொழுதும் ஆறாத் தன்மையதன்றோ?

சங்கரன், கோபாலன் கூறியதற்குப் பதிலாக, "நான் போனால் உனக்கு லாபந் தானே?" என்று முணு முணுத்துக் கொண்டு போய் விட்டான்.

கோபாலனுடன் மேடையில் வாசிக்கப் போன நாராயணன், கொஞ்ச நேரத்திற்குப் பின் இறங்கி வந்து, "அம்மா! அம்மா! வென்று பதறிக் கூப்பிட்டான். தன் சிந்தையில் ஆழ்ந்தவள் போல் அசையாது வீற்றிருந்த சீதையம்மாள், கனவு நடுவில் விழித்தவள் போலத் திடுக்கிட்டு, வாய் குழறி, "ஆ! என்ன குழந்தாய்?" என்று கேட்டாள். அதற்கு நாராயணன், வெகு நடுக்கத்துடன், "அம்மா! எனக்கு என்னவோ உடம்பு குளிருவது போலிருக்கிறது. மேலெல்லாம் மயிர் கூர்ச்சிடுகிறது. ஏதோ மனது இடிந்து போனது போல்—மார்பிற்குள்ளிருந்து ஏதோ காணமற் போனது போல்,—எனக்கு இவ்வித மென்று சொல்லத் தெரியவில்லை,—பயமாயிருக்கிறது. எனக்கு ஒரு நாளும் இப்படி யிருந்ததே யில்லை. இப்பொழுது ஒரு நிமிஷத்துக்கு முன் தானே மணி ஐந்தடித்தது? அதற்குள் ஏன் குளிருகிறது?" என்று சொன்னான். சீதையம்மாள் சரீரம் பாதாதி கேசாந்தம் நடுநடுங்கிற்று. நாராயணன் கூறியதற்கொப்பான குளிரும் நடுக்கமும், பீதியும், அவன் "அம்மா!" என்று முதலிற் கூப்பிடும் பொழுதே, அவளுக்கு முண்டாயிருந்தது. அதை வெளியிட்டால் நாராயணன் அதிகமாகப் பயப்படுவானென் றெண்ணித், தன் மனதைக் கூடியவரை தேற்றிக் கொண்டு, "குழந்தாய்!

என்னப்பனே! என்னவோ, யாருக் கெப்படியோ? ஆனால் ஒன்றுமிராது. இப்பொழுது பழையதுசாப்பிட்டா யில்லையா, அதுதான் குளிருகிறது, வேறொன்றுமில்லை," என்று சொன்னாள். அதற்கு நாராயணன், இல்லை, அம்மா; அப்படியானால் கோபுவுக்கு ஏன் குளிர வில்லை? இதோ பார் என் தேகத்தின் மேலுள்ள ஒவ்வொரு மயிரும் நெட்டமாய் நிற்கிறது. நான் உன்னிடத்திற் பேசும்பொழுதே மனது திடீர் திடீரெனத் திகிலடைகின்றது. ஐயோ அம்மா! நான் என்ன செய்வேன்! எனக்கு என்னமோபோல் வருகிறதே!" என்று கீழே யுட்கார்ந்தான். உடனே சீதையம்மாளும் கீழே யுட்கார்ந்து, அவனைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, "ஸ்வாமி! தெய்வமே! சுப்பிரமணியம்! வேலாயுதம்! என் குழந்தை அநாதை. நீதான் காப்பாற்ற வேண்டும்; உன் அடைக்கல மென்று நம்பி யிருக்கிறேன். என்னப்பனே! நான் பாவி, உன்னையுங் கொடுத்து விட்டு என்னமா யிருப்பேன்? ஐயோ என் மனம் பதறுகிறதே!" என்று வாய் குழறிக் கண்ணீர் பெருக அரிதிற் சொல்லி, கொஞ்சம் திருநீற்றை யெடுத்து, சுவாமி திருநாமங்களைச் சொல்லித் துதித்து நாராயணன் நெற்றியிற் பூசித், தானும் தரித்துக்கொண்டாள். அத்தருணத்தில் நாராயணன் சுபாவ ஸ்திதியில் இருந்திருப்பானாயின், தன்னிலும் பதின் மடங்கு தன் தாய் நடுங்குவதையும், அவள் இதயம் பறையடிப்பதையும் உணர்ந்திருப்பான். கொஞ்ச நேரத்திற்கு பின், நாராயணன், "இப்பொழுது ஒன்று மில்லை, அம்மா; கனவு கண்டதுபோலிருக்கிறது. நான் வாசிக்கப்போகிறேன்," என்று எழுந்து போய்விட்டான். சீதையம்மாளுக்குண்டான மனப்பதற்றம் வெகு நேரம்வரை தீரவில்லை. நண்பர்களே! இவ்வுலக வாழ்வே ஒரு நெடுங்கனவு

தான்; அக்கனவு, கூடியமட்டும் சந்தோஷகரமாகவே கழிந்து போகும்படிப் பிரார்த்திப்போமாக.

எட்டாவது அதிகாரம்.

மறுநாள் மாலை ஆறு மணிக்குக் கோபாலனை அழைத்துப் போக வண்டி வந்தது. அன்று நல்ல சந்திரிகை. கோபாலனும், சங்கரனும், நாராயணனும் புறப்பட்டுப் போனார்கள். வந்த வண்டி, மெத்தைகள் வைத்துத் தைக்கப்பட்ட ஒரு சுகமான வில் வண்டி; சிறிய கூரிய கொம்புகளுக்கு வெண்கலப் பூண்களும், கழுத்தில் மணியுஞ் சதங்கைகளுங் கட்டப் பெற்று, உத்தேசம் முந்நூறு ரூபா விலையுள்ள, இரண்டு உயர்ந்த சங்கு வெள்ளை நிறமான மாடுகள் பூட்டப்பட்டிருந்தது. இராக்காலமானதால், வண்டியோட்டுகிறவனைத் தவிரத் துணைக்கு இரண்டு காவற்காரர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் மூச்சிழைக்க வண்டியைப் பிடித்துக்கொண்டு ஓடி வந்தார்கள்.

அவ்வண்டியில் ஏறும்பொழுது நாராயணனுக்கு ஒரு விதமான வெட்கமும் சந்தோஷமும் உண்டாயிற்று. அதுகாறும் அவன் அவ்வித வண்டியில் ஏறினதேயில்லை. கொஞ்ச தூரம் போன பின், காவற்காரர்கள் ஓடி வருவதைக் கண்டு பரிதாபப் பட்டு, அவன் "கோபு! இப்பொழுது சந்திரிகைதானே; ஊரும் இன்னும் மூன்று மைல் தானே இருக்கிறதென்கிறாய்; ஒரு நிமிஷத்தில் போய் விடுமே. இவர்களில் ஒருவன் முன் பெட்டியில் ஏறிக் கொள்ளட்டும், மற்றவன் மெள்ளப் பின்னால் வந்தாலென்ன?" என்று சொன்னான். அதற்குக் கோபாலன், "அடே, ஊர் காவலா! நீ முன் பெட்டியில் ஏறிக்கொள்; சுடலையாண்டி மெதுவாய்ப் பின்னால் வரட்டும்" என்றான்.

ஆனால் அந்த மறவர்களோ, "இல்லை எசமான்; நாக்குட்டிகள், சும்மா ஓடி வாரம்! பாதை நல்லாயில்லை! வெறும்நொடி; புது மாடு கழுத்துத் தாங்காது; பெரிய எசமான் கொன்னு போடுவாக," என்று மறுத்து விட்டார்கள். எட்டு மணிக்குள்ளாக வண்டி அரியூர் அடைந்து விட்டது.

அவ்வூரில் விப்பிரர் வீதி இரண்டுண்டு. அவ்வீதிகளில், கால் வாசி வீடுகள் பண்ணை சேஷையருக்குச் சொந்தம். ஆனால் அவர், கீழ்த்தெருவில், சேர்ந்துள்ள இரண்டு பெரிய மேடை வீடுகளிற் குடியிருந்தார். வீட்டு வாசலில் திரை கட்டி, ஒரு 'லாந்தரும்' போட்டிருந்தது. சேஷையர், தெருவில் கட்டிலிலிருந்து, தம் கணக்கப் பிள்ளைகளோடும், ஊர்க் காவலாளிகளோடும் பேசிக் கொண்டிருந்தார். வண்டியிலிருந்து இறங்கினவுடன், இவர்கள் மூவரும் அவருக்கு வந்தனஞ் செய்தார்கள். அவர், இவர்களுடைய சரீர சௌக்கியத்தைப் பற்றி விசாரித்தானபின், சந்தியா வந்தனங்களெல்லாம் வழியில் குளத்தங் கரையில் முடித்தாய் விட்டதென்று சொன்னதனால், தாம் பின் வருவதாகச் சொல்லி, இவர்களை உள்ளே போகச் சொன்னார்.

வீட்டில் முக்கியமான நடு அறையில், ஒரு பெரிய வெண்கல வார்ப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் முன்பாக, ஒரு பெண், பழைய பட்டுப் படவை ஒன்றின் மேல் படுத்திருந்தாள். இவர்கள் வருவதைக் கண்டவுடன், அவளெழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

அப்பெண்ணுக்குப் பதினெட்டு வயதிருக்கலாம். அவள் நிறம் சாதாரணமாகப் 'பொது நிறம்' என்பதிலும் சிவப்பு; ஆனால் நல்ல சிவப்பல்ல; கொஞ்சம் மரகத பச்சை கலந்தாற் போலிருந்தது. பெரும்பாலுமுள்ள பிராமண ஸ்திரீகளினும்,

அவள் உயரமானவளென்றே சொல்ல வேண்டும். கழுத்து, உட்கார்ந்தாற் போலிராமல், கொஞ்சம் தக்கபடி நீண்டு வளர்ந்திருந்தது, அவள் அணிந்திருந்த கண்ட சரத்தை அழகு படுத்தும் பொருட்டே போலும்? அவள் கைகளும் கால்களும் போதுமானபடி மட்டும் சதைப் பற்றுள்ளனவாயும், நல்ல வடிவாயும் அழகாயுமிருந்தன. அவள் இடை, மேற்பாகத்தின் விரிவுக்கும், திரட்சிக்கும், எழுச்சிக்கும், உருட்சிக்கும் தக்கபடியின்றிக், கொஞ்சம் சுருங்கியிருந்தது. அவள் குழல் படிப்படியாய் இடுப்புக்குக் கீழ்வரை அவிழ்ந்து கலைந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவள் முகமோ, அதிக வட்டமும் அதிக நீளமும் இன்றி, தனக்குத்தானன்றி வேறுவமையில்லாத வண்ணம் விளங்கியது. பிறைபோல் வளைந்துள்ள அவள் நெற்றியின் கீழே, புருவங்கள், கறுத்து, நீண்டு வளைந்திருந்தன. அவள் கண்களோ, என்ன சொல்வோம்! சாதாரண சமயத்தில் ஒருவாறு எம்மால் அவைகளை வருணிக்க முடியலாம்; ஆனால் சொற்ப அயர்வினின்றும் எழுப்பப்பட்டுத், தன் அருமைச் சகோதரரைக் கண்டவுடன் அவள் கண்களிருந்த நிலைமையை யாம் கூறவல்லோமோ! என்ன அன்பு! என்ன மடமை! என்ன குளிர்ச்சி! என்ன மருட்சி! என்ன களிப்பு! என்ன கூர்மை! என்ன காந்தி! என்ன இளமை! என்ன வளமை! அகன்று நீண்டு காதையளாவி யிருப்பினும், மற்ற அங்கங்கள் யாவற்றினும் மிகச் சிறியனவாயுள்ள இக்கண்களில், அவை யாவற்றினும் மிக்கு, மனதைக் கவர்ந்து கொள்ளையிடும் இவ்வளவு அழகு எவ்வாறமைந்ததோ! கறுத்திருந்தும் இவ்வளவு ஒளிவீசக்கூடிய வஸ்துவை நாம் கண்டதேயில்லை. இக்கண்களினுடையவும், புருவங்களினுடையவும், குழலினுடையவும் கருமையினாலன்றோ இப் பெரிய விளக்

கும் ஒளிகுன்றித் தோன்றுகிறது? இவ்வளவேனும் பிரகாசிப்பது கண்களின் ஒளியே கொல்? மற்ற மாதர்கள் ஒரு நாள் முழுதும் ஒரு சுள்ளே சுண்ணும்புக்கும் ஒரு துலாம் காசுக் கட்டிக்கும் கேடாக வெற்றிலே சுவைத்தாலும், அவர்களுடைய உதடுகள் இப்பெண்மணியின் இதழ்களின் சுபாவ நிறத்தை யெட்டியும் பாரா. இயல்பாகவே இவ்வண்ணமமைந்திருக்கத், தான் தாம்பூலந்தரித்துக்கொண்டால், இதழ்கள், தங்களேக்கண்ட ஆடவருயிரையுண்டு இரத்த முற்றது போற் கொடூரமாய் தோன்றுமென்று கருதியும், இயற்கைக்கு விரோதமாகச் செம்முத்தங்கள் காணப்படு மென்றெண்ணியுமே, இம்மாது சிரோமணி கருணேகூர்ந்து தாம்பூலந்தரியாது விட்டனளோ? அங்கங்களேத் தான் பிரமன் அமைத்தான். இவள் பெண்மையையும், அதைக் காட்டும் பாவனேகளேயும், யாரமைத்தார்கள்? சீதாப்பிராட்டியாரின் அழகைவருணிக்கையில், அவரை,மனக்கண்ணலன்றிவெளிக் கண்ணுற் கண்டிலராயினும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்,

"ஈசனர் கண்ணின் வெந்தா னென்னுமி திழுதைச் சொல்; இவ்-வாசனு ரூதியாளேக் கண்டனன்; வல்லவாற்ருற்—பேசலாந் தகைமைத்தல்லாப் பெரும்பிணி பிணிப்ப, நீண்ட—ஆசையாலழிந்து தேய்ந்தான் அநங்கனவ் வுருவ மம்மா!" * என்று கூறியிருக்கின்ருர். கண்குளிர,

* இதன் பொருள்:—அரூபியாகிய மன்மதன், சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணு லெரிக்கப்பட்டுத் தன் ரூபத்தை யிழந்தானென்று சொல்வது பொய் வார்த்தை. உண்மையாக, அவன் எவ்வண்ணம் உருவிலியாயினனெனில் பரிமளம் வீசும் கூந்தலேயுடைய இப்பெண்மணியை (சீதையை) அவன் கண்டு, அது முதற் சொல்ல முடியாத அளவிறந்த காமநோயால் துன்புற்று, அவள் மீது அவனுக்குண்டான மிகுந்த ஆசையினலேயே, தன் உருவம், சிறிது சிறிதாகத் தேய்ந்-து, முற்றிலும் அழிந்து போனன். இதுவே மெய்.

ஆசைதீரச், செய்தவப்பயனாற் கண்ட நாம், இக்காரிகையை இவ்வாறு வருணிப்பது பொருந்தாதோ? முதலிலே காணுந் தருணத்தில், இராவணனைப்போல் இருபது கண்களில்லாததைப்பற்றி எமக்குக் கொஞ்ச மனவருத்தந்தான். இது நிற்க:

அப்பெண்மணி, தன் சகோதரரைக் கண்டவுடன், "கோபு! சங்கு! இவ்வளவு பொழுதாச்சுதா?" என்று கேட்டாள். இப்பேருலகில் அவளங்கங்களுக்கு உவமை யிருப்பினும், அவள் தேன் மொழிக்கு நிகரில்லை என்பது சத்தியம்.

அவளைக்கண்ட மாத்திரத்திலேயே ஸ்தம்பித்து நின்றுவிட்ட நாராயணன், அவள் குரலைக், கேட்டவுடன், தேகமெல்லாம் மயிர்க்கூர்ச் செறியக், கீழே விழுந்து விடுவதுபோற் கொஞ்சம் மயங்கிவிட்டான். அச்சமயத்தில் அவனுக்குண்டான ஆநந்தத்தையும், தேக பரவசத்தையும், ஆச்சரியத்தையும், ஒருவிதமான பயத்தையும் உவமைப்படுத்திச் சொல்லப்புகின், ஒரு மூடனை சிவபக்தனை, மார்கழி மாதம் திருவாதிரை யன்று, கண்ணைக்கட்டிக் கொண்டு போய்ச் சிதம்பரத்தில் நடராஜமூர்த்தி சந்நதியில், தொண்டர் முழக்கத்துக்கு மத்தியில், கற்பூரமாகும் பொழுது திடீரென்று கண்ணைத் திறந்துவிட்டால், அத்தருணத்தில் அவனிதயமிருக்கும் நிலைமைக்கு ஒருவாறு ஒப்பிட்டுக் கூறலாம். அந்த க்ஷணத்தில், தான் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்யாமல் எவ்வாறிருந்தானென்ற சந்தேகம், இன்னும் நினைக்குந்தோறும், நாராயணனுக்கு ஆச்சரியத்தை விளைக்கின்றது. அது காறும் தான் கனவிலும் அனுபவித்திராத ஒருவித உணர்ச்சியுஞ் சஞ்சலமும் அவன் மனத்திற் பிறந்தன.

கோபாலன்:—நாங்கள் புறப்படும்பொழுது நேரமாய்விட்டது; அதுதான் தாமதம். நாணு! என்ன விழிக்கிறாய்? சும்மா உட்காரு.

நாராயணன்:—உட்காருகிறேன்.

கோபாலன்:—உட்காரேன். இவள்தான் எங்கக்காள் சாவித்திரி. அதிக துஷ்டத்தனமும் கெட்ட குணங்களுமுடைய நீலியென்று நான் அடிக்கடி சொல்ல மாட்டேனோ? இவள் தான் பார்த்துக்கொள்.

சாவித்திரி புன் சிரிப்புடன் தலையைக் கவிழ்ந்துகொண்டு, "உனக்கிதுதான் வேலை. அதாரு?" என்று கேட்டாள். (சாவித்திரியைக் கண்டமாத்திரத்தில், நாராயணனை, அவளுக்கு அடிமையாக விலை பேசி நிச்சயமானதாகவும், அவள் குரலை அவன் கேட்டவுடன் அது விஷயத்துக்குப் பத்திரமெழுதப்பட்டதாகவும் வைத்துக்கொண்டால், அவள் புன் சிரிப்பையும் அதனால் கன்னங்களிலுண்டான குழிவுகளையும், முகத்தில் தோன்றிய வெட்கக் குறிகளையும் இப்பொழுது அவன் பார்த்தவுடன், முற்கூறிய பத்திரம் 'ரிஜிஸ்டர்' ஆகியுறுதி யடைந்ததாகச் சொல்லலாம்)

கோபாலன்:—இவர்கள் தான் ம-ா-ா-ஸ்ரீ நாராயணையரவர்கள்.

சாவித்திரி:—கேலி பண்ணாதே; பேர்தான் தெரிகிறதே: யாரு?

கோபாலன்:—சொன்னேனே, என்கூட வாசிப்பவர்; நான் சிந்து பூந்துறையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் வீட்டு அம்மாள் குமாரர்.

சங்கரன்:—"பேர் 'சிச்சிநாணு,'' என்று சொல்லிச் சிரித்தான்.

நாராயணன் மேன்மேலும் அதிகரிக்கும் வெட்கத்தினால், தலை கவிழ்ந்து கொண்டான்.

சாவித்திரி:—சங்குவுக்கு எப்பொழுதும் 'பிதிர்' போடுவதுதான் வழக்கம். அதன் அர்த்தமென்ன?

கோபாலன்:—அர்த்தமா? நாணுவுக்குச் சிறு குளம்; அவன் தகப்பனார் பெயர் சீதாபதி ஐயர்; அதற்காகப் பள்ளிக்கூடத்தில் ஒரு போக்கிலிப் பயல் அப்படிப் பட்டம் வைத்தானாம்; அதைத்தான் சங்கு உளறுகிறான்.

சாவித்திரி:—இவ்வளவுதானா! இவர் தகப்பனாருக்கு வேலையா? விவசாயமா?

சங்கரன்:—அவப்பாவா? திருச்சினாப்பள்ளியிலே

கோபாலன்:—சும்மா இரு; உளறாதே.

சாவித்திரி:—அவன் தான் சொல்லட்டுமேன். உனக்கேன் இப்படிக் கோபம் வருகிறது? பசியா? திருச்சினாப் பள்ளியிலே உத்தியோகமா?

சங்கரன்:—இல்லை, திருச்சினாப்பள்ளி ஜெயிலிலே

அதற்குள் கோபாலன், "உளறாதே யென்றால் வாயை மூடிக்கொள்ளமாட்டாயா? அக்கா! நான் அப்புறஞ் சொல்லுகிறேன்," என்று சொல்லிச், சங்கரனைக் கையமர்த்திச் சாவித்திரிக்கும் கண் 'ஜாடை' காட்டினான்.

நாராயணனுக்கு முதலிலுண்டான சந்தோஷமெல்லாம் ஒழிந்து கண்ணீர் ததும்பிவிட்டது. ஒன்றையும் மறையாமல் முதலிலேயே சொல்லிவிட்டாற்கூட அவனுக்கு அவ்வளவு துக்கமுண்டாயிராது. தன்மனவருத்தத்தை நினைத்துக்கோபாலன் இவ்வளவு மறைப்பதைக் கண்டவுடன் அவனுக்கு விசனம் பொறுக்கமுடியவில்லை. சாவித்திரிக்குத் தன்னைப்பற்றிய

இழிவான சரிதை தெரிந்துவிடுமென்று நினைக்கும்பொழுது, அவன் உயிர் போவதுபோலிருந்தது. அவள்செவிக்குமட்டும் ஏருமல், தேசந் தேசமாகப் பறையறைந்திருந்தாலும் அவன் அவ்வளவு நொந்திருக்கமாட்டான். தன் தகப்பனுர் குற்றமாயினும், அவர் மகனைகத் தன்னைப்பற்றியும் சாவித்திரி குறைவாக நினைக்கக்கூடும் என்ற எண்ணம், அவனுற் சகிக்க முடியவில்லை; மூக்கைச் சொறிவதுபோல் தலையை குனிந்துகொண்டே கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். அரியூருக்கு வந்ததைப்பற்றி மனதில் மிகவும் நொந்துகொண்டான். தந்தையை நினைத்துக்கூட மிகவும் கோபம் கொண்டான். இவ்வாறுயிர் வாழ்தலினும் இறத்தலே நலமென்றுகூட எண்ணத் தொடங்கினுன். எல்லார் பேரினுமே ஒருவித வெறுப்புண்டாயிற்று. அந்தோ, உலக மதிப்பையே பெரிதாகக் கருதிக், கர்வம் குடியிருக்கப்பெற்ற வீண்மனம் படுந்துயரம் கொஞ்சமோ? தன்னுல் மிகவும் மதிக்கப்பட்டார்முன் தான் இழுக்குறுதலையே, அம்மனம் நரகமாக நினைக்குமன்றோ?

இதற்குள்ளாகக் கோபாலனுடைய தகப்பனுர், "இன்னும் மாப்பிள்ளை சுந்து வரவில்லையா?" என்று கேட்டுக்கொண்டு உள்ளே வந்தார். சாவித்திரி, "எவ்வளவோ போதாச்சே; இன்னும் வரவில்லையே, அப்பா!" என்று சொன்னுள். அதற்கு, அவர், "இப்பொழுது வந்துவிடுவான்: மேலத் திருத்தையும் நாலுமாவடி வயலையும் பார்த்துக் கொண்டுவரச் சொன்னேன். நீ அதற்குள் இலையைப் போட்டுப் பரிமாறு. அதோ! கதவு திறந்து ஓசைப்படுகிறது, அதோ வந்துவிட்டான்," என்று சொல்லச் சாவித்திரி எழுந்து நின்றுள் கொஞ்சம் ஒல்லியாகவும், குள்ளமாகவும், கறுப்பாகவுமுள்ள

ஒருவர் உள்ளே வந்தார். அவருக்குச் சுமார் இருபத்தைந்து வயதிருக்கலாம். அவர் தம் மைத்துனரைக் கண்டவுடன் க்ஷேமம் விசாரித்தார். அவர் பேசுவதில் மூக்கின் உதவி கொஞ்சம் பலமாயிருந்தது.

கோபாலனுடைய தாய் பத்து வருஷங்களுக்கு முன்னதாக இறந்துபோய் விட்டாள். ஒரு தூரபந்துவான அமங்கிலிதான் வீட்டுவேலையெல்லாம் பார்த்துவந்தாள். சாவித்திரி, பிறந்த வீட்டிலேயே தன் கணவனோடிருந்தாள்.

கோபாலன் தகப்பனார், போஜனத்துக்குப்பின், தம் பங்களாவுக்குப் படுக்கைக்குப் போய்விட்டார். அவருடைய வைப்பாட்டி தினமும் அங்கு வருவதாகச் சொல்வதுண்டு. சாவித்திரியின் புருஷனும் சாப்பிட்டானபின் கொஞ்சந் தாம்பூல மெடுத்துக்கொண்டு, வெளியே போய்விட்டார். மற்றவர்கள் முற்றத்து நிலவிலிருந்து கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப், பின்பு படுத்துக்கொண்டார்கள்.

ஒன்பதாவது அதிகாரம்.

பண்ணை சேஷையர் வீடு மறுநாள் மிகவும் மங்களகரமாயிருந்தது. ஆயுள் விருத்திக்காக சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கும் ஓமங்களும் தானங்களும் வைதீக வேதியர் மந்திர கோஷமும் முழங்கின. ஓமப்புகையும், விருந்துச் சமையற்புகையும், வீடெல்லாம் நிறைந்தன. வைதீகப் பிராமணர்கள் தாங்கள் கற்ற வித்தையெல்லாங் காட்டினார்கள். அநேகர், தாங்கள் புதிதாக வந்ததாகப் பொய் சொல்லி, இரண்டு தரமும் மூன்று தரமுங்கூடத், தட்சிணை வாங்கினார்கள். சிலர், தாங்கள் காதாற் கேட்டிராத சாஸ்

திரங்களும் வேதங்களும் தங்களுக்குத் தெரிந்ததாகப் பிதற்றி, உயர்ந்த தக்ஷிணை வாங்கினார்கள். சிலர், தாங்களே பிறர்க்குக் கொடுக்கவேண்டிய நல்ல நிலைமையிலிருந்தும், கந்தல் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு வந்திரந்து துட்டு வாங்கினார்கள். இவர்களில் ஒரு கிழவருடைய தந்திரம் வியக்கத்தக்கது. அவர் மிகவும் வயது சென்றவராயிருந்ததால், வைதீக கோஷ்டியினூடே நுழைந்து, தானகர்த்தாவாகிய சேஷையரின் சமீபத்தில் அவராற் போகமுடியவில்லை. உரத்துக் கூப்பிடுவதற்கோ காயபலமில்லை, அவர் கையில் ஒரு செப்புப்பாத்திரத்தில் தீர்த்தமும், கக்கத்தில் ஒரு அழுக்குத் துணியுங் கொண்டு வந்தார். அச்சங்கத்தின் மத்தியில் ஒரு சௌகரியமான விடத்தில், ஒருவரும் பாராதபடி மெல்லத் தண்ணீரைக் கவிழ்த்து விட்டார். உடனே அங்கிருந்தவர்கள் "தீர்த்தம், தீர்த்தம்" என்றெழுந்து விலக, அவ்விருத்த வேதியர், "அடா, அடா, அடா, கொட்டிவிட்டதா?" என்று சொல்லிக்கொண்டே, தம் அழுக்கு வஸ்திரத்தைத் தண்ணீரின் மேல் மடித்துப்போட்டுத், தாம் அவ்விடத்தில் உட்கார்ந்து கொண்டுவிட்டார். சுருக்கிக் கூறப்புகின்: அன்று பண்ணை சேஷையருக்கு நூறு ரூபாவரையுஞ் செலவு; அநேகருக்குப் பணமும் யாவர்க்கும் போஜனமும் இலாபம்; சாபமோ ஆசீர்வாதமோ என்று கூட ஒருவருக்கும் பொருள் படாத பல வடமொழி மந்திரங்களும் கூறப்பட்டன, எத்தனை தப்புக்களுடனோ சுவாமிக்குத்தான் தெரியும்; வீடெல்லாம் புகை; வீட்டிலுள்ளவர்களுக்கும் அடுத்த வீட்டுப் பெண்பிள்ளைகளுக்கும் கடுமையான வேலை; ஊரிலுள்ள ஏழைக்குறவர்களுக்கும், நாய்களுக்கும், காகங்களுக்கும் யுத்தம்; அன்றியும், சேஷையர் வீட்டிலுள்ள சில

நகைகளும் பட்டு வஸ்திரங்களும் வெளியே புறப்பட்டுக் காற்றுடின.

முதல் நாளிரவு அடைந்த துக்கமும் வெட்கமும் மறு நாள் முழக்கத்தில் நாராயணனுக்கு மாறிப்போயிற்று. கோபாலன் மூலமாக அவன் சரிதை முழுதும் அறிந்துகொண்ட சாவித்திரி, அவனை வெகு அன்புடனும் ஆதரவுடனும் நடத்தி வந்தாள். ஆனால் சாவித்திரியைக் கண்டவுடன் அவனுக்குண்டான ஒருவித உணர்வுமட்டும்மாறுமல் அதிகப்படுவது போலிருந்தது. எக்காரணத்தை முன்னிட்டாவது, அடிக்கடி அவளிருக்குமிடங்களுக்குப்போனுன். அவன் மனத்தில், தன் எண்ணம் கோபாலனுக்குத் தெரியக்கூடாதென்ற ஒரு கள்ள நினைவு தோன்றிற்று. ஆனல், அவனுசை யெல்லாம், அவளை எப்பொழுதும் பார்த்துக்கொண்டு, அவளுடன் சம்பாஷித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதைத் தவிர வேறில்லை. அவனுக்கும் அவள் சகோதரருக்கும் இருந்த அந்தரங்க சிநேகத்தாலும், அவன் வீட்டில் அவள் சகோதரர் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், அவனையும் ஒரு சகோதரன் போலவே நினைத்துக் களங்கமில்லாமல் அவள் நடத்திவந்ததால், அவன் விருப்பம் தடையின்றி நிறைவேறிற்று. அவள் தன் சகோதரியா யில்லாமற் போனதைப்பற்றி மிகவும் மனவருத்தப் பட்டான்: அவள் பேசும் அற்ப வார்த்தைகளையுங்கூட, ஏதோ பெரும் பொருளடங்கிய மதுரமான திவ்ய ரகசியங்களாக எண்ணினுன். அவள் சரீரத்தின் ஒவ்வோர் அங்கமும் அவன் கண்களுக்குப் புதிது புதிதான அழகுகளை வெளியிட்டன. அவள் பேசும்பொழுது தன்னைப் பார்த்தால், தானும் எதிர்நோக்க அஞ்சித் தலையைக் கவிழ்வான். அவள் பாராப் பொழுதெல்லாம் தான் அவளையே பார்ப்பான். அவன்

சொல்வதைத் தடுத்துச் சொல்லவாவது, அவளிடத்தில் பரிகாசமாக அற்ப வார்த்தைகள் பேசவாவது, அவனுக்குத் தோன்றவே யில்லை. அவள் சகோதரராகிய கோபாலனும் சங்கரனும் அவளிடத்தில் பரிகாசமாகப் பேசுவது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவளிருக்கும் இடங்களில் துர்சம்பவங்கள் ஒன்றும் நேரிடமாட்டாவென்றும், அவளுடன் இருப்பவர் ஒருவருக்கும் ஒரு கேடும் உண்டாகாதென்றும் எண்ணினன். அவளை ஸரஸ்வதியும் லக்ஷ்மியுமாகக்கூடி அவதரித்த ஒரு குலதெய்வமாக நினைத்தானேயொழிய, கேவலம், ஒரு சாதாரணப் பெண்ணென்று மதிக்கவில்லை. அவளுடன் பேசிக்கொண்டிருந்தால் பசி தாகம் முதலிய அவஸ்தைகள் கூட உண்டாகுமோ வென்று சந்தேகித்தான். அன்று வீட்டில் ஒரு வாசல் வழியாக இவன் போகும்பொழுது அவள் அவசரமாக எதிரே வரத், தற்செயலாக, அவள் தோளில் அணிந்து கொண்டிருந்த 'வங்கி' இவன் மேற் கொஞ்சம் பட்டது: ஐந்து நிமிஷம் வரை தேக பரவசனயிருந்தான்.

சாவித்திரியின் குணதிசயங்களையும் நடவடிக்கைகளையும் பற்றி அநேக விஷயங்கள் தெரியவேண்டுமென்ற விருப்பம் நாராயணனுக்கு மிகுந்திருந்தது. ஆனல், மனத்தின் கள்ளத் தனத்தால் தன் பாலியத்தை மறந்து, பிறர் சந்தேகிப்பாரென்று பயந்து, சாவித்திரி யிடத்திலாவது அவள் சகோதரரிடத்திலாவது அவளைப்பற்றிப் பேசத் துணியவில்லை. அவள் ஸரஸ்வதியே என்று எண்ணின போதிலும், அவள் எவ்வளவு படித்திருக்கிறளென்பதை யறிய அதிக ஆவலாயிருந்தான். இதைத் தந்திரமாக அறியும் பொருட்டு, அவன், சங்கு இடத்தில், அவ்வூரில் பெண்பிள்ளைப் பள்ளிக்கூட

முண்டாவென்று கேட்டான். அதற்கு அவன் இல்லையென்று சொல்ல, ஆனால் சாவித்திரி எங்கே படித்தாளென்று கேட்டான். அதற்கு துஷ்டச் சங்கு, 'நான் காட்டுகிறேன் வா', என்று கூட்டிக்கொண்டுபோய்த் தன் வீட்டுச் சமையற் கட்டிடத்தைக்காட்டி, "இதுதான் சாவித்திரி பள்ளிக்கூடம்; இதோ இருக்கும் சட்டி, பானை, பாத்திரங்கள் தாம் அவள் படித்த புஸ்தகங்கள்; நாம் சாப்பிடும் சாதம் அளவாகப் படித்துத் தேர்ந்து உண்டுபண்ணின கவி," என்று சொல்லிச் சிரித்தான். முதலில் நாராயணன் அதை நம்பவேயில்லை. தான் ஸரஸ்வதியாக மதித்த பெண் 'தற்குறி நபர்' ஆக முடிவது அவனால் நம்ப முடியவில்லை. சாவித்திரியே தனக்குப் படிக்கத் தெரியாதென்று சொன்னபின்பு தான் அவனுக்கு நம்பிக்கையுண்டாயிற்று. ஆனால், அவள் படிக்கத் தொடங்கினால் சிறிது காலத்தில் அநேக பாஷைகளையும் சாஸ்திரங்களையும் கற்றுக் கொள்வாளென்பதில் அவனுக்குச் சற்றுஞ் சந்தேகங் கிடையாது. சாவித்திரி படித்துத் தேர்ச்சியடையவேண்டுமென்று அவன் ஆவலாயிருந்தான். மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, அவளிடத்திலும் அவள் சகோதரரிடத்திலும் இதைப்பற்றித் தந்திரமாகச் சொல்லவேண்டுமென்று உத்தேசித்தான்.

அன்றிரவு இவர்கள் நால்வரும் முற்றத்திலிருந்து நிலவில் பேசிக்கொண்டிருந்தார்கள். மறுநாள் தன் சகோதரர் சிந்துபூந்துறைக்குப் போய்விடுவதை உத்தேசித்து, சாவித்திரி, அன்று வேலையினால் மிகவும் களைத்திருந்த போதிலும், நித்திரையை நீக்கி, அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தாள்.

கோபாலன்:—நாளைக்கு இந்நேரமெல்லாம் நாலுகெட்டு மேடையில் படித்துக்கொண்டிருப்போம்.

சாவித்திரி:—நான் ஒரு தூக்கம் தூங்கியாய்விடும்.

நாராயணன்:—(அது தன் உத்தேசத்துக்குத் தக்க சமயம் என்று கண்டு) புருஷர்கள் மட்டும் படிக்கவேண்டுமென்றும், இல்லாவிட்டால் இழிவென்றும், பெண்டுகள் படியாமல் மூடத்தனமா யிருக்கலாமென்றும், நம்மவர்கள் எண்ணுகிறார்களே: இதென்ன நியாயம்?

சங்கரன்:—படிக்கிறதெல்லாம் பணம் சம்பாதிக்கிறதற்காக; இதோ பார். முன்னிருந்த ஹிந்துராஜாக்கள் காலங்களில் பிராமணர்களெல்லாம் வேதாத்தியயனஞ் செய்தும், சாஸ்திரங்களைப் படித்தும் பணம் சம்பாதித்தார்கள். இப்பொழுது இந்தத் தண்ணீரில் அந்தப் பருப்பு வேகாதென்று கண்டு, இப்படிப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அந்தக் காலங்களில் 'இங்கிலீஷ்' என்று யாராவது சொன்னால், இரண்டு காதையும் பொத்திக்கொண்டு, 'அடா, அடா, நீசபாஷையின் பெயரையும் கேட்கலாகாது,' என்பார்கள். இப்பொழுதோ, பெரிய குண்டல தீக்ஷிதர் வம்சங்களில் தான் இங்கிலீஷ் அதிகம். இராஜபாஷையாம்; வேளைக்குத் தக்க வேஷம்.

கோபாலன்:—ஏது, சங்கு பிரசங்கம் தாழ்வில்லை. அன்று தமிழ்ச் சங்கத்துக்கு வந்திருந்தான் போலிருக்கிறது. பணத்தைத் தவிர இன்னொரு காரணமுமிருக்கிறது. பெரிய பணக்காரர் வீட்டுப் பிள்ளைகள் படிப்பதெல்லாம் சர்க்கார் உத்தியோகம் செய்து புகழடையும் பொருட்டுத்தான்; யாரோ ஒரு 'ரிவினியூ இன்ஸ்பெக்டர்,' அப்பாவை ஒரு தடவை அவமரியாதை செய்தாராம். அதன்பொருட்டு நாங்கள் வசித்து உத்தியோகஞ் செய்யவேண்டுமென்று எங்களைச் சிந்துபூந்துறைக்கு அனுப்பினார்; இல்லா விட்டால் நானும்

சங்குவும் அத்தம்பியாரைப் போல், வீட்டு விவசாயம் பார்த்துக் கொண்டுதா னிருப்போம். நாணு! உன்னைப் பார்த்திருக்கக்கூட மாட்டோமே!

சாவித்திரி:—(பெருமூச்செறிந்து) எவ்வளவு பணமிருந்தாலென்ன? இந்தக் காலத்திலே இங்கிலீஷ் படித்தால் தானே மகிமை.

நாராயணன்:—நீங்கள் சொல்வதெல்லாம் நிசந்தான். பணத்தின் பொருட்டும் உத்தியோகத்தின் பொருட்டுந்தான் முக்காலே யரைக்கால் வாசிப் பெயர்கள் படிக்கிறார்கள். அதனால் தான் பெண்கள் படிப்பது அனவசியமென்று ஏற்பட்டது. ஏனென்றால், பெண்கள் உத்தியோகஞ் செய்வதோ முடியாதது; புருஷன் சம்பாதித்தால் பெண்சாதியும் பணத்தினா லுண்டாகக் கூடிய நகைகள் பட்டு வஸ்திரங்கள் முதலிய போகங்களை யெல்லாம் அடைகிறாள். கண்யதைக்கோ, கேட்க வேண்டியதில்லை; திருநெல்வேலி 'சப் மாஜிஸ்டிரெட்' சம்சாரமாவது 'தாசில்தார்' சம்சாரமாவது, ஒரு திருநாள் காலங்களில் வெளியே புறப்பட்டு விட்டால் போதும்; அப்புறம் சுவாமி பக்கத்தில் தீவர்த்திகள் கிடையாது; தாசிகள் பக்கத்தில் கூடக் கிடையாது; எல்லாம் இவர்கள் பக்கத்தில் வந்து விடும். இவர்களாகக் கால் சலித்து வீட்டுக்குப்போகிற வரை, சுவாமி இருட்டில் நிற்க வேண்டியதுதான். நாலு பக்கங்களிலும் 'போலீஸ்' செந்தலைப் புலிகளும் வில்லை 'டலயத்துக்'களும் செய்கிற 'பந்தோபஸ்தைப்' பார்த்தால், இவர்கள் கொடூரமான கொலைகள் செய்த கைதிகளோ வென்று சந்தேகிக்கக் கூடும்; இதெல்லாம் பெரிதல்ல; கூட்டம் விலக்குவதில் எத்தனை பேர்களுக்கு அடிகளும் மிதிகளும் கிடைக்கிறது! அதைப் பார்க்கும் பொழுதெல்லாம், எனக்கு ஒரு

விதமான விசனமும் சிரிப்பும் உண்டாகிறது! இப்படி யிருக்கக், கண்யதையின் பொருட்டுப் பெண்கள் படிப்பது அனுவசியமே. வித்தை கற்பதற்கு முக்கியமான காரணம் மனத்தில் அழுந்தினு லொழியப் பெண்களும் படிக்க வேண்டியதின் அவசியம் தோன்ற மாட்டாது.

சாவித்திரி:—"ஏது நாராயணன் என்ன, பெரிய பண்டிதன் போலிருக்கே? நான் இவ்வளவு நினைக்க வில்லையே. சில ஞாயிற்றுக் கிழமைகளில் இங்கே வந்து கிறிஸ்து வேதத்தைப் பிரசங்கம் பண்ணுகிறார்களே அவர்கள் கூட இவ்வளவு நன்றாய்ப் பேசமாட்டார்கள் போலிருக்கே! அதென்ன காரணம்? குறையும் சொல்லு," என்று கேட்டாள்.

நாராயணனுக்கு அவள் இப்படிப் புகழ்ந்ததாலுண்டான வெட்கம் கொஞ்சம் தீருமுன், **சங்கரன்,** "நான் சொல்லுகிறேன். பெண்கள் தங்கள் புருஷர்களுக்குக் கடிதங்கள் எழுதும் பொருட்டுத் தான். அப்படிப் படித்துத் தான் வடக்கே ஒரு பெண் வேறொருத்தனுக்குக் கடிதங்கள் எழுதி, அவன் கூடப் பட்டணத்துக்கு ஓடிப்போய் விட்டாளாம்," என்றான்.

நாராயணன்:—(வெட்கத்துடன் தலையைக் கவிழ்ந்து கொண்டு) "நான் பண்டிதனும் இல்லை, பாடகனும் இல்லை; இல்லை; எங்கள் வாத்தியார் இராஜகோபாலையர் எங்களுக்குப் 'பெண்கல்வி'யைப்பற்றி ஒரு உபந்நியாசம் எழுதி வாசித்தார். அதைத்தான் நான் சொல்கிறேன். சங்கு இப்பொழுது சொன்ன காரணம், முன் சொன்ன இரண்டு காரணங்களுக்கும் கீழ்ப்பட்டது. 'படித்த பெண்களெல்லாம் சோர புருஷர்களுக்குக் கடிதமெழுதுவார்கள்; ஆகையால் பெண்கள் படிக்கலாகாது என்று சொல்வதிலும், நம்முடைய அஜாக்கிரதையினால் சில சமயங்களில் அடுப்புத் தீ வீட்டிற்பற்றி நாச

முண்டாக்குவதால், ஒரு வீட்டிலும் அடுப்பு மூட்டக்கூடா தென்று சொல்லலாம். தீயானது மனிதனுடைய சரீர சௌக் கியத்துக்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு, கல்வியானது நம்முடைய நல்லொழுக்கத்துக்கும், சுகத்துக்கும் உயர் பத விக்கும் அவசியமானது. ஆனால், தீயானது கெட்டோர் கைப் பட்ட காலத்தில் தீங்கை விளைவிப்பது போலவே, கல்வியும் தீயோரிடமிருந்தால் கெடுதியை உண்டு பண்ணும். புத்தி விருத்தியும், பேரறிவும், நல்லொழுக்கமுமே கல்வி கற்பதின் முக்கிய பயன்களாகக் கொள்ளவேண்டும். பணமும் கண் ணியதையும் இவற்றிற்குப் பிறகு தான். இப்படி யோசித் தால் தான் பெண்களும் கல்வி கற்கவேண்டுமென்பது நன்றாய் விளங்கும். புருஷனுடைய பணமும் கண்ணியதையும் பெண் சாதிக்கு உதவுவது போல் அவனுடைய கல்வியும் ஞானமும் அவளுக்கு உதவமாட்டா. புருஷனிடத்தில் பணமிருந்தால் பெண்சாதிக்கு நகைகள் செய்யலாம்; ஆனால் புருஷன் பட் டும் சாப்பிட்டால் பெண்சாதி வயிறு நிறையுமா? அது போல்தான் கல்வியும் அறிவும்; ஆதலால், அறிவைபடையும் பொருட்டு, மானிடப் பிறப்பு எடுத்தவர்கள் யாவரும் கல்வி கற்கவேண்டும்; ஒருவருக்காக ஒருவர் படித்தால் பயன் படாது. பேரறிவே நமக்கும் மிருகங்களுக்கும் உள்ள முக் கிய பேதம். "அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார் என்னுடையரேனும், இலர்" என்று திருக்குறளிற் சொல்லி யிருக்கிறது. அன்றியும், பெண் கல்விக்கு இன்னும் வேறொரு முக்கிய காரணமுண்டு. தாய் தகப்பனிடத்திலுள்ள அநேக குறிகளைப் பிள்ளைகளிடத்தும் காண்கிறோம். நான் சிரிக் கும் பொழுதெல்லாம் எங்கம்மா சிரிப்பதுபோல் என்முக மிருக்கிறதென்று கோபு அடிக்கடி சொல்லுவாள். அது

போலவே, குணங்களும் படிப்படியாகப் பெற்றோரிடத்தி லிருந்து பிள்ளைகளுக்கு இறங்குவதாகச் சொல்லுகிறார்கள். ஆகையால், குழந்தைகளுக்குப் புத்திக் கூர்மையா யிருப்ப தற்குத், தகப்பனைப்போல் தாயும் படித்திருக்க வேண்டும். அன்றியும் நமக்குள், சுமார் பதினாறு பதினைந்து வயது வரை, முற்றிலும் வீட்டுப் பெண் பிள்ளைகளால்தான் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். எளிதாய் எவ்விதமும் திருப்பக்கூடிய அவ்வளவு இளம்பிராயத்தில், கல்வித் தேர்ச்சியுள்ளவர்களு டைய மேற்பார்வைக்குள் இருக்கவேண்டியது, எவ்வளவு அவசியமானது? இன்னுமொரு முக்கியமான விஷயமிருக் கிறது. புருஷன் மட்டும் படித்திருந்தால், தன் மூடத்தன மான மனைவியுடன் அவன் என்ன சிநேகத்தையும் சுகத்தை யும் அநுபவிக்கக்கூடும்? செக்கடிக்கும் தம்பூருக்கும் ஒத்து வருமா? சிநேகத்தின் தன்மையைப் பற்றிக் கூறும்பொழுது, திருவள்ளுவ நாயனார்,

'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சி தான் நட் பாங் கிழமை தரும்.' *

---

* இதன் பொருள்:—ஒருவரோடொருவர் சிநேகமாவதற்குச் சரீரப் புணர்ச்சி, பலதரங் கண்டுபேசிப் பழகுதல் ஆகிய கார ணங்கள் வேண்டுவதில்லை, இருவருக்கும் ஒத்த உணர்ச்சிதான் சிநேகமாகிய உரிமையைக் கொடுக்கும். சரீரப் புணர்ச்சியால் மட்டுமுண்டாகும் சிநேகம், அழகழிந்த காலத்தில், அல்லது வேறொருவரைக்கண்டு காதலுற்றகாலத்தில், ஒழிந்துபோகும்; அடிக்கடி பழகுவதால் மட்டும் உண்டாகும் சிநேகம், பிரிவினால் அழிந்துவிடும்; ஒத்த உணர்ச்சியாலுண்டாகும் சிநேகமோ, அறிவை யடிவாரமாகக்கொண்டு, மேன்மேலும் வளர்ந்தேறுமே யொழிய, எளிதில் அழியமாட்டாது; ஆகையால் நட்புக்கு மன வொருப்பாடே சிறந்தது, என்பது.

என்று சொல்லியிருக்கிறார். அவ்வித மனவொருப்பாடு, நாயகன் நாயகியாகிய இருவரும் தக்க புத்திசாலிகளாயும் படித்தவராயுமிருந்தால் தான் உண்டாகும். ஒருவர் மட்டும் படித்திருத்தல் பெரிய இடையூறாகவேயிருக்கும் இப்பொழுது நமக்குள், உதாரணமாக, நானும் கோபுவும் ஏதாவது இங்கிலீஷில் ஒரு அற்புதமான விஷயத்தைப் படித்துச் சந்தோஷப்படும்பொழுது, நீ (சாவித்திரி) 'அது என்னது, மகிழ்கிறீர்கள்?" என்று கேட்டால், 'அது இங்கிலீஷ்; உனக்குத் தெரியாது'? என்று தான் சொல்லவேண்டுமே யொழிய, நீயுங்கூடக்கேட்டு அநுபவித்து ஆநந்தப்பட முடியாது. இதுபோல் தான் ஒவ்வொரு விஷயமும். ஆகையால் கற்றுத்தேர்ந்த தன் புருஷனுடைய நேசத்தையும் பாசத்தையும், தன் அழகு அழிந்துபோன காலத்திலும், ஒருநாளுங் கைவிடாது கொள்ள விரும்பும் பெண், அவனுக்குப் பிரியமாயுள்ள கல்வியில் தானும் தேர்ச்சியடைய வேண்டும். இல்லாவிட்டால், பெண்ஜாதியின் அழகு குன்றுங்காலத்தில், கல்வியாகிய சக்களத்தி, அவள் புருஷனைத் தன் கைவசமாக்கிக்கொள்வாள். தவிரவும் புருஷன் மதிப்பைத் தன் கல்வியினாலும், அதனால் உண்டாகும் நல்லொழுக்கத்தாலும் ஒரு மனைவி கவர்ந்து கொள்ளாளாயின், அவள் எண்ணங்களையும் விருப்பங்களையும் அவன் சிறிதும் கவனியாமல், தன் மனப்படியே நடப்பான்," என்று சொன்னான்.

நாராயணன் பேசப்பேச, அவன் ஆவலும் பரபரப்பும் அதிகரித்தன. சங்கு பாதியிலேயே சுவரோடு சாய்ந்து கொண்டு தூங்கிவிட்டான்; ஆனால் சாவித்திரியும் கோபாலனும் வெகு ஆச்சரியத்துடனும், சந்தோஷத்துடனும், கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நாராயணன் பேசி

முடிந்தவுடன், கோபாலன், "பலே, ஸபாஷ். இப்பொழுது பிரசங்கம் செய்த கனவானுக்கு நான் அநேகம் வந்தனமளிக்கின்றேன்," என்று சொல்லி, நாராயணனை முதுகில் தட்டிக் கொடுத்தான்.

சாவித்திரியோ, சந்தோஷத்துடனும் கொஞ்சம் நாணத்துடனும்: "நான் நாளை முதல் வாசிக்கப்போகிறேன்; யார் என்ன வேணுமோ கேலி பண்ணட்டும். நாணு! நீ எப்பொழுதாவது அடுத்த தடவை கோபுவோடு வரும்போது, நான் எவ்வளவு வாசித்திருக்கேன் பார்," என்று சொன்னாள்.

கோபாலன்:—அதைக்கேட்டு: "இதெல்லாம் ஸ்மசான வைராக்கியந்தான் நீ வாசிக்கிற சங்கதி அத்தம்பியாருக்குத் தெரிந்தால், வெறும் கையடிபோய்த் தடி யடியாகிவிடும்," என்றான்.

அதற்குச் **சாவித்திரி**, "அவர்கள் ஒன்றும் சொல்லமாட்டார்கள்; அவர்களுக்குத் தெரியக்கூட வேண்டாமே. சாலாவையாவது, அல்லது யாராவது தமிழ்ப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளையாவது, முதலாம் பாடப் புஸ்தகம் சொல்லித்தரச் சொல்லப்போகிறேன். சாலா வெகு நாள்களாய்ச் சொல்லிக் கொண்டிருக்கிறாள்," என்று சொன்னாள்.

கோபாலன் :—"அப்படி வாசிப்பதாற் பிரயோசனமென்ன? தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்துவிட்டவுடன், ம-ா-ா-ஸ்ரீ, நாராயணையரவர்கள் கல்விப்பயனாக உபந்நியாசஞ் செய்த பேரறிவு வந்துவிடுகிறதா? வாசித்தால் நன்றாக இங்கிலீஷில் பி. ஏ., எம். ஏ., க்குரிய பாடங்கள் வரை வாசிக்க வேண்டும்," என்றான்.

நாராயணன்:—"கோபு! அப்படிச் சொல்லாதே. நீ சொல்லுகிற மட்டும் படித்துப் பாண்டித்தியம் அடைதல்

நமக்குள் புருஷர்களிலேயே சிலரால் மட்டும்தான் முடியும்! அப்படிப் பெண்கள் வாசிக்க எத்தனை யுகங்கள் செல்லுமோ தெரியாது. ஆனால், படித்தால் அவ்வளவு படிக்கவேண்டும், இல்லாவிட்டால் முட்டாளா யிருக்கலாமென்றில்லை. வெறுங் கழுத்துக்கு அரைப் பணத்துத் தாலி சிலாக்கியமென்று கேட்டதில்லையா? தமிழில் உயர்ந்த அற்புதமான சாஸ்திரங் களில்லாமற் போனாலும், நீதி நூல்களும், தேவ கீதைகளும், காவியங்களும் எவ்வளவோ இருக்கின்றன. மனத்தை உயர்த் திச் சன்மார்க்கப் படுத்துவதற்கு இவைகளே ஏற்றவைக ளாம். ஒரு தேசத்திலும் ஒரு பாஷையிலும் திருக்குறளுக் குச் சமதையான நூலே கிடையாதென்றும், தேவாரத்திலும் உருக்கமாயுள்ள தேவ கீதைகள் இல்லை யென்றும், இங்கி லீஷ்காரருக்குத் தெரியாததால் அவ்வளவு சிறப்படையாம லிருக்கும் கம்பராமாயணத்தைப் போல் ஒரு பாஷையிலும் ஒரு காவியமும் கிடையாதென்றும், எங்கள் வாத்தியார் இராஜகோபாலையர் அடிக்கடி சொல்வதுண்டு. ஒருவரோ டொருவர் கூடி, வீட்டுக் கறிவகைகளையும், ஊர் வம்புகளை யும்பற்றி நம்முடைய பெண்டுகள் பேசியும், 'கட்டப்ப நாய்க் கன் கும்மி, மூளியலங்காரிப் பாட்டு,' முதலியவைகளைப்படித் தும் வீண் காலங் கழிப்பதிலும், இப்படிப்பட்ட புஸ்தகங் களைப் படித்துக் களிக்கக்கூடுமானால், எவ்வளவு நன்றாயிருக் கும்! சந்திரமதி, சீதை, தமயந்தி முதலிய பெண்ணரசிகளின் சரித்திரங்களைப் படித்தால், எவ்வளவு நன்மையடைவார்கள்". என்றான்.

சாவித்திரி:—"நான் என்ன சொன்னாலும் நன்றி, முறித்துப் போடுவதுதான் கோபுவுக்கு வழக்கம். எப்படி யானாலும் சரி: நான் நாளைமுதல் வாசிக்கத் தொடங்குவது

நிச்சயம். ரொம்பப் பொழுதாச்சுது. சங்கு அப்போதே தூங்கிவிட்டான். நாமும் படுத்துக்கொள்ளப் போவோம்.'' என்றாள். உடனே சங்குவை யெழுப்ப, அவன் ஏதோ சொப்பனத்தில், "அவியலுக்கு, உப்பதிகமென்று நானுசொன்னேன்?'' என்று சொல்லிக்கொண்டெழுந்திருந்தான். எல்லாரும் ஒரு முறை சிரித்துவிட்டு, அவனையுங் கூட்டிக்கொண்டு உள்ளே படுத்துக்கொள்ளப் போனார்கள்.

சாவித்திரிக்குத் தான் பாடம் சொல்லிக் கொடுப்பது போல், அன்றிரவு, நாராயணன், கனவுகள் கண்டான்.

பத்தாவது அதிகாரம்.

முந்திய அதிகாரத்திற் கூறிய சங்கதிகள் நடந்து மூன்று மாதங்கள் ஆய்விட்டன. நாராயணனுடைய தகப்பனார் திருச்சிராப்பள்ளிச் சிறைச் சாலையில் இறந்து போய் விட்டார். நாராயணன் அரியூருக்குப் புறப்படுவதற்கு முந்திய நாள், அவனுக்கும் அவன் தாய்க்கும் மயிர்க்கூர்ச்செறிதலும் ஒரு விதமான தேக விகாரமும் உண்டான அதே மாலை வேளையில் அவர் மரணம் நேரிட்டதாகக் கடிதம் வந்ததைப் பற்றி, அவர்களுக்கு வெகு ஆச்சரியமாக யிருந்தது. ஏதோ தெய்வச் செயலான குறிகளாக வைத்துக் கொண்டார்கள்.

இப்பொழுது பத்மாவதியின் கலியாணத்துக்கு எத்தனம் செய்யும் பொருட்டும், பள்ளிக்கூடம் அடைப்பானதினாலும், சீதையம்மாளும் நாராயணனும் சிறு குளத்துக்கு வந்திருந்தார்கள். சீதாபதியையரின் சமீப மரணத்தை உத்தேசித்து, பத்மாவதியை நாராயணனுக்குக் கலியாணஞ் செய்யவில்லை யென்று யாருந் தெரிந்து கொள்ளலாம். ஆனால், வேறு

யாருக் கென்று திகைப்பார்கள். பத்மாவதிக்கு இப்பொழுது பத்து வயதாயிருந்தது. அவள் தகப்பனார் ஐயாவையர் அவளுடைய விவாகத்தைப் பற்றி பலவாறு முயன்று கொண்டிருந்த போதிலும், மனத்துக் கிசைந்த மாப்பிள்ளை கிடைக்கவில்லை. கடைசியில், நாராயணனுக்குக் கொடுக்கலாமென்று உத்தேசித்திருக்கும் பொழுது, அவன் தகப்பனார் இறந்து போய் விட்டதாகக் கடிதம் வந்து, அது தடையாய் விட்டது. பத்மாவதியின் தாயோ, தன் பெண் குதிர் போல் வளர்ந்து விட்டாளென்றும், அடுத்த வருஷம் தெருண்டு விடுவாளென்றும், நாராயணனுக்குச் சோற்றுக்குக் கூட இல்லாததால் அவனுக்குக் கொடுக்கவே கூடாதென்றும், வேறு சரியான வரன் கிடையாத விஷயத்தில், தன் அத்தான் இறங்கல் அநந்தராமையர் பிள்ளை கிட்டுவுக்குக் கொடுக்க வேண்டுமென்றும், ஒரே பிடிவாதமாகச் சொன்னாள். பத்மாவதியோ, அவளை ஒருவரும் கேட்கவே யில்லை. அவளைக் கேட்பானேன்? தாயார் தகப்பனார் யாரைத் தீர்மானஞ் செய்கிறார்களோ, அவனுக்கு தன் வாழ் நாள் முழுவதும் அடிமைத் தொழில் செய்து கழிக்க வேண்டியது அவள் கடமை யல்லவோ? அவளுடைய மனத்திற்கு இசைந்தவனோ இல்லையோ என்பது அவள் தாய் தந்தையரால் ஒரு வேளை யோசிக்கப் பட வேண்டுமே யொழிய, அவள் மனம் அவளுக் கெப்படித் தெரியும்? அவள் குழந்தைப் பருவம் முதல் 'கரிக்கிட்டு' 'தடிக் கிட்டு', என்று வெறுத்த பையன், இப்பொழுது அவளுக்கு மாப்பிள்ளையாகத் தீர்மானஞ் செய்யப் பட்டால், அவனையே மன்மத சொரூபனாக நினைத்துக்கொள்ள வேண்டியது; அல்லது விதிப்பயன் என்று சும்மா இருக்க வேண்டியதே யொழியத், தடுத்துப் பேச நியாய முண்டோ? எல்லாம், பழி

னால் சரியாய்ப் போய் விடுமல்லவா? அன்றி, ஏதாவது புருஷனுக்கும் பெண்சாதிக்கும் சண்டை யுண்டானால், அதில் நூதனமென்ன? உலகத்தில் வழக்கந்தானே? எல்லா வீடுகளிலும் தினசரி உள்ளது தானே? நல்ல வரன் கிடைக்கும் பொழுது, இதெல்லாம் பார்த்து முடியுமா? இதெல்லாம் பாராமல் கலியாணம் பண்ணினவர்களெல்லாம், பெண்களும் பிள்ளைகளும் பெறுமல்தானிருக்கிறார்களோ? அதோ, நாணி வீட்டில் அவள் புருஷனுக்கும் அவளுக்கும் நித்தியம் வெட்டுப்பழி, குத்துப்பழி, சண்டை நடக்கத்தான் செய்கிறது: அவள் சுப்பையரை ஆசைப் புருஷனாக வைத்துக் கொண்டிருக்கிறதாகக் கூடச் சொல்லுகிறார்கள். ஊராருக்கென்ன வேலை? கோள் சொல்லுவதுதான் வழக்கம். இப்பொழுது நாணிக்கு என்ன குறை வந்து விட்டது? வீடு நிறையப் பெண்களும் பிள்ளைகளுமாய் மஹராசியா யிருக்கிறாள். எல்லாம் பிராப்தம் போல் நடக்கும்; விதி போல இருக்கும். நம்மாலென்ன முடிகிறது.

ஐயாவையர், தம் மனைவி இஷ்டப்படி கிட்டுவுக்கே கலியாணஞ் செய்து கொடுக்கிறதென்று தீர்மானித்து, ஒரு முகூர்த்தமும் உத்தேசித்துக் கொண்டு, மிகவும் பெயர்பெற்ற ஜோதிஷ நிபுணராகிய அத்தநேரி இராகவையங்காரிடஞ் சென்று ஜாதகங்களைக் காட்டினார். அந்த நிபுணரும், தீர்க்காலோசனை செய்து, அநேகம் ஏடுகளைப் புரட்டிப் பார்த்து, முடிவில், அந்தப் பெண் (பத்மாவதி) இருக்கிற ஊருக்குச் சொற்ப தூரத்தில்தான் மாப்பிள்ளை ஊரிருக்கிற தென்றும், அந்த மாப்பிள்ளை பெண்ணுக்குத் தாய் வழியில் சமீப பந்துவென்றும், மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் ஒரு வயது தான் வித்தியாச மென்றும் எவ்வளவு பிரயத்தனஞ் செய்

தாலும் வேறு எந்தப் பிள்ளைக்கும் கலியாணம் நடக்க மாட்டாதென்றும், யாவரும் சும்மா இருந்தாலும் கூடக், 'கட்டாயம்' பதினைந்து நாள்களுக்குள், அஃதாவது, சித்திரை மாதம் எட்டாவது தேதியன்று கலியாணம் நடந்துவிடுமென்றும் ஜோஸியம் சொன்னார். பிற்பாடு ஐயாவையர் முக்கால்வாசிச் சந்தேகம் நீங்கி, ஐயங்காருக்கு வெகு உபசாரத்துடன் ஒரு ஜோடி வேஷ்டியும் மூன்று ரூபாவும் கொடுத்துக், கலியாணத்துக்கும் அழைத்துவிட்டு, ஊருக்குத் திரும்பிவிட்டார். ஊருக்கு வந்தபின் மிகுதியிருந்த சொற்பச் சந்தேகமும் நீங்கும் பொருட்டுக், கோவிலில், பெருமாள் திருவடியில், பூக்கட்டி வைத்துப் பார்க்க, அங்கும் நல்ல உத்திரவே கிடைத்தபடியால், உடனே பத்மாவதியை இறங்கல் அநந்தராமையர் குமாரன் சிரஞ்சீவி கிருஷ்ணனுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாக நிச்சய தாம்பூலஞ் செய்து, பந்தல் போடுதல், சாமான்கள் சேகரித்தல், நகைகள் செய்தல், பந்து மித்திரர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்புதல் முதலிய வேலைகளை விரைவாக நடத்தத் தொடங்கினார். சித்திரை மாதம் 8-வது தேதி ஒரு முகூர்த்தமும், 10-வது தேதி ஒரு முகூர்த்தமும், குறிக்கப்பட்டிருந்தன.

சீதையம்மாள், தன் மகனுக்குக் கலியாணமாவதுபோல் களித்துத், தன் துக்கத்தைக் கூட அடக்கிக் கொண்டு, வீட்டுள் நடக்கவேண்டிய வேலைகளையெல்லாம் சிரத்தையாகச் செய்து வந்தாள். நாராயணனுடைய எண்ணங்கள் பலவிதமா யிருந்தபோதிலும், பொதுவாகத், தனக்கு அப்பொழுது கலியாணம் ஆகாதது, தன் படிப்புக்குத் தடைவராதபடித் தெய்வம் செய்த அநுகூலமென்றே நினைத்திருந்தான். பத்மாவதியோ, அவள் மனத்திலுள்ள அந்தரங்க எண்ணங்

களை, இப்பொழுதுகூட யாரும் கவனிப்பாரில்லை. ஆனால் அவள் கைகால்களுக்கு மருதோன்றியிட்டு, அவளைக் குஞ்சம், 'ராக்குடி,' தாழம்பூ, ஜடைநாகம், சந்திரப் பிரபை, சூரியப் பிரபை, கமலஸரம், ஜபமாலை, பவுன்மாலை, உட்கழுத்து மணி, கண்டசரம், பவளமாலை, காறை, சந்திரமுருகு, தேர் வாளி, மாட்டி, குருடு, பொன்னோலை, குண்டலம், பில்லக்கு, தளுக்கு, மூக்குத்தி, வளைகள், பாட்டில், சூடா, கொலுசு, வங்கி, ஒட்டியாணம், பாடகம், பாதசரம், கொலுசு, மிஞ்சி, மெட்டி, முதலிய சொந்தமும் இரவலுமான நகைகளாற் சிங்காரித்து, அவள் நடக்கும் பொழுதெல்லாம் சில நகைகள் 'ஐயோ' 'ஐயோ' என்றும், சில நகைகள் 'பாவம்' 'பாவம்' என்றும், சில நகைகள் 'வேண்டாம்' 'வேண்டாம்' என்றும், சில நகைகள் 'தோஷம்' 'தோஷம்' என்றும் இன்னுஞ் சில நகைகள் 'வீண்' 'வீண்' என்றும், இவ்வண்ணமாய் அவள் மனத்தையும் உண்மையையுமறிந்து முறையிடுவனபோல் நகைகளெல்லாம் ஒலிக்க, அங்கும் இங்கும் கலியாணப் பெண்ணாக, இருபதுமுழ நீளமும், இரண்டுமுழ அகலமும், இரண்டேகால் துலாம் கனமுமுள்ளதாயும், வேர்வையைத் தவிர வேறு தண்ணீரைக் கண்டிராததாயுமுள்ள ஒரு புடவையை அவளுக் குடுத்தி, உலாவும்படிச் செய்தார்கள். அவள் தாயடைந்த சந்தோஷத்தையும், காட்டிய பெருமையையும் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. மாப்பிள்ளை, பெண்ணுக்குத் தரம் போதாத சிறுபையனென்று, ஐயாவையருக்கு உள்ளுக்குள் கொஞ்சம் குறைவுண்டு; ஆனால், அவர் மனைவிக்கோ, சின்னஞ்சிறு மாப்பிள்ளை என்பதைப் பற்றித் தான் அதிக சந்தோஷம்.

ஐயாவையர் சொத்தெல்லாம் மொத்தம் 5,000ரூக் குள் இருந்தபோதிலும், தன் செல்வமகள் சீமந்தபுத்திரி

கலியாணத்தில் பின்வருமாறு 2,000ரூ. வரை செலவு செய்ய எண்ணி, அதற்குப் போதுமானபடி நிலங்களை அடைமானஞ் செய்தார்.

கலியாணச் செலவு.

	ரூ.	அ.	பை.
பந்தர்	100	0	0
பிராமணபோஜனம், சர்வாணி ...	500	0	0
சதுர், மேளகாரன், பாட்டு	500	0	0
ஜவுளி வகையரு	200	0	0
மாப்பிள்ளைக்கு நகை	200	0	0
பெண்ணுக்கு நகை (மாப்பிள்ளை வீட்டுக்காரர் 300ரூக்கு நகை போடுவது தவிர)	400	0	0
சில்லறைச் சிலவு	100	0	0
ஆக மொத்தம் ...	2,000	0	0

இவ்விதமாக மாப்பிள்ளை சிரஞ்சீவி கிருஷ்ணையர், சித்திரை மாதம் 7-வது தேதியன்று சாயங்காலம், மேளதாளம், தாசி, முதலிய ஆடம்பரங்களுடன், இறங்கலிலிருந்தே பல்லக்கேறி, ஊர்பவனியாகக் கலியாணப் பந்தலில் வந்திறங்கினர். ஊர் சமீபமாயிருந்தபடியால், சாமான்களை மட்டும் வண்டிகளில் அனுப்பிவிட்டுச், சம்பந்திமார்கள் மொத்தம் ஐம்பது பேர்வரை நடந்து வந்து சேர்ந்தார்கள். அன்றிரவு 'விரதம்' முதலிய கிரியைகள் நடத்திக் காப்புக் கட்டிக் கிராம தாம்பூலங் கொடுத்துப், பிராமண போஜனமும் செய்தார்கள். மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்கு முகூர்த்தம் வைத்திருந்தது.

சிறுபைய னுனதால், முதல் நாளிரவு, ஆவலுடன் சில பக்ஷணங்களையும் மாம்பழங்களையும் அதிகமாய்த் தின்று விட்ட மாப்பிள்ளைக்கு, முகூர்த்தத்தன்றுக் காலையிற் கொஞ்சம் அஜீரணமும், அதன் நிமித்தம் ஜுரமும் கண்டது. அதற்கு வேண்டிய, தக்க ஔஷதங்களைக் கொடுத்து, மங்களமாய்புரோக்ஷண ஸ்நாநம் மட்டுஞ் செய்வித்து, முகூர்த்தத்தை நடத்த உத்தேசித்தார்கள். ஆனுல், வரவர ஜுரம் அதிகரித்து, ஞாபகம் போய், மாப்பிள்ளை புலம்ப ஆரம்பித்துவிட்டான். அதன் பேரில், இறங்கல் 'அப்பாத்துக்கரி' வந்து மருந்து கொடுத்தார். தம்மை முதலிலேயே கூப்பிடாதது பிசகென்றும், வியாதி இன்னதென்று தெரியாமல் அம்பட்டன் கொடுத்த மருந்தினுல் அவ்வளவு குணக்கேடாய் விட்டதென்றும், ஆயினும் தம்மாற் கூடியமட்டும் பார்ப்பதாயும், அவர் மருந்து கொடுக்கு முன்னதாகவே கைநாடியைப் பார்த்துச் சொன்னுர். பிறகு, ஒரு வேளை மருந்து உள்ளுக்குக் கொடுத்து, இன்னும் மூன்று வேளை மருந்து தாம்போய் அனுப்புவதாகச் சொல்லி, அவர் போய்விட்டார். அவர் போனவுடன், சில கிழக் கைம் பெண்டாட்டிகளாகக் கூடிக்கொண்டு, இங்கிலீஷ் மருந்துகள் மிகவும் உஷ்ணமானதால் சுதேசிகளுடைய தேகத்துக்கு ஒத்துவராதென்று சாதித்து, இறங்கலில் மிகவும் பெயர்பெற்ற திரவியப் பண்டிதன் என்னும் ஒரு அம்பட்டனைக் கூட்டி வந்து மருந்து கொடுக்கச் சொன்னுர்கள்.

முகூர்த்தத்தைப் பத்தாம் தேதிக் காலை ஒன்பது மணிக்கு மாற்றி வைத்தார்கள்.

'அப்பாத்துக்கரி' அனுப்பிய மருந்தைச் சப்பாத்துக் கள்ளியில் கொட்டி விட்டார்கள். அவரை மறுபடியும் அழைக்கவுமில்லை. மறுநாள் காலையில், திரவியப் 'பண்டிதன்'

வண்டியில் வந்து இறங்கினன். அவனுக்குச் சுமார் எழுபது வயதிருக்கலாம், மேலெல்லாம் 'வெள்ளை' விழுந்திருந்தது; தலை நடுக்குவாதத்தால் எப்பொழுதும் ஆடிக்கொண்டிருந்தது; அவன் தலைமேலிருந்த தலைப்பாகையைப் பார்த்தவர்கள், வண்ணன் மூட்டையோ வென்று சந்தேகிக்கக்கூடும். அவன் வெகு நேரம் வரை இரண்டு கைநாடியையும் பட்டைப்போட்டுப் பிடித்துப் பிடித்துப் பார்த்துவிட்டுக், கடைசியில், "இது மூன்று நாளைச்சனி, இவர் ஆட்டம் எல்லாம் நாளைக் கோழி அடங்கும் மட்டுந்தான். அந்த எளவு திராபகத் தண்ணியைக் கொடுக்கக்கண்டு தான் இவ்வளவு கோபம். அப்பமே அடியேனுக்கு ஆள்விட்டா, பெட்டிப்பாம்பு போல சவத்தை அடக்கிப் போடுவேன். பெலமா புணைச்சுக்கிட்டுது. இன்னந்தானென்ன, கழுதை தவறியா போச்சு? அடியேன், நாய்க்குட்டி, இரண்டேபோது மாத்திரையிலே, சவத்தை வெளியாக்கிடரேன், பாருங்கோ. அடியேன் பாராத சனியா? அடியேனுக்கு அடங்காத கழுதையா இது? பார்த்துக்கிட்டே இரிங்கிளேன். அவர் ஆட்டம் திரவியத்திட்டயா?" என்று சொல்லிக்கொண்டே, ஒரு மாத்திரையைப் பைக்குளிருந்து எடுத்து மோரில் தேய்த்துக் கொடுத்தான். மாலையில் வண்டியனுப்பும்படி சொல்லி விட்டுத், தாம்பூலமும், எதோ சஞ்சீவித் தைலம் வடிக்க மூன்று ரூபாயையும் வாங்கிக்கொண்டு, போய்விட்டான்.

வியாதி அதிகரிக்க அதிகரிக்க, நோயாளியின் படுக்கையைச் சுற்றிக் காற்றும் நுழைய இடமின்றிச் சுவர் வைத்தாற் போல் வளைந்திருக்கும் கூட்டமும், கூக்குரலும், வைத்தியர்களின் தொகுதியும், மருந்துகளின் விதமும் அதிகரித்தன. அவரவருக்குத் தோற்றியபடிச் சொல்லும் மருந்து

களெல்லாம், ஒன்றின் பின்னென்றாகக் கொடுக்கப்பட்டன. அந்தோ! முடிவில் பத்தாந் தேதி, காலை எட்டுமணிக்கு, மாப் பிள்ளை கிட்டு இவ்வுலகவாழ்க்கையை நீங்கினான்.

இவ்வாறு, அவன், கலியாணமாகுமுன் நிரியாணமாக, மணப்பந்தல் பிணப்பந்தலாக, மணப்பறை பிணப்பறையாக,

“மண அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிண அணி அணிந்து, தம் கொழுநரைத் தழுவி,
உடுத்த ஆடை கோடியாக,
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.”

என்ற முன்னோர் மொழியைப் புதுக்கியதுபோல, அவ் வீடும், அவ்வீட்டிலுள்ளாரும், அவ்வூராரும் பட்ட அவ லக்கோலத்தை விவரித்தல் துயரப்பெருக்கே.

பதினோராவது அதிகாரம்.

ஒரு நாள் மாலையில் நாராயணனும் கோபாலனும் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பிவருகையில், சாவித்திரியைப்பற்றி ஏதோ பேச்சுவர, நாராயணன், கொஞ்சம் திகைத்துப், பிற்பாடு ஒருவாறு துணிந்து, “கோபு! சாவித்திரி படிக்கப்போகிறதாகச் சொன்னாளே? படிக்கிறாளோ?” என்று கேட்டான். அதற்குக் கோபாலன் உடனே சொன்னதாவது: அது சொல்லவில்லையே சமாசாரம்: எல்லாம் கொஞ்சகாலம் தான் ஆச்சுது: அதற்குள் என்னைவிட நன்றாய்த் தமிழ் எழுதுகிறாள். எப்பொழுதும் வாசிக்கிறாள்போலிருக்கிறது; இவ்வளவுக்கும் அத்தம்பியாருக்குத் தெரியாதென்று எண்ணு கிறேன். அவளுக்குச் சாலா என்று ஒரு தோழி யகப்பட் டிருக்கிறாள். கால்வாய் சூப்பிறண்டு, நாகமையர் ஆமுடை

யாள். அந்தப் பெண் வடக்கத்திப் பெண்போலிருக்கிறது: நன்ருய்த் தமிழ்ப் படித்தவளாம். இவர்கள் இரண்டு பேரு மாய் வாசிக்கிருர்கள். இவர்களுக்கு ஏதாவது சந்தேகம் வந்தால், அந்தப் பெண் தன் புருஷனிடத்திற் கேட்டுச் சொல்லு கிருளாம். தவிரவும் நாகமையருடைய அநேக தமிழ்ப் புஸ்தகங்களும் வாசிக்கக் கிடைக்கிறது. சாவித்திரி, தமிழில் எனக்கு மேற்போய்விட்டாள். இனிமேல், சந்தேகம் வந்தால், அவளிடம்தான் கேட்கவேண்டும். வீட்டுக்குப் போனவுடன் கேள்: அவள் எழுதிய ஒரு கடிதம் காண்பிக்கிறேன்," என்ருன். நாராயணன் அடங்காச் சந்தோஷத்துடன், பார்த்தாயா? எனக்கு அப்பொழுதே தெரியும்: கேட்டதில்லையா பாட்டு?

மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண் துஞ்சார்,
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்,—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார்,
கருமமே கண்ணுயினுர். *

நான் அப்பொழுதே நினைத்தேன்: இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்தாலும் அவள் இதே மாதிரிக் கற்றுக் கொள்வாள்" என்ருன்.

இதற்குள் இருவரும் நாராயணன் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். புஸ்தகங்களை மேடையிற் கொண்டுபோய் வைத்தவுடன், கோபாலன், 'நதிக்குப் போவோம் வா,' என்று கூப்பிட, நாராயணன், அவனுடன், "எங்கே? சாவித்திரி கடிதம் காட்டுகிறேனென்று சொன்னுயே?" என்று கேட்டான்.

---

* இதன் பொருள்:—காரியஞ் சாதிக்க விரும்புவோர், சரீரப் பிரயாசம், பசி, நித்திரை, பிறர் தீமை, அருமை அவமதிப்பு முதலியவற்றைக் கவனியாது, தங்கள் காரியத்திலேயே கண்ணுயிருப்பார்கள், என்பது.

அதற்குக் கோபாலன், "இதோ இருக்கு," என்று பெட்டியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து, "அதில் இரண்டொரு இரகசிய சங்கதிகள் எழுதியிருக்கிறது, ஆனால் நீ பார்க்கிறதற்கு என்ன தடை? உன்னைப் பற்றிக்கூட எழுதியிருக்கிறது" என்று சொல்லிக் கையிற் கொடுத்தான். நாராயணன் அதை வாங்கி, "அடே அப்பா! நாலுபக்கம் எழுதியிருக்கே! கையெழுத்து வெகு வடிவாயிருக்கிறது. இலக்கணமாயிருக்கே!" என்று சொல்லிக்கொண்டே, பின்வருமாறு வாசிக்கத் தொடங்கினன்.

உ

அரியூர்,

திங்கட்கிழமை.

என்னுடைய மிகவும் அன்புள்ள அம்பி கோபுவுக்கு ஸாவித்திரி எழுதுகிறது:—

இவ்விடத்தில் அப்பா முதலிய யாவரும் க்ஷேமம்; அவ்விடத்தில் நீயும் சங்குவும் உன் சிநேகிதர்களும் க்ஷேமமாயிருக்கிற விபரத்துக்கு வாரம் தப்பினாலும் கடிதம் தப்பக் கூடாது. இதைக் கண்டிப்பாய் அறிந்து நடந்துகொள்ளவும். (நாணுவும் கோபாலனும் சிரித்தல்) நான் இத்தனை நாள்களாக உனக்குக் கடிதம் எழுதாதற்குக் காரணம் நானும், என் தோழி விசாலாக்ஷியும், 'புரந்தரன் களவு மாலை, என்ற ஒரு புஸ்தகம் வாசித்துக் கொண்டிருந்தோம். அந்தச் சந்தோஷத்தினால் உண்டான சோம்பலினாலும், புஸ்தகம் வாசிப்பதோடுகூடக் கடிதம் எழுதுவதற்கும் இரகசியமான சாவகாசம் கிடையாததினாலும் தான், இதுவரை எழுதவில்லை. நீ 'புரந்தரன் களவு' வாசித்திருக்கிறாயா? இல்லாவிட்டால் உனக்கு வேண்டுமா

ஞல் இந்தப் புஸ்தகத்தை அனுப்பச் சொல்லுகிறேன். அது மிகவும் நல்ல புஸ்தகம். 'நளவெண்பா' உண்டாக்கின புகழேந்திப் புலவர் சிறைச்சாலையில் இருக்கும் பொழுது இதைச் செய்தாராம். வெகு அழகாயிருக்கிறது.

நான் இப்பொழுது எழுதத் தொடங்கின சங்கதி இதில்லை. பத்துப் பதினைந்து நாள்களாக, நம்முடைய அப்பா ஏதோ இரண்டாந்தரம் கலியாணம் செய்துகொள்ளப்போவதாக ஊரில் பிரஸ்தாபம் நடக்கிறதாம். ஆத்தில் ஒன்றும் தெரியாது. உன் அத்தம்பியாரிடத்தில் கேட்டேன்: எரிந்து விழுந்து கோபித்துக் கொண்டார்களே யொழியச், சரியாய்ப் பதில் சொல்லவில்லை. அய்யாசாமி வாத்தியார், பத்து நாளாய் நம்மாத்தில்தான் இருக்கிருர்; காரணம் தெரியவில்லை. நான் அப்பாவிடத்திற் கலியாணத்தைப் பற்றிக் கேட்கவில்லை. என்னமாய்க் கேட்பேன்? இன்னும் பகிரங்கமானவுடன் எழுதுகிறேன்.

இது எப்படியாகுலும், இன்னொரு கலியாணம் நிச்சயமாய் நெருங்கிவிட்டது. உன் அகமுடையாள் திரண்டாளென்று நேற்றுத் தான் உன் இளைய மாமனர் சோபனம் சொல்ல வந்தார். நாங்களெல்லாம் பிட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம். (இதை வாசித்தவுடன் கோபு வெட்கப்பட்டுப் புன் சிரிப்புடன் தலையைக் கவிழ்ந்து கொண்டான். நாராயணன் "ஓகோ! ஏகே! சொல்லாதபடி மறைத்தா இருக்கிருய்? எங்களுக்கெல்லாம் சீனி எங்கே? விட்டேனு பார்," என்று சொல்லிக் கொண்டு, மறுபடியும் வாசிக்கத் தொடங்கினன்.) ஆகையால் சீக்கிரம் ருது சாந்தி நடக்கும். சந்துருவுக்கும இந்த வருஷம் கலியாணம் நடக்கும் என்று நினைக்கி

றேன். எல்லாம் நடக்க நடக்கத் தெரியும். வேறு விசேஷ மில்லே. உடனே பதிலெழுத வேணும்.

இப்படிக்கு உன் அருமை அக்காள்,

ஸாவித்திரி.

செவ்வாய்க் கிழமை:—

இன்னம் நாலு நாழிகையில் உங்க வேட்டாத்துக்கு புறப்பட்டிடுவோம். இந்த காயிதத்தை சாலா ஆம்படையா ளிட்ட கொடுக்கச் சொல்லி உனக்கு அனுப்பச் சொல்லி யிருக்கேன். அவர் தான் நான் முன்னுலே எழுதினதை திருத்தித்தந்தார். அவர் ரொம்ப நல்லவர். அவர் எனக்கு புஸ்தகங்களும் பாட்டுக்களும் தந்து படிக்கச் சொல்வார். ராத்திரி சாப்பாட்டுக்கு அப்புறம் அப்பா பங்களாக்கும் உன் அத்தம்பியார் வாசலிலே போயுடுவாள். அப்போ கூட சாலாவை வந்து என் கூடப் படிக்கச் சொல்லரார். ஒரு தரம் ஏதோ சந்தேகம் வந்தது: அப்பாவும் அத்தம்பியாரும் ஆத்திலில்லே. அவர் நம்மாத்துத் திண்ணேக்கு வந்து அர்த் தம் சொன்னுர். ஆனுல் அவரிட்டப் பேச எனக்கு வெட் கமா யிருக்கு. நான் ஒளிச் சுண்டுட்டேன். அவரால் தான் நான் இவ்வளவாவது படிச்சேன், ஆனுல் நான் புஸ்தகத்தை எடுக்கர போதெல்லாம் உன் தோழன் நாணு அன்னிக்கு ராத்திரி படிப்பைப் பத்திச் சொன்னது நெனவு வரது அவாள் எல்லாரும் சவுக்கியமா யிருக்காளா.

சாவித்திரி''

'வாசித்து முடிந்தவுடன், நாராயணன் முகம் கொஞ்சம் வாடினுற் போலும், அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பது போலும் தோன்றிற்று. சாவித்திரி தன்னேப்பற்றி

இவ்வளவு எழுதியதனால் அவனுக்கு உண்டாகக் கூடும் களிப்பை அவன் முகம் காட்டவில்லை. கொஞ்ச நேரம் தலையைக் கவிழ்ந்து கொண்டு, காற் பெரு விரலால் தரையைத் துளைப்பது போல் நின்று, பிறகு திடீரென்று கோபாலனைப் பார்த்து, "கோபு! நீ இனிமேல் எப்பொழுது ஊருக்குப் போவாய்? சாந்திக் கலியாணத்துக்குத் தான் போவாயோ?" என்று கேட்டான். பிந்திய கேள்வியைச் சொல்லும்பொழுது நாராயணனுக்குத் தன்னை யறியாமல் புன் சிரிப்பு உண்டாயிற்று.

அதற்குக் கோபாலன், சிரித்துக் கொண்டு, "போடா, கேலி பண்ணாதே. அன்றைக்குப் 'பாலிய விவாகம்' என்பதைப் பற்றிச் சுந்தரமையர் செய்த பிரசங்கத்தை கேட்டு விட்டு, வீட்டுக்கு வரும் பொழுது, குறைவாய் இரண்டு வருஷத்திற்கு அப்புறந்தான் சாந்தி செய்கிறதென்று நாம் சபதங் கூறிக் கொள்ள வில்லையா? எப்படியானாலும் சரி; எப். ஏ. பாஸ் பண்ணாலொழியச் சாந்திக் கலியாணம் பண்ணுகிற தில்லை யென்று நிச்சயித்திருக்கிறேன். அதிருக்கட்டும்: நீ எதற்காகக் கேட்டாய்? அநேகமாய் இந்த ஞாயிற்றுக் கிழமை ஊருக்குப் போவேன்" என்று சொன்னான்.

நாராயணன், கொஞ்சம் திகைப்புடன், "ஒன்றுமில்லை: உங்கள் ஊர் பார்த்த எவ்வளவு நாளோ ஆச்சுது: பார்க்க வேணும்போலிருக்கிறது: நானும் கூட வருகிறேன்," என்றான். அதற்குக் கோபு, "சீ! உன்னைக் கூட்டிக்கொண்டு போக மாட்டேன். வண்டியில் இடம் போதாமா?" என்று பரிகாசமாகச் சொல்ல, இருவரும் சிரித்துக்கொண்டு நதிக்குப் போய் விட்டார்கள்.

இதைப் படிக்கும் எமது நண்பரே! நீர் பற்பல தேசங்களிலுமுள்ள அற்புதமான காட்சிகளைக் கண்ணுற் கண்டும், அவைகளைப்பற்றிக் கூறும் உண்மையான அச்சுப் புஸ்தகங்களின் மூலமாக அறிந்துமிருக்கலாம். காலஞ் செல்லச் செல்லப் புதிது புதிதாய்த், தங் கண்களாற் காணுதார் நம்பற்கரிய விஷயங்களும் வஸ்துக்களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. நீராவியின் சக்தியால் இப்பொழுது நாங்காணு ஓடுங் கப்பல்களையும் வண்டிகளையும் பல யந்திரக் கருவிகளையும்பற்றி, நமது முன்னோர் கனவிலும் நினைத்திரார். அதுபோலவே இன்னும்இரண்டொரு நூற்றாண்டுகளுக்குப்பின் சாதாரணமாக வழங்கப்போகிற சில சங்கதிகளை, ஒரு தீர்க்கதரிசி, இப்பொழுதே அறிந்து நம்மிடம் கூறின், நாம் அவரைப் பித்தராகவே கருது வோம். ஆகையால் காலத்தச்சன் இயற்றுங் கற்பனைகள் அளப்பரியவை. ஆயினும், இவ்வுலகில் மானிட ஜெந்மம் தோன்றியகாலந் தொட்டு இதுகாறும் உள்ளனவாயும் உண்டாக்கப்பட்டனவாயுமுள்ள யாவற்றினும், மிக்க ஆச்சரியத்தை, என்றும், யாவர்க்கும் புதுமை புதுமையாக விளைத்துக்கொண்டிருக்கும் ஒரு பொருள் உளதே, அதை நீர் அறிவீரோ? உம்மையும், எம்மையும், யாரையும் தன்னிஷ்டப்படி ஆட்டுவிக்கும் பெருங்கூத்தனுகிய 'மனம்' என்னும் பொருளினும், அதிக வியப்பை விளைக்கக்கூடிய வஸ்துவையும் நீர் தெரிவீரோ? நண்பரே! உம்மனத்தைப்பற்றி நீர் சிறிதும் யோசித்திருப்பின், அல்லது அதின் செய்கைகளைச் சற்றுங் கவனித்திருப்பின், நீர், உடனே திகைப்பின்றி, 'மனத்தினும் ஆச்சரியப்படத்தக்க பொருளில்லை,' என்றே சொல்லுவீர். இவ்வுண்மையை நன்குணர்ந்தன்றே தாயுமானவர்:

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்;
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாம்; ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்;
கட்செவி எடுத்தாட்டலாம்,
வெந்தழலி னிரதம்வைத் தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாம லுலகத் துலாவலாம்;
விண்ணவரை ஏவல்கொளலாம்;
சந்ததமு மிளமையொ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனல்மே லிருக்கலாம்;
தன்னிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது; சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோம யானந்தமே!"

என்று பொறுக்கமுடியாமற் கூறியிருக்கிறார். இதோ, பாரும்! நம் தோழன் நாராயணனை அவன் மனது ஆட்டுவிக்குங் கூத்தைப் பாரும்! அவன் தந்தை சிறைப்படும்படி நேர்ந்தபொழுது, அவனுடைய அரிச்சந்திர மனம், பொய் பேசி அவரை விடுவிக்கக் கூசித் தண்டனைக் குள்ளாக்கியது. நன்று, சத்தியமே ஜயம்! பின் விளைவைச் சிறிதுங் கருதாது யாவரும் எப்பொழுதும் உண்மை யுரைப்பதே நீதி நூல் முறைமை; அதனாற் பிறர்க்குத் தற்காலத்தில் தீங்கு நேர்ந்தாலும், மறை பொருளாய் வந்த நன்மையாகவே கொள்ளத் தக்கது. உண்மை பிறழ்ந்தோர் தீங்குறல் முறையே.

ஆனால் கவனித்துப் பாரும்: தன் பிதாவின் க்ஷேமத்தினும் சத்தியத்தையே பெரிதாகக் கருதிய இவன் மனமானது

சாவித்திரியைக் கண்டவுடன், தனக்குண்டான எண்ணங் களைக் கோபாலன் அறியாத வண்ணம் ஒளித்தலாகிய ஒரு சிறு புரட்டைத், தன்னயத்தைக் கருதிச் செய்து, கொஞ்சந் தேர்ந்து, இப்பொழுது, முழுப் பூசனிக்காயைச் சோற்றிற் குள் மறைக்க முயல்வதுபோல், ஒரு பெரும் பொய்யைச் சொல்லத் துணிந்துவிட்டது. எங்ஙனமெனில்: இப்பொ ழுது தான் அரியூர் பார்க்க வேண்டுமென்று விரும்புவதா யும், அதன் பொருட்டுப் போகவேண்டு மென்றும் தன்னு யிர்த் தோழனாகிய கோபாலனுக்குக் கூறிய விஷயம் மெய்யோ? திடீரென்று அம்மனத்திற்கு, அவ்வளவு அற்பமான ஆசை, காரணமின்றி யுண்டாகுமோ? இது நிற்க; இன்னும் ஒரு கேள்வி கேட்போம்: நாராயண மனது சொன்னதைக் கோபால மனது நம்பிற்றோ? நம்பவில்லை; வேறு காரண முண்டு, பின்னுக்குத் தானாகவே தெரிய வருமென்றிருந்தது. அங்ஙனமாயின், ஏன் தன் தோழனைத் தட்டிக் கேட்கவில்லை? அப்படிக் கேட்டால் தன்னை அரியூருக்குக் கூட்டிக்கொண்டு போகப் பிரியமில்லை யென்று நாராயணன் நினைத்துக் கோப முறுவானென்று கேட்கவில்லை. ஆனால் உயிர்த் தோழமை யெல்லாம் இவ்வளவு தானா? இவ்வித விஷயங்களில் அதிக மாகத் தூண்டித் துளைத்து ஆராயக்கூடாது! அப்படி யப்ப டித்தா னிருக்கும். அன்றியும், ஒருகால் சொந்தம் பாராட் டிக் கேட்டிருந்தாலும், நாராயண மனது உண்மையை வெளி யிடாமல், ஏதாவது தக்க பொய் யுண்டாக்கிச் சொல்லி யிருக்கு மென்பதிற் சந்தேகமில்லை. நண்பரே, பாரும்! எவ் வளவோ சத்தியத்தில் நின்றவர்களுக்கும், ஒவ்வொரு சம யங்களில், தன்னயம், தற்புகழ்ச்சி, அகங்காரம் முதலிய பைசாசங்களைத் திருப்தி செய்யும் பொருட்டுத், தம் நற்புத்

தியைப் பலி கொடுப்பதில் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பழக்கமாகி, எறும்பூரக் கல்லும் தேய்வதுபோல், நற்புத்தி குன்றித் துர்ப்புத்தி மிகுந்துவிடும். பழகப் பழக, முதற்கண் தீநெறியில் ஒழுகுங்காலுண்டாகும் மனப்பதற்றமும், அருவருப்பான உணர்வும் நீங்கி, மனம் தேறிவிடும். முதலில் ஒரு வாழையிலையைத் திருடப் பதறிய மனது, வரவரக் கொலைகளிலும் கன்னக் களவுகளிலும் ஊக்கத்துடன் முன்னிற்கத் துணிந்துவிடும்; தகப்பனைக் காப்பாற்றுவதற்கும் ஒரு சிறு பொய் புகலப் பயந்த உள்ளம், பழகப் பழக, கேவலம் பொய் சொல்வதையே பிழைக்கும் வழியாகக்கொண்டு ஒழுகினும் ஒழுகும்; தன் மனையாளைப் பிறர் இருப்ப முகம்நோக்க அஞ்சிய நெஞ்சம், தீநெறியிற் பயிலப் பயிலப், பிறர் பாரியரைப் பட்டப் பகலிற் பலாத்காரமாகக் கைப் பிடித்திழுக்கத் திடப்பட்டு விடும். ஒரு விஷ்ணு பக்தன் திருப்பதிக்குப் போனான். குன்றை முதலிற் கண்டவுடன் மலைத்துக் கீழிருந்தே இரண்டு நாள் சுவாமியை வணங்கினான். பின்பு ஆசை மிகுதியாற் புறப்பட்டு, அனேக இடங்களில் வழியிலுட்கார்ந்து, உட்கார்ந்து, அரிதில் மலைக்கோவிலை யடைந்தான். இப்பொழுதோ, தினமும் அவன் காலையில் எழுந்து மலைக்கோவிலுக்குச் சென்று பெருமாள் தெரிசனஞ் செய்துகொண்டு, சாப்பாட்டுக்கு மலையடிவாரத்துள்ள ஊருக்குத் திரும்பி வந்துவிடுகிறான். அவனுக்கு மலைவுமில்லை, கால் நோவுமில்லை. இப்பொழுது, தான் இவ்வாறு போய் வருவது, அவனுக்கு ஆச்சரியமா யில்லை; முதல் முதல் தான் மலைத்தது தான் ஆச்சரியமா யிருக்கிறது.

நண்பரே! உம்மனதும், எம்மனதும், நாராயணன் மனதும், கோபாலன் மனதும், மற்றும் எல்லோர் மனங்களும்; வேறு எவ்வாறு பேதமுடையனவா யிருப்பினும், தீயொழுக்

கத்தினும் நல்லொழுக்கத்தினும் பழக்கத்துக்குத் தக்கபடி பலப்பட்டுத் தேறுவதிற் சந்தேகமில்லை; ஆதலின், நாம் வெகு கவனமாகவும் விழிப்பாகவும் இருப்போமாக.

பன்னிரண்டாவது அதிகாரம்.

நாராயணனும் கோபாலனும் ஞாயிற்றுக் கிழமையன்று அரியூருக்குப் போகவேண்டுமென்று நினைத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் சிறிதும் எதிர்பாராத விதமாக, வெள்ளிக் கிழமை யன்று சாயங்காலமே கோபாலனுடைய அத்தம்பி யார் வண்டியைக் கொண்டு அழைக்க வந்தார். பண விஷய மாகத் திருநெல்வேலிக்கு அவர் வந்திருப்பதாக நினைத்துக், கோபாலன், அவரைக் கண்டவுடன், "வாரும், வாரும், அத் தம்பியாரே! இப்பொழுது தானா வரவு? கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டு விட்டாற் போலாச்சுது: நானே ஒரு வாடகை வண்டி பிடித்துக்கொண்டு வரவேண்டுமென் றெண்ணி யிருந்தேன்; நீரே வண்டி கொண்டு வந்தது நல்ல தாச்சுது. என்ன விசேஷம்?" என்று கேட்டான்.

அவர், அதற்குப் பதில், "எல்லாம் சுபம் தான். புறப் படு, புறப்படு, நேரமாச்சுது. நாம் போய் ஸகல ஜோலியும் நடக்கவேணும். நாளைக்கு உனக்கு ருதுசாந்தி முகூர்த்தம் வைத்திருக்கிறது. சம்மந்திமாரெல்லாம் இதற்குள் வந்திருப் பார்கள். திருநெல்வேலிக்கு வந்து ஜவுளியும் சாமான்களும் வாங்கிக் கணக்கப்பிள்ளை வசம் அனுப்பிவிட்டு, உன்னைக் கூட்டிக்கொண்டு போக வந்தேன். ஓய் நாராயணையரே! புறப் படும். நீர் அவசியம் வரவேணும். சங்கு எங்கே?" என்று கேட்டார்.

கோபாலன், "ஏது அவசரத்தைப் பார்த்தால் நாளில்லாமற் கூட முகூர்த்தம் நடந்துவிடும்போல் தோன்றுகிறதே. அவ்வளவு அவசரமென்ன?" என்றான்.

"எல்லாம் உங்கப்பா தான் இப்படி முகூர்த்தம் வைத்தார். அவருக்கு எங்கேயோ வடக்கே போக வேணுமாம்; அதற்குள் இது முடிந்து விட வேணுமாம். இனிமேல் தாமதிக்கக் கூடாது, சீக்கிரம் புறப்படு," என்று சுந்தரமையர் சொன்னார். சங்கு வந்தவுடன் எல்லாரும் புறப்பட்டுப் போனார்கள்.

இவர்கள் போய்ச் சேரும் பொழுது பண்ணை சேஷையர் வீடெல்லாம் கலியாண முழக்கமுங் கூப்பாடுமா யிருந்தது. இவர்களைக் கண்டவுடன், "மாப்பிள்ளை வந்து விட்டார்," என்ற சத்தமும், நமஸ்காரங்களும், க்ஷேம விசாரணைகளும், உபசார வார்த்தைகளும், பரிகாசப் பேச்சுகளும் புறப்பட்டன. ஊண் கழிந்து நாராயணனும் கோபாலனும் படுத்துக் கொள்ளும் பொழுது நடு நிசி யிருக்கலாம்; பின்னும் அவர்கள் வெகு நேரம் வரை பேசிக் கொண்டிருந்தார்கள்:—

கோபாலன்:—நீ என்ன வேணுமோ சொல்லு, கேலி பண்ணு. நான் உண்மையாய்ச் சொல்லுகிறேன்; இவ்வளவு அவசரமாய் முகூர்த்தம் வைத்ததில் எனக்குக் கொஞ்சமும் பிரியமில்லை.

நாராயணன்:—அதென்னவோ, எனக்குத் தெரியாதப்பா: உன் மனத்துக்குத் தான் தெரியும். நான் சொல்வதெல்லாம் இவ்வளவு தான்: சபதம் பஞ்சாய்ப் பறந்து போச்சு.

கோபாலன்:—நான் என்ன செய்யலாம், நீ தான் சொல்லு? உனக்கிப்படி நேரிட்டிருந்தால் நீதானென்ன செய்வாய்?

நாராயணன்:—நானு? அப்பொழுது தெரியும். நம் மனத்துக்கு ஒரு சங்கதி முற்றிலும் பிசகென்றும் கெடுதியைச் செய்யுமென்றுந் தெரிந்திருக்க, நாமதைச் செய்வதில்லையென்று சபதமுஞ் செய்து விட்டுப், பின்னும் அதை நாம் செய்தோமானல், அவ்விழிவைவிட வேறென்ன வேணும்!

கோபாலன்:—எல்லாம் பேசலாம்; உனக்கிப்படி வந்தால் தெரியும்.

நாராயணன்:—ஓகோ! அப்படி எண்ணுதே. என் தகப்பனுர் ஜெயிலுக்குப் போகும் படியாய் வந்தபொழுதுங் கூட, நான் பொய் சொன்னேனு?

(ஓய் நாராயண மனதே! நீர் பொய் சொல்லா மெய்யர் என்பதும், ஓய் கோபால மனதே! இவ்வளவு சீக்கிரம் ருதுசாந்தி முகூர்த்தம் வைத்ததில் உமக்குப் பிரியமே யில்லையென்பதும், எங்களுக்கெல்லாம் நன்ருகத் தெரியும்; நீங்கள் அதிகமாகப் பெருமை பாராட்ட வேண்டாம்.)

கோபாலன்:—நீ இந்த விஷயத்தில் என்ன தான் செய்திருப்பாய் சொல்லேன்: இப்பொழுது ஓடிப்போய் விடலாமா?

நாராயணன்:—இப்பொழுது ஓடிப் போனல் நன்ருய்த் தான் இருக்கும். மாப்பிள்ளைக்குக் கொஞ்சம் பைத்தியம் உண்டென்று நினைப்பார்கள். இங்கே வந்து இவ்வளவும் நடக்க விட்டுத் தான் யோசிக்கிறதோ?

கோபாலன்:—நானப்பொழுது தான் என்ன பண்ணுகிறது? எல்லாமின்று சாயங்காலந்தானே? என் மனத்

துக்குச் சரியென்று தோன்றினதைப் பார்க்கிறதா, அல்லது எங்கப்பாவுடைய மனோபீஷ்டத்தைப் பார்க்கிறதா ?

நாராயணன்:—உன்னை மட்டுஞ் சொல்வானேன்? நமக்குள் எங்கும், எல்லா விஷயத்திலும் இப்படித்தானிருக்கிறது. நம்முடைய முன்னோர்களைப்போலிருந்து விட்டால் ஒரு தொந்தரையுமில்லை. இப்பொழுது இந்த இங்கிலீஷ் வாசிக்கப்போய், அவர்கள் ஏற்படுத்திய அநேக வழக்கங்கள் முற்றிலும் பிசகாக மனத்துக்குத் தோற்ற, அவற்றை விட்டு விட்டுச் சரியானபடி நடப்போ மென்றால், நம்மைப்போற் கற்றுத் தேர்ந்திராத பந்துக்களாயுள்ள பெரியவர்கள் தடையாயிருக்கிறார்கள். நம்மைப் பெற்று வளர்த்து இங்கிலீஷும் படிப்பித்து விட்ட மாதா பிதாக்களுடைய வாக்கியங்களைப் பரிபாலனஞ்செய்து அவர்களைத் திருப்தி செய்கிறதா? அல்லது, நூதனமான படிப்பின் பயனாக நம்முடைய மனத்திற்கு நல்லதாகத் தோன்றியபடி நடக்கிறதா? அப்படி நடந்தால் சுபாவபேதமும் நன்றித் துரோகமுமாய் முடிகிறதுமன்றித், தாய் தந்தையரை விருத்தாப்பிய காலத்தில் மனசஞ்சலப் படுத்தி, அவர்கள் சாபத்துக்குள்ளாகிறோம்; இப்படி நடந்தால் நம்மனச் சாக்ஷிக்கு விரோதமாய் நடப்பதால், நமக்கே நாம் கள்ளப்பட்டுத் தன்மதிப்பின்றிப் போவதுமன்றி, நாம் அரிதில் தேடிய கல்விப் பொருளும் பயனின்றி எட்டிச்சுரைக் காய்க்குச் சமமாகிறது. ஆகக்கூடி இங்கிலீஷ்ப் படிப்பாலுண்டாயிருக்கிற கஷ்டம் கொஞ்சமில்லை. நம்முடைய தேசம் இவ்வளவு நாகரீகமான ஆளுகைக்குள்ளிருந்தும் சீக்கிரத்தில் முன்னுக்கு வந்து விளங்காததற்குக் காரணமே இந்த ஈரடியான நிலைமைதான். ஆனால் எல்லாம் நாளுக்குநாள் அறிவுபரவிச் சீராய் விடுமென்று நம்புகிறேன். அதுவரையும் தர்மசங்கடந்தான்.

கோபாலன்:—எல்லாம் பேசுவது எளிதுதான். பாலிய விவாகத்தின் தீங்குகளைப் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்யச் சொன்னால், நானும் ஒரு கை பார்த்துத் தான் விடுவேன். காரியத்தில் வருகிறபொழுது தான் மாடு படுத்துக்கொள்ளுகிறது.

நாராயணன்:—"சரி யிருக்கட்டும்; நாளையிராத்திரியும் உனக்குத் தூக்கம் விழிக்கவேண்டுமே! சீக்கிரம் தூங்கு," என்று சிரித்துக்கொண்டு சொல்ல, இருவரும் நித்திரை போனார்கள். தூங்கும்பொழுது விடியற்காலமாய் விட்டதாயினும், கோபாலன் தன் மனைவியைப் பற்றி இன்பமான கனவுகள் காணவில்லையென்று நாம் உறுதிமொழி கூறமுடியாது.

பதின்மூன்றாவது அதிகாரம்.

மறுநாள் முகூர்த்தமும் விருந்துகளும் வெகு சிறப்பாக நடந்தன. நாலைந்து நாளுக்குள் முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டிருப்பினும், மாற்றுத் தபால் வைத்து அழைக்கப்பட்டவர் போல், வெகுதூர ஊர்களிலுள்ள வைதீகப் பிராமணர்களுங் கூடப் பண்ணை சேஷையர் வீட்டுக் கலியாணமென்று கேள்வியுற்று வந்திருந்தார்கள். அன்று அவ்வூரிற் சேஷையர் வீடும் அவர் தனவானாயிருக்கும் பெருங் குற்றத்திற்காகப் பகை பாராட்டும் இரண்டொரு பொறாமைக்காரர் வீடுகளுந் தவிர வேறொரு வீட்டிலுஞ் சமையற் புகை கிடையாது.

கோபாலனோ, மங்கள நீராடி, விலையுயர்ந்த சரிகைப் பட்டாடை தரித்து; நெற்றியிற் சந்தனமுங் குங்குமமு மணிந்து; தலையிற் பரிமளம் கமழும் பிச்சி மாலை சூடிக் கொண்டு; அரைப்பட்டின் மேல் இரட்டை வடமாகத் தங்க

அரைஞா ணிலங்கவும், கலவைச் சந்தனம் பூசியமார்பில் நவரத்னங்களிழைத்த பதைக்கம் அமைத்த பொற்பூணூலோடு ஒரு முத்தாரமும் மல்லிகை யாரமும் ஊடிப் பிணங்கி அலங்கவும்; காதில் வைரக் கடுக்கன்களும் கைவிரல்களில் இரத்தினங்கள் பதித்த மோதிரங்களும் மின் வெட்டுவதுபோல் துலங்கவும்; கைகளிலணிந்த தங்கக் காப்பும் கொலுசும் அவன் யதார்த்த இளமையை இன்னும் அதிபாலியமாகத் தோன்றச் செய்யாநிற்க, சாவித்திரி தீட்டிய மையினால் அவன் கண்கள் அவளுடைய ஒப்பற்ற கண்களினும் அதிக அழகாக விளங்கவும்; போஜனத்துக்குப்பின் மென்ற தாம்பூலத்தினால் உதடுகள் சிவந்து, கொஞ்சம் வெட்கத்தினால் தேகமெல்லாம் ஒருவித நூதன அழகை வெளியிட, மன்மதனே அழிந்த அங்கம் திரும்பவும் பெற்று வந்ததுபோல், மாப்பிள்ளைக் கோலத்துடன், ஆடவர் கண்குளிர இருப்பவனைக் கண்ட மடவார் மனங் கலங்கவும்; புருஷ மோகினிபோற் கொலு வீற்றிருந்தான். அவன் மனைவியாகிய கலியாணியோ, வெகு ரூபவதியான பன்னிரண்டு வயதுப்பெண்; சிவந்த மேனியும், மென்மையான தேகமும், அழகான அங்கங்களுமுள்ளவள். அவளைப் பார்த்தால், சோகி, அம்மானை, கழற்சி, பல்லாங்குழி மரப்பாவை முதலிய சாமான்களை வைத்துக்கொண்டு விளையாடித்திரியும் பருவம் நீங்காத சிறுபெண்ணாகத் தோற்றுமே யல்லாது, விவாகத்தின் அருமையையும் பெருமையையும் பொறுப்பையு முணர்ந்து, தன் தலைவனோடிருந்து இல்லறந் தவறாது நடத்தக்கூடிய 'மனைவி'யாகத் தோன்றாள். புருஷனுக்கேற்ற பெண்சாதிதான்! அவள் பூண்டிருந்த நகைகளைப்பற்றி எம்மால் விவரிக்க முடியாது. நீலக்காட்டு பட்டாவை எழுபதினாயிரம் ரூபாயுக்கு அடைமானமாகக்

கொண்ட பண்ணை முத்தையரின் செல்வக்கடைக்குட்டிப் பெண்ணென்று சொன்னால், வேறு கூறவும் வேண்டுமோ?

பொதுவாக ஆபரணங்களைப்பற்றியும், முக்கியமாக ஆடவர் அணிகள் பூண்டுகொள்வதைப்பற்றியும், நாராயணனுக்குச் சில திடமான கொள்கைகளுண்டு. எவ்வித நகையையும் தானொருபொழுதும் அணிந்து கொள்வதில்லையென்று தீர்மானஞ் செய்திருந்தான். இப்பொழுதொரு நகையு மில்லாதிருப்பினும், விவாக காலத்திற் கடுக்கன் போட்டுக்கொள்வதற்காக அவன் காதிலுள்ள துவாரத்திற் சீதையம்மாள் கிராம்பை அடைத்துவைப்பதுண்டு; ஆனால், அவன், ஒரே பிடிவாதமாகக், கிராம்பை எடுத்தெறிந்துவிட்டு, அத்துவாரங்கள் முற்றிலுந் தூர்ந்துபோகும்படிச் செய்துவிட்டான். அவன் நகைகளைப் பழித்திகழ்வது, 'நரி திராக்ஷக்கனியைப் பழித்த கதை,' என்று சில விரோதிகள் கூறுவதுண்டு. ஆனால் விரோதிகள் பேச்சை யார் நம்புவார்கள்? கோபாலனுக்கும், சேர்க்கை வாசனையால் நகை வெறுப்புக் கொஞ்சமுண்டு; அவன் விஷயத்தில் இல்லாமைத் தோஷமாகிய காரணஞ் சொல்ல முடியாதே? கோபாலன், பொதுவாகத் தான் நகைகளணிந்து கொள்வதை வெறுத்தபோதிலும், தன் தகப்பனார் தமக்கையார் முதலியவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு இன்று நகை யணிந்து கொண்டதாக நாராயணனிடம் சொன்னான். ஆனால், நாம் இரகசியமாகக் கோபாலமனத்தினிடங் கேட்டதில், மற்றொரு காரணமும் வெளிப்பட்டது. தான் படித்து அடைந்த ஞானத்தால் நகைகளை வீணான பொய்யாடம்பரமென்று வெறுப்பினும், அவ்வித ஞானமில்லாத தன் மூட மனைவி, நகைகளை விரும்பி, அவைகளாற் சந்தோஷப்படுவாளாதலினால், அவள் மனத்தைக்

கொள்ளை கொள்ளத், தான் தன்னைச் சிங்காரம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்று நினைத்து, ஆபரணங்களைப் பூண்டு கொண்டதாகத் தெரியவந்தது. கலியாணி தன் கணவன்மேற் கொண்ட காதலில், அணிகளுக்குரியது எவ்வளவு, இயற்கையாயுள்ள மேனியழகுக்குரியது எவ்வளவு, அவன் குணத்துக்கும் கல்வித்தேர்ச்சிக்கு முள்ளது எவ்வளவு, அவன் தனத்துக்கும் யௌவனத்துக்கு முள்ளது எவ்வளவு, அவன் தன் நாயகனாய் அமைந்த விதியினால் தனக்கு வேறு போக்கின்மைக் குரியது எவ்வளவு, நாள்தோறும் வளரும் பழக்கத்துக் குரியது எவ்வளவு, மற்றக் காரணங்களுக்குரியது எவ்வளவு, ஆகமொத்தம் காதலே எவ்வளவு, என்று பகுத்துத் தொகுத்து அளவிடக்கூடிய கணிதநூலை எம் ஆசிரியர் எமக்குக் கற்பித்திலர். இது நிற்க:

கோபாலன் வைதீக கிரியைகளில் அமர்ந்திருந்தது, நாராயணனுக்குத் தன்னுடைய எண்ணங்களை நிறைவேற்ற இசைவாயிற்று. அவன் சங்குவுடன் நயமாகப் பேசித் தனக்கிணங்கக் கூடவைத்துக்கொண்டு, முகூர்த்த தாம்பூலத்துக்கு வருபவர்களிற் குறிப்பாகச் சிலரைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்துக்குப் பின், உத்தேசம் இருபத்தைந்து வயதுள்ள ஒரு சுந்தர புருஷர், 'சலவை' செய்த வண்ணான் தீட்டான சரிகை வேஷ்டியும், 'மஸ்லின்' உள்ளங்கியும், உப்பாடை அங்கவஸ்திரமும் தரித்துக் கொண்டு பந்தற்குள் வந்தார். அவரைக்கண்ட மாத்திரத்தில், அடுக்களைக் கிழவிகூட, அவர் இங்கிலீஷ் வாசித்த 'சர்க்கார் உத்தியோகஸ்தர்,' என்று சொல்லக்கூடும். இங்கிலீஷ் வாசியாவிட்டால் வண்ணான் தீட்டைத்தொடுவாரா? முழுக்கால் போட்டு வேஷ்டி கட்டிக்கொள்வாரா? சாந்துப் பொட்டு இட்

டுக்கொள்வாரா? அத்துடன் உத்தியோகமும் இல்லாவிட்டால், திருச்சிராப்பள்ளி ஜோடு ஏது? மேல் மீசையேது? வெள்ளிக் கைக்கடியாரமேது? கைகட்டிய சேவகன் பின் வருவதேது? அவருக்கு விசேஷ மரியாதைகள் செய்து, மற்றவரிலும் அதிகமாகத் தாம்பூலங் கொடுத்தார்கள்.

நாராயணன், தந்திரமாகச், சங்கரனிடத்தில், "இவர் தான் தாசில்தாரோ?" என்று கேட்டான். அதற்குச் சங்கரன் "இல்லை: தாசில்தார், சப்மாஜிஸ்திரேட், போலீஸ் இன்ஸ்பெக்டர், எல்லோரும் இராத்திரி வரப்போகிறார்களாம். இவர் இந்த ஊரில் கால்வாய் சூப்பிரண்டண்டு ஆக வந்திருக்கும் நாகமையர்," என்று சொன்னான்.

நம் சிநேகிதர்களிற் சிலர், மாதம் பதினைந்து ரூபா சம்பளமுள்ள ஒரு சிறு உத்யோகஸ்தனுக்கு, அரியூர் லக்ஷப்பிரபு பண்ணைசேஷையர் வீட்டில் அவ்வளவு மரியாதை செய்வார்களா என்று சந்தேகிக்கலாம். கிராமாந்தர வழக்கங்கள் கொஞ்சமாவது தெரிந்து, உலகத்திற் காரியங்களை முடித்துக் கொள்ளும் வகை சற்றும் அறிந்திருந்தால், அப்படி எண்ண மாட்டார்கள். சர்வ வல்லமையுள்ள சர்வேசுரன் ஒருவருண்டு: அவரே யாவரையும் படைத்தளிப்பவர், என்ற பொதுவான நம்பிக்கை ஒருபாலிருக்கத் தினசரி நடபடிகளில் அவரை முற்றும் மறந்து, அல்லது அவர் பராக்கிரமத்தையும் கருணையையும் இகழ்ந்து, 'சுடலைமாடன்,' 'கறுப்பண்ணன்,' 'காளி', 'மாரி,' முதலிய பைசாசங்களைக் கொண்டாடிப், பலி கொடுத்து, மூடஜனங்கள் வணங்குவதுபோல், குக்கிராமவாசிகளும், "கவர்னர், 'கலெக்டர்," முதலிய அதிகாரிகளை எங்கேயோ இருப்பதாகக் காதால் மட்டுங் கேட்டுள்ள தூரவாசிகளாகவும், தங்களுடன் சிறிதும் சம்பந்தமில்லாதவர்

களாகவும், நினைத்து அசட்டை செய்து, தம்கண் முன்னின்று நிதமும் தம் குடியை வாழ்விக்கவும் தாழ்விக்கவும் வல்ல 'ரிவினியூ இன்ஸ்பெக்டர்', கால்வாய்ச் சூப்பிரண்டண்டு, 'போலீஸ் ஹெட்கான்ஸ்டேபில்,' முதலிய சுற்றுத் தேவதைகளையே குலதெய்வங்களாகக் கொண்டு, விசேஷமான பூஜையும் மரியாதையுஞ் செய்வார்கள். சற்று யோசித்துப் பார்த்தால், அப்படிச் செய்வதே சரியாகத் தோன்றும்.

நாகமையர் வீட்டுக்குச் செல்லும்பொழுது, நாராயணனும் மெல்ல வெளியே நழுவி, அவர் வீட்டை அடையாளம் பார்த்துக்கொண்டு, சற்றுநேரத்திற்குப்பின், அவர் வீட்டுத் திண்ணையிற்போ யுட்கார்ந்தான். அவரும் இயல்பாய் வெளியே வந்து எதிர்த்திண்ணையிலுட்கார்ந்து கொண்டு, நாராயணனை ஊர் பெயர் முதலியவை விசாரிக்க, இருவருக்கும் சம்பாஷணை உண்டாயிற்று.

நாகமையர்:—நீரும் இந்தச் சேஷையர் பையனும் ஒன்றாக வாசிக்கின்றீர்களோ? (நாகமையர் சில சமயங்களிற் கொஞ்சம் உயர்நடையிற் பேசுவது வழக்கம்.)

நாராயணன்:—ஆமாம்; இரண்டு பேரும் ஒரே வகுப்பில்தான் வாசிக்கிறோம்: இந்த வருஷம்தான் 'மெட்ரிக்குலேஷன்' பரீக்ஷைக்குப் போகப்போகிறோம்.

நாகமையர்:—அங்ஙனமோ; நன்று: அந்தப் பையன் தம்பியும் அங்கேதானே வாசிக்கின்றான்?

நாராயணன்:—ஆமாம், சங்கு கீழ் வகுப்பில் வாசிக்கிறான்:

நாகமையர்:—அப்படியா? இன்னொரு தமையனுண்டில்லையா? தமையனோ, தமக்கையோ?

நாராயணன்:—என்ன, கேலி பண்ணுகிறீர்களா? நீங்கள் இந்த ஊரிலிருக்கிறீர்கள், என்னைக் கேட்கிறீர்களே ? தமக்கை தான்:

நாகமையர்:—"நாம் அங்கெல்லாம் அவ்வளவு நெருங்கிப் பழகுகிறதில்லை. பிறர் வழிக்குப் போகிறதில்லை. ஊரெல்லாம் அற்பப்பயல்கள்; சுத்த மூடர்கள்; தெருவழியேபோகிற பசங்களைக்கூட நமக்குத்தெரியாது: தமக்கையா; யாரு? அவர் வீட்டில் நெட்டையாயொரு பெண்ணிருக்கிறாளே, அவள் தானோ?" [நாகமையர் உயரம் ஆறடிக்குக் குறைவில்லை!] ஓகோ ! இன்னொருவர் குள்ளமாயிருக்கிறாரே, அவர்தான் மூத்த பிள்ளையாக்கும்? இல்லையா? மாப்பிள்ளையா? எனக்குச் சேஷையரை மட்டுந் தான் கொஞ்சந்தெரியும். அவர் அடுத்தமாதத்தில் புனர் விவாகஞ் செய்துகொள்ளப் போவதாகக்கூடச் சொல்லிக் கொண்டார்கள். அதாரங்கே? சாலா !" அவர் அப்படிக் கூப்பிட்டவுடன், வெகு ராங்கியாய்த், தளுக்குப் பிலுக்குக் குலுக்குடனே, வேசிகளையுங்கூட விற்றுவிடவல்ல ஒரு பெண், "கூப்பிட்டீர்களா ?" என்று கேட்டுக் கொண்டு வெளியே வந்தாள். "ஆமாம், எங்கே அந்த மடல் புஸ்தகத்தை யெடு," என்று அவர் சொல்ல, அவர் மனைவி, ஒரு சிறு புஸ்தகத்தைக் கொண்டு கொடுத்து, நாராயணனையும் ஒரு தரம் தன் கண் வலையால் வீசிவிட்டு, உள்ளே போய்விட்டாள். அவர், பின்பு, புஸ்தகத்தை அங்கும் இங்கும் திருப்பிப் படிப்பதுபோல் நடித்துக்கொண்டு, நாராயணனுடன், முக்கியமாகக் கோபாலன் வீட்டைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார். நாராயணன், மெல்ல, "எங்கே, அந்தப் புஸ்தகத்தைக் கொடுங்கள், பார்ப்போம்," என்று கேட்டு, அதை வாங்கிப் பார்த்தான். அது 'வருணகுலாதித்தன் மடல்' என்ற ஒரு புஸ்தகம்.

நாராயணன் அப்புஸ்தகத்தை அதுவரையும் பார்த்ததே யில்லை. அங்குமிங்கும் அதைத் திருப்பிப் பார்த்ததில், ஸ்திரீ வருணனை அதிகமாயிருப்பதையும், அநேக பாகங்கள் நீலக் கோடிட்டு முக்கியமாகக் குறிக்கப்பட்டிருப்பதையும் அவன் கண்டான். அன்றியும் முதற் பக்கத்தில், பின்வரும் பாட்டுக் கையாலெழுதப்பட்டிருந்தது.

பல்லவி.

தாமரைத்தாயே தயைபுரிவாயே

அநுபல்லவி.

காமனைவென்றிட வேமனமொன்றிட (தாமரை)

சரணம்.

துறவேனுன் காமம், மறவேனுன் நாமம்,
சோர்கிறேன் பாவி, துடிக்குதென் ஆவி. (தாமரை)

இப்பாட்டின்கீழ், ஒரு மூலையில், மிகவுஞ் சிறிய எழுத்துக்களில், ‘தன்னிகரில்லாச் சா—ரிக்கு,’ என்றெழுதியிருந்தது. இதை அநேகர் கவனித்திருக்கக்கூட மாட்டார்கள். நாராயணனுக்கு இதை வாசித்தவுடன் நெஞ்சு திடுக்கிட்டது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலிருந்தது. ஆனால், அவன் ஒன்றும் வெளியிடாமல், வேறெதாவது எழுதியிருக்கிறதாவென்று பார்க்கும் பொருட்டுப், பேசிக்கொண்டே திருப்பிப் திருப்பிப் பார்த்துவிட்டு, கடைசியில், “எனக்கொன்றும் அர்த்தமாகவில்லை. நேரமாச்சுது; கோபு தேடுவான்,” என்று சொல்லிப் புஸ்தகத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பிவிட்டான்.

அவன் சேஷையர் வீட்டுக்கு வந்தவுடன், ரங்கனைக் கண்டு, “ரங்கு, ஊரெல்லாம் சுற்றியாய்விட்டது; பொழுதும்

போகவில்லை; பேசிக்கொண் டிருப்போமென்றாலும் ஒருவரை யும் தெரியாது. உனக்கும் கோபுவுக்குமோ மூச்சுவிட நேர மில்லாமல் வேலையிருக்கிறது; நானோ புஸ்தகமொன்றுங் கொண்டுவரவில்லை. உங்கக்காள் வாசிக்கும் புஸ்தகங்களிலாவது இரண்டு மூன்று எடுத்துக்கொண்டு வா; பார்த்துக் கொண்டிருக் கிறேன்'' என்று சொன்னான். சங்கு உடனே சாவித்திரியிடம் கேட்டுக்கொண்டு, அரங்கிற்குள் சாவித்திரி பெட்டியிலிருந்த இரண்டு புஸ்தகங்களை எடுத்துவந்து கொடுக்க, நாராயணன், அவற்றை வாங்கிக்கொண்டு மேடையில் தனியாயுள்ள அறைக்குப் போய், அவைகளைப் பரிசோதிக்கத் தொடங் கினான். அப்புஸ்தகங்களி லொன்று 'புரந்தரன் களவுமாலை.' அதன் முதற் பக்கத்தில் 'நாகமையர்' என்று பெயரெழுதி யிருந்ததுமன்றி, பின்வரும் செய்யுளும் வரைந்திருந்தது:—

புரந்தரன் களவுமாலை புகன்றதோர் புலவன் போல்வான்,
நிரந்தரம் நினைக்கின்றானல் நின்னையே கனவினூடும்;
சுரந்தரச் சுடுகின்றானல் மாரனும்; சுரும்பார் கோதாய்!
வரந்தரல் வேண்டும்; தந்தால், சுகந்தர வல்லன் தானே.

மற்றொரு பக்கத்தில்

'இசையாப் புருஷன் இருந்தெ னிறந்தென் ?
இசையும் புருஷன் எவனாயிலுமென்?'

என்றெழுதி யிருந்தது. மற்றப் புஸ்தகம், அருணாசலக் கவிராயர் இயற்றிய 'இராம நாடகம்.' அப் புஸ்தகத்தின் கடைசிப் பக்கத்தில் பின்வரும் பதமெழுதி யிருந்தது:—

சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி.

ஏதென்மீதில் வர்மமோ ஈதுனக்கு தர்மமோ

அநுபல்லவி.

காதோடும் கொஞ்சும் கண்ணால் கருணைபொழிவாய் பெண்ணே.
நீதமோ? நீர்மையோ? நின்னைப் பணிந்தேன் பாராய்! (எதென்)

சரணம்.

தென்றல் சினந்து சீற, திகைத்தென் மனமுமீற,
வென்றிக் கணைகள்தூர, வேளென்னை விலைகூற,
நன்றியோ? நங்கையோ! நானுன் சரணமன்றோ? (எதென்)

இவற்றை யெல்லாம் பார்த்தவுடன் நாராயணனுக்கிருந்த அற்பச் சந்தேகமும் நீங்கிவிட்டது. சாவித்திரி கடிதத்தை வாசித்தபொழுது பிறந்த ஐயம் உறுதி யடைந்தது. நாகமையர் தம் மனைவியைக்கொண்டு சாவித்திரிக்குப் படிப்பிலிருந்த ஆசையை நிறைவேற்றியதும், அவளுக்குத் தம் புஸ்தகங்களை யெல்லாங் கொடுப்பதும், கெட்ட உள்ளெண்ணத்தைக் கொண்டே என்பதிற் சந்தேகமில்லை. தன் மனங்கொண்டு பிறர் மனம் அளத்தல் மனிதனுக்கு இயல்பாகையால், சாவித்திரியைக் கண்டவுடன் தனக்குண்டான உணர்ச்சியை மறவாத நாராயணன், அவளைக் கண்ட ஆடவர் யாவரும் காதலுறுவாரென்றே நினைத்தான். ஆனால், சாவித்திரி சிறிதும் பேதகமான நினைவுகளை யுடையவளல்லள் என்றும், நாகமையருடைய தீய எண்ணங்களை அவள் கனவிலும் சந்தேகித்துணர்ந்திருப்பின், அவர் புஸ்தகங்களை அவர் முகத்திலெறிந்துவிட்டு, அவர் பத்தினியாள் சிநேகத்தைத் துறப்பதன்றி, தன் தகப்பனாரிடம் தெரிவித்து, நாகமையனைத் தக்க தண்டனைக் குட்படுத்தி யிருப்பாளென்றும், அவன் உறுதியாக நம்பினான். அவனுக்கு இன்னும் ஒரு சந்தேகம் பிறந்தது: நாகமையருடைய எண்ணங்கள் அவர் மனைவிக்குத் தெரியாமலிருக்குமா? தெரிந்திருந்தால் அவளிணங்கு

வாளா? ஒரு வேளை அவள் குணங்கள் எவ்விதமோ? பெண்களையே நம்பக்கூடாது; அதிலும் வடதேசத்துப் பெண்களென்றுற் சொல்லவேண்டாம். 'சாலா'வைப் பார்த்தால் யாராவது 'குலஸ்திரீ' யென்று சொல்லுவார்களா? அவர்களையோ அரியூரில் ஒருவருக்குந் தெரியாது: ஒருவேளை 'சாலா' என்பவள் நாகமையரின் வைப்பாட்டியாகவே இருக்கலாம்; அப்படியாயின், அவளும் அவர் எண்ணங்களுக்கு இணங்கிலும் இணங்கக்கூடும். இவ்வாறு நாராயணனுக்குப் பலவிதச் சந்தேகங்கள் பிறந்தன.

இதைப்பற்றி, முதலிற் கோபாலனோடு யோசிக்கலாமென்று நினைத்தான். ஆனல், அப்படிச் செய்யின், தன் தமக்கைமேலுள்ள வாஞ்சையினல் அவனுக்கு அடங்காக் கோபமுண்டாகி, அவன் நாகமையர் மேல் கொதித்தெழுவான்; சாவித்திரி படிக்கும் இரகசிய சங்கதி இவ்விதமாக வெளிப்பட்டுவிட, இப்பொழுதே சாவித்திரியைச் சில சமயங்களிற் கொடுமையாக நடத்தும் அவள் புருஷர், அவளை அதிகக் குரூரமாக நடத்துவதுமன்றி, அவளைக் குற்றவாளியாகவே கொள்வார்; சேஷையர் செவிக் கெட்டிவிட்டால், பெருங் கலகம் விளைந்துவிடும்; இவ்வளவும், அனுவசியமாக, ஒரு சங்கதியும் நேரிட்டிராத பொழுதே உண்டாவது மன்றி, விதிவசத்தாற் கைதவறி நடந்துவிட்டபோதிலும் எவ்வகையாலும் மறைக்கப்படவேண்டிய விஷயம், ஒன்று மில்லாதிருக்கும் பொழுதே வீண் பகிரங்க மடைந்து, யாவர்க்கும் அவமானத்தையே விளைத்துவிடும். சாவித்திரி இடத்தில் தான் நேரிற் சொல்வது சாத்தியமன்று. முடிவில், அவனுக்குப் பின்வருமாறு தோற்றிற்று; கோபாலனுக்கு ருதுசாந்தியாய் விட்டால், கூடிய சீக்கிரத்தில் அவனையும் அவன் மனைவியை

யும் சிந்துபூந்துறையிற் கொண்டு வைப்பார்கள். அப்பொழுது, சாவித்திரி, முதலிற் சில மாதங்களுக்காவது துணைவந்திருப்பாள்; அன்றியும், சேஷையர் புனர்விவாகஞ் செய்துகொண்டால், சாவித்திரி கோபாலனுடன் சிந்துபூந்துறைக்கு வந்து விடுவாள்; அல்லது, தன் புருஷனுடன், அவர் ஊராகிய கருவனூருக்குப் போய்விடுவாள்; எப்படியும், கூடிய சீக்கிரத்தில், சாவித்திரி, நாகமையர் இருக்கும் அரியூரைவிட்டுப் போய்விடுவாள். ஆகையால் இப்பொழுது தன் சந்தேகங்களை உள்ளடக்கிக்கொண்டு, சும்மாவிருப்பதே உத்தமமென்று நாராயணன் தீர்மானஞ் செய்தான்.

பதினான்காவது அதிகாரம்.

திங்கட்கிழமையன்று காலையிற் புறப்பட்டுக் கோபாலன், சங்கு, நாராயணன், இவர்கள் மூவரும் சிந்துபூந்துறைக்கு வந்துவிட்டார்கள். சம்பந்திமார்கள் கோபாலன் மனைவியைக் கூட்டிக்கொண்டு ஊருக்குப் போய்விட்டார்கள். பள்ளிக்கூடத்தினிமித்தம் கோபாலன் அவர்களுடன் தன் வேட்டகத்துக்குப் போகவில்லை. தனக்கு நாகமையர் சொன்னது மெய்யென்றும், அடுத்த மாதத்திற் பண்ணை சேஷையர், வடக்கே, தாம் மட்டும்போய் இரண்டாந்தாரம் கலியாணஞ் செய்துகொள்ளப் போவதாகவும் கோபாலன் மூலமாக நாராயணன் அறிந்தான். சங்குவுக்கு இதனால் அடங்காக் கோபமும் அகங்காரமும் உண்டாயிருந்தது. பதினாறு வயதுச் சிறுவனாயிருப்பினும், தனக்கின்னும் விவாகமாகாததைப்பற்றி, அதிக மனக்குறைவும் கோபமும் அவனுக்குண்டு. யாவரிடத்திலும் சுடு சுடுடென்றிருந்துகொண்டு, இஞ்சி தின்ற குரங்குபோல் முகத்தை வைத்துக்கொண்டிருக்

தான். இதுவரையும் ஒருவாறு பொறுத்துக்கொண்டிருந்தான்; இப்பொழுது தன் தமையனுக்குச் சாந்தி முகூர்த்தம் முடிந்ததும், தன் மணத்தைப்பற்றி நினையாமல், தன் தகப்பனார் புனர்விவாகஞ் செய்துகொள்ளப்போவதை அவனாற் சகிக்க முடியவில்லை. காசிக்குப் போய்விடுவதாகவும், அல்லது வேறு எங்கேயாவது கசத்தி லிறங்கித் தற்கொலை செய்துகொள்வதாகவுங் கூடப் பேசிக்கொண்டான்.

இவர் மூவரும் சிந்துபூந்துறை வந்து சேரும்பொழுது, நாராயணனுடைய மாமன் ஐயாவையர் அங்கு வந்திருந்தார். அவர் வந்த விஷயம் நாராயணன் விவாகத்தைக் குறித்தே. அவர் தம் தமக்கையிடத்திற் சொன்னதாவது: "பத்மிக்குப் பத்து வயதாய்விட்டது; இந்த வருஷம் தப்பாமற் கலியாணம் நடக்கவேணும். நாணுவுக்குக் கொடுப்பதில்தான் எனக்கு விருப்பமிருக்கிறது; என் ஆம்படையாளுக்கு அப்படிச் செய்வதில் திருப்தியில்லையென்பது மெய்தான்: ஆனால் அவளுங்கூடக், கிட்டு செத்துப்போகவிட்டு, அவ்வளவு முரண்டவில்லை; அரை மனதோடிருக்கிறாள்; கொஞ்ச காலஞ் சென்று, நாணுவும் உத்தியோகஞ் செய்யத் தொடங்கிவிட்டால், எல்லாம் திருப்தியாய் விடுவாள். பத்மிக்கும் நாணுவுக்கு வாழ்க்கைப்படுவதில்தான் முழுமனமென்று தோன்றுகிறது. இந்த நாள்களில், பிள்ளை மனத்தையும் பெண் மனத்தையும் தான் முக்கியமாய்ப் பார்க்கிறார்கள்; அவர்கள் தானே சந்தோஷமாய் நெடுநாள் வாழ்ந்திருக்கவேணும். முதலில், என்னையும் என் சம்சார பாக்கியத்தையும் போலிராமல், அவர்களிருவரும் மனமிசைந்திருந்தால் போதும். அன்றியும், இன்னொரு சங்கதி யிருக்கிறது: அக்காள்! உன்னிடத்தில் மறைப்பென்ன? எனக்குக் கடன் கொஞ்சம் அதிகமாய்விட்

டது. போன வருஷம், கலியாணம் கல்லெடுப்பாய் முடிந்த விஷயத்தில், ஐந்நூறு ரூபாவரை வீணாய்ப் போய்விட்டது. இந்த மட்டோடாவது நின்றால்தான், எப்படியாவது மரியாதையாய்ப் பிழைக்கலாம். வேறு யாரோடு சம்பந்தம் பண்ணினாலும், கலியாணத்துக்கு டம்பமாய்ச் செலவழிக்க வேணும். நமக்குள்ளென்றால் ஒன்றுங் கட்டாயமில்லை. வருகிற மார்கழி மாதம் அத்தம்பியார் ஆப்தீகம் கழிந்துவிடுகிறது. அவரிருந்து பார்க்கக் கொடுத்து வைக்காமற் போய்விட்டது; என்ன பண்ணலாம்? பிராப்தம்போல் நடக்கிறது. ஜாதகமும் மனப்பொருத்தம்போல் பொருந்தியிருக்கிறது. மனப்பொருத்தம் தான் முக்கியம்; முன்பு ஜாதகப் பொருந்தம் பார்த்து என்னமாய் முடிந்தது? எப்படியாவது தை மாதம் பதினேழாம் தேதி முகூர்த்தத்தில், கலியாணத்தை முடிக்கவேண்டும்" என்றார்.

அதற்குச் சீதையம்மாள், "அம்பி! எல்லாம் உன் பாக்கியந்தான்: இன்று நாங்கள் சாப்பிடுவதும் உன் அன்னம்; நாங்கள் உன் அடைக்கலமாய்த்தான் விடப் பட்டிருக்கிறோம். உனக்கில்லாத துக்கம் எனக்கென்ன வந்து விட்டது? பெற்றால்தான் பிள்ளையா? உனக்குப் போகத்தானே எனக்கு? உன்னால் தான் இவ்வளவு தூரம் முன்னுக்கு வந்தான்: இன்னும் குறையும் வரவேணும். உன்னிஷ்டம் போல் செய்," என்று சொன்னாள். நாராயணனும் உள் சந்தோஷத்துடன், "என்னிடத்திற் கேட்பானேன்? உங்களிஷ்டம் போல் செய்யலாமே," என்று சொல்லிவிட்டு வெட்கத்துடன் தலையை குனிந்து கொண்டிருந்தான். அப்பொழுது, கூட இருந்த கோபாலன், "அம்மா [சீதையம்மாளை அவன் அப்படிக் கூப்பிடுவது வழக்கம்] இந்

தப் பயல் பாசாங்கு பண்ணுகிறான்; இப்பொழுது பத்மாவதியை வேறு யாருக்காவது கொடுக்கவேண்டுமென்றுசொன்னால் இவனுக்குக் கோபம் வந்துவிடும். அவளுக்குக் கலியாணத்துக்குப் பின்பு கொடுக்கப் புஸ்தகங்கள் கூட வாங்கி வைத்திருக்கிறான். அதோ, பாருங்கள்! சிரிப்பை அடக்க முடியவில்லை," என்று சொல்லிப் பரிகாசம் பண்ணினான். சங்குவோ, ஏழை நாராயணனுக்குக்கூட விவாகமாவதைக் கேட்டவுடன், அடங்காத் துயரங்கொண்டு, துக்கத்தைத் தானாகவே அழுது ஆற்றிக் கொள்ளும்படி மேடைக்குப் போய்விட்டான். மறுநாள் ஐயாவையர் திருநெல்வேலியில் கொஞ்சம் சாமான்கள் வாங்கிக்கொண்டு நாராயணனையும் சீதையம்மாளையும் அடுத்த மார்கழி மாதம் பிறப்பதிலேயே ரஜா எடுத்துக் கொண்டு புறப்பட்டு வரும்படிச் சொல்லிவிட்டு, கோபாலன் முதலிய நாராயணன் சிநேகிதர்களையும் அழைத்துவிட்டு, ஊருக்குப் போய்க் கடிதம் போடுவதாகச் சொல்லிப் போய்விட்டார்.

பதினைந்தாவது அதிகாரம்.

பண்ணை சேஷையர், செலவுக்குப் போதுமான பணத்தை எடுத்துக்கொண்டு, கழுகுமலைச் சந்தையில் மாடுகள் பிடிப்பது போல், தஞ்சாவூர் ஜில்லாவில் ஏராளமாகப் பெண்கள் பிடிக்கலாமென்று தமக்குத் துப்புச் சொன்ன காசிவாசி ஐயாசாமி வாத்தியாரை மட்டும் கூடக் கூட்டிக் கொண்டு, தம் கலியாணத்தின் பொருட்டு வடக்கே தஞ்சாவூர் ஜில்லாவில் வஞ்சனூருக்குப் புறப்பட்டுப் போனார். ஐயாசாமி வாத்தியார் திட்டஞ்செய்திருந்த பெண்ணுக்குப் பதினொரு வயதா

யிருந்தது. அவர் முதலில் ஒப்பந்தஞ் செய்யும்பொழுது, மாப்பிள்ளைக்கு முப்பது வயதுதா னிருக்குமென்றும், முதல் தாரத்துக்குக் குழந்தைகளில்லை யென்றும், நாலு லக்ஷத்திற் குச் சொத்து இருப்பதாகவும், நல்ல ரூபவானென்றும், சொத்து முழுமையுமே பின்னுக்குப் பெண்ணைச் சேர்வதா யினும், தற்காலத்திற் கலியாணச் செலவுகளுக்கு ஐநூறு ரூபாவும், பெண்ணுக்கு நகை வகைக்கு ஆயிரம் ரூபாவும், பெண்ணைப் பெற்றவர்களுக்கு ஆயிர ரூபாவுங் கொடுத்து, கன்னிகாதானமாகச் செய்து கொள்ளுகிறதென்றும் முடித் திருந்தார். ஒரு முகூர்த்தமுங் குறிக்கப்பட்டிருந்தது. அம் முகூர்த்த தினத்திற்கு இரண்டு நாள்களுக்கு முன், சேஷைய ராகிய மாப்பிள்ளையும், 'தரக' ராகிய வாத்தியாரும் போய்ச் சேர்ந்தார்கள். சேஷையருக்கு அப்பொழுது ஐம்பதா வது வயது சென்று கொண்டிருந்தது; அவர் தலையெல்லாம் நரைத்திருந்தது. சாவித்திரியையுங் கோபாலனையும் பார்த் தவர்கள் அவர் வாலிபத்திற் சுந்தர புருஷனா யிருந்திருக்க வேண்டு மென்று நினைக்கலாம். ஆனால் அவரை இப்பொழுது பார்த்தவர்கள் அவருடைய பருத்த தொந்தியையும், அப் பங்கள் போல் ஊதிப் புடைத்த கன்னங்களையும், தெங்காய்க் குக் குடுமிவைத்ததுபோல் உச்சியில் மட்டுமிருக்கும் ஐந்தாறு வெள்ளி மயிர்களையும், இருந்த கழுத்தையும் பார்த்தால், கலியாணத்துக் கிசைந்த மாப்பிள்ளை யென்று கனவிலும் நினையார்கள். இதை நன்குணர்ந்த வாத்தியார், சேஷையரை முன்னதாகவே வபனஞ் செய்வித்து, நல்ல பன்னிரண்டாமுழ வெள்ளை வஸ்திரம் பஞ்சகச்சம் வைத்துத் தரித்துக் கொள் ளச் செய்து, மோதிரங்கள் கடுக்கன் அரைஞாண் முதலிய ஆபரணங்களும் அணியச் செய்து, போகிற மார்க்கத்திற்

திருச்சிராப்பள்ளியிலேயே சிவப்புப் 'பிளானல்' துணியில் ஒரு உடுப்பும் தைத்துப்போட்டு, அழைத்துக்கொண்டு போனார். தம்மை 'ஜில்லாக்கோர்ட்டில்' அசேஷராய்ப் போட்ட காலத்தில், உடுப்பு தலைப்பாகை முதலியவற்றைத் தரித்துக் கொள்ள மனமின்றி, முப்பது ரூபா செலவழித்து டாக்டரிடமிருந்து, தமக்குக் குன்மரோகமென்று சர்ட்டிபிகேட் வாங்கியனுப்பி, அவ்வேலையினின்றும் தம்மை நீக்கிக்கொண்ட சேஷையர், இப்பொழுது வாத்தியார் சொல்வதொன்றுக்குஞ் சிறிதும் தடை சொல்லாமல், "பேஷ்! இப்பொழுது தான் மாப்பிள்ளை மாதிரி யிருக்கு" என்று தாம் உடுப்புப் போட்டுக்கொண்டவுடன் வாத்தியார் சொன்ன வாசகத்தைக் காது குளிரக் கேட்டு தாமும் நம்பிக், கடைக்காரனிடமிருந்து ஒரு கண்ணாடியை வாங்கி அதில் தம் சொரூபத்தைத் திருப்தியுடன் கண்குளிரப் பார்த்துக் களித்துக்கொண்டு, வஞ்சனூருக்குப் போய்ச் சேர்ந்தார். அந்தோ! காமத்தின் கூத்துக் கொஞ்சமோ!

வஞ்சனூர் ஒரு சிறு குக்கிராமம். அதில் நவக்கிரக தேவதைகளின் ஸ்தானங்களைப்போல் மொத்தம் ஒன்பது பிராமணர் கிரகங்களே யிருந்தன. அவ்வூரில் சேஷையர் வேட்கப்புகும் வீடுதான் யாவற்றினுஞ் சிறிது; பலத்த சம்சாரிகளான மறவர்வீட்டுக் கோழிக் கூடுபோலிருந்தது; தென்னங் கிடுகுகளால் கூரைவேயப்பட்டிருந்தது. இவர்கள் போகும்பொழுது அவ்வீட்டில் பெண்கள்மட்டு மிருந்தார்கள். வாசலில் ஒரு சிறு பந்தர்போட்டிருந்தது. தம் மனைவியாகப்போகும் பெண்ணைப் பார்த்தவுடன், சேஷையருக்கு முப்பத்திரண்டு பற்களும் வெளியே தோன்றிவிட்டன; சந்தோஷம் அடக்க முடியவில்லை. பெண் வெகு அழகுள்ளவளாயும், நல்ல 'பெகு'

தேசத்து மட்டக் குதிரைபோல் கொழுத்து வளர்ந்தவளாயு மிருந்தாள்.

வாத்தியாரைக் கண்டவுடன், அப்பெண்ணின் தாயார் வஞ்சா என்பவள்வந்து, "வாரும்,வாத்தியாரே!இப்பொழுது தானா வரவு? ஊரில் எல்லாரும் க்ஷேமம்தானே? இவர்கள் யாரு? மாப்பிள்ளை பின்னால் வருகிறாரா?" என்று கேட்டாள். வாத்தியார், "இப்போதான் வருகிறோம். க்ஷேமம் தான். இதோ இவர்கள்தான் மாப்பிள்ளை," என்றார். வாத்தியார் கடைசியில் சொன்ன வார்த்தை காதில் பட்டவுடன், எல்லாரும் ஓடி வந்து பார்த்தார்கள். கொஞ்ச நேரம் திகைத் தாற்போல் நின்றுவிட்டு, பிற்பாடு எல்லாரும் கல்லென்று சிரித் தார்கள். சேஷையருக்குண்டான வெட்கத்தைப்பற்றி நாம் விவரிக்கவேண்டுவதில்லை. கொஞ்சநேரஞ் சிரித்தானபின், மறு படியும் வஞ்சா, "வாத்தியாரே! கேலிபண்ணுகிறதேயும்: அதோ பாரும், என் பெண் அழத்தொடங்குகிறாள். பின்னால் வரு கிறாரசொல்லும்; இவர் சம்பந்திப் பிராமணர்போ லிருக்கி றது; மாப்பிள்ளைக்குத் தகப்பனாரில்லையென்று நீர் சொன் னது பொய்யோ?" என்று கேட்டாள். அவர் மறுபடியும் சேஷையரையே காண்பித்தார். இதற்குள் வஞ்சாவின் புரு ஷர், சேஷையருக்குப் பத்து வயதுக்கு இளையவராயுள்ளவர், வந்து விட்டார். அவர் அவ்வூரில் யாவரினும் பொல்லாத வம்பர். கடைசியில், வாத்தியார் உண்மை சொல்லுகிறா ரென்று அறிந்து, எல்லாரும் அவரைத் திட்டத் தொடங்கி னார்கள். சிலர், 'கிழட்டுப் பிணத்துக்குக் கலியாணமென்ன?' என்றும்; சிலர், 'அப்பக்கதுப்பனுக்கு ஆம்படையாளாம்?' என்றும், சிலர், 'தொந்தி வயத்தானுக்குச் சொகுசா பெண் டாட்டி' என்றும், சிலர், 'மாப்பிள்ளை சொக்கா யிருப்பார்,

ஆலி பூதத்திற்குப் போடலாம்' என்றும், சிலர், 'மாப்பிள்ளை குடுமியைத் தட்டி முடியச்சொல்,' என்றும், இன்னுஞ் சிலர், "மாப்பிள்ளை வெள்ளி மயிரினால் பெண்ணுக்கு மிஞ்சி செய்யலாம்," என்றும், கேலிபண்ணத் தொடங்கினார்கள். பெண்ணோ, ஒரு மூலையிற் படுத்து விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். சேஷையர், மிகவும் வெட்கம் அடைந்து, உடலெல்லாம் மானத்தாற் குன்றிப்போய்க், கண்ணீர் ததும்பா நிற்கத் தலைகவிழ்ந்துகொண்டு, கன்னமுங் கையுமாய்க், குரங்கு சாகக் கொடுத்த ஆண்டிபோல் உட்கார்ந்திருந்தார். கொஞ்ச நேரத்திற்குப்பின், ஐயாசாமி வாத்தியாரும் அப்பெண்ணின் தகப்பனாரும் தனிமையாய் வீட்டு நடைக்குட் போயிருந்து பேசத் தொடங்கினார்கள். அவர்கள் வெகு நேரம்வரை அப்படிப் பேசிக்கொண்டிருக்க, சேஷையர், வீட்டு வெளித்திண்ணையிலேயே பெருமூச்செறிந்துகொண்டு உட்கார்ந்திருந்தார்.

முடிவில் வாத்தியார் வெளியே வந்து, "பண்ணையாரவர்களே! உள்ளே வாருங்கள்," என்று கூப்பிட, சேஷையர், கோபமாய், "உள்ளேயும் வரவேண்டாம், வெளியேயும் வரவேண்டாம். முதலில் 'அட்வான்ஸ்' கொடுத்த ஐநூறு ரூபா போனாலும் போகட்டும். ஊருக்குப் போவோம் வாரும், இவ்வளவு போதும்," என்று சொன்னார். மறுபடியும் வாத்தியார் வருந்தி உள்ளே அழைத்துக் கொண்டுபோய், இரகசியமாய், "நடந்ததை எல்லாம் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறீர்கள்; என் பேரில் என்ன குற்றம்? இது நான் முன்னமே எதிர்பார்த்ததுதான்; இப்பொழுதென்ன முழுகிப்போய்விட்டது? எல்லாம் இஷ்டம்போல் முடித்துவிட்டேன். இன்னும் ரொக்கம் ஆயிர ரூபா கூடக் கேட்கிறார்கள்; இவ்வளவுதான். பெண்ணை நீங்களே பார்த்தீர்களே, நான் சொன்னது

பொய்யா? ரம்பை திலோத்தமை கூடத் தோற்றுப் போவார்கள்; எடைக்கெடை சொர்ணங் கொடுத்தாலும் தகும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார்.

இவ்விஷயத்திற் பாண்டித்தியம் பெற்ற வாத்தியாரின் சாதுர்யம் வியக்கத்தக்கதே. பெண்ணின் நினைவு மறுபடியும் தம் மனதின்கண் உண்டாகவே, சேஷையர், தாம் சற்று நேரத்திற்கு முன்னடைந்திருந்த கிலேசத்தையெல்லாம் முற்று மறந்து; சீதாப்பிராட்டியின் அழகைக்கேட்ட இராவணன், கரன் முதலியோர் மடிந்ததாலுண்டான விசனத்தையும், தன் தங்கை மூக்கிழந்ததனாலுண்டான அவமானத்தையும், தசரத நந்தனர்களின் பராக்கிரமத்தையும் தனக்குண்டான சாபத்தையும் மறந்து, பிராட்டியார் காதலை மட்டும் உட்கொண்டதாக,

"கரனையு மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்
றான்—உரனையுமறந்தான்; உற்ற பழியையு மறந்தான்;
வெற்றி—அரனையுங் கொண்ட காமன் அம்பினால், முன்னைப்
பெற்ற—வரனையு மறந்தான்; கேட்ட மங்கையை மறந்திலா
தான்"

என்று கம்பர் கூறியிருப்பதுபோல, பெண்ணாசையென்னும் பேயாற் பிடிக்கப்பட்டு, மதியிழந்து, "ஆயிரமா? கூட நூறு நூறா வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளட்டும்; எப்படியாவது முடித்துவிடும். இப்பொழுதே வேண்டுமானால் தந்திகொடுத்து, போதாதற்குப் பணம் தந்தி மூலமாகவே தருவித்து விடுகிறேன்," என்று ஆவலோடு சொன்னார்.

அப்படியே பேசி முடித்தபின் பேரில், பத்மாவைக்கு அருகாலுள்ள தந்திஆபீசுக்குப் போய், திருநெல்வேலியில் தம் ஏஜெண்டிற்கு அவசரத் தந்தி கொடுக்க, மறுநாள் காலை

யில் ஆயிர ரூபாய் தந்தி மணியார்டரில் வந்தது. இவ்விதமாக, நிச்சயித்த முகூர்த்தத்தில், கிழட்டு மாப்பிள்ளைக்கும் பாலைப் பெண்ணுக்கும் விவாகம் நடந்தது.

ஒரு வாரத்துக்குப் பின், மாப்பிள்ளை, பெண்ணை அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று கேட்க, பெண் பக்குவவதியாகுங் காலமாகையால் தூரதேசப் பிரயாணஞ் செய்யக் கூடாதென்றும், பெண் பக்குவவதியானவுடன் 'தந்தி' கொடுப்பதாகவும், அதன் மேல் அவர் வந்து ருது சாந்திசெய்து கூட்டிக்கொண்டு போகலாமென்றும் சொன்ஞர்கள். அப்படியே சேஷையருஞ் சம்மதித்து, வாத்தியாருடன் ஊருக்குத் திரும்பிவிட்டார். வாத்தியாரோ, நூற்றுக்கு ஐந்து ரூபா வீதம் சேஷையர் மாமஞர் தமக்குக் கொடுத்த 'தரகு' கூலியைச் சேஷையர் அறியாதபடி ஊருக்கு 'மணியாடர்' செய்துவிட்டு, அவர் செலவில் ஊர்வந்து சேர்ந்தார்.

இது தவிரச் சேஷையர் வாத்தியாருக்கு தக்க சம்மானமுஞ் செய்தார்.

பதினூருவது அதிகாரம்.

தன் தகப்பஞர் புனர்விவாகத்தின் பொருட்டுத் தஞ்சாவூருக்குப் போனவுடன், சங்கரனுக்குண்டான கோபமும் பொருமையும், கோபாலனுக்குஞ் சாவித்திரிக்கு முண்டான கிலேசத்தினும் பதின் மடங்கு அதிகமாயிருந்தன. ஊரார், "தனக்குத் தடிபோலக் கலியாணத்துக்குப் பிரமசாரிப் பிள்ளையிருக்க,இக்கிழவன் புனர்விவாகஞ்செய்து கொள்ளுகிருனே," என்று சொல்வது, அவன் காதில் சலாகைபோற் பாயும் பொழுதெல்லாம், அவன் பட்ட சிறுமை அளவிடத்தக்கதன்று. எவ்விதமாவது தற்கொலை செய்துகொள்ள விரும்

பினுயினும், மனம் துணியவில்லை. எங்கேயாவது ஓடிப்போய் விடலாமென்று நினைத்தால், கையிற் போதுமான பண மில்லை; கடுக்கன் அரைஞாண் முதலிய தன்மேலிருந்த நகை களை விற்கலாமெனின், திருட்டு நகையென்று யாராவது பிடித்து ஜயிலில் அடைத்து விடுவார்கள்; அல்லது, யாராவது வாங்கிக்கொண்டு மோசஞ் செய்து விடுவார்களென்று பயந் தான். கடைசியில் அவனுக்கொரு முரட்டு யோசனை தோன் றிற்று; அஃதாவது: பாளையங்கோட்டையில் எங்கேயோ அழ கும் படிப்பு முள்ள கிறிஸ்துவக் கன்னிகைகளிருக்கிறார்க ளென்றும், பிராமணரில் யாராவது கிறிஸ்துவமதத்திற் சேர்ந் தால், அவர்களில் தங்கள் மனத்துக்கிசைந்தவரை மணம் புரிந்து கொள்ளலாமென்றும், பெண் கிடைப்பதுந் தவிர உயர்ந்த சம்பளமுள்ள உத்தியோகமும் துரைமார் சிநேகமும் குதிரைவண்டிச் சவாரி முதலிய போகங்களும் கிடைக்கு மென்றும் அவன் பற்பல காலங்களில் கேள்விப்பட்டிருந் தான். அதைநினைத்துக்கொண்டு, இப்பொழுது கிறிஸ்துவம தத்திற் சேரத்துணிந்தான். அவனுக்குக் கிறிஸ்துவமதத்தைப் பற்றியாவது ஹிந்து மதத்தைப் பற்றியாவது, மற்றும் எந்த மதத்தைப்பற்றியாவது கற்றாணுக்குச் சங்கீத சாஸ்திரத்தி லுள்ள ஞானத்தினும் அதிக ஞானம் கிடையாது. வீண்கா லங்கழிக்கும் சிறு பள்ளிப் பையன், தனக்குள்ள வாலிப மனோன்மதத்தைத் தவிர வேறெம்மதத்தைக் கண்டான்? இவ்வெண்ணத்தை யொருவரிடமும் வெளியிடாமல், தன் வகுப்பில் வாசிக்கும் ஒரு கிறிஸ்துவப் பையனிடம் அது முதல் சிநேகஞ் செய்யத் தொடங்கினான். சில நாட்களுக்குப் பின், பாளையங் கோட்டையில் அப்பையன் வீட்டிற்குப் போக ஆரம்பித்தான். அங்கு அவன் தங்கை தமக்கைமார்கள், மத

வும் நாகரீகமென நினைக்கப்படும் 'பாவாடை,' 'ரவிக்கை,' 'தாவணி,' முதலிய நூதன உடைகளைத் தரித்துக்கொண்டு, புஸ்தகமும் கையுமாய் உலாவுவதையும், அந்நியரைக் கண்டால், பிராமணப் பெண்களைப்போல் தங்கள் உதடுகளைத் தைத்துக்கொண்டு கால் மைல் தூரத்துக்கப்பால் ஓடாமல், 'இராங்கி' யாகவும், சரசமாகவும், உபசாரமாகவும் பேசுவதையும் கண்டு மயங்கி, இதே தேவலோகம், இதே தேவபோகமென்று மருண்டு விட்டான்; நூதனமா யிருந்ததால், அவர்கள் செய்வதெல்லாம் இவனுக்கு விசேஷமான திருப்தியையும் களிப்பையு முண்டு பண்ணிற்று. சிறிது சிறிதாகத் தன் கருத்தை வெளியிட, அக்கிறிஸ்துவப் பையனுடைய தகப்பனாகிய குருபாதமென்ற நாட்டுப் 'பாதிரி' ஆநந்தத்தையடைந்து, சங்கரன் தலை கிறங்கும்படியான மரியாதைகளை அவனுக்குச் செய்து, அவன் பாலிய புத்தியையும் ஞானத்தையும் தேவகடாக்ஷத்தையும் புகழ்ந்து, கடைசியில், தமக்கு மேலான உத்தியோகத்திலுள்ள 'சீமைப்பாதிரி,' யாகிய துரையிடம், அவனை அழைத்துக் கொண்டு போனார்.

அந்தத் துரை, அவனை முதுகில் தட்டிக்கொடுத்துப் பக்கத்தில் உட்கார்த்திக்கொண்டு, "சிறு சகோதரரே! நீர் மெத்தவுஞ் சிறியவர். அப்படியாயினும் தேவ கிருபை உங்கள்மேல் இறங்கியிருக்கிறது. தேவகிருபையை யார் அளக்கக்கூடும்? கடல் தண்ணீர் அளக்கலாம்; ஆகாச நக்ஷத்திரங்கள் அளக்கலாம்; ஆற்று மணல் அளக்கலாம்; நம்முடைய ரக்ஷகரின் கிருபை அளக்க முடியாது! மனிதன் கையால் செய்த கல் விக்கிரகங்களையும், செம்பு விக்கிரகங்களையும் வணங்குதல் பாவமென்று அறிந்தீரா?" என்று கேட்டார்.

சங்கரன், "ஆமாம்; அறிந்தேன்," என்றான்.

"நம்முடைய தேவன், பாவிகளாகிய நம்மைக் காப்பாற்றும் பொருட்டு, மனிதனாகப் பிறந்து, சிலுவையில் இறந்தாரென்று நம்புகிறீரா?" என்று துரை கேட்டார். சங்கரனுக்கு, 'சிலுவை' யென்றால் இன்னதென்று தெரியவில்லை; கேட்டால் மூடனாக நினைப்பார்களென்றெண்ணி, 'சிலுவை' என்பது ஏசுகிறிஸ்து மரணமடைந்த ஊரின் பெயராயிருக்குமென்று நினைத்துக்கொண்டு, "ஆமாம்; நம்புகிறேன்," என்று சொன்னான். பிற்பாடு துரையும் நாட்டுப் பாதிரியும் அவன் குடும்பத்தைப்பற்றி விசாரிக்கையில், தனக்கு விவாகமாகவில்லை யென்ற சங்கதியை மட்டுஞ் சொன்னானே யொழிய, தான் அதன்பொருட்டுக் கிறிஸ்துவ மதத்தைச் சேர விரும்புவதாகச் சொல்ல வில்லை; அம்மதத்திற் சேர்ந்து விட்டால், மற்ற போகங்களெல்லாம் தாமாகவே வந்துவிடுமென்று நினைத்திருந்தான். அன்றிரவு, 'நாட்டுப் பாதிரி குருபாதமய்யர்' (அவர் ஜாதியில் 'சாணார்') வீட்டில் தொழுதானபின், அவர் பெண்கள் சங்கரனுக்கு 'ரொட்டி,' வெண்ணெய், சீனி, பால், முதலிய பண்டங்கள் கொண்டுவந்து கொடுத்தார்கள். சமைத்த சாதம் அவர்கள் வீட்டில் சாப்பிடும் படியான துணிவு அவனுக்கு வரவுமில்லை; அவர்கள் நிர்ப்பந்தம் செய்யவுமில்லை. இராத்திரி, துரை பங்களாவில், ஒரு வில்வைத்த 'சோபா' வின் மேல் படுத்து மெய்மறந்து தூங்கினான். இரவு தூங்கும்பொழுது வெகு நேரமாய் விட்டபடியினாலும், மனக் களைப்பினாலும், மறுநாள் காலை ஏழுமணிக்குத் துரை வந்தெழுப்பும் வரை அவன் எழுந்திருக்கவில்லை. அவர், "சகோதரரே! எழுந்திரும்; எழுந்திரும்; இந்த அறைக்குள் போம்," என்று அவசரமாகச் சொன்னார். அப்பொழுது சங்கரன், தான் சிந்துபூந்துறையி லிருப்பதாகவும், தனக்கு

ஒரு ரூபவதியான பெண்ணைத் தஞ்சாவூரில் திட்டஞ்செய்து கலியாண முகூர்த்தம் வைத்துத் தன் தகப்பனார் யாவரையும் புறப்பட்டு வரச் சொல்லிக் கடிதம் போட்டிருப்பதாகவும், அதைக் கோபாலனிடஞ் சொல்லிச் சீக்கிரம் புறப்பட ஏற்பாடு செய்யும் பொருட்டுத் தான் கோபாலனைத் தேடுவதாகவும், கனவு கண்டு கொண்டிருந்தான். அவசரமாக எழுந்திருந்தவுடன், வெளியே பேசும் கோபாலனுடைய சத்தம் தன் காதில் விழ, உறக்க மயக்கத்தில், தன் கனவுக்கேற்க, "கோபு! நீ எங்கே யிருக்காய்,?" என்று உரத்துக் கூப்பிட்டான். உடனே தன்னறிவு முற்றிலும் வந்து திகைத்துப், பின் ஒன்றுந் தெரியாமல், துரை சொல்லியபடி ஓர் அறைக்குட் போனான்.

இதற்குள், வெளியேயிருந்த கோபாலன், "அதோ! சத்தம் கேட்கிறது. இந்தப் பங்களாவுக்குள்ளேயே யிருக்கிறான். ஸார், இன்ஸ்பெக்டரவாள்! சேவகரை நாலு பக்கமும் பந்தோபஸ்து செய்யச் சொல்லுங்கள். சங்கு! நானிதோ இருக்கிறேன்; நீ எங்கே யிருக்கிறாய்? ஸார்! பத்திரம்; கடத்திவிடுவார்கள்," என்று சொல்ல, நாராயணன், தானே, பங்களாவின் பின்புற வாசலிற் போய் நின்று கொண்டான். இதற்குள் துரை, வெளியே வந்துவிட்டார். அவருக்கும் கோபாலனுடன் வந்திருந்தவர்களுக்கும் வாக்கு வாதம் நடந்தது. கடைசியில், துரை, சங்கரன் தமது 'பங்களா'விலிருப்பதாகவும், தாம் அவனை யொன்றும் விரும்பிவேண்டாது அவனாகவே கிறிஸ்து மதத்திற் சேரவேண்டுமென்று ஞானஸ்நானம் பெற வந்திருப்பதாகவும் சொல்லி, அவனை வெளியே கூட்டிக் கொண்டுவந்தார். கோபாலனையும் நாராயணனையும் பார்த்தவுடன், சங்கரனுக்குத் தன்னை யறியாமல் கண்ணீர் ததும்பி

விட்டது. அவன் வெளியே வரவே, இன்னதென்று மற்றவ ரெல்லாம் தெளிவாக அறியுமுன், நாராயணனும் கோபால னும் அவனைத் திடீரென்று தூக்கிக்கொண்டுபோய், வெளியே நின்று கொண்டிருந்த வண்டிக்குட் போட்டு, முன்பொருவ னும் பின் பொருவனுமாய்க் காவலிருந்துகொண்டு, கால்மணி நேரத்திற்குள் சிந்து பூந்துறை வந்து சேர்ந்துவிட்டார்கள்.

பதினேழாவது அதிகாரம்.

பண்ணை சேஷையர் விவாகமுடிந்து ஊருக்கு வந்தவுடன், சங்கரன் செய்த விஷயம் முதலில் அவர் காதில் விழுந்தது. அவர், உடனே சிந்துபூந்துறைக்குப் போய், படித்தது போது மென்று சங்குவை ஊருக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட் டார். கோபாலன் மட்டும் வாசித்துக் கொண்டிருந்தான். அவர், பின்பு, சீக்கிரத்திற் சங்குவுக்கு விவாகம் நடக்கவேண் டியதற்கான ஏற்பாடுகளைச் செய்யத்தொடங்கினார். அவன் கிறிஸ்து மதத்திற் போய்விடுவானென்றஞ்சி முதலில் யாவ ரும் பெண் கொடுக்க மறுத்துவிட்டார்கள்; கடைசிவரையும் சொத்துள்ள பந்துக்களொருவரும் பெண் கொடுக்கச் சம் மதிக்கவில்லை. ஒரு தூர உறவினனாகிய ஏழைமட்டும், சேஷை யர் சொத்தை யுத்தேசித்துத் தன் பெண்ணைக் கொடுக்க ஒப் புக்கொண்டான்; ஆனாலவனும், தன் மனையாள் அப் பொழுது சூலியாயிருந்ததால், இரண்டு மாதங்கழித்து, பிர வசமான பிறகு, அதுவரையுஞ் சங்கரன் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு, தன் பெண்ணைக் கொடுப்பதாகச் சொன் னான். அப்படியே செய்வதாகத்தீர்மானித்திருந்தார்கள்.

சேஷையருக்கு எப்பொழுதும் தம் மனைவி ஞாபகமா யிருந்தது. தாம் போய்க் கூட்டிக்கொண்டு வந்தவிடலா

மென்று அநேக தடவைகளில் உத்தேசித்தார். கடைசியில், சங்குவின் கலியாணத்திற்கு முன்னதாக அழைத்து வந்து, அத்துடன் கிரகப்பிரவேசமுஞ் செய்துவிடலாம் என்று நினைத்திருந்தார். தை மாதம் பதினேழாந் தேதி சங்குவுக்குக் கலியாண முகூர்த்தம் வைத்திருந்தது. சேஷையர் தை மாதம் நாலாந்தேதி வடக்கே புறப்பட்டு அழைக்க வருவதாகத் தம் மாமனுருக்குக் கடிதமெழுதியிருந்தார். தை மாதப் பிறப்பன்று காலைத் 'தபாலில்,' சேஷையர் மனைவிக்கு வஞ்சனூரில் திடீரென்று பேதி யுபத்திரவம் கண்டிருப்பதாகவும், முகத்தில் விழிக்க வேண்டுமானால் உடனே புறப்பட்டு வர வேண்டுமென்றும், தந்தி வந்தது. அதைக் கண்டவுடன் அவருக் குண்டான துக்கம் சொல்லி முடியாது. ஊண் செல்லவில்லை; புத்தி மடிந்துபோனதுபோலிருந்தது. சாப்பிடக்கூடவில்லாமல், உடனே புறப்பட விரும்பினர். கடைசியில் அவர் சிநேகிதரிற் சிலர் வருந்தி வற்புறுத்திச் சொன்னதின்பேரில், ஐயாசாமி வாத்தியாரைக் கூட்டிக் கொண்டு மறுநாள் புறப்படுவதாகத் தீர்மானித்தார். வாத்தியார், பத்து 'மைல்' தூரத்துக்கப்பாலுள்ள ஒரு கிராமத்துக்குப் போயிருந்தபடியால், உடனே அவருக்குத் தம் வண்டியை யனுப்பி, மாற்று மாடுகளும் வைத்தார். அன்றிரவு அவருக்குச் சிறிதும் நித்திரை வரவில்லை. பலவிதமாக நினைத்துப் பெருமூச்செறிந்து, சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தார். இரவு பதினொருமணிக்கு யாரோ கதவைத் தட்டினர்கள். ஐயாசாமி வாத்தியார் வந்துவிட்டதாக நினைத்துத், தாம் முதலில் நினைத்திருந்தபடி மத்தியானம் 'ரெயில்' வரையும் தாமதியாமல், உடனே காலை 'ரெயிலில்' போய்விடலாமென்றெண்ணி, அவசரமாக, வாசற்படி தடுக்கிக் காலில் இரத்தம்

வந்ததையுங் கவனியாமற் போய்க், கதவைத் திறந்தார். யாரென்று கேட்டதற்கு, ஒருவன், "எசமான்! தந்தி" என்றான். "ஆ! தந்தியா?" என்ற பதிற் சத்தத்திலேயே அவர் சப்தநாடிகளும் அயர்ந்து போய்விட்டன; பிரமித்துக்கொஞ்ச நேரம் அப்படியே திண்ணையில் உட்கார்ந்து விட்டார். பிற்பாடு எழுந்து, ஒரு விளக்கைப் பொருத்தி, 'தந்தி' இங்கிலீஷிலிருந்தபடியால், வாசித்து அர்த்தஞ் சொல்வதற்குச் சங்கரனை எழுப்பலாமென்று எண்ணினார். வெட்கத்தினாலோ, அல்லது அவனுக்கு நன்றாகத் தெரியாதென்று எண்ணியோ, அவனை எழுப்பாமல், தாமே நாகமையர் வீட்டுக்கு உடனே ஓடிப்போய்க் கதவைத்தட்டி அவரை யெழுப்பிக் கூட்டிவந்து தந்தியைக் கொடுத்துப் பார்க்கச் சொன்னார். தம் மனைவி இறந்துபோய்விட்டதாகத் தெரியவந்தது.

மறுநாள் விடியுமுன் சமாசாரம் ஊர் முழுதும் பரவிவிட்டது. ஊரில் யாவரும், "பணங் கொழுத்துப்போய்விட்டது; வடக்கே போய் ஐயாயிர ரூபா செலவழித்து ஒரு சிராத்தம் சம்பாதித்துக்கொண்டு வந்தார்," என்று தங்களுக்குள் சொல்லிப் பரிகாசம் பண்ணினார்கள். அவர் வீட்டிற்கூட ஒருவருக்கும் யதார்த்தமான விசனம் கிடையாது: அவர் பொருட்டுமட்டும், சாவித்திரி விசனமும் கிலேசமுமடைந்தாள். ஆனால் அவரடைந்த துயரமோ அளப்பரிதாயிருந்தது: சமாசாரத்தைக் கேட்டவுடன் முக்காடு போட்டுக்கொண்டு படுத்தவர், துக்கம் விசாரிக்க வந்தவர்களிடங்கூட முகங் கொடுத்துப் பேசாமல், அன்று முழுதும் அப்படியே கிடந்தார். தம்முடனிருந்து இருபது வருஷம் வரை வாழ்ந்து, எல்லாச் சுக துக்கங்களையுங் கூட அநுபவித்து, தமக்கு மூன்று குழந்தைகளையும் பெற்றுவிட்டுப் பரலோகமடைந்த

தம் முதல் தாரம் இறந்தகாலத்திலுங்கூட, ஐம்பது வயதுக்கு மேல் ஐயாயிரம் ரூபாவும் செலவழித்து ஒரே வாரம் கண்ணுல் மட்டும் பார்த்திருந்த இச்சிறு பெண்ணுக்காகப் பட்ட துயரம், அவர் படவில்லை. உண்மையான விசனம் அவரைத்தவிர, 'தந்தி' கொண்டுவந்த கூலிக்காரனுக்குத்தானிருந்தது: அவன் பெரிய இடத்துக்குத் 'தந்தி' வந்தவுடன் ஏதாவது சந்தோஷமான காரியமாயிருக்கும், தனக்கு இரண்டு மூன்று ரூபா இனம் கிடைக்குமென்றெண்ணி, திருநெல்வேலியிலிருந்து, தனிமையையும் இருளையும் பாராமல், ஒரேயோட்டமாக ஓடி வந்திருந்தான் ; கடைசியிற் பயனில்லாமற் போய்விட்டது. ஐயாசாமி வாத்தியாருக்குமக் கொஞ்சம் கிலேசமுண்டு ; ஆனுல் அவ்வளவு விசனமில்லை. அவருக்கென்ன ? புரோகிதரானபடியால் 'யானைப்பாகனுக்கு யானையிருந்தாலு மாயிரம்பொன்: செத்தாலு மாயிரம்பொன்,' என்று சொல்வதுபோல், ஊரார் இருந்தாலும் இறந்தாலும் அவர் வரும்படிக்குக் குறைவில்லை. சேஷையருடைய ருதுசாந்தி சீமந்தம் முதலிய மங்கள விசேஷங்களில் தமக்குக் கிடைக்கக்கூடிய பணம், அவர் மனைவியின் ஆப்தீகம், சிராத்தம் முதலிய சடங்குகளிற் கிடைத்துவிடுவதுந் தவிர, இன்னெரு கலியாணத்துக்கு ஏற்பாடு செய்தால், அதிக வரும்படிக்கு இடமாகுமென்றும் நினைத்தார்.

சேஷையர் மறுபடியும் மணம்புரியா தொழியாரென்பது வாத்தியாருக்கு நிச்சயமாகத் தெரியும்; ஆகவே, அதற்கு வேண்டிய முயற்சிக்குத் தலைப்பட்டார். சேஷையரை மறுபடியும் வடக்கே கூட்டிக்கொண்டு போய், எவ்வூரிலாவது ஒரு சரியான பெண்ணைக் காண்பித்தால், அவர் மதிமயங்கி மணம்புரியத் துணிவரென்பதிற் சந்தேகமில்லை. அதன்

பொருட்டுத் தம் மனைவியின் ஊரையாவது பார்த்துவிட்டு வரலாமென்று சேஷையர் மனத்தில் ஒரு விருப்பத்தை மூட்டி, 'ரொக்கம்' கொடுத்த ரூபா போய்விட்டாலும் நகைகளையாவது வாங்கிக்கொண்டு வந்துவிடலாமென்றும், அதற்குச் சம்மதியாவிட்டாலும், முன் செலவழித்த பணத்துக்காக இப்பொழுதிறந்த பெண்ணின் தங்கையையாவது விவாகஞ் செய்துகொண்டு வந்துவிடலாமென்றும், முதல் துக்கம் கொஞ்சம் ஆறினவுடன் சேஷையருக்குப் பலவிதமாகப் போதித்து, இந்தச் சாவின் நிமித்தம் சங்குவின் கலியாணம் அடுத்த சித்திரை மாதத்தில்தான் நடக்கவேண்டும் என்று சொல்லிச், சேஷையரை கூட்டிக்கொண்டு, 'தந்தி' வந்து ஒரு வாரத்திற்குள் வாத்தியார் வடக்கே புறப்பட்டுப் போய் விட்டார்.

பதினெட்டாவது அதிகாரம்.

தன் தகப்பனாரின் ஆப்தீகத்தின் பொருட்டும், தன் கலியாணத்தின் பொருட்டும், நாராயணன், தன் தாயாரைக் கூட்டிக்கொண்டு சிறுகுளத்துக்குப் போய்விட்டான். பரீக்ஷை முடிந்துவிட்டபடியால் கோபாலனும் அரியூருக்குப் போய் விட்டான். நாராயணன் கலியாணத்தைப்போல், சங்குவின் கலியாண முகூர்த்தமும் தைமாதம் பதினேழாந்தேதி வைத்திருந்தபடியால், நாராயணன் கலியாணத்துக்குக் கோபாலன் போக முடியாததைப்பற்றி முதலில் இருவருக்கும் மனவருத்தமாயிருந்தது; ஆனால் தங்களுக்குள்ளிருக்கும் அந்தரங்க நட்பினால் அவர்கள் அதை யவ்வளவு பாராட்டவில்லை.

நாராயணன் சிறுகுளத்தில் வெகு சந்தோஷமாய்க் காலங்கழித்து வந்தான். அவனுக்குத் தன் தகப்பனார் பிறப்

பட்டிறந்த ஒரு குறையைத் தவிர, வேறு குறையொன்று மில்லை. பத்மாவதிக்கு இப்பொழுது பதினோராவது வயது நடந்து கொண்டிருந்தது. அவளைப் பார்க்கும் பொழுது சாவித்திரியளவு வளருவாளென்று தோன்றுவிட்டாலும், அவள், நல்ல அழகான சிவப்பு நிறமாயும்; அங்கங்கள் வெகு வடிவாய் உருண்டு திரண்டு, கண்டவர் மனங்களிக்கத் தள தளத்தும்; களங்கமற்ற அவள் குழந்தை மனத்தின்கணுள்ள ஆநந்தமானது சரீரத்தின் ஒவ்வொரு மயிர்த்துவாரத்தின் வழியாகவும் வெளியே பொங்கி வழிவதுபோல், அவ்வளவு மனோகரமாயு மிருந்தாள். நாராயணன் தன் நாதனைப் போவ தாற் கொஞ்சங் கூச்சமிருப்பினும், பாலியப் பழக்கத்தின லும், நாராயணன் விருப்பத்தினலும் தன் தாய் தந்தையர்சம் மதத்தினலும், அவள், அவனைக் கண்டாற் புலி கரடிகளைக் கண்டதுபோல் ஒளிந்தோடிப் போகாமல், தினமும், அவன் அருகே நின்று கொண்டு, இரண்டு மணி நேரத்திற்குக் குறை யாமல் தமிழும் கணக்கும் படித்து வந்தாள். சிறு குழந்தை யானதாற் படிப்பின்மீது தனக்காகவே அவ்வளவு ருசிகர மான அநுபவ ஆசையில்லாதிருப்பினும், நாராயணனுக்குத் தான் படிப்பதிலுண்டான அதிகத் திருப்தியையும் களிப்பை யும் உத்தேசித்து, அவள் வெகு ஆவலுடன்படித்துவந்தாள். நாராயணன், அவளுக்கு, மூதுரை, நல்வழி, நீதிநெறிவிளக்கம், முதலிய நீதிநூல்களை முறையாகச் சொல்லிவைத்ததுந் தவிர; தனக்குத் தன்னுபாத்தியாயர் இராஜகோபாலையர் கற்பித்தது போல, நிதமும் அவளுக்கு ஏதாவது ஒரு அற்புதமான குறளை, அல்லது கம்பராமாயணம் முதலிய காவியங்களி லுள்ள செய்யுளைப் பதம் பதமாக அர்த்தத்துடன், பாராமற் படிக்கும் படி பாடம் சொல்லி வந்தான். இப்படிச் செய்வ

தால் தமிழில் நல்ல ருசியுண்டாகுமென்பது அவன் கருத்து. சில சமயங்களில் அவர்களிருவரும் தனியாய் மேடையிலிருந்து இவ்வாறு படித்துக் கொண்டிருக்கும்பொழுது தங்கள் ஆதி நேசத்தைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள். அவள் அக்காலங்களிற் செய்த குறும்புகளைப் பற்றியாவது பேசிய வார்த்தைகளைப் பற்றியாவது நாராயணன் சொன்னுல், அவளுக்கு அதிக வெட்கமுண்டாகும்: இருவருக்கும் அளவற்ற களிப்புண்டாகும்; கலியாணமுடிந்த பிறகும், தனிமையாயிருக்கும்பொழுது, வழக்கம்போல் 'நாணு,' 'பத்மி,' என்றொருவரையொருவர் கூப்பிட்டுக்கொண்ட போதிலும், வெளிப்படையாக எவ்வாறு அழைக்கிறதென்றும், தங்கள் இரகசியமான வழக்கம் வெளியே வாய்தவறித் தெரிந்துவிடுமேயென்றும், அவர்கள் அடிக்கடி யோசித்துக் கவலைப்பட்டார்கள். இவ்விதமாக யுகமொருபொழுதாய் வாழ்ந்து வந்தார்கள். இது நிற்க.

கலியாண முகூர்த்தத்திற்கு ஒரு வாரத்துக்கு முன் நாராயணனுக்கொரு கடிதம் வந்தது. அதைப் பின்னுல் வரைவோம். அதில் ஆங்கிலமும் தமிழும் கலந்தெழுதப்பட்டிருப்பினும், ஆங்கில பாஷையிலுள்ள பாகங்களை மொழிபெயர்த்துக் கடித முழுதையும் தமிழிலேயே வரைவோம்.

உ

அரியூர், தைமீ 8உ.

என்னுடைய மிகவுமன்புள்ள பிராண சிநேகிதனுகிய நாணுவுக்கு.—இவ்விடத்தில் யாவரும் க்ஷேமம்; அவ்விடத்தில் நீயும், அம்மாவும், உன் மாமாவும், இன்னொரு ஆளும் சுகமாயிருக்கிறீர்களென்று நம்புகிறேன். கடைசியில் சொன்ன ஆளைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளவும். இது

நாள் வரையும் சாவித்திரிக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கவும், அவளுடன் சோகியாடவும்தான் பொழுது கண்டது. ஆனால் இப்பொழுது ஒரு வாரத்திற்குள் நேரிட்ட சங்கதிகளால் அந்தச் சந்தோஷமெல்லாம் ஒழிந்து, எங்களுக்குண்டான துக்கஞ் சொல்லிமுடியாது. துர்அதிர்ஷ்ட முண்டாகும்போது ஒன்றின்மே லொன்றாய் வருமென்ற பழமொழி எங்கள் விஷயத்தில் உண்மையாய் விட்டது. முதலில் நீயெழுதியிருந்தபடி, என் அகமுடையாள் இங்கு வரவுமில்லை; நான் என் வேட்டகத்துக்குப் போகவுமில்லை; நான் தைமாதப் பிறப்புக்கு என் வேட்டகத்துக்குப் போய், அவளைச் சங்கு கலியாணத்துக்கு முன்பாகக் கூட்டிக்கொண்டு வரவேண்டுமென்று தீர்மானித்திருந்தது. அதற்குள், அவள் என்னவோ தேவதா பாதையினாற் சங்கடப்படுவதாயும், யாரோ மந்திரவாதிகள் வந்து பார்த்துக் கொண்டிருப்பதாயும் கடிதம் வந்துவிட்டதால், நான் போகவில்லை, அவள் வரவுமில்லை; இது பெரிதல்ல; ஒரு வகையில் எனக்குச் சந்தோஷந்தான். ஆனால், என் தகப்பனார் வடக்கேபோய்க் கலியாணம் செய்துவிட்டு வந்த பெண், நாலு நாளைக்கு முன் இறந்துபோனதாகத் தந்தி வந்தது; அதன்பேரில் அவர் வடக்கே புறப்பட்டுப் போய்விட்டார். அவர் வெளிக்காட்டிய துக்கத்தினாலுண்டான ஊர்க்கேலி சகிக்கமுடியாது. இதுநாள் வரையும் ஊருக்குப் பெரியவராயும் எவர்களும் மதிக்கும்படிக்கும் கண்யதையாய்க் காலங் கழித்ததுபோய், இப்பொழுது வயது காலத்தில், வழிப்போக்கரும் ஊர்ப் பஞ்சைகளும் கூடக் கேலி பண்ணும்படியாய் விட்டது. இதுவும் பெரிதல்ல. எங்கள் குலக்கேடாக வந்து அவரை இக் கோலங்கொண்ட ஐயாசாமி வாத்தியாரும் கூடப்போயிருக்கிறபடியால், இன்னும்

ஒரு பெண்ணை ஒருவேளை கலியாணஞ் செய்துகொண்டு வந்துவிடுவாரோவென்று எனக்குஞ் சாவித்திரிக்கும் வெகு பயமாயிருக்கிறது. ஆனால் நாங்கள் என்ன செய்யலாம்? விதிபோல் நடக்கும்; வந்ததையெல்லாம் அநுபவிக்கவேண்டியதுதான். எரிகிற புண்ணில் எண்ணெயை விட்டதுபோல், இன்னுமொரு சங்கதியும் நடந்துவிட்டது. என் தகப்பனார் போகும்பொழுது சங்குவின் கலியாணஞ் சித்திரை மாதந்தான் நடக்கவேண்டுமென்று சொல்லிப் போய்விட்டபடியால் அவனுக்குண்டான துயரஞ் சொல்லி முடியாது: உனக்கு நன்றாய்த் தெரியுமே. அவன் முந்தாநாள் இரவே, சாவித்திரியின் நகைப்பெட்டியிலிருந்து முன்னூறு ரூபா பெறும்படியான ஒரு தங்கக் கொலுசையும் நாற்பது ரூபாவையும் திருடிக்கொண்டு எங்கேயோ ஓடிப்போய் விட்டான். போன இடந் தெரியவில்லை. வடக்கே கும்பகோணத்துக்குப் போய் நாடகத்திற் சேரப்போவதாய்ப் பேசிக்கொண்டிருந்ததாக இப்பொழுது வெளியாகிறது. அத்தம்பியார் அவனைத் தேடிக்கொண்டு போயிருக்கிறார். சில ரெயில் ஸ்டேஷன்களுக்கும் என் தகப்பனாருக்கும் தந்தி கொடுத்திருக்கின்றது. உன் கலியாணத்துக்கு முன் நல்ல சமாசாரங் கிடைத்து, அத்தம்பியாரும் வந்துவிட்டால், நான் வரலாமென்று நினைத்திருக்கின்றேன். உன் கலியாணத்துக்கு நான் வருவதில் சாவித்திரிக்குச் சம்மதந்தான். ஆனால் இவ்வளவு துக்கத்தாக்கு மத்தியில், அவளைத் தனியே விட்டுவிட்டு வருவதில் எனக்குப் பிரியமில்லை. அத்தம்பியார் வந்துவிட்டால் தப்பாமல் வந்துவிடுகிறேன். வேறு விசேஷமில்லை. பத்மாவதியம்மாளைத் தனக்குத் தெரியாமற்போனாலும், தான் மிகவும் விசாரித்ததாகச் சொல்லவேண்டுமென்று, சாவித்திரி எழுதச்

சொல்லுகிறாள். நானும் விசாரித்ததாகச் சொல்லவேண்டும். அம்மாவுக்கும் உன் மாமாவுக்கும் கோடி நமஸ்காரஞ் சொல்லவேண்டும். அதிர்ஷ்டமிருந்தால், இன்னும் ஒரு வாரத்தில் நேரில் கண்டுகொள்ளுகிறேன். உடனே பதி லெழுதவும்.

இப்படிக்கு உன் உயிர்த்தோழன்,
சே. கோபு

பரீக்ஷை விபரமின்னுந் தெரியவில்லை. தெரிந்தவுடன் எழுதுகிறேன். உனக்குப் பல்லாங்குழி விளையாடத் தெரியுமா? நானிப்போதுதான் கற்றுக்கொள்ளுகிறேன். சாவித்திரி என்னை ஒரு நிமிஷத்தில் தோற்கடித்து விடுகிறாள். கோபு.

பத்தோன்பதாவது அதிகாரம்.

சேஷையரும் வாத்தியாரும் புறப்பட்ட மூன்றாவது நாட் காலையில், வஞ்சனூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் துயரம் தேக்கிய முகத்துடன் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு, பிரதானமாயுள்ள பாதை வழியே செல்லாது, ஊருக்குப் புறத்தேயுள்ள வாய்க்காலின் கரை வழியாகப் போய், ஊரார் தண்ணீரெடுக்குந் துறையில், கால்களிலிருந்த சேற்றைக் கழுவிக்கொண் டிருக்கும்பொழுது, குனிந்து தண்ணீர் மொண்டு கொண்டிருந்த ஒரு பிராமணப் பெண், குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு புறப்பட்டாள். அவளைக் கண்டவுடன், இவர்கள் மனம் திடுக்கிட்டது. அவள், சேஷையர் கலியாணஞ் செய்துகொண்ட பெண்ணாகவே யிருக்கவேண்டும்; அன்றேல், அப்பெண்ணுடன் ஏககாலத்தில் ஒரு தாய்க்கே பிறந்த பெண்ணாயிருக்க

வேண்டும். இவர்களுக்குண்டான ஆச்சரியம் இவ்வளவென்றில்லை. அப்பெண்ணும் இவர்களைப் பார்த்தவுடன் ஒரு நிமிஷம் வரை திகைத்து நின்று, பின்பு, துரிதமாய் வீட்டை நோக்கிச் செல்லவே, இவர்களுடைய சந்தேகம் பலப்பட்டது. ஐயாசாமி வாத்தியார், "அம்மா! அடியே பெண்ணே! உன்னைத்தானே கூப்பிடுகிறேன்," என்று பேசத்தொடங்கினார். அப்பெண்ணோ, பதிலும் பேசாமல், திரும்பியும் பாராமல், ஓட்டமாக வீட்டுக்குப் போய்விட்டாள்.

பிற்பாடு இவர்கள் இருவரும் கொஞ்ச நேரம் வரை யோசித்து, கடைசியில் சேஷையரை வாய்க்காலுக்கு அருகுள்ள தோப்பில் மற்றவர் அறியாமலிருக்கச் சொல்லிவிட்டு, வாத்தியார் மட்டும், தாம் போயுண்மை அறிந்து வருவதாக ஊருக்குட் புகுந்தார். அவ்வூரிலுள்ள ஒன்பது வீடுகளில் ஒரு ஐயங்கார் வீட்டைத் தவிர, மற்ற எட்டுவீடுகளும் சேஷையர் மாமனாருடைய நெடுங்கால உறவினர் வீடுகளென்று வாத்தியாருக்குத் தெரியும். அவர், தந்திரமாக யாருமறியாதபடி, ஐயங்காருடைய வீட்டுக்கு முதலிற் சென்று, அவரிடம் வெகு சாதுரியமாக விசாரித்ததில், சேஷையர் விவாக முடிந்து இரண்டு வாரத்துக்குப்பின், அவருடைய மாமனாராகிய 'போக்கிலிச் சுப்பையர்,' தம் மனைவியையும் மகளையும் மட்டும் கூட்டிக்கொண்டு கூடலூருக்குப் போய், பெண்ணுக்குச் சேஷையர் கட்டியிருந்த தாலியைக் கழற்றி வைத்துக் கொண்டு, தன் பெண் விவாகமாகாத கன்னியென்று பொய் புகன்று, ஐந்நூறு ரூபா வாங்கிக்கொண்டு, கூடலூர் 'வக்கீல்' அண்ணுசாமியையருக்கு அப்பெண்ணை விவாகஞ் செய்து கொடுத்து விட்டுத் திரும்பி விட்டதாகவும், பெண் ஒரு வாரத்திற்குள் பக்குவவதியாகிச் சாந்திக்கலியாணமாகவே, கர்ப்

யங் தரித்து, இப்பொழுது வளைகாப்பு அடுக்கிக் கொள்வதற் காகப் பிறந்த வீட்டுக்கு வந்திருக்கிறுளென்றும், 'போக் கிலிச் சுப்பையர்' அனுப்பிய கடிதமும் 'தந்தி'யும் வெறும் பொய்யென்றும், உண்மை துலங்கிற்று. வாத்தியாரிதைக் கேட்டவுடன், மிகவும் ஆச்சரியத்தை யடைந்து, கொஞ்ச நேரம் வரை தமக்குள்ளேயே ஆழ யோசித்து, முடிவில், 'ராமனுண்டாலென்ன? ராவணனுண்டாலென்ன? நமக்குத் தாழ்வில்லை; ரூபா நூறுக்குக் குறையக்கூடாது,' என்று தமக் குள்ளேயே எண்ணி மகிழ்ந்துகொண்டு, சுப்பையர் வீட்டை நோக்கித் தைரியமாய்ச் சென்றுர். வெகுநேரம் வரை வீட் டுக்குள்ளிருந்து போக்கிலி சுப்பையரும் வாத்தியாரும் வாதா டியபின், ஒன்றும் மேல் நடத்தாமல் சேஷையரைக் கூட்டிக் கொண்டு போய்விடும் பக்ஷத்தில் வாத்தியாருக்கு நூறு ரூபா கொடுத்து விடுகிறதென்று தீர்மானமாயிற்று. வாத்தியார், 'அச்சாரமாக' முப்பது ரூபா வாங்கிப் பத்திரமாகச் சேஷையர் அறியாவண்ணம் மறைத்து வைத்துக்கொண்டு, திரும்பி விட்டார்.

மெல்ல அசைந்து அசைந்து, வெகு விசாரத்துடன் வருவதுபோல் முகத்தில் விசனத்தைக் காட்டிக்கொண்டு வந்து, அவர், சேஷையர் பக்கத்தில் வந்துட்கார்ந்தார். சேஷையர் ஆவலுடன் கேட்ட வினுக்களுக்கு அவர் கொஞ்ச நேரம் வரை விடையளிக்காமல் பெருமூச்செறிந்துகொண் டிருந்துவிட்டு, கடைசியில், "எல்லாம் மோசம் போச்சு; என் னதைச் சொல்லுகிறது? இனிமேல் சொல்லுகிறதற்கு என்ன இருக்கிறது? காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந் தவன் கொண்டு போனுன்' என்ற பழமொழி போலாச்சுது," என்று கொஞ்சம் கொஞ்சமாகச் சங்கதியை வெளியிட்டார்.

சேஷையர் ஸ்தம்பித்ததுபோல் ஒன்றும் பேசாமல் இருந்தார்; கண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது. சற்றுப்பின், வாத்தியார், மறுபடியும், பெருமூச்செறிந்து கொண்டு, "நாம் அப்பொழுதே கூட்டிக்கொண்டு போய்விடலாமென்று சொன்னேன்; நீங்கள்தான் அவர்கள் சொன்னதற்கு இசைந்தீர்கள். கூட்டிக்கொண்டு போயிருந்தால், இப்படி யொன்றும் வந்திருக்கமாட்டாது. ஆனால் அப்பொழுது அவர்கள் மோசக்கருத்து யாருக்குத் தெரியும்? பிராமணனாய்ப் பிறந்துவிட்டு, இந்தப் பாதகத்துக்கு யார் துணிவார்கள்? அடா, சோழதேசமே! உன் யோக்கியதை இப்படியா இருக்கிறது? நானும் காசி, நேபாளம் வரை பார்த்திருக்கிறேன். இந்த அநியாயம் எங்கும் கண்டதே இல்லை. அப்பொழுதே, அவன் கொஞ்சம் பொல்லாத வம்பன், போக்கிலி, என்று சொன்னார்கள்; ஆனால் நான் நம்பவில்லை; பொறாமையால் சொல்லுகிறார்களென்று நினைத்துவிட்டேன். என்னிடத்தில் முதலில் எவ்வளவு நளினமாய்ப் பேசினான்! அடா! அடா! இன்றைப் போலிருக்கிறது: என்ன உபசாரம்! என்ன மரியாதை! என்ன நியாயங்களெல்லாம் பேசினான்! அடா! பாவிப்பயலே! குடியைக்கெடுத்து விட்டானே! ஒரு வேளை அவனே வம்பனாயிருந்தாலுமிருக்கட்டும்: நமக்கென்ன? பெண்ணைத்தானே கலியாணஞ் செய்துகொள்ளப் போகிறோம்: பெண்ணா பெண்ணு? நம்மூர்களில் கிடைக்குமா? என்று நினைத்தேன். அடா! அநியாயமே! அந்த நாள்களிலானால், இப்படி நடக்குமா? சித்திரவதை செய்து போடுவார்களே. கலி முற்றிவிட்டது; இராச்சியம் நீச இராச்சியமாய்ப் போய்விட்டது. இப்படிச் செய்தான் பாவி, என்று சொன்னால் என்ன நீதி இருக்கிறது—" என்று, மழுமழுத்துப் பேசத் தொடங்கினார்.

இதுவரையும் தலையைக் குனிந்து கேட்டுக்கொண்டிருந்த சேஷையர், வாத்தியார் கடைசி வாசகத்தைக் கூறியவுடன், "ஏன்? நியாயம் கிடையாமலா போய்விடும்? பெண் தான் அழிந்து போச்சென்றாலும், செலவழித்த ரூபாயும் நஷ்டியு மாவது கிடையாதா? நீர் கேட்டீரா? அவன் என்ன சொல்லு கிறான்?" என்று கேட்டார்.

அதற்கு, வாத்தியார், "யாரு, சுப்பையரா? அதை ஏன் சொல்லவேணும்? நானும், சங்கதியை யறிந்தவுடன், வெகு கோபமாய், செலவழிந்த ரூபாயும் ஆயிர ரூபாய்க்குக் குறை யாமல் நஷ்டியும் வாங்கிவிட வேணும்; முடியுமானால், அவ னைக்கூட ஜயிலில் போட்டுவிட வேண்டுமென் றெண்ணித் தான் அவனிடம் போனேன். ஆனால், அவனோ, நாடறிந்த பெருச்சாளியா யிருக்கான்; அவன் சொன்னதைக் கேளுங் கள்: 'ஓய் வாத்தியாரே! உம்முடைய மிரட்டெல்லாம் வரு கிற வழியிலேயே வைத்துவிட்டு வாரும். முதலில், 'என் பெண்டாட்டியை இன்னொருவன் அநுபவிக்கிறான்' என்று பகிரங்கமாய்க் கோர்ட்டில் போய்ச் சொல்ல வேணும். நீங்கள் வெட்கங் கெட்டுச் சொன்னாலும், 'அந்தப் பெண் இறந்து போனது உண்மை; இவள் அந்தப் பெண்ணுடைய தங்கை!' என்று நூறு தரம் சத்தியஞ் செய்யத் தயாராயிருக்கிறேன்; இவ்வூர் எல்லாம் எனக்குச் சாக்ஷி சொல்வார்கள்; என் மாப்பிள்ளையே வக்கீலாயிருக்கிறார். அவருக்கு எத்தனையோ ஹைகோர்ட்டு பாரிஸ்டர்கள் சிநேகமுண்டு; ஒருவருக்கு இரண்டு பெயராய்க் கொண்டு வருகிறேன்; செலவுக்கோ, இன்று கண்டதற்கு, சேஷையர் கொடுத்த ரூபாயே இரண் டாயிரத்துக்குமேல் ரொக்கமாய் கையிலிருக்கு; வேண்டுமா னால் வாரும், ஒரு கைபார்ப்போம்; இந்த ஊரில் உமக்குச்

சாக்ஷி சொல்லுகிற பயல்களையும், நீர் மூன்று ஜில்லாக்கடந்து வந்து வஞ்சனூரானைச் செயித்து விடுகிறதையும், ஒரு கை பார்ப்போம்; உங்கள் பண்ணையாருக்கு இன்னும் இரண்டாயிர ரூபா செலவழிந்தாகவிட்டு, நான், கேசையும் செயித்து, என் பேரில் கள்ளக்கேசு கொண்டு வந்ததற்காக அவரைச் செயிலுக்கனுப்பாவிட்டால், நான் ஆண் பிள்ளையில்லை; கைம் பெண்டாட்டி; என் பெயர் சுப்பையருமில்லை. என்ன, வஞ்சனூர்ச் சுப்பையரென்று கேட்டதில்லையோ? இந்த மாகாணம் என் பெயர் கேட்டால் நடுங்கும் என்று தெரியாதோ?" என்று வீரம் பேசிக் கூப்பாடு போடுகிறான். அப்பொழுதே கலகம் வந்து விடும்போலிருந்தது. நாலு பெயரை மத்தியஸ்தம் வைத்து 'ரூபாபோனாலும் போகட்டும்; நகைகளையாவது திருப்பிக் கொடுத்துவிடு,' என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்னது எனக்குச் சொல்லக்கூட வெட்கமாயிருக்கிறது," என்று சொன்னார். 'வீட்டுப்புலி, வெளிப்பூனை'யாகிய சேஷையர், சப்தநாடியும் அயர்ந்து, தமக்கு உடனே 'ஜயில்' வந்து விடுவதுபோல் பயந்து, "என்ன? என்ன சொன்னான்?" என்று கேட்டார். அதற்கு வாத்தியார், "இல்லை, ஒன்றுமில்லை. நகைகளையாவது கொடு என்று கேட்டதற்கு 'நகைகளா? கலியாணத்தன்று என் பெண் கையைக் கிழவன் பிடித்ததற்காக இன்னும் ஆயிர ரூபாயுக்கு நகைபோட வேணும். வேண்டுமானால், கிழவனுக்கு ஒருவேளை காமப்பித்தேறிப் போய்விட்டதென்றால், ஒரு சாமான் தருகிறேன், கொண்டு கொடும். அவன் என் பெண்ணுக்கு கலியாணத்துக்கு வாங்கிக்கொடுத்த புடவை, அதற்குள் கிழிந்து, பழையதாய்ப் போய்விட்டது. அதை, இன்னும் ஐந்தாறு மாதத்தில், கூடலூர் வக்கீல் அண்ணாசாமி ஐயரவர்கள் புத்திரனாகிய என்

செல்வப் பேரன் பிறந்தவுடன், அவனைப் போட்டு விடுவதற்குப் பழம் புடவையாய் வைத்துக் கொள்ளலாமென்று குழந்தை சொல்லிக் கொண்டிருக்கிறாள். அதை வேணுமானால் தருகிறேன். கொண்டு கொடும். கண்ணைத் துடைத்துக் கொள்வதற்கு ஆகும்,' என்று சொன்னான், அந்தப் பாவிப் பயல். அவன் இன்னது தான் சொல்வான், இன்னது சொல்லமாட்டானென்கிறதில்லை. அவன் நாக்கில் நரம்பே கிடையாது. என்ன குதி குதிக்கிறான். என்ன ஆட்டமாடுகிறான்! என்ன பேச்சுப் பேசுகிறான்! நீங்கள் வந்திருந்தால் கட்டாயம் இன்று கலகம் நடந்து பழிகூட விழுந்திருக்கும்," என்று சொன்னார்.

சேஷையருக்குண்டான துக்கமும் கிலேசமும் அளவிட முடியாது. அவர் வாத்தியாரை நோக்கி, "வாத்தியாரே! ஒன்றும் வேண்டாம்; செலவழிந்த ரூபா ஜன்மாந்தரக்கடன். சிராத்தவாவது லாபமாச்சுதே. எழுந்திரும்! போவோம் வாரும். நீர் தான் என்ன செய்வீர், நான்தான் என்ன செய்வேன்? விதிபோல் நடக்கிறது. அவனுக்கு ஸ்வாமி கூலி கொடுப்பார். 'காணாத கனவு கண்டால் ஒருவரோடும் சொல்லாதே' என்றபடிக்கு, ஒருவருடனும் இந்த அவமானத்தைச் சொல்ல வேண்டாம். பெண் வாஸ்தவமாகவே இறந்திருந்தால் என்ன செய்வோம்? இப்பொழுதும் அப்படியே நினைத்துக்கொள்வோம். கூடிய சீக்கிரத்தில் ஊர்போய்ச் சேர்வோம், வாரும். எனக்குப் பசியும் தாகமும் கண்ணிருண்டு வருகிறது; வண்டியையும் போகச் சொல்லிவிட்டோம். இனிமேல் இந்த ஊருக்குள் காலெடுத்து வைக்க யோக்கியதையில்லை. வேறு எங்கேயாவது ஒரு கிராமத்துக்குப் போய் சாப்பிடு

வோம்'' என்று சொல்ல, இருவரும் கால் நடையாக மூன்று மைலுக்கப்பாலுள்ள சிட்டூருக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

இருபதாவது அதிகாரம்.

சிட்டூருக்குப் போகும் வழியெல்லாம், சேஷையர், தம் மனைவியின் சௌந்தரியத்தையும், தாம் எண்ணி யிருந்த பல எண்ணங்களையும், தாமடைந்த இழிவான மோசத்தையும் நினைத்து நினைத்து மனம் வருத்தப்பட்டுக் கொண்டே நடந்தார். இவர்கள் சிட்டூரை யடையும்பொழுது, மாலை மணி மூன்றாய் விட்டது. ஒரு வீட்டிலும் சரியான போஜனத்துக்கு வழியில்லாமற் போயிற்று. கடைசியில், ஒரு அமங்கிலியம்மாள், தான் பகல் சமைத்த சாதத்தில் தீர்த்தத்தை விட்டிருப்பதாகவும், அதை வேண்டுமானால், ஆளுக்கு மூன்றணாக் கொடுத்தால் போடுவதாகவுஞ் சொன்னாள். அப்பொழுது வேப்பங்காயும் தித்திக்கும் வேளையாயிருந்தபடியால், இவர்கள் சீக்கிரம் ஸ்நானஞ் செய்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அந்த வீட்டில் போஜனஞ் செய்தார்கள். இவர்களுக்கு ஒரு சிறு பெண் பரிமாறினாள். அவள் புடவை கட்டிக்கொண்டிருக்கும் விதத்தைப் பார்த்தால் விவாகமாகாத கன்னியென்றே தோன்றிற்று. அவளுக்குப் பன்னிரண்டு வயதிருக்கலாம்; நல்ல அழகுடையவளாயும், வெகு 'ராங்கியாயு' மிருந்தாள். பரிமாறும்பொழுது அவளைச் சேஷையர் அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்தது வாத்தியாருக்குத் தெரியும். போஜனம் முடிந்தவுடன், சேஷையர் அவ் வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டு, களைப்பாய்த் தூங்கி விட்டார்.

எங்கே பிணம் விழுந்தாலும் கழுகுக்கு மூக்கில் வேர்க்கு மென்று சொல்வதுண்டு. எங்கே கந்நிகையிருந்தாலும் ஐயா சாமி வாத்தியாருக்கு மூக்கில் வேர்க்குமென்பது நிச்சயம். அப்படியிருக்க, அதே வீட்டில் இருந்தால் சொல்லவேண்டாமே? அன்றியும் விவாக விஷயத்தை வியாபார விஷயமாகப் பாராட்டி, மாப்பிள்ளை பெண் இவர்களுடைய விருப்பத்தைச் சிறிதும் கவனியாது கலியாணங்களை நிச்சயித்து நடத்தும் நம்மவர்களுக்குள், 'தபால்' வண்டிகளிலும், 'ரெயில்' வண்டிகளிலும், திருவிழாக் கடைகளிலும்கூட, அதுவரையும் ஒருவரை யொருவர் இப்பிறப்பில் பார்த்தறியாத பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் விவாக முகூர்த்தங்கள் நிச்சயமாய் விடுகின்றன. அப்படியிருக்க, தாமே வீட்டுக்கதிகாரியாயும், தாமே மாப்பிள்ளையாயும் அமைந்த தனவானாகிய சேஷையருக்கு இஷ்டமிருந்தால், பெண்மலிந்த சோழ நாட்டில் கலியாணம் அமைவது, அவ்வளவு ஆச்சரியப்படத் தக்கதன்று. அதற்கேற்க, அந்த அமங்கிலியம்மாளுக்குக் குழந்தைகளையும், தரித்திரத்தையும், 'ராங்கி'யையும் தவிர மற்றெல்லாம் குறைதான்.

வாத்தியார் நடைக்கட்டிற் படுத்துக்கொண்டு, சாதுரியமாக அந்த அமங்கலியம்மாளுடன் சம்பாஷிக்கத் தொடங்கினர். 'இங்கிலீஷ் கைம்பெண்டாட்டி' வர்க்கத்தைச் சேர்ந்த அந்த அம்மாள், உட்கட்டில், ஒரு நாற்காலியிலிருந்து கொண்டு, வாத்தியாருடன் சரசமாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தாள். அவளுக்கு முப்பது வயதுக்கு மேலிராது. சரியான, அதர்வது தகுந்த பணங்கொடுக்கக்கூடிய, வரன் கிடையாததால் தான் பரிமாறின பெண்ணாகிய கமலாம்பாளுக்கு இன்னும் விவாகமாகவில்லை யென்றும், அப்பெண்ணின் தகப்

பனுராகிய சாமிநாதையர் இறந்தது முதல், அவர் மனைவியே தன்னுலான பாடுபட்டுச் சம்பாதித்துக், குடும்பத்தைக் காப்பாற்றிக்கொண்டு வருவதாகவும், கமலாம்பாளைத் தவிர, இன்னும் நாலு குழந்தைகளிருப்பதால், அவளைத் தக்க விலைக்கு விற்ற பின்பு தான் எல்லார் ஜீவனத்துக்கும் ஒரு வழியுண்டாக வேண்டுமென்றும்; பெண்ணை எண்ணூறு ரூபாவரை விலை மதித்துக் கேட்டிருப்பதாகவும், வெளிப்பட்டது. வீணிற் பெருக்காமல் சங்கதியைச் சுருக்கிச் சொல்வோம்.

அன்று அஸ்தமனமாகு முன், சேஷையர், ஏழு 'மைலுக்கு' அப்பாலுள்ள 'தந்தியாபீசு'க்குப் போய்த் திருநெல்வேலியில் தம் 'உண்டியல்' கடைக்குத் 'தந்தி' கொடுத்து, இரண்டாயிர ரூபா வருவித்தார். வாத்தியாரும், அவர் அறியாமல், தாம் சுப்பையரிடம் வாங்கிய முப்பது ரூபாவையும் ஊருக்கு 'மணியார்டர்' செய்துவிட்டு, மிகுதி எழுபது ரூபாவையும் தம்மூருக்கு நேரிலனுப்பும்படி சுப்பையருக்கு ஒரு கடிதமும், ரூபாவெல்லாம் வந்து சேர்ந்ததைப் பற்றி பெழுதும்படி ஊருக்கொரு கடிதமும் எழுதிப் போட்டுவிட்டார்.

தை மாதம் பதினேழாம் தேதி யன்று, முதலில் சங்குவுக்கென்று தீர்மானித்திருந்த முகூர்த்த லக்நத்தில், பண்ணை சேஷையருக்கு, சிட்டூர் அமங்கலி காமாக்ஷியம்மாள் குமாரத்தி சௌபாக்கியவதி கமலாம்பாள் கலியாணஞ் செய்யப்பட்டாள். இந்தக் கலியாணத்தில் ஐயாசாமி வாத்தியாருக்கு, வைதீக தக்ஷிணையைத் தவிர வேறு 'தரகுக் கூலி' யொன்றுங் கிடைக்கவில்லை; காமாக்ஷியம்மாளிடம் பணம் வாங்கிவிடுவதற்கு அவரோ வல்லவர்? அவள், இவரிடத்திற் பணம் பறியாமலிருந்தாற் போதாதா?

கலியாண முடிந்தபின் ஒரு சுப தினத்தில், காமாக்ஷி யம்மாளைக் குடும்ப சகிதம் கூட்டிக்கொண்டு, சேஷையரும் வாத்தியாரும் தைமாதக் கடைசியில் அரியூர் வந்து சேர்ந்தார்கள். வஞ்சனூரில் இராததால், சேஷையருக்குச் சங்குவைப்பற்றி கோபாலன் அனுப்பிய 'தந்தி,' கடிதம் ஒன்றும் கிடைக்கவில்லை; மற்றச் சாமாசாரங்களொன்றும், ஊர் வந்து சேருமளவும் அவருக்குத் தெரியாது. அவரோ, தம்முடைய வஞ்சனூர் மனையாளின் நிலைமையைப்பற்றியாவது, தம் சிட்டேர்க் கலியாணத்தைப் பற்றியாவது, ஊரில் ஒருவருக்கும் எழுதவில்லை. பணமனுப்பும்படி கொடுத்த 'தந்தி' யிற்கூட விஷயம் குறிப்பிடவுமில்லை.

இருபத்தோராவது அதிகாரம்.

நாமிதுவரையும் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் சொல்லியும், சொல்லாமலுமுள்ள சங்கதிகளின் மூலமாக, சாவித்திரிக்கும் அவள் கணவருக்கும் அதிகப் பொருத்தமில்லையென்பது தெரிந்திருக்கலாம். அதற்கு அநேக காரணங்களுண்டு. முதலாவது, சாவித்திரியினுடைய புருஷர் கண்ணுக்கு விகாரமான ரூபமுள்ளவர்; கருமையாயும், 'ஒல்லி' யாயும், குள்ளமாயும், மார்பெலும்புகள் ஒன்றோடொன்று பின்னியும், தேகமெல்லாம் முள்ளம் பன்றி போல் மயிர் வளர்ந்தும், அவர் வெகு அவலக்ஷணமானவர். தவிரவும், அவர் சாவித்திரியினுடைய இரக்கம், பொறுமை, தயாளம், களங்கமின்மை, அன்பு முதலிய சிலாக்கியமான குணங்களை யுணர்ந்து மகிழ்ந்து கொண்டாடும் புத்தியுடையவரல்லர்; தம் மனைவியின் அதிரூபலாவண்ணியத்தை உத்தேசித்து, அவளைக்கண்ட புருஷர்களெல்லா

ரும் காமுறுவார்களென்று எண்ணுவதோடு, தாம் அவலக்ஷணமா யிருப்பதால், அவள் அழகுள்ள ஆடவர்களைக் கண்டால் விருப்பமுறுவா ளென்றெண்ணினர். எவ்வளவு விகாரமாயிருப்பினும், பெண் ரூபத்தைக் கண்டால் பேய் பிடித்தவர் போற் காமப்பித்துப் பிடித்துழலும் அவருடைய இழிவான மனமானது, ஒவ்வொருவரும் தம்மைப்போலவே காமுறுவார்களென் றெண்ணிற்று. இதை யறிந்து தான், நாகமையர், தம் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டுச் சேஷையர் வீட்டில் நெருங்கிப் பழகத் துணியவில்லை. இவ்விதமாகவே வீண் சந்தேகங்களாற் பீடிக்கப்பட்ட குள்ளச் சுந்தரமையரோ, தம் மனைவி நடக்கை தவறாமலிருப்பதற்கு, எப்பொழுதும் தாம் அவளுடன் கோபமாய்ப் பேசுவதும், வாரத்தில் இரண்டு மூன்று நாள்களுக்குக் குறையாமல் அவளை ஏதாவது முகாந்திரத்தைக்கொண்டு அடிப்பதுமே தக்க உபாயங்களென்று நினைத்து, அவ்வாறு செய்து வந்தார். அவரெண்ணியபடி சாவித்திரிக்குத் தம்பேரில் பிரியமில்லாதிருந்தால், தாமிவ்வாறு நடப்பது, அவ்வெறுப்பை மிகவும் அதிகப்படுத்துமென்பது, அவர் புத்திக்குத் தோன்றவில்லை. அன்றியும், அவள் ஐந்து வருஷ காலமாக வாழ்ந்து வந்ததும், இதுவரையும் குழந்தை பிறவாததைப்பற்றியும் அவளை வெறுத்தார். இது நிற்க, பிரதிபலனின்றி ஒருவன் மற்றொருவனுக்குக் கடமைப்பட்டிருந்தால், அது, தன் மனத்துக்கும் பார்ப்பவர் கண்ணுக்கும் இழிவாகத் தோன்றும்; ஆதலால், ஒரு பிரயோஜனத்தைப் பெறுவோன், செய்ந்நன்றி பாராட்டவேண்டியிருக்க, அவ்வாறு செய்யாமல், அதற்கு எதிரிடையாக, தனக்குப் பிரயோஜனம் செய்தவன் விஷயத்தில் அந்தரங்கத்தில் வெறுப்பையடைந்து, அவன் பெரு

மையையே தன் வறுமைக்குக் காரணமாக மூடத்தனமாய் நினைந்து நொந்து கொள்வது, பெரும்பாலும் இயல்பாயிருக் கின்றது. உலகத்தில் நன்றியறிவு இல்லாதிருக்கவில்லை; ஆனால், எப்படி மனோகரமான 'ரோஜா' மலரைச்சுற்றி முள்ளுமிருக்கிறதோ, அதுபோலவே, சற்குணங்களோடு துர்க் குணங்களும் கலந்திருக்கின்றன. சாவித்திரியுடைய ஜாதகத் தின் பெருங்கோளாற்றின் நிமித்தம், அவள் ஜாதகம், நல்ல புமான்களுடைய ஜாதகங்களோடு பொருந்தாது, தம் ஜாத கத்தோடு மட்டுமே பொருந்தி நின்றதால், அம்மாது சிரோ மணி தம் மனைவியாய் வாய்த்ததுமுதல், தம் வறுமையும் கவலையும் தாழ்மையும் சூரியனைக்கண்ட இருள்போல விலகி, இப்பொழுது இந்திர போகத்துக்குச் சமானமான சுகத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும் குள்ளச் சுந்தரமையர், தாம் அவளுக்கு இந்தப் பாக்கியத்துக்குக் கடன்பட்டிருப்பதைக் காணும் ஊரார், தம்மை அவமதிப்பார்களென்று நினைந்து, அவளை வெறுத்தார். விவாகத்துக்கு முன் தாமிருந்த இழி வான நிலைமைக்கும், அவளே காரணமென்று கருதினார்.

இதுவுமன்றி, இந்த மன்மதர் குணத்திலும் அழகி லும் ஸ்ரீதேவி போன்ற தம் மனைவியாகிய சாவித்திரியை விட்டு, நெருப்பைக் குளிப்பித்தாலொத்த நிறமும், தம்மிலும் இரண்டு மடங்குள்ள உயரமும், எப்பொழுதும் தீக்கந்தம் வீசும் மேனியும், செக்குப்போன்ற இடையும், சுரைக்காய் போன்ற தனங்களும், பயங்கரமான பற்கள் வெளியே வந்து தோன்றும் முகமும், சுற்றிலும் ஒரு மைலுக்குள் வருபவர் மேலெல்லாம் தெறிக்கும்படி எப்பொழுதும் வெற்றிலை பாக் குப் புகையிலை போட்டுக்கொண்டு நாய்போற் குரைக்கும் வாயும் உடையவளாய், தமக்குத் தாயென்று மதிக்கும்படி

நாற்பது வயதுக்கு மேற்பட்டு, மூதேவி போன்றவளாயுள்ள, சுடலி யென்ற ஒரு மறத்தியை வைப்பு வைத்திருந்தார். இவள் தவிர்த்து, அவருக்கு அவ்வவ்வமயங்களில் ஏற்பட்ட சோரநாயகிகள் பலர். இவ்விஷயமெல்லாம் சாவித்திரிக்கு நன்றாகத் தெரியும்; ஊரில் அறியாதார் கிடையார்.

இவ்வளவு கூறியபின், சாவித்திரி தன் புருஷன்மீது அதிக அன்பு பாராட்டாததற்குக் காரணஞ் சொல்லப் புகுவது அநாவசியமே. ஆயினும் அவள், அவர் சரீர சுகத்துக்கு ஒரு குறையும் வையாள்; அவராக மனமிசைந்து நடந்த தினங்களில் தானும் வெகு சந்தோஷமாகவே யிருப்பாள். சில சமயங்களில் அவள் அன்பு பாராட்டிக் கொஞ்சப் போனால், அவர், சினந்து, "இந்த மாப்பிள்ளைக்கு இவ்வளவு என்னத்திற்கு? எல்லாம் இருக்கட்டும்" என்று சொல்லிவிடுவார். அப்பொழுது அவள் முகம் வெட்கி, மனங்குன்றி, கண்ணீர் ததும்பி, துக்கம் நெஞ்சடைக்க, ஒன்றும் பேசாமற் போய்விடுவாள். முதலில் எவ்வளவு காதலிருந்திருப்பினும், இவர் குணாதிசயங்களையும் நடவடிக்கைகளையும் கண்டவுடனேயே, எல்லாம் ஓடிப்போயிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. குழந்தைகளையும் தெய்வத்தையும் போல காதலும், தன்னைக் கொண்டாடுமிடத்திலேயே பெரும்பான்மையும் செழித்தோங்கும். ஆயினும், அவள் மனத்தில் ஒன்றுமட்டும் வேரூன்றி நிலைத்திருந்தது: தன் கணவர் எவ்வளவு துரோகமாய் ஒழுகினபோதிலும், தன்னையவர் எவ்வாறு இகழ்ந்தபோதிலும், எத்தனை கொடூரமாக நடத்தியபோதிலும், தன் கற்புமட்டும் தான் ஒரு பொழுதும் கைவிடக்கூடாதென்று தீர்மானித்திருந்தாள். அன்று; நாம் மேற்கூறியது தப்பு. ஏனெனில், அவள் அப்படி ஒரு தீர்மானத்தையும் செய்

திருக்கவில்லை; கனவிலாவது கள்ளமான எண்ணங்கள் எள்ளளவேனும் அவளுக்குண்டா யிருப்பினன்றோ, அதைப் பற்றி நினைத்து யோசித்துத் தீர்மானஞ் செய்யச் சமயமுண்டா யிருக்கும்? பொறுத்கமுடியாத துன்பங்களைத் தன்னுயகன் மூலமாகத் தானநுபவிக்கும்பொழுது வேறு வழியாகத் தான் சுகத்தை அடையலாமென்றாவது, உலகில் அவ்வாறு அடைபவரைப் பற்றியாவது, அவள் சிறிதும் நினைத்ததே யில்லை. விதிப்பயனென்று நொந்து கொள்வாளேயொழிய, அதை மாற்றும் வழியுண்டோவென்று சிறிதும் கருத மாட்டாள். தமயந்தி, சீதை, சந்திரமதி முதலிய பெண்ணரசிகளைப் பற்றி வாசிக்க, வாசிக்கத் தன் புருஷன் மேலுண்டான அன்பு அதிகரித்து, அவள் கற்பு உறுதியடைந்தது. அடிக்கடி, அந்தச் சீமாட்டிகள் அநுபவித்த கஷ்டங்களையும் தன் சொற்ப கஷ்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சந்தோஷமடைவாள். ஊரில் ஒரு பெண் பிள்ளை நடக்கை தவறினதாகக் கேள்விப்பட்டால், அமிதமான கோபத்தையும் வெறுப்பையுங் கொள்வாளே யொழிய, தானும் பெண்ணானதால் அவ்வாறு தவறக்கூடும் என்ற நினைவுகூட அவளுக்குத் தோன்றாது; அவள் மனம் முற்றிலும் களங்கமற்றது. அந்நிய புருஷர் தன்னைக்கண்டால் இச்சிக்கக்கூடும் என்றுகூட அவள் எண்ணிலள்; தன் திவ்ய அழகின் பெருமையையே அவள் முற்றும் உணர்ந்திலள்; இக்கற்பரசி, தன் தலைவன் நிமித்தம் அடைந்த துக்கத்துக்கும், வடித்த கண்ணீருக்கும் அளவில்லை. அவள் ஒருவருடனும் சொல்வதும் கிடையாது. தன் துணைவனே அடித்தால் யாரிடத்திற் சொல்லுகிறது? தன்னுயிர்த் தோழியாகப் பாவித்து வந்த சாலாவிடத்தில் மட்டும், சில சில சமயங்களிற் சொல்லியழுவாள். அந்தப் பெண் தன்

புருஷனிடத்தில் சொல்ல, நாகமையர், தம் தீய எண்ணங்கள் சித்தி பெறலாமென்று நம்பிக்கை கொண்டார்.

இயல்பாகவே மிகுந்த ஆசையும் அன்பும் நிறைந்த சாவித்திரியின் மனமானது, புருஷன்மீது செல்ல வழியின்றி, சகோதரவாஞ்சையின் வழிப்பட்டது. அவள் தன் சகோதரரையும் தகப்பனாரையும் மிகவும் நேசித்து வந்தாள். இப்பொழுது அச்சகோதரரில் ஒருவன் மூலமாகவும் தகப்பனார் மூலமாகவும் துயரம் விளைந்தவுடன், அவளாற் சகிக்க முடியவில்லை; அவள் திவ்ய சரீரங்கூட மெலிந்து சோர்ந்தது. கோபாலனொருவன் இல்லாமற் போனால் அவள் பைத்தியங் கொண்டிருப்பாள்; அல்லது தற்கொலை புரிந்திருப்பாள். குளத்தில் நீர் பெருகப் பெருக, வெளிமடை இல்லாவிட்டாற் கரையே இடிந்து விடுவதுபோல், மனத்திற் பெருகும் அன்புக்குப் போக்கில்லாவிட்டால் மனமிடிந்துவிடும்.

ஆயினும், நண்பரே! இதைப்பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம்; சாவித்திரிக்கு மனத்துக்கிசைந்த மணவாளன் இயல்பாக வாய்த்து, குழந்தைகளும் பிறந்திருப்பின், அவள், தன் சகோதரர்மீதும் தகப்பனார்மீதும் இவ்வளவு பரிசுத்தமான வாஞ்சை வைத்திருக்க மாட்டாளென்பது திண்ணம்; கோபாலனோ, தன் தமக்கையைக் கண்ணுள் மணியாகப் பாவித்து நேசித்த போதிலும், அவன் முக்கிய விசாரமெல்லாம் அக்கண்மணி யுட்பாவைக்குச் சமானமானவளாகி, இப்பொழுது பேய் பிடித்து வருந்தும் தன் மனைவியைப் பற்றியே; சாவித்திரியும் கோபாலனையும் தம்பேரில் எவ்வளவோ அன்பா யிருப்பினும், நானும் அவர்களைத் தம் முயிர்நிலைகளாக எண்ணி யிருப்பினும், இப்பொழுது சேஷையருடைய எண்ணங்களெல்லாம், தாம் புதிதாக மணம்

புரிந்த மனையாளைப் பற்றியே; சங்குவின் நினைவுகளெல்லாம் தன் விவாகத்தைக் குறித்தே; ஐயாசாமி வாத்தியாருக்கோ, கலியாணமானாலும் இழவானாலும், பணமே குறி; குள்ளச் சுந்தரமையருக்கோ, எவர் எப்படியானாலும், நிலையெல்லாம் மறத்தி சுடலி பேரில்தான்; அம்மறத்திக்கோ, பள் வீரபத்திரன்பேரிலேயே நினைவு. இவ்விதமாக, எல்லாரும் ஒருவருக்கொருவர் நேசமாயிருந்தும், எவ்வளவோ அன்பு பாராட்டியும், ஒவ்வொருவருக்கும், தனியாக ஒரு அந்தரங்க விருப்ப மிருந்துகொண்டே யிருக்கிறது. பல வாத்திய கோஷத்தின் மத்தியில் 'தம்புரு' சுருதிவிடாது தொனிப்பதுபோல், பலவித முயற்சிகளின் மத்தியிலும் அவரவருக்குள்ள அந்தரங்க ஆசாபாசங்கள் விடாது, அவர்கள் ஒவ்வொரு எண்ணத்திலும் செய்கையிலும் தங்கள் குறியை யிடுகின்றன. நண்பரே! இன்னும் சற்று உட்புகுந்து யோசிப்போம்: ஆகா! என்ன ஆச்சரியம்! ஜனங்கள் நிறைந்த இவ்விசாலமான "உலகில் நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு தனிமையாயும் சுயநய சித்தர்களாயு மிருக்கிறோம்! நீரும் உம்முடைய அகமுடையாளும் நாற்பது வருஷகாலமாக ஒரே தலையணையில் தலைவைத்துத் தூங்கி, ஒருமித்து வாழ்வதாகப் பாவிக்கிறீர்கள்: இதென்ன பைத்தியம்! உமக்குக் கால் நோகும்பொழுது, அவள் கண்ணீர் விடுகிறாளோ? அல்லது, அவள் பல்வலிக்கும்பொழுது, நீர் விழித்திருக்கிறீரோ! உம்முடைய களங்கமற்ற மகள், வெளிப்பார்வைக்கு, தையல் வேலையிலும் வீட்டு வேலையிலுமே கவனமாயிருக்கிறாள்; ஆனால் உண்மையில் அவள் அன்று குதிரைமேற் போனவனைப் பற்றி நினைத்து நினைத்து வருந்துவதை நீர் அறியீரே? உம்முடைய கபடமற்ற குமாரனை நீர் மெய்ச்சி முத்தமிடும்

பொழுது, அவன், நீர் கொடுப்பதாகச் சொன்ன பணத்தையும், 'மிட்டாய்க் கடைக்காரனுக்குத் தான் கொடுக்கவேண்டிய கடனையும் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறான். குத்திருமலோடு மூலையில் கிடைக்கும் உம்முடைய பாட்டியாருங்கூட, இவ்வளவு வயதாயும், மயானம் இவ்வளவு நெருங்கியும், இரகசியமான சொந்தக் கவலைகளில்லாதிருக்கவில்லை; அநேகமாக, எழுபது வருஷங்களுக்கு முன் தனக்கிருந்த அழகையும், நகைகளையும், 'தாசில்தார்' கூடத் தெருவழியாக ஒருநாட் போகையில் தன்னைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு போனதையும் பற்றி, அவள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஏன்? நீர் இவ்வளவு அன்பு பாராட்டிக் கொண்டாடிப் புகழும் உம்முடைய மனைவியைத்தான் பாரும்: எவ்வளவு கர்வம் உடையவளாயும், அற்ப சந்தோஷியாயும், வீணையைப் பிடித்தவளாயு மிருக்கிறாள்! இது கிடக்கட்டும். நண்பரே! சத்தியமாகச் சொல்லும்: நீர் செய்வதை யெல்லாம் அவளுக்கு மறையாமல் சொல்லுகிறீரோ? ஏன் ஐயா, வீண் பேச்சு! உம்முடைய மூளையிலும் எம்முடைய மூளையிலும் தனித்தனியான உலகங்கள் சஞ்சரிக்கின்றன. உலகத்தில் யாவும் ஒன்றுக்கொன்று பேதமாகவே இருந்துகொண்டிருக்கின்றன. உம்முடைய கண்ணுக்கு அழகுள்ளவளாகத் தோற்றும் பெண், எம்முடைய கண்களுக்கு அப்படித் தோற்றுகிறதில்லை; உமக்கு மதுரமாக உள்ள உணவு, எமக்கு வெறுப்பாக இருக்கிறது; இவ்வாழ்க்கைப் பெருங் கடலில், நீரும் நாமும் தனித்தனியான தீவுகளே; இன்னும் உள்ளவர் ஒவ்வொருவரும் நமக்குச் சற்று சமீபத்திலும் தூரத்திலுமுள்ள வெவ்வேறு தீவுகளுக்கு உவமையாகக் கூறுதலே தகுதி. இவ்வுலக வாழ்க்கை எவ்வளவு அபாயகரமானதா யிருக்கின்றது;

எவ்வளவோ தைரியமுடையவர்களையும், பராக்கிரமசாலிகளையுங்கூட, மனம்பதறிப் பின்னிடச் செய்யவல்லது. உடன் செல்லும் பிரயாணியே! வழியில், ஓர் அன்புள்ள கை உம்முடைய கையைப் பிடித்துக்கொண்டு, நீர் தடுமாறி விடாது காக்கட்டும்! உம்முடைய பக்கத்தில் விழுபவர்களை, நீர் கை தூக்கி இளைப்பாற்றுவீராக! இவ்வாழ்க்கைப் பிரயாணத்தில், உண்மை முன்சென்று வழிகாட்டி, அன்பே எப்பொழுதும் உமக்குத் துணையாகட்டும்; முடிவில், கருணையால் நீர் மன்னிக்கப்படுவீராக! அன்பென்னும் விளக்கின்றேல், நாம், இப் பிரபஞ்ச இருளில், குருடர்களுக்குச் சமானராய், எவ்வளவு வியாகுலத்துடனும் கவலையுடனும் இவ்வுலக வாழ்க்கையாகிய பிரயாணத்திற் கிடந்துழல்வோம்!"

இது நிற்க, சங்குவைத் தேடப்போயிருந்த சுந்தரமையர், தைமாதம் பதினைந்தாம் தேதி யன்றிரவு அவனை யொருபக்கமும் காணவில்லையென்று திரும்பி, அரியூருக்கு வந்து விட்டார். கோபாலன், ஐந்தாவது கலியாணத்தன்று காலையிலே புறப்பட்டுத் திரும்பி விடுவதாகச் சாவித்திரிக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அன்றிரவே சிறுகுளத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

இருபத்திரண்டாவது அதிகாரம்.

நாராயணனுடைய கலியாணத்தில் அவ்வளவு செலவுஞ் சிறப்புமில்லாமற் போனாலும், அது வெகு மங்களகரமாயும் மனோகரமாயு மிருந்தது. தானுத்தேசித்தபடி, கோபாலன் ஐந்தாம் நாளன்று புறப்படவில்லை. அவர்கள் பரீக்ஷையின் பலன் தெரியவேண்டிய காலம் நெருங்கிவிட்டதால், நாரா

யணையும் கூடவே முதலில் அரியூருக்குக் கூட்டிக்கொண்டு போகிறதென்றும், ஒரு வாரத்திற்குப்பின் கடிதம் போட்டதின்மேல் சீதையம்மாள் புறப்பட்டுச் சிந்து பூந்துறையில் வந்து அவர்களைச்சந்தித்துக் கொள்கிறதென்றும் தீர்மானித்து, இருவரும், இருபத்தைந்தாந் தேதியன்று புறப்பட்டு இருபத்தேழாந் தேதியன்று அரியூர் போய்ச் சேர்ந்தார்கள். வழியில் சிந்துபூந் துறையிலேயே அவர்கள் இருவருக்கும் பரீக்ஷை யொப்பேறி விட்டதாகத் தெரியவந்தபடியால், நாராயணன், கொஞ்சம் பணத்துடன் தன் தாயாரைக் கூடிய சீக்கிரத்தில் அனுப்பும்படித் தன் மாமனுக்குக் கடிதம் எழுதியனுப்பிவிட்டான். அவர்கள், அரியூரில், வண்டியை விட்டு வீட்டு வாசலில் இறங்கும்பொழுது, ஆரோ ஒரு பெண், திண்ணையில் உட்கார்ந்து தலைவாரிக்கொண் டிருந்தாள். கோபாலனுக்கு உடனே மனம் திடுக்கிட்டது. அந்தப்பெண் அவர்களைக் கண்டவுடன், இரண்டு மூன்று தரம் திகைத்துப் பார்த்துப், பின்பு, சும்மா இருந்துவிட்டாள். அவர்கள் வீட்டுள் நுழையும்பொழுதே, சமையலறைப் பக்கத்திலிருந்து, "அம்மா, செல்லம்! கொஞ்சம் பாலிருக்கு; குடித்துவிட்டுவா," என்று ஒரு நூதனமான குரல் கேட்டது. இதற்குள், வாசலில் வண்டியோசையைக் கேட்ட சாவித்திரி எதிரே வந்துவிட்டாள். அவள் நாராயணனைக் கண்டவுடன் என்ன "கலியாணமெல்லாம் ஆய்விட்டதா?" என்று கேட்டாள்.

நாராயணன், வெட்கத்தினால் தலை கவிழ்ந்துகொண்டு, "ஆமாம்" என்றான். அவளுடைய க்ஷேமத்தைப்பற்றியும், சங்கு ஓடிப்போய்விட்டதைப் பற்றியும், விசாரிக்க வேண்டுமென்று, அவன் சிறுகுளத்திலிருந்தே நெடுக நினைத்துக்

கொண்டு வந்திருந்தபோதிலும், அதிகமாகப் பேச நாக்கெழ வில்லை.

சாவித்திரி:—கோபு! அப்பாவைப் பார்த்தாயா?

கோபாலன்:—இல்லையே; வந்துவிட்டாரா?

சாவித்திரி:—ஆமாம், நேற்றுத்தான் வந்தார். (தணிந்த குரலில்) அதோ போகிறாளே, அந்தப் பெண்ணைக் கலியா ணஞ் செய்துகொண்டு வந்திருக்கிறார். அவள் தாயாரும், அவள் கூடப்பிறந்த இரண்டு மூன்று குழந்தைகளும் வந் திருக்கிறார்கள்.

கோபாலன்:—சங்குவோ?

சாவித்திரி:—போனவிடம் இன்னுந் தெரியவில்லை. உன் அத்தம்பியார் திரும்பி வந்தபின்பு, ஒருவரும் விசாரிக்கவே யில்லை. அப்பாவுக்கு, அவர் நேற்றுவந்த பின்புதான், சங்கதி தெரியும். உன் தந்தி, கடிதம், ஒன்றும் கிடைக்கவில்லையாம்.

கோபாலன்:—ஏன்? நான் வஞ்சனூருக்குத்தானே அனுப்பினேன்?

சாவித்திரி:—அந்தச் சங்கதி அப்புறம் சொல்லுகிறேன். நேற்றிராத்திரி வரை அவருக்கு ஒன்றும் தெரியாது. வந்த வுடன் சொன்னேன்: 'கழுதை போனால் போகிறது! போனது போலவரும்; ஓடி ஓடிப்போனால், இந்த இழவுக்கு யாரு மாரடிக்கிறது? இன்னமும், (உன் அத்தம்பியார் பெய ரைச் சொல்லி) அவன்தான் போகவேண்டும்.' என்று சொன் னார்." என்றாள்.

இதற்குள் கோபாலனுக்குப் பலவித எண்ணங்களும்' கவலைகளும் உண்டாய் விட்டபடியால், தனக்கும் நாராயண னுக்கும் பரீக்ஷை ஒப்பேறியதைப்பற்றி, அவளிடம் அப்

பொழுது சொல்ல மறந்து விட்டான். அன்று மாலை, நாரா யணன், களைப்பால் தூங்கும்பொழுது, சாவித்திரி, கோபா லனைத் தனிமையாய் ஓர் அறைக்குள் கூப்பிட்டுத், தன் தகப் பனார் வஞ்சனூரில் விவாகஞ் செய்தது எவ்விதமாக முடிந்த தென்று ஊரில் பிரஸ்தாபமாவதைப் பற்றிச் சொன்னது மன்றி, அவள், அவன் கையில் ஒரு கடிதத்தைத் தன் மடியி லிருந்தெடுத்துக் கொடுத்துப், பின் வருமாறு சொன்னாள்:—

"கோபு! நீ எனக்கு தம்பியாயிருந்தாலும், நீ தான் எனக்கு முக்கிய தாரகமா யிருக்கிறாய்; வேறு அன்பும் உண்மையும் உள்ளவர்கள் ஒருவருமில்லை; உன்னுடைய அத்தம்பியார் இப்படி யிருக்க வேண்டாம். ஆனால், அவர் சித்தம், என் ஜந்மாந்தர கர்மம், அவரை இப்படி இருக்கச் செய்கிறது. இந்தக் கடிதத்தைப்பார். நாலு நாளைக்கு முன்பாக, உன் அத் தம்பியார் கிராமத்துக்குப் போயிருக்கும்பொழுது, தபாலில் வந்தது. முதலில் உன்னிடத்திலிருந்தாவது சங்கு விடத்தி லிருந்தாவது வந்திருக்குமென்று வெகு ஆவலுடன் வாங்கிப் பார்த்தேன். அதை வாசித்தவுடன், என் உடல் பதறினபதற் றத்தையும், அதுமுதல் இதுவரையும் நான் ஆகாரம் நித்திரை யில்லாமல் படும் கஷ்டத்தையும், சொல்லி முடியாது. எனக்கு அதைப்பற்றி நினைக்கும் பொழுதே மனது திடுக்கிடுகிறது. இனிமேல் பிராணனை விட்டுவிட வேண்டியதுதான். உன் னைக் காணும் வரையும் ஒரு நாள் ஒரு யுகம் போலிருந்தது," என்று கண்ணீர் பெருக நாத்தடுமாறிச் சொன்னாள்.

அக்கடிதத்தின் மேல் விலாசம் "அரியூரில், [illegible] மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள் வீட்டில், சௌபாக்கியவதி சாவித்திரியம்மாள் கையிற் கொடுப்பது," என்று எழுதி யிருந்தது. அரியூருக்குப் பக்கத்திலுள்ள பிச்சியூர் தபால்

முத்திரை போட்டிருந்தது. உள்ளே, பின் வருமாறு எழுதியிருந்தது:—

என் உயிர் நிலையாகிய சாவித்திரிக்கு,

உன்னுடைய திவ்யரூபலாவணியத்தைக் கண்டு காமுற்று என்னுயிர் நைவது உனக்குத் தெரிந்திருக்கலாம். அதற்குக் காரணம் உன் அழகே யொழிய வேறில்லை; என்பேரில் குற்றமில்லை. தீபவொளியிற் பாயும் விட்டிற் பூச்சியையும், தேன் மலரிற் பாயும் வண்டையும், காந்தத்தை நோக்கும் இரும்பையும், பழிக்க ஒண்ணாதது போல், உன் அழகை நோக்கிப் பாயும் என் மனத்தையும் பழிக்கலாகாது. நீ இவ்வளவு சௌந்தரியத்தையும் ஒரு குள்ளக்கரியனுக்காகப் பாழாக்குவது தெய்வசம்மதமன்று. கடவுள் நமக்கு அழகைக் கொடுப்பது, அநுபவிக்கும் பொருட்டே தவிர வேறில்லை. பிறர்க்குத் தெரிந்து விடுமென்று நீ சிறிதும் பயப்படவேண்டாம். நீ இது முதல் பத்து நாள் வரைக்குள், உனக்கு என்று சௌகர்யம் வாய்க்கிறதோ, அன்று மாலை, ஆறுமணி சுமாருக்கு உன் வீட்டுக் கொல்லைப்புறச் சுவற்றின் மேல், ஒரு பூசணிப்பூவை நட்டு வைத்திருந்தால், நான் அதை அடையாளமாக வைத்துக் கொண்டு, அன்று தயாராகஇருக்கிறேன். உன்புருஷனோ வீட்டிற் படுக்கிறதில்லை; மறத்தி சுடலிவீட்டே கதியாய்க் கிடக்கிறான். உன் தகப்பனார், சகோதரர், ஒருவரும் இப்பொழுது இங்கில்லை. இரவு பதினொரு மணி சுமாருக்கு, மெதுவாய் ஒரு வெள்ளை வஸ்திரத்தை யெடுத்து முழுதும் போர்த்துக் கொண்டு வெளியே வந்தால், நான் தயாராக இருக்கிறேன். இருவரும் மெதுவாய் ஊருக்கு வடக்கே தனிமையாயுள்ள பள்ளிக்கூடக் கட்டிடத்துக்குப்போய், நம்முடைய ஆசைப்படி எவ்வளவோ சல்லாபமாகக் கூடிக் களித்துவிட்டு, ஒரு

வருக்கும் தெரியாமல் திரும்பிவிடலாம். பிற்பாடு நடக்க வேண்டிய விஷயங்களுக்கும், அப்பொழுதே தகுந்த யோசனை பண்ணி ஏற்பாடு செய்து கொள்ளலாம். அதற்குள் உன் தகப்பனார் வந்து விட்டாலும், அவர் பங்களாவுக்குப் போய் விடுவார். உன் சகோதரரோ, மேடையில் தான் படுக்கிறது; ஆகையால் ஒரு தடையுமில்லை. உன் கூட இருக்கும் மொட்டைச்சிக்கோ, பகலிலே கண் நன்றாகத் தெரியாது. நிச்சயமாகவே யாவரும் அறியாமல் முடிந்து விடும். நீ இவ்வளவு கிருபை செய்யாத பக்ஷத்தில், நான் எவ்விதமாகவாவது உயிரை மாய்த்துக் கொள்வதிற் சந்தேகமில்லை. நீ ப்ரும்மஹத்தி தோஷத்துக்குள்ளாவாய். நான் இன்னாரென்று உனக்கு ஒரு வேளை இப்பொழுது தெரியாவிட்டாலும், கண்ட பின் தெரியும்; உன் அழகுக்கு இசைந்தவனில்லாவிட்டாலும், என்னிலும் அழகான புருஷர் இங்கில்லை என்பது உறுதிதான். நீ என்னை அறிந்தால், சிறிதும் உன் செய்கைக்காக விசனப்படமாட்டாய். தக்க தருணத்தில் சுகத்தையநுபவிக்க வேணும்; காலந் தப்பிவிட்டால் ஆசையெல்லாம் வீணே.

இப்படிக்கு,
உன்னிடத்தில் உயிர்வரன் இரக்கும்,
காமவிரகன்.

இக்கடிதத்தைக் கோபாலன் தனக்குள்ளே வாசித்து முடிந்தவுடன், அவனுக்குண்டான கோபம் அளவிடமுடியாது. அதை எழுதினவன் இன்னானென்று தெரிந்திருந்தால், உடனே சென்று அவனைக் கொன்றிருப்பான்; அவன் கொஞ்சம் கோபமாறிச், சாவித்திரியைச் சாந்தப்படுத்தி, அனுப்பிவிட்டு, நாராயணனை யெழுப்பி, இரகசியமாக அவ

னிடத்திற் கடிதத்தைக் காட்டினன். நாராயணன், தக்க சமயம் வந்துவிட்டதென்று கருதி, எழுதினவர் நாகமையரே என்று கோபாலனுக்குத் தன் காரணங்களுடன் சொல்லி, சாவித்திரியிடமிருந்து புஸ்தகங்களைத் தருவித்து, அவற்றில் தான் பார்த்த பதங்களையும் செய்யுட்களையும் கோபாலனுக்குக் காட்டினவுடன் அவன் சந்தேகம் நீங்கிவிட்டது. நாராயணன் கோபாலனுடைய கோபத்தையும் படபடப்பையும் ஒருவாறு அரிதில் அமர்த்தியபின், இருவருங்கூடி யோசித்து, ஒரு தீர்மானஞ் செய்து கொண்டார்கள். சாவித்திரியிடத்தில் ஒன்றுமே சொல்லவில்லை; வீட்டில் ஒருவருக்குமே இவர்கள் உத்தேசந் தெரியாது.

மறுநாள் மாலையில், சேஷையர் வீட்டுக் கொல்லைச் சுவரில், கொஞ்சம் சாணியை உருட்டிவைத்து அதில் ஒரு பூசணிப்பூவைக் குத்திவைத்திருந்தது; வீட்டில் ஒருவரும் அதைக் கவனிக்கவில்லை. அன்றிரவு உத்தேசம் பதினொரு மணிக்கு ஊரடங்கியபின், ஓர் ஆள், பாதாதிகேசாந்தம் வெள்ளை வஸ்திரத்தால் மூடிக்கொண்டு, மெல்ல வாசற்கதவைத் திறந்து, சேஷையர் வீட்டினின்றும் வெளிப்பட்டது. அந்த ஆள் தெருவில் வந்தவுடன், அடுத்த வீட்டுத் திண்ணையிலிருந்த ஒரு புருஷன், முக்காடு போட்டுக்கொண்டு இறங்கி வந்து, முதலில் வந்த ஆளுக்குக் கைச் சாடை காட்டிவிட்டு, வட திசையை நோக்கி வெகு விரைவாகத் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தான். அவன், (அதாவது நாகமையர்,) ஊர்ப் பள்ளிக்கூடத்தை அடைந்தவுடன், வெளி 'வராந்தா'வில் நின்றுகொண்டு, மற்ற ஆள் சமீபித்துவிட்டதைக் கண்டு, "என்னுயிரே, வா! என் கண்ணே வா! நானென்ன தவம் செய்தேன்! என் பாக்கியமே பாக்கியம்."

என்றழைத்து, அந்த ஆளைத் தன் மார்புறத் தழுவிக்கொண்டான். நாகமையருக்கு இவ்வளவுதான் தெரியும்; அடுத்த வினாடியில், அவர் பாழான வாய்நிறையும்படி சீலைத் துணியிற் சுற்றிய உமிக்கிழி திணிக்கப்பட்டதுமன்றி, பள்ளிக்கூடத்துக்குப் பின்புறத்திலிருந்து, யமகிங்கரர்போல் திடீரென்று வந்து குதித்த நாலைந்து மறவர்கள், அவர் கண்களைத் துணியாற் கட்டி, அவரைத் தூணோடு சேர்த்துப் பந்தனஞ் செய்துவிட்டார்கள். பிற்பாடு ஒரு மறவன், "பூசை நடக்கட்டும்," என்றான். உடனே ஒருவன், மறைவில் தயாராகக் கரைத்துவைத்திருந்த சாணி நீரை யெடுத்து நாகமையர் தலைமேல் அபிஷேகஞ் செய்தான்; மற்றொருவன், மேலெல்லாம் துடைப்பதுபோல, ஒரு விளக்குமாற்றை யெடுத்து அடித்தான்; வேறொருவன், குருக்கும் எருக்குமாகச் சேர்த்துத் தொடுத்து வைத்திருந்த மாலையை யெடுத்துக் கழுத்திற் போட்டான்; பின்னொருவன், குடுமியைக் கத்திரித்து விட்டான்; இன்னொருவன், தீபாராதனை செய்வதுபோல், ஒரு தீக்குச்சியைக் கொளுத்தி, நாகமையர் மீசையைக் கொளுத்தினான். இதெல்லாம் தொடங்கு முன்னமேயே, நாகமையர் பின்னாக வந்த ஆளாகிய நாராயணன், திரும்பிச் சேஷையர் வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொண்டு விட்டான்; அன்றிரவு முழுதும், அவனும் கோபாலனும் சிறிதும் கண் மூடாமற் சிரித்தார்கள். பிற்பாடு பள்ளிக்கூடத்தில் நாகமையருக்கு நடந்த மரியாதைகளைப்பற்றி, எமக்குச் சொல்லவும் வெட்கமாக இருக்கிறது. கடைசியில் அவருடைய அடித்தொடையில் ஒரு சூடுபோட்டு, "பூசணி பூத்தால் இப்படித்தானிருக்கும்" என்றும், யசமான் வார்த்தைக்காக அவ்வளவு எளிதாக விட்டு விட்டதாகவும் அவரை எச்சரித்துவிட்டு, மறவரெல்

லாம் கட்டையவிழ்த்து, அவர் முகத்தில் ஆளுக்கொருதரம் காறி உமிழ்ந்து விட்டுப் போய்விட்டார்கள். நாகமையர், நடக்கமாட்டாமல் தள்ளித் தள்ளாடிக் குளத்துக்குப் போய் ஸ்நாநஞ் செய்துவிட்டு, ஒருவரும் அறியாமல், விடியுமுன் தம் வீடுபோய்ச் சேர்ந்தார்.

இருபத்துமூன்றாவது அதிகாரம்.

தனக்குக் கடிதமெழுதியவர் இன்னாரென்றாவது நாகமையர் எங்கேயோ சுவரேறி விழுந்து குடுமி யறபட்டாரென்று ஊரிற் பரவும் பிரஸ்தாபத்துக்கும் தனக்கு வந்த கடிதத்துக்கும் ஏதாயினும் சம்பந்த முண்டென்றாவது, சாவித்திரிக்குத் தெரியாது. நாகமையரோ, சுரமாயிருப்பதாக ஒரு வாரம் வரை வெளியே புறப்படாமல் வீட்டில் அடைபட்டிருந்து, பின்பு தலை சிக்குப்பிடித்துபோனதாலும், தலைமயிரைக் கழுத்தளவு வெட்டி விடுவதுதான் சென்னபட்டணம் முதலிய இடங்களில் இப்பொழுது பரவும் நாகரிகமென்றும் தாமும் தலைமயிரை வெட்டிவிட்டதாகவும், சவ்வரிசிப் பாயாசம் சாப்பிடும்பொழுது ஒட்டிக் கொள்வதால்மேல் மீசையை எடுத்துவிட்டதாகவும் சொல்லிக்கொண்டு வெளியே வந்துவிட்டார். அவர் மனத்திற் கொண்ட அவமானம் இவ்வளவென்றில்லை; தக்க சமயம்பார்த்துப் பலாத்காரஞ் செய்தாயினும், தம்மை இப்பாடுபடுத்திய சாவித்திரியின் கற்பை அழித்துவிடவேண்டுமென்று நினைத்தாரே யொழிய, தமது கெட்ட எண்ணத்துக்குத் தக்க தண்டனை கிடைத்ததென்று அவருக்குச் சிறிதும் புத்திவரவில்லை. தாம் பட்ட அவமான முழுதும், சாவித்திரியின் ஏவலால் நடந்ததாகவே எண்ணினார். அவர், தம் மனைவியிடத்தில்

முழு உண்மையையும் சொல்லாததனாலும், அவருக்குச் சாவித்திரி பேரிலுள்ள எண்ணங்கள் அந்த அம்மாளுக்குத் தெரியாதிருந்ததாலும், அவள் வழக்கம்போல, சாவித்திரியுடன் நேசம் பாராட்டி வந்தாள். அன்றியும், முன்னிலும் அதிகமாகப் பழகுவதற்கு ஒரு காரணம் புதிதாக ஏற்பட்டது; அதாவது, நாகமையர் பெண்டாட்டியாகிய சாலாவினுடைய ஒன்று விட்ட சித்தியினுடைய மாமனாருடைய அத்தான் மைத்துனனும், இப்பொழுது சேஷையருக்கு மாமியாராக வந்திருக்கும் காமாக்ஷியம்மாளுடைய புக்ககத்து அத்தைக்கு மூத்தாளுடைய இரண்டு விட்ட அம்மாஞ்சியும், சகலரென்று துலங்கிற்று. இவ்வளவு உறவு ஏற்படவே, முந்திய சிநேகம் பலமடைந்தது.

ஆனால், கோபாலன் நடந்த சங்கதிகளின் உண்மையைச் சாவித்திரிக்குச் சொல்லாதிருப்பினும், அவளுக்கும் சாலாவுக்குமுள்ள நேசத்தைத் தான் சிந்துபூந்துறைக்குப் போவதற்கு முன்னமே முறித்துவிட வேண்டுமென்ற ஆவலுடையவனாயிருந்தான். இதைப்பற்றி நாராயணனுடன் யோசித்துப் பார்த்தும் ஒரு வழியும் புலப்படவில்லை. கடைசியில், கோபாலன் மட்டும், தன் மனத்துக்குள் ஒரு முரட்டு யோசனை செய்துகொண்டு, நடந்தபின் வெளியிடலாமென்று, அதைப்பற்றி நாராயணனிடத்திற் கூடச் சொல்லாமலிருந்தான். அதாவது, சாலா தன் வீட்டுக்கு வரும்பொழுது தான் அவளைக் கையைப் பிடித்திழுத்துவிட்டால், அவள் ஓடி விடுவாள்; வெட்கத்தினாலும், பயத்தினாலும், தன் வீட்டுக்கு ஒருநாளும் வரவேமாட்டாள்: ஒருவரிடமும் சொல்லவும் மாட்டாள்; சாவித்திரிக்கு மட்டும் ஏதாவது பொய்யான முகாந்தரத்தைச் சொல்லிவிட்டு விலகிவிடுவாள், என்றெண்ணித்

தான். முதலில், அப்படிச் செய்வது மிகவும் ஒழுங்கின மென்று அவன் மனத்திற் பட்டது; ஆனால், நாகமையர் கெட்டவராயிருந்ததால், அவர் மனைவியை அவமானப் படுத்தலாமென்றும், இச்சங்கதியை நடந்தபின்பு அவரறிந்தாலும், தாம் சாவித்திரி பேரிற்கொண்ட எண்ணங்களுக்குப் பதிலாகச் செய்யப்பட்டதாக நினைந்து, புத்தியும் பயமு மடைந்தொழுகுவா ரென்றும், தன் மனத்தைச் சமாதானஞ் செய்துகொண்டான்.

அதற்கேற்க, அன்று மாலையிலேயே அவனுக்குச் சமயம் கிடைத்தது. நாராயணன் மேடையில் வாசித்துக்கொண்டிருந்தான். சேஷையரும் சுந்தரமையரும் வேலையாய் வெளியே போயிருந்தார்கள்; வீட்டிலுள்ள பெண் பிள்ளைகள் யாவரும், வாசற் கதவைத் தாளிடாமல் மூடிவிட்டு, கொல்லைப்புறத்தில் ஏதோ வேலையாயிருந்தார்கள்; கோபாலன் மட்டும் சாவித்திரியுடன் ஏதோ பேசுவதற்காக மேடையிலிருந்து கீழே இறங்கி வந்தான். கீழே முதல் நடைக்கட்டில் அவன் இறங்கியவுடன், இயல்பாகத் தலை பின்னிக்கொள்ள வந்த சாலா, வாசற் கதவைத் திறந்து, உள்ளே நுழைந்து, மறுபடியும் கதவை யடைத்துவிட்டு, வீட்டுட் போகும்படி திரும்பினாள். அவள், முதலில், கோபாலன் மேடையிலிருந்து இறங்கியதைப் பார்க்கவில்லை. இருவரும் வீட்டினுள்ளே செல்ல வேண்டியதா யிருந்ததாலும், சம வயதுள்ளவர்களானதால் ஒருவரோடொருவர் பேசுவது வழக்கமில்லையாதலினாலும், இருவரும், ஒரு நிமிஷம் வரை அங்கேயே திகைத்து நின்றார்கள். அதற்குள், கோபாலன் தன்னெண்ணத்தை நிறைவேறற அதே நல்ல சமயமென்று நினைத்து, படீர் படீரென்று பறையடிக்கும் தன் நெஞ்சத்தைத் திடப்படுத்திக் கொண்டு,

கொஞ்சம் கிட்டப்போய்ச் சாலா கையைப் பிடித்து, வாசலெதிரினின்றும் விலக்கி இழுத்தான். ஆகா! இதென்ன ஆச்சரியம்! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாயிற்றே! சாலா, கோபாலன் நினைத்தபடி, தன் கையைத் திமிறி யிழுத்துக்கொண்டு கருடனைக் கண்ட சர்ப்பம் போற் பதறியோடாமல், கொஞ்சம் புன் சிரிப்புடன், அவனருகே வந்து மேலே சாய்ந்து கொண்டு நின்ருள். அவளப்படிச் செய்யவே, கோபாலனுக்குப் புத்தி ஸ்தம்பித்துவிட்டது; சரீரம், உச்சி முதல் உள்ளங்கால்வரை நடுங்கி மயிர்க்கூச்செறிந்து வேர்த்துவிட்டது; கால் சுழன்று கீழே விழுந்து விடுவதுபோல், அயர்ச்சியுண்டாயிற்று; நாக்கு மேல் வாயுடன் ஆணியிட்டது போலிருந்தது; கண் மயங்கிவிட்டது; கோபாலன் பேசாததைக் கண்டு, சாலா, அவன் தோளில் கையைப் போட்டுக்கொண்டு, "இங்கே யாராவது வந்து விடுவார்கள்; மேடைக்குப் போவோம், வா," என்ருள். கோபாலனுடைய நாக்குக் கொஞ்சம் சுவாதீனமடைந்து, "மேலே நாணு இருக்கான்," என்று சொல்லிற்று. உடனே சாலா, "அப்படியானல் இப்பொழுது ஏன் கூப்பிட்டாய்? அப்புறம் பார்த்துக் கொள்வோம்; மறந்து விடாதே. அதோ வாசலில் யார் சத்தமோ கேட்கிறது; நான் போகிறேன்," என்று சொல்லிக், கோபாலனுடைய இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டு விட்டு, வீட்டுக்குள் விரைவாகப் போய்விட்டாள். ஒன்றுந் தோன்ருமல், நின்ற இடத்திலேயே தான் எவ்வளவு நேரம் நின்ருனென்பது கோபாலனுக்குத் தெரியாது. நாராயணன், "கோபு!" என்று கூவிய சத்தம் தன் காதில் விழுந்த பின்புதான், தன் ஞாபகம் முழுதும் வந்து, மெல்லப் படியேறி, மேடை போய்ச் சேர்ந்தான்.

அவன் முகக்குறிகளைக் கண்ட மாத்திரத்திலேயே, நாராயணன் பயந்து, "ஏது; என்ன சங்கதி, கோபு? உன் ஆம்படையாளைப் பற்றி ஏதாவது சமாசாரங் கிடைத்ததா? அல்லது சங்குவைப்பற்றி ஏதாவது சமாசாரங் கிடைத்ததா? அல்லது சங்குவைப்பற்றி ஏதாவது விசேஷமுண்டா?" என்று அவசரமாகக் கேட்க, கோபாலன், "அப்படி யொன்றுமில்லை; பயப்படாதே, கொஞ்ச நேரங்கழித்துச் சொல்லுகிறேன்," என்று சொன்னான்.

நடந்த சங்கதிகளைக் கேட்டவுடன், நாராயணன், விழுந்து விழுந்து சிரித்து, "அடா! அடா! தெய்வ பூசை வேளையில் கரடியை விட்டடித்த கதையாக, நான் இன்று உங்கள் சந்தோஷத்துக்குத் தடையாக வந்துசேர்ந்தேனே," என்று சொல்லிப் பரிகாசம் பண்ணினான். கோபாலனுக்கோ, ஒரு பக்கம் கோபமும், ஒரு பக்கம் பயமும், பொறுக்கமுடியவில்லை. அவன் கொஞ்சநேரத்துக்குப்பின், "நாணு! சும்மா சிரியாதே. எனக்கு முன்னிலும் அதிக விசாரமா யிருக்கிறது. முன்பு நாகமையரை மட்டும் பயந்தோம்; இப்பொழுது, அவரைவிட அதிகமாக அவர் மனைவியை அஞ்சவேண்டியதா யிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுடன் சாவித்திரி ஒரு நிமிஷமும் பழகலாகாது. வாத்தியார் சுப்பிரமணியையர், நம்முடைய பாலியர் விவகார சங்கத்தில், "இல்லறத்தின் மேன்மை" யைப் பற்றிப் பிரசங்கஞ் செய்யும்பொழுது டெனிசன் பிரபு என்ற இங்கிலீஷ்ப் புலவர் எழுதியிருப்பதாகச் சொன்னது, உனக்கு ஞாபகமிருக்கிறதா? தன் மனைவி கற்புத்தவறினவள் என்றறிந்திருந்தும், எவனொருவன் தன் சௌகரியத்துக்காகவாவது, தன் குழந்தைகளுடைய நற்பெயருக்காகவாவது, அவளைத் தன் வீட்டிலிருந்து இல்லறம்

நடத்தவிடுகிறானோ, அவன் தான், உலகத்துக்கு மிக்க நாசத்தை விளைவிக்கும் பகைவன்: ஏனெனில், அப்படிக் கற்புத் தவறிய அவன் மனைவி, மனிதரறியாத ஒரு புது வியாதிபோலெங்கும் பரவி, சிநேகிதர்களுடைய பாசத்தைத், தான் உண்டாகச் செய்யும் தீய எண்ணங்களாற் கெடுத்துத், தன் கண்களால், தீங்கை விளைவிக்கும் மின்னலொழுக்குக்களுக்குச் சமதையான கடைக்கண் பார்வைகளை நாலு பக்கமும் வீசி, வாலிபர்கள் மனத்தை விஷம் தீண்டியதுபோல் கெடுத்துவிடுவாள்.' அக்கவிஞர் கோமான் புருஷரைக் கெடுத்துவிடுவதை மட்டுஞ் சொன்னாரேயன்றி, அப்படிக் கெட்ட ஒரு பெண், தன் சோர நாயகருக்குத் தன் தோழிகளை யிணக்கியும், தான் கெட்டுப் போனதை நினைத்தே மற்ற ஸ்திரீகளையும் தன்னைப்போற் கெடுத்துவிட முயன்றும், மற்ற மாதர்களுக்குச் செய்யக்கூடும் தீங்கைப்பற்றி, அவர் கூறவில்லை. சாவித்திரி முழு முட்டாளாயிருந்தாலும் தாழ்வில்லை; கல்விக்காகக்கூட, இந்தச் சாலாவுடன் சேரலாகாது. இதற்கென்ன உபாயம்?" என்று கேட்டான்.

அதற்கு, நாராயணன், சற்றுநேரம் யோசித்துப், பின்பு, "உபாயம் ஒன்றும் சரியாகாது; நீ சாவித்திரி இடத்தில், பொதுவாக, 'சாலா பொல்லாதவளென்று ஊரிற் சொல்லுகிறார்கள்: அவள் மினுக்கையும் பிலுக்கையும் பார்த்தால், எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது; நீ அவள் பழக்கத்தை விட்டுவிடு,' என்று சொல்லு; நீ சொன்னால், காரணங்களொன்றும் கேட்கமாட்டாள்; அன்றிக் கேட்டாலும், உன் தகப்பனாருக்குக் கூடச் சாலா அடிக்கடி வீட்டுக்கு வருவது இஷ்டமில்லை யென்று, அவர் உன்னிடத்திற் சொன்னதாகச் சொல்லிவிட்டால், பிற்பாடு ஒன்றும் கேட்கவே மாட்

டாள். நம்முடைய உத்தேசம் நிறைவேறி விடும்" என்றான். கோபாலனும், அப்படியே சொல்லிவிட்டான். இரண்டுநாள் கழிந்தபின், நாராயணனும் கோபாலனும் சிந்துபூந்துறைக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். சாவித்திரி அவசியமானால் கடிதம் எழுதும்பொருட்டுக், கோபாலன் அவளுக்கு 'தபால் கவரும்' காகிதமும் வாங்கிக் கொடுத்து விட்டுப்போனான்.

இருபத்தினாலாவது அதிகாரம்.

நாராயணனும் கோபாலனும் வெகு சிரத்தையுடன் மேல் பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டு, தங்களுக்குத் தமிழிலிருந்த ஆசையைத் திருப்தி செய்யுமாறு, சிந்து பூந்துறைக்கடுத்த மயனூர் என்ற கிராமத்தில், ஒரு கோவிற் பூசாரியாகிய தமிழ் வித்துவானிடம், தினமும் மாலையிற் சென்று குறள், தேவாரம், கம்பராமாயணம் முதலிய புத்தகங்களை முறையாக வாசித்து வந்தார்கள். அப்பூசாரியின் பழக்கம், இவர்களுக்கு மிக்க நன்மைக்குக் காரணமாயிருந்தது. அவர், இவர்கள் வயதுக்குக் கொஞ்சம் மூப்பினராயினும், தம் அருமையான சாந்த குணத்தினாலும், ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, தமிழ், ஹிந்துஸ்தானி முதலிய பாஷைகளில் அடைந்திருந்த கல்வித் தேர்ச்சியினாலும், உலக நடவடிக்கைகளிலுள்ள அநுபவ ஞானத்தினாலும், பரோபகாரஞ் செய்ய வேண்டுமென்றிருந்த அவாவினாலும், இன்னும் வியக்கத்தக்க பல சற்குணங்களினாலும், எவ்வயதினருக்கும் கிடைத்தற்கரிய நேசபாத்திரமாயிருந்தார். எவ்விஷயத்திலும், அறிவினாலும் அநுபவத்தினாலும் மூத்த சகோதரர்போல், இவர்களுக்குப் புத்தி சொல்லித் தம்மாலியன்றமட்டும் நன்னெறி பிறழாது காத்து வந்தார். உதாரணமாக:—

இவர்கள், தங்கள் பாடமாகிய ஒரு ஆங்கில நாடகத்தில், "சிறிதும் சங்கீத ஞானமாவது, அல்லது இனிமையான சப்தங்களின் தொகுதியை அனுபவிக்குஞ் சக்தியாவது, தன்னிடத்திலில்லாத மனிதன், இராஜ துரோகங்களுக்கும், திருட்டுபாயங்களுக்கும், கொள்ளைக் களவுகளுக்குமே தக்கவன்; அவனுடைய ஆத்மசலனங்களெல்லாம், இராக்காலம் போல மந்தமாகவே யிருக்கும்; அவனுடைய ஆசாபாசங்களெல்லாம், நரகலோகத்தைப் போல் இருண்டதாகவே யிருக்கும்; அப்படிப்பட்ட மனிதனை நம்பலாகாது," என்று சங்கிதத்தைப்பற்றி ஒரு புலவர் திலகர் கூறியிருப்பதை வாசித்தார்கள். அளவற்ற சங்கீதக் கிறுக்குக்கொண்டு, ஊரில் அழையாத வீடுகளிலுங்கூட ஒரு பாட்டுக் 'கச்சேரி' தவற விடாமற் கேட்டுக் களிக்கும் நாராயணனுக்கு, இதைப்பற்றித், தன் தமிழ் வாத்தியாராகிய பூசாரியிடம் பேசவேண்டுமென்று விருப்பமிருந்தது. கோபாலனோ, சங்கீதத்தை வீண் கூப்பாடென்று நினைப்பவன். ஆனால் அந்தப் பூசாரிக்கோ, சங்கீத விஷயத்தில் நாராயணனிலும் அதிகக் 'கிறுக்கும்' ஞானமும் இருந்ததும் தவிர, கொஞ்சம் வாத்தியப் பயிற்சியும் உண்டு. ஒரு நாள் மாலையில், சிந்தாமணி யென்னுங் காவியத்தை வாசித்துக்கொண்டிருக்கையில், காந்தருவதத்தை யென்பவள் சீவகசாமியுடன் சங்கீதத்தில் போர் புரியும் பாகத்தில்,

"கோதை* புறந்தாழக் குண்டலமும் பொற்றோடும்
காதின் ஒளிர்ந்திலங்கக், காமர் நுதல் † வியர்ப்ப,
மாதர் எருத்தம்‡ இடங்கோட்டி, § மாமதுர
கீதம், கிடையிலாள் || பாடத் தொடங்கினாள்"

---

* கோதை—மாலை. காமர் நுதல்—அழகிய நெற்றி.

‡ மாதர் எருத்தம்—அழகிய பிடரி. § இடங் கோட்டி - இடப்புறமாக வளைத்து. || கிடை—உவமை;

என்ற செய்யுள் வந்தவுடன், நாராயணன்;"கோபு! நாளைக்குத் திருநெல்வேலி அம்மன் சந்நிதியில், தஞ்சாவூர் ரமாமணி என்றொரு தேவடியாள் வந்து பாடப் போகிறாளாம். அவள் சங்கீதத்தில் மஹா மேதாவியாம். நீ கேட்க வருகிறாயா?" என்று கேட்டான்.

பூசாரி:—ஆகா! அவ்வளவு பெரிய பாட்டுக்காரியா?

நாராயணன்:—ஆமாம்; எல்லாரும் வெகு சிலாக்கியமாய்ச் சொல்லுகிறார்கள். மஹா வைத்தியநாதையர் கூட, அவளைப்போல் கலியாணி ராகம் பாடமாட்டாராம். நீங்கள் கோவிலைவிட்டு வெளியேறுவதில்லையென்று வைத்துக்கொண்டிருக்கிறீர்களே; நீங்களும் கூட வந்தால், எவ்வளவோ சந்தோஷமா யிருக்கும்.

பூசாரி:—அப்படி யொன்றும் விரதமில்லை; அவசியமிருந்தால் வெளியே போகிறதுதான்; போனாலும், தேவடியாள் பாட்டுக் கேட்கவா போகவேண்டும்?

நாராயணன்:—அதென்ன அப்படி இழிவாய்ச் சொன்னீர்கள்? பாட்டுக்காகப் போகிறதா? தேவடியாளுக்காகப் போகிறதா? பாட்டிலுமா வியபிசாரத்துவம் ஒட்டிக்கொண்டிருக்கிறது? நாய் விற்ற காசு குரைக்குமா?

பூசாரி:—நீங்கள் சொல்வது ஒருவாறு நியாயந்தான். ஆனால் நிச்சயமாகத் தீங்காயிராதவற்றை யெல்லாம் நாம் செய்வது என்றால், சாத்தியமாகாது; உசிதமுமல்ல. தாசி சங்கீதத்துக்கு வியபசாரமில்லை; ஆனால் குலமகளொருத்தி பாடினால், அவளுடைய கற்பு அவளுடைய பாட்டைச் சேராமற் போனாலும், அது வேசி பாட்டினும் சிலாக்கியமானதுதான். பாருங்கள்! வெளிப்புறமெல்லாம் புகைக்கரியும் அழுக்கும் பிடித்த ஒரு பாண்டத்திற் கொஞ்சம் பாலும்,

அதி பரிசுத்தமான ஒரு பத்தரை மாற்றுத் தங்கக்கிண்ணத்திற் கொஞ்சம் பாலும் இருக்கிறதாக வைத்துக் கொள்வோம்: இரண்டும் சுத்தமான பாலாகவே இருக்கலாம்; ஆனால் மண் பாண்டத்துப் பாலைச் சாப்பிடுவதில் நம்முடைய உதடுகள் அசுத்தமாகி, உள்ளே கூடக் கொஞ்சம் அழுக்குப் புகக்கூடும்; சொர்ணப் பாத்திரத்துப் பாலைச் சாப்பிடுவதிலோ, அப்படிப்பட்ட பயமொன்றுமில்லை. ஒரு குலமகள் நன்றாகப் பாடினால், அவள் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து, அவளைப் பெற்றோரையும் மணந்தவனையும் நற்பாக்கியர்களாக மதிப்போமே யன்றி, எவ்விதக் கெட்ட எண்ணங்களும் மனத்தின்கண் உண்டாகமாட்டா; ஒரு தேவடியாள் மதுரமாகப் பாடினாலோ, அவ்விதமன்று: அவள் பாடும்பொழுதே, தன் கண்களை நாற்புறமுஞ் சுற்றி வீசுவாள்; தேகத்தைக் குலுக்குவாள்; புன்சிரிப்புக் காட்டுவாள்; காம அனலைக் கிளப்புதற்கேற்ற சிங்காரமான பதங்களை, மதுரமாகவும் உருக்கமாகவுமுள்ள குரலிற் பாடுவாள்; பாடிப் பணம் பறிப்பது தவிர, கேட்போரனைவரையும் தன் வசமாக்கிக் காசு பிடுங்கும் பொருட்டு, தான் கற்ற வித்தை யெல்லாங் காட்டுவாள். மனிதன் மனமோ பொல்லாதது; அதை அடக்குவதிலும் சிறந்த வித்தையே யில்லை. ஞானசித்திபெற்ற துறவியாகிய தாயுமானசுவாமிகளே,

“சொல்லான திற் சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டி யாட்டித்
துடையினிற் கிள்ளல்போல், சங்கற்ப மொன்றில்
தொடுக்கும்; தொடுத் தழிக்கும்;
பொல்லாத வாதனை யெனும்சப்த பூமியிடை
போந் துதலை சுற்றி யாடும்;

புருஷனில் அடங்காத பூவைபோல், தானே
புறம்போந்து சஞ்ச ரிக்கும்;
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடும்;
காணுது கேட்டவெல்லாங்
கண்டதாக் காட்டியே அணுவாச் சுருக்கிடும்
கபட நாடகசாலமோ,
எல்லாமும் வலதிந்த மனமாயை, ஏழையாம்
என்னுல் அடக்க வசமோ?"

என்றும், மஹா ஞானியாகிய பட்டினத்துப் பிள்ளையார்,

"பெண்ணுகி வந்தொரு மாயாபிசாசம் பிடித்திட்டு, என்னை,-கண்ணுல் வெருட்டி, மயக்கி, என் போதப்பொருள் பறிக்க, எண்ணுது உனை மறந்தேன், இறைவா கச்சி ஏகம்பனே," என்றும், மனத்தையும் மாதரையும் அஞ்சிக் கூறிஞராயின், கேவலம், கர்மஞ் ஞானமே தேர்ந்திலாத நம்போல்வார், எவ்வளவு பயந்து ஒழுகவேண்டும்? அன்றியும், மண், பொன், பெண் என்னும் மூன்றுசைகளுள், மண்ணுசையையும் பொருளாசையையுமாவது ஒருவாறு அறிவிஞற் கடந்துவிடலாம்; பெண்ணுசையோ கடப்பரிது. கம்ப ராமாயணத்தில், மந்திரைசூழ்ச்சிப் படலத்தில், இராமருக்கு யுக்தி, புத்திபோதிக்கும்பொழுது, வசிட்ட முனிவர் கூறும் ஒரு செய்யுள் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்:—

" * தூம கேது புவிக்கெனத் தோன்றிய
† வாம மேகலை மங்கைய ரால்வரும்
காமம் இல்லை யெனில், கடுங்கேடெனும்
நாமம் இல்லை: நரகமும் இல்லையே."

என்றும் கூறியிருக்கிறுர். இதைப் பதப் பொருட்படி

* தூமகேது—(துர்நிமித்தத்தைக் குறிக்கும்) வால்வெள்ளி.
† வாமமேகலை—அழகிய மேகலாபரணம் அணிந்த.

கொள்ளாவிட்டாலும், தீவழிக் காமத்தால் விளையக்கூடும் நாசத்தை, இது நன்று கூறுகின்றது. மனம் அடக்கரிதாயும், காமம் விலக்கரிதாயு மிருக்க, நம்முடைய அஜாக்கிரதையால், காமப்பேய் வசப்படுவோமாயின், அதனின்றும் நிவர்த்தி பெறலரிது. இராவணனைப் போல், 'சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுதை"யே மருந்தாகக் கொண்டு, மனம் போனவழிச் சென்று, விறகிட்ட தீப்போல மேன்மேலும் வளர்ந்தோங்கும் காமாக்கினியில் எரிந்து, அழிவோ மென்பதிற் சந்தேகமில்லை. கோட்டை கொத்தளங்களையும், கடுமையான காவல்களையும் கடந்து, இகழ்ச்சியையும் அவமானத்தையும் சிறிதும் நினையாது, தன் கருமமே கண்ணாக வினை செய்யவல்ல காமம், கேவலம் வெள்ளிக் காசுகளுக்கு அடிமைகளாகிய பொருட் பெண்டிர் வயப்பட்டக்கால், தன் இச்சையை நிறைவேற்றுது விடுமோ? துறவிகளும் சுத்த வீரருங் கூடக் காமப்புலி முன்னின்று போராடாமல், புறங்காட்டியோடலே தகுதி."

நாராயணன்:—ஆம்; நீங்கள் சொல்வதின் உண்மையை ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனாலும், எனக்குள்ள சில சந்தேகங்களை நீக்கவேண்டும்: தான் பெற்றிருக்கும் ஒவ்வொரு சக்தியையும் தக்கபடி விருத்தி செய்ய, மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்; அவ்வண்ணம் பயிற்சி செய்யாவிட்டால், ஆத்ம துரோகத்துக் குள்ளாகிறான். சங்கீத ஞானம் நம்முடைய சுகத்துக்காக அளிக்கப்பட்ட ஒரு திவ்ய உணர்ச்சி; அவ்வுணர்ச்சியை நாம் பாதுகாத்து வளர்க்காது விட்டுவிடின், அது வரவர மந்தமாகி அழிந்துபோய்விடு மல்லவா?

பூசாரி:—நீங்கள் கூறுவது மெய்யே; நான் முற்றிலும் ஒப்புக்கொள்ளுகிறேன். சங்கீத ஞானத்தைச் சாதாரண

உணர்ச்சிகளில் ஒன்ருகமட்டுஞ் சொன்னுற் போதாது: அது மிகவும் அற்புதமானது; எவ்வளவு பெரிய கவலைகளையும் அகற்றிக், களிப்பை யளிக்கத் தக்கது; துன்பத்திலேயே கிடந் துழலும் இச்சோற்றுத் துருத்தியாகிய பொய்யுடலை, மறக் கச் செய்யவல்லது. பகுத்தறிவில்லா மிருகங்களைக்கூட, மதி மயக்கி ஸ்தம்பனமாக்கத் தக்கது; மனிதனுக்குண்டாகும் சில நோய்களின் சொஸ்தத்தைக்கூடத் துரிதப்படுத்தும் சக்தி யுடையது: அன்றியும், உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத தாகிய காமத்துக்கு, ஒரு பலமான தூண்டுகோல் போன்றது. இக்குணத்தில் தான், அதன் பெருமையும் தீமையும் அமைந் திருக்கின்றன. அவ்வளவு சிறப்புற்றதாயினும், அதன் விருத் தியை நல்வழிகளால் நாடவேண்டுமேயொழிய, எவ்வழியா லாயினும் தேடுவது கொண்டாடத்தக்கதன்று. பரத்தையர் பாட்டைக் கேட்டுக் களிப்பதே முக்கிய வழியென்று கொள் ளலாகாது. கற்புத்தவருக் குலமகளிர் பாடக்கேட்கலாம்; தாமே பாடவும், வாத்தியங்கள் வாசிக்கவும், பழகலாம்; வேசிகளிடத்திலும் விடபுருஷர்களிடத்திலுமே பெரும்பா லும் அகப்பட்டிருக்கும் சங்கீதமானது, பெருமை குன்றி இழிவான நிலைமையில் கிடக்கின்றது; சர்ப்பத்தின் படத் தில் இருப்பதாகக் கூறும் நாகரத்நம்போல், பிறர்க்குப் பய னின்றி, உலகில் எங்கணும் விளங்கிப் புகழ்பெரு திருக்கின் றது. தக்கவர்களிடம் இருப்பின், சங்கீதத்திலும் மேன்மை யான பொருளில்லை. அன்றியும், வேசிகளிடத்திற் பாட்டுக் கேட்கவே கூடாதென்றும், அப்படிக் கேட்பவரெல்லாம் அவர்கள் காம வலையிற் சிக்கி, அவர்களுடைய பொய்மை மயக்கத்துக் குள்ளாகிருர்களென்றும், நான் கூறவில்லை; நான் சொல்வதெல்லாம், இவ்வளவுதான்: சங்கீதம் தெய்வீக

மான மனோ சுகத்தை யளிக்கத்தக்கதாயும்; மனிதனுடைய மனது, சித்தி பெற்ற துறவிகளாலும் அடக்கரிதாயும்; வேசிகளுடைய ஜால விநோதங்கள், அளப்பரிதாயும் இருப்பதால், சங்கீத ஞானமுள்ள ஆடவர்கள், விலைமகளிர்பால் சங்கீத சுகத்தை அநுபவித்தல் நன்றன்று. அவ்வாறு அநுபவிப்பார் யாவரும், நெறி பிறழ்ந்து கெட்டுப்போகா விட்டாலும் அடிக்கடி யுண்டாகும் பழக்கத்தால் பொது மகளிர் சகவாசத்தில் இயல்பா யுண்டாகும் வெறுப்பும் அவமானமும் வரவரக் குறைந்து, அது சாதாரணமாகத் தோன்றி, நம்முடைய ஆத்மசுத்திக்குக் கேடு விளைந்துவிடும். ஆதலால், நாம், அவர்பால் அதை அநுபவிப்பதினும், வேண்டுமானால் சங்கீதத்தை முற்றிலும் இழந்துவிடுதலே நலம்,'' என்று சொன்னார்.

இது வரையில் பேசாது கேட்டுக்கொண்டிருந்த கோபாலன், "நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால், மனிதன் மதிமருண்டு மோகிக்கும்படி, இந்தச்சங்கீதத்தில் உள்ள சுகம் எனக்குச் சிறிதும் புலப்படவேயில்லை'' என்றான். அதற்கு நாராயணன், வெகு ஆவலுடன், "அட, போடா! உனக்கென்ன தெரியும்? உன்னிடத்தில் சங்கீதத்தைப் பற்றிச் சொல்வதிலும், பிறவிக் குருடனிடத்தில், குற்றாலத்தருவியின் அழகைப்பற்றி வருணிக்கலாம்; சங்கீத விஷயத்தில், நீ பிறவிச் செவிடன்: பறையடிப்பதும், வீணைகானஞ் செய்வதும் உனக்கு ஒரே மாதிரியாகத்தானிருக்கும்,'' என்று சொல்லிப் பரிகாசம் பண்ணினான். இதற்குள் வெகு நேரமாய் விட்டதால், இவர்கள் பூசாரியிடம் விடைபெற்றுக்கொண்டு, சிந்துபூந்துறைக்குத் திரும்பிவிட்டார்கள். மறுநாள், நாராயணன், பாட்டுக்கேட்பதற்காகத் திருநெல்வேலிக்குப் போகாதிருக்கவில்லை.

தானிவ்வாறு தமிழ் கற்றதுமன்றி, நாராயணன், பத்மாவதிக்கும் தமிழ் சொல்லிக் கொடுத்து வந்தான். அவன் இஷ்டப்படி படிப்பதற்காகவே அவள் சிந்து பூந்துறைக்கு வந்திருந்தாள். பல துளி பெரு வெள்ளமாக, அவள் வெகு ஆவலுடன் தமிழில் தேர்ச்சி யடைந்தாள். அவளாகவே, அம்மானை, தாலாட்டு, கழற்சி, கோலாட்டப் பாட்டுக்கள் இவைகளை, மோனை எதுகையுடன் கமனஞ் செய்யத் தொடங்கி விட்டாள். அன்றியும், நாராயணனுடைய நிர்ப்பந்தத்தின் பேரில், அவள், கிராமாந்தர வழக்கத்துக்கு விரோதமாக, கோபாலனை "அண்ணு" என்று முறைவைத் தழைத்துக் கொண்டு, அவனுடன் சாதாரணமாகப் பேசுவதுண்டு; இவ்விதமாக அவளுக்கு இரண்டு உபாத்தியாயர்கள் அமைந்தார்கள். நாராயணனுடைய வேண்டுகோளின் பேரில், இங்கிலீஷும் வாசிக்கத் தொடங்கினுள். தவிரவும் நாராயணன், தான் கேட்கும் பாட்டுக் 'கச்சேரி'களில், யாராவது நல்ல பாட்டுகளைப் பாடினுல், அவற்றை எழுதி வந்து பத்மாவதிக்குக் கொடுத்து, அவளைப் பாடச் சொல்லுவான். இவ்விதமாக, அவள், சங்கீதத்திலும் தேர்ந்து வந்தாள்.

இருபத்தைந்தாவது அதிகாரம்.

சேஷையர் மனைவியாகிய கமலாம்பாள், தன் புருஷன் வீட்டுக்கு வந்து ஒரு மாதத்திற்குள் பக்குவதியானுள். அவர், அடுத்த வாரத்தில் ஒரு சுபதினத்தில் ருதுசாந்தி செய்தார். தம் பந்துக்கள் ஒருவரையும் அழைக்கவேயில்லை; கோபாலனுக்குக்கூடச் சொல்லியனுப்பவில்லை; அவர் மாப்பிள்ளை சுந்தரமையரும் ஊரிலில்லை; சங்குவைத் தேடப் போயிருந்தார். ஐயாசாமி வாத்தியாரும், தம் மனைவி வழியாகப் பந்து

வாகிவிட்ட நாகமையரும் மட்டும் கூடவிருந்து நடப்பித்தார்கள். இந்த உறவு வெளிப்பட்ட நாள் முதல், நாகமையர், சேஷையர் வீட்டில் நெருங்கிப் பழகத் தொடங்கினர். அவர் மனைவியாகிய சாலா, வழக்கம் போல் சாவித்திரி தன்னுடன் நேசம் பாராட்டாததற்குக் காரணம், கோபாலன் தன்னைப் பற்றி அவளிடஞ் சொல்லி யிருத்தலாகவே இருக்க வேண்டுமென்று நினைத்து, தானடைந்த அவமானத்தினாலேயே அவளை எதிர்க்கத் தொடங்கி, காமாக்ஷியம்மாள் கமலாம்பாளுடன் கூடிக்கொண்டு, சாவித்திரி வீட்டிலேயே அவளுக்கு விரோதமான கக்ஷியொன்று உண்டாக்கி விட்டாள். இவ்விதமாக, சாவித்திரியின் பிரியமில்லாமலே, அவள், முன்னிலும் அடிக்கடி வீட்டுக்கு வரத் தொடங்கினாள். சாவித்திரியோ, தன் கணவர் ஆக்ஞைப்படி, அந்நியர் வீட்டுக்குப் போவது கிடையாது. ஆனால், காமாக்ஷியம்மாளும், அவள் மகளும் சாலா வந்திராத பொழுதுதெல்லாம் அவள் வீட்டிலேயே போய்ச் சாவித்திரியைப்பற்றி வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள்.

சாவித்திரியின் மனவருத்தம் நாளுக்கு நாள் அதிகரித்தது. சங்குவைத் தேடப் போன அவள் புருஷர், மாதம் மூன்றாயும் வரவில்லை: கடிதமும் போடவில்லை. ஊரிற் சிலர், அவர் எங்கேயோ மலையாள தேசத்தில் ஒரு 'அச்சி' வீட்டோடு சுகமாயிருப்பதாகப் பேசிக் கொண்டார்கள். தன் தகப்பனாரிடத்தில், அவர் வராததைப் பற்றிச் சொன்னாள். "சரி: சங்குவைத் தேட இவன் போனான்; இன்னம் இவனைத் தேட யார் போகிறது? என்ன, பச்சைக் குழந்தையா? போனது போல் வருவான். யார் தான் என்ன பண்ணுகிறது?" என்று சினந்து பேசினார்.

அவர், முன்போல், தம் செல்வ மகள் சீமந்த புத்திரியுடன், அன்பாய் ஆதரவாய்ப் பேசுகிறதே யில்லை. கமலாம்பாள் தலையணை மந்திரம் செவியேற ஏற, அவருக்குத் தம் குழந்தைகள் மேல் வெறுப்பதிகரித்தது. முன்பெல்லாம், மாதத்தில் இரண்டுமுறை தம் குழந்தைகளைப் பாராவிட்டால், கண் பூத்துப் போமென்று, ஞாயிற்றுக்கிழமைதோறும் வண்டியனுப்புவார்; இப்பொழுதோ, விடுமுறை வாரங்களிற் கூட, ஊருக்கு வந்தாற் படிப்புக் கெட்டுப்போமென்று சிந்துபூந் துறையிலேயே இருந்து படிக்கும்படிச் சொல்லியனுப்பி விட்டார். சங்குவைப் பற்றி நினைக்கவேயில்லை; அவனோடிப் போனது காரணமாகத் தம் மாப்பிள்ளை சுந்தரமையரும் அவனைத் தேடி வீட்டை விட்டுப்போனதில், அவர் திருப்தியடைந்ததுபோல் தோன்றிற்று. இதையெல்லாம் நினைத்து நினைத்து சாவித்திரி இரவெல்லாம் அழுதுகொண்டிருப்பாள். பகலில், அவள், செந்தாமரை போன்ற முகம் வாடி, உடல் தளர்ந்து, நடைப் பிணம்போல் காலங் கழிப்பாள்; மிகவும் மானமுடையவளாதலால், தன் மாற்றார்முன் அழ நாணித், தன் துக்கங்களை எண்ணி யெண்ணி யழுதாறும்படி, இரவை எதிர்பார்த்திருப்பாள். சில சமயங்களில், காமாக்ஷியம்மாள் கொடூரமாகச் சொல்லும் சொற்கள், இராம பாணங்கள்போல் ஒருபுறம் பாய்ந்து மறுபுறம் உருவ, அவள் தன்னையறியாமல் ததும்பும் கண்ணீரை அடக்கிக்கொண்டு, மறைவாயோரிடத்திற் போயிருந்து அழுது ஆறுவாள். தன் துக்கத்தைச் சொல்லியழ ஒருவரும் கிடையாது. காமாக்ஷியம்மாள் உத்திரவின்றி, ஒருவரும் வீட்டுள் வரக்கூடாது. படிப்பும், படிப்பிலிருந்த ஆசையுங்கூடப் போய்விட்டது. இவ்வளவு விசாரங்களும் துக்கங்களும் போதாமல், இப்

பொழுது வீட்டு அடுக்களைவரையும் கூசாமல் அடிக்கடி வந்து உறவு குலாவும் நாகமையர், சாவித்திரியை விழித்து விழித்துப் பார்க்கவும், ஜாடைகள் செய்யவும், அவள் யாரிடத்திலாவது பேசினால் அதற்குத் தாம் பதிற் பேசவும் துணிந்து விட்டார். ஊர் வாயை மூடலாமா? மறைப்பதி னாற் பயனென்ன? அவர், சொற்ப நாள்களுக்குள், சேஷை யர் மாமியாரையும் மனைவியையும் தம் கைவசப்படுத்திக் கொண்டார். 'சேஷையர் முதலில் ஆயிரக் கணக்காகப் பணஞ் செலவழித்துக் கூடலூர் வக்கீல் அண்ணுசாமியை யருக்கு ஒரு பெண்சாதி சம்பாதித்துக் கொடுத்தார். இப் பொழுது, மறுபடியும் வெகு திரவியம் செலவு செய்து தம் வீட்டிலேயே வைத்துச் சாதமும் போட்டு, நாகமையருக்கு இரண்டு பெண்டாட்டிகள் தேடிக்கொண்டு வந்து கொடுத் திருக்கிறார்' என்று ஊரெல்லாம் பரிகாச வார்த்தை பரவிற்று. அச்சொல், சாவித்திரி காதுவரையும் எட்டிவிட்டது. அவ ளுக்குண்டான அவமானமும், துக்கமும், பயமும் சொல்லி முடியாது. அரக்கிகளாற் சூழப்பட்டு, இலங்கேசனால் துன் பப்பட்ட சீதா பிராட்டியைப்போல், அவள், காமாக்ஷியம் மாள், கமலாம்பாள், சாலா முதலியவர்கள் மத்தியில், நாக மையரால் துயரமடைந்தாள்.

''வன் *மருங்குல்வாள் அரக்கியர் நெருக்க அங்கிருந்தாள்;
கன் மருங் † கெழுந்தென்றும் ஓர் துளிவரக் காணா
நன்மருந்து போல், ‡ நலன் அற உணங்கிய §நங்கை,
மென்மருங்குல் போல்வேறுள அங்கமும் மெலிந்தாள்;''

அந்தோ! அரக்கர் நாடாகிய இலங்கையிலும் கூட அப் பிராட்டிக்குத் திரிசடை யென்று ஒரு தோழி யகப்பட்டாள்;

---

* மருங்குல்—இடை. † மருங்கு—பக்கம், ‡ நலன்—அழகு.
§ உணங்கல்—வாடல்.

சாவித்திரியோ, பிறந்த வீட்டிலே இருந்தும், அவள் பொருட்டுப் பரிதாபப்படுவார் ஒருவருமில்லை; சரீரம் துரும்பாய்விட்டது; இரண்டு தரம் தற்கொலை செய்துகொள்ளவெண்ணி, மேடையிற் போய் நான்றுகொள்ள முயன்றாள்; மனம் துணியவில்லை. கடைசியில், ஒரு நாள், ஒருவரும் அறியாமல், பின்வருங் கடிதத்தை யெழுதிக் கோபாலனுக்கு அனுப்பி விட்டுப், பதிலை எதிர் பார்த்திருந்தாள்.

அரியூர்,
செவ்வாய்க்கிழமை.

என் அன்புள்ள அம்பி கோபுவுக்கு,

நான் இங்கே படும் கஷ்டம் நீ நேரில் பார்த்தால் சகிக்க மாட்டாய்; எழுத முடியாத சங்கதிகள் எல்லாம் நடக்கிறது. நாகமையரும் சாலாவும் எப்பொழுதும் நம்மாத்தோடுதானிருக்கிறார்கள். அவர் நடத்தையைப் பார்த்தால் அவரே முந்திய காகிதம் எழுதினரோ என்று நினைக்கிறேன். உன் அத்தம்பியார் இப்படி என்னைச் சந்தியில் நிறுத்திவிட்டுப் போய்விட்டார். அவர் இருந்தால் பயமின்றி ஊட்டுப்புரையில் போயாவது நெல்லுக்குத்தியாவது பிழைக்கலாம். உன்னைத் தவிர எனக்கு வேறு கதியில்லை. அப்பாவோ, சொல்ல வேண்டாம். எனக்கு வேறு யாரிருக்கிறார்கள்? எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. அந்தப்படி செய். உன் ஆம்படையாள் சௌக்கியமாயிருக்காளாம். நீ அவளைக் கூட்டிக்கொண்டு சிந்துபூந்துறையில் வைத்துக்கொள். நானும் அவளுக்குத் துணையாக அங்கே வந்திருக்கேன். நீங்கள் ஒரு வேளை என்னை என்ன சொன்னாலும், எவ்வளவு கஷ்டப்படுத்தினாலும், பொறுத்துக்கொள்ளலாம் போலிருக்கு. நான் இங்கே படுகிற கஷ்டம் அப்படியிருக்கு. நேற்று வந்த நாயும் பேயும்

ஒவ்வொரு வார்த்தை சொல்லுகிறபோது, என்னால் சகிக்க முடியவில்லை. இரண்டுதரம் பிராணனைவிடப் பார்த்தேன். பாவி மனம் துணியவில்லை. போய்விட்டால் எப்படி? இன்னும் உங்கத்திம்பியாருக்கு வாழ்க்கைப்பட்டதுக்கு, உள்ள சுகங்களையெல்லாம் அநுபவித்தால்தானே தீரும். நீ இந்த ஞாயிற்றுக்கிழமைக்குள் ஏதாவது ஏற்பாடு செய்து, வந்து கூட்டிக்கொண்டு போகாவிட்டால், எப்படியாவது என் பிராணனை விட்டுவிடுகிறது நிச்சயம். என்னை உயிரோடு திரும்பப் பார்க்கமாட்டாய். நீ செலவுக்கு என்ன செய்கிறதென்று யோசிக்கவேண்டாம். நாமெல்லாம் வீட்டைவிட்டு ஒழிகிற பக்ஷத்தில் அப்பாவே ரூபா தருவார். இல்லாவிட்டாலும், உன் வேட்டாத்தில் கேட்ட பணம் தருவாள். அதுவும் இல்லை யின்னாலும், நீ இன்னும் முப்பது வருஷம் கழிச்சு, சம்பாதிக்கத் தொடங்கினாலும், அதுவரைக்கும் என் நகைகள் போரும். என்மேல் உனக்குக் கொஞ்சமும் இரக்கமுண்டானால் என்னை உயிரோடு காணவேணுமானால், உடனே ஏற்பாடு செய்து புறப்பட்டுவா.

இப்படிக்கு உன் அக்காள்,

சாவித்திரி.

இந்தக் கடிதத்தை அனுப்பியபின், நாலு நாள்களையும் நாலு யுகங்களாகச் சாவித்திரி கழித்தாள். கோபாலன் கடிதம் போட்டதாகக் கல்யாணியைக் கூட்டிக்கொண்டு, சனிக்கிழமை யன்றிரவே அவன் மைத்துனன் அரியூர் வந்து சேர்ந்தான். மறுநாள் காலையில் கோபாலனும் வந்துவிட்டான். தன் மனைவியையும் சாவித்திரியையும் சிந்துபூந்துறைக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று கோபாலன் சொன்னவுடன், குற்றமுள்ள நெஞ்சையுடைய சேஷை

யர், தம் குழந்தைகளைக் கண்டே பயந்துவிட்டார். பழைய அன்பும் ஆசையும் அவர் முகத்தில் தோன்றின. ஆனால், அவர் ஒன்றுந் தடை சொல்லாமல், வெகுதூரம் வரை, கன்றின்பின் செல்லும் கறவைப் பசுவைப்போல், தியங்கித் தியங்கிச் சென்று வழியனுப்பினர். அன்று முழுதும், அவர், தம் மாமியாரோடும் மனைவியோடும் பேசவேயில்லை. கோபாலன் கையில் ஐம்பது ரூபா கொடுத்தனுப்பியதும் தவிர, மாதமாதம் தேவையான மட்டும் அவன் செலவுகளுக்கு ரூபா கொடுக்கும்படி, திருநெல்வேலியில் தம் காரியஸ்தனுக்குக் கடிதமும் கொடுத்தனுப்பினர். ஆனால் தம் குழந்தைகள் மேலுண்டான அன்பும், தம் கொடிய மாமி மனைவிமேலுண்டான கோபமும், கோடைகாலத்து மின்னலுக்குச் சமானமாயினவே யன்றி, நிலைத்திருக்கவில்லை.

இருபத்தாறுவது அதிகாரம்.

ஒரே தாய் வயிற்றிற் பிறந்து, அன்பென்னும் அமுதுண்டு வளர்ந்து, ஒருவருக்கொருவர் பொறாமை உண்டாகா வண்ணம் தக்க கல்விப் பொருளும் செல்வப் பொருளும் நிறைந்துள்ள கணவர்களுக்குப் பெண்டு புகுந்த மூன்று சகோதரிகளைப்போல், சாவித்திரி, கல்யாணி, பத்மாவதி யென்னும் மூன்று பெண்களும் வெகு அந்தரங்க நேசத்துடனும் ஒற்றுமையுடனும் கூடி விளையாடி, கற்று, சல்லாபித்துப் பேசி, தங்களுள்ளமும் கண்டவருள்ளமும் களிக்க ஒரு தடாகத்தில் வாழும் மூன்று அன்னப்பேடுகளைப்போல் வாழ்ந்து வந்தார்கள். ஆயினும், அழகிலும், குணத்திலும், புத்தியிலும், வாழ்க்கை வகையிலும் ஒருவருக்கொருவர் பேதமுள்ளவர்களா யிருந்தார்கள்.

சாவித்திரியின் அழகையும் குணாதிசயங்களையும் பற்றி இதற்குமுன் கூறியிருக்கிறோம். தன் கணவர் நிமித்தமடைந்த சிறுமையும், முற்கூறிய மற்றவிசாரங்களும், அநுபவங்களும் அவள் குதூகுலத்தைக் குறைத்து, அவள் அழகையே விசனகரப்படுத்திய போதிலும், அவளுக்கு அமிதமான சாந்தத்தையும் ஞானத்தையும் அளித்தமையால், அவள், பிஞ்சிற் பழுத்த கனிபோல் விளங்கினாள். அன்றியும் அவள், மூப்பினாலும், காதல் வாழ்க்கையைத் துறந்திருத்தலானும், மற்ற இருவரையும் மேற்பார்வை செய்து நன்னெறி நடாத்தும் ஒரு மூத்த சகோதரிபோ லிருந்தாள்.

கல்யாணியோ, மிகச் சிவப்பு நிறமான மெல்லிய தேகத்தை யுடையவள்; அவள் கண்களில், விவரிக்க முடியாத ஒருவித அழகானது எப்பொழுதும் பிரசன்னமாகத் துலங்கி, அவள் அரைக்கண் மூடி யுறங்கும் காலத்தும், கண்டவரையெல்லாம் பிரியப்படுத்திக் களிக்கச்செய்யும். அவள் தூங்கும்பொழுது கோபாலன் அவள் பக்கத்தில் வீற்றிருந்து, வெகுநேரம் வரை இவ்வழகை அநுபவித்துக் கொண்டிருப்பான். "* வதனம், † மைதீர்க்கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்," என்றது அவள் முகத்துக்கும் கண்களுக்குமே பொருந்தும். அவள், தன் கணவன் காதலைக் கொள்ளைகொண்டு, அவன் உயிர் நிலையாக விளங்கினாள். அவளுண்டானால் கோபாலனுக்குப் பொழுது விடியும். அவளும் அவனை யப்படியே நேசித்து வந்தாள்; ஆனால், அவர்களிருவருக்கும் இடைவிடாது மனவருத்தத்தை விளைத்துக் கொண்டே யிருக்கக்கூடிய குணமொன்று, அவளிடத்தில் அமைந்திருந்தது. இயல்பாகவே, அவள் கொஞ்சம் மன

* வதனம்—முகம். † மைதீர்க்கஞ்சம்—மாசற்ற தாமரை மலர்.

முரண்டுடையவள்; ஒரு தாய்க்கு ஒரு பெண்ணாக அளவிறந்த செல்வத்தில், வளர்ந்ததினால் அக்குணம் பலமடைந்திருந்தது. அவ்வள் வீட்டில் அவள் சொன்னதே சட்டம், குழந்தைப் பருவத்தில் சீர்திருத்துவாரின்றி இப்படி வளர்ந்துவிட்டாள். ஆகையால், அவள் சொல்வது சரியாயினும் தவறாயினும், யாராவது தடுத்துச் சொன்னால், அடங்காக் கோபமடைவாள்; அவ்வாறு தடுத்துச் சொல்பவர், தன்மேல் அன்புடையவர்களா யிருந்துவிட்டால், அவளால் பொறுக்கவே முடியாது; ஆறாகக் கண்ணீரைப் பெருகவிட்டு அழுவதுமன்றி, தன்னைத் துயரப்படுத்த வேண்டுமென்றே அவர்கள் அவ்வாறு செய்ததாக நினைப்பாள். இக்குணத்தை முதல் நாளே கோபாலன் கண்டு கொண்டான். ஏதோ ஒரு மிகவும் அற்பமான விஷயத்தில், அவள் மனப்படி யிணங்காததற்காக, அவள், அவனைச் சற்றும் காதலில்லாக் கள்வனாகப் பழித்து, தன்னையும் அவனையும் துக்க சாகரத்துள் மூழ்கச் செய்ததுமன்றி, அவன் உடனே தன் மனப்படி ஒழுகி மன்னிப்புக் கேட்டதற்கும் செவி கொடுக்காது முரண்டினாள். தன்னுயிர் நிலையாகிய கல்யாணி, தன் ஒப்பற்ற காமக்களஞ்சியங்களாகிய கண்களால் நீர்வடித்து விம்மி விம்மி அழுதால், அவன் என்ன செய்வான்? எவ்வாறு சகிப்பான்? சில சமயங்களில், தன்னைத் தெய்வத்தினும் மேலாகக் கொண்டாடி, அன்பு பாராட்டிப் புகழ்ந்து தேவேந்திர போகத்துள் ஆழ்த்திப் பரவசமாக்கும் தன் மனைவி, சில சமயங்களில், அரைக்காசும் பெறாத சங்கதிகளுக்காக யாவற்றையும் மறந்து, காதலையும் துறந்து, தன்னையும் இகழ்ந்து, தீயில் வாட்டுவது போல் தன் மனத்தைத் துன்புறச் செய்வதன் காரணம், அவன் புத்திக்குப் புலப்படாது, ஒருவேளை, முன்னிருந்த

தேவதாபாதையின் கோளாறுகவே இருக்கலா மென்று நினைத்தான். காதல் வசப்பட்டொழுகும் கோபாலன், கல்விப் பயிற்சி முதலிய அதிமுக்கியமான விஷயங்களிலுங்கூட, அவள் மனம் போனபடி போகவிட்டு, சாவித்திரியையும் அவளோடு வெகு கவனமாகப் பழகும்படி எச்சரித்து, பின் விளையக்கூடும் தீங்கை ஓராமுய், எது எவ்விதமாயினும், தன் மனைவி அழாமலிருக்கும்படியான வழியாக நடந்து வந்தான். கல்யாணியின் மனத்தை மழைக்காலத்து வானத்துக்கு ஒப்பிடலாம்: இந்த நிமிஷத்தில் மாசற்று விளங்கினும், அடுத்த நிமிஷத்தில் திடீரென்று மேகங்களால் மூடப்பட்டு, மின்னலும் இடியும் முழங்கச் சரமாரி பொழிந்து விடும்; ஒரு நிலையில்லை.

இன்னுங் குழந்தைப் பருவம் நீங்காத பத்மாவதியோ, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விருத்தியடைந்துகொண்டே வந்தாள். அவளிடத்தில், மூவரினும், விளையாட்டுத் தன்மை இயல்பாகவே அதிகம்; ஆனுல் எக்குணத்துக்கும் மேலாக ஒரு குணம் விளங்கிற்று: எப்பாடுபட்டாயினும் தன் கணவன் மனத்துக்கிசைய நடந்து, அவனுல் மெச்சப்பட்டு, அவன் காதலை அடிமைகொள்ள வேண்டுமென்ற அவாவினளா யிருந்தாள். அவ்விஷயத்தில் மட்டும் மெய்வருத்தம் பாராள்; பசி நோக்காள்; கண் உறங்காள்; எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாள்: அவமதிப்பும் பாராள். அவளுடைய ஒவ்வொரு செய்கையிலும் இக்குணமே முக்கியமாய் விளங்கிற்று: அவள், மற்றவரினும் அதிக வருத்தமெடுத்துப் படித்தால், அது நாராயணனுக்கு அதிகத் திருப்தியை யுண்டாக்கு மென்றே; வஸ்திரத்தை ஒருவிதமாகத் தரித்துக்கொண்டால், அப்படித் தரித்தல்

வெகு அழகா யிருக்கிறதென்று அவன் ஒருநாள் சொல்லி யிருந்ததினாலேயே; மாலைநேரத்தில் தலைவாரி நெற்றிக்குப் பொட்டிட்டுச் சிங்காரஞ் செய்துகொண்டு, நடைத்திண்ணையி லிருந்து தமிழ்ப் பதங்களைப் பாடிக்கொண்டிருந்தால், அவன் பள்ளிக்கூடத்திலிருந்து களைத்து வரும்பொழுது, அதைக் கேட்டுக் களிப்புறுவானென்று கருதியே: அவள் உண்பதும் உறங்குவதும் கூட, அவன் பொருட்டென்றே சொல்ல வேண்டும். அவளுடைய வாழ்க்கையை ஒரு நல்முத்து மாலைக்கு உவமைப்படுத்தினால், கணவன் மனப்படி யொழுக வேண்டுமென்ற அவள் உட்கருத்தை, அம் முத்துமாலையின் ஊடு சென்று, கோவை பிரியாது காக்கும் பட்டு நூலுக்குச் சமானமாகச் சொல்லலாம்.

இப்பெண்கள் மூவருள், எவள் அதிக அழகி, எவள் சிறந்த குணவதி, எவள் உயர்ந்த பாக்கியவதி என்று கேட்டால், என்ன சொல்லுகிறது? தேக வளர்ச்சியிலும், நடை உடை பாவனைகளிலும், இதழின் அழகிலும், கூந்தலழகி லும், சாவித்திரியே சிறந்தவள்; மேனியிலும், கண்ணழகி லும் கல்யாணியே சிறந்தவள்; சரீரக் கட்டிலும், அவயவங்க ளின் வடிவிலும் பத்மாவதியே சிறந்தவள். சாந்தத்திலும் குணசீலத்திலும் சாவித்திரியே மிக்கவள்; காதற் பெருக்கி லும் வாஞ்சையிலும் கல்யாணியே மிக்கவள்; பர்த்தாவின் மனதறிந்து நடத்தலிலும், ஊக்கத்திலும், பத்மாவதியே மிக்க வள். யாவற்றையுஞ் சீர்தூக்கிப் பார்த்தால், பத்மாவதியே அதிபாக்கியவதி யென்றும், சாவித்திரியே துர்ப்பாக்கியவதி என்றும் சொல்லவேண்டும். கலியாணியோ, ஒவ்வொரு காலங்களில் தன் காதலனோடு மனோரஞ்சிதமாக அனுபவிக் கும் இன்பம் மதிப்புக் கெட்டததா யிருப்பினும், சில காலங்

களில் அவள் படுந்துயரமும் அளிப்பரிதாகவே யிருந்தது. ஆனால் பத்மாவதியின் பாக்கியமே, என்றும் சமமாய், ஏற்றத்தாழ்ச்சி யின்றி யிருந்தது.

நாராயணன் வீட்டுக்கடுத்த வீட்டையே கோபாலன் குடிக்கூலிக்கு வாங்கியிருந்தபடியால், இருவரும் ஒரு வீட்டிலிருப்பது போலவே வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் மாலையில், சாவித்திரி, நாராயணன் வீட்டுக் கொட்டிலிலிருந்து கல்யாணிக்கும் பத்மாவதிக்கும் தலை வாரிக்கொண்டிருந்தாள். இவர்கள் யாவர்க்கும் தாய்போன்ற சீதையம்மாள், அன்று சோமவாரமானதால் சிவதரிசனம் செய்யும்பொருட்டுக் கைலாசபுரத்துக்குப் போயிருந்தாள். நாராயணனும் கோபாலனும் கொஞ்சதூரத்தில் ஒரு மறைவிலிருந்து ஒரு இங்கிலீஷ் புஸ்தகத்தை வாசித்துக்கொண்டும், இடையிடையே சாவித்திரியுடன் பேசிக்கொண்டு மிருந்தார்கள்.

அப்பொழுது, நாராயணன், "கோபு! இதைக் கேட்டாயா? இந்தக் கவிசொல்வது பெரும்பான்மையும் உண்மையாகவே இருக்கிறது," என்று சொல்லி, இங்கிலீஷில் இரண்டு செய்யுளடிகளை வாசிக்க, சாவித்திரி, அதன் பொருளென்னவென்று கேட்டாள். அதற்குக் கோபாலன், "அர்த்தமா? எல்லாம் உங்களைப் பற்றித்தான். இந்தப் புஸ்தகம் எழுதியவன் 'போப்' என்ற ஒரு இங்கிலீஷ் கவிராயன். அவன் சொல்லுகிறான், "பெண் பிள்ளைகளிற் பெரும்பான்மையோருக்கும் நிலைத்த குணமொன்றுங் கிடையாது; நிலைத்த குறிகளைக் கொள்வதற்கு அவர்கள் தக்கவர்களன்று; அவர்களைக் கறுப்பி, பொது நிறமுடையவள், சிவப்பி என்றுதான் வேறுபடுத்திக் கூறவேண்டும்," என்றான். உடனே பத்மாவதி, மிருதுவாக வென்றாலும் அவர்கள் மதிப்பில்

படிக்கும் சாவித்திரியிடம் கேட்பதுபோல, "அதென்ன? அண்ணு சொல்லுகிறது எனக்குத் தெரியவில்லையே" என்ருள். அதற்கு நாராயணன், "அதன் கருத்தென்ன வென்ருல், ஸ்திரபுத்தி யுடையவர்களா யிருந்து, நிலையான கொள்கை களைக் கொண்டு, அந்தக் கொள்கைகள் வழியிலேயே நடந்து, புருஷர்கள் காரியங்களைச் சாதிப்பதுபோல, பெண்பிள்ளை கள், செய்யார்கள். ஒரு புருஷனைக் குறித்துப் பேசினுல், 'அவன் முற்கோபி, ஆனல், எடுத்துச் சொன்ருற் கேட் பான்; நியாயம் தவறமாட்டான்,'' என்றும், அல்லது,'இவன் சத்தியவான், என்ன நேரிடினும் மெய் தவறமாட்டான்' என் றும், சில குணங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்: பெண் களைப்பற்றி யப்படி யுறுதியாகக் கூறமுடியாது. அவர்களுக்கு மனங்கொண்டதே மாளிகை, நிலைத்த கொள்கைகளும் ஸ்திர புத்தியும், திடசித்தமும் அவர்களுக்குக் கிடையா. அப்படிப் பட்டவர்களைக் குணபேதப்படி வகுத்து வருணிக்க முடியாத தால், கேவலம், சரீரச் சின்னங்களையே நிலையாக வைத்து, சிறுத்தவள், பருத்தவள், நெடியவள், குறியவள், கருப்பி, சிவப்பி, என்றே வித்தியாசப்படுத்திக் கூறவேண்டும்' என் ருன். அதற்குப் பத்மாவதி, சிரித்துக்கொண்டு, "முதலில் என்னைத்தான் எடுத்துக் கொள்கிறது. ஒருநாள் கன்றுக் குட்டியின்பேரில் பிரியமாயிருக்கிறது; மறுநாள் அதைக்கண் டாலே கோபம் வருகிறது: இந்த அற்ப சங்கதியிற்கூட ஸ்திர புத்தியில்லை,'' என்று சொன்னுள். கோபாலனும் சிரித்துக் கொண்டு, "உதாரணமாய்ப் பாரேன். பத்மாவதிக்கு ஏதா வது ஸ்திரமான குணத்தைக் கற்பனையாய்க் கூறவேண்டு மென்ருல், அவள் புருஷன் மனப்படி நடக்கப்பட்டவள் என்ருவது சொல்லலாம். பிறர் மனப்படியே நடப்பது ஒரு

தனிமையான குணமாகாவிட்டாலும், எப்பொழுதும் அப்படியே செய்வதால், நிலைத்ததாகச் சொல்லலாம். ஆனால், கல்யாணியைக் குறித்து என்ன சொல்லுகிறது? (அவளைப்பார்த்துச் சிரித்துக் கொண்டு) என்ன கல்யாணி! பத்மாவதி பிறர் மனப்படி நடக்கப்பட்டவள்; நீ, உன் மனப்படி எல்லாரும் நடக்காவிட்டால் அழப்பட்டவள், என்று சொல்லலாமா?" என்று பரிகாசமாய்க் கேட்டான். இப்படி விகடமாகப் பேசினால், யாவரும் சிரிப்பார்கள், முக்கியமாகக் கல்யாணியே சிரித்துச் சந்தோஷப்படுவாளென்று நினைத்துக், கோபாலன் இவ்வாறு சொன்னான். ஆனால் ஒருவரும் சிறிதும் எதிர்பாராத விதமாக, அசைவற்றுப் பளிங்குபோல் விளங்கிய ஒரு தாமரைத் தடாகத்தின் நடுவே ஒரு சிறு கல் விழுந்தபொழுது எல்லாம் குலைந்து தத்தளித்துத் தடுமாறி அலங்கோலப்படுவது போல், அவர்கள் களிப்பெல்லாம், கோபாலன் வாய் மூடுமுன் குலைந்துபோயிற்று. கல்யாணி, திடீரென்றெழுந்து ஒரு மூலையிற் போய்ப் படுத்துக் கொண்டு, அழத் தொடங்கிவிட்டாள். ஒவ்வொருவரும் தங்களாலான மட்டும் நயமாகவும், விநோதமாகவும், விவகாரத்தோடும் சமாதானப்படுத்திப் பார்த்தும், அவள் அழுகை நிற்கவில்லை. கோபாலனுக் குண்டான கோபமும், துக்கமும், கிலேசமும் சொல்லி முடியாது. அவள் பக்கத்தில் போயுட்கார்ந்து கொண்டு, தன்னாற் கூடிய மட்டும் புத்தி கூறியும், மன்னிப்புக் கேட்டும், தனக்குண்டான கிலேசத்தையும் மனவருத்தத்தையும் பற்றி முறையிட்டும், சாந்தப்படுத்திப் பார்த்தான். ஒன்றுக்கும் இணங்காமல், அவள் பேசப்பேச அழுகை அதிகப்பட்டதால், அவன் மிக்க வெறுப்புடனும் விசனத்துடனும், 'போப் கவி சொன்னது நூறுகரத்துக்கு மெய்

தான்,' என்று சொல்லி விட்டு, வெளியே போய் விட்டான். முடிவில், சாவித்திரி வெகு நேரம் வரையும் கல்யாணி பக்கத்திலிருந்து புத்தி சொல்லி, தான் படும் துயரத்தையும் தந்திரமாகக் கூறி, அரிதில் சாந்தப்படுத்தினுள். அன்று முழுதும் கல்யாணி ஒருவருடனும் சந்தோஷமாகப் பேசவேயில்லை.

இருபத்தேழாவது அதிகாரம்.

முந்திய அதிகாரத்திற் கூறிய சங்கதிகள் நடந்து வருஷம் ஒன்றுக்கு மேலாய் விட்டது. பரீக்ஷை வருஷமானதால் நாராயணனும் கோபாலனும் வெகு சிரத்தையுடன் வாசித்துக் கொண்டு வந்தார்கள். நாராயணன் இப்பொழுது பாட்டுக் 'கச்சேரிகளைக்' கூட அவ்வளவு கவனிப்பதில்லை. மயனூர்ப் பூசாரியிடம் சென்று தமிழ் கற்பதையும் நிறுத்தியிருந்தார்கள். தன் பெண்டாட்டி வீட்டுக்கு வந்துவிட்டதால் பரீக்ஷை தவறிப் போயிற்றென்ற அவமானம் வராமல், எவ்விதமாவது தேறிவிட வேண்டுமென்பது கோபாலன் கருத்து; நாராயணனுக்கோ, பத்மாவதி பெரியவளாகி வீட்டுக்கு வருமுன் தன் படிப்பெல்லாம் முடிந்து, பொருள் சம்பாதிக்கத் தொடங்கிவிடவேண்டுமென்ற ஆசை யதிகமாயிருந்தது: ஆகவே, இருவரும், தங்களாலியன்ற மட்டும், சிரமத்தைப் பாராட்டாமற் படித்து வந்தார்கள். ஆனல் கோபாலன் படிப்புக்கு ஒரு பெரிய தடை யிருந்தது: இரவில் மணி ஒன்பதாய் விட்டால், அவன் சயனித்துக் கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால் அவன் மனைவியின் மன வருத்தத்துக்குள்ளாவான்; கல்யாணியைக் கோப மூட்ட, அவன் ஒரு போதும், துணியவே மாட்டான்; அவள் கோபாவேசத்

தைத் தாங்குவது ஆயிரந் தலைபடைத்த ஆதிசேஷனுக்கும் அரிதன்றோ. இதன் பொருட்டு, அவள் தூங்கிய பின், அவ னெழுந்து, அவளறியாமல் வாசிப்பது வழக்கம். சிற்சில சமயங்களில், அவளுடைய முரண்டின் மூலமாக அவ னடைந்த செல்லாச் சினத்தையும், கிலேசத்தையும், மன வெறுப்பையும், எம்மால் விவரிக்க முடியாது.

ஒருநாள் நாராயணனும் கோபாலனுமாகவிருந்து தங்கள் பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தார்கள். சாவித்திரி அவர் கள் பக்கத்திலிருந்து ஒரு கைக்குழந்தையுடன் கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்தாள். அது ஆண் குழந்தை. முகக்குறிக ளைப் பார்த்தால் கோபாலனுக்கும் கல்யாணிக்கும் பிறந்ததா கவே இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இல்லாவிடின் இவ்வளவு கண்ணழகும், எலுமிச்சம்பழம் போன்ற நிறமும், கோபாலன் தலைமயிரைப் போல் படிப்படியாய்த் தொங்கும் கறுத்த குஞ்சியும் எங்கிருந்து வந்தன; தவிரவும், கோபா லன், கைப்புஸ்தகத்தைக் கவனியாமல், அடிக்கடி, சாவித்திரி கொஞ்சுவதையும், அக்குழவி அவள் முகம் பார்த்துச் சிரித்துக் குழறுவதையும், பார்த்துப் பார்த்துத் தோள்கள் பூரித்து உள்ளுக்குள்ளே மகிழ்ந்து கொள்வதைப் பார்த் தால், நம்முடைய சந்தேகமெல்லாம் நீங்கி, அவன் குழந் தையே யென்று தீர்மானமாய் விடும். நாராயணனோ, குழந் தை விளையாடுவதைக் கவனியாமலும், கோபாலன் படிப்பில் கவனமற்றிருப்பதை உணராமலும், தன் புஸ்தகத்தில் ஆழ்ந் திருந்தான். கடைசியில், கோபாலன், பொறுமையற்று, "நாணு! இன்று வாசித்தது போதும். நம்முடைய படிப் புக்கு ஓய்வொழிவில்லை. என்னவோ போல் சோம்பலாயிருக் கிறது: கொஞ்சநேரமாவது சந்தோஷமா யிருப்போம்.

படிப்பை நிறுத்து; இதோ இந்தப் பயல் விளையாடுகிறதைப் பார்," என்று சொல்ல, நாராயணனும் புஸ்தகத்தை மூடிவிட்டுக் குழந்தையருகே வந்தான். மூவரும் அக்குழந்தையைச் சூழ்ந்துகொண்டு, அதன் ஒவ்வொரு கையசைவிலும், காலசைவிலும், புன்சிரிப்பிலும் மழலைக் குழறலிலும், நூதனமான அர்த்தங்களிருப்பதாகச் சங்கற்பித்து, அகமகிழ்ச்சிகொண்டார்கள். அன்று சாவித்திரியுடைய முகம், வெகுநாள்களாகக் காணாத ஒரு புதுக் களையுடன் விளங்கிற்று; காணுக் காட்சியைக் கண்ட சிறு பிள்ளைகளைப்போல் அமிதமான சந்தோஷத்தை யடைந்து, உள்ளிருந்து மதுக்குடம் போற் பொங்கிவரும் ஆனந்தத்தை யடக்கமுடியாது தேகப்ரவசமாகி, காரணமின்றிப் பித்தர்போற் சிரித்து மகிழ்ந்தாள். எப்பொழுதும் சாந்தமும், அமரிக்கையும், அடக்கமும் மிகுந்துள்ள சாவித்திரி, இவ்வாறு கள்ளுண்டவர்போற் களியாடவே, கோபாலன், நாராயணனைப் பார்த்து, "நாணு! அக்காள் இவ்வளவு சந்தோஷப் படுவதெல்லாம் அவள் மருமகன் விளையாட்டைக் கண்டென்று நினைத்துக்கொள்ளாதே: எல்லாம் மாய மாலம். அத்தம்பியார் சங்குவைத் தேடிப் போய் ஒரு வருஷத்துக்கு மேலாச்சுது; இத்தனை நாளாய் இருக்கிற விடங்கூடத் தெரியாமலிருந்தது; மலையாளத்திலிருப்பதாகவும் சீக்கிரம் வருவதாகவும், ஒரு வாரத்துக்கு முன் கடிதம் வந்தது உனக்குத் தெரியுமே; இன்று சாயங்காலம் தபால் வண்டியில் வருவதாக யாரோ சொன்னார்களாம்; அதுதான் இவ்வளவு சந்தோஷத்துக்கும் காரணம்," என்று பரிகாசமாகச் சொன்னான். சாவித்திரி, கொஞ்சம் வெட்கமுற்றபோதிலும், முன்னிலும் அதிகமாகச் சிரிக்கத் தொடங்கியது, கோபாலன் கூறியதுண்மையே யென்று தெரி

வித்தது. அந்தோ! அவர் கெட்ட நடக்கையால் கொஞ்சம் வெறுப்பைக்கூட அடைந்திருந்த அவள் மனத்தில், இப்பொழுது, பிரிவாற்றாமையினால், அவர் முகத்தையாவது கண்டாற் போதுமென்ற ஆசை குடிகொண்டிருந்தது. மறத்தி சுடலி, மலையாளத்து அச்சி முதலிய அவர் வைப்பாட்டிகளில் எத்தனை பேர்களுக்கு வேண்டுமென்றாலும் ஊழியஞ் செய்தாகிலும், எவ்விதமாவது, அவரோடுகூட இருக்கவேண்டுமென்ற அவாவுடையவளா யிருந்தாள். சில சமயங்களில், திரும்பியும் அவரை இப்பிறப்பிற் பார்க்கக் கிடைக்குமோ என்ற ஐயமுண்டாக, அவள் பட்டதுயர் சொல்லி முடியாது. அவரோடு தான் கூடிவாழ்ந்த ஏழெட்டு வருஷ காலங்களிலும், அவர் தன்னோடு மனப்பூர்வமாகச் சல்லாபித்துக் களித்த அருமையான சில சமயங்கள் மட்டும் இப்பொழுது அவள் மனக்கண்ணின் முன்பாகத் தெளிவாகத் தோன்றிப் பழைய அன்பைக் கிளப்பினவேயன்றி, கூறும் நாவையும் தீக்கக்கூடிய கொடிய செய்கைகளால் அவர் தன்னைத் துன்புறுத்திய கணக்கிலடங்காத நாட்களை யெல்லாம் முற்றிலும் மறந்துவிட்டாள். அவருடைய சொற்ப நற்குணங்களே இப்பொழுது வெகு சிலாக்கியமானவைகளாகவும், கிடைத்தற்கரியனவாகவும் தோன்றின. முன்பு தன் மனத்தில் அவரை நொந்ததை யெல்லாம் நினைந்து நினைந்து கரைந்தாள்; தான், தன் கடமையில் தவறி விட்டதாகவே நினைத்து, இப்பொழுது அவர் திரும்பி வந்தால், தான், அவர் மனத்துக்கிசைய நடந்து அவர் காதலைக் கொள்ளையிடவேண்டும் வழிகளைப் பற்றிப் பலவிதமாக யோசனை செய்தாள். அவரைப் பிரிந்து தான்பட்ட துயரங்களை யெல்லாம் கேட்டால், அவர் மனமுருகி யிரங்கி, இனியொரு நாளும் தன்னை விட்

டுப் பிரியாரென்று நினைந்தாள். இவ்வாறு அன்று சாயங்காலம் வரை, "உரிய காதலின், உலகினில் ஒருவரையொருவர், பிரிவெனும் துயர் உருவுகொண்டாலன பிணியாள்," என்று சொல்லும்படி துயரந் தேக்கிய முகத்தோடிருந்த சாவித்திரி, தன்னாயகன் அன்று மாலையில் வருவதாக நற்செய்தி கேட்டது முதல்,

"இழந்தமணி புற்றர* வெதிர்ந்ததென லானாள்;
பழந்தனம் இழந்தன படைத்தவரை யொத்தாள்,
குழந்தையை உயிர்த்த† மல டிக்குவமை கொண்டாள்,
உழந்து விழிபெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்."

அவள் களிப்பு அவளோடு நிற்கவில்லை; அவளைக் கண்டவர் மனங்களிலும் பற்றிக்கொண்டது. இவ்வாறு கூடிக் களித்துக்கொண்டிருக்கும்பொழுது, பத்மாவதி யுள்ளிருந்து வர, நாராயணன், அவளைப் பார்த்து, "பத்மி! இங்கேவா: எல்லாரும் வெகு ஆநந்தமாக விருக்கிறோம். அம்மாகூடச் சோமவார அர்க்கியம் கொடுத்துவிட்டு இன்னும் கைலாசபுரத்திலிருந்து வரவில்லை. கூச்சத்தையெல்லாம் விட்டுவிட்டு, ஒரு பாட்டுப்பாடு கேட்போம்," என்று சொல்ல, பத்மாவதி பின்வரும் பதத்தைச் சிறிய இனிய குரலிற் பாடினாள்,—

இராகம்—எதுகுல காம்போதி. தாளம்—திரிபுடை

பல்லவி

துள்ளவேண்டாம் நீ, உள்ளமே ஒன்றுக்கும்,,
துள்ளவேண்டாம் உள்ளமே.

அநுபல்லவி

கள்ளக் குறத்திகுறி காசும்பெறாது காணாய்
வெள்ளைத் தனமாய் அதை மெய்யென் றெண்ணியே வீணாய் (துள்)

---

* புற்றரவு - புற்றரவில் வாழும் சர்ப்பம். † உயிர்த்த—பிள்ளை பெற்ற: உழந்து—வருந்தி.

பத்மாவதி குறையும் பாடிமுடிக்குமுன், கோபாலன், "இதென்ன திருவாரூர்த் தேரசைவது போலிருக்கிறது? ஏதாவது முடுக்கான துக்கடாப் பாட்டுகள் பாடு," என்று சொன்னான்: பத்மாவதி முதலில் வெட்கமுற்றுச், சற்று நேரத்துக்குப்பின்,

நாதன் வருவானென்று பாதிரிப்பூ வாங்கிவைத்தேன் ,பாங்கி, மனமேங்கி, மயல் ஓங்கி, குயம் வீங்கி;

ஐயோ என், மன்னன் வரக்காணேனே, தங்கமே, நான்,தன்னந் தனியானேனே.

என்று பாடத்தொடங்கினாள். இதற்குள், தன்பிக்ஷா பாத்திரமாகிய சுரைக்குடுக்கையில் ஒரு இருப்புச் சங்கிலியால் தாளம் போட்டுப் பின்வருமாறு பாடிக்கொண்டு, ஓர் ஆண்டி தெருவில் பிச்சைக்கு வந்தான்.

நெஞ்சத்தின் வஞ்சத்தைக் கொஞ்ச மென்றோ சொல்வேன்,
நஞ்சுண்டகண்டனே தேவா!— இந்த
அஞ்சையும் உஞ்ச உன்தஞ்சமே யாக்கிட
ஆற்றிலேன் என்னைக் காவா— நிதம்
அணுவாகிலும் நணுகாதுனே,
சிறிதாகிலும் குறியாதெனைச்,
சின்னத் தனமாகப் பேசும்—உன்னைப்
பன்னிப் பணியவும் கூசும். (1)

ஓடியே சாடியே வாடியேமாதரோ
டேடியே கூடியே எங்கும்;—உன்னைத்
தேடியே ஆடியே பாடித் திருப்பதம்
சூடித் தொழுவதை நீங்கும்;—என்தன்
வெள்ளைத் தன உள்ளத்தினில்
எள்ளத்தனை கள்ளத்தனம்
தேய்ந்து குறையக் கண்டேனோ; இது
ஓய்ந்துன் பதமும் அண்டேனோ! (2)

வீட்டையும் காட்டையும் ஆட்டையும் பாட்டையும்
　　கூட்டையும் வேட்டுத் திரியும்;—உன் தன்
வீட்டையும் காட்டையும் ஆட்டையும் பாட்டையும்
　　கூட்டையும் விட்டுப் பிரியும்;—உன்மேல்
சற்ருகிலும் பற்றேயிலே;
　　உற்ருரினி மற்ருேரிலே;
வேதமுடி மிசைத் தேவா!—பரஞ்
　　சோதியே காத்திட வா! வா! (3)

"அம்மணீ! ஒரு வாய் அன்னம்போடு அம்மணீ!இராப் பட்டிணிக்காரன் அம்மணீ!" என்று கூப்பிட்டுக் கொண்டு பிச்சைக்காரன் இவர்கள் வீட்டு வாசலுக்கு வந்தான். அவனுக்குச் சாதம் எடுத்து வரும்படி பத்மாவதி உடனே உள்ளே ஓடிஞள். மற்றவர்கள் அவனுடன் பேசிக்கொண்டிருக்கையில், சாவித்திரி கணவராகிய குள்ளச் சுந்தரமையர் கக்கத்தில் ஒரு பெரிய மூட்டையை இடுக்கிக்கொண்டு, இவர்களை நோக்கி வந்தார். அவர், முன்னிலும் ஒரு மாற்றுக் கறுத்து, வேலை முடிந்து கூடத்தை விட்டு வெளியே வரும் கொல்லனைப் போலிருந்தார். அவரைக் கண்டவுடன் சாவித்திரிக்கு அடங்காத் துக்கத்தால் கண்ணீர் பெருகிற்று. கோபாலன் கூடக் கொஞ்சம் கோபத்தாலும் விசனத்தாலும் திகைத்துப் பேசிஞன். அவரோ, இவர்கள் கிலேசத்தையும் துயரத்தையும் கவனித்தவராகத் தோற்றவில்லை: முதலில் சங்குவை எங்கெங்கெல்லாமோதேடியலேந்தும் காணவில்லையென்று சொல்லிவிட்டு, வெகு ஆவலுடன், "கோபு! ஓய் நாணுவையரே! திருநெல்வேலி வடக்குக் கோபுரவாசலில் பேஷான நாடகம் நடக்கிறதாமே: இன்றைக்கு 'அரிச்சந்திர நாடகம், மயான காண்டம்,' ஆடப்போகிருர்களாம். அற்புதமாயிருக்குமாம். பெரிய

பெரிய உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், ஜமீன்தார்கள், கலெக்டர்கள்கூட வந்து பார்க்கிறார்களாம். நாமெல்லோரும் இன்றைக்குப் போவோமா?' என்று கேட்டார்.

அதற்குக் கோபாலன், "ஏது, அத்தம்பியார் விசாரணை பலமாயிருக்கிறதே; நாங்கள் ஊரில் இருக்கோம்,: எங்களுக்குக்கூட இவ்வளவு விபரம் தெரியாதே. நாணு! இன்று சாயங்காலப் படிப்போ வீணாய்ப் போய்விட்டது. இராத்திரியும் அப்படியே போகட்டும். என்ன அத்தம்பியாரே! தபால் வண்டியில் வந்தது உமக்குச் சிரமமா யில்லையா? இன்றைக்குப் படுத்துத் தூங்கிக் களைப்பாறிவிட்டு, நாளைக்கு வெள்ளிமாலை நாடகத்துக்குப் போகலாமே; நாடகம் ஒரு இடத்துக்கும் ஓடிப்போகவில்லையே," என்றான். அதற்குச் சுந்தரமையர், "சிரமமென்ன சிரமம்? எல்லாரும் இன்றைக்கு ரொம்பவும் நன்றாயிருக்குமென்று சொல்கிறார்கள். எல்லாச் சிரமத்தையும் சேர்த்து நாளைக்குத் தூங்கிவிடுகிறேன்," என்று சொல்ல, அப்படியே சாப்பிட்டுவிட்டு நாடகத்துக்குப் போகத் தீர்மானித்தார்கள். ஒரு வருஷத்துக்கு மேலாகத் தன்னைத் தனியாக விட்டுப்போய் அன்று வந்த புருஷன், தன்னுடன் ஒரு வார்த்தையும் பேசாமல், வீட்டில் வந்து உட்காருமுன், மறுபடியும் தன் மனக்களிப்பையே நாடி நாடகம் பார்க்கப் புறப்பட்டதைக் கண்ட சாவித்திரி, சகிக்க முடியாத துயரத்தையுடையவளாய்க் கண்ணீர் ஆறாகப் பெருக, வீட்டுக்குள்ளே போய்விட்டாள். அவள் ஒரு நிமிஷத்துக்கு முன் அடைந்த ஆநந்தமெல்லாம் பூரண கிரகணத்தை யடைந்த சந்திரனுக்குச் சமானமாய் விட்டது.

இருபத்தெட்டாவது அதிகாரம்.

ஆயிரத்தறுபத் தோராமாண்டு ஆடி மாதம் பன்னிரண்டாந் தேதி திங்கட்கிழமை யன்றிரவு, திருநெல்வேலி வடக்குக் கோபுரவாயிலில் நரசிங்கராயர் நாடகக் கொட்டகை தீப்பட்டதும், அதிலுண்டான உயிர்ச்சேதமும் உலகமறிந்த விஷயமே. பதின்மூன்றாந் தேதி செவ்வாய்க்கிழமை விடியுமுன் அக்கரிக்கோலத்தை நேரிற் கண்ணுற்றவர்க்கு, இன்று நினைத்தாலும் அங்கம் பதறும். அதைப்பற்றி விவரிக்கவோ மனம் துணியவே இல்லை: ஆகையால் நம்முடைய சரித்திரத்துக்கு வேண்டியதை மட்டும் சுருக்கிக் கூறுவோம்.

"வாளா* மாண்ட மனிதர் தொகுதி
எண்ணி எண்ணி எரிகிற தென்னுளம்!
அவர்க்குள், தாய்க்கொரு
புதல்வராய் வந்த சிறுவர் எத்தனை பேர்!
வதுவை a முற்றுறா மைந்தர் எத்தனைபேர்!
புதுமணம் புரிந்த புருஷர் எத்தனைபேர்!
நொந்த சூல் மனைவியர் நோவு பாராது,
வந்து இவண் அடைந்த மனிதர் எத்தனைபேர்!
தாய்முகம் வருந்தல் கண்டழும் தன்சிறு
சேய் b முகம் மறவாச் செனகர் c எத்தனைபேர்!
செயிர் d உற முழந்தாள் சேர்ந்தழும் பாலரைத்
துயில்இடைத் துறந்த மாந்தர் எத்தனைபேர்!"

நாடகம் பார்க்கச் சென்றவர்கள் திரும்பி வராதிருந்தும், தீப்பற்றிச் சேதமுண்டானசமாசாரம் அன்றிரவே

---

* வாளா—வீணாக.

a வதுவை—விவாகம். b சேய்—பிள்ளை

c செனகர்—தகப்பன்மார் d செயிர்—சினம்

சிந்துபூந்துறை முதலிய சுற்றூர்களிலெல்லாம் பற்பல விதமாகப் பரவிவிட்டது. அதைக் கேட்ட மாத்திரத்தில், நாராயணன் வீட்டிலும் கோபாலன் வீட்டிலும் உண்டான அலங்கோலத்தைச் சொல்லி முடியாது. போய்ப் பார்த்து வருவதற்குப் புருஷர்களொருவருமில்லை; யாரையாவது போய்ப் பார்த்து வரச்சொல்ல, ஒருவருக்கும் மனதைரிய மில்லை; எல்லாரும் கோவென்று கதறியழுதுகொண்டிருந்தார்கள். கடைசியில், அடுத்த வீட்டுப் பிராமணர் ஒருவர், இந்தத் துக்கத்தைப் பார்க்கப் பொறுதவராய், தெய்வத்தின் தலையில் பாரத்தைப் போட்டு விட்டுச் சாந்தமாயிருக்கும்படி ஆறுதல் சொல்லி அவர்களை அமர்த்திவிட்டு, தாம் போய்ப் பார்த்து வருவதாகத் திருநெல்வேலிக்குப் போனார். பொழுது விடிந்தவுடன், சீதையம்மாளும் புறப்பட்டுப் போனாள். துயரத்தை விரித்துக் கூறுவதும் துக்ககரமே. அன்று உத்தேசம் பகல் இரண்டு மணிக்குச், சீதையம்மாள், ஒரு வண்டியில் நாராயணனையும், பல்லக்கில் கோபாலனையும், வாழைக் குருத்து இலைகளின் மேற் கிடத்திக்கொண்டு, சிந்து பூந்துறைக்கு வந்து சேர்ந்தாள். கோபாலனுக்குத் தன் நினைவேயில்லை. நாராயணனுக்குக் கோபாலனைத் தீயினின்றும் விடுவிக்க முயன்றதில், முதுகும் தோளும் சிறிது எரியுண்டிருந்தன. சொரூபமே நன்றாகத் தெரியாமல் பற்பல இடங்களில் பயங்கரமாய் எரியுண்டு, தற்போதமற்று, ஊசலாடும் உயிரோடு கிடக்கும் கோபாலனைப் பார்த்தவுடன், கல்யாணி மெய்மறந்து கீழே விழுந்துவிட்டாள். இவ்வளவும் போதாமல், அவளுக்கு வேறு வைத்தியம் பண்ணும்படி நேரிட்டது. சாவித்திரியோ, வெகுநேரம் வரை, கண்ணீர் மட்டும் ஆறாகப் பெருக, ஸ்தம்பம்போல் திகைத்து நின்று பார்த்துப், பின்பு திடீரென்று நினைவெழ,

சீதையம்மாள் பக்கத்திலில்லாததால், நாராயணனைப் பார்த்து, "நாணு! இவாள் எங்கே? கோபுவுடைய அத்தம்பியார் எங்கே?" என்று கேட்டாள். நாராயணன், ஒன்றும் பதில் பேசாமல், கண்ணீர் ததும்பும் தன் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டான். அவள், உடனே, வயிற்றில் இடிவிழுந் தாற் போல் திடுக்கிட்டுக், கைகளைப் பிசைந்து கொண்டு, "அடா பாவி! என்ன மோசம் நடந்து விட்டது, சொல்லடா! ஐயோ! என் உயிர் நடுங்குகிறதே. அம்மா! எங்காத்துக்காரர் எங்கே? நீர்தான் சொல்லக்கூடாதா?" என்றலறிக்கொண்டு, சீதையம்மாளை நோக்கி வீட்டுக்குள்ளே சென்றாள்.

அதைக்கேட்ட சீதையம்மாள், "அடியம்மா! சாவித்திரி! நான் என்ன சொல்லட்டும்? உன் வாயில் தெய்வம் மண்ணை வாரிப்போட்டு விட்டது. உனக்கா இந்த விதி வர வேணும்? பாவித் தெய்வமே!" என்று சொல்ல, சாவித்திரி, சுவரோடு சாய்ந்தபடியே கீழே விழுந்து, பித்தர் போலாய் விட்டாள். கொஞ்ச நேரத்துக்குப் பின்புதான், அவளுக்குக் க்கண்ணீர் பெருகி, அவள் தேம்பித்தேம்பி உருகியழத் தொடங்கினாள். அவள் பட்ட வருத்தத்தை என்னென்று சொல்லுகிறது?

"விழுதல், விம்முதல், மெய்யுற வெதும்புதல், வெருவல்,
எழுதல், எங்குதல், இரங்குதல், இறைவனை எண்ணித்
தொழுதல், சோருதல், துளங்குதல், துயர்உழந் துயிர்த்தல்,
அழுதல், அன்றிமற் றயலொன்றும் செய்குவதறியாள்".

தீப்பட்ட சங்கதியைச் செவ்வாய்க்கிழமையன்று காலையிலேயே கேள்வியுற்று, கோபாலனுடைய க்ஷேமத்தைப் பற்றித் துயருறும் தமது பெற்ற மனத்தை உண்மையறிந்து சாந்தப்படுத்தும் பொருட்டு, உடனே புறப்பட்டுத் திருநெல்

வேலிக்கு வந்த சேஷையர், நடந்த சங்கதிகளை யறிந்து, சீதையம்மாள் கூடக் கோபாலனை அனுப்பிவிட்டு, தாமும் இன்னும் சில பிணந்தூக்கிப் பிராமணருமாக, மாப்பிள்ளை சுந்தரமையராக வாழ்ந்த கரிக்கட்டையை, அரைஞாண், இரக்ஷை முதலிய சில அடையாளங்களின் மூலமாய்க் கண்டு பிடித்து, மயானத்துக்குக் கொண்டுபோய் உரிய கிரியைகளை நடத்திவிட்டு, சிந்துபூந்துறைக்கு வந்து சேர்ந்தார். தம் குமாரர் இருவரில், ஒருவன் சென்றவிடந் தெரியாது போய் இறந்தவனுக்குச் சமானமாய் விட; மற்றவன், இப்பொழுது தம் முன்பு யமனோடு போராடுவதுபோற் கிடக்க; தம் செல்வமகள் சீமந்த புத்திரியாகிய சாவித்திரி, மங்கலியத்தை யிழந்து, துக்க சாகரத்தில் ஆழ்ந்து, கிழித்த நார்போல் கீழே சுருண்டு கிடப்பதைப் பார்க்க, அவர் மனம் சகிக்கவில்லை. அவர், தம் முகத்தில் அறைந்து கொண்டு கோவென்று கதறித் துக்கம் பொறுக்காது சுவரில் முட்டிக்கொண்டார். அந்தோ!

"அழுதாற் பயனென்ன? நொந்தாற் பயனென்ன? ஆவதில்லை.
தொழுதாற் பயனென்ன? நின்னை ஒருவர் சுடஉரைத்த
பழுதாற் பயனென்ன? நன்மையும் தீமையும், பங்கயத்தோன்*
எழுதாப் படிவருமோ? சலியாதிரென் ஏழை நெஞ்சே!"

"எரி, எனக்கென்னும்; புழுவோ, எனக்கென்னும்; இந்தமண்ணும்
சரி எனக்கென்னும்; பருந்தோ, எனக்கென்னும்; தான் புசிக்க,
நரி, எனக்கென்னும்; புன்னாய், எனக்கென்னும்; இந் நாறுடலைப்
பிரிய முடன்வளர்த்தேன்; இதனாலென்ன பேறெனக்கே?"

என்றும் கூறிடும் ஞானமெல்லாம், யாவர்க்கும், எக்காலத்தும் அமையுமோ? முதற்கணுண்டாகும் துக்கம் சிறிது தணிந்தால், போனவர் போக இருப்பவர் தத்தம் சுகத்தைத்

* பங்கயத்தோன்—பிரமன்.

தாமே தேடுவார்கள். காலமென்னும் வைத்தியனே, இவ்வித மனோ வியாதிகளைத் தீர்க்கவல்லவன்.

இப்பொழுது மிகவும் அபாயகரமான நிலைமையிலிருக்கும் கோபாலனைக் காப்பாற்றுவதே முக்கிய விசாரமாயிருந்தது. அவனை அரியூருக்குத் தூக்கிப்போவதோ, சாத்தியமாகத் தோன்றவில்லை; தவிரவும் பாளையங் கோட்டையிற் கிடைக்கக்கூடும் பெரிய 'டாக்டரின்' வைத்திய சாமர்த்தியத்தை யிழந்துவிட்டு, ஒரு நாவிதனைத் தவிர வேறு வைத்தியரொருவரும் கிடையாத அரியூருக்குப் போவது மூடத்தனமே; இரண்டு நாள்களுக்குள், நாராயணனைப் பார்க்கும் பொருட்டு ஐயாவையரும், கோபாலனைப் பார்க்கும் பொருட்டு அவன் மாமனார் வீட்டுக்காரரும் வந்து சேர்ந்தார்கள். பாளையங்கோட்டை 'டாக்டர்'' தினமும் இருமுறை வந்து பார்த்துப்போனார். அவர், முதலில் அதிக நம்பிக்கைக்கு இடங்கொடுக்கவில்லை; ஆனால் வரவர, கல்யாணியின் மங்கலிய பலத்தினால், கொஞ்சம் குணப்படுவதுபோல் தோன்றிற்று. இராத்தூக்கம் பகல் தூக்கமின்றி, இடைவிடாது பக்கத்திலிருந்து, 'டாக்டர்' கூறிய மொழிகளை வேதவாக்குக்களாகப் பரிபாலித்து வந்தார்கள்.

முன்பு ஓர் அதிகாரத்தில், ஆசிரியர் பெருமையைப் புகழ்ந்து, எத்தொழிலினும் அவரதே மேம்பட்டதாகக் கூறினோம்; ஆனால், நாம், அப்பொழுது வைத்தியன் மகிமையைப்பற்றி நினைக்கவேயில்லை யென்று ஒப்புக்கொள்கிறோம். சுவரை வைத்துக்கொண்டு தான் சித்திரம் எழுதவேண்டுமென்று ஒரு வசனமுண்டு; அதுபோலவே நோயற்ற வாழ்வையுடைய சரீரத்தை வைத்துக்கொண்டு தான், நாகரீகத்தையும், கல்விப் பயிற்சியையும், ஞானப்பெருக்கையும் பற்றி

முயலவேண்டும். உலகத்திலே பிறப்பன யாவும் இறப்பது திண்ணமாயினும், உயிரோடிருக்கும் வரை நோயற்றுச் சுகமாயிருக்கவேண்டுமென்பது, யாரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. ஆகவே அவ்வித வாழ்வுக்கு இன்றியமையாததாகிய வைத்தியம் எவ்விஷயத்தினும் மேம்பட்டதென்பதும்; அதில் தேர்ந்து பயிலும் வைத்தியனே பரோபகாரிகளுள் அரசனென்பதும் சொல்லாமலே விளங்கும். இவ்வுலக வாழ்க்கையை ஒரு இராசாங்கத்துக் குவமையாகக் கூறின், ஊழை வணங்காமுடி தரித்துச் சமதரிசியாக வீற்றிருந்து செங்கோல் நடாத்தும் சக்கரவர்த்தியாகவும்; தன் தொழில் அறிந்த வைத்தியனை, அச்சக்கரவர்த்தியின் முக்கிய சேனுபதியாகிய யமனை எதிர்த்துப் போராடிச் செயிக்க முயலும் இளவரசனுகவும் கூறலாம். வைத்தியனே நமக்குப் பிரத்தியக்ஷ ப்ரும்மா; நம்முடைய ஆத்திரத்தில், நாம் அவனையே விதியையும் வெல்லவல்லவனுக நினைத்து வேண்டுகிறோம். அவன் நம்பிக்கை தந்து குளிர்ந்த முகத்துடன் பேசின், நாம் மெய் மறந்து ஆநந்தக்கடலில் ஆழ்கிறோம்; அவன் கொஞ்சம் திகைத்து விசனமாகப் பேசினுல், துயர்க்கடலிலே மூழ்கிப் போகிறோம். நண்பரே! நாம் ஒருவருக்கு ஓர் அற்ப உபகாரத்தைச் செய்துவிட்டால், எவ்வளவோ மனுேதிருப்தியும் சந்தோஷமும் அடைகிறோமே; சிலர், தாங்கள் சமயம் கிடைத்த இடத்துத் தீங்கு செய்யாது விட்டதையே புண்ணியமாக நினைத்துப், பெருமை பேசி மெச்சிக் கொள்கிறார்களே: அப்படியிருக்க, உயிர்ப்பிச்சை கொடுக்கவல்ல வைத்தியன் எவ்வளவு திருப்தியையும் களிப்பையும் அடையமாட்டான்! அவன் திருப்தியடைதலும் தற்புகழ்ச்சியாகுமோ? அவன் வாழ்வன்றோ வாழ்வு! அவனன்றோ தன் வாழ்நாளை வீண்

போக்காது, இகத்தில் சுகவாழ்வுக்கு இன்றியமையாத தாகிய மனோரம்மியத்தையும், பரத்தின் திறவுகோலாகிய புண்ணியத்தையும் கொள்ளை கொள்கிறான்? அவனே பாக்கியவான்: அவனே மானிடப்பிறப்பின் பயனைக் கைவிடாது கொள்வோன்.

கல்விக்கும், அன்புக்கும், பொறுமைக்கும் ஒரு களஞ்சியம் போன்ற பெரிய 'டாக்டர்' வைத்தியத்தில், நாராயணன் ஒரு வாரத்துக்குள் மறுபடியும் பள்ளிக்கூடத்துக்குப் போகத் தொடங்கி விட்டான்; கோபாலனுக்கும், நாளுக்கு நாள் குணமாகி, அபாயகாலமெல்லாம் முற்றிலும் கழிந்துவிட்டது. அந்தப் புண்ணியவானுக்குக் கோபாலனுடைய தகப்பனார் ஆயிரரூபா கொடுத்தது பெரிதன்றே.

இருபத்தோன்பதாவது அதிகாரம்.

சாதி வழக்கப்படி, சாவித்திரியை அவகோலஞ் செய்து விட்டார்கள். நாராயணன், அந்தக் கஷ்டத்தைப் பார்க்க மனம் பொறாது, அன்று மயனூருக்குப் போய்விட்டான். அவள் சிரோபாரத்தைக் களைந்த நாவிதன் பட்ட துயரத்தையே அளவிட முடியாது. அன்று வீட்டில் ஒருவரும் பிடி சோறு உண்ணவில்லை; ஓயாது கண்ணீரும் கம்பலையுமாகவே இருந்தது. கல்யாணிக்கும் பத்மாவதிக்கும் விசனத்திலும் பயமே அதிகமாயிருந்தது. தாங்களும் அக்கொடிய விதியை ஒரு மயிர்க்கிடை அதிர்ஷ்டத்தினால் தப்பினதை நினைக்குந் தோறும், அவர்கள் மனம் திகிலடைந்து, உடல் பதறிற்று. சாவித்திரியோ, உலகத்திலுள்ள பாலிய விதவைகளின் துயரங்களெல்லாம் ஓர் உருக்கொண்டு வந்தாற்போலிருந்தாள்.

அன்று மாலையில் அவளுக்கு ஒரு விதமான நினைவு உண்டாயிற்று: கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக்கொள்ள விரும்பினாள். இவ் விருப்பம் முதலில் ஒரு விதமாயுதித்து, வரவரப் பலமடைந்து, அவள் மனத்தைத் தொந்தரை செய்யத் தொடங்கிற்று. அவளுக்கு ஒரு நாளுமே தன் திவ்ய சௌந்திரியத்தைப் பற்றிக் கர்வம் கிடையாது; சிரமப்பட்டுச் சிங்காரித்துக் கொள்ளமாட்டாள்; நெற்றியில் பொட்டிட்டுக் கொள்ளும் பொழுதன்றிக் கண்ணாடியைத் தேடமாட்டாள். வேறு யாராவது அவளுக்குப் பொட்டிட்டு நன்றாயிருக்கிறதாவென்று கண்ணாடியிற் பார்த்துக் கொள்ளும்படி சொன்னாற்கூட, 'இந்தக் கட்டைக்கு அழகும் வேண்டுமா? ஏதாவது சாஸ்திரத்துக்கு இருந்தால் சரி,' என்று சொல்லுவாளேயன்றி, கண்ணாடியை யெடுத்துப் பார்த்துக்கொள்ளமாட்டாள்; தன் கட்டழகைச் சிறிதும் உணராதவள் போலவே ஒழுகுவாள். அப்படிப்பட்டவளுக்கு, விகாரமாய்அவகோலப் பட்டபின், தன்முகத்தைக் கண்ணாடியிற் பார்க்க வேண்டுமென்ற விருப்பமுண்டாயிற்று. அப்படியே, அவள், ஒருவரும் அறியாமல், கல்யாணியின் பெரிய கண்ணாடியை எடுத்துக்கொண்டு, தனிமையான ஓர் அறைக்குட் போனாள். திடீரென்று, "அம்மா!" என்ற அலறற் சத்தங் கேட்டது. சீதை அம்மாள் திடுக்கிட்டு ஓடிப்போய்ப் பார்க்கையில் கண்ணாடி சின்னாபின்னமாக உடைந்து சிதறிக்கிடந்தது. சாவித்திரி, தன்னினைவின்றிக் கீழே விழுந்து கிடந்தாள். உடனே வேண்டிய சிகிச்சைகளைச் செய்து, அவளை அரிதிற் களைப்பாற்றி உயிர் மீட்டினார்கள்.

சாவித்திரி ஒவ்வொருநாளும் அடைந்த துயரத்தை எம்மால் விவரிக்கமுடியாது; ஒரு சமயத்தில், தன் கணவர்,

தம் வாழ்நாள் முழுவதும் மலையாளத்திலேயே யிருந்து விட்டாலும் இந்த விதி நேரிட்டிராதென்று நினைத்து வருந்தினாள்; மற்றொரு சமயத்தில் தற்கொலையினாலாவது தான் முன்னதாகவே இறந்திருந்தால் நலமாய் முடிந்திருக்குமென்றெண்ணி நொந்து கொண்டாள்; ஒரு நேரத்தில், தான் ஒன்றையுமே யறியாத சிறுகன்னியாயிருக்கும் பொழுதே இவ்விதி நேர்ந்திருந்தால், இவ்வளவு துக்கம் தோன்றியிராதென்றெண்ணினாள்; மற்றொரு நேரத்தில், தான் பிறந்திராவிட்டால் ஒன்றுமே நடந்திராதென்று நினைத்தாள்; ஒரு காலத்தில், தன் கணவர் நாடகத்துக்குப் போகக்கூடா தென்று தான் தடுக்காததைப் பற்றி வருந்தினாள்; மற்றொரு காலத்தில், சில ஸ்திரீகளைப் போல், தானும் தன் கணவருடன் நாடகத்துக்குச் சென்று, உடன் கட்டையேறா தொழிந்ததைப் பற்றி நொந்து கொண்டாள்; பலதரம் கடவுளைப் பழித்தாள்; சிலதரம் நாடகக்காரரையும், அவர்களுடைய முக்கிய சகாயர்களையும் பழித்தாள்; ஒரு பொழுது கோவென்றலறி அழுதாள்; மற்றொரு பொழுது வறண்டு சிவந்து வீங்கிய கண்களுடன் பித்தர் போல் முகமும் கையுமாய், ஓவியமோ, உயிர்ப் பொறையோ என்று சந்தேகிக்கும்படி, ஒரு மூலையில் வீற்றிருந்தாள்; அடிக்கடி தற்கொலை புரிந்து தன் துன்பங்களை யெல்லாம் நிவர்த்தித்துக் கொள்ள விரும்பினாள்; சில வேளைகளில், கோபாலனுடைய குழந்தை முகம் பார்த்து சிரிக்கக், கொஞ்சம் ஆறினாள். திடிரென்றெழும் நினைவுகளால் அடக்க முடியாத் துயரமுண்டாகிக் கல்லும் உருகும்படி வருந்தும் சிற்சில சமயங்களைத் தவிர, பொதுவாக, நாளுக்கு நாள், துயரத்தின் கொடுமை குறைந்து கொண்டும், கோபாலன் குழந்தை மேலும், யமபுரியை எட்டிப் பார்த்துத் திரும்பிய கோபாலன்

மேலும், தன் விதியைக் காணச் சகியாது மனமுருகி னையும் தன் தகப்பனார் மேலும், வாஞ்சை அதிகரித்துக் கொண்டும் வந்தது. இதற்கேற்ப, நாராயணனும் கோபாலனுமாகக் கூடி யோசனை செய்து, குழந்தை மூலமாக அவள் துன்பத்தைத் தணிக்க முயன்றது மன்றி, அற்புதமான காவியங்களிலும் வேதாந்த சாரமமைந்த நூல்களிலு மிருந்து அவளுக்கு வாசித்துப் பொருளுரைத்தும், படிப்பிலுண்டான பழைய ஆசையைக் கிளப்பி, அவளையே சில சமயங்களில் வாசிக்கும்படிச் செய்தும், அவள் தன் துக்கத்தைப்பற்றி நினைந்துருகா வண்ணம் பொழுது போக்கி வந்தார்கள். தவிரவும் முதல் இரண்டு மாதத்துக்குக், கோபாலனுக்கு மருந்து போடுதல், ஊண் ஊட்டுதல், முதலிய கைங்கரியங்கள் செய்ய வேண்டி நேரிட்டதால், அது துக்கத்துக்கு ஒரு மாற்றான் போலாயிற்று. சேஷையர் இவர்களை அரியூருக்கு அழைத்துக் கொண்டு போக விரும்பினார்; ஆனால் அஃது ஒருவருக்கும் சம்மதமில்லை; கோபாலனுடைய பரீக்ஷை முடிந்த பின் போகலாமென்று சொன்னார்கள். கோபாலன் பள்ளிக்கூடத்துக்குப் போகத் தொடங்கியவுடன், சேஷையர் மட்டும் அரியூருக்குப் போய் விட்டார். எரியாலுண்டான புண்களால், நாராயணன் உடம்பு இரண்டு மூன்றிடங்களிலும், கோபாலன் சரீரமெங்கும் அவலக்ஷணமான தழும்புகள் உண்டாயிருக்குமென்று யூகித்திருக்கலாம்; அதைப்பற்றிக் கோபாலனுக்கு அதிக மனவருத்தமுண்டு.

முப்பதாவது அதிகாரம்.

நாம் கடைசியிற் போயிருந்த பின், அரியூரில் அநேக விசேஷங்கள் நடந்திருக்கின்றன. முதலாவது, காமையர்,

திருநெல்வேலி நாடகப்புரைத் தீயிலிறந்து போய் விட்டார்; அங்கும் கூட, அவர் தம் வைப்பாட்டியாகிய வேசியோடு போயிருந்ததாகவும், 'தீ, 'தீ, என்ற அரவமுண்டானவுடன், தன்னுயிர் தனக்குச் சருக்கரை யென்றபடி, அவர் தம்மைத் தப்பவைத்துக் கொள்ளும் பொருட்டுக் கோபுரத்தில் தொற்றி ஏற முயன்றதாகவும், அப்பொழுது, பழவினைப் பயன்போற் பக்கத்தில் நின்ற பரத்தையாகிய அவர் வைப்பாட்டி இசக்கி, "ஐயரே! என்னைத் தனியே விட்டுப் போவீரா?" என்று அவர் உத்தரீயத்தைப் பற்றி யிழுக்க, இருவருமாகக் கீழே விழ, எரியுண்ணுமுன் நாகமையர் கால் ஒடிய, இருவரும் மாண்டதாகவும், பிழைத்து வெளிவந்தோர் சிலர் கூற, பேசிக் கொண்டார்கள். அவர் இறந்தபின், அவர் மைத்துனரில் ஒருவன் வந்து, அவர் மனைவியாகிய சாலாவைத் தங்களூராகிய கும்பகோணத்துக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

சேஷையர் மனைவியாகிய கமலாம்பாளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. ஊரிலுள்ள வீணர்கள் அக்குழந்தையின் முகச்சாயல்களைக் குறித்துப் பலவிதமாக அவதூறு பேசினார்கள்; ஆனால் சேஷையருக்கு அக்குழந்தையின் மேலுள்ள பாசத்துக்கோ அளவில்லை. சாவித்திரிக்குப் பின் வீட்டில் வேறு பெண் குழந்தைகளே யில்லாததனால், பரீக்ஷை முடிந்து வந்திருந்த கோபாலனும் சாவித்திரியும், அக்குழந்தையை வெகு அருமை பாராட்டி வந்தார்கள். ஆனால், காமாக்ஷியம்மாளோ, தன்னையும் தன் மகளையும் தவிர, வேறொருவரும் அக்குழவியைத் தொடவும் சம்மதியாள். இப்பொழுது தம் மக்கள் பேரில் கொஞ்சம் அன்பா யிருப்பதால், சேஷையர்கூட அக்குழந்தையைத் தொடக்கூடாது. யாராவது அன்

புடன் எடுக்க வந்தால், "இந்தச் சவத்தைத் தீண்டுவானேன்? இது அரைப்பணநாச்சி பெண்; இங்கே கிடக்கட்டும். அதோ இருக்கான் ஆளப்பிறந்தான்; எல்லாரும் அவனையே கொண்டாடினால் போதும்," என்று கோபாலன் குழந்தையைச் சுட்டிக்காட்டிக், கொடுமையாகப் பேசுவாள். இவ்வாறு காமாக்ஷியம்மாளும் கமலாம்பாளும் படுத்தியபாடு சொல்லி முடியாது. அவர்களுடைய வசைப்பேச்சையும் கொடுமையையும், பரிகாசத்தையும், பக்ஷபாதத்தையும் பொறுக்க முடியாமல், கல்யாணி, எப்பொழுதும் கண்ணீரும் கம்பலையுமாகவே இருந்தாள். சாவித்திரிபோ ஒன்றையும் அதிகமாகக் கவனியாது நடைப்பிணம்போல் வளைய வந்து கொண்டு, அவர்கள் மனத்தைச் சற்றுத் திருப்தி செய்யும் பொருட்டு, வீட்டு வேலை அவ்வளவையும் தானே பொறுத்துச் செய்து வந்தாள். கோபாலன், இதனிமித்தம், போஜனவேளை தவிர மேடையை விட்டிறங்குவதேயில்லை; தன் பரீக்ஷையின் முடிவை ஆவலுடன் எதிர் பார்த்திருந்தான். பரீக்ஷை தவறிவிட்டால் மறுபடியும் சிந்து பூந்துறைக்கு போய் வாசிக்கிறதென்றும், ஒப்பேறிவிட்டால் சென்னப்பட்டணம் போய் வாசிக்கிறதென்றும், எங்கே போனாலும் தன் மனையாளையும் சாவித்திரியையும் கூடவே அழைத்துப் போகிறதென்றும் தீர்மானித்திருந்தான். சாவித்திரியும், யார் என்ன சொன்னாலும் உலக வழக்கம் எவ்வாறாயிருப்பினும், அரியூரைவிட்டு வெளியாகும் பொருட்டு, கோபாலனோடு போக நிச்சயித்திருந்தாள். தான் மட்டும் தனிமையாகக் காமாக்ஷியம்மாள் அதிகாரத்துக்குட்பட்டு நடக்க, அவள் மனம் இசைந்திற்று. இப்படி யிருக்கையில், ஒருநாள், திடீரென்று நாராயணன் அரியூருக்கு வந்து சேர்ந்தான். விசாரித்ததில், பரீக்ஷையின்

விபரம் வெளிப்பட்டு விட்டதாகத் தெரிந்து தான் சிந்துபூந் துறைக்கு வந்ததாயும், தனக்கு முதற் பிரிவிலும் கோபால னுக்கு இரண்டாவது பிரிவிலும் பரீக்ஷை ஒப்பேறி யிருப்ப தாகவும், அந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லும் பொருட்டும், சில விஷயங்களைக் குறித்து யோசிக்கும் பொ ருட்டும் தான் அரியூருக்கு வந்ததாகவும், அவன் சொன் ஞன். கோபாலன், சாவித்திரி, கலியாணியாகிய மூவரும், பரீக்ஷையொப்பேறியதிலும், அரியூரை விட்டு வெளியேறும் நாள் வந்து விட்டதைக் குறித்தே அதிக சந்தோஷ மடைந் தார்கள். மேடையில் அன்று சாயங்காலம் நாராயணனுக் கும் கோபாலனுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

நாராயணன்:—"எனக்கு மேற்படிப்பிலுள்ள ஆசையைப் பற்றி நானுனக்குச் சொல்லவேண்டியதில்லை; ஆனல் பல தடைகளிருக்கின்றன: முதலில், நான் இப்பொழுதே சாப் பாட்டுக்குச் சம்பாதிக்க வேண்டி யிராவிட்டாலும், என் மேற்படிப்புக்கு வேண்டிய பணம் கொடுக்க, என் மாமாவுக் குச் சக்தியில்லை. அவருக்குக் கொஞ்சம் கடனதிகரித்துவிட் டதாம். ஆகையால் அவரிடமிருந்து பணமெதிர்பார்க்க இடமில்லை. தவிரவும், என் கலியாணத்துக்குப்பின் அவ ருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது: என் விஷயத் தில் இனிமேற் செலவிட அம்மாமி சம்மதிக்கமாட்டாள். எங்கம்மாவோ, நான் பட்டணத்துக்குப்போனல் தானும் கூடவே வருவதாக முரண்டுகிருள்; அதுவும் தடுக்கமுடியா தது தான்; அவள் என்னைக் காணுமலிருக்கமாட்டாள்; என க்கு அவள் வந்தால் நல்ல சாப்பாடு கிடைப்பதோடுகூட, பத்மினியையும் கூடக் கூட்டிக்கொண்டு போய், அவள் படிப்பை விருத்தி செய்யலாமென்ற எண்ணமிருக்கிறது. முடவன்

கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போலிருக்கிறது. இந்த ஜில்லாவில் நான் மட்டும் முதற்பிரிவில் ஒப்பேறி யிருப்பதால், சென்னபட்டணம் கிறிஸ்தவ கலாசாலையில், நான் ஏழை யென்று தெரிந்தால், என்னைச் சம்பள மன்னியிலெடுத்துக் கொண்டு, மாதம் ஏழு ரூபாவுக்குக் குறையாமல் செலவுக் கும் தருவார்களாம். தீராதென்றால், மாமா, மாதம் பத்து ரூபா அனுப்புவார். இந்தப் பதினேழு ரூபாவுக்குள், நான், அம்மா, பத்மி ஆக மூன்று பேர்கள் பட்டணத்தில் ஜீவனம் பண்ணுவதெப்படி? வீட்டு வாடகையே குறைந்த பக்ஷம் ஐந்தாறு ரூபா பிடிக்குமென்கிறார்கள்; விறகு முதல் நிறுத்துக் கொடுப்பார்களாம்; பல யோசனையாயிருக்கிறது. எங்கே யாவது பத்து, பதினைந்து ரூபாச் சம்பளத்துக்கிருந்து விடு வோமென்றாலும் மனங் கேட்கவில்லை: படிப்பாசை கிடந்து ஒரு பக்கத்தில் அடித்துக்கொள்கிறது," என்று விசனமாகச் சொன்னான்.

கோபாலன்:—"நாணு! நீ யொன்றும் விசாரப்படாதே. இதைப்பற்றி நானும் அக்காளும் முன்னே யோசித்தது தான். உனக்கோ பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்கவேண் டாம். என் புஸ்தகங்களை நீயும் வாசித்துக் கொள்ளலாம். நீ மட்டும் வந்தால் என் கூடவேயிருந்து விடலாம். உனக் கொரு செலவுமே வேண்டாம். அப்படிக்கின்றி, அம்மாவும் பத்மாவதியும் வருகிறதாயிருந்தாலும், நீ யொன்றும் பயப் படவேண்டாம். வீட்டு வாடகையைப்பற்றி யோசிக்கவேண் டாம். நான் பெரிய வீடாகத்தான் அமர்த்தப்போகிறேன். நீங்களும் அதிலேயே யிருக்கலாம். முதலில் நாமிருவரும் என்னமாய்ப் பிரிந்திருக்கிறது? உன்னை இத்தனை நாளாய்ப் பார்க்காததே மனது என்னவோ செய்து கொண்டிருந்தது.

உங்கள் மூன்று பேர் சாப்பாட்டுச் செலவுக்கு மாதம் பதினெழு ரூபா காணுமென்று நீ நினைக்கவே வேண்டாம். நீ படிப்பை விட்டுவிடுகிற விஷயத்தில், நானும் அப்படியே செய்ய வேண்டி வரும். என்னால் தனியே போய்ப் பட்டணத்தில் படிக்க முடியாது. நீ இவ்வளவு உரிமை பாராட்டா விட்டால் உன் சிநேகமெல்லாம் கள்ளத்தனமே," என்று பல வாறாகச் சொல்லி, வேண்டிக்கொண்டான். அப்படியே இருவரும் பட்டணத்துக்குப் புறப்பட்டுப் போவதாகத் தீர்மானஞ்செய்து, ரயில் ஏறுவதற்குச் சிந்து பூந்துறையிற் சந்திப்பதாக ஒரு தினத்தையும், சேஷையரைக்கேட்டபின், நிச்சயஞ் செய்து கொண்டார்கள். வேண்டிய ஏற்பாடுகள் செய்து தன் தாயையும் மனைவியையும் ஆயத்தமாகச் சிந்து பூந்துறைக்குக் குறித்த தினத்தில் கூட்டிக் கொண்டு வரும்படி நாராயணன் சிறு குளத்துக்குப் புறப்பட்டுப் போய் விட்டான். இனிமேல் நமது நண்பர்களை மறுபடியுஞ் சென்னை புரியில் தான் பார்க்கலாம்.

முதற்பாகம்

முற்றிற்று.

Copyright

பத்மாவதி சரித்திரம்

ஒரு தமிழ் நாட்டுக் கதை

இரண்டாம் பாகம்

முதலாவது அதிகாரம்.

ஊனும், உயிரும், உணர்வும்போல இப் பிரபஞ்சத்தின் உள்ளும் புறமும் வியாபித்திருக்கும் பரம்பொருளின் தன்மையை, ஞானக் கண்களாற் கண்டுணர்ந்தவர்களுக்கு ஒன்றுஞ் சொல்ல வேண்டுவதில்லை யென்றும்; அவ்வாறு கண்டறியாதார்க்கு, வாயால் எவ்வளவு சொல்லினும் மிகப் பயன்படாதென்றும், எம் ஆசிரியரில் ஒருவர் கூறுவதுண்டு. சென்னை புரியின் அதிசயங்களையும் விநோதக் காட்சிகளையும் பற்றி இதை வாசிப்போர்க்கு, நாம் அநேக விதமாகத் தான் கூறக்கூடும். அன்றியும், சிறு பொருளுக்கு நெடுவழி செலுத்தும் 'ரெயில்' பாதைகள் எங்கும் பரவப் பெற்ற தமிழ் நாட்டு வாசிகளிற் பெரும் பாலாரும், இவ்விராசாங்கத்தின் தலைநகரை நேரிற் சென்று பார்த்திருப்பார்கள்; ஆதலின், அந்நகரைக் குறித்துக் கதை நிகழ்ச்சியில் வேண்டிய பொழுது விவரித்தலே பொருந்தும்.

நமது நண்பர்களாகிய நாராயணனும் கோபாலனும் பட்டணத்துக்கு வந்தவுடன் திருவல்லிக்கேணியில் ஒரு சிநேகிதர் வீட்டில் தங்கியிருந்தார்கள். சீதையம்மாளும் சாவித்திரி

யும், கல்யாணியும் மட்டும் அவர்களுடன் வந்திருந்தார்களே யன்றி, நாராயணன் எவ்வளவோ முயன்றும், பத்மாவதி வரவில்லை; ருதுவாகக் கூடிய காலத்தில் தூரதேசத்துக்குஅனுப்பலாகாதென்று ஐயாவையர் தடுத்துவிட்டார். பத்மியின்படிப்பு இவ்வாறு முறிபடுவதில், நாராயணனுக்கு விசனம் அதிகமாயிருப்பினும், மூத்தோர் மொழிக்கும், 'வழக்கம்' என்னும் பெரும் புலிக்கும் அஞ்சிச் சும்மா விருக்க நேரிட்டது.

பட்டணத்துக்கு வந்தபின், எந்தக் கல்விச்சாலையிற் சேர்ந்து படிக்கலாமென்று இவர்கள் யோசிக்கத் தொடங்கினார்கள். இராசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட சமஸ்தான வித்தியாசாலையிற் சேருவதிலேயே கோபாலனுக்குப் பிரியமிருப்பினும், தனலாபத்தைக் கருதி, நாராயணன், கிறிஸ்தவ கலாசாலையின் நன்கொடைப் பரீக்ஷைக்குப் போயிருந்தபடியால், அப்பரீக்ஷையில் அவன் தேறிவிட்டால், தான் அவனை விட்டுப் பிரிய நேரிடும் என்பதை நினைத்து, கோபாலனும் கிறிஸ்தவ கலாசாலையிலேயே சேரத் தீர்மானித்தான். கல்விச் சாலைகள் திறந்தாய்விட்டதால், வந்த மறுநாளே இருவரும் பட்டணத்துக்குப்போய், அக்கல்விச் சாலையைப் பார்க்க விரும்பினார்கள். அவ்வெண்ணத்தோடு திருவல்லிக்கேணிக் கடை வீதிக்கு வரவே, "பட்டணம், ஒத்தர், ஒத்தர்," "மண்ணடி, ஒத்தர், ஒத்தர்," "மைலாப்பூர், ஒத்தர், ஒத்தர்,' "பூக்கடை, எகாத்மி," "வாயா, வாயா," என்று 'ஜட்கா' வண்டிக்காரர் போடும் சத்தம் இவர்கள் காதுகளைத் துளைத்தது. இப்பெருங் கூப்பாட்டின் விஷயம் இவர்களுக்கு முதலில் தெரியவில்லை. இவர்கள் கொஞ்ச நேரம் திகைத்து நின்று, பின்பு ஒருவாறு தெளிந்து, ஒரு வண்டிக்காரனைக் கைகாட்டி யழைக்க, அவன் உடனே இவர்கள் அருகில் வந்த வேகமானது, இவர்கள்

மேலேயே வண்டியை விடவருவது போலிருந்தது. இவர்கள் கொஞ்சம் திடுக்கிட்டு ஒதுங்கி நின்றுகொண்டு, தங்களுக்குப் பட்டணத்தில் கிறிஸ்தவ கலாசாலைக்குப் போகவேண்டுமென்று சொல்ல, அவனுக்கு இவர்கள் சொல்வது அர்த்தமாகவில்லை. பின்பு அவன் கொஞ்சம் உற்றுக்கேட்டு, "மில்லர் ஸ்கூலா?" என்று கேட்டான். அவன் வினவைச் செவிகொண்டவுடன், சமஸ்தான கலாசாலையிற் சேர முடியாமற் போனதைப் பற்றிக் கோபாலனுக்கிருந்த அற்ப விசனமும் நீங்கிவிட்டாது. வண்டிக்கூலி இவ்வளவென்று இவர்களுக்குத் தெரியாமையினால், வண்டிக்காரன் கேட்பதில் பாதி கொடுப்பதே நன்மதி யென்று நினைத்து, முதலில் நாலணுவுக்குக் கேட்டுக், கடைசியில் ஆறணுவுக்கு திட்டஞ் செய்து ஏறிக் கொண்டார்கள். வேதம் போம் வாயான் விகடராமன் குதிரை மாதம் காதவழி (முன்னோக்கிச்) செல்லு மென்பது பழமொழி: ஆனால் இவர்கள் ஏறிய வண்டியின் குதிரை பின்னோக்கி விரைவாயும் சுறுசுறுப்பாயும் செல்லத் தொடங்கிற்று. பக்கத்திலுள்ள வண்டிக்காரர்களெல்லாம் கெக்கலித்துக் கைகொட்டிச் சிரித்தார்கள். நாராயணனுக்கும் கோபாலனுக்கும் முதலிலுண்டான வெட்கத்தைப் பார்க்கினும், வண்டியுடன் கழிவு நீர்ச்சாக்கடையில் கொண்டு தள்ளிவிடுமோ என்ற பயம் மேலிட்டது. வண்டிக்காரனுடைய சாமதான பேத உபாயங்களைச் சிறிதும் மதியாத அக்குதிரை, அவன் கோபாவேசமாய்த் தண்டப்பிரயோகம் பண்ணத் தொடங்கியவுடன், முன்னோக்கத் துணிந்து, "சும்மா, இருந்தாலுமிருப்பேன் எழுந்தேனேயாகில், பெருங்காளமேகம் பிள்ளாய்," என்று பாடிய நிமிஷகவியின் வேகத்துக்குச் சமானமாக ஓட ஆரம்பித்து, கொஞ்சநேரத்தில் சக்கரமும் சவுக்கு

மாக உண்டுபண்ணும் சடசடவென்ற சத்தத்தால் திகில டைந்து, வெறி கொண்டாற்போல விரைந்து பாய்ந்தது. கிறிஸ்தவ கலாசாலையின் வாசல் முன் வந்து இவர்களிறங் கியவுடன், வண்டிக்காரன் எட்டணுக் கூலி பேசியிருப்பதா கச் சத்தியஞ் செய்து சத்தம் போடத் தொடங்கினுன். இவர்கள் பயந்து அவன் கேட்ட பணத்தைக் கொடுத்து விட்டுக், கல்விச் சாலைக்குட் சென்றுர்கள்.

சென்னப்பட்டணம் கிறிஸ்தவ கலாசாலையானது கண் ணுக்கு அலங்காரமாயும், பெருங்கூட்டமான மாணுக்கர் களைப் பற்பல சாஸ்திரங்களிலும் பயிற்றுவதற்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் நிறைந்ததாயும், மூன்று மேடை களும் உன்னதமான கோபுரமும் அமைந்ததாயுமுள்ள ஒரு கட்டிடம். பாலர் வகுப்பு முதல் எம். ஏ. பரீக்ஷைக்கு வாசிக்கும் வகுப்பு வரையும் இருத்தலால், அவ்விசாலமான மாளிகையின் எண்ணிறந்த அறைகள் ஒவ்வொன்றிலும் வாணிதாசர்களின் அரவம் முழங்கிக் கொண்டேயிருக்கும். அது மாணுக்கர்களின் தொகுதியிலும், வித்தியாப்பியாசத் திறமையிலும், மற்றெவ் விஷயத்திலும், இத்தேசத்தில் முதன்மையாக விளங்கும் கல்விச்சாலைகளில் ஒன்றென்பதிற் சந்தேகமில்லை. தென்னுட்டுக் கலாசாலைகளுள் அதுவே மேம் பட்டதென்று நிச்சயமாய்க் கூறலாம். கிறிஸ்து மதத்தை இந்நாட்டிற் பரவச் செய்யும்பொருட்டு ஸ்கோத்லாந்து தேசத்திலிருந்து இங்கு வந்துழைக்கும் 'பாதிரி'கள், அதை ஸ்தாபித்து நடத்தி வருகிறுர்கள். அறிவு விருத்தி யடைந் தால், உண்மையான மதம் தானுகவே பரவி விளங்கும் என்ற கொள்கையே அதற்கு மூலாதாரம். அவ்வித்தியாசாலையி லுள்ள ஐரோப்பிய ஆசிரியரில் பெரும்பாலார் 'பாதிரி'களே.

ஒவ்வொரு வகுப்பிலும், அன்றன்றைக்குள்ள பாடம் தொடங்குமுன், கிறிஸ்தவ வேதாகமமாகிய 'பைபில்' என்னும் புஸ்தகத்தில் கொஞ்சம் வாசித்துத் தேவனைத் தொழுவதும் தவிர, அப்புஸ்தகத்தில் சிற்சில பாகங்களை விசேஷ பாடங்களாக நியமித்து, அப்படிப்பில் சிறந்த தேர்ச்சியடையும் மாணாக்கர்களுக்கு வெகுமதிகளுங் கொடுக்கிறார்கள். இந்நிமித்தத்தால் மட்டும், அக்கல்விச்சாலை மாணாக்கர்களில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவர் மிகவும் சிலர். இது நிற்க: அதிலுள்ள ஆசிரியர்கள், மற்ற ஐரோப்பியர்களைப் போல் தங்கள் சுதேசத்தைவிட்டு நெடுந்தூரம் வந்து தங்கள் சரீர சௌக்கியத்துக்கு இசையாத இவ்வுஷ்ண பூமியில் உழைப்பதில் வாழ்நாள்களிற் பெரும்பாகத்தைக் கழிப்பதுடன், தாங்கள் கல்வியில் மிகத்தேர்ந்திருந்தும், மற்றக் கல்விச்சாலைகளில் வேலை பார்க்கும் தங்களைப் போன்ற ஐரோப்பிய பண்டிதர்களைப் போல் உழைப்புக்கேற்ற பெருஞ் சம்பளத்தை யடையாமல், தங்கள் சுக ஜீவனத்துக்குப் போதும்படியான சொற்பப் பொருளையே பெறுகிறார்கள். இச்சொற்பச் சம்பளத்தில் மிஞ்சும் பணத்தைக்கூடச், சிலர், ஏழைகளான மாணாக்கர்களுக்குக் கொடுத்துப் பேருதவி புரிகிறார்கள். இவ்வளவு தேகச்சிரமமும் பொருட் செலவும், தாங்கள் இகத்துக்கும் பரத்துக்கும் மூலாதாரமாகக் கைக்கொண்ட கிறிஸ்து மதத்தைப் பழித்து அம்மதத்தாரைப் பகைக்கும் ஹிந்துக்கள் மகமதியர் முதலிய அந்நியர் பொருட்டு எடுத்துக் கொள்ளுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால், அவர்கள் பரோபகாரத்தின் பெருமை ஒருவாறு விளங்கும். இவ்வித நற்குண சீலர்களுடன் நித்தியமும் சம்பாஷித்துப் பழகிக் கல்விப்பொருளை அவர்கள் மூலமாகத்

தேடும் மாணாக்கர்களுக்குச் சுயநயச் சிந்தை வர வரக் குறைந்து, ஜீவகாருண்யமும் பரோபகாரஞ் செய்ய வேண்டுமென்ற அவாவும் நாளுக்கு நாள் விருத்தியடையுமென்பதிற் சந்தேகமில்லை.

நாராயணனும் கோபாலனும் அக்கல்விச்சாலைக்குட் புகுந்து மாணாக்கர் தொகுதியையும் ஆரவாரத்தையுங் கண்டு அதிசயித்துக்கொண்டே பிரதம ஆசிரியராகிய டாக்டர் மில்லர் துரையவர்களிருக்கும் அறையைத் தேடிச் சென்றார்கள். அப்புலவர் திலகருக்கு அப்பொழுது ஐம்பது வயதுக்குமேலிருக்கலாம். அவர் சரீரத்தின் உன்னத எழுச்சியையும், நிமிர்ந்த கம்பீர நடையையும், மயிர்செறிந்த புருவங்களின் கீழ் அதிகூர்மையுடன் பிரகாசிக்கும் கண்களையும், எப்பொழுதும் பிறர்நன்மையைச் சூழவெழும் நினைவுகளால் உண்டான வரிகளோடிய விசாலமான நெற்றியையும், உதடுகள் பொருந்தி மன உறுதியைக் குறிக்கும் வாயையும், சாந்தமும் பெருந்தன்மையும் குடிகொண்டு விளங்கும் தோற்றத்தையும் கண்டவர்கள் நெஞ்சில், ஒருவித ஆர்வமும், அச்சமும் வியப்பும் உண்டாதல் இயல்பே. அவர், ஸ்கோத்லாந்து தேசத்தில் செல்வமும் கண்யமும் பொருந்திய ஒரு நற்குடும்பத்திற் பிறந்து, கல்வியில் சிறந்த பாண்டித்தியத்தை யடைந்து கீர்த்திப் பட்டங்கள் பெற்றவராயினும், சுயநயத்தையும் பொருளீட்டலையும் சிறிதும் பாராட்டாதவராய், ஒளவையார் முதுமொழியைத் "திரைகட லோடியுங் கீர்த்தியைத் தேடு" என்று மாற்றிக் கைப்பற்றியவர்போல், மாதர்வலைச் சிக்கி மனமறுகும் இளம்பிராயத்திலேயே இத்தேசத்திற்கு வந்து, சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் ஓராசிரியராயமர்ந்து, தம் சாமர்த்தியத்தினால் அக்கல்விச்சாலையின் தலைமை

பூண்டு, அது, பண்டிதராலும் பாமரராலும் தம் பெயரா லேயே வழங்கும்படியான கீர்த்திப் பிரதாபத்தைக் கொள்ளை கொண்டிருந்ததுமன்றி; செல்வப் பொருளைச் சிறிதும் மதி யாது, மாணாக்கர்களின் சௌகர்யத்தின் பொருட்டும், வித் தியாசாலையின் அபிவிருத்தியின் பொருட்டும் கல்வியை ஏழை மாணாக்கர்களுக்குப் புகட்டும் பொருட்டும், தம் குடும் பச்சொத்திலிருந்து ஏராளமான திரவியத்தைச் செலவிட் டும், சிற்றின்ப சுகத்தையும் சந்தான விருத்தியையும் கரு தாது, ஆயுள்மட்டும் பிர்மசாரி விரதத்தையே கைக்கொண்டு, கலைமகளே மணமகளாகவும், தம் அளவிறந்த மாணாக்கரே புதல்வராகவும், அவர்மாட்டுள்ள பேரன்பே உலகப் பற்றாக வும், பரோபகாரமே உத்தியோகமாகவும் வாழ்ந்து வந்தார்.

நம்முடைய நண்பர்கள் சென்று அவரைக் கண்டவுடன், அவர் பேச்சின் அன்புக்கும் ஆதரவுக்கும் அடிமைகளாய் விட்டார்கள். நன்கொடைப் பரீக்ஷையில் தேறிச் சம்பள மின்றி நன்கொடை பெற்று வாசிக்கத் தான் எதிர்பார்ப்ப தாக நாராயணன் சொன்னவுடன், அவர், தந்தையினும் மிக்க ஆர்வத்தோடு, தம் இருகைகளாலும் அவர்களிருவரை யும் இருபுடையும் தோள்களைத் தழுவி யணைத்துக்கொண்டு, அவ்வாறே, அவர்கள் குடும்ப க்ஷேமங்களைப்பற்றி உரிமை யுடன் விசாரித்துக் கொண்டே, பரீக்ஷையின் பலன் தெரியக் கூடிய அறைக்கு அவர்களை யழைத்துச் சென்று, நாராயண னுக்குப் பரீக்ஷை யொப்பேறி யிருந்ததை யறிந்து, சந்தோ ஷித்துப் புகழ்ந்து, அவனுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல் லிப், பின்பு, அவர்களிருவரையும் அவர்கள் சேர்தற்குரிய பி. ஏ. முதல் வகுப்புக்குத் தாமே நேரில் கூட்டிக்கொண்டு போய், அங்கிருந்த ஆசிரியருக்கு அவர்களைத் தெரிவித்து, அவ்வகுப்

பிற் சேர்ப்பித்தார். அவர்களிருவரும் சரித்திர சாஸ்திரத்தையே தங்கள் உபபாடமாகக் கொண்டு படித்து வந்தார்கள்.

இரண்டாவது அதிகாரம்.

நாராயணனும் கோபாலனும், தங்கள் கல்விச்சாலை பட்டணத்தில் இருந்ததால திருவல்லிக்கேணியில் வசித்தல் அசௌகரிய மென்று கருதி, பட்டணத்தில் ஏகாம்பரேசுரர் அக்கிரகாரத்தில் ஒரு வீட்டைத் திட்டஞ் செய்து கொண்டு, ஒரு வாரத்துக்குள் அவ்வீட்டுக்குக் குடிப்போய் விட்டார்கள். குடிக்கூலி ரூபா பத்தையும் கோபாலனே கொடுத்து வந்தான். அவனுக்குக் குடிக்கூலியும், பள்ளிக்கூடச் சம்பளமும், சாப்பாட்டுச் செலவும், புஸ்தகங்கள், துணி மணிகள் முதலிய செலவுகளுமாக மாதம் ஐம்பது ரூபாவுக்கு மேலாயிற்று. அவன் தகப்பனர் தட்டாமல் பணம் அனுப்பி வந்ததும் தவிர, அவசரங்களுக்கு உதவும் படி, பட்டணத்தில் ஒரு 'உண்டில்' கடையில் அவன் கேட்ட ரூபா கொடுக்கும்படி நியமித்திருந்தார். நாராயணனுக்கோ, குடிக்கூலியும் பள்ளிச் சம்பளமும் முற்றிலுங் கிடையாது; மற்றச் செலவுகளும் சொற்பந்தான். கல்விச்சாலையிலிருந்து மாதம் ஏழரை ரூபா வீதம் அவனுக்கு நன்கொடை அளித்தார்கள். போதாதற்கு, அவன் மாமனாராகிய ஸூபாவையர் பணம் அனுப்பினர்.

செல்வப் பேற்றில் வேறுபட்டது போல், கல்வித் தேர்ச்சியிலும் நமது நண்பர்கள் நாளுக்கு நாள் வேறுபட்டார்கள். நாராயணன் தன் அவகாசத்தை யெல்லாம் ஒரே மனதாகக் கல்விப்பயிற்சியிலேயே செலவழித்தான். வீட்டைப்பற்றிய கவலை யொன்றும் அவன் தாய் அவனுக்கு வைக்கவில்லை. பத்மியைவிட்டுப் பிரிந்திருப்பதில் தான் அவனுக்குக் கொஞ்

சம் மனவருத்தம்; அவள் நினைவெழும்பொழுதெல்லாம், தன் கலியாணத்தின் நாலாவது நாள் ஊர்கோலத்தன்று அவளுக்குப் புருஷ வேஷம் போட்ட பொழுது அவளால் அணியப்பட்டு, அவள் அழகிய சரீரத்திலிருந்து மஞ்சள், குங்குமம், சந்தனம் முதலிய தோயப்பெற்ற உடுப்பைத் தான் பத்திரப்படுத்தி வைத்திருந்து இப்பொழுது ஞாபகச் சின்னமாகக்கூடக் கொண்டு வந்திருந்தபடியால், யாரும் அறியாமல் அதை யெடுத்துக் கண் குளிரப் பார்த்து, முகந்து உடம்பாரத்தழுவி, அவளைக் கண்டது போல் தன் மனத்தைத் தேற்றிக் கொள்வான். சாதாரணமாக, அவன் காலை நேரத்தை யெல்லாம் தன் பாடங்களைப் படிப்பதிலேயே செலவழித்து, மாலையில் பள்ளிக்கூடம் விட்டு வந்த பின், கொஞ்ச நேரம் அன்று கற்ற பாடங்களை வாசித்து விட்டுப், பின்பு பந்து விளையாடவாவது கடற்கரையில் உலாவவாவது கோபாலுடன் போவான். இரவு ஏழு மணிக்குள்ளாக வீட்டுக்குத் திரும்பி ஊண் கழித்த பின், பத்து அல்லது பதினொரு மணி வரையும் படித்துக் கொண்டிருப்பான். வைகறையில் நாலு மணிக்கு முன்னதாகவே எழுந்து படிக்கத் தொடங்கி விடுவான். ஊக்கத்துடனும் சூழ்ச்சியுடனும் அவன் பல நாளும் ஒரு நாட்போற் கற்று வந்ததால், சிறந்த தேர்ச்சியடைந்து, ஆசிரியர்களாலும், தன் போன்ற மாணக்கர்களாலும் புகழப்பட்டு, அக்கல்விச் சாலைக்கு ஓர் ஆபரணமாக விளங்கினன். கோபாலன் படிப்புக்கோ; அநேக இடையூறுகள் ஏற்பட்டிருந்தன. காலையில் கொஞ்ச நேரத்தைத் தவிர, மற்ற வேளைகளில் நாராயணனுடன் வாசிக்க அவனால் முடியவில்லை. மாலையில் பள்ளிக்கூடம் கலைந்து வீட்டுக்கு வந்து வெளியே போகு முன், நாராயணன் படித்துக் கொண்டிருக்க, அவன்

தன் அருமைக் குழந்தையுடனும் மனையாட்டியோடும் பகலெல்லாம் பிரிந்திருந்த துயரம் நீங்குமாறு கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பான். அநேக நாளில், அவன் நாராயணனோடு வெளியே செல்லாமல், தன் மனைவியை மட்டும் கடற்கரைக்கு அழைத்துப் போவான். முன் நிலவிருந்தால், அவர்கள் வீட்டுக்குத் திரும்புவதற்கே எட்டு அல்லது ஒன்பது மணியாய் விடும். இரவிலோ, ஒரு நாளும் ஒன்பது மணிக்கு மேல் வாசிக்கக்கூடாது; ஏதாவது விசேஷ காரணத்தை முன்னிட்டு அவ்வாறு வாசித்தால், ஒரு மணி நேரப் படிப்புக்கு ஆசைப்பட்டது போக, அவன் நாயகியின் கோபத்தைத் தணிக்க மூன்று நாள் செல்லும். விடியற் காலத்தில் வாசிப்பதோ அசாத்தியம். ஆகவே, அரியூரைப் பற்றிய விசாரமும், பட்டணத்தில் தன் வீட்டு விசாரங்களும், சாவித்திரியைப் பற்றிய தீராத்துயரமும், தன் இல்லாள் மேலும் குதலைவாய் மதலைமேலுமுள்ள பெரும் வாஞ்சையும், அவன் படிப்புக்குக் கடப்பரிய விக்கினங்களாக முடிந்தன. அவன், நாளுக்கு நாள் தன் வகுப்பில் மதிப்பிழந்து, ஆசிரியர்களால் கண்டிக்கப்பட்டு, சில சமயங்களில் தானாகவே எண்ணியெண்ணி மனம் நொந்து புண்ணாகி, வலைப்பட்ட மான் போல மறுகி, மிக்க மனவருத்தத்தை யடைந்தான்.

பள்ளிக்கூடத்தில் ஒரு நாள் நடந்த பரீக்ஷையில், நாராயணன் நூற்றுக்கு எண்பது வீதம் தேறி வகுப்பிலுள்ள மாணாக்கர் யாவரிலும் முதல்வனாகவும், கோபாலன் நூற்றுக்கு ஒன்பது வீதம் தேறி யாவரிலும் கடைசியாகவும் வைக்கப்பட்டார்கள். தான் முதன்மை யடைந்ததனாலுண்டாகும் சந்தோஷத்தினும், தன் உயிர்த்தோழன் கடைசியான வெட்கமும் மனவருத்தமுமே நாராயணனுக்கு அதிகமா

யிருந்தன. கோபாலனுக்கோ, வகுப்பில் இருக்கும்பொழுதே, மானக் குறைவால் கண்ணீர் ததும்பிவிட்டது. அந்தப் பரீக்ஷாதிகாரியான ஆசிரியரும், ஒரே ஊரிலிருந்து ஒத்த வயதுள்ள நண்பர்களாய் வித்தியாசாலையிற் சேர்ந்து கற்றுவந்த இவர்களிருவர்களில், விடாமுயற்சியால் ஒருவன் முதன்மையாகவும் சோம்பலினால் மற்றவன் கடைசியாகவும் இருந்ததை, மாணுக்கருக்கு நன்மதி புகட்டும் பொருட்டு ஒருதாரணமாக எடுத்துக் காட்டிப் பிரசங்கித்தார். அன்று மாலை பள்ளிக்கூடம் கலைந்து வீட்டுக்குத் திரும்பி வந்த கோபாலனை, முதல்நாள் யுத்தத்தில் முறிபட்டுத் தோல்வியுற்று வீட்டுக்குத் திரும்பிய இலங்கேசனுக்குச் சமானமாகக் கூறலாம். தன் இன்னுயிர்க் காதலியாகிய கல்யாணியின் பிரிய நோக்கமும், அருமருந்தன்ன அருமைக் குழந்தையின் அமிழ்தினும் ஆற்ற இனிதான மழலைச் சொற்களும், செம் புண்ணில் வேல் நுழைந்தாற் போல அவன் மனத்தைத் துயரப்படுத்தின.

* "மாதிரம் எவையும் நோக்கான்;
வளநகர் நோக்கான்; வந்த
காதலர் தம்மை நோக்கான்;
கடற்பெருஞ்சேனை நோக்கான்"

---

* இதன் பொருள்—(முதனாட் போரில் தோற்றுத் திரும்பும்) இராவணன், (தான் திக்கு விஜயஞ்செய்த) திசைகளில் யாதொன்றையுமாவது, இலங்காபுரியை யாவது எதிர் கொண்டு வந்த தன் காதலரையாவது, கடலினும் பெரிய தன் சேனையை யாவது, தலை நிமிர்த்துப் பாராமல், தன் போக ஸ்திரீகள் ஒவ்வொருவரும் தன்னையே ஆசையுடன் நோக்கா நிற்க, பூமாதேவி யென்ற ஸ்திரீ முகத்தையே தான் பார்த்துக்கொண்டு (தலையைக் குனிந்துகொண்டு), நகரத்துள் புகுந்தான்.

தாதவிழ் கூந்தல் மாதர்
தனித்தனி நோக்கத், தான், அப்
பூதலம் என்னும் நங்கை
தன்னையே நோக்கிப் புக்கான்.

† "நாள் ஒத்த நளினம் அன்ன முகத்தியர் நயனம் எல்லாம் வாள் ஒத்த, மைந்தர் வார்த்தை இராகவன் வாளி ஒத்த."

கோபாலன் வீட்டுக்குவந்து புஸ்தகங்களை ஒரு புறம் எறிந்துவிட்டு, ஒருவருடனும் முகங்கொடுத்துப் பேசாமல், "கையறு கவலைசுற்ற, உள்நிறைமானந்தன்னை உமிழ்ந்தெரிந் துயிர்ப்பது" போலப் பெருமூச்செறிந்துகொண்டு, கொஞ்ச நேரம் கன்னமும் கையுமாக உட்கார்ந்திருந்தான். பின்பு, நாராயணன் வந்து, அன்பாய் மெதுவாய்க் கடற்கரைக்கு அழைக்க, இருவரும் எழுந்து சென்றார்கள். அங்கே வெகு நேரம் வரை இருவரும் மௌனமாகக் கவலை தேக்கிய முகத் துடன் வீற்றிருந்தபின், இந்தச் சம்பாஷணை தொடங் கிற்று:—

† அன்று மலர்ந்த தாமரைக்குச் சமானமான முகத்தை யுடைய தன் ஸ்திரீகளின் கண்கள் எல்லாம். (ஒப்பற்ற அழகும் மலர்ச்சியும் வாய்ந்திருந்தும்) சிவபெருமானால் தனக்குக் கொடுக் கப்பட்டு அதிக சிரேஷ்டமானதுமாயிருந்தும் யுத்தகளத்தில் பயன்படாமற் போன வாளாயுதத்துக்குச் சமமாக, (மன்மத கல கத்தில்) தன்மேல் ஏவப்பட்டதில், பயனில்லாமற் போயின; (தனக்குக் காமவிகாரத்தை யுண்டு பண்ணவில்லை); தன் மைந்தர் களின் வார்த்தைகளோ, இராமபாணம் உடலிற் றைத்தாற்போல், செவிகள் மூலமாக மனத்தில் தைத்து, ஆற்றுதற்கரிய புண்ணை யுண்டு பண்ணின. (கம்பராமாயணம் யுத்தகாண்டம் கும்பகர் ணன் வதைப்படலாம்' பாட்டு, 3-4).

நாணு:—கோபு! நீ நன்றாய் விடையளிக்கவில்லை என்று அப்பொழுதே சொன்னாய். ஆனாலும் சுமாராக எழுதியிருப்பாய், அஞ்சுக்கிரண்டாவது பழுதாகாமல் தேறுமென்று நினைத்திருந்தேன். இவ்வளவு மோசமாய் முடியுமென்று நான் சொப்பனத்திலும் எண்ணவில்லையே!

கோபு:—எனக்கு அப்பொழுதே தெரியும்; நாளாவர்த்தியிலேயே பரீக்ஷைப் பாடங்களை வாசியாமல் அசட்டை செய்ததும் தவிர, பரீக்ஷைக்கு முன் ஒரு வாரமாகப், புஸ்தகங்களைத் தொடவேயில்லை. இவ்வளவு தேறினதுகூட, தெய்வ கிருபைதானென்றே சொல்லவேண்டும்.

நாணு:—ஏன்? நீ படுக்கையறைக்கு தினமும் புஸ்தகங்களை எடுத்துக்கொண்டு போனாயே, ஏன் வாசிக்கவில்லை?

கோபு:—அந்தச் சங்கடத்தை எங்கே சொல்லி அழுகிறது? உன்னிடத்தில் சொல்லாமல்தான் மறைப்பென்ன? படுக்கையறைக்குப் புஸ்தகங்கள் சுமந்ததிலும் குறைவில்லை. இராத்தூக்கமின்றிக் கண்கள் சிவந்ததிலும் குறைவில்லை. படிப்புமட்டும் பூச்சியம்—மூன்று 'கலமும்' பூச்சியந்தான், கல்யாணத்துக்கு (கோபாலன் தன் பெண்டாட்டியை 'கல்யாணம்' என்று அழைப்பது வழக்கம்), அப்பொழுது ஒரு வாரமாகக் கொஞ்சம் உடம்பு சௌக்கியமில்லை: தேகத்துக்குள் சுரம் புகுந்துகொண்டு அவஸ்தைப்படுத்திக் கடைசியில், முழங்காலில் மிளகு தக்காளிக் காய்போல ஒரு சிறு சிரங்கு புறப்பட்டிருந்தது. அதிலுண்டாகும் நோவுமாறி அவளுக்கு நித்திரைவரும் பொருட்டு, வெகு நேரம் வரை கதைகள் சொல்லிக் கொண்டிருப்பேன். அவள் தூங்கியபின்போ, அந்த அறையில் விளக்கிருக்கக்கூடாது; ஆகையால், நான் புஸ்தகங்களைத் திருப்பிப் பார்க்கக்கூடவில்லை.

நாணு:—ஏன், அவள் தூங்கியபின் நீ என்கூடவந்து படித்திருக்கலாமே? நான் தான் பரீக்ஷைக்காகத் தினமும் பன்னிரண்டு மணிவரையும் படித்து வந்தேனே.

கோபு:—எனக்கு வாய்த்திருப்பவள்போல உனக்கும் ஒரு பெண்டாட்டி வாய்த்து நீ அநுபவித்திருந்தால், இந்தக் கேள்வி கேட்டிருக்கமாட்டாய். அவள் படுக்கையைவிட்டு நான் உன்னுடன் வந்து வாசிக்க முடியுமானல், ஏன், நித்தியம் அப்படிச் செய்யலாமே? அவள் என்னை க்ஷணமும் பிரியவிடாள்; அவள் விழித்திருந்தாலும் தூங்கினலும் நான் அவள் பக்கத்தைவிட்டு அசையக் கூடாது. அபூர்வமான சில சமயங்களில் அவளாகவே என்னை வாசிக்கச் சொல்லுவாள்; அப்பொழுது என்பாடு குசால் தான். ஆனல், பொதுவாய், பரிக்ஷை, படிப்பு முதலியவைகளெல்லாம் அவள் கவனிக்கத் தக்கவையன்று. நான் ஏதாவது மறுத்துச் சொன்னல் அவள் சோகத்தைச் சகிக்கமுடியுமோ? நான் அவளைப்பற்றி ஒரு குறள் வெண்பாப் பாடியிருக்கிறேன், கேள்.

'இணங்கிடின், இன்பத் துக்கெல்லை; இணங்காக்கால்,
துன்பத்துக் கெல்லாம் தலை'

அவள் கண்ணீரைப் பெருகவிட்டால், என்னல் ஒரு நிமிஷமும் சகிக்கமுடியாது.

நாணு:—அப்படியானல், அவளுக்கும் படிப்பில் ஆசையை மூட்டி, நீ படிக்கும்பொழுது அவளையும் ஏதாவது தமிழ்ப் புஸ்தகங்களை வாசிக்கும்படி செய்ய வேண்டும், அல்லது,—

கோபு:—அநுபவமில்லாதவனேடு எப்படிப் பேசுகிறது? உனக்கு நான் சொல்லி நீ பதில் சொல்வது குருடர்கள் யானை கண்ட கதைபோலிருக்கிறது. நீ இதற்காகவே ஒரு

நாள் இராத்திரி ஒளித்திருந்து நாங்களிருப்பதைக் கண்ணாரக் கண்டால் தான் உனக்குத் தெரியும்; பிற்பாடு இப்படியெல்லாம் பேசமாட்டாய். சாவித்திரியக்காள் படிக்கத் தொடங்கினது உனக்குத் தெரியுமே; நீதானே முக்கிய காரணஸ்தனுயிருந்தாய். அவள் படிப்பில் எவ்வளவு தேர்ச்சியடைந்திருக்கிறுள்! இந்தக்கதி வந்தபின், இங்கிலீஷ் வாசித்தால் ஊரார் சிரிப்பார்களென்று அவள் வாசிக்க வில்லையே யொழிய, இல்லாவிட்டால் இதற்கு முன் அந்தப் பாஷையிலும் நன்முய்த் தேர்ந்திருப்பாள்; ஏனென்ருல், படிப்பில் அவளுக்கு அந்தரங்க வாஞ்சையும் விசுவாசமும் இருக்கிறது. நாளது வரையும், மாதம் ஐம்பது ரூபாவுக்குமேல் செலவிட்டுக்கொண்டு, ஊர்விட்டு ஊர்வந்து, பரீக்ஷைக்குப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கிற என்னைப் பார்க்கினும், அவள் அதிக நேரம் பாகவதம், பாரதம், இராமாயணம் முதலிய புஸ்தகங்களை வாசிப்பதில் செலவிடுகிருள். கல்யாணமோ, அப்படியில்லை, கொஞ்சம் வாசிப்பதுங்கூட என் தொந்திரவுக்காகத்தான். அவளுக்குப் படிப்பில் சிறிதும் ஆசையேயில்லை. பட்டணத்துக்கு வந்தபின், இங்கிலீஷ் முதல் வாசகப் புஸ்தகம் மூன்றுதரம் வாங்கியாச்சுது; ஊரில் வைத்து இரண்டு தரம் வாங்கிற்று; ஆக ஐந்து புஸ்தகங்களையும், ராஜா (கோபாலன் குழந்தையின் செல்வப் பெயர்) கிழித்தாய் விட்டது; கல்யாணத்துக்கோ, இன்னும் ஐந்து பாடங்கூடத் தெரியவில்லை. ஒரு நாள் வாசித்தால், ஒன்பது நாள் சும்மா விருக்காள்.

நாணு:—அதெல்லாம் உன் குற்றமென்றே நினைக்கிறேன். அவளுக்கு உன்மேல் அந்தரங்க வாஞ்சையிருந்தால், உன் சொல்லைத் தட்டி நடந்து மனத்தைப் புண்படுத்துவாளா? நீ தக்கபடி புத்தி சொன்னல் அவள் மனத்தைச் சீர்திருத்தி

விடலாம், அவளென்ன, இன்னும் குழந்தைதானே: எப்படி வளைத்தாலும் வளையுமே.

கோபு:—மறுபடியும் மறுபடியும் ஏட்டுச் சுரைக்காய்க் கதை சொல்லாதே. அவளுக்கு என்மேல் வாஞ்சை யிருப்பதை நான் ஒருபொழுதும் சந்தேகிக்கமாட்டேன். ஒபீலியாவைப் பார்த்து ஹாம்லெட் சொன்னது, என் விஷயத்தில் அவள் வாயில் பொருந்தும்,

* விண்மீனைத் தீயா, வெயிலைச் சுழல் கோளா,
உண்மையைப்பொய் யாக ஐயிர்ப்புற்றிடினும்—இன்மையைச்சால்
மெய்யன் புள்ளன் கொலெனும் வீணை ஐயத்தைத்
தையலே முற்றும் தவிர்.

அதை நான் பல தடவைகளிலும் பலவிதங்களிலும் அறிந்திருக்கிறேன். அவள் வாஞ்சை நாளுக்கு நாள் வளர்ந்தே வருகிறதென்பதிலும் சந்தேகமில்லை. பந்து விளையாட்டில் நான் கீழே விழுந்து காயப்பட்டவன்றைக்கு அவள் படுக்கையறையில் வடித்த கண்ணீரைக் கண்ணாரக்கண்டும், நாடகத் தீப்புண்களால் ஊசலாடும் உயிருடன் நான் பாயும் படுக்கையுமாய்க் கிடக்கும்பொழுது ஒவ்வொரு சமயங்களில் அவள் பட்ட துயரத்தைப் பார்த்தும், என் சரீரம் முழுதும் வெந்து உடுப்பில்லாத போது கண்டவர் பயந்து வெறுக்கும் படியான வடுக்களால் அலங்கோலப்பட்டு அழகொழிந்த பின்னும்கூட, இப்பொழுது ஒவ்வொரு சமயங்களில் வெளிப்படும் பாசக்குறிகளையும் மொழிகளையும் கண்டும் கேட்டும்;

---

* இதன் பொருள்:—நக்ஷத்திரத்தை நெருப்பென்றும், பூமியன்றிச் சூரியனே அசைவதாகவும், சத்தியத்தைப் பொய்யாகவும் சந்தேகித்தாலும், என் காதலை மட்டும் ஒருபொழுதும் சந்தேகியாதே.

அவள் உள்ளன்பை நான் சந்தேகித்தால், என் தலை வெடித்து விடும். பாசாங்கென்று நினைக்கவும் சிறிதும் இடமில்லை. ஆனால், இவ்வாஞ்சையினால் என் சொற்படி நடப்பாளென்பது வீண். ஒரு வேளை, சூதுக்காரியாகவாவது குறைந்த பக்ஷமுள்ளவளாகவாவது இருந்தால், என் மனத்தைத் திருப்தி செய்யும் பொருட்டு, என் சொற்படி கேட்கலாம். இப்பொழுது நான்தான் அவள் சொற்படி கேட்கவேண்டும்; இல்லாவிட்டால் கண்ணீரும் கம்பலையுந்தான். அற்ப விஷயங்களுக்குக்கூட அவள் வடிக்கும் கண்ணீரையும் படுந்துயரத்தையும் நீ ஒரு நாளாவது பார்த்திருந்தால் இப்படிப் பேசமாட்டாய்.

நாணு:—ஒருக்கால், வேறு பெண்கள் யாராவது படிப்பதைப் பார்த்து, அவர்களுடன் அடிக்கடி பழகினால் அவளுக்கும் ஆசையுண்டாகலாம். பத்மி வந்தால் அவள் கூடச் சேர்ந்து வாசிக்கமாட்டாளா?

கோபு:—எனக்குக் கொஞ்சமும் நம்பிக்கையில்லை.

“நாய்வாலை அளவெடுத்து நறுக்கித் தீட்டில்,
நல்லஎழுத் தெழுதஎழுத் தாணியாமோ?
பேய்வாழும் சுடுகாட்டைப் பெருக்கித்தள்ளிப்
பெருவிளக்கை யேற்றிவைத்தால், வீடதாமோ?”

குறைப்பாட்டும் மறந்து போய்விட்டது. அப்படியானால், இப்பொழுது சாவித்திரியக்காள் வாசிப்பதைப் பார்த்துத் தானும் வாசிக்கலாமே? முதலில் அவளால் வாசிக்க முடியாதென்று எண்ணுகிறேன்; கண்கள் கூடக் கெட்டுப்போகும்படி அவ்வளவு அழுதிருக்கிறாள். இதை உதாரணமாகக் கேள்: நேற்று ராத்திரி, கதை சொல்லிக் கொண்டிருந்தேன்; நேற்று மைலாப்பூர் வரைக்கும் நடந்து

போய்த் திரும்பி வந்ததால், கொஞ்சம் அசதியாய்த் தூக்கம் கண்ணை யிறுக்கத் தொடங்கிற்று. கல்யாணமோ, பகலில் நன்றாய்த் தூங்கியிருந்தாள். ஆகையால் எனக்குத் தூக்கம் வரவே அவளுக்குத் துக்கம் வர ஆரம்பித்தது. சாவித்திரி பக்காளாவது, நீயாவது, அம்மாவாவது, இன்னும் வேறு சிநேகிதர்களாவது, பேசிக்கொண்டிருந்தால் விடியுமட்டும் தூங்கமாட்டேனென்றும், தன்னோடு பேசத்தொடங்கு முன்னமே தூங்கி விடுகிறேனென்றும், சூளாகப்பேசி, அழத் தொடங்கினாள். யதார்த்த காரணத்தைச் சொல்லியும், நான் கற்ற வித்தை யெல்லாம் காட்டியும் பயன்படவில்லை. கடைசியாக எனக்குக் கோபம் வந்து, எக்கேடு கெட்டாலும் சரி யென்று தூங்கத் தொடங்கினேன். கொஞ்ச நேரத்துக்குள், அவள் விசித்த விசிப்பினால் ஒருவித வலிப்புண்டாகி, சுவாசம் விடுவது வருத்தமாகி, உடனே உயிர் போய்விடும்போல ஆய்விட்டது. பிற்பாடு மறுபடியும் எழுந்து அவளைக் கெஞ்சிக் கொஞ்சிச் சமாதானஞ் செய்தேன். அவளுக்குச் சந்தோஷம் வந்தவுடன், அவளும் நானும் கூடிக் குலாவி அநுபவித்த சுகத்துக்கு, இந்திரபோகமும் நிகரில்லை. பரீக்ஷைப் படிப்பு இவ்விதமானால், இவ்வளவாவது தேறியது ஆச்சரியந் தானே? சில சில சமயங்களில், நான் பரீக்ஷை கொடுத்து உத்தியோகம் பண்ணிச் சம்பாதிப்பது அவசியமில்லாததால், கல்யாணத்தின் சந்தோஷத்துக்கு இடையூறாக விருக்கும் படிப்பை முற்றிலுமே விட்டு விட்டு, ஊரிலாவது, வேறு இஷ்டமான இடத்திலாவது போயிருந்துகொண்டு, தொன்று தொட்டு யாவராலும் புகழப்பட்டதாயும், உலகத்தில் முயற் கொம்பு போல அரிதாகவு மிருக்கிற இந்த மெய்யன்பு வெள்ளத்தில் மூழ்கித் தேக பரவசமான ஆநந்தத்தை யடைந்து,

அவள் மனம் போனபடி யெல்லாம் நடந்து, ஏன் சுகமாகக் காலத்தைக் கழிக்கக் கூடாதென்று எண்ணுகிறேன். ஆனல், மேலான புத்திக்கு, அது, மிருகங்களின் வாழ்க்கைக்குச் சமமாகத் தோன்றுகிறது. சித்த சுத்தியுடன், சித்த விருத்தியும், கல்விப் பயிற்சியும், ஜீவகாருண்யமும் உள்ள மனையாளாயிருப்பின், அவ்வித வாழ்க்கை பொருந்தும். நற்சிந்தையுடனும் நல்லொழுக்கத்துடனும் நல்ல காரியங்களைச் செய்து காலத்தைத் தள்ளலாம். அப்படியின்றி, நானும் கல்யாணமும் அவ்வாறு வாழத் தொடங்கினல், அதிசீக்கிரத்தில், மனுஷ ஜன்மத்துக்கு உசிதமானவையென்று பெரியோர் கூறும் முயற்சிகள், எண்ணங்கள், கிரியைகள், எல்லாவற்றையும் மறந்து, எங்களிருவர் சுகத்தை மட்டும் மறவாமல் சிருஷ்டியே எங்கள் பொருட்டென்று நினைத்து, அருமையான வாழ்நாள்களை யெல்லாம் வீணை சிற்றின்ப சுகத்தில் மாய்த்து விடுவோமென்பதில் சந்தேகமில்லை. இப்பொழுது அடிக்கடி எழும் நல்ல எண்ணங்களும், பொது நன்மை செய்யவேண்டுமென்ற அவாவும், சிறந்த புஸ்தகங்கள்பேரிலுள்ள ஆசையும், கார்த்திகைப் பிறைபோல் ஆகி கடைசியில் முற்றிலும் ஒழிந்துபோம். ஆகா! ஒவ்வொரு சமயங்களில் என்ன என்ன எண்ணங்களெல்லாம் எண்ணி யிருக்கிறேன்! எத்தனையோ தரம் தற்கொலை செய்துகொள்ள நினைத்திருக்கிறேன்; எத்தனையோ தரம் கல்யாணத்தைக் கொன்றுவிட்டுச் சுகமாகச் சுயாதீனமாய் வாழ விரும்பி யிருக்கிறேன்; இருவர் மரணத்தையும் பலதரம் கோரி யிருக்கிறேன்; இருவர் மரணத்துக்காகவும் தெய்வங்களைக் கூடப் பிரார்த்தித்திருக்கிறேன். தாயுமானவரைப் போல், நானும் வேண்டிக் கொள்ளுதல் நன்ருய்ப் பொருந்தும்.

"எண்ணாத எண்ணம் எல்லாம் எண்ணி எண்ணி ஏழை
நெஞ்சம் புண்ணாகச் செய்ததினிப் போதும், பராபரமே"

நாணு:—கோபு! நீ சொல்வதை யெல்லாம் கேட்கும் பொழுது, எனக்குண்டாகும் மனவருத்தத்துக்கு அளவில்லை. நீ இவ்வளவு துன்பத்துக்கு உள்ளாகி மறாகுகிறாயென்று நான் சொப்பனத்திலும் எண்ணவில்லை. நீயும் உன் அகமுடையாளும் தக்க செல்வத்தில் பிறந்து வளர்ந்து, மதனும் ரதியும் போல் சுகித்து வாழ்கிறீர்களென்றே நினைத்திருந்தேன். பிறரைப் பற்றிய அபிப்பிராயங்களில், நான் இது வரையும் இவ்வளவு பிசகினதேயில்லை. உயிருக்குயிராய் உன்னோடு பழகியும், எனக்கு இது தெரியவில்லையே! 'ஒவ்வொருவர் தலைப்பாகைக் குள்ளும் வேறு வேறான பிரபஞ்சம் சஞ்சரிக்கிறதென்றும், சிருஷ்டிப் பெருங் கடலில் நாமெல்லாம் ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாத திட்டுகளுக்குச் சமானம்,' என்றும் தாக்கரே புலவர் சொல்லுகிறதின் பொருள், இன்று தான் எனக்கு நன்றாய்த் தெரிந்தது.

கோபு:—சயனக்கிரக சங்கதிகளை யாரிடமும் சொல்லலாகா தென்பது பெரியோர் வாக்கு. அன்றியும், மற்றவர்கள் எவ்வளவு சொந்தமாயிருந்தாலும், இவ்விஷயத்தில் யாரால் என்ன செய்ய முடியும்? அதனால் தான் உன்னிடத்திற்கூட இதுவரையும் நானொன்றும் சொல்லவில்லை; சொன்னால்,வீண் விசனத்துக்கு ஏதுவே தவிர வேறென்ன பலன்? மற்ற விஷயங்களில் நீ புத்திசாலியா யிருந்தாலும், இந்த சங்கதியில் முக்கியமாய் வேண்டிய அநுபவஞானம் உனக்கில்லை. என்ன செல்வம் இருந்தாலென்ன? ஆடையாபரணங்களும் போக போக்கியங்களும் ஏராளமா யிருந்து விட்டால், ஸ்திரீயும் புருஷனும் ஒற்றுமையோடு சுகமாய் வாழலாமென்று எண்

ணுவதற்குக் கொஞ்சமும் இடமில்லை. சாதியிற் கடைய னான பறையனுக்கு அடிமையாகி, அவன் தொண்டு புரிவதில் வாளையுருவித் தன் தர்மபத்நியையே வெட்டத் துணிந்து வாளோங்கிய தருணத்தில், அரிச்சந்திர மஹாராஜனுக்கும் சந்திரமதி தேவிக்கு மிருந்த உள்ளன்பும் அந்நியோந்நியமும், மன்மதனுக்கும் ரதிக்குங் கூட இராதென்று நினைக்கிறேன். செல்வத்தினால் மட்டும் ஒரு பயனுமில்லை; உண்மையான காதலிருந்தாலும் போதாது; இப்பொழுது எங்களுக்குச் செல்வமும் ஆசையு மிருந்தும் என்ன பயனைக் கண்டோம்.

"புணர்ச்சி, பழகுதல், வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்."*

என்று சொன்ன நாயனாரின் வாய்க்கு நல்முத்திடலாம். இதனாலேயே, ஔவையும், "என்ஞான்றும் காதலிருவர் கருத்தொக்க ஆதரவுபட்டதே இன்பம்," என்று பாடியிருக் கிறாள். புருஷன் முழுதும் மனைவி சொற்படியாவது, அல்லது அவள் அவன் சொற்படியாவது நடக்கவேண்டும்; அல்லது இருவரும், நல்லறிவும் நற்புத்தியும் உடையவராய், கருத்தி சைந்த ஆதரவும் ஒத்த உணர்ச்சியும் அமைந்து, நன்மை தீமையாராய்வதில் ஒருவர்க்கொருவர் மெய்யாகவே வாழ்க் கைத் துணையாகி, ஒழுகவேண்டும். இப்படி ஒரு வழியுமில் லாமல், விவாகமாகிய நுகத்தடிக்குள், அதன் அருமை பெருமை உரிமைகளைச் சிறிதும் அறியாதவளாயும், மன வொற்றுமை யில்லாதவளாயு முள்ள ஒரு மனைவியுடன் கழுத்தைக் கொடுத்துவிட்டுத், தான் ஒரு வழியை நோக்கி னால் அவள் அதற்கு நேர்விரோதமாக வலுவாயிழுக்கக், கண்

---

* 'பத்மாவதி சரித்திரம்: முதற்பாகம்,' 71-ம் பக்கத்தைப் பார்க்க.

டவர்கள் யாவரும் "ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப் போல அகப்பட்டீர்; கிடந்துழல அகப்பட்டீரே!" என்று கைக்கொட்டிச் சிரிக்கப், பரக்கப் பரக்க விழிப்பவனைப் போன்ற துர்ப்பாக்கியன் இவ்வுலகில் எங்குமில்லை. இந்தக் கஷ்டம், கட்டை போனால்தான் போம்; அது வரையும் நித்திய கண்டந்தான். இப்படி விழிக்கும் கிரஹஸ்தனுடைய இல்வாழ்க்கையினும், தடிக்கட்டையாய்த் திரியும் பிரமசாரியின் வாழ்க்கை எவ்வளவோ சிறந்தது. தன் மனத்துக்குப் பரிபூரணமாய் நல்லதென்று தோன்றும் ஒன்றைச் செய்யும் சக்தியிருந்தும், ஒருவனால் செய்ய முடியாவிட்டால், அவன் சுதந்தர புத்தியினால் பயனென்ன? ஆண்டி ஆட்டியபடி யெல்லாம் ஆடும் குரங்கினும், அவன் எதில் உயர்ந்தவன்? பழமொழிப்படி ஏறுமாறான மனைவியுடன் வாழ்வதினும், கூறாமல் சந்நியாசம் கொள்வதே திறம்.

நாணு:—பேச்சை விடு; கேட்கக் கேட்க எனக்கு மனவருத்தம் சகிக்கமுடியவில்லை. இந்த வயதிலேயே இவ்வளவு கஷ்டமும் வெறுப்பும் வேதாந்தமுமானால், மேல் நடப்பதெப்படி? ஆயினும் எறும்பூரக் கல்லுந் தேயும், பொறுமையினால், ஆகாததொன்று மில்லை. நீ மட்டும் மனவெறுப்புக்குச் சிறிதும் இடங்கொடாமல், அவள் போக்குப்படியே விட்டுக், கொஞ்சம் கொஞ்சமாய் நல்ல புத்தி புகட்டி, அவள் மனசைத் திருப்பினால், நாளாவர்த்தியில் எல்லாம் திருந்தி விடுமென்று நம்புகிறேன்.

கோபு:—"சரி உன்னிஷ்டப்படியே நடக்கிறேன். என்னமாய்த் திருந்துகிறது பார்ப்போம், எனக்குக் கொஞ்சங்கூட நம்பிக்கையில்லை," என்று சொன்னான்.

இதற்குள் வெகுநேரமாய் விட்டபடியால், இருவரும் எழுந்து விரைவாய் வீட்டிக்குத் திரும்பினார்கள்.

மூன்றாவது அதிகாரம்.

“சிரஞ்சீவி, மருமான் நாணுவுக்கு ஸர்வாபீஷ்டமும் உண்டாவதாக அநேக ஆசீர்வாதம், ஸ்ரீ சுப்பிரமணியர் கிருபாநுக் கிரகத்தால் இவ்விடத்தில் யாவரும் நாளது வரையும் க்ஷேமம். அவ்விடத்து க்ஷேமாதிசயங்களுக்கு அடிக்கடி எழுதவேணும்.

“குழந்தை சௌபாக்கியவதி பத்மாவதி நேற்று சுக்கிர வாரத்தன்று உதயாதி நாழிகை ஏழுக்குமேல் ஸிம்ம லக்னத்தில் சோபனமானாள். உன் மாமியாருக்கு பிரஸவ காலமாயிருப்பதால் உடனே பதினாறு நாள்களுக்குள் ஒரு சுப முகூர்த்தத்தை வைத்து ருதுசாந்தி கல்யாணத்தை நடத்திவிடலாமென்று உத்தேசித்திருந்தேன்; ஆனால் ஒருத்தரும் எதிர்பாராதவிதமாக, உன்மாமியார் இன்று காலையில் பிரஸவமாகி, ஒரு புருஷப் பிரஜை பிறந்து, குழந்தையும் தாயாரும் சௌக்கியமா யிருக்கிறார்கள். சாந்தி முகூர்த்தம் பின்னால் தான் பார்த்துக்கொள்ளவேணும். நீ இவ்விடத்துக்குப் பள்ளிக்கூட அடைப்பில் ரஜாவின்பேரில் வரும்பொழுது வைத்துக் கொள்ளலாமென்று எண்ணுகிறேன். நான் போன வாரம் மணியார்டர் செய்த ரூபாய் பதினைந்து வந்து சேர்ந்திருக்குமென்று நம்புகிறேன். இவ்விடத்தில் இந்தப்பூ விளைவு ரொம்பவும் உபாயமாய்ப் போய்விட்டது. நெல்விலை, கோட்டை பத்து ரூபா ஆக இருக்கிறது; இன்னும் உயரும் போலிருக்கிறது. எனக்குப் பத்து நாளைக்கு முன் ஒரு சீட்டுக்கிடைத்தது. அந்தப் பணத்தை ஒரு கடன் காரனுக்குக் கொடுத்து விடலாமென்று யோசித்தேன். ஆனால், கடன் குறைந்த வட்டியின் பேரில் தானிருக்கிறது; புள்ளிக்காரனும்

அவசரப்படவில்லை. ஆகையால் கொஞ்சம் நெல்பிடித்துக் கட்டலாமென்று நினைத்தேன். அந்தச் சமயத்தில் இறங் கலுக்கு ஒரு மர வியாபாரக் கப்பல் வந்தது. ஒரு தகுந்த மனுஷனும் என்னைப் பங்கு சேரும்படிக் கேட்டான். இரண்டு பேருமாகச் சேர்ந்து ரொக்கமும் கடனுமாக இரண்டாயிர ரூ. வரை மரம் வாங்கி, மூன்றாநாள் தான் இறங்கலிலே ஒரு மரக்கடை ஏற்படுத்தி யிருக்கிறோம். கனத்த லாபம் கிடைக் குமென்று தோன்றுகிறது. என் பங்காளி மரவியாபார முறைமைகளெல்லாம் நன்றாய்த் தெரிந்தவன். எனக்கு வியா பாரப் பழக்கம் இல்லாமற் போனாலும் அவன் எல்லாம் பார்த்துக்கொள்வான்.

"வேறு விசேஷமில்லை. பள்ளிக்கூடம் அடைத்தவுடன், கோபாலையர் வந்தாலும் வராவிட்டாலும், நீயும் அக்காளும் புறப்பட்டு வந்துவிடுங்கள். எல்லா சங்கதிகளுக்கும் உடனே விபரமாய்ப் பதிலெழுதவும். வேணும் அநேக ஆசீர்வாதம். ஸ்ரீ சுப்பிரமணியர் சகாயம். இப்படிக்கு அய்யாவய்யன், சிறுகுளம்."

மேற்கண்ட கடிதம் கிடைத்தவுடன், தான் மறுபடியும் பட்டணத்துக்கு வரும்பொழுது, தன் மனைவியைக் கூடவே அழைத்து வந்து, அவள் படிப்பை விருத்தி செய்யலாமென்ற எண்ணம், நாராயணன் மனத்தில் அடக்க முடியாத சந்தோ ஷத்தை உண்டு பண்ணிற்று. கோபாலனும் அவனைப் பலவித மாய்ப் பரிகாசம் பண்ணினன்;

நாம் முதலிற் பார்த்ததுபோலன்றி, நாராயணன், இப் பொழுது உலகவிவகாரமெல்லாம் அறிந்த இருபது வயதுக் காளையாயிருந்தான். தன்போன்ற வாலிபர் சிலரைப்போல் துர் விஷயத்தில் பிரவர்த்திக்கா விட்டாலும், தன்னைச் சுற்று

முள்ள துன்மார்க்கக் கருவிகளையும் கிரியைகளையும் கர்த்தாக் களையும், அவன் கவனியாதிருக்கவில்லை. சங்கீதத்தில் இருந்த பெருங்கிறுக்கினல், அந்த சாஸ்திரத்துக்குத் தற் காலத்தில் முக்கிய களஞ்சியங்களா யிருக்கும் விட புருஷரை யும் சில பொதுப் பெண்டிரையும் கூட, அவனுக்கு நேரில் தெரியும்; நல்ல புத்தியுடன் வறுமையும் இருந்தபடியால், அச்சகவாசத்தின் தோஷம் அவனைத் தீண்டவில்லை. அன்றி யும், சிந்துபூந்துறையிலும் பட்டணத்திலும் கோபாலனுடன் வாசஞ்செய்தது மிகவும் நன்மையாயிருந்தது: கோபாலனுக் குச் சங்கீதத்துக்கும் சாகர கோஷத்துக்கும் வித்தியாசம் தெரியாததாலும், அதிபாலியத்திலேயே அவன் ரூபவதியான மனைவியைப் பெற்று, அவள் மேல் கரையற்ற காதல் கொண் டிருந்ததாலும்; வேசியர் வீடுகளுக்காவது, அவர்கள் கூடிப் பாடும் இடங்களுக்காவது அவன் நாராயணனுடன் போவது துர்லபம்; அவனறியாமல் நாராயணன் மட்டும் போவதோ அசாத்தியம். சங்கீதத்தின் மூலமாய்த், தன் மகன் விலை மாதர் வலைச்சிக்கிக் கெட்டுவிடலாகாதென்ற கவலை சீதை யம்மாள் மனத்திற் குடிகொண்டிருந்தது; ஆகையால், வெகு சூழ்ச்சியுடன் அவன் போக்கு வரவுகளைக் கவனித்து வந் தாள். இதை நன்குணர்ந்திருந்த நாராயணன், ஏதாவது அருமையான சங்கீதக் 'கச்சேரி' கள் நடக்கும் சமயங்களில், உண்மையைச் சொல்லிக் கெஞ்சி அநுமதி பெற்றும், சில வேளைகளில் ஒரு சிறு பொய்கூடச் சொல்லியும், போய்க் கேட்டுக் களிப்பான். இதனல், கோபாலனுக்கும் அவனுக் கும் சொற்ப மனஸ்தாபங்கள் கூட நேரிடுவதுண்டு. தவிர வும், சங்கீதசாகர இன்பவெள்ளத்தில் ஆழ்ந்து மூழ்கித் தேகபரவசமான சுகத்தை யநுபவிக்கும் காலங்களில், அவ்

வானந்தத்துக்குக் காரணம் ஒரு ரூபவதியான வாலிபப் பரத்தையா யிருந்தால், அடக்கமுடியாத கெட்ட ஆசைக ளெல்லாம் அவன் மனத்தில் உதிக்கும்; இயற்கையாயுள்ள விவகார புத்தியெல்லாம், கருமேகத்தால் மூடப்பட்ட சந்திர காந்தியைப்போல் மறைந்துபோம்; மானமும் பயமும் குன்றி விடும்; தான் தக்க தனவான் வயிற்றில் பிறந்திராததைப் பற்றி மிகவும் மனம் நொந்து கொள்வான். ஒரு நாள் அவன், பவளக்காரத் தெருவில், ஒரு தாசி வீணை வாசித்துப் பாடி யதைக் கேட்டுத் தேகபரவசனாகி, மானம், நற்புத்தி, பயம் முதலிய யாவற்றையும் துறந்து, தன் தர்ம பத்னியாகிய பத்மாவதியைத் தவிர வேறு ஸ்திரீயைத் தொடுவதில்லை யென்று தான் அக்நிசாக்ஷியாகச் செய்த சத்தியத்தையும் மறந்து, அடக்க முடியாத காம விரகத்துக்குட்பட்டு, ஒரு நாள் முழு தும் ஊண் கூடச் செல்லாமல் பித்துண்டவன் போல ஏங்கி யிருந்து, கடைசியாக நெஞ்சு துணிந்து, வேலைக்குத்தக்க போலி நியாயங்களைக் கைக்கொண்டு அப்பரத்தையைப்பற்றி விசாரிக்க, இருபது ரூபாவுக்குக் குறைந்த பணத்துடன் அவள் வீட்டருகே நாட முடியாதென்று அறிந்தான். தன் தரித்திர நிலைமையை நொந்து கொண்ட பின், எவ்விதமா வது கோபாலனிடத்திற் கடன் வாங்கித் தன் ஆசையை நிறை வேற்றிக் கொள்ளத் தீர்மானித்தான். ஐயோ!

"பொருட் பெண்டிர் பொய்மை மயக்கம், இருட்டறையில் ஏதில் பிணந்தழீயற்று,"

என்ற குறளை நன்கு கற்றுக் கல்விச்சாலைத் தமிழ்ச் சங்கத்தில் பிறர் நன்மைக்காக அவன் எடுத்துப் பிரசங் கித்திருந்தும், அஃது இப்பொழுது பயன்படவில்லை. இவ்வெண்ணங்களில் ஆழ்ந்து மனோராச்சியத்தில் அந்தக்

கணிகையுடன் அவன் கூடிச் சல்லாபித்துக் கொண்டிருக்கையில், திடீரென்று வேறோர் எண்ணமெழ, அவன் ஆசையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் கரைந்து போய்விட்டது. அஃதாவது, இச்சங்கதி எப்படியாவது வெளியாகுங் காலத்தில், தன் தாயும், மாமனும், மனைவியும் தன் மேலடையக் கூடும் வெறுப்பையும் சினத்தையும் தான் பொறுத்துக் கொண்டாலும், அது சாவித்திரி காதில் விழுந்துவிட்டால், தனக்கும் கோபாலனுக்குமுள்ள பெரு நட்பையும், சிறுபையனாயிருக்கையிலேயே தெரிந்திருந்ததையும் உத்தேசித்து, உலக வழக்கத்துக்கு விரோதமாகத் தன்னுடன் அவள் சகோதரிபோல் அன்பாயும் ஆதரவாயும் ஒளிவுமறைவின்றிப் பேசிக் குலாவுவதை யெல்லாம் ஒழித்துத், துன்மார்க்கனைகத் தன்னை முற்றிலும் இகழ்ந்து; தன்னைக் கண்டால் சர்ப்பத்தைக் கண்டாற்போல் நடு நடுங்கி விலகுவதைத் தன்னால் ஒரு நிமிஷமும் சகிக்க முடியாதென்று உணர்ந்தான். சாவித்திரியுடன் தினமும் பழகுவதால் தணிந்திருந்த பாலிய விரகத் தீ யானது, அவள் அவமதிப்பும் வெறுப்பும் பிரிவும் நேரிடக் கூடுமென்று நினைத்த மாத்திரத்திலேயே குபீரென்று கிளம்பி, விரல்களை மெதுவாய் நக்குவதில் துளி துளியாய் ஊறும் இரத்தத்தை ருசி பார்த்துக் கொண்டு சாந்தமாய் வாலாட்டி நிற்கும் ஒரு புலிக் குட்டி, திடீரென்று கையை இழுத்துக் கொள்ளவே, தனக்கு இயற்கைக் குணமான மூர்க்கா வேசங் கொண்டு எஜமானனையே அடித்துக் கொன்று தின்னப் பாய்வது போல, தன் சுபாவத்தையும் உக்கிரத்தையும் வெளிப்படுத்தியது. சங்கீத சுகத்திலும் மற்றைச் சுகத்திலும் சாவித்திரியின் மதிப்பும் அன்புமே சிறந்தவைகளாகத் தோன்றின. தன்னைச் சகோதரனைகப் பாவித்து

அன்பு பாராட்டிவரும் அப்பெண் மணியின் மேலுள்ளவாஞ்சையும் மரியாதையும் தன்னைப் பெற்று வளர்த்த நற்றாயிடத்திலேயே உண்டாகாததுபோல, தான் கூடிக்கலந்து பலநாள் பழகிய பின்னும், தன் தர்மபத்நியாகிய பத்மாவதியிடத்திலேனும் உண்டாகுமோ வென்று, சில சமயங்களில் சந்தேகித்தான். மற்றவர் எவ்வாறாயினும், சாவித்திரியே தன்னை நல்வழியில் உய்த்துக் காக்க வந்திருக்கும் குலதெய்வமென்று நினைத்தான். அவள் நாமமும் அவளைப்பற்றிய நினைவும் மஹா மந்திர சக்தியுள்ளன போலிருந்தன. அபாய காலங்களில் தெய்வங்களின் பெயரைச் சொல்லித் தங்கள் மனோபயத்தை மனிதர் தணித்துக் கொள்வதுபோல, நாராயணன், தன் மனத்தில் கெட்ட எண்ணங்கள் எழும் பொழுதெல்லாம், சாவித்திரியின் நாமத்தாலும் நினைவாலும் அவைகளையெல்லாம் ஓட்டினான். சில சில சமயங்களில் அவளைப்பற்றி, அதிகமாய் நினைத்துக்கொண்டிருக்கையில், மெய்மறந்த ஆநந்தத்தோடு, "மாதவமே இவ்வுருவாய் வந்ததுகாண்," என்னும் பாட்டைப் பாடுவான்.

சாவித்திரியோ, தன்னை நாராயணன் குலதெய்வமாகப் பாவித்துக் கொண்டாடுவதையும், தான் அவனுக்கு அளப்பரிய நன்மைக்குக் காரணமாயிருப்பதையும் சிறிதும் உணராதவளாய்க், கோபாலன் குழவி முகம் நோக்கித் தன் துக்கம் ஆறி, கல்யாணியின் சுபாவகுணத்தைத் தன்னாலியன்றமட்டும் நற்போதனைகளாலும் உதாரணத்தாலும் சீர்திருத்தி, அவள் சில சமயங்களில் முரண்டிக் கொடூரமாய் நடப்பதையெல்லாம் சாந்தத்துடன் சகித்துக்கொண்டு, எப்பொழுதும் பிறர் களிக்கும்படி இனிமையான குரலில் உரிமையான வார்த்தைகளையே பேசித், தான் நிகரற்ற துன்பத்தில் ஆழ்ந்

திருப்பினும்', யாவர்க்கும் இன்பப் பெருக்குக்கு ஏதுவாய் வாழ்ந்து வந்தாள்.

இவ்வதிகாரத் தலைப்பில் வரைந்திருக்கும் கடிதம் வந்த நாள் சாயங்காலம், நாராயணனும் கோபாலனும் கடற்கரையில் உட்கார்ந்திருந்தார்கள். நாராயணனுக்கும் கடலுக்கும் சொல்லமுடியாத அந்தரங்க நட்புண்டு. நீண்ட பெரிய அலைகள் பந்திபந்தியாய்ப் புரண்டு வந்து கரையில் மோதும் காட்சியைக் காணுந்தோறும், அவனுக்கு அடக்கமுடியாத ஆநந்தமும் ஆச்சரியமும் உண்டாகும்; அவைகளின் ஓய்வற்ற ஓதை, அவன் காதுக்கு இன்பத்தைக் கொடுக்கும். தங்கள் வெள்ளிச் சிகைகளை விரித்துத் தலை நிமிர்த்தோங்கி ஆரவாரத்துடன் வேகமாய் வரும் அலைகள் கரையை அடைந்தவுடன் பணிந்து தணிந்து போவது அறியாரிடத்தில் ஆர்ப்பாடமாய்ப் பிதற்றும் மூடர்கள், கற்றோரைக்கண்ட மாத்திரத்தில் கர்வம் குன்றித் தலைகுனிந்து ஊமைகளாய் விடுவதுபோலிருக்கிறதென்றும்; ஆர்கலியின் ஓய்வற்ற ஓதையானது, தன்னிடத்துள்ள சராசரங்கள் படும் கஷ்ட நிஷ்டூரங்களைப் பற்றிப் பூமாதேவி ஆண்டவருக்கு அலறித்தெரிவிக்கும் முறைப்பாடு போலிருக்கிறதென்றும், அவன் அடிக்கடி சொல்வதுண்டு. கடற்கரைக்கு வந்தபொழுதெல்லாம், அவன் கொஞ்சநேரமாவது யோசனையில் ஆழ்ந்துவிடுவான். அவ்வாறே அவன் பேசாமல் உள் நோக்கியிருக்கையில்:

கோபாலன்:—"ஏ நாணு! என் ருதுசாந்திக் காலத்தில் கதை பேசினாயே; இப்பொழுது உன் அகமுடையாள் தெருண்டு இரண்டு மாதங்களுக்குள் சாந்தி செய்யப் போகிறாயே: உன் இரண்டு வருஷ விரதம் எல்லாம் எங்கே போச்சு?" என்று கேட்டான்.

நாராயணன், தூக்கத்திலிருந்து விழிப்பவன் போல் திடுக்கிட்டுப், பின்பு கோபாலன் வினவை யறிந்து, பின்வருமாறு பதிற் சொன்னான். "நான் அதைப்பற்றி, யோசியாமலிருக்கவில்லை: கடைசியாக, இப்பொழுது ருது சாந்தி செய்து கொள்வதே சரி யென்று தோன்றுகிறது. முதலில், அம்மா, மாமா, அம்மாமி முதலியவர் இஷ்டத்தை நிறைவேற்றினதாகும்; அன்றியும், பத்மியும் அப்படியே விரும்புவாளென்று நினைக்கிறேன்; நான் இசையாவிட்டால், அவள் என்னைக் காதலில்லாத கள்வனாக நினைத்து மனம் நொந்துகொள்வாள். பெண்களே எப்பொழுதும் அப்படித்தான் விரும்புவார்கள். சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தையைப் பற்றிக் கூறும் பாட்டு ஞாபகமில்லையா?

"முனிவரும் போகபூமிப் போகம் முட்டாது பெற்றும்,
தனியவராகி வாழ்தல் சாதுயர் அதனினில்லை;
கனிபடுகிளவியார், தம்காதலன் கவானில் துஞ்சில்,
பனியிருவிசும்பில் தேவர்பாண்மையிற் றென்றுசொன்னான்."*

"இரண்டாவது, அப்படிச் செய்தால்தான் அவளை என்னுடன் அழைத்து வந்து, இதுவரையும் வீணாய்த் தடைப்பட்டுப்போன கல்வியை விருத்தி செய்யலாம். இதுவே, என்மட்டிலும் போதுமான காரணம். மூன்றாவது, அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லை; எங்கள் இருவருக்கும் சமையல் செய்து போடுவதே சிரமமாயிருக்கிறது; முன்போல வேலை

---

* இதன் பொருள்—இனிய குரலையுடைய ஸ்திரீகள், வெறுத்தலரிய இப்போக பூமிப் போகங்களைக் குறைவின்றிப் பெற்றிருப்பினும், தனித்து வாழ்வதிலும் அவர்களுக்குச் சாதுயர் வேறில்லை; அப்படியின்றி, அவர்கள் தம் கணவன் மடியில் தூங்கப் பெற்றால், அவ்வின்பம் தேவரின்பத்துக்குச் சமானம். (சீவகசிந்தாமணி—காந்தருவதத்தை யாரிலம்பகம் 61-வது செய்யுள்).

செய்ய முடியவில்லை; அவளுக்கு உதவியாயிருக்கும். நான்காவது, உலகம் பொல்லாதது; பலபேர் பலவற்றைச் சொல்லுவார்கள்; இப்படிச் செய்துவிட்டால், ஒருவித வசையுஞ் சொல்ல இடமிராது. இரண்டு வருஷ விரதத்துக்கென்ன? சரீர சுகத்துக்கும் அவயவங்களின் வளர்ச்சி முதிர்ச்சிக்கும் இடையூறின்றி நாமே பார்த்துக் கொள்ளலாமே; கேவலம் காமவிகாரம் பிடித்த வெறுந்தடியன் ஆனல் தான் பயப்பட வேண்டும்.—"

இதற்குள் கோபாலன், "ஐந்தாவது, எனக்கும் வயதாய் விட்டது. ஆறுவது, அவளுக்கும் வயதாகி அவள் பக்குவமாய்விட்டாள். ஏழாவது, இந்தத் தேசம் உஷ்ணபூமி; நம்முடைய புஸ்தகங்களில் டாக்டர்கள் சொல்லும் பிராயங்களெல்லாம் சீதளம் மிகுந்த இங்கிலாந்து தேசத்துக்கே பொருந்தும். எட்டாவது, பாட்டுக் கச்சேரிகளில் தேவடியாள்களைப் பார்க்கும் பொழுதெல்லாம், துஷ்ட மனது வாதிக்கிறது. இல்லையா கதை; அட, போடா! இந்தக் கதையெல்லாம் என்னிடத்தில்தானு? தாய் மாமன் வீட்டிலேயா குலம் கோத்திரம் கேட்கிறது? இதெல்லாம் வீண் பேச்சு. தனக்குத் தன்கென்றால் தாய்ச்சீலை பதக்குக் கொள்ளாதா? எல்லாம் வேளைக்குத் தக்கபடி நியாயங்கள்," என்று பரிகாசம் பண்ணினன்.

பின்பு நாராயணன், "நீ, வரப்போகிருயோ, இல்லையோ? நான் உன் ருதுசாந்திக்கு வந்தேனே; பள்ளிக்கூடம் அடைப்புத் தானே; நானும் இல்லாமல் நீ இங்கே தனியாய் என்ன செய்யப்போகிருய்?" என்ருன்.

கோபாலன்:—"ஆமாம்; நானும் வரலாமென்று தான் உத்தேசித்திருக்கிறேன். உன் ருதுசாந்திக்காக மட்டும்

அல்ல; எப்படியாவது கல்யாணத்தைக் கொஞ்ச நாளைக்காவது அவளூரில் கொண்டு விட்டு விட்டுப், பிரிந்திருக்க விரும்புகிறேன். நாளுக்கு நாள் பொறுக்க முடியவில்லை; எனக்குப் பயித்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. முதலில் அரியூருக்குப் போய் ஒரு வாரம் இருந்து விட்டுப், பின்பு எல்லாருமாக உன் ருதுசாந்திக்கு வந்து விட்டு, அங்கிருந்து ஏதாவது போக்குச் சொல்லிக் கொண்டு, குற்றாலத்துக்குப் போய் விடலாமென்று நினைத்திருக்கிறேன். நீயும் உன் தர்ம பத்தினியும் எங்களுடன் குற்றாலத்துக்கு வரவேண்டும். அது தான் புது மாப்பிள்ளை பெண்களுக்கு ஏற்றவிடம். ரஜா முடிந்தவுடன், கல்யாணத்தை அவள் ஊரில் கொண்டு போய் விட்டு விட்டுச் சாவித்திரி அக்காளை மட்டும் கூட்டிக்கொண்டு, பட்டணத்துக்கு வந்து விடலாமென்று உத்தேசித்திருக்கிறேன்."

நாராயணன்:—"வெகு நன்றாயிருக்கிறது! என் பெண்டாட்டியைக் கூட்டிக் கொண்டு வருவதற்காக நான் இவ்வளவு யோசனைகள் செய்கிறேன்; நீ பிரிவதற்கு அதைவிடப் பெரிய யோசனைகள் செய்கிறாயே! இதென்ன விபரீதம்? என் நினைப்பில், பத்மி என்னுடனிருந்தால், நான், இப்பொழுதிலும் அதிக சிரத்தையுடன் படிப்பேனென்றே எண்ணுகிறேன்."

கோபாலன்:—"ஏன், அப்பா, என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறாய்? உன் கையைப் பார்; ஐந்து விரல்களும் ஒன்றுபோலிருக்கிறதா? கொடுத்து வைத்தது போல் கிடைக்கும். பேச்சை விடு," என்று வெறுப்புடன் சொன்னான்.

ஒன்றும் பேசாமல் வெகு நேரம்வரை இருவரும் யோசனையில் ஆழ்ந்திருந்து, பின்பு, எழுந்து வீட்டுக்குச் சென்றார்கள்.

நான்காவது அதிகாரம்.

சிறு குளம் ஐயாவையரின் சீமந்த புத்திரி பத்மாவதியின் இரண்டாமுறை ருதுஸ்நாநத்தன்று நடந்த ஊர்கோலச் சிறப்பையும், மற்றச் செலவுகளையும், அவர் விரோதிகளும் சிலாகித்தார்கள். அவர் பெண் ஏறிவந்த பூம்பல்லக்கைப் போல், அது வரையும் அவ்வூரில் கண்டதேயில்லை. திருநெல்வேலியிலிருந்து மாலைகள் கட்டி வந்து, இரண்டு நாள் இராப் பகலாகப் பல்லக்குச் சோடித்தார்கள். அக்கம் பக்கம் ஊர்க் கோவில்களில் தேவதார்ச்சனைக்கே புஷ்பம் கிடையாது; திருமாலும், சிவபெருமானும், துளவத்தையும், வில்வத்தையுங் கொண்டு திருப்தியடைய நேரிட்டது. அறுகாத வழிக்கப்பாலுள்ள தென் காசியிலிருந்தும் புஷ்பம் வந்தது. அன்றியும், பெரிய பண்ணை கிருஷ்ணையங்கார் வீட்டுக் கல்யாணத்துக்கே நாகஸ்வரம் வாசிக்கப் பெரிய சுப்பு வரவில்லையே? அப்படியிருக்க, ஐயாவையர், தன் மகள் ஊர்கோலத்துக்கு அந்தவித்வானை வரவழைத்திருந்தார். எல்லார் வீடுகளிலும், பெண்கள் தெருண்டால் அவரவர் சக்திக்குத் தக்கபடி, வீட்டுக்கு வீடு கொஞ்சம் பிட்டுப் போடுவதுண்டு; ஆனால், யார்தான் ஐயாவையரைப்போல் வீட்டுக்கு ஒருபடி "லண்டன் சீனி" வழங்கினார்கள்? ஏதாவது விழுந்த பணத்தைமட்டும் பங்குவைத்துக் கொள்வது வழக்கமானதால், தெருண்ட பெண்ணுடன் 'குடியிருக்க'ஊரிலுள்ள குட்டிகளெல்லாம் வருவது துர்லபம்;ஐயாவையர்வீட்டிலோ, விழுந்தபணம் தவிர, அவர், தம் கையிலிருந்து இருபது ரூபா கொடுப்பதாகச் சொன்னதால், அவர் விரோதிகள் வீட்டுப் பெண்களும், இறங்கல் ஊர்க்குட்டிகளுங்கூட குடியிருக்க வந்து விட்டார்கள். என்ன பாட்டு! என்ன

முழக்கம்! எத்தனை பேர்கள் சாப்பாடு! என்ன தீவர்த்தி, மத்தாப்பு! என்ன பாணவேடிக்கைகள்! அடா! அடா! பெரிய சுப்புதான் பைரவிராகத்தை என்ன ப்ரும்மாநந்தமாய் வாசித்தான்! இன்று நினைத்தாலும் காதில் தேன் பொழிந்தாற் போலிருக்கிறதே! எல்லாமாக ரூபா ஆறுநூறுக்குக் குறைவேயில்லை.

தம்மகள் ருதுவானவுடன் தம் மனைவி பிரசவமாய் விட்டபடியாலும், திடீரென்று செலவுக்குக் கடன் கிடையாததினாலும், ஐயாவையர், விசேஷத்தை இரண்டாவது ஸ்நாநத்துக்குத் தள்ளிவைத்துக்கொண்டார். பல துளி பெரு வெள்ளமாக அவருக்குக் கடன் அதிகரித்திருந்தபோதிலும், ஓரே மகள் என்பதை உத்தேசித்தும்; குடும்ப சம்ரக்ஷணைக்கு இன்றியமையாததாயும், ஹிந்துக்களுக்குள் தொன்று தொட்டு அநுசரிக்கப்பட்டு வருவதாயுமுள்ள, "செலவோடு செலவு கந்தப்பொடி கால் பணம்," என்னும் திவ்ய வாக்கியத்தை இத்தருணத்தில் தம் மனைவி எடுத்துப் பிரசங்கிக்கக் கேட்டு மகிழ்ந்தும், இறங்கல் மரக்கடை முதலாளியாகத் தமக்கு நூதனமாய் ஏற்பட்டிருக்கும் அந்தஸ்தைப் பரிமளிக்கச் செய்ய நினைத்தும், கடன் வாங்கிப் பணத்தை இறைத்தார். ஊரில் எல்லாரும் புகழ்ந்து கொண்டாடினார்கள். எம் கையிலிருந்து ஒரு செப்புக்காசுஞ் செலவின்றி, எம் வீட்டுக்கு இரண்டு மூன்று மாதங்களுக்குப் போதுமான அளவு பட்டணம் படிக்கு ஒருபடி சீனியும், எம் பெண்கள் ஐந்து பேருக்கு இனத்துக்கு இரண்டணாவும், எம்மனையாட்டிக்கு நாலணாவும், அவள் கைக்குழந்தைக்குக் கூட ஓர் அணாவும், எமக்கு ஒருநாளும் எம் பெண்சாதி குழந்தைகளுக்கு நாலு நாளும் சுகபோஜனமும் இனமாகக் கிடைத்ததும் தவிர, திவ்யமாய

சங்கீதமும் ஊர்கோலமும் வாணவேடிக்கைகளும் கண்டு கேட்டு அநுபவிக்கக் கிடைத்தனவென்றால், இவ்வளவுக்கும் காரணமாயிருந்தவரை வாயாரப் புகழ்வதற்கு என்ன தடை? அன்றியும், எமக்கு இலாபத்துடன் அவருக்குக் கடன் விருத்தியடைவதைப்பற்றி யோசித்தால், பச்சாத்தாபம் ஒருபுறம் நிற்க, உள்ளூரக் கொஞ்சம் சந்தோஷமும் சிரிப்பும் உண்டாகத்தான் செய்யும்.

கடன் அதிகரிப்பதை நினைந்து தன் மருமகனுக்கு மகளைக் கொடுத்துக் கலியாணச் செலவைச் சுருக்கிய ஐயாவையருக்கு, இவ்வாறு செலவிடுவதில் கொஞ்சம் மனவருத்தந்தான். ஆனால் அக்காலத்தில், அவர் மனைவி, கரிக்கிட்டு தனக்கு மாப்பிள்ளையாகாமற் போனதைக் குறித்து மனவருத்த முற்றும், சீதையம்மாளுக்கும் தனக்குமுள்ள மனஸ்தாபங்களை நினைந்தும், கலியாண விஷயத்தில் குதூகலமில்லாமல் இருந்தாள்: இப்பொழுதோ, சீதையம்மாள் மேலுள்ள வெறுப்பு காலஞ்சென்று குன்றிவிட்டதுந் தவிர, புத்திரோற்பத்தியினாலும், தன் மாப்பிள்ளை பட்டணத்துக்குப்போய் பி. ஏ. பரீக்ஷைக்கு வாசிப்பதினாலும், அவள் மனம் பூரித்துச் சந்தோஷமுற்றிருந்தது. அன்றியும், கலியாணச் சிறப்பின் கீர்த்தி புருஷரையே சேரும்; ருதுஸ்நாநமோ, அப்படியன்று; முக்கியமாய் வீட்டு யஜமானியின் பராமரிப்புக் குட்பட்டது; வளைகாப்பு, ருது ஸ்நானம், காப்பரிசி, முதலிய விசேஷங்கள் சிறப்பாய் நடந்தால் ஊரிலுள்ள மற்றப் பெண்டுகளுக்குள் பேரும் கீர்த்தியும் சித்தமாய்க் கிடைக்கும்; ஆகவே அவள் தன் புருஷனை இவ்வாறு செலவிடும்படிச் செய்தாள்.

ஒரு காலத்தில் தன் மனைவியை அடித்து அவள் மனத்தின் படி நடவாதிருந்த ஐயாவையர், இப்பொழுது அவள்

சொற்படி நடப்பாரோ வென்று சிலர் ஐயமுறக் கூடும். குடும்ப வர்த்தமானங்களை நன்றாய்க் கவனித்துப் பார்த்தால், இச்சந்தேகம் நீங்கிவிடும். ஓய்வொழிவின்றி இராப்பகல் ஒரே வீட்டில் குடியிருக்க வேண்டிய ஸ்திரீ புருஷர் எத்தனை நாள் ஒற்றுமையின்றி இருக்கக் கூடும்? அந்தரங்க மனவொருப்பாட்டுக்குப் பதிலாக, ஒருவிதப் போலியொற்றுமை சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும். அவர்களிருவரில், மனமுரண்டு குறைந்தவர், நாளடைவில் படிந்துவிடுவது திண்ணம். எப்பொழுதும் சண்டைக்கு ஆயத்தமாயிருக்கும் ஆளை, அவன் அல்லது அவள் குடும்பத்தில் யாவரும் வெகு கண்யத்துடன் நடத்தி வருவார்கள். சோம்பலாளிகள், சண்டை செய்து சிக்கிரம் அலுத்துப்போவார்கள்: பயங்காளிகள், நயந்து பேசி ஸ்தோத்திரம் பண்ணுவார்கள். ஆகவே, அனேகமாய் எல்லாரும் சோம்பலாளிகளாயாவது பயந்தவர்களாயாவது இருத்தலால், ஒரு துர்க்குணன் தன் மனோபீஷ்டங்களை யெல்லாம் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தடையேயில்லை என்று ஒரு வித்துவான் எழுதியிருக்கிறார். அன்றியும், புருஷன் ஸ்திரீ சொற்கிணங்கி நடப்பது இயல்பாயிருக்கிறது. ஸ்திரீகள், தங்களுக்கு இஷ்டமான காரியங்களைத் தாங்களே உதவியின்றி முடித்துக் கொள்ள அசக்தர்களாயிருந்தாலும், புருஷர்களை வசியம் பண்ணித் தம்மிஷ்டப்படி ஒழுகச் செய்வதற்கு வேண்டிய சக்தியும் தந்திரங்களும் அவர்களுக்கு இயல்பாய் அமைந்திருக்கின்றன. மீன் குட்டிக்கு நீந்தப் படிப்பிக்கும்படி நேரிட்டாலும், ஸ்திரீகளுக்குப் புருஷரை வசியம் பண்ணும் வழி காட்டிக் கொடுக்க நேரிடாது. மந்திரங்களிற் சிறந்ததாகக் கூறப்படும் காயத்திரியும் தனக்கு நிகரில்லாத தலையான மந்தி

சக்திக்குட்படாத புருஷர் மிகவுஞ் சிலர். அது பலியாவிட்டாலும், எவராலும் தடுக்க முடியாத நாகபாசத்துக்குச் சமமாக, ஸ்திரீகளிடத்தில் ஸாகஸம் என்றோராயுத மிருக்கிறது. அப்படையை எப்புருஷனாலும் வெல்ல முடியாது. ஒரு காரியத்தைக் கருதி, ஒரு ஸ்திரீ ஸாகஸஞ் செய்ய ஆரம்பித்தால், அதைப் பெற்றாலொழிய விடாள். இவ்விஷயத்தில் ஸ்திரீகளின் விடாமுயற்சி வியக்கத்தக்கது. வெளியிற் சென்று திரிந்து பணந்தேடுவதில் பலவிதத் தொந்தரைகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகும் புருஷன், வீட்டில் வந்திருக்கும் சொற்ப காலத்தையாவது நிர்விசாரமாயும், சமாதானமாயும், சந்தோஷமாயும் கழிக்க விரும்புவதால், அவ்வாறு கழிப்பதற்கு இன்றியமையாத கருவியா யிருக்கும் தன் மனைவியை, எவ்விதமாவது திருப்தி செய்ய முயலுகிறான்; அதைக் கருதிச் செலவிடும் பணத்தை வீணாக நினைக்கிறதில்லை. இக்காரணங்களைத் தவிரத், தான் வெகு வருஷங்களாக ஆவலுடன் விரும்பிக் கொண்டிருந்த பிள்ளைக் குழந்தையை இப்பொழுது அவள் பெற்றிருந்ததால், ஐயாவையருக்குத் தம் மனைவிபேரில் தற்காலத்தில் விசேஷப் பிரீதியுண்டா யிருந்தது. அதனால், அவள் ஆசையைக் கடன் வாங்கியாவது நிறைவேற்றத் துணிந்தார்.

அவ்விசேஷம் முடிந்தவுடன், நாராயணனுடைய பள்ளிக்கூட அடைப்புக் காலத்தில் ருதுசாந்திக்கு ஒரு முகூர்த்தம் தீர்மானித்து, அதற்கு வேண்டிய நகை பாத்திரம் பண்டங்களுக்கு ஏற்பாடு செய்யத் தொடங்கியதும் தவிர, பள்ளிக்கூடம் அடைத்தவுடன் புறப்பட்டு வரும்படி நாராயணனுக்கு முகூர்த்த தினத்தைக் குறிப்பிட்டுக் கடிதமும் எழுதினார்.

ஐந்தாவது அதிகாரம்.

இருபுறமும் ஓங்கி வளர்ந்த மரங்களின் மேற்கிளைகள் ஒன்றோடொன்று பின்னி முறுக்குண்டு, எப்பொழுதும் குளிர்ந்த நிழலைக்கொடுக்கும் இப்பெரும் பாட்டையின் பக்கங்களில், விசாலமான தோட்டங்களும், பாறைகளுக்கும் கிரீடங்கள்போல் விளங்கும் 'பங்களா'க்களும் இருக்கின்றன. ஆநந்த நடராஜ மூர்த்தியைக் கண்ணாரக்கண்டு களித்தவுடன், அப்பரமாநந்த வெள்ளத்தில் ஒரு சிறு துளி தம்முள்ளும் புக, அகமகிழ்ந்து, முகமலர்ந்து, உரைநெகிழ்ந்து தள்ளுண்டு தடுமாறி, அம்மூர்த்தியின் திவ்ய குணங்களைச் செந்தமிழ் மணக்கும் பாக்களால் பாடித் துதித்துக் கொண்டு, சந்நிதியைவிட்டு அரிதில் நீங்கி வெளிவரும் மெய்யடியார்களைப்போல, பூங்காவனங்களின் பரிமளங்களைச் சுமந்து மெதுவாக வரும் மந்தமாருதமானது, சரீரத்தின் களைப்பை நீக்கிப் பலத்தை அளித்து, மனத்துக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கின்றது. பட்டதோ படவில்லையோ என்று சந்தேகிக்கும்படி, காற்று அவ்வளவு மெதுவாக இருந்தும், மரங்களின் கிளைகள் மேலே ஆடியசைந்து சப்திப்பதைக் கேட்டு மேல் நோக்கினால், குரங்குகள் மந்தை மந்தையாய்த் தாவித்தாவி ஓடுவதைக் காண்கிறோம். சூரிய கிரணங்கள் நம்மேற் படாவிட்டாலும், வெயிலைப் பார்க்குங் கால், சமதரிசியான வெய்யவனும், தனக்கு இயல்பான கொடும் வெப்பத்தைக் கட்டி வைத்துவிட்டு, இடத்துக்கேற்றபடி, சாந்தமாய்ப் பிரகாசிப்பதாய்த் தெரியவருகிறது. ஒப்பற்ற போகபூமியாகச் சொல்லப்படும் சுவர்க்கத்தின் காலஸ்திதி, இப்படித் தானிருக்குமோ! பலகோடி வண்டு

கள் ஒருமித்து ரீங்காரம் பண்ணுவதுபோன்ற ஓர் இனிமை யான ஓசை, இடைவிடாது கேட்டுக்கொண்டிருக்கின்றது. இதோ, நம் முன்னிருக்கும் ஆலயத்தில் தான், தமிழ் முனிவன் தொட்டுப் பூசித்த கடவுள், தீராத தலைநோவுடன் வாசம் பண்ணிக்கொண்டிருக்கிறார். நாம் வழி நடந்து அசுத்தமா யிருப்பதால் கோயிலுட் செல்லாமல், தொந்தி வயிற்றோனை மட்டும் தரிசித்து வலங்கொண்டு, மேற்செல்வோம்.

ஆஹா! இதென்ன அற்புதம்! என்ன காட்சி! இது தானோ.

"மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்!"

"போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக்
கூதல் மாரிநுண் துளி தூங்கும் குற்றாலம்,"

இது தானோ? அன்றேல், வழி தப்பிச், சுவர்க்கத்தில் தேவ ஸ்திரீகளும் தேவர்களும் கிரீடித்து விளையாடி நீராடும் ஆகாயகங்கைச் சாரலை அடைந்து விட்டோமோ? கண்ணுக் கெட்டா மலைச்சாரினின்று இழிந்து, அதோ கடன் பட்டார் நெஞ்சம் போலத் தத்தளித்துக் கொண்டிருக்கும் பொங்குமாங் கடல் என்னும் தடாகத்துக்குள் கோவென் றலறி விழுந்து, பின்பு கிளம்பிச், செங்குத்தான இக் குன்றின்மேல் பல கவறுகளாகப் பாய்ந்து, கீழுள்ள தடா கத்தில் விழும் இவ்வருவியைக் கண்டவுடன், தன்னை யறியாத சந்தோஷம் மனத்திற் பொங்குகின்றது. இக்குன் றின் மார்பும் அடிவாரமும் நவரத்நங்களால் இழைக்கப்பட் டிருக்கின்றனவோ, அல்லது வானவிற்கள் தாம் இவ்வாறு பிரகாசிக்கின்றனவோ, தெரியவில்லை. இஃதெல்லாம் வீணே; இவ்வழகிய காட்சி, வார்த்தைகளால் வருணிக்கக் கூடிய

தல்ல. முதல் முதல் இதைப் பார்க்கும் ஒருவன் மனதி லுண்டாகும் உணர்ச்சிகளை யெல்லாம், அவ்வாறு நேரிற் காணுதார்க்கு வார்த்தைகளால் மட்டும் முழுதும் வருணிக்க முடியுமாயின், பால்குடி மாருப் பாலகனுக்குச் சிற்றின்ப சுகத்தையும், கனவிலும் கடவுளைக் கருதாக் கசடனுக்குச் சிவஞான போதத்தையும் தெரிவிக்கலாகும். உள்ள பொருள் களை விவரித்து உவமைப் பொருள்களால் விளக்குவதால் மட்டும் பயனென்ன ?

> "சொல்லொக்கும்; பொருள் ஒவ்வாவால்;
> சொல்லலாம் உவமையுண்டோ?
> நெல்லொக்கும் புல் என்றாலும்,
> நேருரைத்தாக வற்றே."

நண்பரே! ஒரு நிமிஷமாவது பிறவித் துன்பங்களை மறந்து, தேகபரவசமாகி, நிஷ்களங்கமான சந்தோஷத்தை அநுபவிக்க நீர் விரும்பினல், உடனே திருக்குற்றாலஞ் சென்று, அவ்வருவிக்காட்சியைக் கண்படைத்த செல்வமென நோக்கும்; அப்பொழுதும் உம் மனக்கவலை மாருவிடின், பின்பு ஒரே மருந்துதான் இருக்கிறது: அருவிக்குக் கீழ்புற மான படிகள் வழியாய்க் குன்றின்மேலேறிப், பொங்குமாங் கடலினின்றும், அருவியுடன், தலைகீழாகத் துள்ளி விழுந்து உயிரை விடுதலே உத்தமம்; உமக்கு நீந்தத்தெரியாவிட்டால், படியேறும் சிரமம் வேண்டியதில்லை: யாவரும் அருகில் இல் லாத சமயம் பார்த்துத், தடாகத்தில் விழுந்து இறக்கலாம்.

இதோ நம் தோழர்கள் யாவரும் இருக்கிறார்கள்: நாரா யணனும் கோபாலனும் அருவியின்கீழ் உட்கார்ந்துகொண்டு, நீர்த்தாரை உடல் வலிதீரப் புடைக்கத், தூவானத்தால் மூடப்பட்டு நீராடிக்கொண் டிருக்கிறார்கள். நன்றாய் மூச்சு

விடும் பொருட்டு வெளியே தலையை நீட்டும்பொழுதெல்லாம், அவர்கள் ஆவலுடன் உற்றுநோக்கிச் சந்தோஷமடையும் திசையை நாமும் பார்த்தால் கல்யாணியும் பத்மாவதியும் ஒருவர்மேலொருவர் நீரைவாரி யெறிந்து தடாகத்தில் விளையாடிக்கொண் டிருப்பதைக் காண்கிறோம். அதோ பாறையின் மேல், நார்மடி தரித்து, ருத்திராக்ஷமாலைகள் அணிந்து, திருநீறுபூசிக், கிழ்த்திசையை நோக்கிக் கூப்பிய கரங்களுடனும், மெதுவாயசையும் உதடுகளுடனும், பக்தியே உருக்கொண்டு வந்ததுபோல், சீதையம்மாள் நமஸ்கார ஜெபம் செய்து கொண்டிருக்கிருள். நீர்த்தாரைகளும், நீராடும் ஜனங்களும், ஆலய வாத்தியங்களுமாகச் செய்யும் இப்பெரும் கோஷத்தின் நடுவே, தன் முழு மனத்தையும் மெய்யாகவே ஈசன் மேற் செலுத்தி, உலகை மறந்து, தியானிக்கும் அவள் பக்தியன்றோ பக்தி! சாவித்திரியோ, பாரும்: அவளும், அவ்வாரவாரத்தையும் சுற்றுமுள்ள மற்றியாவற்றையும் முழுதும் மறந்து; தன் திவ்விய ரூபத்தையும், வைதவ்விய கோலத்தையும் கண்டு மனம் நொந்து, பரிதாபத்துடன் தன்னையே நோக்கிக் கொண்டிருக்கும் ஆடவர் ஸ்திரீகளுடைய பார்வைகளைச் சற்றும் உணராதவளாய்த் தன் மார்போடணைத்திருக்கும் மருமகன் மேலுள்ள வாஞ்சைக் கடலில் ஆழ்ந்து; குரங்குகள் குட்டிகளை வயிற்றோடு கட்டிக்கொண்டு தாவித் தாவி யோடுவதையும், செங்குத்தான பாறைகளின் மேல் மெது வாய்த் தத்தித் தத்தி யேறி அருவிநீரை யெடுத்து அவைகளுக்கு ஊட்டுவதையும், பழங்களைப் பகிர்ந்து தின்று களிப்பதையும், நீராட வந்த ஜனங்கள் வைத்திருக்கும் தேங்காய் பழங்களை அற்றம் நோக்கித் திருடிக்கொண்டும், தனித்தவரிடம் எதிர்த்துப் பூசலிட்டுப் பறித்துக்கொண்டும் ஓடுவதை

யும், தம்முள் மாறி ஒன்றோடொன்று சண்டை யிடுவதையும் அக்குழவிக்குக் காட்டி, அதற்குண்டாகும் சந்தோஷத்தால் தானும் மெய் மறந்து களித்துக்கொண் டிருக்கிருள். குழந்தைகளைப்போல், நம்மை மெய்மறந்து களிகூரச் செய்யும் பொருள்கள், இவ்வுலகில் வேறுளவோ?

நம் கதாநாயகியாகிய பத்மாவதியை நாம் கடைசியாகப் பார்த்து வெகு நாள்களாய் விட்டன; அவளும் இப்பொழுது பெரியவளா யிருக்கிருள். அவள் முகத்திற் பொலியும் களங்கமற்ற தேஜஸும் சந்தோஷமும் அவளை, இன்னும் சிறு பெண்ணாகவே தோற்றச் செய்கின்றன. ருதுசாந்திக் கலியாணம் முடிந்து இன்னும் இரண்டு வாரங்கள் கூட ஆகாமலிருந்தும், அவள் விசேஷமான ஆபரணங்கள் ஒன்றும் அணிந்து கொள்ளாம லிருத்தல், அருவி நீருக்குப் பயந்தோ, தன் கணவன் மனத்தைத் திருப்தி செய்யும் பொருட்டோ, தெரியவில்லை. ஆனால், அவளைப் பார்ப்பவர் யாரும், அவள் அழகை விருத்தி செய்ய நகைகள் அவசியமென்று சொல்லவே மாட்டார்கள்; லக்ஷரூபா நகைகள் கூட, அவள் முகக்களை கொடுக்கும் மனோரம்மியத்தைக் கொடுக்கமாட்டா. தன் மாமியார் ஜெபம் செய்தாய் விட்டதென்று அறிந்தவுடன், அவள், கரையேறித் தலை துவட்டிக்கொண்டு, தன் வஸ்திரத்தையும் தன் மாமியார் வஸ்திரத்தையும் பிழிந்தெடுத்துக் கொண்டு புறப்பட்டாள். அதைக் கண்டு கல்யாணியும் கரையேறவே, கொஞ்ச நேரத்தில், அவள் கையில் குழந்தையைக் கொடுத்துவிட்டுச் சாவித்திரியும் சீராடியபின் எல்லோருமாகப் புறப்பட்டு குறும்பலா வீசுரரையும் குழல்வாயம்மையையும் தரிசனஞ் செய்துக்கொண்டு, நைவேத்தியஞ் செய்த தேங்காய் பழங்களைக் குரங்குகளுக்கெறிந்து விளை

யாடிக் களித்துக்கொண்டு, தாங்கள் தங்கியிருந்த வாடகை பங்களாவுக்கு வந்து சேர்ந்தார்கள்.

எல்லோரும் ஒரே பங்களாவில், ஒரே குடித்தனமாகத் தான் குடியிருந்தார்கள். செலவுகளெல்லாம், முக்கியமாய்க் கோபாலனே பொறுத்து வந்தான். வீட்டிலுள்ள யாவரும் காலையிலெழுந்தவுடன் அருவிக்குப் போய் வெகுநேரம் வரை விளையாடி ஸ்நானம் செய்வார்கள்; பின்பு ஏதாவது ஆகாரஞ் செய்துவிட்டு, நாராயணனும் கோபாலனும், தினமொரு இடமாக, ஐந்தருவி, செண்பகாடவி, தேனருவி, தெற்கு மலை முதலிய மலைவளக் காட்சிகளையும்;

"காய்மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி, வருக்கை * போழ்ந்து,
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்,";

என்று புகழ்வது ஏமாங்கத நாட்டுக்குமட்டுமேயன்றித் தென் பாண்டி நாட்டுக்கும் பொருந்துமென்று நன்கு விளக்கும் சோலைகள் மலிந்த இலஞ்சி, தென்காசி முதலிய சுற்றுப்பிர தேசங்களையும் கண்டு களிக்குமாறு உலாவித்திரிவார்கள். பகலைப் படிப்பும் விளையாட்டுமாகக் கழித்து, மாலையில் மறு படியுஞ் சுற்றித்திரிந்து, இராப்போஜனமானபின் களைத்துத் தூங்குவார்கள். சீதையம்மாளை எப்பொழுதும் தீர்த்த கட்டத்திலாவது, சிவாலயத்திலாவதுதான் காணலாம். குற்றாலத்துக்கு வந்தவுடன் நாராயணன் சொல்லிக் கொடுக்க,

"காலன் வருமுன்னே, கண்பஞ் சடைமுன்னே,
பாலுண் கடைவாய் படுமுன்னே,—மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு"

---

* பலாவின் கனி.

என்னும் வெண்பாவை, அவள் நா எப்பொழுதும் சொல்லிக் கொண்டிருந்தது. சாவித்திரிக்கோ, வீட்டு வேலை யில்லாதபொழுது, மருமகனுக்கு விளையாட்டுக் காட்டுவதே பெரும்வேலையாய் ஏற்பட்டிருந்தது. அக்குழவியை எப்பொழுதும் அவள் தூக்கிச் சுமப்பதை அடிக்கடி கண்டவர்கள், அவள் இடுப்பில் அக்குழந்தை 'முளைத்திருப்பதாகப்' பேசத் தொடங்கினார்கள். கல்யாணி தன் புருஷனுடன் சல்லாபித்துக் கழியாத காலத்தை யெல்லாம், தூங்குவதிலும், சோகி, பல்லாங்குழி முதலிய விளையாட்டுக்களிலும் செலவழித்தாள். பத்மாவதியோ, வழக்கம்போல், தன்னால் இயன்றமட்டும் பல விதங்களினாலும் தன் புருஷன் மனப்படி ஒழுகி, அவனைச் சந்தோஷிப்பிக்க முயன்றாள். இம்முயற்சிக்கு, இன்றியமையாத பெரிய அநுகூலம் ஒன்று இயல்பாக வாய்த்திருந்தது. அஃதாவது, சீதை யம்மாள், தன் மகன் மருமகள் வழிக்கே வருகிறதில்லை. அவர்கள் என்ன செய்தாலும், எவ்விதமாய்க் கூடிக்குலாவிச் சுகித்தாலும் அவளுக்குச் சம்மதந்தான்; வேறு சிலரைப் (பலரோ?) போல், அவள் 'சக்களத்தி மாமியார்,' இல்லை; புருஷனுடன் பேசுவதற்கு, அவள் இல்லாத சமயம் தேடவேண்டாம்; புருஷன் அழைத்தால், மூன்றுதரம் போல் "சூள்" குறித்துவிட்டு, மறைவாய் நிற்கவேண்டாம்; புருஷனிடத்தில் ஒரு பதார்த்தம் கொடுக்கவேண்டுமானால் தூரவைத்து விட்டு ஓடவேண்டாம்; புருஷனுக்கு வேண்டிய கைங்கரியங்களை, மாமியார் உத்திரவின்றி, அவள் முன்னிலையே செய்யலாம்; புருஷனுக்குப் பிரியமான பண்டங்களை, அவளை எதிர்பாராமல் பகிரங்கமாய் எடுத்துக் கொடுக்கலாம், புருஷனுடைய சயனக்கிரகத்துக்கு அவள் உத்திரவில்லாமல் செல்லலாம். சாப்பிடும்பொழுது, தன் கலத்துக்கு

நெய்கூடத்தானே வார்த்துக்கொள்ளலா மென்றால், மற்றதைச் சொல்வானேன்? ஒரு வண்டியில் புறப்பட்டால், வண்டிக்காரனும் தானும் ஒருமித்து இருந்து கொண்டு, தன் கைப்பிடி நாயகனை எட்டவைத்து, நடுவில் திரைசீலை இடவேண்டியதில்லை. இம்மட்டோ? தனக்கு இஷ்டமாயிருந்தால், பகலிலேயே ஓர் அறையில் தன் புருஷனுடன் தனித்துப் பேசிக்கொண்டிருக்கலாம்; அவனிடம் கல்வி கற்றுக்கொள்ளலாம். சீதையம்மாள் இவைகளையெல்லாம் சிறிதும் கவனிக்கவே மாட்டாள். அவள், 'சுவர்க்கோழி' யல்ல. திறவுகோல் துவார வழியாயும், முக்குமூலைகளில் மறைவாய் நின்று கொண்டும், அவள் உற்றுக் கேட்கமாட்டாள்; தன்மகனும் மருமகளும் தனித்திருக்கும் அறைப்பக்கம் போகவே மாட்டாள்; எதாவது ஒரு காரியம் அவசரமாய் ஆகவேண்டியிருந்தால், தானே செய்வாளே ஒழியத் தன் மகனோடு பேசிக்கொண்டிருக்கும் மருமகளைக் கூப்பிடமாட்டாள். இவைகளையெல்லாம் தீராப்பொறியாக நினைத்துச் சீதையம்மாள் சகித்து வந்தாளென்று எண்ணக் கூடாது: ஆயிரங்காலத்துப் பயிர்களாகிய தன் குழந்தைகளாவது, தன்னைப் போல் துக்கப்படாமல், அவர்கள் இஷ்டப்படி மனமொத்துச் சுகித்து வாழவேண்டுமென்று, தினமும் சுவாமியைப் பரிபூரண மனத்துடன் பிரார்த்தித்து வந்தாள். தன் மருமகளுக்கு மட்டுக்கு மிஞ்சி இளக்காரம் காட்டுவதாக வேறு ஸ்திரீகள் யாராவது தன்னைப் பழித்தால், தன் மருமகள் தான் தன் மகனுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறாள் என்றும்; அக்கினி சாக்ஷியாய் வாழ்க்கைப் பட்டவளுக்குச் சகல சுதந்தரங்களும் உண்டென்றும்; அதற்கு யார் உத்திரவும் வேண்டுவதில்லை யென்றும்; தம்தம் மாமியார்களிடம் தாங்கள் நாட்டுப் பெண்க

ளாக அடைந்த சிறுமைகளையும் பட்ட துன்பங்களையும் ஸ்திரீகள் நன்றாய் நினைத்துப் பார்த்தால், ஒரு ஸ்திரீயாவது, தன் நாட்டுப் பெண்ணைத் துன்புறுத்த மாட்டாளென்றும், அவள் சமாதானம் சொல்லுவாள்; அன்றியும், அநேக புருஷர், வேண்டியபோது இன்பம் கொடுக்கும் வேசியர் வீட்டுக்குப் போவதற்கு, அவர்கள் மனையாட்டிகளுடையவும் தாயார்களுடையவும் புத்தி ஈனமான நிர்ப்பந்தமே முக்கிய காரணம் என்றுஞ் சொல்லுவாள். சீதையம்மாளின் கொள்கைகளும் நடத்தையும் இவ்வாறாகவே, பத்மாவதி, தன் புருஷனுடன் ஆனந்தக் கடலாடிக் கருத்தொக்க ஆதரவும் கரையற்றகாதலும் நாளுக்கு நாள் பெருகி வளரா நிற்கத், தன்னிலும் பாக்கிய சாலியான பெண்கள் உலகில் உளரோவெனச் சந்தேகிக்கும்படிக் காலங் கழித்து வந்தாள்.

ஆறுவது அதிகாரம்.

சரீரத்திற்கும் மனத்துக்கும் சுகிகரமாய்க் குற்றாலத்தில் இவர்கள் விடுநாள்களை இவ்வாறு கழித்துக் கொண்டிருக்கையில், கோபாலனுடைய தகப்பனாராகிய பண்ணை சேஷையர், தம்மகனையும் பார்த்து விட்டுப், புண்ணிய ஸ்நானமும் செய்து விட்டுப் போகலாமென்று, அமாவாசைக்கு முந்திய நாள், குடும்ப சகிதம் வந்து சேர்ந்தார். அவரைக் காணுவதில் யாவர்க்கும் வெகு சந்தோஷமாயிருந்தாலும், ஊருக்கும் நாட்டுக்கும் ஒரு புலிபோலிருந்த அவர், இப்பொழுது, சம்சாரத்தில் தளைப்பட்டு, அடுப்பாங்கரைக் கூனக்கிழவியிலும் தாழ்ந்தவராகி, வலைப்பட்ட மான்போல் விழிப்பதைக் கண்டவர் எல்லோரும், பரிதாபப்பட்டார்கள்;

அதைப் பார்த்துப் பிறர் நகைப்பார்களே என்று, அவர் மக்கள் அளப்பரிய கிலேசத்தை யடைந்தார்கள். அவருடன் பெண்தரகு ஐயாசாமி வாத்தியாரும் வந்தார். அவ்வாத்தியார், இப்பொழுது இரண்டு வருஷங்களாகச், சேஷையர் வீட்டில் தான் வாசம்; அவருக்கும் சேஷையர் மாமியார் 'இங்கிலீஷ் கைம்பெண்டாட்டி' காமாக்ஷி யம்மாளுக்கும், தொன்று தொட்ட பாசம்; அவருக்கும் சேஷையர் மனைவி கமலாம்பாள் அம்மாளுக்கும், அந்தரங்க நேசம்; அவ்விரண்டு அம்மாள்களின் கற்போ மோசம்: ஆகவே, சேஷையரின் இல்வாழ்க்கை யெல்லாம், முற்றிலும் நாசம். அவ்வம்மாள்களை அடுக்களையில் கண்டால், வாத்தியாரை அதன் வாசற்படியிற் காணலாம்; அவர்களை வாய்க்கால் படித்துறையில் கண்டால், அவரை வாய்க்கால் மத்தியிலாவது அடுத்த படித்துறையிலாவது காணலாம்; அவர்களைக் கோவிலில் ஸ்திரீகள் நிற்கும் இடத்தில் கண்டால் அவரைப் புருஷர் நிற்கும் எதிர்வரிசையில் காணலாம்; வேறு பிரவர்த்தியின்றி அவருக்கு எப்பொழுதும் சாவகாசமானதால், அவர் எப்பொழுதும், அவர்களுடன் தான் சகவாசம். சேஷையரோ பசுப்போன்ற பிராமணர்; சூதுவாது, கள்ளம்கபடு யாதொன்றும் அறியார்; வாத்தியார் சங்கதி ஊராருக்கும், நமக்கும் சேஷையர் தவிர மற்றெல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். வாத்தியார் ஒளிவு மறைவு பாராட்டுகிறதில்லை. அவர் தோழர்கள் யாராவது இதைக் குறித்துப் பரிகாசஞ்செய்தால், "அட, போடா! முட்டாள் பயல்களா! அந்தப் பெண்கள் இரண்டு பேரும் ரொம்ப நல்லவர்கள். என் சம்சாரம் தவறிப்போன வருத்தம் எனக்குக் கிஞ்சித்தும் உண்டாகாமல், ஒருத்திக்கு இரண்டு பேராக என்னை ஆதரித்து வருகிறார்கள்.

அவர்களைப்போல் பரோபகாரிகள் உலகத்தில் கிடைக்குமா?" என்று பதில் சொல்லிச் சிரிப்பார். கண்டது கேட்டதினால், சேஷையர் மனத்தில் எப்பொழுதாவது சந்தேகங்கள் உண்டானாலும், ஒப்பிடுங்கால் தாடகையை உத்தம ஸ்திரீயாகச் செய்துவிடும் அற்புத குணங்கள் வாய்த்த தன் மாமியாரிடம் வாய் திறக்க, அவர் ஒருபொழுதும் துணியமாட்டார்; தன் மனையாளிடத்திலோ, அவளையும் வாத்தியாரையும் ஒன்றாக அவர் நேரில் கண்டாலும், அவள் மேல் சிறிதும் சந்தேகம் அவருக்குண்டாகாது; அவளுடைய மயலில் மதியை முற்றிலும் பறிகொடுத்து விட்டார். காரியங்கள் இவ்வாறாகவே, அம்மாள்களும் வாத்தியாரும் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்விஷயங்களைப் பற்றி நாராயணன் மூலமாய்க் கேள்வியுற்றிருந்த சீதையம்மாள், சேஷையர் வருவதாகத் தெரிந்தவுடன், அவர் வீட்டுக் கற்பரசிகளுடன் பழக விருப்பமின்றி, அவர் வருவதற்கு முந்திய நாளே, திருமலைக்குப்போய் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியைத் தரிசிக்க விரும்புவதாகத், தன் மருமகளையும்கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டாள். அவள் பிரயாணத்தைக் கோபாலன் பல காரணங்களைச் சொல்லித் தடுத்தும், அவள் ஒரு நாளுமில்லாத பிடிவாதத்தோடு முரண்டினாள். கடைசியில், சாவித்திரியும் கல்யாணியும் தனியாய் அகப்பட்டுக்கொண்டு விழிப்பார்களென்றும், கூட யாராவது அந்நியரிருந்தால் காமாக்ஷியம்மாள் தொந்திரவு கொஞ்சம் மட்டுப்படுமென்றும் கோபாலன் சொல்லி வேண்டிக்கொண்டதால், பத்மாவதியை நிறுத்திவிட்டுச், சீதையம்மாள் திருமலைக்குப் போய்விட்டாள். அமாவாசை ஸ்நாநத்துக்குக்கூட, அவள் குற்றாலத்துக்கு வரவில்லை.

சேஷையர் வண்டி வந்து சேரும்பொழுது, கோபால னும் நாராயணனும் மேடையில் வாசித்துக் கொண்டிருந்தார் கள்: சாவித்திரியும், பத்மாவதியும், கல்யாணியும், கீழே ராஜாவுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வண்டி மாடு களின் மணிச்சத்தம் வாசலிற் கேட்டவுடன் எல்லாருமாக வாசற்பக்கம் வந்தார்கள். வண்டியை விட்டிறங்கி வீட்டுக் குள் நுழையும்பொழுதே, காமாக்ஷியம்மாள், "அடி, சாவித் திரி! குழந்தை துரை ராஜாவுக்கு நல்ல பசுவின் பாலிருக் காடி?" என்று கம்பீரமாய்க் கேட்டுக்கொண்டு வந்தாள்; (சேஷையர் மனைவியாகிய கமலாம்பாள் வயிற்றிற் பிறந்த இரண்டாவது பிள்ளைக்கு, 'துரை ராஜா' என்று செல்வப் பெயர்) சாவித்திரி சிறிதும் கோபப்படாமல், "ஐயோ! இப் பொழுதுதானே மிஞ்சியிருந்த பாலை, இனிமேல் வைத்திருந் தால் புளித்துப் போய்விடுமென்று, குழந்தைக்குக் கொடுத் தேன்; பாலில்லையே," என்று பதிற் சொன்னாள். அதற்குக் காமாக்ஷியம்மாள், "எல்லாம் இருக்கும், பார். இவனும் சொத்துக்குடையவன், ஆளப் பிறந்தவன் தான். பொய் சொல்லாதே: இந்த ஜந்மம் தான் இப்படியாச்சு. இனிமே லாவது நல்ல ஜந்மம் கிடைக்கவேண்டாமா?" என்று சொன் னாள். இதைக் கேட்டவுடன், கோபாலனுக்கும் நாராயண னுக்கும் அடக்கமுடியாத கடுங்கோபமும் துக்கமும் உண்டா யிற்று; ஆனால், சேஷையர் வாய்திறவாமல் தலையைக் குனிந்து கொண்டு நின்றதால், அவர்கள் ஒன்றும் பேசக்கூடவில்லை. பத்மாவதியும் கல்யாணியும் வெறுப்புற்றுக், கோபாலன் குழந்தையைக் கொண்டு வீட்டுள்போய் விட்டார்கள். சாவித் திரியோ, துக்கத்தையும் சினத்தையும் அடக்கிக்கொண்டு, "ஏன் அம்மா இப்படிச் சொல்லுகிறீர்கள்? நான் பொய்

சொன்னால் நீங்களே அடுக்களையிற் போய்ப் பாருங்கள். துரை ராஜா எங்கள் குழந்தையில்லையா? எங்களுக்கு அருமை யில்லையா? அப்படியே இல்லாவிட்டாலும், குழந்தைக்குப் பால் என்று யார் கேட்டாலும், பாலைவைத்துக்கொண்டு யாராவது இல்லையென்று சொல்லுவார்களா? இதோ, ஒரு நிமிஷத்தில் சூத்திரச்சியைப்போய் வாங்கிக்கொண்டு வரச் சொல்லுகிறேன்." என்று சொல்லிவிட்டு, வீட்டுக்குள் சென்றாள். காமாக்ஷியம்மாளும் அவள் மகளும் வீட்டுள் வந்தவுடன், பத்மாவதி, ஆவலுடன் கமலாம்பாள் ஒக்கலையில் இருந்த குழந்தையை வாங்கும்படிக் கைகளை நீட்ட, கமலாம்பாள், "அவன் உங்களிடத்தி லெல்லாம் வர மாட்டான்; நீங்கள் உங்கள் குழந்தையோடு கொஞ்சினாற் போதும்," என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சொல்லி விட்டுக், குழந்தையை வாத்தியாரிடத்தில் கொண்டு போய் விட்டு விட்டாள். வந்த மறுநாள், வழிப்பிரயாணத்தாலும், குளிர்ந்த காற்றினாலும், குழந்தை துரைராஜனுக்குக் கொஞ்சம் இருமவே, அவன் தாயும் பாட்டியாரும், "எந்தப் பாவிகளோ கண்பட்டு விட்டார்கள்; அவர்கள் கண் அவிந்து போகவேணும்; எந்தச் சண்டாளிகளோ கண் பட்டுவிட்டார்கள்; அவர்கள் குடிநாசமாய் நத்தப் பாழாய்ப் போகவேணும்; அவர்கள் ஏழேழு ஜந்மத்துக்கும் கொள்ளி முடிந்து போகவேணும்: அவர்கள் தங்கள் குழந்தையைத் தின்னவேணும்," என்று பலவிதமாய்க் கோரமாய் வைதுவிட்டு, ஒரு கூடை மிளகாய்ப் பழத்தையும் உப்பையும் எடுத்துக், குழந்தைக்குத் திருஷ்டி பரிகாரமாக மூன்று தரம் சுற்றி எரிகிற அடுப்புக்குள் எறிந்து, நெருப்பையும் அணைத்து, வீட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் ஓய்வற்ற கமறலையும் இருமலையும் உண்டு பண்ணி விட்டார்கள்.

நாராயணனுடைய ருதுசாந்திக்குப் போகுமுன் அரியூரில் ஒரு வாரம் இருந்தபொழுது, கோபாலன் தன் தகப்பனருடன் அதிகமாகப் பேசும் சமயம் வாய்க்கவில்லை. வீட்டில் நடக்கும் சங்கதிகளைக் கண்டு மனம் நொந்து விசனமாயிருந்து விட்டான். சேஷையர் அவனுடன் பேச விரும்பவுமில்லை; அவனுடன் தனிமையா யிருந்து பேச நேரிடும் சமயங்கள் வாயாமற் காத்துக் கொண்டார். இப்பொழுது, கோபாலன், சில சங்கதிகளைப் பற்றி அவருடன் தனிமையாய்ப் பேச விரும்பினான். இவ்வெண்ணத்துடன், ஓரறையில் அவர் தனித்திருக்கும் சமயம் பார்த்துக் கோபாலனும் உள்ளே சென்று, பின்வருமாறு பேசத் தொடங்கினான்.

கோபாலன்:—அப்பா! சங்குவைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லையே; இன்னும் விசாரிக்க வேண்டாமா?

சேஷையர்:—நீதான் விசாரியேன்; என்னாலான மட்டும் நான் பார்த்தாய் விட்டது. கழுதை செத்துப் போச்சோ என்னவோ.

கோபாலன்:—(கொஞ்ச நேரம் மௌனமாயிருந்து விட்டு) எங்களுக்கு இன்னும் ரஜா கொஞ்ச நாள்தான் இருக்கிறது. இந்தத் தடவை, அவளை அவளூரில் கொண்டு விட்டு விட்டுச், சாவித்திரி யக்காளை மட்டும் பட்டணத்துக்குக் கூட்டிக்கொண்டு போகலாமென்று நினைக்கிறேன். படிப்புக்கு அசௌகரியமா யிருக்கிறது.

சேஷையர்:—அப்படியே செய். ஆனால் உன் ஆம்படையாளை அவள் ஊரில் கொண்டுபோய் விடுவானேன்? நம்மூரிலேயே இருக்கட்டும். அவள் ஆத்துக்கு வந்த நாள் முதல், ஒரு மாதமாவது ஊரில் இருந்ததே இல்லை. குழந்தையும் அவளும் ஆத்திலேயே இருக்கட்டுமே.

அவர் பதிற்பேசி முடியுமுன், வெளியே சுவரோரமாய் நின்று உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த காமாக்ஷியம்மாள், "எல்லாம் அவாள் அவாள் ஊரில் தானே அவாள் அவாள் இருக்கட்டும். ஒருத்தரும் அரியூரில் வந்திருக்க வேண்டாம்" என்று கட்டளை யிட்டுக்கொண்டு உள்ளே வந்தாள்.

சேஷையர், அவளைக் கண்டவுடன், கருடனைக் கண்ட பாம்புபோல் நடுங்கித் தலைகுனிந்து, "ஆனால் உன் இஷ்டப் படியே செய்," என்று கோபாலனைப் பார்த்து மெதுவாய்ச் சொன்னார். அவன் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசமுடியாமல், காமாக்ஷியம்மாளை, அவள் செய்த உத்திரவுக்காகத் தன் மனத்தில் வாழ்த்திக் கொண்டு, வெளியே வந்துவிட்டான்.

அன்று மாலையில் தனிமையாய்ச் சாவித்திரியுடன் அவன் பேசிக்கொண்டிருக்கையில், "மருத்தீடு" என்று சொல்லுவதெல்லாம் வீண் பேச்சு, கட்டுக் கதை, என்று இதுவரையும் நான் நினைத்திருந்தேன். இப்பொழுது அது மெய்யென்றே எண்ணவேண்டியதாயிருக்கிறது. அப்பாவுக்கு இன்னும் சொற்ப நாள்களில் பயித்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது!" என்று பெருமூச் செறிந்து சொன்னான். அதற்கு அம்மாதரசி, "அம்பி! எல்லாம் விதிவசந்தான். யாரை நோவதிலும் பயனில்லை; இராமாயணத்திலிருந்து நாணு அடிக்கடி சொல்லும் பாட்டை நினைந்து கொள்; ஸ்ரீராமபிரானுக்கே அவ்விதமானால், நாமெல்லாம் எவ்வளவு?

*"நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை; அற்றே:
பதியின் பிழையன்று; பயந்து நமைப் பயந்தாள்

* இதன் பொருள்:—'ஏ, லக்ஷ்மணா! நல்ல நீர்வாரா போதல் நதியின் பிழையாகாது; அதுபோலவே, நமக்கு இப்பொ

மதியின் பிழையன்று; மகன் பிழை யன்று, மைந்த!
விதியின் பிழை; நீ இதற்கென்னை வெகுண்ட தென்றான்."

ஏழாவது அதிகாரம்.

விடுமுறை கழிந்து நமது நண்பர்கள் பட்டணத்துக்குத் திரும்பி வந்த பொழுது கல்யாணி வரவில்லை. கோபாலன், அவள் மனத்தைப் பலவிதமாய்த் தேற்றிச் சமாதானப் படுத்தி, அவளுக்குச் சிறிதும் இடங்கொடாமல் ஒரே பிடிவாதமாக முரண்டி, அவளையும் குழந்தையையும் அவள் பிறந்த வீட்டிற் கொண்டுபோய் விட்டு விட்டான். சாவித்திரி மட்டும் அவனுக்குச் சமையல் செய்துபோட வந்திருந்தாள். நாராயணனுடன் அவன் தாயாரும் மனைவியும் வந்திருந்தார்கள். அவர்கள் முன்போலவே முன் வீட்டிலேயே குடியிருந்தார்கள்.

பத்மாவதி, தன் நாயகனை விட்டுப் பிரிந்திருந்த காலத்தில், அதுவரையும் தான் கற்றிருந்ததை மறந்து விடவில்லை. தானாகக் கற்றுவிருத்தியடையாவிட்டாலும், கற்றவற்றையெல்லாம் ஐயம்திரிபற மனப்பாடமாய்த் தெரிந்துகொண்டாள். அன்றியும், நாராயணன், தன் புஸ்தகங்களில் குறித்துக் கொடுத்துவிட்டுப்போன நல்ல செய்யுள்கள் பலவற்றையும், மனப்

ழுது நேர்ந்திருக்கும் துன்பத்தின் காரணம், இராஜன் குற்றமில்லை; கைகேசியின் புத்திஹீனமில்லை, பரதன் தவறில்லை, நம்முடைய விதிப்பிழகே ஒழிய வேறொன்றுமில்லை; அப்படியிருக்க, நீ இதற்குக் கோபங் கொள்வதேன்!' என்று இராமர் சொன்னார்.

பாடமாய்ப படித்திருந்தாள். அவன், இப்பொழுது, அவ ளுக்கு இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொடுக்கத் தொடங்கினுன். தமிழ் நன்ருய்க் கற்றிருந்ததால், இங்கிலீஷ் படிப்பது அவ ளுக்கு எளிதாயிருந்தது. சுகத்தையும், துக்கத்தையும் தன் மணவாளனோடு பகிர்ந்து அநுபவிக்கும் சக்தியில்லாத ஸ்தி ரீக்கு, 'வாழ்க்கைத்துணை' என்னும் பெயர் பொருந்தா தாத லால், தான் தேகபரவசமாக, ஷேக்ஸ்பியர், டெனிசன் முத லிய கவிகளின் நாடகங்களையும் காவியங்களையும் படித்துக் களிக்கும் பொழுது, தன் இன்னுயிர்க்காதலியும் தன்னுடன் சேர்ந்து அவ்விரசங்களை அருந்தும்படியான பயிற்சியை அவ ளுக்கு உண்டுபண்ண வேண்டுமென்பதே, நாராயணனுடைய பேராசை. அவள் சாஸ்திரங்களில் தேறவேண்டுமென்று அவன் சிறிதும் விரும்பவில்லை. கிரக சம்ரக்ஷணைக்கும், தன்னுடைய சரீர சௌக்கியத்துக்கும் பாலபோஷணைக்கும் வேண்டிய அளவு, கொஞ்சம் கணக்கும், கிரக தர்ம சாஸ்திர மும், சுகாதார முறையும் தெரிந்து கொள்வதுடன், புத்தி விருத்தியின் பொருட்டு நல்ல காவியங்களையும், நாடகங்களை யும், சரித்திரங்களையும், கதைகளையும் கற்றுணரவல்ல சக்தி யும் ஏற்பட்டாற் போதுமென்பது, அவன் எண்ணம். ஊக் கமும், விடாமுயற்சியு மிருந்தால் இவ்வளவும் சாதாரணமாக எப்பெண்ணுக்கும் சாத்தியம் என்றும், இதற்குமேல் அதிக மாக சாமானியர் ஆசைப்படுவது முடவன் கொம்புத் தேனு க்கு ஆசைப்படுவதற்குச் சமமென்றும், அவன் சொல்லு வான். பத்மாவதியோ நூதன பாஷை ஒன்றைக் கற்பதில் இயல்பாகவே உள்ள ஆவலுடன், தன் கணவன் மன விருப் பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பேரவாக் கொண்டிருந் தாள். கைக்கு வேலையில்லாத பொழுதெல்லாம், புஸ்தகப்

தை எடுக்கத் தலைப்பட்டாள். தான் அறிந்த தமிழ்ப்பாஷை யைக் கொஞ்சம் மனத்துள் இகழ்ந்து இங்கிலீஷ் பாஷை மேல் அளப்பரிய மோகங்கொண்டாள். தான் இங்கிலீஷ் கற்று விட்டபின், கோபம் வந்தால் அவன் தன்னைத் தனக் குத் தெரியாத பாஷையில் திட்டமுடியாதென்றும், கோபால னுடன் தன்னைப்பற்றி இங்கிலீஷில் வம்பளக்க முடியாதென் றும், சிநேகிதர்களிடமிருந்து ஏதாவது இங்கிலீஷ் கடிதங்கள் வந்தால், "உனக்கென்ன தெரியும், போ," என்று சொல்லி, மறைக்கவாவது, அசட்டை செய்யவாவது முடியாதென் றும், தன் கணவனிடத்தில் வேடிக்கையாய்ப் பேசினாள். இதையெல்லாம் கேட்டு, அவளுக்குக் கல்வி கற்பிப்பதில் நாராயணனுக்குண்டான அகமகிழ்ச்சிக்கு அளவு சங்கை யில்லை; அன்றியும், கோபாலனுக்காகத் தான் எவ்வளவு மனவருத்த முற்றபோதிலும், ஏறுமாறான மனைவியை அடைந்து அவன் வாழும் வாழ்க்கையையும், படும் கஷ்டங் களையும்; இப்பொழுது, இல்லறத்திலும் துறவறமே சிறந்த தென்று காட்டுவான் போல், அவன் மனைவியினின்றும் பிரிந் திருத்தலையும் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம், அவன் தனக்கு வாய்த்த பெரும் பாக்கியத்தை மிகவும் மெச்சிக் கொண்டான்.

பத்மாவதி பட்டணத்துக்கு வந்ததால், நாராயணன் படிப்புக்கு ஒரு விதமான தடையும் ஏற்படவில்லை; சௌகரி யந்தான் கொஞ்சம் அதிகரித்தது. காலையில் எழுந்தவுடன், வீட்டையும் பாத்திரங்களையும் சுத்தி செய்து விட்டுத், தன் மாமியார் ஆசாரத்துக் கேற்கத் தான் ஸ்நானம் செய்து, பின்பு, தன் கணவன் பள்ளிக்கூடத்துக்குப் போகுமுன் சமையல் செய்து முடிப்பாள். அந்நேரமெல்லாம், நாராயண

னும் கோபாலனும் ஒன்ருய் வாசித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பள்ளிக்கூடத்தில் கழிக்கும் பகற் பொழுதைச், சாவித்திரியும் பத்மாவதியும் சேர்ந்து சீதையம்மாளுக்கு ஏதாவது தமிழ்ப் புஸ்தகங்களை வாசிப்பதிலும்; அல்லது சாவித்திரி மட்டும் அவ்வாறு வாசிக்கப் பத்மாவதி தனியாய் இங்கிலீஷ் கற்பதிலும்; அல்லது சீதையம்மாள் கொஞ்சம் நித்திரை செய்ய, மற்ற இருவரும் ஏதாவது விளையாடுவதிலும் போக்குவார்கள். நாராயணன் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன், தன் மனைவிக்கு அரைமணி நேரம் பாடம் சொல்லிக் கொடுப்பான். பின்பு அவனும் கோபாலனும் விளையாடவாவது கடற் கரைக்காவது போவார்கள்; அல்லது சில நாள்களில் பிற்பகலிலேயே இராச் சமையலைமுடித்து வைத்துவிட்டு, வீட்டிலுள்ள எல்லாருமாகக் கடற்கரைக்குப் போவார்கள். சீக்கிரமாக இராப்போஜனம் முடிந்தவுடன், பொதுவாய் ஏழரை அல்லது எட்டுமணி முதல் ஒன்பது அல்லது ஒன்பதரை மணி மட்டும், நாராயணன் தன் மனைவியுடன் பிரியமாயிருப்பதிலும் அவளுக்குப் பாடமாவது பாட்டாவது சொல்லிக் கொடுப்பதிலும் கழிப்பான். பின்பு அவள் தூங்கிவிடுவாள்; அவன் வேண்டிய மட்டும் வாசித்துக்கொண்டிருப்பான். வழக்கம் போல் விடியற்காலமும் எழுந்து வாசிப்பான்; சில சமயங்களில், பத்மாவதியும் விடியற்காலத்தில் எழுந்து, அவனுடன் தன் பாடங்களை வாசிப்பாள். அன்றியும், வீட்டுச்செலவு கணக்கு எழுதுதல்; புஸ்தகங்கள் தூசியடையாமல் அடிக்கடி பார்த்துத் துடைத்துவைத்தல், சாமான்கள் கண்ட கண்ட இடங்களில் கிடவாமல் அததற்கு ஏற்பட்ட விடத்தில் வைத்து, வீட்டைச் சுத்தமாயும் அலங்காரமாயும் வைத்துக்கொள்ளல்; தன் கணவன் வஸ்திரங்களை

நன்றாய்த் துவைத்துச் சுத்திசெய்து உலர்த்திக்கொடுத்தல்; அவனுக்கு வேண்டியபொழுது வேண்டிய உடைகளை எடுத் தளித்தல், அவன் வெளியிலிருந்து வந்து உடைமாற்றும் பொழுது உதவிசெய்தல்; வண்ணானுக்கு அழுக்கு வஸ்திரங் களைப்போட்டு வெளுத்த வஸ்திரங்களை வாங்கிவைத்துக், கணக்கு எழுதல்; தன் தலைவனுக்குத் தலைவாரிப் பொட்டிட்டு அவன் எப்பொழுதும் சுத்த வஸ்திரங்களைத் தரித்துத் தேக மும் மனமும் சுசிகரமாயிருக்கும்படி செய்தல்; வீட்டிலுள்ள விளக்குக்களையும், 'லாந்தர்களையும், தினமும் சுத்தஞ்செய்து, எண்ணெய் திரியிட்டுத் தக்ககாலத்தில் ஏற்றிவைத்தல்; படு க்கை சாமான்களை வெயிலிற் காயவைத்துச் சுத்திப்படுத்தி வேண்டியபொழுது உறைகள் மாற்றித், தன் மாமியாருக்கும் கணவனுக்கும் படுக்கை விரித்தல்; தன் மாமியாரும் கண வனும் அழைத்தவுடன் சென்று, ஏவிய வேலையைத் தாமத மின்றிச் செய்தல்; தன் கணவன் ஏதாவது புஸ்தகங்கள் உள்ளறையிலிருந்து எடுத்து வரச் சொன்னால், இங்கிலீஷ் எழுத்துக்களைக் கூட்டிக் கூட்டிப் பெயரைக் கண்டு பிடித் துப், புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு கொடுத்தல் ; வீட்டில் யார் வஸ்திரமாவது கிழிந்துபோனால், உடனே அதை நன் றாய்த் தைத்துக் காப்பாற்றல் ; எண்ணெக் குளியன்று, கணவ னுக்கு எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வித்தல்; முதலிய சிற்றாள், வேலைகள் பலவற்றையும், பத்மாவதி மனமுவந்து சந்தோஷத்தோடு அவ்வவ்வமயங்களில் செவ்வையாய்ச் செய்து வந்ததால், நாராயணன், 'சில்லரைத்' தொந்தரைகள் சிறிதுமின்றி, முன்னினும் அதிக சௌகரியத்துடன் படித்து வந்தான். ஆனால், அவன் ஆசைகளில் ஒன்றைமட்டும் நிறை வேற்ற முடியவில்லை. பத்மாவதிக்கு, நன்றாய் வாய்ப்பாட்டும்

ஏதாவது ஒரு வாத்தியமும், கற்பிக்கவேண்டுமென்று, அவன் வெகு நாள்களாய் விரும்பி யிருந்தான். அதுமட்டும் கை கூடவில்லை; சங்கீதந் தெரிந்த ஒரு புருஷன் வந்து சொல்லிக் கொடுப்பதோ, அசாத்தியம்; ஸ்திரீகளுக்குள் வேசியர்களுக் குத்தான் சொல்லிக் கொடுக்கக் கூடிய சக்தியுண்டு; அவர்க ளில் ஒருத்தி மூலமாய்க் கற்பித்தல், நூதனமாயும், வழக்க விரோதமாயும், மத்திய உபாயமாயும் இருத்தலுந் தவிர, அதற்கு வேண்டிய திரவியமும் இப்பொழுது அவனிடத்தி லில்லை; ஆகையால், அவ்வாசையை மட்டும், தான் பணஞ் சம்பாதிக்கும்பொழுது நிறைவேற்றிக் கொள்ளலாமென்று, மனத்தைச் சமாதானஞ் செய்துகொண்டான். அவனும் அவன் மனைவியும், கரையற்ற காதலோடும், கருத்திசைந்த ஆதரவோடும், உடலிரண்டும் உயிரொன்றுமாக, இன்பக்கட லில் ஆழ்ந்து, வாழ்ந்து வந்தார்கள்.

கோபாலனது குழந்தையை விட்டுப் பிரிந்தது முதல், சாவித்திரி அடைந்த துக்கத்துக்கு அளவில்லை; தவறின மாங் கல்யம் பெற்று மறுபடியும் இழந்தவள் போல் வருத்தமுற் றாள். ஆனால், சீதையம்மாளுடன் தினமும் பழகுவதால் நாளுக்குநாள் அவளுக்கு உலகப் பற்றுக் குறைந்து, தெய்வ பக்தி மிகுந்து, மோக்ஷ சாம்பிராச்சியத்தின் மேல் ஆசை வளர்ந்து வந்தது. இயல்பாயுள்ள ஜீவகாருண்யத்துடன், புண்ணியத்தை மறுமை வழித் துணையாகச் சேகரிக்க வேண்டு மென்ற அவாவும் உண்டாக, அவள் கர்மங்களெல்லாம் தர் மத்தையே கருதின. இவ்விதமாகத் தன் மனத் துயரைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி வந்தாள்.

எட்டாவது அதிகாரம்.

இவ்வாறு நமது நண்பர்கள் கவலையற்றுக் கல்விகற்று வருங்காலத்தில், பட்டணம் செங்காங்கடை யருகே சில நாடகக்காரர் வெகு நேர்த்தியான நாடகங்கள் ஆடுவதாகக் கேள்வி யுற்றார்கள். சுடுபால் குடித்த பூனையைப்போல் என்றும் மறக்கொணாத அநுபவமுள்ளவர்களாதலால், முதலில் அதை அவ்வளவு கவனிக்கவில்லை; ஆனால், வகுப்பிலுள்ள சில மாணாக்கர்கள், நாடகத்தைப் பார்த்துவிட்டு வந்து புகழ்வதையும், மகிழ்வதையும் கேட்கக் கேட்க, இவர்களுக்கும் ஆசை யுண்டாயிற்று. நாடகக் கொட்டகையைப் போய்ப் பார்த்தவுடன், அது, அக்நிபாதைக்குட்படத் தகாததாயும், நன்றாய்க் காக்கப்பட்டதாயும், ஆயிரக் கணக்கான ஜனங்கள் நாடக தினந்தோறும் வரப்பெற்றதாயும் இருக்கக் கண்டு, முன்போன்ற அபாயத்துக்கு இடமில்லையென்று அறிந்தார்கள். அந்நாடகக் காரரில், ஏழு வயதுள்ள ஒரு சிறு பையன், லயம் ஸ்வரம் அணுவும் பிசகாமல் ப்ருமானந்தமாய்ப் பாடுகிறானென்று கேட்டவுடன், எவ்விதமாவது போய்க் கேட்க வேண்டுமென்ற அவா, நாராயணன் மனத்திற் குடிகொண்டது; மற்றொருவன், ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை முதலிய தேவ ஸ்திரீகள் கூட நிகரின்றி, ஸ்திரீ வேஷம் போட்டுத் துக்ககரமான கட்டங்களில் தான் நடிக்கும் சோகரஸத்தால் மண்ணையுங் கல்லையுங் கூட உருகச் செய்கிறான் என்று கேட்டவுடன், எப்படியாவது சென்று பார்க்கவேண்டுமென்ற விருப்பம், கோபாலன் மனத்தில் வேரூன்றியது. இருவருக்கும் தங்கள் வீட்டு ஸ்திரீகளையும் அழைத்துப் போகவேண்டுமென்ற ஆசை நிரம்பவும் இருந்

தாலும், அது முழுதும் அசாத்தியமென்று தோன்றிற்று. புருஷன் ஸ்திரீவேஷம் போடுவதைக் கண்ணுற் கண்டாலும் மகா பாவமென்று நினைக்கும் சீதையம்மாளும், தன்னுதனை நாடகத்திக்கு இரையாகக் கொடுத்த சாவித்திரியும், எவ்வாறு நாடகம் பார்க்க வருவார்கள்? பத்மாவதியை மட்டும் கூட்டிக் கொண்டுபோவது பலவிதத்திலும் அசௌகரியமா யிருந்ததுமன்றிச், சீதையம்மாள் அதற்குச் சம்மதிக்கமாட்டாள். தாங்கள் போவதற்கே, ஒருவரும் விடை கொடுக்க மாட்டார்களென்பது நிச்சயம்; ஒருவேளை சீதையம்மாளும் பத்மாவதியும் சம்மதித்தாலும், சாவித்திரி ஒரு நிமிஷமும் சம்மதிக்கமாட்டாளென்பது திண்ணம். அவள் வார்த்தையைத் தட்டிவிட்டுப் போக, இருவருள் ஒருவனாலும் முடியாது. இந்த விஷயங்களை உட்கொண்டு இருவருமாகத் தெருத்திண்ணையில் ஒன்றாய்ப் படுத்திருந்து, வீட்டில் யாவரும் தூங்கிய பின், ஒருவரும் அறியாமற்போய்ப் பார்த்துவிட்டுவரத் தீர்மானித்தார்கள்.

தன் உள்ளன்பு மிகுதியால், நாராயணன் இச்சங்கதியை முன்னதாகவே பத்மாவதியிடஞ் சொன்னான். அவள் சிறிதும் எதிர் பாராவண்ணம் அவள் அடக்கமுடியாத விசனத்தை யடைந்து தன்னாலியன்ற மட்டும், கெஞ்சிக் கொஞ்சிப் பலவிதமாய் அவன் போவதைத் தடுக்கத் தொடங்கினாள். அவள் பயங்களுக்கெல்லாம், அவன் பலவாறு சமாதானங்கள் சொல்லியும், அவள், கடைசியில், "நீ தீயினால் வெந்து போய்விடுவாயென்றாவது நாடகக் கிறுக்கினால் படிப்பை விட்டு விடுவாயென்றாவது நான் பயப்படவில்லை. ஆனால் அகாரணமாய் என் மனதில் ஒருவித பயம் உண்டாகிறது: இதனால் ஒரு பெரிய ஆபத்து, அல்லது தீங்கு விளை

யுமென்று தோன்றுகிறது. காரணம், நான் என்ன சொல்லுவேன்? மாமனுர் செத்துப்போன தினத்தில், அம்மாவுக்கும், உனக்கும், சிந்து பூந்துறையில் ஒருவித நடுக்கம் உண்டாச்சுதென்று சொன்னுயே, அதற்கென்ன காரணம்? இந்த ஆசை நல்லதுக்கு வந்ததாக எனக்குத் தோன்றவில்லை." என்று சொன்னுள்.

அதற்கு, நாராயணன், அவளை இறுகத் தழுவி முத்தமிட்டுக் கொண்டு, "அடி குட்டி பத்மி! நீ ஒன்றும் பயப்படாதே. அங்கே யாராவது ஸ்திரீகள் வேஷம் போட்டாடினுலும், ஒரு வேளை அவர்கள் மேல் மோகங் கொள்வேனே என்று நீ பயப்படலாம்; நாடகக்காரர்களெல்லாம் புருஷர்கள் தானே. ரம்பையே வந்தாலும், நான் என் ஆசை அம்மங்காரை விட்டு விட்டு, முகமெடுத்துப் பார்ப்பேனே? நீ வீணுக்குப் பயப்படாதே. நான் திரும்பி வந்தவுடன் அடையாளமாக, வாசற் கதவில் மெதுவாய் மூன்று தரம் தட்டுகிறேன். உன் அத்தான் க்ஷேமமாய்த் திரும்பி வந்து விட்டானென்று நீ அதனுல் அறிந்து கொள்" என்ருன். பத்மாவதி மறுபடியும், "வேருென்றும் இல்லா விட்டாலும், இப்பொழுது நீங்கள் இருவரும், அம்மாவும் சாவித்திரியக்காளும் அறியாமல் நாடகத்துக்குப் போவது, கள்ளத்தனம் தானே? கள்ளத்தன மெல்லாம் ஒருவிதப் பொய்தானே? எவ்வளவு பொய்யே யானுலும், அதற்கேற்ற அளவாவது தீங்கை விளைக்காமல் போமோ? 'ஒதெல்லொ' நாடகக் கதையில் தலை நோவில்லாமல் மன நோவால் வருந்தும் பொழுது, தன் மனைவியிடத்தில், தன் முகம் வாடி யிருத்தற்குக் காரணம் தலை நோவென்று ஒதெல்லோ ஒரு சிறு பொய் சொன்னதால், நோவையாற்றும் பொருட்டு அவன் தலையைக்

கட்ட அவள் தன் கைக்குட்டையை யெடுக்க, அது, வாய்ப் பேச்சில் அவள் அறியாமல் கீழே விழுந்து, எமிலியா மூல மாய் இயாகோ கையில் அகப்பட்டு, அபாண்டமாய் அவள் பேரில் அப்பாதகன் சொன்ன கொடும்பழியை அவள் புரு ஷன் நம்புவதற்கு அக் கைக்குட்டையே முக்கிய சாக்ஷியமாக ஏற்பட்டு, அச்சிறு பொய் பெரு நாசத்திற்கு ஏதுவாயிற் றென்று நீயே சொல்லி யிருக்கிறாயே: அப்படி யிருக்க, நீங் கள் இருவரும், அந்த நீதியை ஏட்டுச் சுரைக்காய் ஆக்கி, இப்படி நடக்கலாமா?" என்று கேட்டாள்.

நாராயணன் பதில் சொல்ல வழியின்றி, "இதனால் தான் நம்முடைய பெரியவர்கள் ஸ்திரீகளுக்கு கல்வி ஆகாதென்று சொல்லுகிறார்கள்," என்று சொல்லி, உள மகிழ்ந்து அவளை முத்தமிட்டு, "ஒன்றும் வராது; நீ அப்படி ஒன்றும் பயப் படாதே," என்று சொல்லிப் போய் விட்டான். கொழு நனையன்றி வேறு தெய்வத்தைப் பாராட்டாத அப்பெண் மணி, அதற்குப் பின் ஒன்றுஞ் சொல்லித் தடுக்கத் துணியா மல், எல்லாம் சுபமாய் முடியுமாறு குலதெய்வத்தைப் பிரார்த் தித்துக் கொண்டாள்.

அன்று நடு நிசியில் வீட்டிலுள்ளார் தூங்கியபின், வீட் டுக்குள் அதிகமாக வேர்க்கிறதென்று வாசற் றிண்ணையில் படுத்திருந்த நாராயணனும் கோபாலனும், தலையணைகளைப் படுக்கைமேல் ஆள் படுத்தாற்போல் கிடத்திப் போர்வையால் மூடிவிட்டு, மெதுவாய் எழுந்து நாடகசாலையை நோக்கி விரைவாய் நடந்தார்கள். அன்று, கீசக வதம். இவர்கள் பிரவேசச்சீட்டு வாங்கி, உள்ளே நுழையும்பொழுது, திரை மறைவிலிருந்து ஒரு பையன், கந்தர்வனைப்போல், பின்வரும் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான்.

இராகம்: அபூர்வம். தாளம்: ஆதி

பல்லவி.

என்னுடன் வாது செய்வது நியாயமோ
இத்தனை மோகமும் எற்குமோடா பாவி—என்னுடன்.

சரணங்கள்.

தனியாய் வந்தெனைச் சார்வதும் தர்மமோ
தௌஷ்டிகம் விட்டு நீ தள்ளிநில்லடா பாவி—என்னுடன்.

(2)

இந்திரன், அவன்மகன், இராவண ராக்ஷஸன்
சந்திரன் முதலியோர் கதி அறியாயோபாவி—என்னுடன்.

(3)

அன்னியன் பாரியை அன்னையென் றெண்ணியே
மன்னவர் காத்திடல் மநுமுறை யடாபாவி—என்னுடன்.

இப்பாட்டின் ரசம் நாராயணன் உள்ளெல்லாம் புகுந்து பரவி, என்னையும் இளகச்செய்யா நிற்க, அவனும் கோபாலனும் ஒழிந்த இடம் பார்த்து உட்கார்ந்துகொண்டு, நாடகக் களத்தை நோக்கினார்கள். அங்கே சிங்காரமான ஒரு பூங்காவனம் எழுதப்பட்ட திரை முன்பாகக், கோடி சூரியப் பிரகாசம் போல் தன்மேனியும் அழகும் சொலிக்கத், திரோபதி, புலிவாய்ப்பட்ட மான்போல் மறுகித், தத்தளித்துச் சோர்ந்து நின்று கொண்டிருந்தாள். அவளருகே, காமாவேசங் கொண்ட ஒரு குள்ளக் கீசகன், வெறிகொண்ட புலிபோல் நின்றுகொண்டிருந்தான். பாட்டு முடிந்தவுடன், திரோபதி கீசகனைப் பார்த்து, "ஏ பாவி! சண்டாளா! பஞ்சமாபாதகா! உன் தலை வெடித்துப் போகாதோ? இவ்வளவு துணிவு உனக்கு எங்கிருந்து வந்ததடா நீசா? கொற்றவன் மகனை

யிருந்தும் நீ சற்றேனும் சாஸ்திரநீதி கற்றிலையோ? ஏ கர்ம சண்டாளா!

* "நாரங்கொண்டார் நாடு கவர்ந்தார்! நடையில்லா
வாரங்கொண்டார், மற்றொருவர்க்காய் மனைவாழும்
தாரங்கொண்டார், என்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங்கண்டாய்: கண்டகர் உய்ந்தார் எவர்"

என்று சொன்னாள்.

அதுகேட்ட கீசகன், "ஸாபாஷ்! ஏ மங்கையர்க்கரசே! கொவ்வைக்கனி போன்ற உன் உதடுகள் துடிக்க, நீ என்னை வைதாற் போதுமோ? மிருதுவான உன் திவ்ய கரங்களால், என்னையடித்தாலன்றோ நான் ஜந்மஸாபல்யத்தை அடைந்த வனுவேன். இந்தக் கட்டையும் பிறவிப்பயனைப் பெற்றதா கும்—" கீசகன் பதிற் பேசி முடியுமுன், நம்முடைய நண்பர் கள், நாடகசாலையைவிட்டு வெளியே வந்துவிட்டார்கள். அவன் வாயைத்திறந்து பேசத்தொடங்கி, அவன் குரல் கேட்ட வுடனே, நாராயணனும் கோபாலனும் திகைத்துத் திடுக் கிட்டு ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கினார்கள். கொஞ்சம் உற்றுக் கேட்டபின், நாராயணன், மெதுவாய்ச், "சங்குவின் குரல்போலிருக்கிறதே," என்று சொன்னான். "உடன் பிறப் பென்னும் பாசத்தால் பிணிப்புண்ட" கோபாலன், கண்ணீர் ததும்பியதைத் துடைத்துக்கொண்டு, ஒன்றும் பேசாமல், எழுந்து புறப்பட, இருவரும் வெளியே வந்து விட்டார்கள்.

---

* இதன் பொருள்:—மித்திரர் நாட்டைக் கவர்ந்தாரையும், வழக்கமில்லாத வரி வாங்கினாரையும், பிறர் மனைவியாரைக்கொண் டாரையும், தருமம் வேரோடு அரிந்துவிடும்; துஷ்டர்களில் யார் தான் பிழைத்து வாழ்ந்தார்கள்? (கம்பராமாயணம்; ஆரணியகாண் டம்-மாரீசன் வதைப்படலம் 180-வது செய்யுள்.)

கோபாலனை ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு, நாராயணன், 'டிக்கட்டு' விற்பவனிடத்திற் சென்று, கீசக வேஷம் யார் போட்டிருக்கிறார்களென்று விசாரித்தான். அவன், "இன்று கீசக வேஷம், 'அவுட்டுப்புலி டால்ஜோடி ஸாபாஷ் சங்கரையர்,'' என்று பதில் சொன்னான். விபரமாய்க் கேட்டதின் பேரில், சீட்டு விளையாட்டில், 'அவுட்டு' ஆடும் திறமையினாலும், வண்டி லாந்தர் போன்ற வெள்ளைக் கடுக்கன்களினாலும், 'ஸபாஷ்' என்ற வார்த்தையைத் தன் சம்பாஷணையில் அடிக்கடி பிரயோகிப்பதாலும், சங்கரையர் என்ற ஒருவருக்கு இவ்வளவு பட்டங்களும் வந்ததாக வெளியாயிற்று. வெளியிலிருந்து பலவிதமாய் யோசித்துக் கொண்டிருந்து, நாடகம் முடிந்து கூட்டம் கலைந்தவுடன், சங்குவைப்பற்றிநாடகக்காரரிடம் விசாரித்ததில், வீமசேனனோடு செய்த யுத்தத்தில், இடது கணைக்கால் முழி பெயர்ந்து சுளுக்குண்டு எழுந்திருக்க முடியாமல், அவன் படுத்திருப்பதாகத் தெரிய வந்தது. நாடகசாலைக்குட் சென்று, அவனைக் கண்டு, அவனிருக்கும் அலங்கோல வேஷத்தைப் பார்த்துத் துக்கித்துப், பின்பு, அவனை ஒரு வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

ஒன்பதாவது அதிகாரம்

தீக்காயங்களால் அங்கமெல்லாம் அலங்கோலப் பட்டிருந்த கோபாலனைக் கண்டவுடன், சங்குவுக்கு அடையாளம் தெரியவில்லை. காரணத்தை யறிந்தபின் அவன் அதிகமாய் விசனமடைந்ததாகச் சொல்ல முடியாது. ஆனால், சாவித்திரிக்கு நேரிட்ட பெருந் துன்பத்தைக் கேட்ட மாத்திரத்தில்,

அவனுக்குங் கூடக் கண்ணீர் பெருகிவிட்டது. வீட்டுக்கு வந்து அவள் அவகோலத்தைப் பார்த்தபொழுது, அடக்க முடியாத துக்கத்தால், அவளைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். கபடு நிறைந்த அவன் கல் மனமுங் கூட, அந்த நிமிஷத்தில் இளகிவிட்டது. ஆனால் அவன் துக்கமெல்லாம் அவ்வேளை மட்டுந்தான்: சொற்பநேரத்துக் குள், அவனுடைய யதார்த்த குணம் மேலிட்டுத், தன் ஆதிக் கத்தை அடைந்தது.

மறுநாட் காலையில், எல்லாருமாக அவனைச் சூழ்ந் துகொண்டு, அவன் ஓடிப்போன விருத்தாந்தத்தைக் கேட்க, அவன் சிறிதும் பயம், வெட்கம், வணக்கம் முதலிய ஒன்றுமின்றிப், பின் வருமாறு சொன்னான்: "என் கலியாணத்தைப்பற்றிச் சிறிதும் கவலையில்லாமல், தமக்குமட்டும் முடியுமானால் மூன்றாவது தாமும் கலியாணம் செய்து கொள்ளும் பொருட்டு, ஐயாசாமி வாத்தியாரையுங் கூட்டிக்கொண்டு, அப்பா வடக்கே போனவுடன், எனக்கு அடக்கமுடியாத கோபமும் துக்கமும் உண்டாயிற்று. முத லில் எப்படியாவது தற்கொலை செய்துகொள்ளலாமென்று யோசித்தேன்; அல்லது மறுபடியும் கிறிஸ்து வேதத்தில் சேர்ந்துவிடலாமென்று எண்ணினேன். இப்படி நான் யோ சித்துக்கொண்டிருக்கையில், நம்மூரில் அப்பாவுக்கு முக்கிய விரோதியான இராமையங்கார் என்னை மெதுவாய் அழை த்து, எனக்காக மிக்க பரிதாபத்தைக் காட்டிச், சொத்தைப் பாகஞ்செய்ய வியாச்சியஞ் செய்தால், எல்லாம் எனக்கு அநு கூலமாய் விடுமென்றும்; என் பங்குக்குக் குறைந்தது முப் பதினாயிர ரூபா பெறும் சொத்துக் கிடைக்குமாதலால், என் னிஷ்டப்படி ஷோக்கா யிருக்கலாமென்றும் போதித்தார்.

அப்பொழுதுதான், தற்கொலை, கிறிஸ்து வேதமெல்லாம் வீண் என்றும், என் குறை நிவர்த்தி என் கையிலேயே இருக்கிறதென்றும் நான் அறிந்தேன். ஆனால் ஐயங்கார் யுக்தியை மட்டும் ஒப்புக்கொண்டேனே ஒழிய, அவன் போதித்தபடி, அவன் உதவியைக் கொண்டு வழக்காடி, அவனுக்குப் பிடி கொடுப்பதில் எனக்கு இஷ்டமில்லை. நானாகவே ஒரு வக்கீலைத் தேடி வேண்டிய ஏற்பாடு செய்ய நினைத்து, என் மேலிருந்த நகைகளையும் அக்காள் பெட்டியிலிருந்த கொலுசையும் ரூபாவையும் செலவுக்கெடுத்துக்கொண்டு, யாரும் அறியாமல் ஸ்ரீவைகுண்டத்துக்குப் போய்விட்டேன். அங்கே ஒரு வக்கீலுக்கு இருபது ரூபா அபிப்பிராயப் பீசு கொடுத்து, ஊர்பேர் மட்டும் வெளியிடாமல், என் வழக்கைப்பற்றிக் கேட்டதில், அவர் அநேக புஸ்தகங்களைத் திருப்பிப் பார்த்து விட்டு, நான் மைனராயிருந்தபடியால், என் வழக்கு கடினமானதென்றும், ஆனால் தன் சாமர்த்தியத்துக்கு மேற்பட்டதல்லவென்றும், அதே மாதிரியான வழக்கொன்று முந்திய வருஷத்தில் தான் ஜெயித்திருப்பதாயும், தனக்கு இரண்டாயிர ரூபா பீசு கொடுத்தால், ஹைகோர்ட்டு அப்பீல் வரையும் தானே மன்றாடிச், சொத்தை என் கைவசப் படுத்தித் தருவதாகவும் சொன்னார். என்னிடத்தில் அவ்வளவு ரூபா இல்லை என்று சொன்னதற்கு, அவர், அது பாதகமல்லவென்றும், நான் மேஜரான பின்பு எழுதிக் கொடுத்ததாகக் காணும்படிக்குப் பிந்திய தேதி போட்டு மூவாயிர ரூபாவுக்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தால், இரண்டாயிர ரூபா ரொக்கம் பெற்றுக்கொண்டதற்குச் சமமாகத்தான் ஒப்புக்கொள்வதாகவும், சொன்னார். அன்று அவர் வீட்டில் எனக்கு விருந்துச் சாப்பாடும் போட்

டார். நான் தனிமையாயும், இரகசியமாயும் போனபடி யால், என் வேஷ்டிகளொன்றும் எடுத்துக் கொள்ளாமல், உடுத்த உடையோடு மட்டும் போயிருந்தேன்; ஆகையால், மாலையில் கடைக்குச் சென்று நல்ல சரிகை வேஷ்டிகளும், பட்டுக்கரை வேஷ்டிகளும், உடுப்புக்குத் துணி பட்டுக்களும் வாங்க விரும்பி, ரொக்கப் பணம் போதாமல், ஒரு நகையை விற்கும் பொருட்டு, மெதுவாய் ஒரு தட்டான் வீட்டை விசாரித்துக் கொண்டு போய், மற்ற நகைகளை யெல்லாம் யாரும் அறியாமல் மடியில் ஒளித்து வைத்துக் கொண்டு, அக் காள் கொலுசைமட்டும் அவனிடம் காட்டினேன். அவன் அதைத் தூக்கிப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே என்னைப்பற்றி விசாரித்தான். நான் ஒன்றும் பிடிகொடா மல் பதிற் சொல்லிக்கொண்டு வந்தேன். பிற்பாடு, அவன் உரைகல் எடுத்துவருவதாகக், கூடத்திலிருந்து வீட்டுக்குப் போனான். திரும்பி வந்தவுடன், பவுன் விலை விசாரித்து வரும்படி என் காது கேட்க உரத்துச் சொல்லி, மற்றொரு வனை வெளியே அனுப்பினான். அவன் திரும்பி வரும்பொ ழுது, அவனுடன் இரண்டு போலீஸ்காரர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்டவுடன், எனக்குச் சந்தேகமும் பயமும் உண்டாயிற்று. அவர்கள் வந்து, வாசற்கதவைத் தாளிட்டு விட்டு, என்னைப் பிடித்து என் தேகமெல்லாம் பரிசோதித்து, எல்லா நகைகளையும் எடுத்துக்கொண்டு, அவையெல்லாம் ஸ்ரீ வில்லிபுத்தூரில் நடந்த ஒரு களவைச் சேர்ந்த திருட்டுச் சொத்துக்களென்றும், என்னை ஏழுவருஷம் ஜாயிலுக்கு அனுப்புவதாகவும் பயமுறுத்தி, நான் சொன்னதை யொன் றும் கேளாமல், என்னை அடிக்கத் தொடங்கினதும் தவிரக், கூக்குரலிட்டால் குத்திவிடுவதாக ஒருவன் ஒரு கத்தியை என்

கழுத்துக்கு நேராகக் காட்டினன். கடைசியில் அவர்கள் சொன்னபடி செய்வதாக ஒப்புக் கொண்டேன். இதற்குள், தட்டான் வீட்டுப் பின் வாசல் வழியாய், ஹெட்கான்ஸ் டேபிளும் வந்து சேர்ந்தான். எல்லாருமாக, அவர்கள் என்னைத் தண்டியாமல், அல்லது கொலை செய்யாமல் விட வேண்டுமானால், என் கையிலுள்ள நகைகளையெல்லாம் கொடுத்துவிட வேண்டுமென்றும், கையிலிருந்த ரொக்க ரூபாவை மட்டும் செலவுக்கு வைத்துக்கொண்டு, அன்றிரவே பிரயாணப்பட்டுத், திருவநந்த புரத்துக்கு ஓடிப்போய்விட வேண்டுமென்றும், நான் வெளியிற் சொல்லாமல் பத்திரமாய்ப் போவதைப் பார்க்கும் பொருட்டு, என்னுடன் அவர்கள் மநுஷன் ஒருவன் திருவநந்தபுரம் வரையும் கூட வரவேண்டுமென்றும், தீர்மானித்தார்கள். வேறு வழியின்றித், "தலைபிழைத்தது தம்பிரான் பாக்கியம்" என்று நினைத்துக்கொண்டு, நான் அப்படியே சம்மதித்தேன். அன்றிரவே நானும் யமகிங்கரன்போன்ற ஒரு மறவனுமாய்த் திருவநந்தபுரத்துக்குப் புறப்பட்டு விட்டோம். அந்த மறவன், அரை வேஷ்டிக்குள் அறுகுழல் திருகு துப்பாக்கியொன்றும் கட்டாரியொன்றும் ஒளித்து வைத்திருந்தான். தனக்கு அணுவளவேனும் என் பேரில் சந்தேகம் தோன்றிய நிமிஷத்தில் என்னைச் சுட்டுப் பதராக்கி விடுவதாகப் பயமுறுத்தினன். அவன் ஒரு க்ஷணமும் என்னை விட்டுப் பிரிகிறதில்லை; அவன் வாங்கிக்கொடுத்த அவல், கடலை, பழம், தேங்காய், பால்தயிர் முதலியவற்றைத் தவிர,வேறுசாப்பாடுகூடக்கிடையாது. திருவநந்தபுரம் போய்ச் சேர்ந்தவுடன், தான் ஒளித்திருந்து என் நடவடிக்கைகளைக் கவனித்து, ஏதாவது சந்தேகத்துக்கு இடமிருந்தால் என்னை அந்த நிமிஷமே கொன்று விடுவதாக எச்சரித்துவிட்டு, மறவன்

போய்விட்டான். நானும், போன மறுநாளே ஒரு நல்ல ஸாபாஷ் அச்சாவான அச்சிக்குட்டியைப் பார்த்து, அவளுக்கு முண்டுகொடுத்து, ஊட்டுப் புரையிற் சாப்பிட்டுக் கொண்டு, அவளுடன் குசாலாயிருந்தேன். வக்கீல் சொன்னதையும், பின் நடந்த விஷயங்களையும், மலையாளதேச சௌகரியங்களையும் உத்தேசித்து, மெஜாரிட்டி வரும் வரை, மூன்று நாலு வருஷங்களுக்கு, ஜோராய்க் காலத்தைக் கழித்துவிட்டுப், பின்பு சொத்துக்கு வழக்கிடத் தீர்மானித்தேன். என்னை யாராவது அடையாளம் கண்டுபிடித்து விடாதபடிக்கு, எப்பொழுதுமே மறைவாய் நான் நடந்துகொண்டதுந் தவிர, தலை மயிரையும் வெட்டிவிட்டுச், சந்தனப் பொட்டுக்குப் பதிலாய்ப், பெரிய கோபியும் போட்டுக்கொண்டு, பெயரையும் பத்மநாபனென்று மாற்றி வைத்துக்கொண்டேன். மிஞ்சிய பத்து ரூபாவை மட்டும் தங்க நாணயமாக மாற்றி, அவசரச் செலவுகளினுக்காகப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். இப்படிச் சுகமாய் நான் குஞ்சு பகவதியோடு சுகித்துக் கொண்டிருக்கும்பொழுது, ஒரு நாள் அடுத்த அச்சி வீட்டில் அத்தம்பியார் குரல்போல ஒரு குரல் கேட்டது. ஒளித்திருந்து பார்க்கும்பொழுது, அத்தம்பியாரே என்று அறிந்தேன். அன்றிரவே திருவநந்தபுரத்தை விட்டு ஓடிப்போகத் தீர்மானித்துக் கொண்டு, என் இஷ்டப்படி பம்பாய் முதலிய ஊர்களுக்குப் போகப் பத்து ரூபா போதாததால், குஞ்சு பகவதிக்கு நான் சும்மா கொடுத்த சுகத்துக்குக் கைம்மாறாக, அவள் மாமன் பெட்டியிலிருந்து எண்பத்தேழு ரூபாயை யாரும் அறியாமல் எடுத்துக்கொண்டு, இரவே ஓடிப்போய் விட்டேன்."

இதுவரையும் பொறுத்துக்கொண்டு விசனத்தில் ஆழ்ந்

திருந்த கோபாலன், இதன்மேல் பொறுக்க முடியாமல், "போதும்; போதும்; உன் வீரப்பிரதாபங்களை யெல்லாம் விஸ்தரிக்கவேண்டாம். யாராவது போலீஸ்காரன் வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்தால் ஆபத்து வந்துவிடும். கதையைச் சுருக்கு," என்று வெறுப்பாய்ச் சொன்னான்.

அதற்குச் சங்கு, "ஏது, அண்ணா! உனக்குப் பசியாயிருக்கும் போலிருக்கு. ஆனால் இனிமேல் விரித்துச் சொல்வதிலும் பிரயோஜனமில்லை; பம்பாய், கோவா, பூனா, ஹைதராபாட், கல்கத்தா முதலிய நகரங்களையும், அங்குள்ள அதிசயங்களையும், நாடகங்களையும், அவ்விடத்து ஸ்திரீகளையும், முக்கியமாய் கோவாவிலுள்ள தேவ கந்நிகைகளைப் போன்ற போகஸ்திரீகளையும் பற்றிச் சொன்னால், உங்களுக்கு என்ன தெரியும்? செவிடன் காதில் சங்கூதினாற் போலிருக்குமேயன்றி, வேறு பலனில்லை. அங்கெல்லாம் குசாலாய் உலாவித் திரிந்துவிட்டு, மூன்று மாதத்திற்கு முன்புதான் சென்னைப் பட்டணத்துக்கு வந்தேன். நான் திருவநந்தபுரத்தி லிருக்கும் பொழுது பழக்கமான சில நாடகக்காரரை இங்கே கண்டு, அவர்கள் கம்பெனியில் சேர்ந்து, இங்கும், இத்தனை நாள்களாய்ப் பாட்டும், கூத்தும், நாடகமும், சீட்டு விளையாட்டும், தேவடியாளுமாக உல்லாசமாய்க் காலங்கழித்துக் கொண்டுவந்தேன். மெஜாரிட்டி வருவதற்கு இன்னும் நாலைந்து மாதங்கள்தான் கழியவேணும். அதானவுடன் ஊருக்கு வந்து ஒரு கைபார்த்து, என்பேர், "அவுட்டுப் புலி டால்ஜோடி ஸாபாஷ் சங்கரையர்" ஆனால், என் பாகச் சொத்தைப் பிரித்து வாங்கிக், குசாலாய், இஷ்டப்படி, என் சொந்தத்திலேயே ஒரு நாடகக் கம்பெனி ஏற்படுத்திக் கொண்டு, பம்பாய் இந்திர சபாவைவிட ஜோராய் நடத்திப்,

பெயரும் கீர்த்தியும் பெறலாமென்று உத்தேசித்திருந்தேன். அதற்குள் தெய்வச் செயலாய் உங்களைக் கண்டேன். முன் போல் கலியாணப் பயித்தியம் எனக்கு இப்பொழுது கிடையாது. ஊரெல்லாம் பெண்டாட்டியாய் வைத்துக் கொள்வதை விட்டு விட்டு, ஒருத்தியைக் கட்டிக் கொண்டு, "தாலி கட்டையிலே தொட்டு நடுக்கட்டையிலே கிடத்துமட்டும் கவலைதானே," என்றபடி, குழந்தைகளுங் குட்டிகளும், காச்சுப்பீச்சென்று கத்த, எந்த முட்டாள் கஷ்டப்படுவான்? சொத்து வந்து விட்டால், சுகமாயிருக்கிற வழி எனக்குத் தெரியாதா. என்ன? "பத்துக்கு மிஞ்சின பதிவிரதை ஏது?" என்று சொல்லி முடித்தாள்.

இதைக் கேட்ட நமது நண்பர்கள் மிகுந்த கிலேசத்தையும், மனவெறுப்பையும், துக்கத்தையும் அடைந்தார்கள். பத்மாவதிக்கோ, எல்லா உணர்ச்சியிலும் பயமே அதிகமாக உண்டாயிற்று. மறைவாய் நின்று சங்குவைப் பார்க்கையில், கொலைகள் செய்து பகற்கொள்ளை போடுவோனைக் கண்டாற் போல் நடுங்கினாள். சீதையம்மாள், "சிவ சிவ," என்று காதுகளைப் பொத்திக்கொண்டு எழுந்து போய் விட்டாள். கோபாலனுக்கும், நாராயணனுக்கும், எல்லாவற்றிலும் கோபமும் மனவெறுப்புமே அதிகமாயிருந்தன. சாவித்திரியோ, கண்ணீர் ஆறாகப் பெருகக், குனிந்த தலை நிமிராமல், கன்னமும் கையுமாகப் பெருமூச்செறிந்து கொண்டு, துக்கத்திலும் பரிதாபத்திலும் ஆழ்ந்திருந்தாள். தான் பேசி முடிந்தவுடன், யாவரும் மௌனமாயிருக்கக் கண்டு, சங்கு, வேடிக்கையாய், இடுப்பிலிருந்த வெள்ளி டப்பியிலிருந்து மூக்குப் பொடியெடுத்துப் போட்டுக்கொண்டு,

(இராகம் சங்கராபரணம். தாளம் ரூபகம்.)

பல்லவி

தனமே! உனக்கு வந்தனமே—கோடி கோடித் தரமுன்னைக்
கும்பிட்டேன், கும்பிட்டேன்—தனமே.

அநுபல்லவி

உனைமேவினர் அனுதினமே பழிசெய்தும்
மனமே களித்திடக் கனமே அளித்திடும்—தனமே.

என்று பாடத் தொடங்கினன்.

கொஞ்ச நேரத்துக்குப் பின், கலியாணஞ்செய்து கொள்ளும்படிக்கும், துன்மார்க்கங்களை யெல்லாம் விட்டு விடும்படிக்கும், தகப்பனோடு சொத்துக்கு வழக்காடவேண்டு மென்ற எண்ணத்தை விட்டு விடும்படிக்கும், ஒவ்வொருவரும், அவரவர்களுக்குத் தோன்றியபடி நயந்தும், கெஞ்சியும், புகழ்ந்தும், இகழ்ந்தும், புத்தி சொன்னார்கள். ஆனால், அவன் அவர்களைப் பரிகாசம் பண்ணினனே யொழிய, சிறிதும் அவர்கள் வார்த்தைகளை மதிக்கவில்லை. பிற்பாடு கோபாலன், அவன் மனவுறுதியைக் கண்டு பேசுவதெல்லாம் வீணென்று அறிந்து, ஊரில் தன் தகப்பனிருக்கும் நிலைமையையும் வீடிருக்கும் அலங்கோலத்தையும் நினைத்துக்கொண்டு, சங்குவுக்குச் சொத்தைப் பாகம் செய்யவேண்டுமானால், அவமானத்துக்கிடமாக கோர்ட்டில் பகிங்கரமாய் வழக்கிட்டு வக்கில்களுக்கு வீணய்க் காசைக் கொடுக்க வேண்டியதில்லை யென்றும், தானே தன் தகப்பனுருக்கெழுதி வழக்கின்றிச் சமாதானமாய்ப் பாகஞ் செய்யும்படி செய்து விடுவதாகவும் சொல்ல, சங்குவும் அதற்கிசைந்தான். அப்படியே, அன்றைக்கே, தன் தகப்பனுருக்கு விபரமாய்க் கோபாலன் கடிதம் எழுதினன்.

பத்தாவது அதிகாரம்.

சங்குவின் நடவடிக்கைகளிலும் பேச்சிலும் ஒருவித மதமதப்பும், சிஷ்டாசார விரோதமும், காமதுரமான கருத்துக்களும் மேலளாவித் தொனித்தன. அவனுக்கு இயற்கையாய் வாய்த்திருந்த துன்மார்க்க குணத்தை, நாடகக்காரர், சூதாடிகள், பாடகர்கள் முதலிய விட புருஷரோடும், பொதுப் பெண்டிரோடும், அடக்கமின்றிக் கூடிக் குலாவி அவன் செய்த சகவாசம், பலப்படுத்தி அதிகரித்திருந்தது. யாரையும், எவ் விஷயத்தையும் பற்றி, அற்பமாயும் அவதூறாயும் பேசுவதும்; எந்த ஸ்திரீயையும் முகமெடுத்து வெட்கமின்றி வெறித்துப் பார்ப்பதும்; துன்மார்க்கமாய்ப் பேசுவதும், அவனுக்கு வழக்கமாய் விட்டன. "பத்துக்கு மிஞ்சின பதிவிரதை இல்லை" என்ற போலிமொழியை அடிக்கடி கூறுவது மன்றிப், பெண்கள் கற்பெல்லாம் பத்து வயதாகுமட்டும் தானென்றும், பத்து ரூபாவுக்குத் தங்கள் கற்பை விற்க இசையாத பெண்கள் கிடையாரென்றும் அதற்கு அவன் வியாக்கியானம் செய்வதும் உண்டு. தன் தமயன் தமக்கை சீதையம்மாள் முதலிய மூத்தோர் முன்னிலையிலுங் கூட, இவ்வாறு அக்கிரமமாய்ச், சிறிதும் பயம், வெட்கமின்றிப் பேசினான். இவ்வித வார்த்தைகளைக் கேட்பதில் அவர்களுக்குண்டான மன வெறுப்புக்கும் வருத்தத்துக்கும் அளவில்லை. ஆனால், தங்கள் மனக்கசப்பை வெளியிட்டால், அவன் மறுபடியும் ஓடிப் போய்த் தகப்பனோடு வழக்கிடுவானென்று பயந்து, சகித்துக் கொண்டு இருந்தார்கள். வீட்டில் வந்த இரண்டு மூன்று நாட்களுக்குள், கெட்ட பேச்சோடு மட்டும் நில்லாமல், அவன் காமுகருக்குச் சுபாவமான சில சேஷ்டைகளையும் காட்டத்

தொடங்கினான். கணைக்கால் நோவால் எழுந்து நடமாட முடியாமல் கூடத்தில் படுத்திருக்கையில், அவ்வழியாய்ச் சென்ற பத்மாவதியை, குலாசாரப்படித் தன்னுடன் அவள் பேசமாட்டாளென்று தெரிந்திருந்தும், தாகத்துக்குத் தண்ணீர் கொண்டுவரச் சொன்னான். அவள், காது கேளாதவள் போல் விரைந்து சென்று, சாவித்திரியிடம், "உங்கள் தம்பி என்னவோ கூப்பிடுகிறார்," என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள். சாவித்திரி வந்து விசாரித்துப், பின்பு நீர் கொணர்ந்து கொடுத்தாள். அது முதல், பத்மாவதி, அவனிருக்கும் பக்கத்துக்கு அனுவசியமாய்ப் போகிறதில்லை; போகவேண்டியிருந்தால், ஓரமாய் ஒதுங்கி விரைவாய்ப் போய் விடுவாள். இவ்வண்ணம், தன் துர் எண்ணம் விக்கிநமடைவதைக் கண்டு, சங்கு, எலி பிடிக்கும் பூனையைப் போல் பதிபோட்டுக் காத்திருந்து, தானிருக்கும் பக்கத்தைப் பத்மாவதி தற்செயலாய்ப் பார்க்கும்படி நேர்ந்த பொழுதெல்லாம், பல்லிளித்துச் சிரித்துக் கண்சாடை செய்தது மன்றி, அவள் காதில் விழும்படியாய்க், காமதுரமான துர்விஷயப் பாட்டுகளைப்பாடவும் அவ்விஷயத்தில் தான் பெற்ற வீரலாபங்களைப் பற்றி விஸ்தாரமாய்ப் பிரஸ்தாபித்துப் பிறருடன்பெருமை கொண்டாடவும் தொடங்கினான். இதையெல்லாம் உற்றுக் கவனித்து வந்த நாராணனுக்குப் பெருங் கோபம் உண்டாயிருந்தாலும், கோபாலனுக்கும் சாவித்திரிக்குமாகச் சும்மாவிருக்க நேரிட்டது.

ஒரு நாள் பிற்பகலில், நாராயணனும் கோபாலனும் பள்ளிக்கூடத்துக்குப் போயிருக்கையில், சீதையம்மாளும் சாவித்திரியும் ஓர் அறையில் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள்; பத்மாவதி, அவர்கள் பக்கத்திலிருந்து இங்கிலீஷ்

பாடம் வாசித்துக் கொண்டிருந்தாள். வாசற் பக்கம் படுத்திருந்த சங்கு, மெதுவா யெழுந்து இவர்களிருந்த அறை வாசலுக்கு நேராய் வந்தான். அடிச்சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுப் பத்மாவதி தலைநிமிர்த்துப் பார்த்தவுடன், அவன், அவளை அவசரமாய் வெளியே வரும்படி கைகாட்டி யழைத்தான். பத்மாவதி, அங்கமெல்லாம் நடு நடுங்கி, வேர்த்துச், சத்தமிடவும் நாவெழாமல், தன்னிருகைகளா லும் தன் முகத்தையும் கண்களையும் பொத்திக் கொள்ளவே, அவன், அவள் மேல் மெதுவாய் ஒரு சோகியை வீசியெறிந் தான். சோகி மேல் விழுந்தவுடன், அப்பாதகன் கைதானே என்று பதறி, அவள், "அம்மா! அம்மா!" என்று ஓலமிட் டாள். உடனே சீதையம்மாளும் சாவித்திரியும் திடுக்கிட்டு எழுந்திருந்து, நடந்த செய்தியை வினவ, பத்மாவதி, சங்கு வந்து தன்னை அழைத்ததையும், தான் பயந்து கண்களை மூடிக்கொண்டவுடன், தன் முதுகில் ஏதோ பட்டதையும், அது பக்கத்தில் விழுந்திருந்த சோகியா யிருக்கலாமென் றும், அரிதிற் சொல்லி, அடங்காத் துயரத்துடன், தேம்பித் தேம்பி அழுதாள். இதற்குள், சங்கு வாசற்பக்கம் ஓடிப் போய் விட்டான். சீதையம்மாளும் சாவித்திரியும் அவனைக் கூப்பிட்டுக் கேட்கப் பயப்பட்டார்கள். மாலையில் பள்ளிக் கூடம் கலைந்து, நாராயணனும் கோபாலனும் வந்தவுடன், நடந்த விஷயங்களைக் கேட்டுக், கோபங்கொண்டு, சங்குவைக் கூப்பிட்டு எல்லாருமாகக் கேட்டதற்கு, தனக்குத் தாக மெடுத்ததாகவும், தாகத்துக்குத் தண்ணீர் கொண்டுவரும்படி சாவித்திரியை இரண்டு மூன்று தரம் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதாகவும், அவள் வாராததினால் அறைப் பக்கம் போய்ப் பார்த்ததாகவும், தான் பத்மாவதியைக் கைகாட்டி

யழைக்கவே யில்லையென்றும், பத்மாவதியும் அறையில் இருந்ததால், உள்ளே போகாமல், சாவித்திரியை மட்டும் எழுப்பும் பொருட்டுச் சோகியை எடுத்தெறிந்ததாகவும், அது இன்னார் மேல் விழுந்த தென்பதைத் தான் பார்க்க வில்லை யென்றும் பதிற் சொன்னதுந் தவிர; திருவநந்தபுரம் குஞ்சுபகவதி, பம்பாய் லக்ஷுமிபாய், பூனா ஸரஸ்வதிபாய், ஹைதராபாத் சோக்ராபி, கல்கத்தா கல்யாணிதேவி, பட்டணம் மெட்டிமீனாள், வீணைத்தேனாள் முதலிய கணக்கிலடங்காத ஸ்திரீகள், தனக்காகப் பெருமூச்சு விட்டுக் கொண்டு ஏங்கியிருக்க, அவர்களுக்குள் குறைந்த அழகுள்ளவளுடைய கால் தூள் விலைகூடப் பெறாத இவள் பேரில், தன்னடி மிதித்தவன் கூட ஆசைப்படமாட்டானென்று துடுக்காயும் உதாசினமாயும் பேசினான். அரிதில் தன்கோபத்தை அடக்கிக் கொண்டு, கோபாலனைத் தனிமையாய் அழைத்துப் போய்ச், சங்கு விருக்கும் வீட்டில் தானும் தன் தாயாரும் மனைவியும் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாதென்றும், சங்கு வெளியேறா விட்டால் தான் வேறு வீடு பார்த்துக் கொண்டு உடனே போய் விடுவதாகவும், நாராயணன் சொன்னான்.

கோபாலன்:—நாணு! நீ சொல்வதெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிகிறது; அது நியாயந்தான். அவன் இறந்திருந்தாலும், அல்லது திரும்பிவராமல் ஒரே வழியாய் ஒழிந்திருந்தாலும், எவ்வளவோ நலமாயிருந்திருக்குமென்று, எனக்கே இப்பொழுது தோன்றுகிறது. குலத்தைக்கெடுக்க வந்த கோடாலிக்காம்பென்று சொல்வது, அவனுக்கே தகும். நான் யோசிப்பதெல்லாம், அவனை இப்பொழுது வெளியே விட்டுவிட்டால், அவன், பாகத்துக்காக வியாச்சியஞ் செய்வது நிச்சயம்; எங்கள் குடும்பம் இவ்வளவு சீர் குலைவோடு நில்லா

மல், முழுதும் நுறுங்கிப்போய்விடும். பெரிய விஷயமான தால்தான், அப்பாவிடத்திலிருந்து இன்னும் தீர்மானமாய்ப் பதில் வரவில்லை; எப்படியிருந்தாலும், இன்னும் பத்து நாட்களுக்குள் பதில் வந்து விடும்; பதில் எவ்விதமானாலும், சங்கு என்னை விட்டு விலகிவிடுவான்.

நாராயணன்:—“நீ சொல்வது ஒருவாறு சரிதான். ஆனால் பத்து நாட்களுக்குள் ஒன்றும் முடியாது; யோசித்து முடிவாய்ப் பதிலெழுதுவதாக இன்று தானே கடிதம் வந்தது. குறைந்தது ஒரு மாதஞ் செல்லும். நாள் ஒன்றானாலும், சங்குவோடு நானிருக்க முடியாது: சங்கு உன்னை விட்டுத் தற்காலத்தில் விலகுவதும் பிசகுதான். ஆகையால், நான் இதே தெருவில் வேறொரு வீட்டிற்குப் போய் விடுகிறேன்; எப்பொழுதும் போல், நீயும் நானும் என் வீட்டிலாவது உன் வீட்டிலாவது சேர்ந்து வாசிக்கலாம்; நம்முடைய சிநேகத்துக்கு ஒரு நாளும் குறைவருமென்று, நீ பயப்படவேண்டாம். சங்கு போன நிமிஷமே நான் உன் வீட்டுக்குத் திரும்பிக் குடிவந்து விடுகிறேன். நீ இதற்காக வருத்தப்படாதே,” என்று சொன்னான். கோபாலனும் ஒருவாறு சம்மதிக்க,மறு நாட்காலையிலேயே, நாராயணன், தன் குடும்பத்துடன் வேறு வீட்டுக்குக் குடிப்போய் விட்டான்.

பதினோராவது அதிகாரம்.

தன் மனைவியை விட்டுப் பிரிந்து வந்ததில், கோபாலனுக்கு, ஒரு விஷயத்தில் சந்தோஷமும் மற்றொரு விஷயத்தில் மனவருத்தமுமாயிருந்தது. முன்பு அவளைப் போல் இப்பொழுது அவள் நினைவும் பிரிவாற்றாமையும் படிப்புக்

குத் தடையாயிருந்தன; ஆனால், வரவர அது குறைந்து மனந்தேறிக் கவலையற்று நாராயணனுடன் படித்து வந்தான். இப்படிச் சிலநாட் கழிந்தபின், மறுபடியும் அவனுக்கு மன சஞ்சல முண்டாயிற்று. யாராவது ரூபவதிகளான ஸ்திரீகள் எதிர்ப்பட்டால், கடைக் கண்ணால் பார்க்கத் துணிந்தான்; அப்படிப் பார்த்த ஸ்திரீ யௌவனமாயும் ரூபவதியாயுமிருந்தால், அவன் மனத்தில் ஒருவித சஞ்சலமும் இச்சையும் பிறந்து அவனை வருத்தின. அடிக்கடி, நற்புத்தி ஒரு பக்கமும் இச்சை ஒரு பக்கமுமாயிழுக்க, அவன் அலங்கோலப்பட்டான். ஆனால், பொதுவாய்க் காமவெறி கொண்டு, யௌவன மதமென்னும் குதிமுட்களால் குத்துண்டு, மனக் குதிரை வேகமாய்த் தன்னிஷ்டப்படி பாயத் தொடங்கும் பொழுதெல்லாம், மனைவி மாட்டுள்ள காதல், மானம், என்னும் கடிவாளங்களால் அதை யடக்கித், தன் வசமாக்கிக் கொண்டான். வெட்கத்தாலும், பயத்தாலும், தன் உயிர்த் தோழனாகிய நாராயணனுடன், அவன், ஒரு பொழுதும் இவ் விஷயங்களைப் பற்றிப் பேசவேயில்லை.

இவ்வண்ணம் நிகழும் நாட்களிலேதான், அவனும் நாராயணனுமாக நாடகம் பார்க்கச் சென்றது. திடீரென்று சங்குவைக் கண்டதாலுண்டான ஆச்சரியத்தாலும், துக்கத்தாலும், அச்சமயத்தில் அவ்வளவு கவனியாவிட்டாலும், அன்றிரவு கண்ட திரோபதி வேஷம், அவன் மனத்தைவிட்டு அகலவில்லை. அவ் வேஷக்காரனைக் கண்டு பேச விரும்பி, நாராயணன் வேறு வீட்டுக்குப் போனதினம் மாலையில், சங்குவுடன் நாடகக்காரர் வீட்டுக்குச் சென்றான். ஸ்திரீ வேஷம் சேஷையங்காரைத் தெரியாதார் யார்? அவனுக்கு அப்பொழுது இருபத்தைந்து வயதிருக்கலாம்; அவன்,

மெலிந்த தேகமும், சிவந்த மேனியும், ஒய்யார நடையும், உல்லாச உடையும், களிநடம் புரியும் வதனமும், கண்டவர் மனத்தின்மேற் பாய்ந்து சிறைகொள்ளும் கண்களும் உடையவன். புருஷமோகினி யென்பது அவனுக்கே தகும். அவன் நித்திய மங்கள சொரூபி; சந்தனமும் புஷ்பமும் தாம்பூலமும் வாசனைத் திரவியங்களும் போகஸ்திரீயுமின்றி அவனைக் காண்பதரிது; நடனசாலையில் சோகரசத்தைச் சொரியும்பொழுது தவிர, அவன் முகம் எப்பொழுதும் புன்னகை பொலிந்து விளங்கும். நாடகம் பார்க்கவந்த பிரபுக்களிடமிருந்து நடன சாலையிலேயே, தங்கக் கடிகை யந்திரங்கள், முத்துமாலைகள், ரத்ன மோதிரங்கள், பட்டு வஸ்திரங்கள் முதலியவை எத்தனையோ, பரிசாகப் பெற்றவன். தவிரவும், நாடகம் பார்ககவந்த ஸ்திரீகளில் சிலர், "நிறையெனும் அங்குசப் நிமிர்ந்துபோய்," மனமாகிய மதயானையை அடக்க வலியின்றித், தங்கள் கற்பை அவனுக்கு அர்ப்பணஞ் செய்தார்கள். இவ்வளவு பிரதாபம் பெற்ற உத்தம புருஷனைக் கோபாலன் கண்டு பேசியவுடன், அவனுக்கு அடிமையாய் விட்டான். மறுநாள் முதல், பள்ளிக்கூடம் விட்டவுடன், படிப்பிலும் விளையாட்டிலும் வழக்கம்போல் நாராயணனுடன் காலத்தைக் கழிக்காமல், ஏதாவது போக்குச் சொல்லிவிட்டு, நாராயணன் அறியாமல், குசால் சேஷையங்காரைத் தேடிச்சென்றான். அவர்களுக்குள் இரண்டு மூன்று நாள்களில், இரண்டு மூன்று ஜன்மப் பழக்கம் போன்ற அந்தரங்க நேசம் உண்டாய் விட்டது.

ஒரு நாள், சேஷையங்கார், கோபாலனைத் தன் வைப்பாட்டி வீட்டுக்குக் கூப்பிட்டான். கோபாலன், அவ்வித வீடுகளுக்கு அதுவரையும் சென்றதேயில்லை. அவன் மனத்

தில் வெட்கமும் பயமும் உண்டாயிற்று; ஆனால், சேஷையங்கார் மயலினால் மதி மருண்டு, வேளைக்குத் தக்க போலி நியாயங்களால் தன் மன சாக்ஷியைச் சமாதானஞ் செய்துகொண்டு, அவன் பின் சென்றான். வைப்பாட்டி வீட்டுக்குட் சென்றவுடன்—, ஆஹா! இதென்ன ஆச்சரியம்! சேஷையங்கார் வைப்பாட்டி, கால்வாய் சூப்பிரண்டண்டு நாகமையர் மனைவி சாலாவென்று கோபாலன் அறிந்தான். தீக்காயங்களால், அவளுக்குக் கோபாலனை முதலில் அடையாளம் தெரியவில்லை. விதவையாயிருந்தும், தலைமயிரொன்றும் களையாமல், உயர்ந்த காஞ்சீபுரம் சேலை கட்டிக்கொண்டு, பனாரிஸ் பட்டு ரவிக்கையும் போட்டுக்கொண்டு, அவள் 'ராங்கி'யாயிருந்தாள். கோபாலன், தான் இன்னானென்று அவளுக்குத் தெரிவித்தவுடன், அரியூரில் அவன் வீட்டு முன்னறையில் ஒரு நாள் நடந்ததை அவள் உடனே நினைத்துச் சிரித்துக் கொண்டு, "பலே ராங்கியுள்ளவள் இடந்தனிற் போம், போம், உமக்கும் நமக்கும் வெகு தூரம்," என்று பரிகாசமாய்ப் பாடத் தொடங்கினாள். அவளுடன் உல்லாசமாயிருக்கும் பொழுது, அவளுக்கு சேஷையங்கார் பேரில் அளவற்ற கிறுக்கென்றும், ஐயங்கார், அவளுக்குத் தன் கையிலிருந்து பணம் செலவுக்குக் கொடுக்க விருப்பமின்றி, யாராவது தனவான்களான சிநேகிதர்களை அவளுக்குப் பழக்கம் செய்து வைப்பது வழக்கமென்றும், அவன் அறிந்தான். பின்பு நேரமாய் விட்டதென்று, மறுநாள் வருவதாகச் சொல்லி விட்டு, வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

காமவெறியால் மதிமயங்கி இது காறும் ஒரு நாளும் இல்லாதபடி இப்பொழுது நடந்துவிட்ட கோபாலன், ஐயங்காரை விட்டுப் பிரிந்து வீட்டுக்குத் திரும்பி வரும் வழியிலே

யே, துக்கசாகரத்தில் மூழ்கி விட்டான். தான் இதுவரையும் கைப்பற்றிவந்த நியமங்களும்; தன் ருது சாந்தியன்று தன் நாயகியைச் சயனக்கிரகத்தில் மடிமேல் தூக்கி வைத்துக் கொண்டு, அவளைத்தவிர வேறு ஸ்திரீயைத் தொடுகிறதில்லை யென்று செய்த சபதமும்; சித்த சுத்தியையும் சரீர சுத்தியையும்பற்றி, முந்திய வாரத்தில் தன் வகுப்பு வாலிபர் சங்கத்தில் எல்லாரும் மெச்சும்படித் தான் செய்த பிரசங்கமும், எல்லாம் ஒருவினாடியில் சூறைக்காற்றில் பூளைப்பூவைப்போல், இருந்தவிடந் தெரியாமல், பறந்து போனதைக் குறித்து, அளப்பரிய வெட்கத்தையும் வெறுப்பையும் அடைந்தான். தன் கைப்பிடி நாயகியை மறுபடியும் எப்படி முகம்நோக்குவதென்று நாணினான். இதற்குப் பின்னும் உயிர் வாழ்வதினும், தன்னுயிரை உடனே மாய்த்துக் கொள்வது நலமென்று ஆலோசித்தான். தான் பள்ளிக்கூடத்தில் பாடமாக வாசித்த 'பைபில் புதிய ஏற்பாட்டில்,' "உன் சரீர முழுதும் நரகத் தீயில் ஆழ்வதினும், ஒரு அவயவம் மட்டும் நரகத்தைச் சேருதல் நலமாதலால், உன் வலது கண் உனக்குத் தீங்கை விளைத்தால், நீ உன் வலது கண்ணைப் பிடுங்கி எறிந்து விட்டு, உன் சரீரத்தையும் மற்ற அவயவங்களையும் நரகத் தீயினின்றும் காப்பாற்றிக் கொள்," என்று கிறிஸ்து கூறும் நீதிமொழியை நினைந்து, தன் கண்களைப் பிடுங்கிவிடலாமென்று யோசித்தான். உடனே சாவித்திரியிடத்திலும், தன் இன்னுயிர்த் தோழனாகிய நாராயணனிடத்திலும், நடந்தவற்றை யெல்லாம் ஒளிப்பின்றி அழுது சொல்லிப், பின்பு தன்னுயிரை எவ்விதமாவது துறந்துவிட விரும்பினான். தன்னைத் தம் மகன்போல அருமை பாராட்டி நேசித்து வந்த தன் ஆசிரியராகிய டாக்டர் மில்லர் துரை இடத்தில் நடந்ததை

மறைப்பின்றிச் சொல்லி, அவர் கூறும் நயமொழிகளாலும் புத்திமதிகளாலும் தன் துக்கத்தை ஆற்றிக்கொள்ள நினைத்தான். அன்றிரவு அவன் முகங் கொடுத்து யாரோடும் நன்ருய்ப் பேசாமல், வழக்கம் போல சரியானபடி ஆகாரமும் செய்யாமல், தனிமையாய் மேடைக்குச் சென்று, கதவை யடைத்துக் கொண்டு, தேகங் களைத்துத் தாளுக நித்திரை செய்யுமட்டும், தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான்.

மறுநாட் காலையில், கோபாலன் தூங்கி யெழுந்த பொழுது, முதல் நாள் மாலை நடந்ததெல்லாம் கனவுபோ லிருந்தது; கொஞ்சம் கொஞ்சமாகத்தான் பின்பு ஞாபகத்துக்கு வந்தது. தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்றும், அல்லது பிறரிடத்தில் சொல்ல வேண்டுமென்றும் அவன் எண்ணியதெல்லாம் மூடத்தனமாகவும் அனுவசியமாகவும் அவனுக்குத் தோற்றின. இனிமேல் ஒரு பொழுதும் அவ்வாறு ஒழுகக் கூடாதென்று தன் மனத்துக்குள் தீர்மானஞ் செய்து கொண்டான். அத்தீர்மானத்துக் கேற்ப, அன்று மாலை, சேஷையங்காரைத் தேடிச் செல்லாமல், கோபாலன், தனியாய்க் கடற்கரையை நோக்கிப் புறப்பட்டபொழுது, அவனைத் தேடிவந்த சேஷையங்கார் எதிர்ப்பட்டு, அவனைக் காணவேண்டுமென்று சாலா நிரம்பவும் விரும்புவதாகவும், அழைத்து வரும்படி தன்னை யனுப்பினதாகவும் சொல்லிக் கூப்பிட்டான். ஐயங்காரைக் கண்டு, அவன் தூதைக் கேட்டவுடன், கோபாலனுடைய தீர்மானமெல்லாம் பறந்து போய் விட்டது. ஐயங்காருடன் சாலா வீட்டுக்குச் சென்ருன். இவ்விதமாகச், சாவித்திரியிடத்தில் தான் பந்து விளையாடவாவது கடற்கரைக்காவது கடை வீதிக்காவது போவதாகப் பொய் சொல்லிவிட்டுத், தினமும் மாலையில் சாலா வீட்டுக்குப் போனுன்.

நாராயணனும் அவனும் பள்ளிக்கூடத்தில் தவிர, மற்ற வேளையில் அதிகமாகச் சந்திக்கிறதில்லை. தன் தம்பியின் பொருட்டுத் தன் வீட்டை விட்டு நாராயணன் வெளியேறியதில், கோபாலனுக்குக் கொஞ்சம் உள்ளூர மனஸ்தாபமிருந்தது; அன்றியும், இப்பொழுது வாய்த்திருந்த சகவாசத்துக்கும் நாராயணன் நேசத்துக்கும் வெகுதூரம். தன்னடக்கை பிசகென்று உணர்ந்திருந்ததால், பள்ளிக்கூடத்தில் கூட நாராயணனுடன் முன்போல் கபடின்றி அந்தரங்க விசுவாசத்துடன் பேசமுடியவில்லை; அவனைக் கண்ட பொழுதெல்லாம் வெட்கமும் பயமும் உண்டாயின. நாராயணனோ, அவனுக்குப் படிப்பில்லாமல் ஒழிந்த நேரமாகிய மாலைப் பொழுதில், முதலில் இரண்டு மூன்று நாள்களுக்குக் கோபாலனை வந்து பார்க்க, அவன் வீட்டில் இல்லாததைக் கண்டு, பின்பு அவனைத் தேடுவதை விட்டுப், பத்மாவதியைத் தன்னுடன் மாலையில் கடற்கரைக்கு அழைத்துப் போகத் தலைப்பட்டான். கோபாலனும், வெளியாசாரத்துக்காக மட்டும், நாராயணன் வீட்டிலில்லாத வேளையை அறிந்து, அப்பொழுது அவன் வீட்டுக்குப் போய்த் தான் தேடி வந்ததாகச் சொல்லும்படிச் சீதையம்மாளுடன் சொல்லிவிட்டுத் திரும்பினான். இவ்விதமாகப், பகிரங்கமான தக்க காரணம் ஒன்றுமேயின்றி, நம்முடைய நண்பர் இருவருக்குள்ளும் உபேக்ஷை வளர்ந்து கொண்டே வந்தது.

பன்னிரண்டாவது அதிகாரம்.

தன் கருத்துக் கிணங்காமல் பத்மாவதி தன் சேஷ்டைகளை வெளிப்படுத்தியதால் உண்டான அவமானமும், அதன் நிமித்தம் மற்றவர்களுக்குத் தன் மேலுண்டான கோபமும் வெறுப்பும், சங்குவின் மனத்தில் ஆழ்ந்து பதிந்தன. காரண

மின்றியே பிறர்க்குத் தீங்கைச் சூழும் அவன் மனம், எவ்விதமாவது பழிவாங்கி, நாராயணனையும் அவன் குடும்பத்தையும் ஏற்ற மட்டும் கெடுக்கவேண்டுமென்ற துர் எண்ணத்தைக் கொண்டது. இதன்பொருட்டு, அவன் தக்க சமயம் நோக்கியிருந்தான்.

தன் தமையனுக்கும் நாராயணனுக்குமுள்ள நேசம், தன் மூலமாய்க் கொஞ்சமுறிபட்டதில், அவன் பெருஞ் சந்தோஷத்தை யடைந்தான். அது முற்றிலும் ஒழிந்து, இருவர்க்கும் பகையுண்டாகும் வழியைத் தேடுவானாய், அற்றம் நோக்கிக், கோபாலனிடத்தில் நாராயணனைப் பற்றிப் பலவிதமாய்க் கோள் சொல்லி வந்தான். அவர்கள் நட்புக்கெடுவதில், தனக்கு ஒரு லாபமும் இல்லாவிட்டாலும், நாராயணனுக்கு அதிகமான பணச்செலவுண்டாகுமென்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். இக்கோரிக்கை தன்னிஷ்டப்படி நிறைவேறி வருவதைக் கண்டவுடன், இன்னும் வேறு பெரிய தீங்கை விளைக்க விரும்பி, ஆலோசிக்கத் தொடங்கினன்.

தான் சாலா வீட்டுக்குப் போவது தன் தம்பிக்குத் தெரியாதென்று, கோபாலன் நினைத்திருந்தான். ஆனால், சங்குவுக்குச் சகல விபரங்களும் நன்றாய்த் தெரியும். ஐயங்காருக்கும் அவனுக்கும் அந்தரங்க நேசம். சங்கு தன் பாகத்துக்குள்ள சொத்தைப் பெற்றவுடன், தான் அவனிடமிருந்து பணம் பறிக்கலாமென்ற எண்ணங்கொண்டு, ஐயங்கார் அவனோடு தோழமை பாராட்டி, அவன் இஷ்டத்தையும் நன்மதிப்பையும் நாளுக்கு நாள் விருத்தி செய்து காப்பாற்றி வந்தான். அன்றன்று நடந்ததை, அவன் இரவில் சங்குவிடம் சொல்லிவிடுவான்; அன்றியும், சங்குவும் சாலா வீட்டுக்குப் போவதுண்டு.

கோபாலனுக்குச் சாலாவின் மேல் நாளுக்குநாள் காதல் அதிகரித்துக் கொண்டே வந்தது. தன் மனைவியுடன் தான் செய்த போராட்டங்களையும், அவள் வடித்த கண்ணீரையும், தனக்குண்டான துக்கத்தையும், தான் அடிக்கடி தற்கொலை செய்துகொள்ள விரும்பியதையும் நினைத்துப் பார்த்து, இப்பொழுது சாலா தன்மேற் காட்டும் வாஞ்சையையும், அவள் சிரித்த முகத்தையும்; ஒய்யார நடையுடை பாவனைகளையும், சாதுரிய வார்த்தைகளையும்; அவள் அருமையாய்த் தனக்குப் பக்ஷணங்கள் செய்து கொடுப்பதையும்; தான் எப்பொழுதாவது எள்ளளவு விசனத்தை யடைந்தால், அவள் துக்க சாகரத்தில் மூழ்குவதையும்; ஒரு நிமிஷத்தில் அவள் தன் லீலா விநோதங்களால், துக்கத்தையெல்லாம் மாற்றிச் சந்தோஷப் படுத்துவதையும் ஒப்பிட்டுப் பார்த்து, அவன் மோகத்தில் மதியிழந்தான். அவள் வீட்டுக்குப் போகத் தொடங்கிப் பத்துநாளாகுமுன், அவளுக்கு ஐம்பது ரூபா வரையும், துணியும் மணியுமாய்க் கொடுத்துவிட்டான். ஆனால், அவள் கேவலம் பொது ஸ்திரீயாய் வாழ்வதில் அவனுக்கு மனவருத்த முண்டாயிற்று. அவளைத் தனிமையாய்த் தன் ஆதீனத்தில் வைத்து அநுபவிக்க விரும்பினான். இவ்வெண்ணத்துடன், அவளிடத்தில் தனித்து விஸ்தாரமாய்ப் பேச நினைந்து, ஐயங்கார் அறியாமல், அவள் வீட்டுக்கு இரண்டு நாள் போனான்; ஆனால், இரண்டு நாளும் அவள் உள்ளேயிருந்துகொண்டே, வெளியே போயிருப்பதாக வேலைக்காரி மூலமாய்த் தெரிவித்தாள். தன்னை யறியாமல் யாரையுமே பார்க்கக் கூடாதென்று ஐயங்காரிட்டிருந்த கட்டளையை, ஐயங்காருடைய தர்ம பத்தினியே மீறி நடந்தாலும், சாலா ஒருநாளும் மீறமாட்டாள்; ஐயங்கார் பேரில் அவளுக்கு

அவ்வளவு கிறுக்கு. தன் எண்ணம் இவ்வாறு தடைப்பட்டவுடன், கோபாலன், சாலாவுக்கு அவள் வீட்டு மேல்விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதினான்; அதனாலும் அதிகப் பயன்படவில்லை. இது நிற்க.

நாராயணன், ஒரு நாள் மாலையில், பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வீட்டுவாசலில் வரும்பொழுது, தபால் சேவகன், "ஐயா, இந்தக் கடிதம் யாருக்கென்று பாருங்கள்," என்று ஒரு கடிதத்தை அவன் கையில் கொடுத்தான். அதில் "பட்டணம் ஏகாம்பரேசுரர் தெருவில் நெ. வீட்டில் பத்மாவதியம்மாளுக்குக் கொடுப்பது," என்று மேல்விலாசம் எழுதியிருந்தது. தான் குடியிருந்த வீடு அந்த நெ. உள்ளதாயிருந்ததால், அது தன் மனைவிக்கு என்று நாராயணன் சொல்லத் தபால் சேவகன் கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போய்விட்டான். பத்மாவதிக்கு அதுவரையிலும் தன்னைத்தவிர யாரும் கடிதம் எழுதினதேயில்லை; அன்றியும் போஸ்டு முத்திரையால் அக்கடிதம் பட்டணத்திலிருந்தே அனுப்பப்பட்டதாக விளங்கிற்று. இது நாராயணனுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று. கையெழுத்தை உற்றுப்பார்க்கையில், சிலசில எழுத்துக்கள்கோபாலன் கையெழுத்தைப் போலிருந்தன. ஒருவருக்கு வந்தகடிதத்தை மற்றொருவர் திறந்து பார்க்கக்கூடாதென்பது நாராயணன் கொள்கை. தனக்குத் தன்மாமன் எழுதியகடிதங்களை பத்மாவதி திறந்து விட்டாலுமே, கோபித்துக் கொள்வான்; அவள் தகப்பனார் எழுதினவாயினும் தனக்கென்று எழுதப்பட்டவற்றைத் தன்னனுமதியின்றி அவள் பார்க்கலாகாதென்று சொல்வான். அப்படி யிருக்க, இக்கடிதத்தைத், தான் முதலில் திறந்து பார்க்க விரும்பினான். இவ்வெண்ணத்துடன், புஸ்தகங்களை வீட்டில் வைத்து விட்டுக், கடிதத்

தை மட்டும் உடுப்புப் பையில் பத்திரமாய் வைத்துக்கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்று, அங்கே தனிமையான ஓரி டத்திலிருந்து, கடிதத்தைப் பிரித்து பார்த்தான். கோபாலன் கையெழுத்தென்பதில் சந்தேகமில்லை; தடையின்றிச் சத்திய மாய்ச் சொல்லலாம். கடிதத்தில் பின் வருமாறு எழுதி யிருந்தது.

சென்னை: ஏகாம்பரேசுரர் வீதி,
சனிக்கிழமை.

என் பிராண சகிக்கு,

நான் உன் அடிமை யென்பது உனக்கே தெரியும். நாளுக்கு நாள் என் மனம் உருகுகிறது. உன்னைப் பாராமல் என் கண் பூத்துப்போகிறது. இதுவரையும் என் மனைவி மேல் வைத்திருந்த வாஞ்சையெல்லாம் பொய்யென்றும், உன் மேலுள்ள காதலே மெய்யென்றும் இப்பொழுதுதான் அறிகிறேன். நம்முடைய காதலும் அந்தரங்க வாஞ்சை யும், என்றென்றும் நிலைத்திருக்கும் பொருட்டு, உன்னிடத் தில் தனிமையாய்ச் சில விஷயங்களைக் குறித்துப் பேச விரும் புகிறேன். இவ்வெண்ணத்துடன் உன் வீட்டுக்கு இரண்டு நாள் அவனில்லாத சமயம் பார்த்து வந்தேன்; ஆனால் உன் னைக் காணும் பாக்கியம் என் கண்களுக்குக் கிடைக்கவில்லை. உன் பாசமொழிகளைக் காது குளிரக் கேட்டும், உன் மெய் யன்பை உன்னோடு கூடி அனுபவித்தறிந்தும் உள்ள நான், ஒரு பொழுதும் உன் காதலைச் சந்தேகிக்கமாட்டேன்; அப் படி நான் சந்தேகித்தால் என் தலை வெடித்து விடும். நான் உன்னுடன், நம்முடைய அத்தியந்த சுகத்துக்காக அந்தரங்க மாய்ப் பேச விரும்புகிறேன். அவனும் மற்றியாவரும் வீட்டி லில்லாம லிருக்கும் காலத்தைக் குறிப்பிட்டு எனக்கு உடனே

பதிலெழுதவேணும். என் விலாசமோ உனக்குத் தெரியுமே. அவன் நடுவில் வந்து விட்டாலும், அவனைத் தேடி நான் வந்ததாகவும், அவன் வரவை யெதிர்பார்த்துக் காத்திருந்ததாகவும், நான் போக்குச் சொல்லி விடுகிறேன். உடனே பதிலெழுதவேணும். உனக்கு இத்துடன் ஆயிர முத்தம் அனுப்பி யிருக்கிறேன். என் முத்தங்களில் ஒன்றுவது துர்க்கந்தம் வீசும் சிப்பி முத்தமல்ல; விலையற்ற அமிர்த வாய் முத்தம். நீ பதில் அனுப்பும் முத்தங்களும் அப்படியே யிருக்க வேண்டும். இப்படிக்கு உன் உயிர்க்காதலனாகிய கோபு." கையெழுத்துக்குக் கீழ் மிகுதியாயிருந்த காகிதம் கிழித்தெடுக்கப்பட்டிருந்தது.

இக்கடிதத்தை வாசித்தவுடன், நாராயணனுக்குத் தேகமெல்லாம் வியர்த்து, மதிமயங்கிக் கண்கள் இருண்டு விட்டன; கடிதம் கைநழுவிக் கீழே விழுந்து விட்டது; அவனும் மணல்மேல் அயர்ந்து சோர்ந்து விழுந்து விட்டான். கொஞ்ச நேரத்துக்குப்பின் திடுக்கிட்டெழுந்து, கீழே கிடந்த கடிதத்தை யெடுத்து இரண்டு மூன்று தரம், ஒவ்வொரு வார்த்தையும் மனத்தில் தைத்து மனப்பாடம் ஆகும்வரை, திரும்பித் திரும்பி வாசித்தான். சிறிதும் சந்தேகத்துக் கிடமேயில்லை ; கோபாலன் கையெழுத்துத்தா னென்பது நிச்சயம்; மேல் விலாசக் கையெழுத்து மட்டும் கொஞ்சம் வித்தியாசமாக விருந்தது. ஆனல், அது கடிதத்தைக் கண்டவர் சந்தேகியா வண்ணம், வேண்டுமென்றே கையெழுத்தைக்கொஞ்சம் மாற்றி எழுதியிருப்பதாகத் தீர்மானித்துக் கொண்டான் ; தானில்லாத பொழுது இரண்டு நாள் கோபாலன் தன் வீட்டுக்கு வந்து தேடியதாகத் தன் தாயார் சொன்னது ஞாபகத்துக்கு வந்து, கடிதத்தில் எழுதியிருந்ததை உறுதி செய்

தது; கடிதத்திலுள்ள சில வசனங்களும், அக்கடிதம் கோபாலனாலேயே எழுதப்பட்ட தென்பதை நிரூபித்தன; குற்றாலத்திலும் பட்டணத்திலும் ஏக குடும்பமாய் இருவரும் வாழ்ந்தபொழுது, தன் மனைவி சில சில சந்தர்ப்பங்களில் பேசிய மொழிகளும் செய்த செய்கைகளும், கோபாலன் நடவடிக்கைகளும் வார்த்தைகளும், அக்காலங்களில் தனக்கு ஒருவிதமான சந்தேகத்தையும் உண்டுபண்ணாமல் இருந்தும், இப்பொழுது நூதன அர்த்தத்தோடு ஞாபகத்துக்கு வந்து மனத்தைப் புண்படுத்தின; உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இப்பொழுது தெளிவாய்த் தோற்றும் விஷயத்தைப் பற்றித், தான் இதுவரையும் சொப்பனத்திலும் சந்தேகியாததால், தன்னிலும் பெரிய மூடரே கிடையாரென்று நினைத்தான்.

இவ்வாறு சந்தேகங்களெல்லாம் நீங்கியவுடன், தனக்கு உயிர்த்துணைவனா யிருந்தும் துரோகஞ் செய்த கோபாலன் மேல் அடங்காக் கோபங் கொண்டு, உடனே சென்று, அவனையும், நயவஞ்சக நீலியாகிய தன் மனைவியையும் கொன்று விட்டுத் தானும் உயிரை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்தான். பெண் கல்வியின் சிறப்பையும் இல்வாழ்க்கையின் பெருமையையும், தன் மனைவியின் உரிமையையும், அவள் காதலின் அருமையையும் பற்றி, எவ்வளவோ எண்ணியெண்ணி அங்கமெல்லாம் பூரித்துத் தன்னிலும் அதிக பாக்கியசாலிகள் உலகில் கிடையாரென்று மனமகிழ்ந்து கொண்டிருந்த தனக்கு, இப்பாழ்விதி நேர்ந்ததை நினைத்துத், தேம்பித் தேம்பி யழுதான். தீக்காயங்களால் தன்னிலும் அதிகமாகத் தேகமெல்லாம் அவகோலமுற்றிருந்த கோபாலனுடைய சௌந்தரியத்துக்காகத் தன்னை வெறுத்து, அவனைத் தன் மனைவி விரும்பியிருக்க மாட்டாளென்றும், பெரும்பாலும்

வெளிப் பகட்டையே கண்டு மருளும் ஸ்திரீ ஜாதியாகையால், அவள் அவன் செல்வத்தையும் ஆடையாபரணங்களையும் கண்டு மருண்டு, மோகமுற்றிருப்பாளென்றும் எண்ணினதும் தவிர, சிநேகத்துக்காக மட்டுமின்றித், தன் வறுமையினாலும் அவனோடு ஓட்டிக் குடியாயிருக்கும்படி தனக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தையும் நொந்து கொண்டான். கோபாலன் தன்மேல் பாராட்டி வந்த நட்பின் உரிமையும் உண்மையும் சந்தேகிக்கத்தக்கதன்று; அவனும் இயற்கையாய்க் கெட்ட குணமுடையவனல்லன். அப்படியாக, அவன் மெய்நட்பைச் சீரழித்து அவனையுங் கெடுத்தவள் தன் மனைவியாயிருக்க, அவன்மேல் கோபமடைதல் பிசகென்றும், அவனுக்காகத் தானும் இரங்குவதே சரியென்றும் எண்ணினான்.

"ஆலகால விஷத்தையும் நம்பலாம்;
ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்;
கோலமாமத யானையை நம்பலாம்;
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்;
காலனார்விடும் தூதரை நம்பலாம்;
கள்ளர், வேடர், மறவரை நம்பலாம்,
சேலைகட்டிய மாதரை நம்பினால்,
தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே."

என்ற செய்யுளையும்,

"கைப்பிடி நாயகன் தூங்கையிலே, அவன் கையை எடுத்
தப்புறம் தன்னில் அசையாமல் முன்வைத் தயர்வளவில்,
ஒப்புடன் சென்று, துயில் நீத்துப், பின்வந் துறங்குவளை
எப்படி நான் நம்புவேன்: இறைவா கச்சியேகம்பனே."

என்ற செய்யுளையும் வாய்குழறிக் கண்ணீர் பெருகச் சொல்லி உலக விஷயங்களை நன்கறிந்த ஆன்றோர் பாடிய அப்பாட்

டிக்கள் தவறென்று தான் மேதாவித்தனமாய் எண்ணிக் கர்வங் கொண்டிருந்ததை நினைத்து நினைத்து ஏங்கினான். விஷப்பாம்பை நல்ல பாம்பென்று அழைப்பதுபோல், நீர்க்குமிழி போன்ற நிலையற்ற சரீரத்துக்கு 'மெய்' என்றும், 'காயம்' என்றும், பெயரிட்டு, அதைச் சார்ந்த ஆசாபாசங்களின் அநுகூலத்துக்கும் பிரதி கூலத்துக்குமாகக் களித்தும் துக்கித்தும், அதற்குண்டாகும் மானக்கேட்டைப் பெரிதாகக் கருதி மனமறுகிப் பரிதபித்தல் பேதமை யென்றும், கற்றறிந்தவர் பற்றெல்லாம் ஒளித்துச் சமதரிசிகளாய் வாழ்தலே தகுதி யென்றும்; தானும் அவ்வாறு துறத்தலே நன்மதி யென்றும், எண்ணினான்.

நெடுநேரம் வரை இவ்வாறு பலவிதமாய் ஆலோசனை செய்தும் முடிவு பெறவில்லை. கடைசியில் மேல் நடக்கும் விஷயங்களை நன்றாய்க் கவனித்துப் பின்னனுபவத்துக்குத் தக்கபடி தான் வேண்டியவற்றைச் செய்யலாமென்றும், இப்பொழுது தனக்கு இச்சங்கதி தெரியாதது போலவே ஒழுக வேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டு, மணி எட்டுக்கு மேலாய் விட்டபடியால், மெதுவாய் வீட்டை நோக்கித் திரும்பினான்.

வழக்கமாய் ஏழு மணிக்குள்ளாகவே கடற்கரையினின்றும் திரும்பிவிடுகிறவன், எட்டுமணிக் குண்டு போட்ட பின்னும் வராததால் கவலையுற்று, வீட்டு வாசலில் விளக்கை வைத்துக்கொண்டு, சீதையம்மாள், தன் மகன் வரவை நோக்கித் தெருவில் இருபுறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தாள். பத்மாவதி தூங்கி விட்டாளென்று சீதையம்மாளின் நினைப்பு: ஆனால், அவள் தூங்கவில்லை: தன் கணவன் அந்நேரம்வரை வாராமையால் அவனுக்கு ஏதாவது ஆபத்து

நேர்ந்திருக்க வேண்டுமென்று பயந்து, மனமிடிந்து, சமையல் அறையில் படுத்துக்கொண்டு, விம்மி விம்மி அழுதுகொண் டிருந்தாள். நாராயணன் வந்தவுடன், அவன் தாய், "ஏதப்பா, இவ்வளவு போது? ஒருநாளும் இவ்வளவு போது ஆகாதே? எங்கேயாவது போயிருந்தாயா?" என்று வினவினள். அத ற்கு அவன்; "ஆம்; மைலாப்பூரில் ஒரு 'மீட்டிங்கு' க்காகப் போயிருந்தேன்." என்று பொய் சொல்லிவிட்டு, வீட்டுள் நுழைந்தான். அவன் கொல்லைப்பக்கம் போனவுடன், பத் மாவதியும், அதற்குள் எழுந்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, கொல்லைக்குச் சென்று, தன்பயம் தீர்ந்த சந்தோஷத் தில் அவனைத் தழுவிக்கொண்டாள். ஆனால் அவன் ஒன்றும் பேசாமல் அவளைப் புறங்கையால் தள்ளிவிட்டான். உள்ளே வந்தபின், தனக்குத் தலைநோவு சாஸ்தியாக விருக்கிறதென் றும், சாப்பாடு வேண்டாமென்றும், தன் தாயிடம் சொல்லி விட்டு, அவள் அரைத்துக்கொடுத்த மருந்தை வாங்கிப் பூசிக் கொண்டு, வழக்கம்போல் தன் படுக்கை யறைக்குப் போகா மல், தன் படுக்கையைத் தானே எடுத்து வந்து வாசற் பக்கம் விரித்துப் படுத்துக்கொண்டான். பின்பு சீதையம்மாளும், பத்மாவதியும் ஆகாரஞ் செய்துவிட்டுப் படுத்துக்கொண்டார் கள். பத்மாவதி அன்றிரவு நன்றாய்ச் சாப்பிடவுமில்லை, தூங் கவுமில்லை; துக்கத்தில் ஆழ்ந்து, மௌனமாய்க் கண்ணீரைப் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

பதின்மூன்றுவது அதிகாரம்.

அன்றுதொட்டு நாராயணன் தன் மனைவியுடன் முகங் கொடுத்துப் பேசுகிறதில்லை; அவள் கேட்ட கேள்விகளுக்குப்

பதிற் சொல்லுகிறதில்லை; அவள் அழுதாலும் பட்டினியா யிருந்தாலும் கவனிக்கிறதில்லை; அவளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறதுமில்லை; தான் மட்டும் தனியாய் வாசற் பக்கத்தில் படுத்துக் கொள்ளுகிறது; அவள் வழக்கம்போல், தனக்கு ஏதாவது கைங்கரியம் செய்யவந்தாலும், வெறுப்புடன் சினந்து பேசி வெருட்டிவிடுகிறது. தன் தாயுடன்கூட நன்றாய்ப் பேசுகிறதில்லை. அடுத்தது காட்டும் பளிங்குபோல அவன் நெஞ்சத்திலுள்ள விசனத்தையும் ஏக்கத்தையும் வெளிப்படுத்தும் அவன் முகச்சோர்வைக் கண்டு, அவள், பலதடவை பலவிதமாய்க் காரணம் வினவியும், அவன் ஒன்றுஞ் சரியாய்ப் பதிற் சொல்லவில்லை. பள்ளிக்கூடம் இல்லாத நேரமெல்லாம், தனியாய்க் கடற்கரையிலாவது, அல்லது வீட்டில் தான் படிக்கும் அறையிலாவது கழித்து வந்தான்; அவனிருக்கும் சீரைக் கண்டு பயந்து, ஒருவரும் அவன் அறைக்குட் போகிறதில்லை; அதைச் சுத்தம் செய்வதுகூடப், பத்மாவதி அவனில்லாத வேளை பார்த்துச் செய்தாள். அன்றியும், கோபாலன் வீட்டுக்கு அவனையாவது சாவித்திரியையாவது பார்க்கும்பொருட்டு, எப்பொழுதாவது போய் வந்ததையும், முற்றிலும் நிறுத்திவிட்டான்: கோபாலனைப் பள்ளிக்கூடத்தில் காணும்பொழுது அவனுடன் பேசாமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். சாலாவின் பாசத்தில் கட்டுண்டு, ஐயங்கார் நேசத்தில் மூழ்கிக் கிடக்கும் கோபாலனுக்கு, நாராயணன் இவ்வாறு விலகியது, சௌகரியமாயே இருந்தபடியால், அவனும் அதற்கேற்றபடி ஒதுங்கிப் பொழுகா நிற்க, அவன் உபேக்ஷை நாராயணனுடைய அற்ப சொற்ப சந்தேகத்தையும் நீக்கிற்று.

இப்படி யிருக்கையில், ஒருநாள், தபால்காரன், முன் போல் பத்மாவதிக்கு மேல் விலாசமெழுதப்பட்ட இன்னொரு கடிதத்தை, நாராயணன் கையில் கொடுத்தான். இக் கடிதத்தில் பின் வருமாறு எழுதியிருந்தது.

பட்டணம்: ஏகாம்பரேசுரர் வீதி
நெ. வீடு, வியாழக்கிழமை.

என் பிராணசகியாகிய பத்மிக்கு,

நான் என் மனதறிய யாதொரு தப்பிதமும் செய்யாதிருந்தும், நீ நாளதுவரையும் பதில் எழுதாததற்குக் காரணந் தெரியவில்லை. என் விதிப்பயன்தான்; என் பிராண சகியாகிய நீ இப்படி யிருப்பாயென்று நான் சொப்பனத்திலும் எண்ணவில்லை. நாமிருந்த சிநேகத்துக்கும், கூடிக்குலாவிச் சுகித்த சுகத்துக்கும், நீ இப்படி இருக்கவேண்டாம். ஒரு வேளை என் வீட்டு நெ. மறந்து போய்விட்டதோ, அல்லது போஸ்டு கவர் கிடைக்கவில்லையோ, என்றெண்ணி, என் விலாசம் எழுதின கவரொன்று இத்துடன் அனுப்பியிருக்கிறேன். இனிமேலாவது இது கண்ட நிமிஷத்தில் பதில் எழுதுவாயென்று நம்புகிறேன். சனிக்கிழமையோடு பள்ளிக்கூடப் பரீக்ஷை முடிவாகிறது. எங்கள் சொத்தைப் பாகஞ்செய்யும் பொருட்டு, திங்கட் கிழமையன்று எல்லாருமாய் ஊருக்குப் புறப்பட்டுப் போகிறோம். நீங்கள் என்றைக்கு ஊருக்குப் போகப் போகிறீர்கள்? நாங்கள் போவதற்கு முன் உன்னைக் கட்டாயம் நான் கண்டு பேசவேணும்; ஆகையால் உடனே பதிலெழுதவும். மற்றது முகதாவில். இத்துடனும் ஆயிரம் முத்தம் அனுப்பியிருக்கிறேன்; முன் முத்தங்களையும் இவைகளையும் வட்டி சகிதம் நேரில் தரவேணும். இப்படிக்கு உன் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும், கோபு."

இக் கடிதத்துக்குள், கோபாலன், வீட்டு நெ. கண்டு மேல்விலாச மெழுதியிருந்த ஒரு போஸ்டு கவரும் அடக்கஞ் செய்திருந்தது. இக்கடிதம் முழுவதும், முன் கடிதத்தின் மேல்விலாசம் போன்ற கையெழுத்தில், அதாவது கோபாலன் கையெழுத்தை மாற்றி யெழுதினாற்போல்—எழுதியிருந்தது. இதைக் கண்டவுடன் நாராயணனுக்குண்டான விசனத்தையும் கோபத்தையும் விரித்துக் கூறவேண்டியதில்லை. முன்புபோல் வெகுநேரம் பற்பல ஆலோசனைகள் செய்தான். முடிவில், தன் மனைவி கெட்டவளா யிருக்கக், கோபாலன்மேல், அவன் நட்பை முற்றிலும் விட்டுவிடுவதைத் தவிர, வேறு கோபங்கொள்வது பிசகென்றும்; ரஜாவுக்குத் தான் பட்டணத்திலேயே இருந்து கொண்டு, தன் மாமனுருக்குக் கடிதம் எழுதித், தன் மனைவியை மட்டும் உடனே அவர் வந்து கூட்டிக்கொண்டு போகும்படி செய்து, பின்பு அவளை முற்றிலும் விலக்கிவைத்து விடுகிறதென்றும்; அப்படிக்கின்றி மூர்க்கத்தனமாய் நடந்து, தன் அவமானத்தைத் தானே பறையறைந்து பகிரங்கப் படுத்துதல் மூடத்தனம் என்றும்; தன் மனைவியை ஊருக்கு அனுப்பியபின், தன் தாயிடத்தில் சகல விஷயங்களையும் சொல்லி, அவளைச் சமாதானஞ் செய்து விடலாமென்றும், தீர்மானஞ் செய்து கொண்டான். அப்படியே தான் ரஜாவில் பட்டணத்திலேயே இருந்து வாசிக்கப் போவதாகவும், தன் மனைவி ஊருக்குப் போகவேண்டுமென்று ரொம்பவும் விரும்புவதாலும், அவள் உடம்பு கொஞ்சம் சுகவீனமா யிருந்தலாலும், கடிதம் கண்டவுடன் புறப்பட்டு வந்து, அவளை மட்டும் ஊருக்கு அழைத்துக்கொண்டு போகும்படிக்கும், தன் மாமனுக்கு மறுநாளே கடிதம் எழுதினான்.

தங்களுடன் நாராயணன் வீட்டுக்காரரும் ஊருக்குப் புறப்படுவார்களோ வென்று விசாரித்துக்கொண்டு, அப்படிக் கில்லாவிட்டால், தாங்கள் விடைபெற்றுக்கொண்டு போகும் படிக்குச், சாவித்திரியும் கோபாலனும் ஞாயிற்றுக்கிழமை யன்று மாலையில் நாராயணன் வீட்டுக்கு வந்தபொழுது, நாராயணன் தற்செயலாய் வீட்டிலில்லை. அவர்கள் கொஞ்ச நேரம் அவனுக்காகக் காத்திருந்தும் அவன் வராததாலும், அவன் வீட்டுக்காரர் ஊருக்குப் புறப்படுவதாகப் பேச்சில் லாததாலும், அன்று மாலை ரயிலிலேயே ஊருக்குப் போவ தாலும், சீதையம்மாளிடம் சொல்லிக்கொண்டு, அவர்கள் போய்விட்டார்கள்.

நாராயணன் நெடுநேரம் சென்று வந்தவுடன், அவன் முகம் முன்னினும் அதிகமாய் வாடிச்சினந்தேக்கி யிருந்ததைக் கண்ட சீதையம்மாள், அவன் விசனமெல்லாம் அவனுக்கும் அவன் மனைவிக்கு முள்ள ஏதோ ஒரு மனஸ்தாபத்தால் தானென்று யூகித்தறிந்தபடியால், அவனையும் அவளையும் தனிமையாய் விட்டிருந்தால், ஒரு வேளை மனவருத்தந் தீர்ந்து சமாதானமாகக் கூடுமென்று எண்ணித், தான் கோவிலுக்குப் போய் வருவதாக வெளியே போய்விட்டாள்; நாராயணனோ, பத்மாவதியுடன் ஒன்றும் பேசாமல், தான் படிக்கும் அறைக் குட் போய்விட்டான். பத்மாவதி, கொஞ்சநேரம் வரை துக்கம் பொறுக்கமாட்டாமல் அழுதுகொண்டிருந்து விட் டுப், பின்பு, ஒருவாறு துணிந்து, அவன் அறைக்குட் செல்ல. அப்பொழுதும் அவன் ஒன்றும் பேசாமல், அவள் வந்த தைப் பாராமலிருக்க, எவ்விஷயத்தைப்பற்றிப் பேசினால் அவன் கோபமடையாமல் ஆவலாய்க்கேட்கக் கூடுமென்று யோசித்துப், பின்வருமாறு பேசத்தொடங்கினாள்.

பத்மாவதி:—எங்கே இவ்வளவு நேரம் போயிருந்தாய்? கோபாலன்னுகூட ரயிலுக்குப் போயிருந்தாயா? அவரும் சாவித்திரி யக்காளும் இங்கே சொல்லிக்கொள்ள வந்து, வெகு நேரம் வரை உனக்காகக் காத்திருந்தார்கள்; நீ வர வில்லை; பின்பு ரயிலுக்கு நேரமாய் விட்டதென்று போய்விட் டார்கள். * * * நீ கோபாலன்னுவைக் காணவில்லையோ? உன்னைப் பார்த்துவிட்டே போகவேணுமென்று, ஆனமட்டும் காத்திருந்து பார்த்தார்:—

நாராயணன்:—உன்னைப் பார்க்க, வந்தானே என்னைப் பார்க்க வந்தானே? என்னைப் பார்த்து அவனுக்கென்ன ஆக வேணும்? உன்னிடத்தில் தான் அந்தரங்கமாய்ப் பேச வேண்டி யிருக்கும்: முத்தங்களுக்கு வட்டி வாங்க வேண்டி யிருக்கும்.

நாராயணன் கோபமாகவும் கொடுமையாகவும் பேசிய போதிலும், கடைசி வாசகங்களைச் சொல்லும் பொழுது, அவனுக்குத் தன்னையறியாமல் துக்கம் நெஞ்சை யடைத்துக் கண்ணீர் பெருகிவிட்டது.

பத்மாவதி:—"ஆ! என்ன சொல்கிறாய்? நீ சொல்வ தொன்றும் தெரியவில்லையே," என்று பதை பதைத்து, நடு நடுங்கிக் கேட்டாள்.

நாராயணன்:—"ஆமாம்: உனக்கென்ன தெரியும்? இது தானே பூலோகம், என்று கேட்பது பெண்களுக்கு வழக்கந் தானே? மீன் குட்டிக்கு நீந்தப் படித்துக் கொடுக்கவும் வேண் டுமா? உனக்கொன்றுமே தெரியாது," என்று கசப்பாய்ச் சொன்னான்.

பத்மாவதி:—"நீ சொல்வது என் மனத்தில் ஏதோ பயத்தை உண்டுபண்ணுகிறது, வேறொன்றும் தெரியவில்லை.

நீ, இப்பொழுது கொஞ்ச நாளாய், ஒரு நாளும் இராதபடி-யிருக்கிறதின் காரணம், எனக்குத் தெரியவில்லை. என் மனசார வாக்கார, நான் ஒரு விதமான தப்பிதமும் செய்யவில்லை. உன்னையே தெய்வமாக வைத்துக் கொண்டு, உன் மனத்தைச் சந்தோஷப்படுத்துவதையே நான் பிறந்ததின் பயனாக வைத்துக்கொண்டு தான், நான் நடந்து வருகிறேன். என் புத்தியீனத்தால் நான் ஏதாவது பிசகி நடந்து விட்டாலும், அதைத் திருத்தி, எனக்குப் புத்தி சொல்ல வேண்டியது உன் கடமையே. 'கொண்டவன் உறவுண்டானால் மண்டலமெல்லாம் ஆளலாம்.' நீயும் நானும் ஒரே மனமாய், ஓர் உயிரும் இரண்டுடலும் போல் வாழ்ந்து வந்ததையும், இப்பொழுது நீ யிருக்கிறதையும் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம், என் வயிற்றில் இடி விழுந்தாற்போல் பதறுகிறது; மனம் கரைந்து கரைந்து இடிந்து போகிறது. என்மேல் உனக்கு எப்பொழுதாவது ஆசை யிருந்தது மெய்யானால், நான் செய்த தப்பிதம் என்னவென்று சொல்லு,'' என்று கண்ணீர் பெருக, உருக்கமாய்ச் சொன்னாள்.

நாராயணன்:—''உன் மனத்தைச் சோதித்துப்பார். நன்றாய்த்தெரியும். அடி நீலி; மாய்மாலக் கள்ளி! உலகத்தில் ஒரு பெண்ணுக்காவது இந்தச் சுபாவம் இராமலிருந்தால் ஆகாதா, தெய்வமே? உனக்கே தெரியாவிட்டால், இதைப் பார்: இப்பொழுதாவது தெரிகிறதா, பார்,'' என்று தன் பெட்டியைத் திறந்து, முதலில் வந்த கடிதத்தையெடுத்து, அவள் கையில் கொடுத்தான்.

பத்மாவதி அதை வாங்கிக் கொஞ்சம் வாசித்துப், பின், ''இது கோபாலண்ணா கையெழுத்துப் போலிருக்கு. அவர்

எந்தப் பட்டி முண்டைக்கோ எழுதி யிருக்கிறதை, என்னை என் வாசிக்கச் சொல்லுகிறாய்?" என்று கேட்டாள்.

நாராயணன்:—"எல்லாம் இந்தப் பட்டி முண்டைக்குத் தான்; இதோ மேல் விலாசத்தைப் பார்: இன்னும் சந்தேக மிருந்தால் இந்தக் கடிதத்தைப் பார்; பட்டி முண்டை பேரே போட்டிருக்கிறது. அண்ணா! அண்ணா வில்லையா, அண்ணா! "மாமா, மருமகனே, மைத்துனா, என் தம்பி, சிற்றப்பா, என் கணவா, சீராளா கண்வளராய்," என்று தாலாட்டின ஜாதி இல்லையோ? கள்ளாமக்களை வாய் கூசாமல் 'அண்ணா' என்று சொல்லுகிறதைப் பார்!" என்று சொல்லிக்கொண்டே, மற்றக் கடிதத்தையும் எடுத்து அவள் கையில் கொடுத்தான்.

கடிதத்தை வாங்கிப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே, பத்மாவதி மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டாள். நாராயணன் கொஞ்சம் தண்ணீர் எடுத்து வந்து, அவள்முகத்தில் அடிக்க, அவள் தெளிந்தெழுந்து, அலறியழுது, "இந்த அநியாயம் உண்டா? தெய்வமே! இதுயார் செய்த மோசமோ தெரியவில்லையே. தலையில் இடி விழுந்து விடாதா? சுவாமி! இந்தப் பேர் கேட்கவா நான் பெண் பிறந்தேன்? என்ன ஆணை, என்ன சத்தியம் வேணுமானாலும் செய்கிறேன்: நான் ஒரு பாவமும் அறியேனே," என்று பலவிதமாய்ப் பன்னிப் பன்னிப் புலம்பி யழுதாள். நாராயணன், ஒன்றுக்கும் பதிற்பேசாமல், "இந்த மாய் மாலத்தையெல்லாம் இனி மேலாவது நிறுத்திவிடு; நீ இதைவிட ஆயிரம் பங்கு சாகசப் பண்ணினாலும், நான் நம்பமாட்டேன். என் விதி இவ்வளவு தான். நான் ஆசைப்பட்டு மோசம் போனேன். உங்கப்பனுக்கு எழுதியிருக்கிறேன்; இன்னும் நாலு நாளில் வந்து விடுவான். அவனுடன் கூட்டியனுப்பி விடுகிறேன். அப்புறம்

உனக்கும் எனக்கும் இந்த ஜந்மத்தில் தொந்தம் விட்டது. வீண் பாசாங்கையும் கண்ணீரையும் நிறுத்தி விடு," என்று சொல்லிவிட்டு, அறையினின்றும் வெளியே போய்விட்டான். கொஞ்ச நேரத்தில், சீதை யம்மாளும் திரும்பி வந்து விட்டாள்.

பதினாலாவது அதிகாரம்.

மேற்கூறிய சங்கதிகள் நடந்த மறுநாள், நாராயணனுக்குப் பின் வரைந்திருக்கும் கடிதம் வந்தது:

57 நெ. மாதாகோவில் வீதி,
காரைக்கால்: ஆதித்யவாரம்.

"சிரஞ்சீவி மருமான் நாணுவுக்கு அநேக ஆசீர்வாதம். க்ஷேமம்; க்ஷேமத்தைக் கோருகிறேன். நான் இங்கிருந்து எழுதுவது உனக்கு ஆச்சரியமாயிருக்கும். சென்ற சோமவாரத்தன்று இறங்கலிலுள்ள நம்முடைய மரக்கடை தீப்பட்டுக், கை முதலும் கடன் வாங்கிப் போட்டதுமாக மூவாயிரம் ரூபாவுக்கு மேல் நஷ்டமாய் விட்டது. அப்பொழுது நான் ஒரு வாரமாய் ஊரிலில்லை. திருநெல்வேலிக்கு ஒரு ஜோலியாய்ப் போயிருந்தேன். என் பங்காளி முத்தைய பிள்ளை, நானில்லாத சமயத்தில், தனக்கு வேண்டியவர்களுக்கு ரொக்கத்துக்கும் கடனுக்கும் மரங்களையெல்லாம் கொடுத்துவிட்டுக், கடையில் தீயை அவனேவைத்துக்கொண்டு, எல்லாம் எரிந்து போய்விட்டதென்று ஏமாற்றுவதாகச் சிலர் ஊரில் பேசிக்கொள்கிறார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த மட்டும், அவன் அப்படிப்பட்ட மனுஷ்யனில்லை. நான் இந்த வதந்தியைப் பற்றிக் கேட்டதற்கு, அவன் ஆயிரம் சத்தியம்

செய்து, இலை விபூதியின்மேல் அறைந்து கொடுத்தான். அவன் துரோகம் பண்ணினால் சுவாமி கூலி கொடுப்பார். எனக்கு முன்னாலேயே கடனிருந்தது உனக்குத் தெரியுமே: அதற்கு அடைமானமானதைத் தவிர, மற்றச் சொத்தை அடைமானம் வைத்தும், 'பிராமிசரி நோட்டின்' பேரிலுமாகத்தான், மரவியாபாரத்துக்குக் கடன் வாங்கியிருந்தேன். அடைமானச் சொத்தெல்லாம் அதன் மேலுள்ள கடனுக்கே ஈடாகாது. மரக்கடை தீப்பட்ட மறுநாளே, 'நோட்டு' க்காரரும் அடைமானக்காரரும் வியாச்சியம் செய்யத் தலைப்படவே, இத்தனை நாளாய்ப் பரம்பரையாய் கவுரவமாய் வாழ்ந்து வந்த ஊரிலேயே பாப்பர் விண்ணப்பங் கொடுக்க மனம் பொறாமல்,கடனுக்காக ஸிவில் ஜெயிலுக்குப் போகப் பயந்து, உன் மாமியாரை அவள் பிறந்தாத்தில் கொண்டு விட்டு விட்டு, இராவோடு இராவாய் இவ்வூருக்கு வந்துவிட்டேன். இனிமேல் மண்வெட்டி வேலை செய்தாவது சம்பாதித்துக் கடனை முழுதும் தீர்த்தாலொழிய, ஊருக்குப் போக நீதியில்லை. தற்காலத்தில், இங்கே ஒரு மரைக்காயரிடத்தில் கணக்கு வேலை பார்த்து வருகிறேன். நீங்களெல்லாம் வீணுக்கு விசனப்படவேண்டாம்; நான் என் மனதைத் தேற்றிக் கொண்டு விட்டேன். விதிவசத்துக்கு நாமென்ன செய்யலாம். மேல் நடக்கிற விஷயங்களுக்கு விபரமாய் எழுதுகிறேன். எல்லாரும் க்ஷேமமாயிருக்கிற செய்திக்கு அடிக்கடி யெழுதவும். ரொம்பவும் அசௌகரியமா யில்லாவிட்டால், நீ மறுபடியும் உன் சிநேகிதர் கோபாலையர் கூடவே குடியிருத்தல் நலமென்று நினைக்கிறேன். அக்காளிடத்தில் சகல சங்கதிகளையும் சொல்லவும். வேணும் அநேக ஆசீர்வாதம். ஸ்ரீ சுப்பிரமணியர் சகாயம்.

இப்படிக்கு

அய்யாவய்யன், சிறுகுளம்.'

இக்கடிதத்தை வாசித்தவுடன், நாராயணனுக்குக் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிவிட்டது. நன்றாய் விபரந் தெரிந்தபின், ஐயாவையரைத் தவிர, அவன் வேறு தகப்பனை அறியான். அவர், அவனைத் தந்தையிலும் மிக்க வாஞ்சையுடன் போஷித்து வளர்த்துக், கொடிய வறுமையில் அவனையும் அவன் தாயையும் தன் வீட்டில் வைத்து ரக்ஷித்து, அவனுக்கு வித்தியாப்பியாசம் செய்வித்துக், கடைசியில் தன் சீமந்த புத்திரியை விவாகஞ் செய்துகொடுத்ததுந் தவிர, இப்பொழுதும் கூட, வேண்டியபடி செலவுக்குப் பணம் அனுப்பிக்கொண்டிருந்தார். அவருக்கு இக்கதி நேரிட்டதையும், தன் குடும்ப நிமித்தமும் தன் கல்வி நிமித்தமும் அவர் செய்த செலவுகள் இக்கதி வருவதற்கு ஒரு காரணமென்றும் நினைத்தவுடன், அவனுக்கு மனவருத்தம் சகிக்கமுடியவில்லை. தான் முற்றிலும் அநாதையாய் விட்டதை அப்பொழுது தான் உணர்ந்தான். கொஞ்சநேரம் நினைப்பின்றித் தேம்பி அழுது கொண்டிருந்தான். பிறகு தன் தாய்க்கு அவ் விஷயத்தைத் தெரிவிக்கவே, அவள் மனமிடிந்து ஏங்கியிரங்கிக் கதறியழுதாள். அப்புண்ணியவதிக்குத் தன் சகோதரன் மேல் அளவற்ற வாஞ்சை. ஆலயங்களிலும், தன் ஜெபங்களிலும், தன்னைச் சேர்ந்தவர்களுடைய க்ஷேமலாபங்களுக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கும்பொழுது, தான் கணவனையிழந்த வருத்தத்தை உணராதபடித் தன்னைச் சம்ரக்ஷணை செய்துவந்த தன் தம்பிக்காக வேண்டிக் கொண்ட பின்பு தான், தன் மகனுக்காகவும் மருமகளுக்காகவும் பிரார்த்திப்பாள். தன் கணவன், தன் மாமிக்குச் சொல்லும்பொழுது, சமையல் அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த பத்மாவதி பட்ட துயரத்தை, எம்மால் விவரிக்கமுடியாது. ஆழ்கடலில்

நீந்தத் தெரியாமல் கையையும் காலையும் போட்டடித்துக் கொண்டும், உவர் நீரை அலைமோதுந்தோறும் ஒவ்வொரு மடக்காய்க் குடித்துக்கொண்டும், இந்நிமிஷமோ, அடுத்த நிமிஷமோ உயிர் போவதென்று நடுநடுங்கித் தன்னை நோக்கி ஏதாவது பிணையாகக்கூடும் ஒரு சிறு கட்டையாவது வருகிறதோவென்று தலை நிமிர்த்துத் தன் சிவந்து நொந்த கண்களால் எட்டுத் திசையையும் நோக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு துர்ப்பாக்கியனைத், திடீரென்று ஒரு முதலை வந்து அவன் கால்கள் இரண்டையும் பற்றிக் கடலுக்குள் இழுத்துச் சென்றாற்போல், பத்மாவதி, இச்செய்தியைச் செவியுற்றவுடன் துக்கசாகரத்தில் முற்றிலும் மூழ்கிவிட்டாள்.

துக்கத்தின் ஆரவாரம் கொஞ்சம் அடங்கியவுடன், தன் மனைவியைப் பற்றித் தான் செய்திருந்த ஆலோசனை முடிவு பெற வழியில்லாமற் போனதினால், நாராயணனுக்கு அதிக மனவருத்த முண்டாயிற்று; தன் மாமனிடத்திலாவது மாமியிடத்திலாவது அவளை அனுப்புவது அசாத்தியமாகவே; வேறு எவ்விதமாகத் தனக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தை நீக்கிக் கொள்ளலாமென்பது தெரியவில்லை. தன் ஆயுள் உள்ள அளவும் அவளோடே கரிக்கும்படியாகி விடுமோவென்று பயந்தான்; அப்படி நேர்ந்துவிட்டால், அவளைக் கொன்று விடவாவது செய்கிறது; அல்லது பகிரங்கமாய்ப்பங்கப்படுத்தி விலக்கிவைத்துவிடுகிறது; அல்லது தான் எங்கேயாவது ஓடிப் போய் விடுகிறதென்று தீர்மானித்துக் கொண்டான். இச்சமயத்தில், அவள் விஷயத்தையும் பற்றித் தன் மாமனுக்கு எழுதிப், புண்ணில் எரியிட்டதுபோல் அவர் மனத்தை வருத்தப்படுத்த, அவன் நெஞ்சம் துணியவில்லை.

பதினைந்தாவது அதிகாரம்.

கோபாலனை விட்டுப் பிரிந்தது முதல், நாராயணனுக்குச் செலவுகள் அதிகமென்று முன்னமே கூறியிருக்கிறோம். வீட்டு வாடகையும் சில்லரைச் செலவுகளும் அதிகமானதும் தவிர, இன்றியமையாத சில புஸ்தகங்களும் வாங்க வேண்டியதாயிற்று. அவனுக்கு நன்கொடையாக பள்ளிக்கூடத்தாரால் அளிக்கப்படும் சொற்பப் பணம், இச்செலவுகளில் ஒரு பாகத்துக்குக்கூடப் போதவில்லை. சீதையம்மாள் சிந்துபூந்துறையில் இருக்கையில் சரீரப்பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தில் மீந்ததைச் சேகரித்துப், பத்திரப்படுத்தி வைத்திருந்த தெல்லாம், முதல் தடவை பட்டணத்துக்கு வந்தபொழுதே செலவாய்விட்டது. இப்பொழுது தன் மாமனிடத்திலிருந்து செலவுக்குப் பணம் வர மார்க்கம் இல்லாமற் போய்விட்டபடியால், செலவுக்கு என்ன செய்யலாமென்று யோசிக்கலானான். மறுபடியும், தான் எவ்விதமாயாவது சரீரப் பாடுபட்டுப் பிழைக்க வேண்டுமென்றே, சீதையம்மாள் எண்ணினாள். ஆனால், நாராயணனுக்கு, அது சிறிதும் சரியாகத் தோற்றவில்லை: தான் பெரியவனாகி, மனையாட்டியும் வீட்டுக்குவரப் பெற்றுப், பட்டணத்துக்கு வந்து உயர்ந்த பி. ஏ. பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருக்கையில், விருத்தாப்பியமான தன்னருமைத் தாயும், அதியௌவனமான தன் மனைவியும், தன்போலொத்தவாலிபருக்குக் கூலிக்குச் சமைத்துப் போடவும், பக்ஷணங்கள் செய்து விற்கவும், அவர்கள் தன்னைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் "கிளப்காரி மகன்" என்றும், "பக்ஷணக் கடைக்காரி மகன்" என்றும் பேசிக் கொள்ளவும், தன் மனைவி

அவர்களோடெல்லாம் பேச நேரிடுவதும் தவிர, அவர்களில் கெட்டகுணமுள்ளவர்கள் துடுக்காகப் பேசும் பரிகாசவார்த்தைகளையும், வெறித்துப் பார்க்கும் பார்வைகளையும், செய்யும் ஜாடைகளையும் அவள் பொறுத்துக் கொண்டிருக்கவும், தனக்கு இருபது வயதுக்கு மேலாயும் தான் இவ்வாறு பிழைக்கவும் நேரிடுவதைப் பார்க்கினும், வேண்டுமானால் தன் படிப்பையாவது விட்டு விட்டுத் தானே கூலி வேலை செய்தாவது, தன் குடும்பத்தைச் சம்ரக்ஷணை செய்வதுடன், தரித்திரத்தின் வலைப்பட்டு மறுகும் தன் மாமனுக்கும் ஏதாவது சொற்பப் பணமாவது கைகூடிய பொழுது அனுப்புவது சிலாக்கிய மென்று எண்ணினான்.

இத்தீர்மானத்துடன், வீட்டிலுள்ள செலவுகளை முதலில் சுருக்க யோசித்து, மாதம் ஏழு ரூபா வாடகை கொடுத்துத் தான் குடியிருந்து வந்த வீட்டை விட்டு, வேறொரு சிறு முடுக்கில், இரண்டு சிறு அறைகள் மட்டுமுள்ள குகை போன்ற ஒரு வீட்டை மாதம் மூன்று ரூபாவுக்குத் திட்டம் செய்து கொண்டு, அவ் வீட்டுக்குக் குடிப்போனான். அன்றியும், தன் தாய் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல், காலையில் 'காப்பி' யும் இரவில் ஊண் கழித்த பின் பாலும் தான் சாப்பிட்டு வந்த வழக்கத்தை, முற்றிலும் நிறுத்தி விட்டான். தினம் சிற்றுண்டியும் பேரூணுமாக ஐந்து வேளை உண்டு வந்ததை இரண்டு வேளையாக்கி விட்டான். அவன் செய்வதைக் கண்டு, பத்மாவதியும் அவ்வாறே செய்யத் தலைப்பட்டவள், தன் மாமியின் கோபத்துக்குப் பயந்து, விசனத்துக் கிரங்கி, அவள் மட்டும் மூன்று வேளை சாப்பிட்டு வந்தாள். நாராயணன், இரண்டு வேளைச் சாப்பாடுகூட, மனோவிசாரத்தால் ஊண் செல்லாமற், கொஞ்சமாய்ச் சாப்பிட்டதால், வேண்டு

மென்றே அவ்வாறு வயிற்றையும் சுருக்குகிறானே வென்று, அவன் தாயும் மனைவியும் அஞ்சினார்கள். இன்னும் பல விதமாகவும் செலவுகளை யெல்லாம் சுருக்கிக் கணக்குப் பார்த்ததில், மாத மாதம் தன் நன்கொடையைத் தவிர ரூபா பத்துக்கு மேல் வேண்டியதாயிற்று. தன் படிப்பை விட்டு விடாமலே இப்பணத்தைத் தேடமுயன்று, பல விதமாய் யோசித்துப், பல துறைகளில் விசாரித்துக், கடைசியில், ஒரு தனவான் வீட்டில், தினமும் மாலை ஆறு மணி முதல் ஒன்பது மணிவரையும் மூன்று சிறு பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்தால் ஐந்து ரூபா கிடைக்கு மென்றறிந்து, அவரிடத்திற் சென்று தன் குறையைத் தெரியப்படுத்திக் கொள்ள, அவர், அவன் புத்திக் கூர்மையையும், ஒழுக்க வணக்கத்தையும், வார்த்தை நயத்தையும் கண்டு மெய்ச்சி அவன் வறுமைக் கிரங்கி, முன் வாத்தியாருக்கு ஐந்து ரூபா கொடுத்து வந்ததாகவும், நாராயணன் திருப்தியாய்ச் சொல்லிக் கொடுத்தால், மாதம் ஏழு ரூபா கொடுப்பதாகவும் சொன்னார். அவ்வாறே வேலையில் அமர்ந்து வேலை பார்த்து வந்தான். அக்கனவான் வீடு, தன் வீட்டிலிருந்து இரண்டு மைல் தூரத்துக்கப்பால் இருந்த படியால், நாராயணன், தினமும் ஐந்து மணிக்கே இராப்போஜனத்தைக் கழித்து விட்டுப், புறப்பட்டுப் போய்விடுவான்; இரவில் ஒன்பது மணிவரையும் அவர் மக்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுத்து விட்டுச், சில நாள்களில் பத்துமணி சுமாருக்கு வீட்டுக்குத் திரும்பி வந்து, தெருத்திண்ணையில் படுத்துக்கொள்வான்; பல நாள்களில், அவர் வீட்டு விளக்கிலேயே ஒன்பது மணிக்குப்பின் இரண்டு, மூன்று மணிநேரம் தன் பாடங்களைப் படித்து விட்டு, அங்கேயே படுத்துக் கொள்வான். பகலில், பொதுவாய்ப் பள்

ளிக் கூடத்தில் புஸ்தகசாலையிலிருந்து வாசித்துக் கொண்டிருப்பான்; வீட்டில் அதிக நேரம் இருக்கிறதுமில்லை. யாருடனும் அதிகமாய்ப் பேசுகிறதுமில்லை. தக்க சந்தர்ப்பம் பார்த்துப், பலதரம் அவன் மனைவி அவனுடன் அவகாசமாய்ப் பேசித் தன் கற்புத் தூய்மையையும் காதலுண்மையையும் மெய்ப்பிக்க முயன்றும், அவன் சிறிதும் அவள் பேச இடங் கொடுக்கவில்லை. நாளுக்கு நாள் அவளும் சீதையம்மாளும், மழை முகம் காணாத பயிரைப்போல், உயிர் குன்றிச் சோர்ந்து வந்தார்கள்.

நாராயணனைத் தன் மக்களுக்கு ஆசானாக வைத்துக் கொண்ட கனவான், அவன் வறுமையை உத்தேசித்து, முதல மாதச் சம்பளத்தை முன்னதாகவே கொடுத்தார். அவன் அதை வாங்கிக்கொணர்ந்து, கையில் மிச்சமாயிருந்த சொற்பப் பணத்தையும் அதையும் கொண்டு தான் மாதம் முழுதும் கழிக்கவேண்டுமென்று சொல்லித், தன் தாய் கையில் கொடுத்தான். அவள் தன்னாலென்றமட்டும் கணக்குப் பார்த்தும், அப்பணம் ஒரு மாதத்துக்குப் போதாததாக, அதைத் தன் மகனுடன் சொல்ல மனமின்றி, அவசியமான சாமான்களை மொத்தமாய் வாங்கிவைத்துக் கொண்டு, செட்டாய்ச் செலவு செய்துவந்தாள். செலவுக்குப் பணத்தைச் சரிக்கட்டும் பொருட்டு, அப் புண்ணியவதி, ஸ்திரீகள் பட்டினியாயிருந்து காக்கவேண்டிய விரதங்கள் அனைத்தையும், வெகு சிரத்தையுடன் அநுஷ்டிக்கத் தொடங்கினாள்; இவ்விதமாக, அவள், ஞாயிற்றுக்கிழமை இரவும், திங்கட்கிழமை முழுவதும், வெள்ளிக்கிழமை இரவும், சனிக்கிழமை இரவும் எவ்விதமான ஆகாரத்தையும் நிறுத்தி விட்டதும் தவிர, சதுர்த்தி, சஷ்டி, தசமி, அமாவாசை முதலிய திதிகளின் இரவிலும், ஏகா

தசி முழுவதும் ஒன்றும் சாப்பிடுகிறதில்லை. தன் மகனையும், கருவுற்றிருக்கும் மருமகளையும், அவர்கள் வயிறு வாடாமல், தன்னால் கூடியவரையும், பசித்த வேளையில் புசிக்கும்படி உபசரித்து வந்தாள். அவள் மட்டும், ஒருநாளும் இல்லாத படி வெறும் நாட்களில்கூட விரதமென்று பட்டினியிருக்கத் தலைப்பட்டாள். தன் மகன் சொல்லியபடி எவ்விதமாவது அப்பணத்தைக் கொண்டு அம்மாதச் செலவைக் கழித்துவிட வேண்டுமென்பதும், ஏதாவது ஒருபொருள் 'இல்லை' என்ற சத்தம் தன் மகன் காதில் விழுந்து, அவன் வருத்தமுறலாகாதென்பதும், அவள் கருத்து. இதை நன்குணர்ந்த பத்மாவதி, தனக்குப் பசிக்கவில்லை யென்றும், வயிற்று நோவென்றும், தன் மாமி வெளியில் போயிருக்கும்பொழுது தான் சாப்பிட்டு விட்டதாகவும், பொய் சொல்லித், தன் வயிற்றிலுள்ள சிசுவுக்குக்கூட இரங்காமல், சில வேளைகளில், தானும் வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு பட்டினியாயிருந்தாள்; அவளுக்குக் கர்ப்பத்தால் அப்பொழுது உண்டாயிருந்த "மசக்கை," பட்டினிக்குச் சௌகரியமாயிருந்தது. அதிகப் பட்டினியாலும், விருத்தாப்பியத்தினாலும், தன் மாமி சோர்வடைவதைக் காணச் சகியாமல், அதையறியாத தன் புருஷனிடத்தில் அதைச் சொல்லவேண்டியது தன் கடமையென்று கருதியும், அவன் இன்னும் வறுமையை நீக்க ஏதாவது வழி தேடுவானென்று நினைத்தும், அவள், சீதையம்மாளில்லாத சமயம் பார்த்துக், கணக்குப் பார்த்ததில் செலவுக்கு இன்னும் இரண்டு ரூபா வேண்டியிருந்தபடியால், அம்மட்டுச் செலவைச் சுருக்கும்பொருட்டுத் தன் மாமி அடிக்கடி பட்டினியாயிருக்கிறாளென்று, தன் கணவனிடத்தில் சொன்னாள். அதைக்கேட்கச் சகியாமல், நாராயணன், கண்ணீரைத்துடைத்

துக் கொண்டு வெளியே போய்விட்டான். அன்று மாலை, அவன், தன் தாயிடத்தில் மூன்று ரூபா கொண்டு வந்து கொடுத்தான். அது எதென்றுகேட்டதற்கு, அவன் சரியாய்ப் பதிற் சொல்லவில்லை. தான் சொன்னவுடன் மூன்று ரூபா எங்கிருந்து வந்ததென்று பத்மாவதி நெடுநேரம் யோசித்துப், பின்பு, அவன் வெளியே போகையில் சில புஸ்தகங்களைக் கையிலெடுத்துச் சென்றதை நினைத்து, அவன் சாப்பிட்டு விட்டுப் போனபின், அவள் புஸ்தகங்களை துடைப்பதுபோற் பரிசோதிக்க, எப். ஏ. பரீக்ஷை ஒப்பேறினவுடன், தமிழ்ப் பயிற்சிக்கு வெகுமதியாக ஹிந்து கலாசாலையில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட கம்ப ராமாயணப் புஸ்தகங்கள் இரண்டும் இல்லாமலிருப்பதைக்கண்டாள். அவளுக்கு உடனே நெஞ்சம் திடுக்கிட்டது. வெகுமதியாய்க் கொடுக்கப்பட்ட புஸ்தகங்கள் என்ற விசேஷத்தைத் தவிர, தன் கணவனுக்குக் கம்பராமாயணத்தின் மேலுள்ள அளவற்ற வாஞ்சையையும், செய்யுள் ஓரங்களில் அவன் குறித்திருந்த வியாக்கியானங்களைப்பற்றி அவன் அடிக்கடி பெருமை பாராட்டுவதையும்; சில சில செய்யுள்களை வாசிக்கும்பொழுதெல்லாம் அவன் ஆநந்தக் கூத்தாடிக் கொக்கரித்து உளமகிழ்ச்சியில் புஸ்தகத்தையே முத்தமிட்டுக் கொள்வதையும், பாட்டுக்களைப் பிறர்க்கு வாசித்துப் பொருள் உரைக்கும்பொழுது, அவன், தேகபரவசமாய், ஆவேசங்கொண்டாற்போல்,பேசுவதையும்; தனக்குக்கம்பனிலும் அந்தரங்கமான சிநேகிதனே கிடையானென்றும், தன் மனைவி, தாய், மாமன் முதலியவர்கள் மேலுள்ள பாசமும் விசுவாசமும் கம்பன்மேலுள்ள காதலுக்குக் கீழ்ப்பட்டது தானென்றும், கம்பனில்லாத சுவர்க்கம் பவர்க்க மென்றும், கம்பராமாயணம் கையிலிருந்தால் பவர்க்கமும் சுவர்க்கமா

கத் தோன்றுமென்றும் அவன் சொல்லிக் கொண்டாடுவதை யும்; அவள் அடிக்கடி கண்டும் கேட்டும் அறிந்திருந்தபடி யால், அப்புஸ்தகத்தையே கொண்டு போய் விற்று விடும்படி நேரிட்டதற்காக, அவன் அடையக்கூடும் மனசஞ்சலத்தை, அவள் யூகித்தறிந்து நடுங்கினுள். எப்படியாவது, தன் கண வனை இவ்வறுமைக் கொடுமையினின்றும், தன்னுல் முடியுமா னுல், நீக்கக் கருதி, நெடுநேரம் வரை யோசித்து, கடைசியில் ஓர் உபாயத்தை நினைத்து, அவ்வாறு செய்யத் தீர்மானித்துக் கொண்டாள்.

பதினுருவது அதிகாரம்.

இதற்குள் விடுமுறை கழிந்து பள்ளிக்கூடம் திறக்கப் பட்டது. பரீக்ஷையில், நாராயணன், வகுப்பில் மூன்ருமவ னுக ஒப்பேறி, மேல் வகுப்புக்கு எடுக்கப்பட்டான். கோபா லனே, யாவரினும் கடைசியாகப் பரீக்ஷையில் தவறிவிட்ட தால், முன் வருஷத்து வகுப்பிலேயே வைக்கப்பட்டான். இவ்விடுமுறையில், தான் ஊருக்குப் போகுமுன் தன் சிநேகி தனை நேரிற் பார்க்க முடியாமற்போனதையும், தன் வீட்டு விசேஷங்களையும், குடும்பச்சொத்தெல்லாம் தங்களுக்குள் பாகமாய் விட்டதையும், இன்னும் விசேஷமான ஊர்ச் சமா சாரங்களையும்பற்றிக், கோபாலன், நாராயணனுக்கு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதியும், நாராயணன் ஒன்றுக்கும் பதி லெழுதவில்லை; கடைசியில், தான் பட்டணத்துக்குத் திரும்பி வரும் தேதியைக் குறிப்பிட்டு, அன்று ரயில் ஸ்டேஷனில், தன்னை வந்து சந்திக்கும்படி யெழுதினுன்; அதையும் நாரா யணன் கவனிக்கவில்லை. இது நிற்க.

வறுமைக் கொடுமையை நீக்குவதற்குப் பத்மாவதி செய்த யோசனை யென்னவென்றால், தன் நகைகளை அடைமானம் வைத்து, அல்லது விற்றுப் பணம் வாங்குவதே. சாதாரணமாய் நகைகளின்மேல் ஸ்திரீகளுக்குள்ள வாஞ்சையிலும் பதின் மடங்கு வாஞ்சை, அவளுக்கு மிருந்தது. ஆனால், தன் புருஷனுக்கு நகைகளின் மேல் விருப்பமில்லை என்று தெரிந்தது முதல், அவளும் தன் நகைப்பயித்தியத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தணிக்க முயன்று தணித்து வந்ததும் அன்றி, இன்றியமையாதவைகளாக நினைக்கப்படும் சொற்ப நகைகளைத் தவிரத், தன் தகப்பனிடத்தில் கொஞ்சியும் கெஞ்சியும் சண்டையிட்டும் தான் செய்து போட்டுக் கொண்ட மற்ற நகைகளை யெல்லாம் அணிந்து கொள்ளாமல், எப்பொழுதும் தன் பெட்டியிலேயே கழற்றி வைத்திருந்தாள். இப்பொழுது, வயிற்றுச் சோற்றுக்கில்லாமல் கஷ்டப்படுகையில், வட்டி முடக்கமாய் நகைகளைப் பெட்டியில் வைத்திருப்பது, வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவதுபோலாகும் என்று கருதித், தன் புருஷனுக்கு வரும் நன்கொடைப்பணமும் கனவான் வீட்டுச் சம்பளமும் தவிர, இன்னும் பி. ஏ. பரீக்ஷைக்குப் படிக்க வேண்டிய ஒரு வருஷச் செலவு முழுவதுக்கும் நூறு ரூபாயிருந்தால்போது மாதலால், தன் புருஷனுக்கு எப்பொழுதும் வெறுப்பையுண்டு பண்ணும் முருகையும் ஜெபமாலையையும் விற்று நூறு ரூபாய் வாங்கி, வறுமை நோயைத்தீர்க்க உத்தேசித்தாள். மருமக்கள் சீதனமாகக் கொண்டுவந்த பண்டங்கள் ஒற்றையும் அழித்து மாற்றவும் கூடாது, விற்கவும் கூடாதென்ற கொள்கையையுடைய தன் மாமி, ஒரு பொழுதும் இதற்கு இணங்கமாட்டாளென்பது, அவளுக்கு நன்றாய்த்

தெரியும். அன்றியும், பட்டினியாயிருக்கும் பொழுதும், மருமகள் வீட்டுச் சீதன நகையை விற்று வயிறு பிழைத்தல் இழிவென்று நினைக்கக்கூடும்; ஆனால் தன் புருஷனுக்கு இவ்விதப் போலிக் கொள்கைகள் ஒன்றுமே கிடையது. "அர்ச்சுனன் போல் அகமுடையா னிருக்கையில் அஞ்ஞானம்போல் தாலியென்னத்துக்கு?" என்று அவன் அடிக்கடி சொல்வதுண்டு. அவனுடன் சொல்லி விற்கச் சொல்லலாமென்றால், அவனிப்பொழுது முகங்கொடுத்துப் பேசுகிறதில்லை; அன்றியும், அவனுக்குத் தெரியாமலே நகையைவிற்றுத், திடீரென்று அவனிடத்தில் பணத்தைக் கொடுத்தால், அவன் நகையை விற்றதற்காகவும், தன் வறுமைக்காக அப்படிச் செய்து, சமயத்தில் உதவி செய்ததற்காகவும், சந்தோஷத்தை யடைந்து, தன் மனைவியின் மெய்க்காதலை யுணர்ந்து, அவள்மேலுள்ள வீண் சந்தேகத்தை யொழித்து, மறுபடியும் முன்போலவே அவளுடன் களித்திருப்பதும் தவிர, நகையை விற்றதினால் அவன் தாய்க்குண்டாகும் விசனத்தையும் அவன் ஒரு நிமிஷத்தில் மாற்றிவிடுவான். இவ்விதமாக, வறுமை நோயைக் களைவதுடன், தன் புருஷனுடைய இழந்த காதலையும் மீட்பதற்கு இது நல்ல உபாயமாகும். மேற்கூறியபடி பத்மாவதி யோசித்துக்கொண்டு, சில சந்தேகங்களால் மனந்துணியாமல் பயந்து கொண்டிருக்கையில், பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. பள்ளிக்கூடம் திறந்ததுமுதல், நாராயணன் பாடு முன்னிலும் கஷ்டமாய்விட்டது. அவன் காலையில் ஒன்றும் சாப்பிடுகிறதில்லை; பத்து மணிக்கு ஆகாரம் செய்துவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போவான்; இடைப் பகலில் வீட்டுக்கு வருகிறதுமில்லை, ஒன்றும் சாப்பிடுகிறதுமில்லை; மாலையில் பள்ளிக்கூடம் கலைய ஐந்து மணியாகும்; அதற்குப் பின் வீட்

டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டுப் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஆறுமணிக்குட் போக நேரம் போதாமையால், பள்ளிக்கூடத்திலிருந்தே நேராய் அக்கனவான் வீட்டுக்குப் போய்விடுவான்; பின்பு, காலையில் பத்து மணிக்குச் சாப்பிட்டவன், இரவில் பத்து மணிக்குத் திரும்பி வந்து, இரண்டாவது வேளை சாப்பிடுவான். அவன் நிமித்தம் அவன் தாயும் முன்னிலும் அதிகமாய்ப் பட்டினியாயிருந்தாள். இதை இரண்டு மூன்று நாள் பார்த்துத், தன் கணவன் தேகமும் மாமி தேகமும் நாளுக்கு நாள் மெலிந்து வாடிச் சோர்வதைக்கண்ட பத்மாவதி, எதைது எவ்விதமாலும் தன் உத்தேசத்தை நிறைவேற்றத் துணிந்து, தன் வீட்டுக்கு அடுத்த வீட்டிலுள்ள தன் தோழியாகிய வள்ளியம்மையென்ற செட்டிப் பெண் மூலமாய் நூறு ரூபாய் பெறுமான தன் முருகையும் ஜெபமாலையையும், ஒருவரும் அறியாமல் விற்க ஏற்பாடு செய்தாள்.

ஞாயிற்றுக் கிழமைகளில், நாராயணன், படிப்புச் சொல்லிக்கொடுக்க கனவான் வீட்டுக்குப் போகிறதில்லை. வாரந்தோறும் அந்த ஒரு நாள் மாலை மட்டும் அவன் கடற்கரையில் போயிருந்து தன் மனோரதப்படியெல்லாம் களித்துக் கொண்டும் துக்கித்துக் கொண்டும் இருப்பான். அதுபோலவே, பள்ளிக்கூடம் திறந்த வாரத்துக் கடைசியில் வந்த ஞாயிற்றுக்கிழமையன்று மாலையிலும், நாலுமணி சுமாருக்கே, அவன், ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு கடற்கரைக்குப் போய்விட்டான். ஒன்றும் வாசிக்க முடியாமல் நெடுநேரம் வரை தனக்கு நேர்ந்த கொடிய விதியையும் வறுமையையும் பற்றிப் பலவாறாய் யோசித்துத் துக்கப்பட்டுக் கொண்டிருந்தான்: கடைசியில் மன ஏக்கமும் துயரமும் பொறுக்க மாட்

யாமல் உலாவித்திரிந்து துக்ககரமான எண்ணங்களை மாற்ற நினைந்து, எழுந்து, யோசனையில் ஆழ்ந்தபடியே, நடக்கத் தொடங்கினான். கொஞ்ச நேரத்தில் தானாகவே வீட்டை நோக்கிச் செல்வதையறிந்து, திரும்பியும் கடற்கரைக்குப் போகாமல் வீட்டுக்கு வந்தான். தன் வீடிருக்கும் முடுக்கின் முக்குத் திரும்பியவுடன், தன் வீட்டிலிருந்து கோபாலன் வெளியே வந்து, தன்னைப் பாராமல் தான் செல்லும் திசையை நோக்கியே வீட்டுக்கு அப்பால் போவதைக் கண்டான். அன்று காலை ரயிலில் வருவதாகக் கோபாலன் தனக்கு நாலு நாள்களுக்கு முன் எழுதியிருந்தது, உடனே ஞாபகத்துக்கு வந்தது. கோபாலனைக் காண விருப்பமின்றி, அவன் எதிர் முக்குத் திரும்பி அடுத்த தெருவில் போமளவும் தான் மறைந்திருந்து விட்டுப், பின்பு நாராயணன் விரைவாய்த் தன் வீட்டுக்குப்போனான். அவன் போகையில், வீட்டின் வாசற் கதவு அடைத்து, உள்ளிருந்து தாளிடப்பட்டிருந்தது. வாசலருகே செல்லும் பொழுதே, பத்மாவதி, வீட்டுக்குள்ளிருந்து,

"இதினமே சுதினமு"

என்னும் கீர்த்தனையைச் சந்தோஷமாகப் பாடிக்கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது. கதவு தாளிட்டிருந்ததாலும், பத்மாவதி உல்லாசமாய்ப் பாடிக்கொண்டிருந்ததாலும் தன் தாய் வீட்டிலில்லை யென்று தீர்மானம் பண்ணிக் கொண்டான்; தானும் தன் தாயும், துயரக் கடலில் ஆழ்ந்திருக்கப், பத்மாவதி மட்டும் உல்லாசமாய்ப் பாடுவது, சமயம் பார்த்துக் கோபாலன் அவளுடன் தனியாய்ப்பேசிக் கூடிக் குலாவி விட்டுப்போவதினால் தான் இருக்கவேண்டு மென்று, அவன் உடனே எண்ணிக் கொண்டான். அவனுக்குண்டான கோபத்துக்கும் விசனத்துக்கும் அளவு சங்கையில்லை. அவன்,

உடனே கதவைப் பலமாய் இடிக்கப், பத்மாவதி, பாட்டை நிறுத்தி விட்டுத், தன் மாமி கோவிலிலிருந்து திரும்பி விட்டா ளென்றெண்ணிக், கதவைத் திறந்தாள். அப்படிக்கின்றித்,திடீ ரென்று, தன் கணவனையும், அவனுடைய கோபம் ஜொலிக் கும் முகத்தையும் அவள் கண்டவுடன், கொஞ்சம் திடுக் கிட்டு, வெட்கித்தூர நின்றாள். அவள் செய்கை, நாராயண னுடைய சந்தேகத்தைப் பலப்படுத்தியது. பின்பு அவர் களுக்குள் இச்சம்பாஷணை நடந்தது.

நாராயணன்:—அம்மா எங்கே?

பத்மாவதி:—அம்மாவா, கோவிலுக்குப் போயிருக் கிறார்கள். நீ வெளியிலே போய்க் கொஞ்ச நேரத்துக் கெல் லாம் போனார்கள். இப்பொழுது நீ கதவு தட்டின பொழுது, அம்மா தான் வந்து விட்டார்களாக்கும் என்று நினைத் தேன்.

நாராயணன்:—பின்னை, அந்தப்பயல் இங்கே எங்கே வந்தான்? யாரிடத்தில் பேசிக்கொண்டிருந்தான்?

பத்மாவதி:—எந்தப் பயல்? இங்கே யாரும் வரவில்லையே. நான்தான் இன்றைக்கு ஒரு சந்தோஷமான சங்கதி நடக்கப் போகிறதை நினைத்து, ஏதோ பாடிக் கொண்டிருந்தேன்.

நாராயணன்:—என்ன சந்தோஷமான சங்கதி?

பத்மாவதி:—“இதோ பார்: இனிமேல் நாம் ஒருவரும் கஷ்டப்படவேண்டாம். இந்த வருஷச் செலவுக்கு முழு வதும் போதும். நூறு ரூபா இருக்கிறது” என்று சொல் லிக்கொண்டே, தன் மடியிலிருந்து ரூபாய்ப் பையை எடுத்து அவன் கையில் கொடுத்தாள்.

நாராயணன்:—இதேது உனக்கு?

பத்மாவதி:—நீ தான் சொல்லு பார்ப்போம்; உனக்கு ஜோஸியம் தெரிகிறதா பார்ப்போம்; நான் சொன்னால் என்ன தருவாய்? (நாராயணனுக்கு மேலுக்கு மேல் கோபமே வளர்வதைக்கண்டு பயந்து) நீ கோபித்துக் கொள்ளாதே. நான் திருடவுமில்லை; அவிசாரியாடவுமில்லை. நீ எப்பொழுதும் வெறுத்துக் கொண்டிருந்த ஜெபமாலையையும் முருகையும் விற்று விட்டேன் : அது தான் ரூபாய்.

நாராயணன்:—கோபாலன் எத்தனை மணிக்கு இங்கே வந்தான்?

பத்மாவதி:—கோபாலன் யாரு? கோபாலண்ணா ஊரிலிருந்து வந்துவிட்டாரா? கல்யாணி மன்னிவந்திருக்காளா? அவர் இங்கே வரவில்லையே.

நாராயணன்:—பத்மி! இதோ பார்: நான் சொல்வதை நன்றாய்க்கேள்: (வாசற்கதவைத்தாளிட்டு விட்டு) இத்தனை நாள் நான் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன்; இன்று கண்ணாரக் கண்டுவிட்டேன். இனிமேல் நீ ஒளிக்கமுடியாது. உள்ளதை எல்லாம் சொல்லிவிடு. என் கோபம் உனக்குத் தெரியாது; நீ திவலையேனும் மறைத்தால், இந்த நிமிஷத்தில் உன்னைக் கொன்று விடுவேன்; இந்த அவமானத்துக்கு அப்புறம், என்னுயிர் எனக்குப் பெரிதல்ல. முதலில், இன்றைக்கு அந்த மஹாமித்திரத் துரோகிப்பயல் எப்பொழுது வந்தான்; உனக்கு இந்த ரூபாய் மட்டும் தான் கொடுத்தானா, இன்னும் ஏதாவது கொடுத்தானா? நடந்ததைச் சொல்லிவிடு.

பத்மாவதி:—(கண்ணீர் பெருக, அங்கமெல்லாம் நடுங்கி வாய்குழற) “ஐயோ! இதென்ன அநியாயம்! நான் ஒன்றும் அறியேனே. நாமெல்லாம் பணமில்லாமல் கஷ்டப்படுகிறதையும், நீ வேலைக்குச் சாதமில்லாமல், அலைந்து திரிந்து நாளுக்கு

நாள் மெலிவதையும் பார்க்கச் சகியாமல், அம்மாவிடத்தில் சொன்னாற்கூடச் சம்மதிக்க மாட்டார்களென்று நினைத்து, ஒருவரையும் அறியாமல், என் தோழி வள்ளியம்மை மூல மாய் முருகையும் ஜெபமாலையையும் விற்றுப், பணம் நூறு ரூபாய், இப்பொழுது தான் அம்மா கோவிலுக்குப் போக விட்டு வாங்கினேன். உன்னிடத்தில் முன் சொல்லாமல் திடீ ரென்று ரூபாவைக்கொடுத்தால், நீ சந்தோஷப்படுவாய்; என் பேரிலுள்ள சந்தேகங்களும் தீரும்; நான் அந்தகரண சுத்தி யாய் உன்பேரில் வைத்திருக்கும் ஆசையும் பக்தியும் ருசுவா கும்; நீ எப்பொழுதும் குளுகச்சி போலிருக்கு, துலுக்கச்சி போலிருக்கு, என்று கேலி பண்ணுவதற்குக் காரணமாயிருந்த நகைகளும் ஒழியும்; எனக்கு இன்று முதல் நல்லகாலம் பிறந்து, எல்லாரும் முன்போல் சுகமா யிருக்கலாமென் றெண்ணி, இப்படிச் செய்தேன். நீ சொல்லுகிறது, கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலிருக்கே. கோபாலண்ணு பட்டணத்துக்குத் திரும்பி வந்ததே எனக்குத் தெரியாதே. நீ வேணுமானல் அம்மாவைக்கொண்டு, நான் நகைவிற்றது பொய்யோ நிசமோ என்று, வள்ளியம்மையிடத்தில் கேட்கச் சொல். என் பெட்டியில் அந்த நகைகள் இருக்கிறதோ என்று சோதித்துப்பார். உன் சந்தேகத்தை நீக்கிக்கொண்டு, இந்த ரூபாவை வாங்கிக்கொள்." என்று, பன்னிப்பன்னிச் சொன்னாள்.

நாராயணன், வெகு கோபமாய், "ஆம்படையானை வைத்துவிட்டு அவிசாரியாடினது போதாதென்று, கள்ளாம் படையான் கொடுத்த பணத்தையும் எனக்குப் பிச்சை கொடுக்க வருகிறாயோ! நீலி!" என்று, பணப்பையை அவள் முகத்தில் எறிந்து, "வள்ளியம்மையாரு, வள்ளியம்மை? அவ

ளும் உன்னைப்போலொரு தேவடியாள்போலிருக்கு? அந்தப் பயலுக்கு அவளும் உண்டுபோலிருக்கு. ஏகோதிஷ்டக்காரனுக்குச் சவண்டிக்காரன் சாக்ஷி என்கிறதுபோல, உனக்கு அவள் சாக்ஷியாக்கும். நீ உள்ளதைச் சொன்னால் பிழைத்தாய்; இல்லாவிட்டால் உன் உயிரை வாங்கி விடுவேன்” என்று சொல்லி, இங்கே எழுத முடியாத கெட்ட வார்த்தைகளைச்சொல்லி வைதுகொண்டு, வெறிகொண்டாற்போல, அவளைத் தலைமயிரைப் பிடித்திழுத்து, அடித்துக் கீழே தள்ளிக், காலினால் இரண்டு மூன்று தரம் உதைத்தான். இதற்குள் பத்மாவதிக்கு மூர்ச்சை போய்விட்டது. நாராயணன், அவளை அப்படியே போட்டுவிட்டு, வாசற்கதவைத் திறந்துகொண்டு, வெளியே வந்து, தெருத்திண்ணையில் பித்துப்பிடித்தவன்போல உட்கார்ந்திருந்தான். பத்மாவதிக்கு மறுபடியும் ப்ரஞ்ஞைவர, ஒரு நாழிகை சென்றது. அவளால் எழுந்திருக்க முடியவில்லை. அடிவயிற்றைக் குறட்டினாற் பிடுங்கியெடுப்பதுபோலே நோவுண்டாயிற்று. கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு, ஒரு ஓரமாய்ப் படுத்திருந்தாள். நிமிஷத்துக்கு நிமிஷம் வயிற்று நோவு அதிகமாகியும், அவள் வாய்விட்டலருமல், பல்லைக் கடித்துக்கொண்டு, சகித்துக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்துக்குப் பின், சீதையம்மாள் கோவிலிலிருந்து திரும்பி வருகையில், திண்ணையிலிருந்த தன் மகனைப் பார்த்து, அவன் விசனமாயிருப்பதன் காரணம் விசாரிக்க, அவன் மௌனமாயிருந்தான். வீட்டுட்போனவுடன், பத்மாவதியிருக்கும் நிலையைக் கண்டு, மனம்பதறி, அவளைக் கேட்டதற்கு, அவள் தனக்கு அடி வயிறு நோவதாகவும், அதனால் தான் படுத்திருப்பதாகவும், அழுவதாகவும், வேறொன்றும் நடக்கவில்லை யென்றும் சொல்விட்டாள்.

சீதையம்மாள் தனக்குத்தெரிந்த வைத்தியமெல்லாஞ் செய்தும், ஒன்றும் பயன்படாமல், அன்றிரவே பத்மாவதிக்கு வாய்த்திருந்த கருப்பம் சிதைந்து, சிசு விழுந்துவிட்டது.

பதினேழாவது அதிகாரம்.

முந்திய அதிகாரத்தில்கூறிய துர்ச்சம்பவத்தால், பத்மாவதி பட்ட கஷ்டங்களையும், அடைந்த துயரத்தையும், விவரித்தல் துக்கப்பெருக்கே. முதலிரண்டு நாட்களுக்கு, நாரயணன், ஒன்றையும் கவனியாமல், உபேக்ஷையாயிருந்தான்; ஆனால் சீதையம்மாள் அடைந்த கவலையையும் மன வருத்தத்தையும் அதனால் அவள் செய்த அலட்டுதலையும் பொறுக்க முடியாமலும்; தன் மனைவி எவ்வளவு கெட்டவளாயிருப்பினும், அல்லது தன் மனைவியாகவே இல்லாமல் ஒரு அநாதைப் பரத்தையாயிருப்பினும், வியாதிக்காரரிடத்தில் பகை பாராட்டி வர்மம் செலுத்துவது அதர்மமென்றெண்ணியும், இவ்வளவு நடந்ததற்குப் பின்பும் கூடத், தன் மனதுள்ளூர இருந்து தன்னை வாதிக்கும் வாஞ்சையின் தூண்டுதலாலும், தன் மனைவிக்கு வைத்திய உதவியைத்தேட முயன்றான். பல நாள் அநுபவமுள்ள சீதையம்மாள், தன் மருமகளுக்கு நேரிட்டிருக்கும் உபாதிக்கு இங்கிலீஷ் வைத்தியமே நல்லதென்று அறிந்து, என்ன செலவானாலும், நகையை விற்றாகிலும், சிறந்த தேர்ச்சியுடைய வைத்தியன் உதவியைத் தேட வேண்டுமென்று, தன் மகனுக்குப் போதித்தாள். முந்திய அதிகாரத்தில் நடந்த சண்டையும் அதன் ஏதுவும், அவளுக்குச் சிறிதும் தெரியாது; தற்செயலாய்த் தன் மருமகள் கருப்பச்சிதைவுண்டானதாகவே அவள் எண்ணியிருந்தாள். தன்

மனைவிக்குத் தன் மூலமாயுண்டான துர்ச்சம்பவத்தின் கொடுமையும், உயிருக்கே அபாயம் விளையக்கூடிய தன்மையும் நாராயணனுக்கு நன்றாய்த் தெரியும்; இதன் நிமித்தமாயாவது அவள் இறந்துவிட்டால் நலமென்று, அவன் கோபம் மிகுந்த வேளைகளில் அபூர்வமாய் நினைத்த போதிலும், அவள் அவ்வாறு இறந்துவிட்டால், சட்டப்படிக்கும் நீதி சாஸ்திரப்படிக்கும், அவள் கொலைக்குத் தானே உத்தரவாதி என்பதை, அவன் உணர்ந்திருந்தது மன்றி அவள் மரணத்தைப்பற்றி விவரமாய் நினைக்குந்தோறும், அவன் மனம் பதறிற்று. தக்கவைத்தியரைக்கொண்டு பார்க்கச் செய்ய வேண்டுமானால், ஐம்பது, அறுபது ரூபாவுக்குக் குறையாமல் செல்லும்; அவனிடத்திலோ, ஐம்பது, அறுபது, அணுவுக்குக் கூடவழியில்லை. கடன் வாங்க ஆஸ்பதமுமில்லை; கடன் கொடுப்பாருமில்லை; தன் தாய் சொல்லியபடி நகையை விற்றுப் பணம் சேகரிக்கலாமென்றால், தன் மனைவி எவ்வளவு கெட்டவளா யிருப்பினும், வியாதிக்காலத்தில் பகை பாராட்டாமல் அவளைப் பேணிச் சௌக்கியப்படுத்த வேண்டியது தன் கடமையாயிருக்க, அதன் பொருட்டு, அவள் நகையையே விற்றுச் செலவிடல், அவன் மனத்துக்கு ம்கவும் இழிவானதாகவும், அகௌரவமாகவும் தோன்றிற்று; இது இப்படியாக, நகையை விற்று வாங்கினதாக அவள் சத்தியஞ் செய்த போதிலும், அவளுக்குச் சோர நாயகன் கொடுத்ததாகவே தான் நம்பும் நூறு ரூபாயில் ஒரு பைசாவாவது எடுத்துச் செலவழித்தலோ, ஒரு வழியிலும் இசையாத விஷயம். இவ்வாறு பல விதமாய் யோசித்துக், கடைசியில், தன் மனைவியின் நோவையும் அதற்காக அவளுக்கு வேண்டிய வைத்திய உதவியையும், தன் இல்லாமையையும் பற்றி, தன்

பிரதம ஆசிரியராகிய டாக்டர் மில்லர் துரையவர்களிடம் தெரியப்படுத்திக்கொண்டான். அதைக்கேட்டவுடன், அக் கனவான், அவனுக்காகமிகக்கவலைப்பட்டு,மனவருத்தமுற்று, உடனே, தனக்கு வழக்கமாய் வைத்தியஞ் செய்யும் பெரிய டாக்டருக்குத் தன் வேலைக்காரன் மூலமாகவே ஓர் அவசரக் கடிதம் அனுப்ப இரண்டு மணி நேரத்துக்குள், அந்த வைத் திய சிகாமணி நாராயணன் வீட்டுக்கு வந்து, பத்மாவதியைப் பார்த்தார். சிசு தற்செயலாய் அழியவில்லை யென்று அவர் சந்தேகித்துப், பத்மாவதியை, முதலில், சாதுரியமாகவும் நயமாகவும் சில கேள்விகள் கேட்டதற்கு, அவள் அவர் நினைத்ததற் கிணங்கப்பதிற் சொல்லாமல் ஒன்றும் நடக்க வில்லையென்றும், தான் தண்ணீர்க்குழா அடியில் வழுக்கி விழுந்ததாகவும், ஒருவேளை அதனுலிருக்கலா மென்றும், பொய் சொல்லி விட்டாள். தன் கணவன் குரூரத்தையும் தன் துயரத்தையும், தனக்குத் தாயினும் அருமையான தன் மாமியிடத்திலேயே வெளியிடாதவள், டாக்டரிடத்திலோ சொல்லுவாள்? பின்பு, அவர் நாராயணனிடத்தில் பலவித மாய் நயமாயும் பயமாயும் இங்கிலீஷில் கேட்டார்; நடந்த தைச் சொல்லி விடவேண்டு மென்று நாராயணன் விரும்பி ஞன்; ஆனுல் சண்டையின் காரணத்தை அவரிடம் சொல்ல முடியாததனுலும், தான் என்ன காரணம் கூறியபோதிலும், ஒரு பெண்பிள்ளையை, அன்றியும் தன் மனைவியை, அடித்துக் காலால் உதைத்ததை அவர் கேட்டால், தன்னை முற்றிலும் இகழ்ந்து வெறுப்பார் என்று அறிந்திருந்ததனுலும் ஒன்றும் நடக்கவில்லை யென்று அவனும் பொய் சொல்லிவிட்டான். தான் குற்றவாளியாகித் தண்டனை அடையக்கூடு மென்று பயந்து பொய் சொல்லிவிட்டதாக நினைந்து, கிலேசத்தை

யடைந்தான்; பிறகு, அது மெய்யல்லவென்று தன் மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

தினம் இருமுறை பெரிய டாக்டர் வந்து பார்த்து மருந்து கொடுக்க, ஊசலாடும் உயிரோடும் சகிக்கமுடியாத நோவோடும் பத்மாவதி பட்ட துயரத்துக்கு எல்லையில்லை. அவள் ஒவ்வொரு நிமிஷமும் தன் மரணத்தை வேண்டித் தெய்வங்களைப் பிரார்த்தித்தாள். இத்தனை நாள்களாய் அவளைக் கைதூக்கி அவளுக்கு ஊக்கம் அளித்துவந்த அருமையான விஷயம் விக்கினமடைந்தவுடன், அவள் பொறுமையெல்லாம் பறந்து போய்விட்டது. தன் புருஷன் தன்னை எவ்வளவு குரூரமாய் நடத்தினும், தானும் அவனும் அளப்பரிய காதலுடன் மனமொத்துச் சுகித்து வாழ்ந்த சில நாள்களுக்கு ஒரு ஞாபகச் சின்னமாகத் தன் கருப்பத்துக் குழவியைப் பாராட்டி, எல்லாவற்றையும் சகித்து வந்திருந்தாள்; மாதம் மூன்றுக்கு முன்னமேயே, தனக்கு ஆண்பிள்ளை தான் பிறக்குமென்றும், அது முற்றிலும் தன் நாயகன் சாயலையும் அங்கங்களையுமே கொண்டு பிறக்குமென்றும், அதை இன்னின்ன விதமாகச் செல்வப் பெயரிட்டுச், செல்வமாய் வளர்த்து, அதன் முகம் பார்த்துத் தன் துக்கமாறி, அதன் மூலமாய்த் தன் பர்த்தாவை மறுபடியும் காதலுறச்செய்ய வேண்டுமென்றும், எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியிருந்ததும் தவிர, அதற்குக் குல்லா, அங்கி, கழுத்துப்பட்டை, மேல் ஜோடு, முதலிய உடைகளும், சிறு பாசி மணிகளால் காப்பு மோதிரங்களும் செய்து வைத்திருந்தாள். அந்தோ! அவள் குழந்தை மனத்தின் அருமை எண்ணங்களெல்லாம், ஒரு நிமிஷத்தில், நிலையற்ற கனவு போலாய் விட்டன; தானொன்று நினைத்திருக்கத் தெய்வம் ஒன்று

நினைக்கலாயிற்று. இனி மேல் உயிரை வைத்திருப்பதால் பயனென்ன? தன்னருமை அத்தானாகிய இன்னுயிர்க் காதலனே, தன்னை வியபசாரியாக நினைத்த பின்பு, இப்பாழுடல் வீண் சுமையே; ஆயினும், பழைய காலத்தின் சின்னமாகவும், அவனுடன் அனுபவித்த நிகரற்ற சுகத்தின் கனியாகவுமுள்ள கருத் தங்கியிருந்தமட்டும், இன்னும் ஒரு வேளை அச்சுகத்தையடைந்து, அவன் காதற் பெருக்கில் மூழ்கலாமென்ற நம்பிக்கைக்கு இடமிருந்தது. அதுவும் பொய்த்தபின், இவ்வுயிர் வாழ்க்கையால் யாருக்கு என்ன பயன்? நாயகனே வெறுத்துவிட்டபின், வேறு யாருக்காக உயிர் சுமக்கவேண்டும்? தன் புருஷன் மனத்தை எவ்விதமாவது திருப்தி செய்து, சந்தோஷப்படுத்தத் தன் சொற்ப வாழ்நாளெல்லாம் முயன்றதுபோல், இப்பொழுதும், தன் மரணமே அவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பதா யிருத்தலால், எப்படியாவது தன் உயிரைத் துறந்து, அவனைக் களிப்புறச் செய்வதே தன் பதிவிரதா தர்மத்தின் கடமை. இவ்வாறெல்லாம் யோசித்துப் பத்மாவதியடைந்த மனத்துயரமானது, பெரிய டாக்டரின் அரிய வைத்தியத் திறமையைப் பலங்குன்றச் செய்து, அவள் சொஸ்தமாதலுக்குப் பெரிய இடையூறாயிற்று. படுத்த படுக்கையைவிட்டு அசையக் கூடாதென்று டாக்டர் இட்டிருந்த கட்டளையை அசட்டை செய்து நடந்ததும் தவிர, அவர் கொடுத்த மருந்துகளைக் சரியானபடி சாப்பிடுகிறதில்லை. எப்பொழுதும் விசனந்தேக்கிய முகத்துடன், மரணத்தையே கோரி ஸ்மரித்துக் கொண்டிருந்தாள்.

சீதையம்மாளோ, தன் தம்பிக்கும் தன் குடும்பத்துக்கும் வந்த வறுமைக் கொடுமையாலும், தன் மகனுக்கும் மருமகளுக்குமுள்ள பெரிய மனஸ்தாபத்தாலும் தான் மிகவும்

மனம் நொந்திருக்கையில், தன் மருமகளுக்கு இச்சம்பவம் நேரிடவே, தனக்கு அருமைப் பேரன் பிறப்பான் பிறப்பானென்று தழைக்கின்ற உள்ளத்தோடு ஆவலாய் எதிர்பார்த்திருந்ததெல்லாம் இலவு காத்த கிளியின் விதி போலாகப், பொறுமை தளர்ந்து, துக்கசாகரத்தில் ஆழ்ந்தாள். புண் ஜந்மம் என்று சொல்லத்தகும் பெண் ஜந்மத்தை எடுத்தவர், கருச்சிதைவால் அடையும் கஷ்டங்களேயும் பொறுத்தற்கரிய கொடிய நோவையும், பின்பு கருத்தங்குதல் அன்னவர்க்கு அரிதாகி, ஒவ்வொரு தடவையும் அவர்களுக்கு அவ்வாறே சம்பவித்து, அவர்கள் பலவிதத்திலும் வருத்தமுறுவதையும், தானே அநுபவத்தால் அறிந்திருந்த சீதையம்மாள், பிற்பாடு எப்படியாயினும், இப்பொழுது தன் மருமகள் பிழைக்க வேண்டுமேயென்று அதிக மனக்கவலையுற்றாள். கடைசியில், தன் ஜந்மம் கஷ்ட ஜந்மம் என்றும், தான் பார்த்துத் துயரப்படும் பொருட்டே தன்னைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் பலவிதத் துன்பங்கள் நேரிடுவதாயும், தான் போய்விட்டால் எல்லாரும் வருத்தம் நீங்கிச் சுகத்தையடைவார்களென்றும் ஒரு நினைப்பெழ, அது முதல், தன் மருமகள் ஆவியை விட்டுவிட்டுத் தன்னுயிரைக் கொண்டு போகும்படி யமதர்மராஜனையும் மற்றத் தெய்வங்களையும் மன்றாடிப் பிரார்த்தித்தது மன்றித், துறவு பழுத்துத், தன் மனத்திலும் எப்பொழுதும் அதே விருப்பத்தைக் கொண்டாள். உதித்து இரண்டு நாளுக்குள், இவ்வெண்ணம், ஒரு மனப்பைத்தியம் போலாகி, நிமிஷத்துக்கு நிமிஷம் மேன்மேலும் வளர்ந்து வந்தது. இப்படியிருக்கையில், பத்மாவதி படுக்கையுற்றுப் பத்து நாட்களுக்குள், ஒரு நாள் காலையில்,—அன்று ஏகாதசி—திடீரென்று பின்வரும் சம்பாஷணை நடந்தது:—

சீதையம்மாள்:—"அப்பா, நாணு! நீ இன்றைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போகாதே; வீட்டை விட்டு அசையாதே. இன்று இராத்திரிக்குள், என் பிராணன் போய்விடும்; நீ பக்கத்தில் இராமல் போய் விடாதே," என்று சொன்னாள். மன ஊக்கத்தோடு, தேட்டந் தேக்கிய குரலில் தன் தாய் தீர்க்க தரிசிபோல் கூறிய மொழிகளைச் செவியுற்றவுடன், நாராயண னுடைய மனம் திடுக்கிட்ட போதிலும், அவன் அதை வெளிக்காட்டாமல், வார்த்தைப் போக்கை வேடிக்கையாய்த் திருப்ப விரும்பி, "ஏதம்மா? பட்டணத்தில் சாகலாகாது; பட்டணத்தில் செத்தால் பறையன் தொட்டுச் சுடுவான்; ஊரில் தான் சாகவேண்டுமென்று சொல்லுவாயே, இன்று சாயங்கால ரெயிலில் ஊருக்குப் போய்விடுவோமா?" என்று பரிகாசமாய்க் கேட்டான்.

சீதையம்மாள்:—"அதெல்லாம் வீண்; அஞ்ஞானம்; நீ சொல்லமாட்டாயா:—

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடுக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக்கால்."

இதுவே உண்மை. நீ கடன் வாங்கியாவது என் சாவழிச் செலவுகளுக்குப் பணத்தை வீண்போக்காதே. வாத்தியார் சொல்லும் மந்திரங்களை மட்டும், நன்றாய் உற்றுக் கேட்டுச், செவ்வையாய்ச் சொல்லு; அது போதும். நான், என் மனதறிய, ஒரு பாவமும் அறியேன்; சுவர்க்கமோ, நரகமோ, அதெல்லாம் தெய்வத்தைச் சேர்ந்தது. குழந்தை பத்மியை மட்டும், இனி மேலாவது சரியாய் நடத்திவா; அவளும் தன் மனதறிய உனக்கு விரோதமாய் ஒரு பிசகும் செய்

திருக்கவும் மாட்டாள்; இனிமேல் செய்யவும் மாட்டாள். உன்னை விட்டால் அவளுக்கு வேறு கதியில்லை; உனக்கும் அவளைத் தவிர வேறு நாதியில்லை" என்று சொன்னாள்.

பத்மாவதி:—"ஏன் அம்மா நீங்கள் சாகவேணும்? நான் போனாலும் இந்தக் கஷ்டங்களை யெல்லாம் அநுபவிக்கவும் வேண்டாம்; உங்கள் பிள்ளை மனத்துக்கும் ஒருவேளை சம்மதமாயிருக்கும், என்னால் ஒருவருக்கும் ஒரு பிரயோசனமுமில்லை; உங்களுடைய ஆதரவு எல்லாருக்கும் வேண்டியிருக்கிறது." என்று கண்ணீர் ததும்பச் சொன்னாள்.

சீதையம்மாள்:—"பத்மி! நீ பச்சைக் குழந்தை; ஆயிரங் காலத்துப் பயிர்; நீ இந்த மாதிரி வார்த்தைகளைச் சொல்லவும் கூடாது. நீ இன்னும், பதினாறும் பெற்றுப் பெருவாழ்வும் வாழ்ந்து, தழைத்துப் பெருகி தீர்க்காயுசாய் இருக்க வேண்டும். தற்சமயம் கஷ்டம் பொறுக்க முடியாமல், நீ இப்படிப் பேசுகிறாய்; உலகத்தில் பிறந்தால், துக்கப்படாதவர்கள் யார்? சீதாதேவியும், தமயந்தியும், சந்திரமதியும், பட்ட கஷ்டங்களை விடவா, நாமெல்லாம் கஷ்டப்படுகிறோம்? ஸ்ரீராமபிரான் பட்ட கஷ்டங்களைக் கேட்டபின்பு, பிறவிக் கஷ்டங்களைப் பற்றி முறையிட மனிதருக்கு நாக்கேது? எல்லாருக்கும், வெயிலும் நிழலுமுண்டு; வெய்யிலே யில்லாவிட்டால், நிழலின் அருமைதெரியாது; நான் ஒருத்தி கரிமுண்டை யிருக்கிறதினால்தான், உங்களுக்கெல்லாம் விபத்துக்கள் சம்பவிக்க இடமாயிருக்கு. நான் இன்று போய்விட்டால், நாளை முதல் உங்களுக்கு விடிவு காலந்தான். நீ வேணுமானால் பார், பிற்பாடு, அத்தையம்மாள் சொன்னாளே, என்று நினைத்துக் கொள்வீர்கள்.

நாராயணன்:—"ஏதம்மா! நீ சொல்லுகிறதைக் கேட்கும் பொழுது, வெகு உறுதியாயிருக்கே, எங்கள்மேல் கோபமாய், விஷத்தைப் போட்டுக்கொண்டு சாகப்போகிறாயோ? அப்படிச் செய்தால், நாங்கள் ஒரு வேளை ஜயிலுக்குப் போக வேண்டி வரும், பார்த்துக்கொள். இல்லாவிட்டால் ஏகாதசி பட்டினியால் காதடைக்கிறதோ?" என்று மறுபடியும் பரிகாசமாய்ச் சொன்னாள்.

சீதையம்மாள்:—"தற்கொலை துர்மரணம்; நரகமுண்டு. பட்டினியும் நான் இராத பட்டினியில்லை. ஆனால், இன்றைக்கு என் உயிர் நீங்குவது நிச்சயம்; இன்றைக்கே பத்மிக்கும் உடம்பு தெளியத் தொடங்கிவிடும்; என் பிரார்த்தனைக்கு ஸ்வாமி மனதிரங்கியிருக்கிறார். நான் வேடிக்கையாய்ச் சொல்லுகிறேனென்று நினையாதே. நேற்றிராத்திரி சொப்பனத்தில், உங்கப்பா, ஒரு விமானத்தில் ஏறிவந்து, தன் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து கொள்ளும்படி, அழைத்தாற் போலிருந்தது. அது ஒரு பொழுதும் வீண்போகாது."

நாராயணன்:—"இவ்வளவுதானா? நான் என்னவோ என்று பயந்து விட்டேன். நீயும் சொப்பனத்தில் செத்துப் போகக்கூடும்," என்று சிரித்தான்.

அவன் என்ன சொல்லியும், அவள், அவனை அன்று பள்ளிக்கூடத்துக்குப் போகவிடவில்லை. அவள் வார்த்தையைத் தட்டமுடியாமல், அவனும் வீட்டிலிருந்து படித்துக் கொண்டிருந்தான். சீதையம்மாள், ஸ்நாநம் செய்து ஜெபதபங்களை முடித்துவிட்டு, ஒருநாளும் இல்லாதபடி, காலையில் கோவிலுக்குப் போய்ச் சுவாமி தரிசனம் செய்துவந்து, பின்பு, தன் மகனுக்கும் மருமகளுக்கும் சமையல் செய்து சாதம் போட்டுவிட்டு, நெற்றியிலும் மேனியிலும் திருநீறு

துலங்கக், கழுத்தில் ருத்திராக்ஷமாலைகள் இலங்கக், கையில் துளசிமணி சூத்திரத்துடன், பக்தியே உருக்கொண்டாற் போல், சுத்தப்பட்டினியாய், இராமஸ்மரணை செய்து கொண்டிருந்தாள்.

மாலையில் நாலுமணி சுமாருக்குச், சீதையம்மாள், திடீரென்று, முதலைவாய்ப்பட்ட கஜேந்திரன், 'ஆதி மூலமே' என்று அழைத்த குரலுக்குச் சமமான குரலில், "பத்மி!நாராயணா!" என்று கூப்பிட்டாள். நாராயணனும், அவன் மனைவியும் எழுந்திருந்து ஓடி, அவள் அருகே சேருமுன், அவளுக்கு நெஞ்சடைத்துப் பேச்சொழிந்து போய்விட்டது. அவர்கள் கிட்ட வந்தவுடன், தன்னிருபக்கத்திலும் அவர்கள் இருவரையும் உட்கார வைத்துக்கொண்டு, தன் கைகளால் பத்மாவதி கைகளை எடுத்து நாராயணன் கைகளுக்குள் வைத்து, ஒன்ருகச் சேர்த்து, அன்பும், உருக்கமும், விசனமும், ஜீவகாருண்யமும், ஒன்றைவிட ஒன்று பெருகி விளங்கும் தன்னிருகண்களாலும், அவர்கள் இருவர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தாள். அந்த ஒரு பார்வையில் அடங்கிய கருத்துக்களை, இப்பொழுது யாரால் எடுத்துரைக்க முடியும்? அருமை உரிமையிற் சிறந்த வேறு எதை மறந்துவிட்டபோதிலும், நாராயணனுலாவது, அவன் மனைவியிலாவது, அப்பார்வையை மட்டும் ஒருபொழுதும் மறக்கொணுது; அதுமட்டும், எப்பொழுதும், கனவிலும், நனவிலும், அவர்கள் கண்ணெதிரைவிட்டகலாது நின்று கொண்டேயிருக்கும். சொற்ப நேரத்தில், சீதையம்மாளுடைய பார்வை மங்கி, கண்கள் மேனேக்கிக், கழுத்து வளைந்துவிட்டது. உடனே, கடுநடுக்கத்துடன், நாராயணன், அவளைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, மெதுவாய் அவள் தலையைக் கீழிறக்

கித், தன் வலது துடைமேல் வைத்துக் கொண்டான்; அவன் மனைவி, காற்பக்கதில் உட்கார்ந்து, அவள் கால்களைத் தன் மடிமேல் வைத்துக் கொண்டாள். அதென்ன 'கு' என்ற ஒரு சிறிதொனி கேட்டது; அதுதான் இவ்வுலகத்தை நீங்கின சீதையம்மாளுக்காகப் பரமபதக்கதவு திறந்ததினுலுண்டான சத்தம். நாராயணனும், அவன் மனைவியும், பிரேதம் தங்கள் மடிமேலிருந்தபடியே, நெடுநேரம் வரையும், தங்கள் கண்ணீராகிய வெந்நீரால் அதை குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்கள்.

பதினெட்டாவது அதிகாரம்.

நாராயணன் தன் மாமனுக்குத் தந்திகொடுத்தும், அவர் வரவில்லை. சீதையம்மாளின் தகனக்கிரியைகளெல்லாம், அவள் மனவிருப்பப்படி, சாஸ்திரோக்தமாயும், அதிகப் பணச்செலவின்றியும் நடத்தப்பட்டன. வியாதியாலும் துயரத்தாலும் தளர்வுற்றுச் சோர்ந்து தயங்கும் அநாதையாகிய பத்மாவதிக்குத் துணையாக, முதலிற் சில நாள்களுக்குச், சாவித்திரி, வீட்டோடு வந்திருந்தாள். சீதையம்மாளின் தோழிகளிற் சிலரும் அடிக்கடி வந்து விசாரித்துக் கொண்டார்கள். கோபாலன், இரண்டொரு தடவை வந்து நாராயணனைத் தேற்ற முயன்றும், செலவுக்குப் பணங் கொடுப்பதாகச் சொல்லியும், தன்னுடன் கோபமாயிருப்பதற்குக் காரணம் வினவியும், நாராயணன் ஒன்றுக்கும் முகங்கொடுத்துப் பேசாமல், அசட்டை செய்ததுமன்றி, அவன் அடிக்கடி வீட்டுக்கு வருவதினுண்டான தன் மனவெறுப்பையும் ஒளியாமல் முகக் குறிகளாற் காட்டிவிட்டதால், அவன் ஒதுங்கிவிட்டான். சாவித்திரியோடு தான் அதிகமாகப் பேசாவிட்டாலும், அவள் தன்

வீட்டோடிருப்பதால் அவளை யடிக்கடி பார்ப்பதினாலும் சில சமயங்களில் சம்பாஷிப்பதினாலும், நாராயணன், மனத்தேற்றத்தையும் சாந்தத்தையும் அடைந்தான்; ஆனால், கொஞ்ச நாள்களுக்குள், சாவித்திரி தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

தானும் தன் மனைவியும் வீட்டில் தனித்தது முதல், நாராயணனுக்கு மன சஞ்சலமும் கவலையும் அதிகரித்தன. அவன், அவளோடு முகங்கொடுத்துப் பேசுகிறதில்லை. பள்ளிக்கூடத்திலும் கனவான் வீட்டிலுமாகத் தான் கழிக்கும் ஒவ்வொரு நாளின் பெரும்பாகமும், பச்சைக் குழந்தை போன்ற தன் மனைவி, அப்பெரும் பட்டணத்தின் மத்தியில், ஒரு வீட்டுக்குள், கதவைத் தாளிட்டுக் கொண்டு, ஒரு துணையுமின்றித், தனிச் சிறையில் வைக்கப்பட்ட கைதியைப்போல், பொழுது போக்குவதை நினைத்துச், சில சமயங்களில் அவன் மனமுருகி நொந்துகொள்வான்; தனக்கு வாழ்க்கைப்பட்டதினால் தான், அவளுக்கு அக்கதி நேர்ந்ததென்று, கிலேசப்படுவான். சில சமயங்களில், தான் வெளியேபோயிருக்கும் பொழுதெல்லாம், மித்திரத் துரோகியாகிய கோபாலனும் பரத்தையிலும் இழிந்தவளான தன் மனைவியும் ஒன்றாகக் கூடி உல்லாசமாய்ச் சுகிக்கக் கூடும் என்ற நினைப்பெழவே, அடங்காக் கோபமும் துக்கமும் வெட்கமும் அவன் மனத்தில் நெய்புண்ட அனல்போல் கிளம்பியோங்க, அவன் எங்கே யிருப்பினும், அந்த க்ஷணமே கைவேலையைவிட்டு விட்டு, எல்லாவற்றையும் மறந்து, வீட்டுக்கு வெறிகொண்டாற்போல் ஓடி வருவான்; அந்தோ! மூடிய கதவைத்தவிர, அங்கு வேறொன்றுமிராது. பள்ளிக்கூடத்தில் கோபாலன் முகத்திலாவது, வீட்டில் தன் மனைவி முகத்திலாவது, எந்நிமித்தமாயேனும் கொஞ்சமாவது சந்தோஷக்குறி தோன்றினால், நாராயண

னுக்கு உடனே வெறிவந்துவிடும்; அவன், அக்காலங்களில்
அடையும் மனத்துயரத்துக்கு, அளவில்லை; சில வேளைகளில்
ஏதாவது காரணத்தைக் கொண்டு, பத்மாவதியை அடித்து
உதைத்துக், குரூரமாய் நடத்துவான். சில நாள்களில், தன்
சந்தேகங்களெல்லாம் வெகு அற்பமாகவும், தன் நடத்தை
வெகு மூடத்தனமாகவும், அவனுக்குத் தோன்றும்; அப்
பொழுது, தன் மனைவியுடன் முன்போல் சல்லாபித்துப்
பேசாவிட்டாலும், அவளுக்காக மிகவும் இரங்கி, தன்னை
மிகவும் இகழ்ந்து கொண்டு, அவளைத் தயவாய் நடத்தி வரு
வான். நாராயணனுடைய தற்கால நடவடிக்கைகளை யாரா
வது உற்றுப் பார்த்தால், நிமிஷத்துக்கு நிமிஷம் புத்தி மாறும்
ஒரு பித்தனாக அவனைக் கொள்வார்களே யன்றி, ஸ்திர புத்தி
யுடையவனாய் மதிக்கமாட்டார்கள்.

பத்மாவதியோ, அந்தோ! அப்பெண்பாவத்தை யாரால்
விவரிக்கக்கூடும். குக்கிராமத்திற் பிறந்து வளர்ந்து, அருமை
யாய்க் குடும்பத்தின் மத்தியிலேயே இதுவரையும் இருந்து
வந்ததால், எவ்விடத்திலும் எக்காலத்திலும் தனிமையா
யிருப்பதில் அவளுக்கு இயற்கையாகவே அதிகப் பயமுண்டு.
தன் கணவனாவது மாமியாவது வீட்டிலில்லாம லிருந்தால்,
அடுத்த வீட்டிலிருக்கும் தன் தோழியாகிய வள்ளியம்மை
யைத், துணைகூட்டி வைத்துக்கொண்டிருப்பாள். தனிமையா
யிருக்க நேர்ந்துவிட்டால், வாசற்றிண்ணையிலாவது தாழ்வா
ரத்திலாவது இருந்து பாடிக்கொண்டும் வாசித்துக்கொண்டும்,
வீண் நினைப்புக்கள் எழவொட்டாமல், காலத்தைப் போக்கு
வாள். எல்லோரும் வீட்டிலிருக்கும்பொழுதுகூட, இராக்
காலமாயிருந்தால், விளக்கில்லாமல் சமையலறைக்குள்ளா
வது, சாமானறைக்குள்ளாவது, போகமாட்டாள். இரவில்

படுக்கையறையில் அவளுக்காக விடிவிளக்கு வைத்திருக்கும். இருட்டில் விழித்துக்கொண்டிருந்தால், தான் கேட்டிருந்த பேய் பிசாசங்களைப் பற்றிய கதைகளெல்லாம், அவள் ஞாபகத்துக்கு வந்துவிடும். விளக்கில்லாத அறைவழியாக, இரவில் தனியாய்ச் செல்லவேண்டியிருந்தால், கண்ணை மூடிக்கொண்டு ஓரே ஓட்டமாய் ஓடுவது அவள் வழக்கம். பெரியவளான பின்பும் அவளுக்கு இயற்கையாயுள்ள மனோபயம் தணியவில்லை. நாராயணன் இதைப்பற்றி அவளை அடிக்கடி கேலி பண்ணுவதுண்டு. இப்பொழுதோ, எக்காலத்திலும் தனியாயிருக்கும்படியான விதி அவளுக்கு நேர்ந்துவிட்டது. அவளுடைய வேண்டுகோளின் பேரில்தான் சாவித்திரி அவ்வளவு நாள் அவள்கூட இருந்தாள். ஆனால் அவளும் போனபின் பத்மிக்கு ஒரு துணையுமில்லை. நகை விற்ற தினத்தில் தன் கணவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டது முதல், அவள் வள்ளியம்மையின் சிநேகத்தை நீக்கிவிட்டாள். காலையில் பத்து மணிமட்டும், நாராயணன் வீட்டிலிருந்து வாசித்துக் கொண்டிருப்பான். பிற்பாடு அவன் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடத்திற்குப் போனால், மறுபடியும் இரவில் ஒன்பது மணிக்குத்தான், கனவான் வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பி வருவான். அதுவரையும், அவள், தெருக்கதவைத் தாளிட்டுவிட்டுத், தனிமையாகவே தானிருப்பாள். ஒருநாட்போல் பல நாளும் இவ்வாறு கழிக்கையில், அவள் மனத்தில் என்ன என்ன எண்ணங்களெல்லாம் உண்டாகும்? எவ்வளவு பயத்தை அடைவாள்? பேய் பிசாசுகளுக்காக எவ்வளவு நடுநடுங்குவாள்? தன் தனிமையை அறிந்து சுவரேறிக் குதித்து வந்து, தன் மானத்தைக் கெடுத்துவிடக்கூடும் துஷ்டர்களை நினைந்து, எவ்வளவு பதறுவாள்? வீணெண்ணங்களுக்கு இடங்

கொடாமல் வாசிக்கலாமென்றால், எவ்வளவு நேரந்தான் வாசிக்கிறது? கண்ணும் சோர்ந்து போகாதோ? பாடலாமென்றால், மனத்தில் சந்தோஷமில்லாமல் என்ன பாட்டு? தூங்கலாமென்றால், பாவித் தூக்கம் ஒரு நிமிஷமும் அவளை அணுகுகிறதில்லை. இவ்வாறு வாழ்வதிலும் இறத்தலே திண்ணமென்று கருதி, எத்தனையோ தரம் தற்கொலை செய்து கொள்ள நினைத்தாள்; ஆனால், தானும் போய்விட்டால், தன் நாயகனுக்குச் சோற்றுக்குக் கூட வழியில்லாமல், முற்றிலும் அநாதையாய் விடுவானென்ற எண்ணமுண்டாகி, அதைத் தடுத்தது. அன்றியும், எல்லா எண்ணங்களுக்கும் விசனங்களுக்கும் உள்ளூர, உயிரோடிருந்தால் எப்பொழுதாவது எவ்விதமாவது தன் நாயகன் காதலை மறுபடியும் அடைந்து, முன்போல சுகிக்கலாமென்ற நம்பிக்கையும், தழைத்துக் கொண்டேயிருந்தது. நண்பரே! நம்பிக்கையென்பது ஒன்று மட்டும் இல்லாவிட்டால், நரஜந்மத்திலும் கடையான ஜந்மமுண்டோ?

தன் தனிமையான நேரத்திற் பெரும்பாகத்தையும், பத்மாவதி, வீட்டு வேலையிலும் படிப்பிலுமே கழித்தாள். அவள் கணவனோ, அவளோடு பேசுகிறதில்லை. காலையிலெழுந்து வீட்டையெல்லாம் சுத்தம் செய்து, பாத்திரங்களை வெள்ளி போல் துலக்கிப், பின்பு ஸ்நாநஞ்செய்து விட்டுச் சமையல் செய்வாள். அவள் கணவனைப்போலவே அவளும் காலையில் ஒன்றும் சாப்பிடுகிறதில்லை. நாராயணன் ஸ்நாநம் பண்ணினவுடன், அவனுக்குச் சாதம் போடுவாள். அவன் பள்ளிக்கூடத்துக்குப் போனபின், கதவைத் தாளிட்டுவிட்டுத், தான் சாப்பிடுவாள். பின்பு பாத்திரங்களையும், அவன் களைந்துவைத்த வஸ்

திரங்களையும், தன் புடவையையும் சுத்தஞ்செய்வாள். அதற்குப்பின், அவன் படிக்கும் அறைக்குட் சென்று, புஸ்தகங்கள், லாந்தர் எல்லாவற்றையும் துடைத்து ஒழுங்காய் வைத்து, வீட்டில் ஏதாவது வஸ்திரங்கள் உடுப்புக்கள் கிழிந்திருந்தால் தைப்பாள். இதற்குள் இரண்டு மணியாய்விடும். பின், தானொரு தமிழ்ப் புஸ்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு வாசிப்பாள். கணவன் தன்னுடன் பேசாததால், அவனிடத்தில் தெரியாத பாகங்களுக்குப் பொருள் கேட்பதோ அசாத்தியம்; ஆகையால், தனக்குத்தெரிந்தமட்டும் அகராதியை வைத்துக்கொண்டு பொருள் ஆராய்ந்து படிப்பாள். இக்காலத்தில், அவள் குறளை ஒழுங்காய் மனப்பாடம் பண்ணிவந்தாள். மாலை ஐந்து மணியானவுடன், மறுபடியும் வீட்டையெல்லாம் சுத்தம் செய்துவிட்டு, இராச்சமையலுக்கு எத்தனிப்பாள். ஏழு மணிக்குள் இராச்சமையல் முடியும். அதன் பின், தன் கணவன் படிக்கும் லாந்தரைச் சிறிதாய் ஏற்றிவைத்து, அவனுக்கு அவன் அறையில் படுக்கை பரப்பிவிட்டு, அவன் வரவை யெதிர்பார்த்துக் காத்திருப்பாள். அவள் பொதுவாய் அதிக விசனத்தையும் பயத்தையும் கிலேசத்தையும் அடையுங்காலம் இரவில் ஏழு மணி முதல் ஒன்பது மணிவரையும் தான். நாராயணன் வந்தவுடன், அவனுக்குச் சாதம் போடுவாள். அவன் சாப்பிட்டு விட்டு, அறைக்குட் போய் விடுவான். பின்பு தான் சாப்பிட்டுப், பாத்திரங்களையும் சுத்தி செய்துவிட்டு, சமயலறைக்குள் ஒரு சிறிய விளக்கை வைத்துக்கொண்டு, தானும் தன் கண்ணீருமாகப் படுத்துக்கொள்வாள். நாராயணனுக்குச் சந்தேகம் வந்தநாள்முதல், சீதையம்மாள் இருக்கும் பொழுதே, பத்மாவதி சமையலறையில் தான் படுத்துக் கொள்வது வழக்கம். ஆனல் அப்பொழுது சீதையம்மாளும் கூடப் படுத்துக்

கொள்வாள். இப்பொழுது அவள் இறந்துபோன பின்பும், பத்மாவதி தனிமையாகவே படுத்து வந்தாள்.

இக்காலத்தில், பத்மாவதி, வாசிப்பதோடு கூட, தன் சுகதுக்கங்களைப் பற்றித் தினமும் ஒரு வெறும் புஸ்தகத்தில் எழுதி வந்தாள். அதன் முக்கிய கருத்து, பொழுதுபோக்கும் பொருட்டே. ஆனால், பிற்காலத்தில் தான் மறுபடியும் நல்ல நிலைமைக்கு வந்தால் தான் பட்ட கஷ்டங்களைப் பற்றி வாசித்து, அதிக சந்தோஷத்தை யடையலாமென்ற எண்ணமும் உண்டு. அந்த 'டயரி' யிலிருந்து இரண்டு மூன்று நாளைய சரித்திரத்தைப் பின்னால் எடுத்து வரைந்திருக்கிறோம்.

திங்கட்கிழமை:—ஒருநாட் போல் பலநாளும் என்ன என்று எழுதுகிறது? ஆனாலும் இன்றுபோல் ஒரு நாளும் நான் கஷ்டப்பட்டதில்லை. அத்தான் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போனபின், வீட்டு வேலையை முடித்துவிட்டு, அவன் அறைக்குட் சென்று புஸ்தகங்களைத் துடைத்து ஒழுங்காய் வைக்கும்பொழுது, நைடதத்துக் குள்ளிருந்து ஒரு கடிதம் கீழே விழுந்தது. அதை எடுத்துப் பார்க்கையில் அது, எனக்கு அத்தானால் எழுதப்பட்ட ஒரு கடிதமாயிருந்தது. அதை வாசிக்கவே, பழைய எண்ணங்கள் எழ, அடக்கமுடியாத துக்கமுண்டாகி நெஞ்சை யடைக்க, 'கோ' வென்று அலறியழ வேண்டும்போலிருந்தது. அங்கேயே ஒரு பாட்டம் அழுதேன். ஆனால், நான் அழுதாலும் சிரித்தாலும் நானேதான் ஆறிக்கொள்வதல்லாமல், வேறு யாரிருக்கிறார்கள். அசோகவனத்தில் இராவணனால் சிறைவைக்கப்பட்ட சீதாதேவிக்காவது, இராப்பகல் ஓய்வில்லாமல் இராக்ஷஸிகள் காவலிருந்தார்கள். அவர்கள் எவ்வளவு பயங்கரமானவர்களாயும் குரூரிகளாயும் இருந்தாலும், தன் பக்கத்

தில் யாராவது இருப்பதனால், தேவி ஒருவாறு பயம் மாறி, மனத்தேற்றத்தைச் சில காலங்களில் அடைந்திருக்கலாம். எனக்கோ, அந்த பாக்கியமும் இல்லை. என் துக்கத்தைக் கொஞ்சமாவது வெளியிட யாராவது ஒருவரிருந்தால், கொஞ்சம் ஆறுதலா யிருக்கும். இப்படி அழுதுகொண் டிருக்கும் பொழுது, வெளித் தாழ்வாரத்தில் பொத்தென்ற சத்தம் கேட்டது. கூரையிலிருந்து ஒரு பாம்பு விழுந்தாற் போ லிருந்தது. அந்தச் சத்தம் கேட்கவே, எனக்குண்டான பயத்துக்கு அளவில்லை. மெய்யாகவே பாம்பாயிருந்தால், நான் என்ன செய்வேன்? அறைக்கதவைத் தாளிட்டு விட்டால், அது போகுமிடங்கூடத் தெரியாதே? பின்பு அத்தான் வந்தால், வெளியே போய்க் கதவைத் திறக்கவேண்டுமே? பிற்பாடு, பாம்பாயிருந்து ஒருவேளை கடித்துவிட்டால் இந்த நித்திய கஷ்டமெல்லாம் ஒருவாறு நீங்கி விடுமென்ற நினைப்புண்டாக, உடனே மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, மெதுவாய் வெளியே உற்றுப் பார்த்தேன்: இரண்டு அணில்கள் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு, உல்லாசமாய்ச் சல்லாபித்துக்கொண்டிருந்தன. கேவலமான அந்தப் பிராணிகளுக்குள்ளிருந்த அந்நியோந்யமும் அன்பும் கூடவில்லாமல், அவைகள் அநுபவித்த சுகத்தைக்கூட அடையும் வழியில்லாமல், நானும் என் அத்தானும் படுங்கஷ்டங்கள் என் மனத்தைப் புண்படுத்த, நாங்கள் இதற்குமுன் அநுபவித்ததெல்லாம் அதைப் பார்த்தவுடன் ஞாபகத்துக்கு வர, என்னால் துக்கம் பொறுக்கமுடியவில்லை. எத்தனை நாளென்று நான் சகித்துக்கொண்டிருப்பேன்? ஐயோ! இன்னும், பத்து வருஷம் கழித்து நீயும் உன் புருஷனும் முன்போலவே சுகமாயிருப்பீர்களென்று யாராவது தீர்மானமாய்ச் சொன்னாலும்,

ஒருவாறு நாளெண்ணிக் கொண்டே பத்து வருஷத்தையும் கழித்து விடலாம் போலிருக்கு: ஆனால் இவ்விதமென்று நிர்ணயமின்றி என்னால் பொறுக்கமுடியவில்லையே. சுவாமி! பார்வதி பங்கா! லக்ஷ்மீ நாராயணா! உங்களுக்கு என் கஷ்டங்களை நிவர்த்திக்கத் திருவுளம் இசையுமட்டும், எனக்குப் பொறுமையையும் ஊக்கத்தையும் தந்து காப்பாற்றும்படி, நான் உங்களைப் பிரார்த்திக்கிறேன்.

வெள்ளிக்கிழமை:—இன்று இடித்த இடிக்கும் பின்னிய மின்னலுக்கும் நான் பதறிய பதற்றம் என்னென்று சொல்லுவேன். இடி முழக்கத்தை என்னால் எப்பொழுதும் பொறுக்கமுடியாது. இடி இடிக்கும் பொழுதெல்லாம் அம்மாமியையாவது, அத்தையம்மாளையாவது, அத்தானையாவது, யார் கிட்ட இருந்தார்களோ அவர்களைப்போய் இறுகக் கட்டிக்கொண்டு விடுவேன். ஆனால் இன்றைக்கோ, தலையணையைக் கட்டிக்கொண்டு கவிழ்ந்து கண்ணை மூடிக்கொண்டு படுத்துக் கொள்வதைத் தவிர, வேறு ஒரு கதியும் இல்லாமல் போய் விட்டது. அத்தான் இராத்திரித் திரும்பி வந்தவுடன், நான் அடைந்த பயத்தை நன்றாய் அவன் அறிந்திருப்பானானதால், ஏதாவது அதைப்பற்றி ஒரு வார்த்தையாவது சொல்லுவானென்று, அவன் வாய் நோக்கி எதிர்பார்த்திருந்தேன். ஒன்றும் பேசாமல் சாப்பிட்டுவிட்டு, எழுந்து போய்விட்டான். கொஞ்ச நேரம் பொறுத்து அவன் அறையிலிருந்து சத்தம் கேட்டது. என்னைத்தான் கூப்பிட்டானுக்குமென்று, ஆவலுடன் எட்டிப் பார்த்தேன். ஏதோ ஒரு புஸ்தகத்தை இரைந்து வாசித்துக் கொண்டிருந்தானேயன்றி வேறொன்றுமில்லை. துக்கம் தன்னை யறியாமல் நெஞ்சடைக்க, வீண் கண்ணீர் கொஞ்ச நேரத்துக்குப் பெருகிற்று. பிற்பாடு, அவன்

சாப்பிடும்பொழுது கொஞ்சம் இருமினதால், ஒரு தமிழரில் கொஞ்சம் அதிமதுர கஷாயம் வைத்துக்கொண்டு போய், "அத்தான்! உனக்கு இருமிற்றே; இந்த அதிமதுர கஷாயத்தைக் கொஞ்சம் சாப்பிடு," என்று சொன்னேன். ஒருதரம் என்னை ஏற இறங்க விழித்துப் பார்த்துவிட்டு, அதை எடுத்து வீசிக் கொட்டிவிட்டான். ஐயோ! என் துக்கத்தை என்னென்று எழுதுவேன். ஒருவேளை தன்னைக் கொல்லுவதற்காக விஷத்தைக் கொடுப்பதாக நினைத்தானோ என்னவோ! அவன் கோபமாயாவது ஒருவார்த்தை சொன்னால், எனக்கு இவ்வளவு துக்கம் வராது. இப்பொழுது அவனிடத்தில் பேசவே நாக்கெழவில்லை. இராத்திரியெல்லாம் தூக்கம் வரவில்லை. பயங்கரமான எண்ணங்களும் கனுக்களுமாக நான் படும் துன்பத்துக்கு எல்லையில்லை. என்னையும் ஒரு பெண் ஜந்மமாக பிர்ம்மா என்னத்துக்குக்காக சிருஷ்டித்தானோ? நானில்லாவிட்டால் உலகத்தில் எந்த மூலை குறைபாயிருக்குமோ? என் துயரத்துக்கு விமோசன காலமும் வருமோ? சுவாமிக்குத்தான் தெரியும்.

சனிக்கிழமை:—இன்று யார் முகத்தில் விழித்தேனோ தெரியவில்லை. தெரிந்தால், நித்தியமும் அவர் முகத்திலேயே எவ்விதமாவது விழிக்க முயலலாம். எண்ணாத எண்ணங்கள் எல்லாம் எண்ணிக், துயரக்கடலில் ஆழ்ந்து, இப்படி வாழ்வதிலும் பிராணனைவிட்டு விடுவதே திறமென்று ஒருவிதமாய் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, நான்று கொண்டு சாகத் தீர்மானித்து, ஒரு கயிற்றையெடுத்து அளவு பார்த்துச் சுருக்குப் போட்டுக் கொண்டிருக்கையில், திடீரென்று வாசற்கதவைத் தட்டியசத்தம் கேட்டது. திடுக்கிட்டுக் கயிற்றைத் தூர

எறிந்து விட்டு, யாரென்று கேட்க, அத்தானே, "நான்தான்," என்று மறுபடியும் கதவைத் தட்டினன். உடனே போய்க் கதவைத் திறந்தேன். அவன் உள்ளே வந்து கொஞ்சநேரம் திகைத்து நின்றுவிட்டு, "பத்மி! நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்று கேட்டான். நடந்ததைச் சொல்ல மனமில்லாமல், "ஒன்றுமில்லை; சும்மாபடித்துக்கொண் டிருந்தேன்," என்று சொன்னேன். அவன் ஏதோ ஒரு புஸ்தகத்தை யெடுத்துக் கொண்டு மறுபடியும் போய்விட்டான். ஒருநாளும் இல்லாமல், இன்றுமட்டும், அதுவும், என் பிராணத்தியாகத்தைத் தடுக்கும்படியாக, அவன் வந்ததனுல், அவனுக்கும் எனக்கும் இன்னும் தொந்தம் விடவில்லை யென்பதிற் சந்தேகமில்லை. உள்ளன்பினுலேயே, தெய்வம் அவனை அச்சமயத்தில் வரச்செய்தது, இனிமேல் நான் எப்பொழுதாவது பிராணத்தியாகம் செய்துகொள்ள நினைந்தால், அது அவனுக்குத் துரோகமாகும்; அன்றியும் அவன் முன் போல் "பத்மி" என்று கூப்பிட்ட ஒரு வார்த்தையே, என்னை ஒரு மாதத்துக்குச் சந்தோஷப் படுத்தப் போதாதோ? நிழலருமை வெயிலில் போனல் தான் தெரியுமென்று பெரியோர் சொல்லுவது, எவ்வளவு உண்மையாயிருக்கிறது. முன் காலங்களில், அவன் அடிக்கடி, "பத்மி," "பத்மி" என்று கூப்பிடுவதனுல், சில சமயங்களில் வெட்கத்தையும், சில சமயங்களில் மனச்சலிப்பையும் அடைந்த எனக்கு, இப்பொழுது அந்த வார்த்தை அமிர்த சஞ்சீவியாய் விட்டதே. ஒருவேளை, அவன், என் தனிமையை நினைத்து மனமிரங்கிப், பார்த்து விட்டுப் போக வந்திருக்கலாம்; இல்லாவிட்டால் அவன் பள்ளிக்கூட நேரத்தில் வருவதற்குக் காரணமேயில்லை. எப்படியாவது பிழைத்திருந்தால், திரும்பவும் முன்போல் வாழலாமென்ற நம்

பிக்கை மனத்தில் தழைத்து எனக்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது. தெய்வ சம்மதமெப்படியோ யாருக்குத் தெரியும்?

முன் கூறியபடி தான் ஒழுகுவதில், நாராயணனுக்குச் சில சமயங்களில் உண்டான மனத்துயரத்துக்கும், அருவருப்புக்கும், தன் இகழ்ச்சிக்கும் எல்லையில்லை. தன் மனைவி மேலுள்ள சந்தேகம் தெளிவாயும் உறுதியாயும் மனத்துக்குத் தோன்றிய பொழுதெல்லாம், ஒதெல்லோவைப் போல் அவளைக் கொலை செய்துவிடாமல் உயிர் வாழவிட்டிருப்பதையும், தன் மனத்திடக்குறைவையும் நினைத்து நொந்து கொள்வான்; எவ்விதமாயாவது தன் மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, பெட்டியுள் வைத்து மூன்று பூட்டுப் பூட்டிய காலத்தும் உள்ளிருந்து கமகம வென்று நறுமணம் வீசித் தன் சுபாவத்தைக் காட்டும் ஜாதி புஷ்பத்தைப் போல், அடக்க முடியாமல் தன் இருதயத்தின் உள்ளூரவிருந்து கிளம்பும் தன் அரிய காதலை அவித்து விட்டுப், பழி நீங்கும்படித் தன் மனைவியை உயிர் வாங்கி விட வேண்டுமென்று தீர்மானித்துக் கொள்வான். சில சமயங்களில், இவ்வளவு அழகும், அன்பும், பொய்த் தன்மையும், ஓரிடத்திற் பொருந்தியிருக்குமோ வென்று சந்தேகிப்பான். ஆனால், எவ்விதம் யோசித்துப் பார்த்தாலும், அவள் குற்றம் மட்டும் அவன் மனத்துக்கு மெய்யாகவே தோன்றிற்று. இவ்விதமாக, ஓயாமல் தன் மனத்தைப் புண் செய்யும் விஷயத்தை ஒரு விதமாகத் தீர்மானஞ் செய்துமுடிக்க நினைத்து, ஒரு ஞாயிற்றுக் கிழமையன்று மாலையில் ஏகாந்தமாயிருந்து யோசிக்கக் கருதி, கடற்கரையில், தனிமையான ஓரிடத்திற் போய்ச் சேர்ந்தான். அங்கே யிருந்து கொண்டு, அடி முதல் ஒவ்வொன்றாய் யோசித்துப் பார்த்ததில், தன் மனைவி குற்றவாளியாகவே அவன் மனத்துக்குத்

தோன்றிற்று. அந்தோ! காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறமன்றோ? அவள் குற்றவாளியாகவே, தான் எவ்வாறு நடக்க வேண்டுமென்று யோசிக்கத் தொடங்கினன். இது தீராத யோசனையாயிற்று. தன் தற்கால நடவடிக்கைகள் நியாய விரோதமென்றும், ஒரு விதத்திலும் சரியல்லவென்றும் எளிதில் அறிந்து கொண்டான். ஆனால், வேறு என்ன செய்கிறது? திவ்விய கவியாகிய டெனிஸன் பிரபு இவ்விஷயத்தைப் பற்றிக் கூறும் பாக்கள் உடனே அவன் ஞாபகத்துக்கு வந்தன:—

"தன் மனைவி கற்பு நிலை தவறியதை அறிந்திருந்தும், தன் பொருட்டாகவாவது, தன் மக்கள் பொருட்டாகவாவது, அவளை வீட்டில் வைத்துக் கொண்டு கிரக கிருத்தியங்களை நடத்தவிடும் புருஷன், பொது நன்மை விரோதிகளில் கடைப்பட்டவன்; ஏனென்றால், அம்மனைவி, மனிதரறியாத ஒரு புது நோய்போல், தன் கண் வலைகளை நாற்புறமும் வீசி, கண்டவர் மனங்களில் துன்மார்க்கமான காம அனலைக் கிளப்பி, நண்பர்களின் விசுவாசத்தை அழித்து, வாலிபரை (காம) விஷநோய்க்கு உட்படுத்தி விடுகிறாள்." ஆகையால் இனிமேல் ஒரு நிமிஷமேனும் தானும் அவளும் ஒரு கூரையின் கீழ் இருக்கக்கூடாதென்று தீர்மானித்துக் கொண்டான். வேறென்ன செய்கிறது? தன் மாமன் வீட்டுக்கு அனுப்பவோ வழியில்லை; அவரொரு பக்கமும் அவர் மனைவியொரு பக்கமுமாகத் தரித்திரத்தில் மூழ்கியிருந்தார்கள். அன்றியும் ஒரு பெண் சுகத்துக்குக் காரணமாயிருக்கும் பொழுதெல்லாம் தான் வைத்து அநுபவித்துவிட்டுத், துக்கத்தைக் கொடுக்கும்பொழுது அவளைப் பெற்றோரிடம் அனுப்புவது, அவன் புத்திக்கு, அநீதியாகவும், விவாக காலத்தில் தான்

செய்த சபதத்துக்கு விரோதமாகவும் தோன்றிற்று. அவளைக் கொலை செய்துவிடலாமென்றாலோ, அவ்வெண்ணமே பயங்கரமாயும், சகிக்க முடியாமலும் இருந்தது. எவ்வாறு மனந் துணியும்? அவள் திவ்விய சரீரத்தை எவ்வாறு தொட்டுச் சிதைக்கக் கூடும்? ஆலோசனை இவ்வளவு ஓடியவுடன் புத்தி முட்டித் திகைப்புற்றுச் சோர்ந்து, தன் கொடிய விதியை நொந்து, தன் கைகளால் முகத்திலும் கண்களிலும் புடைத்துக் கொண்டு, வெறி கொண்டவன் போல் தலைமயிரைப் பிடித்திழுத்துப் பிடுங்கிக் கொண்டு, விம்மிவிம்மி யழுதான். அழுகையால் கொஞ்சம் வெறி தணிந்து மறுபடியும் எவ்விதமாவது அவளைக் கொன்றுவிடுவதே சரியென்று யோசிக்கும் பொழுது, தன் தாய் மரண தருணத்தில், பத்மாவதியின் கையைப் பிடித்துத் தன் கையுள் வைத்து, மாறி மாறி இருவரையும் பார்த்த உருக்கமான பார்வை அவன் மனக்கண்கள் முன் தோன்றிற்று. ஆஹா! இதென்ன புதுமை! அவன் கோபமும், வெறியும், மனக் குரூரமும், ஊக்கமும், எல்லாம் ஒரு க்ஷணப்பொழுதில் பறந்துபோய், அவன் மனமெல்லாம் தீயுற்ற மெழுகு போலுருகி, அன்பாலும் ஆர்வத்தாலும் நிறைந்து பெருகிற்று. தன் மனைவியோடு தான் கூடிக் களித்த சுகங்களெல்லாம் அவன் ஞாபகத்துக்கு வந்தன. அவளுடைய எல்லையற்ற மெய்க்காதல் அவன் காதலைக் கிளப்பிற்று. தான் அப்பொழுது உட்கார்ந்திருந்த இடத்திலேயே முன்பு ஒருநாள் அவளுடனிருந்து தான் அநுபவித்த சல்லாபங்களையும், ஒருவருக்கொருவர் செய்துகொடுத்த சபதங்களையும், களங்கமற்ற நெஞ்சுடன் இருவரும் தங்கள் அந்தரங்க எண்ணங்களையும், விருப்பங்களையும், ஒருவர்க்கொருவர் வெளியிட்டு இருவர் மனமும் இசைந்திருக்கக் கண்டு, தங்கள் இன்

பமே "காதலிருவர் கருத்தொக்க ஆதரவு"டன் கூடியதென்று மெய்ச்சிச் சுகித்ததையும், நினைத்து நினைத்து உருகினான். அவ்வித இன்பத்தை மறுபடியும் ஒரு விநாடியாவது தன் மனைவியுடன் அநுபவித்துவிட்டால், பின்பு இருவரும் கடலில் விழுந்து ஒன்றாய் இறத்தல் சிறிதும் வருத்தமல்லவென்று எண்ணினான். ஒரு நாள் ஒரு நிமிஷம்போற் சென்ற பல மாதங்களில், ஒரு நாளாவது மறுபடியும் திரும்பிப் பழைய சந்தோஷங்களுடன் நிகழுமோவென்று ஏங்கினான். அவன் கண்களினின்றும் கண்ணீர் ஊற்றெடுத்துப் பெருகிக் கொண்டேயிருந்தது. யோசனை சிறிதும் மேற்போகவில்லை. மெதுவாயெழுந்து, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, பின் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் பாக்களை இங்கிலீஷில் மெதுவாய்த் தன்னை யறியாமலே பன்னி பன்னிப் பாடிக்கொண்டு, வீட்டை நோக்கித் திரும்பினான்:—

"சென்றன திரும்பாத் தினங்களை நினைக்கவே,
இனையதென்ன இசைக்கலாகாது
உயர்தரு தேவர்க்குரியதோர் ஏக்கமாம்
ஆழத்தூறி, அகத்தெழுந்தோங்கிக்,
கண்ணிடைக்கலந்தன, கவிழ்வனவறிதே'
இக்கண்ணீராற் பயன் என்னையோ அறியேன்,

*   *   *

"இறந்தவர் வாழ்ந்துழி ஈந்த முத்தங்கள்
மறந்தன புதிதே நினைந்தவை போலும்
அருமையுடையன; அயலவர் தமக்கா
அமைந்திரா நின்ற அதரங்களின்மேல்,
நிறைவேறலாகா நீண்ட ஆசைதான்
பாவனையாலே பதித்த முத்தங்கள்போல்,
இனியன; காதலெனும்பொருள், அதனுளும்

முதற்பெருங்காதல் போல் முதிர்ச்சியுடையன;
வரம்புகடந்த பெருந் துயர் மலிந்தன;
வாழ்வின் நடுவிற் பாழே போன்றன
சென்றன திரும்பாத்தினங்களின் திறமே."

நாராயணன் வீட்டு வாசலில் வரும்பொழுது, வழக்கம் போல் கதவு மூடப்பட்டிருந்தது. ஆனால், உள்ளே யிருந்து, கல்லையும் கனியச்செய்யும் சிறிய குரலில், பத்மாவதி, பின் வரும் பாட்டை உருக்கமாய்ப் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு, கதவைத் திறவாமல் வாசல் திண்ணையில் உட்கார்ந் தான்.

இராகம்-சங்கராபரணம். தாளம்-ஆதி.

பல்லவி

"எப்போதான் இரங்குமோ, ஏதோ உன் திரு உள்ளம்

அநுபல்லவி

தப்பொன்றும் செய்தறியேன், தமியேன் மிகச்சிறியேன்;
அப்பனே! அய்யனே! ஆருயிர்க்காதலனே!—(எப்போதான்)

சரணம்

கண்ணும் கருத்தும் நீயே, கருணைத்தாய் தந்தைநீயே,
எண்ணும் எழுத்தும் நீயே, இகபரகதி நீயே;
பெண்ணுருக் கொண்டபின் என்னுயிர்த் துணைநீயே— (எப்)

இப்பாட்டைச் செவிக்கொண்டவுடன், நாராயணன் ஆவியும் அங்கமும் நெக்குவிட்டுருகிக் கண்ணீர் ஆறுகப் பெருகிற்று. அதை ஒருவாறு அடக்குமுன், முன்னிலும் அதிக உருக்கமும் அன்பும், துயரமும், மனவேக்கமும் நிறைந்த குரலில்,

"என்னசெய்வேன் நான், ஏது செய்வேன் நான்,
எப்படி மனம் சகிப்பேன், ஏ நாதா!
என்ன செய்வேன் நான்."

என்ற பாட்டுக்கேட்டு, வெண்ணெய்க் கட்டிக்குள் பழுக்கக் காய்ச்சிய சலாகை பாய்ந்தாற்போல் அவன் செவி வழியாய் மனத்துட் புகுந்தது. அதே நிமிஷத்தில், "அடி, அம்மா! என்னால் பொறுக்க முடியவில்லையே," என்று அலறிக்கொண்டு பத்மாவதி மூர்ச்சைபோய்க் கீழேவிழுந்தாள். வெறிகொண்டவன்போல் நாராயணன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பாய்ந்து, சில மாதங்களாய்த் தன் கையால் தொட்டறியாத தன்னின்னுயிர்க் காதலியை வாரி யெடுத்துத் தன் மார்புறத் தழுவிக்கொண்டான்.

இருபதாவது அதிகாரம்.

முந்திய அதிகாரத்திற் கூறிய சங்கதிகள் நடக்கும் பொழுது, கோபாலனுக்கும் சாவித்திரிக்கும் பின்வரும் சம்பாஷணை அவர்கள் வீட்டில் நடந்துகொண்டிருந்தது. அன்று மாலை கோபாலன் வழக்கம் போல் வெளியே உலாத்தச் செல்லும் பாவனையாகச் சாலா வீட்டுக்குப் புறப்பட்ட பொழுது, சாவித்திரி, அவனைத் தடுத்துத், தனக்கு ஒரு விதச் சோம்பலும்மனவியாகுலமும் உண்டா யிருப்பதாயும், தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்படிக்கும் அவனைக் கேட்டுக் கொள்ள, அவனும் தப்பித்துக்கொள்ளும் வழியின்றி யொருவாறு சம்மதித்து, வெளிச் செல்லுவதை நிறுத்த, இருவருமாகப் பேசத் தொடங்கினார்கள்:—

கோபாலன்:—என் அக்கா! உனக்கென்ன விசனம்? நீ ஒரு பொழுதும் இப்படிச் சொல்லமாட்டாயே? ஒரு துணையுமின்றித் தனிமையாய் இந்த வீட்டிலிருப்பது உனக்கு வருத்தமாயிருக்கிறதோ?

சாவித்திரி:—துணை என்ன, துணை? அதொன்று மில்லை. உன்னைப் போல் பள்ளிக்கூட வேளைகளில் வீட்டிலில்லாம லிருப்பதும் தவிர, இரவில் பத்துமணி மட்டும் வீட்டுக்கு வாராத நாணு ஆத்தில், அவன் பெண்டாட்டி, பச்சைக் குழந்தை, தனியாயிருக்கிறதைப் பார்த்தபின், எனக்கென்ன வருத்தம்? ஐயோ! பத்மாவதி பாவமே பாவம். நம்மாத்தில், கூட இருக்கும்பொழுதே, இராப்பட்டால் தனியாய் அடுக்களையிற் போகப் பயப்படுவாள்: இப்பொழுது என்ன மாகத்தான் காலத்தைத் தனியாய்க் கழிக்கிறளோ? வீட்டில் வந்தபொழுதும்கூட, அவன் முகங்கொடுத்துப் பேசுகிற தில்லை. அவளைப் பார்த்தால், என் கதியே சுகம்போல் தோன்றுகிறது; அவள் துயரத்தைப் பார்க்கவும் மனஞ்சகிக்க வில்லை; நீயும் அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி போகவேண்டா மென்று சொல்லி விட்டாய். நாணுவும் நீயும் இப்படி யாவீர் களென்று நான் சொப்பனத்திலும் எண்ணவில்லை.

கோபாலன்:—மனமுரண்டுக்கு யாரென்ன செய்யலாம்? சிநேகமென்றல் ஒருதரம் பார்க்கலாம்; இரண்டு தரம் பார்க் கலாம்; பத்துத் தரம் பார்க்கலாம்: ஆனல் சிநேகத்துக்காகத் தன் மரியாதையை முற்றிலும் இழக்கலாமோ? உனக்குத் தெரியாத விஷயமொன்றுமில்லையே: அந்த துஷ்டப்பயல் சங்கு செய்த அக்கிரமத்துக்காக, முதலில் நம்மாத்தை விட் டுப்போனுன்; அதுகூட அவசியமில்லை; ஆயின் ஒரு விதமாய் நியாயந்தான். ஆனல் அதற்கும் என் சிநேகத்துக்கும் என்ன சம்பந்தம் ; என்னையேன் அவமதிக்கவேண்டும்? நான் எத் தனை கடிதம் எழுதினேன்; எத்தனை தரம் கோபத்தைப் பொறுத்துக் கொண்டு வலுவாய்ப் பேசப் போனேன். திடீ ரென்று நிஷ்காரணமாய் என்னை இகழ்ந்தால், நான் தான்

என்ன செய்கிறது? அப்படியிருந்தும், சீதையம்மா செத்துப் போனவுடன், நம்மாலான மட்டும் முயற்சி செய்தும், ஒன்றுக்கும் இடம் கொடுக்கவில்லை. அவன் கோபம் அவனோடே; நாமென்ன செய்யலாம்? நம்முடைய பேரில் குற்றமிருந்தால் சரி; ஒன்றுமே காரணமின்றிக் கோபமும் பகையும் பாராட்டினால், யாரென்ன செய்கிறது?

சாவித்திரி:—ஆனால், கோபு! நேற்றுப் பழக்கமில்லை; முந்தாநாட் பழக்கமில்லை: தெரியாத மனுஷனில்லை. அவனுடைய குணம் நமக்கெல்லாம் நன்றாய்த் தெரிந்த விஷயமே. அவனிப்படி நடப்பதற்கு, ஏதாவது தகுந்த காரணமிருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அவனிப்படி ஒரு நிமிஷம் கூட இருக்கமாட்டான். அதுவும் தவிர—,

கோபாலன்:—என்ன காரணம் இருக்கக்கூடும், நீ தான் சொல்லேன். சண்டைகூட இல்லாத இப்பொழுதும் அவனிப்படி யிருப்பானேன்? நம்மோடிருக்கிறது போதாமல், அவன் பெண்டாட்டியோடேயே பேசுகிறதில்லை என்கிறாய். ஏதாவது புத்தி மாறுபாடாயிருக்குமோ வென்று சந்தேகிக்க வேண்டியிருக்கு. பள்ளிக்கூடத்தில் கூடப் பாதிப் பாடம் நடக்கும் பொழுதே, திடீரென்றெழுந்து வெளியே போய் விடுகிறானாம். ஒரு நாள்————,"

கோபாலன் பேசி முடியுமுன், திடீரென்று நாராயணன் வீட்டுள் நுழைந்து அவர்கள் முன் தோன்றினான். அவனைக் கண்டவுடன், இருவரும் திடுக்கிட்டெழுந்தார்கள். அவன் கோபாலனைப் பார்த்து, "கோபு! உன்னுடன் சில சங்கதிகள் இரகசியமாய்ப் பேச விரும்புகிறேன். கடற்கரைக்குப் போவோம் வா," என்று கூப்பிட்டான். அவனுடன் தனியாய்ப் போவதற்குக் கொஞ்சம் பயப்பட்டுக், கோபாலன், சாவித்திரி

யைப் பார்க்க, அவள் முகத்தில் ஒருவிதச் சந்தேகக் குறியும் தோன்றுதது கண்டு, தானும் சந்தேகத்தை நீக்கிப் புறப்பட, அவனும் நாராயணனும் ஒன்றும் பேசாமல் கடற்கரையை அடைந்து, ஓரிடத்தில் உட்கார்ந்தார்கள்.

நாராயணன் இரண்டு மூன்றுதரம் பேச முயன்றும் நாவெழாமல், கடைசியில், தன் உடுப்புப் பையிலிருந்து தன் பெண்டாட்டி பேருக்கு முதலில் வந்த கடிதத்தை யெடுத்துக் கோபாலன் கையிற் கொடுத்தான். முகத்திற் பல வெட்கக் குறிகளுடன் அதை வாசித்து முடித்தவுடன், கோபாலன் பெருமூச்செறிந்து, கடைசியில், "இது உன் கையில் எப்படி வந்தது?" என்று நாராயணனைப் பார்த்துக் கேட்டான். அதற்கும் பதிற்பேச முடியாமல், நாராயணன், அக்கடிதம் அடங்கி வந்த 'கவரை' யெடுத்து நீட்ட, அதைப்பார்த்தவுடன், கோபாலன் திடுக்கிட்டு, "இது யாரோ பண்ணின மோசம்: இந்தக் கடிதம் நான் சாலாவுக்கு எழுதினது. உனக்குத் தெரியாதா? எங்களூர் கால்வாய் சூப்பிரண்டெண்டு நாகமையர் பெண்டாட்டி சாலா: ஒருதரம் எங்காத்து நடையில் வைத்து நடந்த சங்கதிகூட உனக்கு ஞாபக மிருக்கலாம்: அவளிப்பொழுது இங்கே மண்ணடியிலிருக்கிறுள். உன்னிடத்தில் மறைப்பென்ன? அவளை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் பழக்கத் துவக்கத்தில், நான் அவளுக்கு எழுதின கடிதம் இது—," என்று பேசும்பொழுதே, நாராயணன் இரண்டாவது கடிதத்தை எடுத்து நீட்டினுன். அதை வாங்கிக் கொஞ்சம் வாசித்தவுடனே, கோபாலன், "இது என் கையெழுத்தேயல்ல; முழுமோசம், ஆஹா! சந்தேகமில்லை. இந்த இரண்டும், அந்தப்பாவிப்பயல், என் தம்பி சங்கு வேலையாய்த்தானிருக்க வேண்டும். சாலாவிடத்திலிருந்து என் கடிதத்தை வாங்கி முத

லில் மோசடியாய் வேறு கவரில் போட்டு உன் ஆம்படையாள் விலாசத்துக்கு அனுப்பிவிட்டுப், பிற்பாடு அதை உறுதியாய்ப் பலப்படுத்தும் பொருட்டு, இதையவனுகவே எழுதி யனுப்பி யிருக்கிறுன். அடா பாவிப்பயலே! என்ன கொலேப்பாதகன் எனக்குத் தம்பியாய் வந்திருக்கிறுன்! இதோ பார், நாணு! இந்த முதற் கடிதத்தில் என் கையெழுத்துக்குக் கீழ் கொஞ்சம் காகிதத்தைக் கிழித்தெடுத்திருக்கிறது பார். அதில் சாலாவின் பேரை வைத்து ஒரு பாட்டெழுதி யிருந்தேன்; அதிருந்தால் ஏமாற்றுப் பலிக்காமல் வெளியாய்விடுமென்று, அதை நீக்கிவிட்டான். அடா சண்டாளப் பயலே! இப்படிப்பட்ட துரோகியை என்ன செய்தால்தான் தகாது? என்ன சாதுரியமாய் என் கையெழுத்தைப் போலெழுதியிருக்கிறுன்!" என்று சொன்னுன்.

நாராயணன் பிரமிப்பினுல் ஒன்றும் பேச முடியவில்லை. ஏமாற்றெல்லாம் ஒரே நிமிஷத்தில் வெளியாகி விட்டது; தன் சந்தேகமெல்லாம் நீங்கிவிட்டது. தான் இவ்வளவு எளிதாய் ஏமாற்றப்பட்டதினு லுண்டான வெட்கம் அதிகரித்தது. ஆனுல் எல்லாவற்றிலும், தன் பாலிய சிநேகிதனைத் தான் மகாதுரோகியாக நினைத்து, அவனை வெறுத்துப் பகைத்ததற்காகவும், தன்னின்னுயிர்க்காதலியின் அருந்ததிக் கற்பைச் சந்தேகித்துக், கேவலம் அநாதையாய் அவளிருந்த காலத்திலுங் கூடச் சிறிதும் இரக்கமின்றி, அவள் மாட்டு தான் செய்த கொடுமைகளுக்காகவும், அவன் அடைந்த துயரத்துக்கும் கிலேசத்துக்கும் எல்லையில்லை. கோபாலன் கழுத்தைத் தன்னிரு கைகளாலுங் கட்டிக் கொண்டு, நெடுநேரம் வரை அவன் மார்போடு சாய்ந்தபடியே, தேம்பித் தேம்பி யழுதான். கோபாலனுக்கும் கண்ணீர் அடங்காமல் வழிந்து

கொண்டே யிருந்தது. பின்னும் கொஞ்ச நேரம் அவ்விஷயத்தைப் பற்றிச் சம்பாஷித்த பின், தன் சந்தேகங்களெல்லாம் முற்றிலும் நீங்கி விட்டதாகச் சொல்லிக் கோபாலனிடத்தில், நாராயணன், பலதரம் மன்னிப்புக் கேட்டும், கோபாலன் குறைச் சந்தேகத்தையும் நீக்கித் தன்னுண்மையை வெளியாக்கக் கருதிக் கட்டாயமாக அவனைக் கடற்கரையிலிருந்து சாலா வீட்டுக்கு இழுத்துக் கொண்டு போனன். சாலாவுக்கு நாராயணனை அடையாளந் தெரியவில்லை; அவன் தன் சிநேகிதருள் ஒருவனென்று சொல்லி விட்டுக், கோபாலன், சில அடையாளங்களைச் சொல்லித் தந்திரமாய்த், தான் முதலில் எழுதிய கடிதமெங்கே என்று சாலாவைக் கேட்க, அவள் கொஞ்சந் தேடிப்பார்த்துக் காணவில்லை யென்றும், எங்கேயாவது தவறிப்போயிருக்கலா மென்றும் சொன்னள். ஆனல் கோபாலன் அதை யொப்புக் கொள்ளாமல், எப்படியாவது நினைத்துப் பார்த்து அது போன வழி சொல்ல வேண்டு மென்று கோபமாய்க் கேட்கக், கடைசியில் தான் கடிதத்தை ஐயங்காரிடத்தில் கொடுத்ததாகவும், பிற்பாடு கேட்ட பொழுது அதைச் சங்கு எங்கேயோ போக்கடித்து விட்டதாகச் சொல்லி விட்டதாகவும், சொன்னள். உடனே கோபாலன் கடிதத்தை எடுத்துக் காட்ட, அவள் அதுதான் தனக்கு வந்த கடிதமென்று ஒப்புக் கொண்டதுமன்றி, அதனடியி லெழுதியிருந்த பாட்டையாரோ கிழித்தெடுத்திருப்பதாக, அவளாகவே சொன்னள். ஏமாற்றெல்லாம் இவ்வண்ணம் பட்டப் பகற் போல் வெளியாய் விடவே, நம்முடைய நண்பர்கள் வீட்டுக்குத் திரும்பி விட்டார்கள். அவர்கள் அடைந்த சந்தோஷம், முன்னடைந்த துயரத்திலும் பதின் மடங்கு அதிகமாயிருந்த தென்பது மெய்யே. சகல சங்கதிகளையும், சாலா

வின் நிமித்தமாகச், சாவித்திரிக்கு உடனே சொல்ல முடிய வில்லையாயினும், இருவர் சிநேகத்தையும் பிரிக்கும் பொருட் டுச் சங்கு கள்ளத்தனமாயெழுதின ஒரு கடிதத்தால் தான் இவ்வளவு தீங்கு விளைந்ததென்றும்; இப்பொழுது எல்லாம் வெளியாகி, இருவரும் முன்னிலும் அதிக நட்பினர்களாய் விட்டதையும் கேட்டதினு லுண்டான சந்தோஷத்தினும் சங்குவின் பொருட்டுண்டான வெட்கமும் விசனமுமே அவ ளுக்கு மேலிட்டிருந்தன. அன்றிரவு, நம்முடைய கதா நாயகி தனிமையாய்ச் சமையலறையிற் படுத்துக்கொள்ள வில்லை யென்று கூறவும் வேண்டுமோ?

இருபத்தோராவது அதிகாரம்.

ஒரு மனக்குறை நீங்குவதிலேயே, நாராயணனுக்கு, மற்-றொரு மனக்குறை உண்டாயிற்று. தனக்கும் கோபாலனுக்கும் நேர்ந்திருந்த பிணக்குத் தீர்ந்தவுடன், கோபாலன், தன் மனைவியையும் குழந்தையையும் ஊரில் வைத்துவிட்டுச் சாலா-வுடன் பழகும் தீ யொழுக்கம் அவன் மனதைப் புண்படுத்-தியது. அதைப்பற்றி மறுநாளே கோபாலனுடன் பழைய சுதந்தரத்துடனும் வாஞ்சை யுடனும் வாதாடியதில், அப்-பழக்கம் தற்காலத்தில் மனோரஞ்சிதமா யிருந்தபோதிலும், அதுவரையும் பெரும்பாலும் நன்னெறியிலேயே பழகிவந்த கோபாலனுடைய மனத்துக்கு, அது, அந்தரங்கமாக வெறுப் பாகவே யிருந்ததை யறிந்ததுமன்றி, அவ்விஷயம், சாவித்-திரிக்கு முற்றிலுமே தெரியாதென்று நாராயணன் அறிந்து கொண்டான். துவக்கத்தில் தன் மனைவி பேரிலிருந்த வெறுப்-பும் சாலாவின் மீதிருந்த விருப்பும் வரவரத் தளர்வுற்றிருந்த

கோபாலனைப், போதனையாலும், விவகாரத்தாலும், சாவித்திரிக்கு யாவற்றையும் தெரிவித்து விடுவதாகப் பயமுறுத்தியும், தன்பேரில் அவனுக்குள்ள வாஞ்சையின் உதவியாலும், நாராயணன் எளிதில் திருப்பிவிட்டான். தன் மனைவியை அழைத்து வந்தால், முன் போல் தன்னுடன் ஒரே வீட்டிலிருப்பதாக நாராயணன் சொல்லவே, கோபாலன், அதிக சந்தோஷங்கொண்டு, பள்ளிக்கூடத்திலிருந்து ஒரு வாரத்துக்கு ரஜா எடுத்துக்கொண்டு, சாவித்திரியை நாராயணன் வீட்டில் விட்டுவிட்டுத் தன் மனைவியை அழைத்துவரும்படி ஊருக்குப் போனான்.

இருபத்திரண்டாவது அதிகாரம்.

கோபாலன் தன் மாமனார் வீட்டைச் சேரும்பொழுது, மாலை ஆறுமணி யிருக்கும். அவன் திடீரென்று வந்ததால் யாவரும் முதலில் ஆச்சரியப்பட்டார்கள்; தன் மனைவியைக் கூட்டிக்கொண்டு போகும்படியாக வந்ததாகத் தெரிவித்தவுடன் எல்லாரும் சந்தோஷத்தையே அடைந்தார்கள். தங்கள் செல்வக்கடைக்குட்டிப் பெண்ணும் அருமைப் பேரனும் வீட்டோடு எத்தனை நாள்களிருந்தாலும் பண்ணை முத்தையருக்கும் அவர் மனைவிக்கும் திருப்தி யுண்டாகாது; ஆயினும் கணவனைப் பிரிந்திருப்பதால், அவள் மறைத்தும் மீறி வெளிப்படும் துக்கத்தைச் சகிக்க முடியாமலும், கல்வியின் பொருட்டென்று சொல்லித் தன் மனைவியை விட்டுப்போன தங்கள் மாப்பிள்ளையின் நடவடிக்கைகளைப்பற்றி அவன் தம்பி மூலமாகவே தாங்கள் செவியுற்றிருந்த சில பிரஸ்தா-

பங்களை நினைந்தும், அவர்கள் இப்பொழுது சந்தோஷப்பட்டார்கள். இது நிற்க.

சொல்லும் பொருளும், உடலுமுயிரும், உருவும் நிழலும், மணியும் ஒளியும், மலரும் மணமும்போல் ஒருவர்க்கொருவர் உள்ளன்பு பொருந்தி, மதனும் ரதியும்போல் இன்பம் நுகர்ந்து வந்த ஒரு நாயகனும் நாயகியும் யாதானும் ஓரிடையூறினால் பத்து வருஷ காலமாய் முகம் பாராமல் பிரிந்திருக்க நேர்ந்து, பிரிவாற்றுமையால் வாடி நொந்து, ஒரு நாள் ஒரு யுகமாக அரிதிற் போக்கி, பிரிவொழிந்து கூடுதலுமுண்டாகும் என்ற ஒரு நம்பிக்கையே பிணையாகத் துயர்க்கடலிற் கிடந்து வருந்தியும், கூடும்பொழுது ஐம்புலன்களாலும் அநுபவிக்கவேண்டிய விஷயங்களைப் பற்றி ஆசை மிகுதியால் எண்ணுத எண்ணங்களெல்லாம் எண்ணியெண்ணி யேமாறியும், பலவிதமாய்த் துன்புற்றுக் கடைசியில், தவப்பேற்றால் கூடப்பெற்றால், அத்தருணத்தில் உடனிருக்கும் மூத்தோர்கள், உலகறிய அக்கினி சாக்ஷியாய் மணம் புரியப்பெற்ற அக்காதலர்களுடைய நெடுநாளைய எண்ணங்களுக்கும் ஆசைகளுக்கும் தாங்களே ஒரு பெருந்தடையாகி, முற்பிறப்புத் தீவினைபோல் அவர்களைப் பிரித்து, இராக் காலத்தையும் தனிமையையும் எதிர்பார்த்து மறுபடியும் அவர்கள் ஏங்கும்படிச் செய்தல், நமக்குள் அனுஷ்டித்து வரும் சில பழைய வழக்கங்களில் ஒன்று; ஆனல், அம்மூத்தோர், அக்காதலரின் ஆசைப்பெருக்கையும் பேரவாவையும் பிரிவாற்றுமையையும் சிறிதும் கருதாமல், லோகப் பிரஸ்தாபங்களையும், ஊர்வளத்தையும் வம்பையும் இன்னும் தங்களுக்குப் பிரியமானவும் அக்காலத்தில் அவனுக்கு மிக வெறுப்பானவுமான பல சங்கதிகளையும், பற்றி அந்நாயகனி

டத்தில் வாய்விடாமற் பேசிக், குறிப்புணராமலும், குறிப் புணர்ந்த பொழுதுங்கூடப் பரிகசித்து அசட்டை செய்தும் அவனை அலட்டுவது, அவனுடைய விதிப்பயனுகவே கூற வேண்டும்.

இவ்விஷயத்தில், கோபாலன், கொஞ்சம் அதிர்ஷ்ட முள்ளவனுகவே யிருந்தான். அவன் மாமியார் மாப்பிள் ளைக்குச் செய்யவேண்டிய விருந்தைக்கூட மறுநாளைக்கென்று நிறுத்திவிட்டு, இராப்போசனத்தைத் துரிதப்படுத்தி, வெகு சீக்கிரமாகத் தன் மகளையும் மருமகனையும் படுக்குள்ளுக்கு அனுப்பிவிட்டாள்.

ஆஹா! இதென்ன புதுமை! மனிதனுடைய மனத்தி லும் ஆச்சரியப்படத் தக்க வஸ்து இப்பேருலகில் எங்கேயா கினு முண்டோ? நாராயணனுடைய போதனையால் மனம் வேறுபட்டுச், சாலாமாட்டுள்ள விருப்பெல்லாம் வெறுப்பாகி, பள்ளத்திற் பாயும் நீர் போல் தன் மனைவிமாட்டும் மகன் மாட்டுமுள்ள பழைய காதலெல்லாம் தன் மனத்தை நிரப்ப உளம் நெகிழ்ந்து, கோவென்றழுது, தன் தீச்செயலை நொந்து, பல சபதங்கள் செய்து, ரெயிலும் மெதுவாயோடுவதாக வருந்தும் மனத்துடனும் பேராவலுடனும் தன் மனைவியைத் தேடி வந்தும், அவளிடத்தில் தன் தப்பிதங்களை யெல்லாம் ஒப்புக்கொண்டு, அவள் காலில் விழுந்து மன்னிப்புக்கேட் டுத், தன் மெய்யன்பால் அவளைத் திருப்தி செய்து தேகபர வசமாக்கி, மார்புறத்தழுவ வேண்டுமென்று வழியெல்லாம் பலவாருக நினைத்து வந்தும்; தன் வேட்டகத்தை யடைந்த பின்புங்கூடப், படுக்குள் தனிமையை அளப்பரிய ஆவலுடன் எதிர்பார்த்திருந்தும், இப்பொழுது அத்தனிமை வாய்த்தி ருக்கக், கோபாலன் மௌனமாய் நிஷ்டையில் ஆழ்ந்தவன்

போல் ஒரு நாற்காலியில் வீற்றிருப்பதென்ன? அந்தோ! சாலாவுடன் சல்லாபமொழிகளைப் பிதற்றிய நாக்குத், தன் மனைவியின் பேரைச் சொல்லவும் எழவில்லையே! அவளைத் தழுவிய கைகள், தன் பெண்சாதியைத் தொடவும் அஞ்சுகின்றனவே! அவள் அழகைப் பருகின கண்கள், தன் நாயகியை முகம் நோக்கவும் கூசுகின்றனவே; எண்ணாத எண்ணங்களெல்லாம் எண்ணி, வழி நெடுக ஆகாசக்கோட்டை கட்டிய பேதையுள்ளம், இப்பொழுது மயிலைக்கண்ட சர்ப்பத்தைப் போல் நடுங்கித், தலையெடுக்கவும் நாணுகின்றதே!

ஆனால், கோபாலன் விஷயத்தில் தான் காரணமிருக்கின்றது; கல்யாணியும் ஒன்றும் பேசாமல் தலையணைமேற்கவிழ்ந்து படுத்துக்கொண்டு விம்மியழுவதற்கு என்ன காரணமிருக்கக் கூடும்? இத்தனை மாதங்களாய் அவள் பட்ட துயரமெல்லாம் பொய்யோ? பாசாங்கோ? தன்னருமை நாயகன் துன்மார்க்கத்திலொழுகும் சங்கதி தன் காதிலும் விழுந்தபொழுது, முதலில் இரண்டு மூன்று நாள்களாய் ஆகாரங்கூடச் செய்யாமல் துயரத்தில் மூழ்கி அழுதபோதிலும், பிற்பாடு தன் கோபம் ஒருவாறு தணிந்து, அவன் நடக்கையைத் தன்னை விட்டுப் பிரிந்ததனாலும் புருஷர்களின் சுபாவ குணத்தினாலும் உண்டானதாக மதித்துப் பொறுத்துக்கொண்டு, பிரிவின் துன்பம் தனக்கு மேலிட, எப்படியாவது அவனை மறுபடியும் சேர்ந்தாற் போதுமென்றும், அவனைக்கண்ட மாத்திரத்திலேயே தன் துயரங்களெல்லாம் நீங்கிவிடுமென்றும் நினைந்து, அவன் குணங்களை மனத்துட் புகழ்ந்து, குற்றங்களை மறந்து, அவனைச் சேருமாறு தெய்வங்களை வேண்டி, யாருமறியாமல் நோற்று வந்ததும், அவனை மறுபடியும் கண்டவுடன் தன் குழந்தையை அவன் மடிமேல் வைத்து, காலில் விழுந்து

சேவித்துப், பின்பு இறுகத் தழுவிக்கொண்டு, அவன் மார் போடு சாய்ந்த வண்ணமே தன் மனத்துயரங்களை யெல்லாம் சொல்லியாறவேண்டுமென்று அவாவுற்றிருந்ததும் பொய் யல்லவே.

கல்யாணியின் தேம்புதலும் அழுகையும் வரவர அதி கரிக்கவே, கோபாலன் ஒருவாறு துணிந்து, அவள், பக்கத் திற் கட்டிலிற் போயுட்கார்ந்து கொண்டு, "கல்யாணம்! நான் தான் வந்துவிட்டேனே; இனிமேல் ஒருநாளும் பிரியேன்; வீணுக்கு அழாதே; எழுந்திரு," என்று மெதுவாய் அரிதிற் சொல்லி, அவளைத் தொட்டு, முகத்தைத் திருப்பினன். உடனே அவள் சீறியெழுந்து அவன் கையைத் தள்ளிவிட் டுக், கட்டிலின் மறுபக்கத்தில் போயுட்கார்ந்து கொண்டு, "சாலாவைத் தொட்ட கையால் என்னையும் தொட உனக்குத் தலை பத்தா? நானும் ஒரு வேசை யென்று நினைத்தாயோ?" என்று சொன்னுள்.

"வேண்டியபோ தின்பம் விரும்பும் மடந்தையரைத்
தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே—பாண்டியா!
முல்லைக் கதிபா! முகம்பார்த் தகலநின்று
சொல்லக் கடவதெல்லாஞ் சொல்"

என்று பாடியவள் பெண்பாலன்றோ? அதைக்கேட்ட வுடன், கோபாலன் நெஞ்சம் திடுக்கிட்டது; தன் மானத்தால் கூச்சமுற்றிருந்த அவனுக்கு, அது வரையும், தன் துர்நடக் கைகள் தன் மனைவிக்குத் தெரியுமென்பது தெரியாது; வீட் டிற் கூடவேயிருக்கும் சாவித்திரிக்கே தெரியாதே; ஊரிலிருக் கும் கல்யாணிக்கு என்னமாய்த் தெரியுமென்று இறுமாப்புற் றுத், தானுகவே சிலவற்றை மறைத்தும் சிலவற்றை வெளி யிட்டும் சொன்னுல், அவள் முதலிற் கொஞ்சம் விசனப்

பட்ட போதிலும், கடைசியில் தன்னுண்மையை மெய்ச்சித், தன்மேல் பரிபூரண விசுவாசத்தைக் கொள்வாளென்று, நினைத்திருந்தான். முழுதுமே பொய்யாக மறுத்துவிடலா மென்று நினைத்தான்; ஆனால் கல்யாணியோ பேர் முதல் சொல்லுகிறாள்: அவளுக்கு யார் சொன்னார்களோ? இன்னும் எவ்வளவு தெரியுமோ? முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதெப்படி? அன்றியும் எத்தனைநாளென்று மறைக்கிறது? ஆகையால், எவ்விதமாவது சங்கதியை உடனே முடித்துவிடுகிறதே நலமென்று கருதிக், கொஞ்சநேரம் ஒன்றும் பேசாமல் யோசனை செய்து, பிற்பாடு பின்வருமாறு பேசத் தொடங்கினான்.

கோபாலன்:—"கல்யாணம்! நீ அழுகையை நிறுத்தி விட்டு நான் சொல்லுகிறதை மட்டும் கொஞ்சம் பொறுமையுடன் கேட்கிறதாயிருந்தால், எல்லாவற்றையும் உண்மையாய்ச் சொல்லுகிறேன். உன் காதுவரையும் இது எட்டியிராதென்று நினைத்திருந்தேன்; ஆனால், நானாகவே, உன்னிடத்தில் என் தப்பிதங்களை யெல்லாம் சொல்லி, மன்னிப்புக் கேட்டுக் கொள்ள உத்தேசித்து வந்தேன். முன்னதாகவே உனக்குத் தெரிந்திருக்கிறது. நீ மட்டும் கொஞ்சம் அழுகையை நிறுத்தினால்—"

கல்யாணி:—"ஆ தெய்வமே! இன்னும் என்னுயிரை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா? எல்லாரும் எவ்வளவோ சொன்னாலும், பொய்யாயிருக்கும்; நம்முடைய ஆம்படையான் ஒருநாளும் அப்படியிருக்க மாட்டான்; நாமென்ன அழகில் குறையா, செல்வத்தில் குறையா என்றெண்ணியிருந்தேனே; அவன் வாயாலே சொல்லிவிட்டும், இன்னும் என்னுயிர் போகாதா; ஆயிரம் பேருக்குப் பொதுவான ஒருத்